# மட்டக்களப்புச் சைவக் கோயில்கள்

(இரண்டு பாகங்கள்)



ஆசிரியர்

வித்துவான், பண்டிதர்

**வி. சீ. கந்தையா** பீ.ஓ.எல்.

வெளியீடு:

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

# மட்டக்களப்புச் சைவக் கோவில்கள் - 1

# මඩකලපුව හින්දු සිඩසථාන

# BATTICALOA HINDU TEMPLES



"நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்
தில்லையுள் கூத்தன்"

-சிவபுராணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்பதிப்புத் தரவுகள்
மட்டக்களப்புச் சைவக் கோயில்கள் பாகம் - I, II

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | வித்துவான், பண்டிதர் வீ.சி. கந்தையா |
| இரண்டாம் பதிப்பு | : | செப்டெம்பர், 1997 |
| உரிமை | : | இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் |
| வெளியீடு | : | இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்<br>98, வோட் பிளேஸ்,<br>கொழும்பு - 07. |
| அச்சு | : | நியூ கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்டெட்,<br>காலி வீதி,<br>கொழும்பு - 06. |
| விலை ரூபா | : | |

**Bibliographycal Data**
Mattakkalappu Saivak Kovilgal    Part I & II

| | | |
|---|---|---|
| Author | : | Pandithar V.C. Kandiah |
| 2nd Edition | : | September 1997 |
| Copy Right | : | Dept. of Hindu Religious & Cultural Affairs |
| Published by | : | Dept. of Hindu Religious & Cultural Affairs,<br>98, Ward Place, Colombo - 07. |
| Printed at | : | New Karthigeyan (Pvt) Ltd.,<br>501/2 Galle Road, Colombo - 06. |
| Price | : | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மட்டக்களப்பு சைவக் கோவில்கள்

## (இரண்டு பாகங்கள்)

வித்துவான் பண்டிதர்

**வி. சீ. கந்தையா** பீ. ஓ. எல்.

முன்னைநாள் அதிபர்

பட்டிருப்பு மகாவித்தியாலயம்

களுவாஞ்சிக்குடி,

மட்டக்களப்பு.

வெளியீடு:

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

98, வோட் பிளேஸ்,

கொழும்பு - 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் இந்து விவகாரங்களுக்கு பொறுப்பான மேலதிகச் செயலாளரும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமாகிய திருமதி. இராஜலெட்சுமி கைலாசநாதன் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு மாவட்டத்தின் சைவக் கோயில்கள் பற்றிய தொகுப்பு நூலினை 1982 ஆம் ஆண்டு பிரதேச அபிவிருத்தி இந்துசமய கலாசார அலுவல்கள் தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சு மூலமாக இத்துறையின் அமைச்சராக இருந்த முன்னைநாள் அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை அவர்கள் தொகுப்பித்து வெளியிட்டு வைத்தார். இதனைச் சைவ அபிமானியும், கல்விமானும் ஆகிய பண்டிதர் வி.சி. கந்தையா அவர்கள் தொகுத்து எழுதியிருந்தார்.

பண்டிதரினால் தொடர்ந்து எழுதி முடிக்கப்பட்ட மட்டக்களப்பு சைவக் கோயில்களின் இரண்டாம் பாகத்தினை அவருடைய துணைவியார் காலஞ் சென்ற திருமதி. கங்கேஸ்வரி கந்தையா அவர்கள் 1991 ஆம் ஆண்டு வெளியிட்டு வைத்தார்.

சைவ அபிமானிகளின் வேண்டுகோளுக்கிணங்க இவ்விரண்டு பாகங் களையும் ஒரு தொகுப்பாக்கி இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்க ளத்தின் வெளியீடாக வெளியிட்டு வைப்பதில் மிகவும் மகிழ்ச்சியடை கின்றேன்.

இரண்டு பாகங்களின் தொகுப்பாக வெளிவரும் இந்த இரண்டாம் பதிப்பு மட்டக்களப்பு மாவட்டத்தின் சைவக் கோயில்களின் தாற்பரியத்தை என்றும் துலங்கவைத்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இரண் டாம் பதிப்பில் பாகம் இரண்டைச் சேர்ப்பதற்கு அனுமதியளித்த காலஞ்சென்ற திரு திருமதி கந்தையா, கங்கேஸ்வரி தம்பதிகளின் பிள்ளைகளுக்கு நன்றி உரித்தாகுக.

இந்நூலின் பதிப்பு வேலைகளில் ஈடுபட்ட திணைக்கள பிரதிப்பணிப் பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உத்விப்பணிப்பாளர்கள் திரு. வீ. விக்கிரமராஜா (நிர்வாகம்) திரு. எஸ். தெய்வநாயகம் (ஆராய்ச்சி), அச்சுப் பிரதிகளை ஒப்பீடு செய்த தகவல் அலுவலர் திரு.ம. சண்முகநாதன் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மட்டக்களப்பு சைவக் கோயில்களின் இரண்டாம் பதிப்பினை சைவ அபிமானிகள் என்றும் ஏற்றிப் போற்றுவார்களாக.

இ. கைலாசநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *மட்டகக்களப்புச் சைவக் கோவில்கள் 1*

## உள்ளுறை

பக்கம்

**நூன்முகம்**

நூலாசிரியர்

**அணிந்துரை**

1. ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தா.
2. பணிப்பாளர் இந்துசமயத் திணைக்களம்
3. இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
   சி. கணபதிப்பிள்ளை.
4. பிரதேச அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு
   செ. இராசதுரை அவர்கள்

பொருளடக்கம் :-


**1 ஆவது இயல் : நூற் பொது**

அறிமுகம் 01

**2 ஆவது இயல் : ஈச்சரம் இரண்டு**

1) மாமாங்கேச்சரம். 10
2) தான்தோன்றீச்சரம். 19

**3 ஆவது இயல் : மலைக்கோவில் மூன்று**

1) உகந்தை மலை. 30
2) தாந்தாமலை. 37
3) சங்கு மண் கண்டி மலை. 41

**4 ஆவது இயல் : திருப்படைக் கோவில்கள்**

1) திருக்கோவில். 48
2) தில்லை மண்டூர்த் திருத்தலம். 64
3) கோவில் போரதீவு சித்திரவேலாயுத சுவாமி. 74
4) சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி. 83
5) வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி. 88


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 ஆவது இயல் : பிள்ளையார் கோவில்கள்

| | | |
|---|---|---|
| 1) | ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவில்கள். | 92 |
| 2) | களுதாவளைப் பிள்ளையார் கோவில். | 98 |
| 3) | அம்பாரை வில்லுப் பிள்ளையார் கோவில். | 102 |
| 4) | காரைதீவு பாலையடிவால விக்னேஸ்வரர் கோவில் | 109 |
| 5) | பழுகாமம் மாவேற்குடாப் பிள்ளையார் கோவில். | 112 |
| 6) | ஆரையம்பதி திருநீலகண்டப் பிள்ளையார் கோவில். | 115 |
| 7) | வாழைச்சேனை (மருங்கையடிப் பூவல்) ஸ்ரீகைலாயப் பிள்ளையார் கோவில். | 123 |

6 ஆவது இயல் : அம்மன் கோவிலகள்

| | | |
|---|---|---|
| 1) | கொத்துக் குளத்து முத்துமாரியம்மன் ஆலயம். | 126 |
| 2) | புன்னையம்பதி (கோட்டமுனை) மகாமாரியம்மன் கோவில். | 139 |
| 3) | காரைதீவு கண்ணகியம்மன் கோவில். | 143 |
| 4) | களுவாஞ்சிக்குடி கண்ணகியம்மன் கோவில். | 148 |
| 5) | பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோவில். | 151 |
| 6) | வெல்லாவெளி முத்துமாரியம்மன் (சுவாதி அம்மன்) கோவில். | 157 |
| 7) | கோராவெளி கோல வள்ளிநாயகி கோவில். | 162 |
| 8) | ஏறாவூர் பத்திரகாளி கோவில். | 166 |
| 9) | பெரிய போரதீவு பத்திரகாளி அம்மன் கோவில். | 171 |

7 ஆவது இயல் : பொது

| | | |
|---|---|---|
| 1) | ஏறாவூர் வீரபத்திரன் கோவில். | 181 |
| 2) | வந்தாறுமூலை - கிருட்டினன் கோவில். | 185 |
| 3) | பண்டாரியாவெளி - நாகதம்பிரான் கோவில். | 189 |
| 4) | மட்டக்களப்பு-நரசிங்க வைரவ சுவாமி கோவில். | 193 |

8 ஆவது இயல் : மட்டக்களப்பு சைவக் கோவில்கள்.

பெயர் வரிசையும் நூனிறைவும். 200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரைகள் :-

பொன்னுரை
ஸ்ரீமத். சுவாமி. ஜீவனானந்த மகராஜ் அவர்கள் 209

சிறப்புரை
திரு. கே. கணபதிப்பிள்ளை B.A; F.RG.S; Dip-Geo.(Lond) 212

அணிந்துரை
திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்கள் 215

முகவுரை
திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி) அவர்கள் 218

நூன்முகம் - நூலாசிரியர் 221

முதலாவது இயல்

அறிமுகம் - பொது 230

இரண்டாவது இயல் : பிள்ளையார் கோவில்கள் மூன்று

1) கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில் 243

2) வீரமுனைச் சிந்துயாத்திரைப் பிள்ளையார் கோவில் 257

3) மண்டூர் - நாகஞ்சோலை மாணிக்கப் பிள்ளையார் கோவில் 263

மூன்றாவது இயல் : சிவன் கோவில் ஒன்று

1) செட்டிபாளையம் சோமநாத இலிங்கேஸ்வரர் சோமகலா நாயகி கோவில். 267

நான்காவது இயல் : முருகன் கோவில் ஆறு.

1) ஈழத்து - திருச்செந்தூர் முருகன் ஆலயம் 273

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) திருப்பெருந்துறை - முத்துக்குமார வேலாயுத சுவாமி கோவில். 287

3) குருக்கள்மடம் ஸ்ரீ செல்லக்கதிர்காமம் ஆலயம் 293

4) காரைதீவு மாவடிக் கந்தசாமி கோவில் 299

5) ஆரையம்பதி கந்தசாமி கோவில் 303

6) கல்லடி வேலாயுத சுவாமி கோவில் 310

**ஐந்தாவது இயல் : அம்மன் கோவில்கள் ஐந்து**

1) மண்டூர் - மண்டுக்கொட்டைமுனை துறையடி மாரியம்மன் கோவில் 313

2) திருப்பழுகாமம் ஸ்ரீ திரௌபதியம்மன் கோவில் 320

3) துறைநீலாவணை கண்ணகை அம்மன் கோவில் 325

4) தம்பிலுவில் கண்ணகை அம்மன் கோவில் 333

5) நாவலடி கடலாட்சி அம்மன் கோவில் 342

**ஆறாவது இயல் : பொது**

1) களுவாஞ்சிக்குடி ஸ்ரீ மகா விஷ்ணு கோவில் 345

2) களுவாஞ்சிக்குடி ஸ்ரீ வீரபத்திரன் கோவில் 352

**நூலாசிரியர் வரலாறு.** 358

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

## மட்டக்களப்புச் சைவக்கோவில்கள்

(அம்பாறை மாவட்டம் என்ற பகுதி பிரிக்கப்படுமுன்னர், வடக்கே வெருகல் முதல், தெற்கே குமுக்கனாறு வரையும் பரந்து கிடந்த நிலப்பரப்பே இந்நூலில் மட்டக்களப்பு என்று கொள்ளப்படுகின்றது).

சமயம் என்பது கடவுட் கொள்கை. பல சமயங்கள் இன்று காணப் படுகின்றன. சைவம், வைணவம், சாக்தம் என்ற வகைப்பட்டவை சேர்ந்தது இந்து மதம் என்று சொல்லப்படும். இச்சமயங்கள் இந்தியாவிற் காணப்பட்டதால் இப் பெயரால் அழைக்கப்பட்டன என்றும் சொல்லலாம்.

சைவ சமயம் என்னும் சொல் சிவத்தை முதலாகக் கொண்டது என்னும் பொருளது. சிவபெருமான் என்றும் உள்ளவர். உயிர்களும் என்றும் உள்ளன. அத்தகைய உயிர்கள் அடைவதற்கு இன்றியமையாத மார்க்கங்களைக் கூறுவதே சைவ சமயமாகும். சைவசமயம் யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதும், எப்போது அது தோன்றியது என்பதும், அறிய முடியாத செய்திகளாம். சைவசமயம் வரலாற்றுக்கு முந்திய சமயம். உலகில் முதல் தோன்றிய சமயம் இதுவே என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. பழம் பெரும் நூல்கள், வழிபாட்டு முறைகள், வரலாற்றுக் குறிப்புக்கள், தொல் பொருட்கள், அகழ்வு ஆராய்ச்சிகள் என்பன இதற்குச் சான்றாக உள்ளன. இதனால், சிவம் என்பது கடவுள் என்பதும், சமயம் என்பது நெறி என்பதும் முடிந்த முடிபுகளேயாகின்றன.

சைவசமயம் அனாதியானதென்பதும், சர்வசங்கார காலத்தில் உலகம் மீளப் படைக்கப்படும் பொழுது ஆன்மாக்களது அருளின் தன்மைக் கேற்ப, இறைவன் அருளால் இது தோற்றுவிக்கப்படும் என்பதும், இவ்வாறு தோன்றிய சைவசமய உணர்வே சிந்துவெளிப்பழங்குடி மக்களும், சங்ககால மக்களும் இன்னோரன்ன பழையோரும் பெற்று இருந்தார்கள் என்பதும், அவர்கள் சிவபெருமானின் அருள் மூர்த்தங்கள் பலவற்றை வழிபட்டார்கள் என்பதும் தெளிவாம்.

இத்தகைய அருள் மூர்த்திகள் சிவலிங்கம் என்றும், விநாயக வடிவம் என்றும், முருகன் வடிவம் என்றும், அம்பாள் வடிவம் என்றும் பக்தர்கள் வேண்டியபடி சொல்லப்படுகின்றன. அவற்றுள் ஏற்புடைய ஒன்றை வழிபாடு செய்து, தமது இட்ட சித்திகளைப் பெறுதலில் மட்டக்களப்புப் பழந் தமிழர் ஈடுபாடுடையவராயினர். அதனாலேயே பல வடிவு கொண்ட உருவங்களையெல்லாம் இங்குள்ள மக்கள் வழிபட்டாலும் அனைத்தும் முடிவில் சிவவழிபாடுதான் என்ற முடிபினை நாம் நேரிலும் காணக்கூடிய தாய் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானே அனைவருக்கும் தந்தை; ஒன்றே குலம் ஒருவனே தேவன். அவனுடைய மக்களாய்ப் பிறந்தவர் யாவரும் தரகர் எவருடைய உதவியுமின்றி நேரே தன்னை வணங்கத் தக்கவன் அவன்; இவைதான் மட்டக்களப்பு மக்களுடைய சமயமும், சமயம் பற்றிய கொள்கையுமாகும். வள்ளல் பிரானார்க்கு உள்ளம் பெரும் கோவில் ஊனுடம்பு ஆலயம். ஒழுக்கம், சீலம்,, பக்தி என்பவையுடைய அனைவருக்கும் இறையவன் எளியவன். ஆன்மாவிற்கு ஆண் என்றோ பெண் என்றோ பேதமில்லை. இரு பாலாரும் சம உரிமையுடன் அந்த இறைவனை வணங்கி அருள் பெறலாம் என்பது இவர்கள் முடிவு.

சிவனிடம் அவ்வாறு தொடர்பு வைத்துக் கொள்வதால் உள்ளத்தில் ஏற்படும் பக்தி வெள்ளத்தை யாராலும் தடுக்க முடியாது. தனி வழிபாடு சிவனை அடையும் உண்மை வழி. அப்போது நமது உடல் ஆலயம் என்பதும், அதிலுள்ள மனம் அவன் எழுந்தருளும் பீடம் என்பதும் தெளிவாகும். மனத்தூய்மையும் பக்தியுமே இறைவனை அடையும் உண்மை வழி. அர்த்தமற்ற ஆசாரங்களும், குருட்டுத்தன்மையான சடங்குகளும் அந்தத்தூய்மையையும் பக்தியையும் மறைக்கும் களைகள். இந்தத் தூயவழிபாட்டிற்கு உருவ வழிபாடு இன்றியமையாத ஒன்றாகும். ஆனால், உருவ வழிபாட்டை வீணாகப் பெருக்கி பொருளை அதிகம் வீணாக்கவே வேண்டியதில்லை. அப்பொருளை உயிருள்ள தெய்வங்களாகிய மக்களுக்கு ஆக்கித்தருவதே சாலச்சிறந்தது. சாத்திரம் படித்தோ, நாத்திகம் பேசியோ காலங்கடத்தாது ஆண்களோடு பெண்களும் இறைவனது உருவங்களைத் தரிசித்துத் தொட்டு வணங்க உரிமையுண்டு என்பதெல்லாம் மட்டக்களப்பு மக்களது சமயக் கொள்கையுள் அடக்கமாகும்.

இந்த ரீதியில் ஆராய்ந்து பார்க்கப் போனால் மடக்களப்பு மக்களின் சைவத்தில் பெரும் பங்கு வீரசைவத்தைச் சார்ந்து செல்லக் காண்போம். வீரசைவக்குருமார் ஆதியில் மட்டக்களப்பிலுள்ள பல கோவில்களில் பூசனையாற்றி உள்ளார்கள் என்பதற்குச்சான்றுகள் உண்டு. இவர்களின் தொடர்ச்சியாக இன்று சைவப் பிள்ளைமார், கோவில்களின் பூசகராகத் தொண்டு செய்யும் வழக்கம் உள்ளது. அப் பூசகர்கள் ஞான முதிர்ச்சி முதலியன பெற்று வருங்கால் அவர்கள் இலிங்கதாரிகளாய் வீர சைவக் குருமார் ஆவதுண்டு. வீரசைவக் குருமாரைச் ''சங்கமர்'' என்பர். சங்கமம் என்பது முழுமை பெற்ற ஆன்மா எனப் பொருள்படும். சங்கமர் பற்றிக் கூறும் ''வீராகமம்'' எனப்படும் நூல்கூட ஒன்றுண்டு. இச் சங்கமர்களை நாகார்ச்சனபுரத்திலிருந்து குளக்கோட்டன் கொண்டு வந்து தம்பட்டை என்னும் ஊரிலே குடியேற்றினான் என்று கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இவ் வீர சைவரின் பிற்சந்ததியினர் இன்றும் வந்தாறுமூலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுவாஞ்சிக்குடி, பழுகாமம், கொக்கட்டிச் சோலை, தம்பட்டை முதலிய இடங்களில் வசிக்கிறார்கள். உகந்தை, சங்குமண் கண்டி, கொக்கட்டிச் சோலை, பனங்காடு, கோளாவில், நற்பிட்டிமுனை, களுவாஞ்சிக்குடி, சித்தாண்டிக்குடி, பழுகாமம் முதலிய பல கோவில்களில் இவர்களே பூசகர்களாக இன்னமும் பணிபுரிந்து வருகிறார்கள்.

பொதுமக்களில் பலரும் இவர்களுக்கேற்றபடி சமய தீட்சை பெறாது சைவர்களாகவே இறுதிவரை வாழுவதைக் காண்கிறோம். பார்ப்பனக் குருக்கள் பூசனைபுரியும் கோயில்கள் சில இடங்களில் உள்ளன. அவைகளில் இப்போதைக்கு சிவசங்கங்களால் சமய தீட்சைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அங்கு தவிர மற்றைய ஊர்களில் எல்லாம் பெரும்பாலும் சமய தீட்சை பெறாமலே மக்கள் இறுதிமட்டும் சைவர்களாகவே வாழ்கிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையிலுள்ள மட்டக்களப்புத் தமிழகத்துச் சைவக்கோவில்கள் சிலவற்றைப்பற்றி எழுதலாம் என நினைத்தேன். எழுதுங்கால் தனிப்பட்ட ஊர்க்கோவில்களைப்பற்றியுமே எழுதவேண்டி வரும். எல்லாக் கோவில்களைப் பற்றியும் இப்போதைக்கு எழுதவும் முடியாது. இது என்பால் உள்ள கஷ்டம். இதனை ஊன்றி உணராது தங்கள் ஊர்க் கோவில்களைப் பற்றி இந்நூலில் எழுதப்படவில்லை என்று குறைகூறுவார் தோன்றக் கூடும்; அன்றி குறைத்து எழுதப்பட்டுள்ளது என்பாரும் தோன்றக்கூடும். கோவிலைப் பற்றி எழுதும்போது வேண்டிய குறிப்புக்கள் எல்லாவற்றையும் சேர்த்தெடுப்பது சிரம சாத்தியமானது. விடயங்களைத் தெரிந்து வைத்திருப்போரும் சிலர் அத்தகையவற்றைத் தருவர்; சிலர் தராது மறைப்பர்; சிலர் தமக்குத் தெரியாது என்று கதை புரட்டுவார். இந் நிலையிலே சேர்க்கப்பட்டவை இக் கோவில் வரலாறுகள். ஒவ்வொரு ஊர்க்கோவிலைப் பற்றியும் பலரிடம் கேட்டுள்ளேன். அவருள் ஒரு சிலரே முன்வந்து வேண்டிய குறிப்புக்கள் எனக்குக் கிடைக்க ஒத்துழைத்தனர். சிலர் எனது கடிதங்களுக்குப் பதில் எழுதாமலே விட்டுவிட்டனர். எனினும் ஒருவாறு திரட்டி ஈச்சுரம் இரண்டு, மலைக் கோவில் மூன்று, திருப்படைக் கோவில்கள் ஐந்து என்பனவும் பிள்ளையார் கோவில்களில் ஒரோவொன்றாக ஏழும், அம்மன் கோவில் அப்படியே ஏழும் தேர்ந்தெடுத்தேன். வீரபத்திரன் கோவில், கிருஷ்ணன் கோவில், பத்திரகாளி கோவில், நாகதம்பிரான் கோவில் என்பனவும் கோவில்களுள் இடம்பெற்றுள்ளன. ஈற்றில் குறிப்பிட்ட நான்கும், பிள்ளையார் கோவில், அம்மன் கோவில் முதலானவற்றிற்குப் புறம்பானவையாய் உள்ளனவாயினும் மட்டக்களப்பில் சிவவழிபாட்டினையே இறுதியாகக் கொண்டு முடிவனவாகையால் அவைகளைப் பொது என்ற தலைப்பிலே சேர்க்கலானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசுரம் இரண்டில் தான்தோன்றீச்சரமும், திருப்படைக்கோவில்கள் ஐந்துள் திருக்கோவிலும், தில்லை மண்டூர்த்திருத்தலமும் பழமையும், பெருமையும் வாய்ந்தவை, அவற்றுள் மண்டூர்க் கோவிலில் சங்கமரோ பிராமணரோ பூசை செய்வதில்லை. கப்புகக்குடி எனப்படும் குடியில் தோன்றியோர் பரம்பரையாகப் பூசை செய்யும் மரபு ஒன்றுண்டு. வாய்ச் சீலை கட்டிப் பூசை செய்தல் திரைதிறவாது பூசை செய்தல் முதலிய எத்தனையோ வகைகளால் அது கதிர்காமத்தை நிகர்த்துள்ளது. இதனாற் போலும் நூலுக்கு அணிந்துரை தர வந்த இலக்கியக் கலாநிதி அவர்கள் தன்னையும் மறந்து மண்டூர் என்றதும் பக்திக் கடலுள் மூழ்கி விட்டார்கள். இக் கோவில் பற்றிய கட்டுரைகள் முடியும் தறுவாயில் நான் சிறிது சுகவீனம் அடையலானேன். அக் காலத்திலும் இக் கோவில் பற்றிய கட்டுரைகளைப் பிரசுரிக்க வேண்டுமென்று கேட்டு என்னை ஊக்கப் படுத்திய அன்பர்களை நான் மறப்பதற்கில்லை. மேலும் நூலுக்கு வேண்டிய கோவிற் குறிப்புக்களைத் தந்துதவினோர் பெயர்களும் மட்டக்களப்பு மக்களால் நன்றியுணர்ச்சியுடன் என்றும் மறவாத் தன்மையன.

அவர்கள்:- திருவாளர்கள்: அக்கரைப்பற்று வி.பி. சிவப்பிரகாசம், அட்டப்பள்ளம் இளைப்பாறிய ஆசிரியர் சி. கணபதிப்பிள்ளை, வெல்லவூர் கோபால், ஆரையம்பதிநவம், கோட்டமுனை ஏ. பாக்கியமூர்த்தி, ஆரையம்பதி ந. அழகேச முதலி, திருக்கோயில் சி. கணபதிப்பிள்ளை, பழுகாமம் இளைப்பாறிய ஆசிரியர் க. சீனித்தம்பி, அம்பாறை மோ. மணிவாசகன், அம்பாறை இ. புஷ்பசுந்தரம், ஏறாவூர் சி. பாலசுந்தரம், கொக்கட்டிச்சோலை தி. செல்வநாயகம், முதலைக்குடா க. மகேஸ்வரலிங்கம், கொத்துக்குளம் ந. வேல்நாயகம், சித்தாண்டி ப. மயில்வாகனம், முனைக்காடு நா. இரத்தினசிங்கம், கல்முனை வி. தம்பையா, காரைதீவு வே.தம்பிராசா, களுதாவளை க. சோமசுந்தரம், களுதாவளை வே.நவநாயகம், பெரியபோரதீவு வை. இ. எஸ். காந்தன், க. ஸ்ரீஸ்கந்தராசா, மட்டக்களப்பு பொ. கந்தையா, என்போராவர். இன்னாருடன் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் காரியாலயத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ந. கருணானந்தராசா, சு. ஸ்ரீஸ்கந்தராசா என்பவர்களும் வேண்டிய உதவிகளை அவ்வப்போது செய்தனர். இவர்கள் அனைவருக்கும் எனது உளம் கலந்த நன்றி என்றும் உரியதாகுக.

யான் அணிந்துரை கேட்டபோது மனங்கோணாது தந்துதவிய ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தா அவர்களுக்கும் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் என்றும் நன்றியுடையவனாய் இருக்கின்றேன். இந்நூற்படி நிலையில் பல்லாற்றானும் ஒத்துழைத்த இந்து கலாசார அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் திரு. வே. ந. சிவராசா அவர்களுக்கும் அதே நிலையிற் தொடர்ந்து உதவிவரும் இன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளர் திரு. ஆ. பாஸ்கரதாஸ் அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றி உரியதாகுக.

இந்நூல் வெளியீட்டில் முதலிலிருந்து இறுதிவரை உறுதுணையாயி ருந்து வேண்டியபோது வேண்டியவற்றுக்குக் கருவி செய்து வைத்துப் பொன்னுரையும் வழங்கிய, பிரதேச அபிவிருத்தி, இந்து கலாசார, தமிழ் மொழி அமுலாக்கல், அமைச்சர் மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி என்றும் உளதாகும்.

இந்நூல் நிறைவு இவைகளுடன் முடிவுற்றாலும், நூற்தலைப்புக்க ளையும் ஆய்ந்து நோக்கி ஏற்றபடி அவற்றை மாற்றி, ஒழுங்கு செய்து தந்த நண்பர் திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்களதும், நூற்படிகளை நல்லபடி தட்டச்சிற் சேர்த்துதவிய பிரதேச அபிவிருத்தி அமைச்சுத் தட்டெழுத்தா ளர்களான செல்விகள்: வசந்தி ஜோசேப், இலேன் ஜூலியா கென்றிக், மாலினி விசாகரட்ணம், நிர்மலா கந்தசாமி, பட்டிருப்பு மகாவித்தியாலய ஊழியர் திரு. க. அரசகேசரி ஆகியோரதும் பேருதவிகளை என்னால் மறக்க முடியாது. அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இந் நூலினை, பக்தியை வளர்ப்பதற்கென்றும், மட்டக்களப்பின் பழைய நிலைமைகள் பேணப்படுதல் வேண்டுமென்றும், முக்கியமாகக் கருத்திற் கொண்டு எழுதலானேன். எனது குறிப்புகள் அவற்றுக்குப் பயன்படுமெனில் அதுவே மக்களிடமிருந்து யான் பெறும் கைமாறாகும்.

**வீ. சீ. கந்தையா**

''கூடல்''
15, மேல்மாடித்தெரு,
மட்டக்களப்பு.
மாசி 1982.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலிருக்கும் இராமகிருஷ்ண மடத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தாஜி அவர்கள் அளித்த

# பொன்னுரை

வித்துவான், பண்டிதர் வி.சீ. கந்தையா, பீ.ஓ.எல். அவர்கள் எழுதியுள்ள ''மட்டக்களப்புச் சைவக் கோவில்கள்'' என்னும் தலைப்பினைக் கொண்ட நூலினை நான் படித்தேன். இந் நூலில் விபரித்துள்ள கோயில்கள் மீது ஆசிரியருக்குள்ள பக்தியும், சமயத்தின்பாலுள்ள ஈடுபாடும், இம் மாநிலத்தின் மீதுள்ள பற்றும், அவருக்கு இயற்கையாகவே அமைந்துள்ள ஆராய்ச்சித் திறனும் தெட்டத் தெளிவாக அவருடைய அரும் படைப்பினாற் புலப்படுகின்றன. மட்டக்களப்புத் தமிழகத்தில் அமைந்துள்ள இந்து ஆலயங்களின் வரலாறுகளையும், பாரம்பரியத்தினையும் அவற்றின் நிர்வாகம், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றையும் இந் நூல் நன்கு விவரித்து விளக்கிக்காட்டுகின்றது. இவைகளைப் படிக்கும்போது நாம் இவ் ஆலயங்களின் மான்மியத்தை உணரக்கூடியதாக இருக்கின்றது. இதன் விளைவாக இவ் ஆலயங்களிலே கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தெய்வங்களின் மீது நமக்குள்ள பக்தி தானே வளர்கிறது.

மட்டக்களப்பைப் பொறுத்தமட்டில் இது போன்ற வரலாற்று நூல் வெளிவருவது இதுவே முதற் தடவையென நினைக்கின்றேன். இது ஒரு அரிய வரலாற்று நூலாகையினால், பொதுவாகப் பொது மக்களுக்கும், சிறப்பாகச் சமய வரலாறு சம்பந்தமான ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவ, மாணவிகளுக்கும் பெருந்துணைபுரியக் கூடியதாக இருக்கும். மட்டக்களப்பு மாநிலம் சம்பந்தமான சமயத்துறை, கலாசாரத் துறை, வரலாற்றுத் துறை ஆகியவற்றில் ஈடுபாடுடைய எவருக்கும் இந்நூல் இன்றியமையாத வரலாற்றுப் பொக்கிஷமாகும். இந் நூலிற் கூறியுள்ளவற்றை அடிப்படையாக வைத்துக் கோயில்களில் எழும் உரிமைப் பிரச்சினைகளைப் பாரம்பரிய வழியில் தீர்ப்பதற்கு வழிகாட்டியாக இந்நூல் உதவும். மட்டக்களப்பு வாழ் இந்துக்களின் சமயநெறி மிகவும் பரந்த நோக்கை அடிப்படையாகக் கொண்டது என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டத் தவறியதில்லை.

ஆசிரியர் தனக்கே உரித்தான எளிய, இனிய, தூய வசன நடையில் நூலினை எழுதியுள்ளார். வித்துவான் வி.சீ. கந்தையா அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனுடனும், சுவாமி விபுலாநந்தருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவர்கள். மக்கள் இந்நூலினை வரவேற்று ஆசிரியரின் முயற்சியைப் பாராட்டுவார்களாக. இறைவனின் திருவருள், ஆசிரியர் நீண்ட ஆயுளுடன் வாழத்துணைபுரிவதாக.

**சுவாமி ஜீவனானந்த.**

10-12-81. ஸ்ரீராமகிருஷ்ண ஆசிரமம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச அபிவிருத்தி அமைச்சினைச் சேர்ந்த,
இந்துசமய, இந்துகலாசார திணைக்களத்துப் பணிப்பாளர்
அவர்கள் அளித்த

# அறிமுகவுரை

பஞ்சஈஸ்வரங்களில் ஒன்றாகிய கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தை தன்னகத்தே கொண்டு இலங்குவது மட்டக்களப்பு மாவட்டமாகும். காடும், சுனையும், கவின்தரு சோலையும், களனியும் கொண்டு திகழும் இம் மாவட்டத்தின் கண்ணே மூலை முடுக்குகளெல்லாம் மறைந்தும் மருவியும் ஏராளமான இந்து ஆலயங்கள் பரவிக்கிடக்கின்றன. இவற்றுட் சிலவற்றின் வரலாறுகளும் பெருமையும் மட்டுமே மக்கள் அறியத்தக்கதாக உள்ள அதே நேரத்தில் பழம் பெரும் புராதனச் சிறப்பு வாய்ந்த பல ஆலயங்களின் வரலாறுகள் செவிவழி மட்டுமே வழங்கிவருவதோடு பலரும் அறியாதவண்ணம் இவற்றுட் சில பேணப்படாமல் உருமாறியும் சிதைந்தும் காணப்படுகின்றன.

நமது கலாசாரத்தின் அரும் பெரும் கருவூலங்களாகத் திகழும் இவ்வாலயங்களின் வரலாற்றை, அமைதியாக ஆன்மீகப் பணிபுரிந்து வரும் சமயப் பெரியார்களை அணுகியும் பல நூல்களை ஆராய்ந்தும் அழகாகத் தொகுத்து சிறப்பானதோர் வரலாற்றைப் படைத்திருக்கின்றார் மட்டக் களப்பு மாநகரின் சைவப் பெரியார் பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்கள். அவருடைய அறிவும் ஆற்றலும், ஆராய்ந்து அணுகும் திறமையும் இந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் அழகுற மிளிர்வதைத் தெளிவாகக் காணலாம். எமது பிரதேச அபிவிருத்தி அமைச்சின் இந்துசமய அலுவல்கள் திணைக்களம் மாண்புமிகு அமைச்சர் செ. இராஜதுரை அவர்களின் பணிப்புரையின் மீது விடுத்த வேண்டுகோளினை ஏற்று இப்பணியினைத் திறம்பட நிறைவேற்றியிருக்கும் பண்டிதர். வி.சீ. கந்தையா அவர்களுக்கு எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

மண்டூர் முருகனும், மாமாங்கேஸ்வரரும், உகந்தை முருகனும், மனதிற்குகந்த சிற்றாண்டி வேலவனும் அருள்பாலிக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆன்மீக வாசனையை இந்துசமயப் பெருமக்கள் நுகர்ந்து பயன்பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

**ஆ. பாஸ்கரதாஸ்,**
பணிப்பாளர்.
இந்துசமய, இந்துகலாசார திணைக்களம்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு.

244, காலி வீதி,
கொழும்பு 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியைச் சேர்ந்தவரும்,
இலங்கைப் பல்கலைக் கழகத்தினரால் ''இலக்கிய கலாநிதி''
என்று பட்டமளித்துக்
கௌரவிக்கப் பெற்றவருமான பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அளித்த

## அணிந்துரை

''பண்டூரு முகிற்குலங்கள் எமதிறைவர்
மருகர் திருப் பதியீ தென்ன
விண்டூர மழைபொழியும் சிறப்பதனால்
வளமலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரில் உறைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூரும் இனியமொழிப் பெரியதம்பிப்
பிள்ளை என்னும் கலைவல் லோனே''

செவிக்கும் மனசுக்கும் இனிய அருமருந்தன்ன இந்தக் கவிதையை முடிமணியாகக் கொண்டு தொடங்குகிறது, மண்டூர் திருமுருகன் தல மகிமை. கவிதை, புலவர்மணி திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளை பாடிய மண்டூர்ப் பதிகத்தின் சிறப்புப்பாயிரம். பாயிரம் அளித்தவர்கள் முத்தமிழ் வித்தகர் ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர் அவர்கள்.

சுவாமிகள்,

''கண்டூரும் இனிய மொழிப் பெரியதம்பிப்பிள்ளையெனும் கலை வல்லோனே'' என்று பாடுவதற்குப் பிள்ளை எத்துணைத்தவஞ்செய்திருக்க வேண்டும்.

புலவர்மணி அவர்களின் பூர்வ தவம் இருந்தவாறு, பதிகத்தின் பாயி ரத்தைப் படித்ததும் பழைய நினைவுகளின் குவியல் என்னை முழுவதும் விழுங்கிவிட்டது.

இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன், ஒரு சந்தர்ப்பத்தில் எனது சகபாடியும் நண்பருமான புலவர்மணி அவர்களை மட்டக்களப்பில் அவர் கிருகத்திற் சந்தித்தேன். புலவர்மணி என்னை மண்டூருக்கு அழைத் துச் சென்று திருமுருகன் சந்நிதியில் வழிபாடு செய்யும்படி செய்தார். முருகன் சந்நிதி, கதிர்காமத்தில் நிற்பதோர் உணர்ச்சியைத் தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சமயத்தில் புலவர்மணி, சாஷ்டாங்கமாக எல்லா உறுப்புகளும் நிலத்தில் தோய விழுந்து வணங்கிப் பரவசமுற்றார். அதைக் கண்டதும் எனக்கு மயிர் சிலிர்த்தது.

புலவர்மணி இவ்வாறு அட்டாங்க நமஸ்காரம் வேறெங்கேயும் செய்ததை நான் கண்டதில்லை.

புனித தவ விசேடம் இருந்தவாறு:

முதிர்ந்து தளர்ந்த இக் காலத்தில் பல வருடகாலமாக நாள் தோறும் அதிகாலையில் இருள் புலர்வதற்கு முன் பெரும்பாலும் எனது தியானத்தில் மண்டூர்த் திருமுருகன் வழிபாடு; அதற்கு மேல் கதிர்காம தரிசனம் நடந்து வருகின்றது.

மண்டூர் திருமுருக தரிசனத்தில் புலவர்மணியும் காட்சியளித்து வருகின்றார். பூர்வகர்மத் தொடர்பை யாரறிவர்:

நானும் பெரியதம்பிப்பிள்ளையும் 1918 நாவலர் காவிய பாடசாலையில் படிக்கும் போது ஒரு புதினம் எட்டியது.

மட்டக்களப்பில் காரைதீவில் பிறந்த ஒருவர், மதுரைப் பண்டிதர் பரீட்சையில் சித்தியெய்தியவர், ஆங்கில ஆசிரியர் பயிற்சி பெற்றவர்; பெயர் மயில்வாகனம். யாழ் கத்தோலிக்க கல்லூரி ஒன்றில் விஞ்ஞானத்துறை ஆசிரியராகக் கடமைபுரிகின்றார் என்பது எட்டிய புதினம். திரு. பெரியதம்பிப்பிள்ளைக்கு அடக்கமுடியாத பூரிப்பு உண்டாயிற்று. இருவரும் பண்டித மயில்வாகனனாரைத் தேடிப் புறப்பட்டோம்.

கரையூரில் ஒரு வீட்டுப்பின் விறாந்தையில் தனிமையாக இருந்ததைக் கண்டு பிடித்த ஞாபகம். மற்றொன்றும் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்குப் போலவே பிள்ளைக்கும் அவர் புதியவர். அடுத்த சந்திப்பு ஆனைப்பந்திச் சந்திப்பில், தென் கிழக்கில் ஒரு பெரிய வீட்டில் கிடைத்தது. யாழ்ப்பாணத்துப் பிரசித்தி பெற்ற பிரமுகர்களின் மத்தியில் திரு. பண்டித மயில்வாகனனார் காட்சியளித்தார். அதன் மேல் வளர்பிறையாய்க் களங்கமற்ற பரிபூரண சந்திரனான வரலாறு உலகப் பிரசித்தம். திரு. பெரிய தம்பிப்பிள்ளை அடிக்கடி பண்டித மயில்வாகனனாரிடம் சென்று வருவார். இடையிடையே நானும் பிள்ளையுடன் சென்று வருவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்கு வரவரக் கவிதா சாமர்த்தியம் அதிகரித்தது. அது பெரும் புகழைத் தந்ததாயினும் பிள்ளை ஈடுபடவேண்டியவைகளில் ஈடுபடுவ தற்குத் தடையுமாயிருந்தது.

சாவகச்சேரியில் தமிழ்தந்த சி. வை. தாமோதரம்பிள்ளையின் தமைய னார் புதல்வர் சின்னத்தம்பிப் போதகர், பிள்ளையின் பாடல்களைப் பாராட்டும் முகமாகப் பிள்ளையைத் தம் வலையில் சிக்கவைக்கவும் சூழ்ச்சி செய்தார். இந்த நிலையில் பிள்ளையைத்தடுத்தாட் கொண்ட பெற்றவரும் பெருமை விபுலாநந்த அடிகளாருக்கு உரியது.

அடிகளார் தடுத்தாட்கொண்டிலரேல் சுவாமிகளின் பாயிரத்தோடு கூடிய மண்டூர்ப் பதிகத்தையோ, கீதை, கவி செய்து கீர்த்தி மிகப் பெறுவ தையோ காண்பது யாங்ஙனம்!

மண்டூர் கதிர்காமத்தை நினைவு படுத்துவது போல் புலவர்மணியும் தம்மைத் தடுத்தாட்கொண்ட சுவாமிகளின் நினைவை உதிக்கச் செய்வது மறக்க முடியாதது.

இனி மண்டூர்ப்பதிகப் பாயிரத்தை நினைவு கொண்டு அப்பாற் செல்வோம்.

''மட்டக்களப்புச் சைவக் கோவில்கள்'' என்னும் இந்நூலிலே தில்லை மண்டூர் என்றதும் சிதம்பரமாகிய தில்லைக்கும், மண்டூருக்கும் என்ன சம்பந்தம் என்ற எண்ணம் உண்டாகியது. தில்லை ஒரு மரம் என்பது கட்டுரையில் ஆசிரியரால் நன்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

தெய்வயானையம்மை ஊடல் யாழ்ப்பாணத்துப் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயங்களில் கதவடைப்பால் நடைபெறுகின்றது.

''ஈங்கொரு தமியளாகி இருந்திடு வேனுக்கின்றோர்,
பாங்கிவந்துற்றவாறு நன்றெனப் பரிவுகூர்ந்தாள்''

என்ற கந்தபுராணப் பாடலை நினைந்து, தெய்வயானை அம்மையா ரின் மாசற்ற மறுவில் கற்பு நிலைக்கு விம்மிதம் உறுவதுண்டு.

வஞ்சகமற்ற வேடர் பூசனையை முருகன் ஏற்றருள் புரிவது போல, தெய்வயானை அம்மையாரும் மண்டூர்க் கோயிலில் நிகழ்கின்ற வஞ்ச கமற்ற ஊடல் விழாவை, உலக சம்பிரதாய வழக்கில் நடத்தும் விழாவை, ஏற்று அருள் புரிவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி கோவில், சைவக் கோவில்களின் வரிசையில் வைத்து, இடந் தோறும் பல்வேறு திரிபுபட்டு நடைமுறையில் இருப்பது, ''இலங் கையிற் கண்ணகி கோயில்கள்'' என்ற தலைப்பில் ஆராய்ச்சி ஒன்று நடக்கற்பாலதென்பதைக் காட்டுகிறது.

சிவன் கோவில் இரண்டில் ஒன்று கொக்கட்டிச்சோலை. இக் கோவிலில் இரவில் தேவர்களின் பூசை நடப்பதென்றும் ஒரு நாள் தாம் இதனைத் தரிசித்தார் என்றும் நம்பிக்கைக்குரிய சாமியார் ஒருவர் சொன்னதை நினைக்கும் போது மயிர்க்கூச்செறியும்.

''மட்டக்களப்புச் சைவக் கோவில்கள்'' என்ற இந் நூலில் அங்கே உள்ள கோயில்கள் பற்றிக் கூறுகின்ற ஏழு கட்டுரைகளில் திருக்கோயில், கோவில் போரதீவு, சித்திரவேலாயுதர் கோவில், அம்பாரை வில்லுப்பிள் ளையார் கோவில், ஏறாவூர் பத்திரகாளி அம்மன் கோவில், வந்தாறுமூலை மகாவிஷ்ணுகோவில், பழுகாமம் மாவேற்குடாப் பிள்ளையார் கோவில், களுவாஞ்சிக்குடி கண்ணகியம்மன் கோவில் என்பன ஆழ்ந்த சிந்தனை விருந்துகள். ஆராய்சிக்காரர்கள், சமய சீர்திருத்தப் பிரமுகர்கள் ஈடுபட்டுப் படித்தறிய வேண்டியவைகள், கட்டுரைகள் யாவும் தெய்வ பக்தியை வளர்ப்பதே குறிக்கோள் என்பதை உணர வைப்பவைகள். அதனால் ஆத்மீக வளர்ச்சிக்கு வழிசெய்கின்றது இந் நூல்.

அருமந்த இந் நூலை யாத்துதவிய ஆசிரியர் பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்களுக்கும், அவ் விஷயத்தில் அவர்களுக்கு உறுதுணை யாயிருந்து வரும் வாழ்க்கைத் துணைவியர் அவர்களுக்கும் செயற்பால தாகிய நன்றிக்கடன் மிகமிகப் பெரியதாம்.

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''

''திருக்கோவில்....'' என்று தொடங்கும் தேவாரத்தை நினைவு கூர்வோமாக.

**சி. கணபதிப்பிள்ளை.**

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
10-12-81.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச அபிவிருத்தி தமிழ்மொழி அமுலாக்கல் இந்துசமய இந்துகலாசார அமைச்சர் கௌரவ செல்லையா இராசதுரை அவர்கள் அளித்த

## வாழ்த்துரை

மட்டக்களப்புத் தமிழ் மாநிலத்திலுள்ள சைவக் கோவில்களைப் பற்றி வித்துவான், பண்டிதர் வி.சீ. கந்தையா, பி.ஓ.எல். அவர்கள் எழுதியுள்ள நூலைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது.

''கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்'' என்ற அன்புக் கட்டளைக்கு இலக்கானவர்கள் மட்டக்களப்பு மக்கள். நாடோ, நகரோ,காடோ, வயலோ தாம் குடியிருக்கும் இடமெல்லாம் இலைகுழையால் வேயப் பெற்ற சிறுபந்தர் அமைத்தாயினும் தமக்குத்தெரிந்த வகையில் வழிபாடு செய்வதை இவர்கள் தொடர்ந்துள்ளனர் என்று அறிகிறோம். இவர்களுடைய பக்திக்குக் கட்டுப்பட்டுத்தானோ என்னவோ இறைவனும் கனவிற் தோன்றிக் கட்டளை கொடுத்தோ, வேல்வடிவில் மரத்தில் பதித்தோ, சிலை வடிவில் யாத்திரை செய்யும் பக்தர்கள் மூலம் கொண்டு வரப்பெற்றோ கோவில்கள் எழும்புவதற்கு வகை செய்துள்ளமையை இந் நூல் வாயிலாக அறிய மயிர்க்கூச்செறிந்து நாமும் பரவசப்படுகின்றோம். இவ்வாறு தோன்றப் பெற்றதும், பெறாததுமான மட்டக்களப்புக் கோவில் கள் மீது ஆசிரியருக்குள்ள ஈடுபாடும், பக்தியும் நன்கு புலனாகின்றன.

மட்டக்களப்பில் சிவன் கோவிலாகக் கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரன் கோவில் ஒன்றே நிலை பெற்றிருப்பதும், இக்கோவிலில் மட்டுமே பிள்ளையார் தேர், சுவாமி தேர் என்று இரு தேர்கள் இருப்பதும் வருடம் ஒருமுறை தேரோட்டம் நிகழ்வதும் நினைவிற் கொள்ளத் தக்கவை. மாமாங்கேச்சுரம் சுயம்புலிங்கத்தைக் கொண்ட சிவன் கோவிலாக இருப்பினும் பிள்ளையாராக வழிபட்டு மாமாங்கப் பிள்ளையார் கோவில் என்றே பலராலும் போற்றப்பெறுகிறது என்பதை ஆசிரியர் நன்கு விளக்கி உள்ளார். மக்கள் சிறு கூட்டமாக வாழும் மூலைமுடுக்கு களிலிருந்து கிராமங்கள், நகரங்கள் எல்லாம், கொத்துப் பந்தராகவோ சீலையால் திரைவரைந்ததாகவோ, ஓலையால் கல்லினாற் கட்டப்பெற்ற தாகவோ கோவில்கள் மட்டக்களப்பு மாநிலத்திலே காட்சி தருவன. சிவ நெறியினையே கைக்கொண்டு சைவசமயத்தில் வாழுகின்ற மட்டக்களப்பு மக்களின் வழிபாட்டு முறைகளில் உள்ள சில புதிய அம்சங்கள் நன்கு இந் நூலிற் காட்டப்பெறுகின்றன. பிள்ளையார், முருகன், மாரி, காளி, கண்ணகி, திரௌபதி, கிருஷ்ணன், வீரபத்திரர், நாகதம்பிரான் ஆகிய தெய்வங்களை மட்டக்களப்புச் சைவ மக்கள் பெரிதும் வழிபடுவர். அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு எல்லாம் சிவவழிபாடாகவே முடிவுறுகிறதென்று இவ் ஆராய்ச்சி நூலாலறிகின்றோம்.

சமயம் நம்மை நெறிப்படுத்துவது. அதற்கு உரிமை பூண்டது கோவில். கோவில் மக்களின் மனதைத் தூய்மைசெய்து, பக்தியை வளர்க்கக் காலாகி இனிய வாழ்வுக்கு வழிகோலுவது. இதனைப் பெருக்குவதற்கு மக்கள் கோவில்களைப் பற்றிய கர்ண பரம்பரைக்கதைகளையும் பாரம்பரிய வரலாற்றையும் அறிதல் மிகவும் அவசியமாகும்.

இவ்வினிய நூலை எழுதிய ஆசிரியர் பண்டிதர். வி.சீ. கந்தையா அவர்கள் நமது பாராட்டுதலுக்குப் பெரிதும் உரியவர். முதலாவது தமிழாராய்ச்சி மகாநாட்டில் நாங்களிருவரும் ஒருமித்துப் பங்கு கொண்டோம். இவருடைய முதலாக்கம் ''குளுத்திப் பாடல்'' என்னும் கண்ணகியம்மன் பாடல். இதனை எனது இளங்கோ அச்சகத்திலேயே அச்சேறச் செய்த உரிமை எனக்குரியது என்பதை எண்ணி இறும்பூதெய்துகின்றேன். இவர் பதிப்பித்த ''கண்ணகி வழக்குரை'' என்னும் நூல், மட்டக்களப்பு நாட்டுக்கே சொந்தமான சொத்து எனலாம்.

மட்டக்களப்பு நாட்டைப்பற்றி பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து இவர் எழுதிய ''மட்டக்களப்புத் தமிழகம்'' என்னும் நூல், மட்டக்களப்புத் தமிழன்னையை அரியாசனமேற்றியதொருகலைக்கோயில் என்று அறிஞர்களால் பாராட்டப் பெற்றது. அந்நூல் அரங்கேற்று விழாவினுக்குத் தலைமை தாங்கும் பேறும் எனக்குக் கிடைத்தது.

பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்கள் தாம் பிறந்த பொன்னாட்டுக்குச் செய்யும் அடுத்த தொண்டு ''மட்டக்களப்புச் சைவக்கோவில்கள்'' முதலாம் பாகத்தைத் தந்துதவியமையாகும். இந்நூல் இந்துகலாசாரத் திணைக்களத்தினால் எனது காலத்திலேயே அச்சேறுவது கண்டு பெருமைப்படுகின்றேன்.

எனது மதிப்புக்குரிய நண்பரான பண்டிதர், வி.சீ. கந்தையா அவர்கள் சமயப்பற்றும், மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் நிறைந்தவர். செந்தமிழ் அறிஞர். இந்த நூலைச் சைவ உலகம் மனமுவந்தேற்றுப் பயன்பெறக் கடமைப்பட்டுள்ளது. பண்டிதர் அவர்கள் சைவக் கோவில்களையும் வெளிக்கொணர்ந்து நமது நாட்டுக்கும், தமிழுக்கும், சமயத்துக்கும் தொடர்ந்து பணிபுரிய வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம், அன்புள்ள,

**செ. இராசதுரை,**

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
19-12-81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் சைவக்கோவில்கள்-1

## 1-வது இயல்: நூற்பொது

### *அறிமுகம்*

சிவசமயம் தற்காலத்தே இந்து சமயம் என்ற பெயரால் வழங்கப் பெறுகிறது. இந்தியாவிலுள்ள வைதிக சமயப் பிரிவுகள் பலவற்றையும் உளப்படுத்தும் பொதுப் பெயராகவே "இந்து சமயம்" என்ற சொல் ஆக்கப் பெற்றதென்று கொள்வதே பொருந்துவதாகும். குமரனையும், கணபதியையும், திருமாலையும், சக்தியையும் முறையே தனித்தனித் தெய்வம் என்று கொண்டு வழிபட்டோர் முறையே கௌமாரம், காண பத்தியம், வைணவம், சாக்தம் என்ற வெவ்வேறு மதங்களின் பெயரால் அழைக்கப்பட்டனர். எனினும் அவ்வாறு கொள்ளாது, ஒரே பரம்பொரு ளான சிவபெருமானின் வெவ்வேறு தோற்றப் பெயர்களே இவை என்று கருதி, சிவசமயம் என்ற ஒரே பெயரில் அடக்கி வழிபாடாற்றி வருவதே ஈழநாட்டுச் சைவ சமயத்தின் தனிச் சிறப்பாகும். இந்தப் பழைய வழக்கி னுக்கு அமையப் பண்டுதொட்டு நிலவி வந்த மட்டக்களப்புத் திருநாட்டின் சைவசமய வழிபடு தெய்வம் முருகன். அவ்வழக்கத்தின் நீண்டகால வளர்ச்சிக்குப் பின்பே இன்று எல்லா ஊர்களிலும் காணப்படுவதாய பிள்ளையார் (விநாயகர்) கோயில்கள் பரந்து இடம் பெறலாயின. தொடர்ந்து மாரியம்மன், பத்திரகாளி, கண்ணகி அம்மன் முதலான பெயர் களில் எழுந்த கோயில்களும் இடைக்கிடை கால் கொண்டு மட்டக்களப்புச் சைவசமய வழிபாட்டில் நிலைபெற்ற இடத்தையும் பிடித்துக் கொண் டுள்ளன. இந்த ஒழுங்கினுக்கிணையவே மட்டக்களப்புத் தமிழகத்திலுள்ள சிவதலங்கள் விளங்குகின்றன எனலாம்.

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ள சமயமே சிவசமயம் ஆகிய சைவசமயம் எனினும், பண்டைய மட்டக்களப்புத் தமிழகத்துச் சைவர் முருகக்கடவுளுக்கும், விநாயகக்கடவுளுக்கும் காட்டும் வழிபாட் டின் மூலமே சிவனை வணங்கப்பெற்றவராவர். இந்த வழக்கினுக்குச் சான்றாக இரண்டு பழம்பெரும் தலங்களை நாம் எடுத்துக் காட்டலாம். கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீசுவரர் கோயில் ஒன்று, மட்டக்களப்பு மாமாங்கேசுவரர் கோயில் மற்றையது. முன்னையது ஆதியில் முருக வழிபாட்டுப்படியே பூசனை முதலியவை நடைபெற்றுவந்து, விரைவில் அந்நிலைமை முற்றிலும் மாறியதால் மட்டக்களப்பில் உள்ள ஒரேயொரு சிவன் கோயில் என்ற தனது தனித்தன்மை மிளிர இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னையது பிள்ளையார் (விநாயகர்) வழிபாட்டு முறைப்படியே இன்னமும் பூசனை முதலியன நடைபெற்று வரும் ஒரு சிவன்கோயில். இவ்விரண்டு கோயில் மூலத்தானங்களிலும் சிவலிங்கமே அமைந்திருந் ததால் இரண்டும் மட்டக்களப்பில் உள்ள சிவன் கோயில்களே என்று கொள்ளுதல் வேண்டும். தான்தோன்றீச்சரம், மாமாங்கேச்சரம் என்று மட்டக்களப்பு நாட்டில் உள்ள இவ்விரண்டு கோயில்கள் மட்டுமே ஈச்சரம் அல்லது ஈச்சுரம் என்ற பெயரால் அழைக்கப்படுதலும் எனது முடிபுக்குச் சான்றாய் உள்ளன. ஈச்சரம் என்று அழைப்பது, சிவன்கோயிலைத்தானே! எனினும் மாமாங்கேச்சரம் பொதுமக்கள் மத்தியில் மாமாங்கப் பிள்ளை யார் கோவில் என்ற பெயராலேயே பிரபலம் பெற்று விளங்குகிறது. இக் கோவில் மூலத்தானத்திலுள்ள சுயம்பு லிங்கத்துக்கு, விநாயகருடைய அங்கி அணியப்பெற்ற பின்னர், தரிசனை பெறும் மக்கள், விநாயகப் பெருமானே மூலத்தானத்தில் எழுந்தருளி இருக்கின்றார் என்று கொள் வதும், அதனால் மாமாங்கப் பிள்ளையார் கோவில் என்று அக்கோவிலை அழைப்பதும் தவறு ஆகாது.

மட்டக்களப்பு மான்மியம் என்ற பழைமையான வரலாற்று ஏடுக ளின்படி கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கையை அரசு செய்த மகா சேனன் காலத்தில், கிழக்கிலங்கையை அரசு செய்த ஆடகசௌந்தரி என்னும் இளவரசியால், மாமாங்கக்கோவிலும், தீர்த்தக்குளமும் சீர்செய் யப்பெற்றன என்றும், கி.பி. நாலாம் நூற்றாண்டில் மண்ணேறுமுனை (மண்முனை) யில் இருந்து அரசு செய்த கலிங்க குமாரியான உலகநாச் சியினால் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரம் கண்டுபிடித்து அமைக்கப்பெற்றது என்றும் அறிகிறோம்.

மட்டக்களப்பில் மிகப் பழமையானது முருகவழிபாடுதான் என்றேன். அப்படிப்பழமையும் பிரசித்தமுமுடைய முருக வழிபாட்டுத்தலங்களைத் திருப்படைக் கோவில்கள் என்று இத்திரு நாட்டிலே கூறுதல் வழக்கம். பண்டைய அரசின் மதிப்பும், மானியமும் சீர்வரிசைகளும் பெற்ற கோவில்களே திருப்படைக்கோவில்கள். மட்டக்களப்பு நாட்டின் தென் கோடியிலே, கடல்முகம் சார்ந்த, திருக்கோவில் என்ற ஊரிலுள்ள சித்திரவேலாயுதசுவாமி கோவில்தான் மட்டக்களப்பின் முதலாவது திருப்படைக் கோவிலாகும். மாமாங்கேச்சரம், தான்தோன்றீச்சரம் என்ற இரண்டு பழம்பெரும் புண்ணிய தலங்களுக்கும் முன்னரே மட்டக்களப்புத் தேசமெங்கும், பேரும் புகழும் பெற்று விளங்கிய 'தேசத்துக் கோவில்', திருக்கோவில். சோழ மன்னரால் இருமுறைகளும் (11 ம் 12 ம் நூற்றாண்டு காலத்துள்) பாண்டிய மன்னரால் ஒரு முறையும் (சுமார் 1315

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்) இக் கோவில் புதுப்பிக்கப்பெற்றுள்ளது. இக்கோவிலின் அழகிய கோபுர அமைப்புக்களைப்பற்றி வணக்கத்துக்குரிய குவரோல் அடிகள் ''கொங்கெஸ்ரா'' என்ற தமது நூலில் மிகச் சிறப்புறக் கூறி இத்தகைய கோவில்களுக்குப் போத்துக்கேயரால் ஈழத்திருநாட்டில்' இழைக்கப்பட்ட அழிவுகளைப்பற்றி எழுதுகையில் கண்ணீர் கலந்து வர்ணிக்கிறார். திருக்கோவிலை அடுத்த திருப்படைக் கோவிலாக முறையே கருதப்பெற்றவை கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரம், பெரிய போரதீவுச் சித்திரவேலாயுதசுவாமிகோவில், மண்டூர் முருகன் கோவில், வெருகல் சித்திரவேலாயுதசுவாமிகோவில் என்பவையாகும். பிற்காலத்தே சித்தாண்டிச் சித்திரவேலாயுதசுவாமி கோவிலும் ஒரு திருப்படைக் கோவிலாகக் கணிக்கப்பெற்றிருக்கின்றது. திருப்படைக் கோவில்களுக்கு வேண்டிய திருப்பணிகளை நியதி தவறாது செய்து வருவதற்கெனத் திருப்படைக்குடியினர் உரிய மானியங்களுடன், மன்னரால் வகுத்து வைக்கப் பெற்றுள்ளனர்.

திருப்படைக் கோவில்களின் பாதுகாவலராய், மட்டக்களப்புத் தேச வன்னிமைகளாக அக்காலம் தொடர்ந்திருந்து வந்த முக்குவர் குலப் பிரபுக்களே சாசன ரீதியாக அதிகாரம் வழங்கப் பெற்றிருந்தனர். இக்கோவில் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு தேச வன்னிமைகள் பரிபாலகராய் இருந்திருக்கிறார்கள். கோவில் நிருவாகத்தில் இவர்களுக்குத் தொடர்பு எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. கோவில் நிருவாகத்திற்குத் தலைவராக இருப்பவர் ''வண்ணக்கர்'' என்று வழங்கப்பெற்று வருகின்றார். வண்ணக்கராக இருந்ததற்கும் மற்றும் கோவில் நிருவாகம், பரிபாலனம் முதலியவற்றைச் செய்தற்கும், வேளாளகுலத் தலைவரே நியமிக்கப்பெற்று வந்திருக்கிறார்கள். மட்டக்களப்பிலுள்ள பட்டயம் பெற்ற உயர்குடி வேளாளர், முதன் முதலில் பாண்டி நாட்டிலிருந்து திருக்கோவிலின் பராமரிப்புக்காக இங்கு கொண்டு வந்து குடியேற்றப் பெற்றிருக்கின்றனர் என்றும், அக்குடியேற்றம் தம்பிலுவில், திருக்கோவில், கோரைக் களப்பு முதலான ஊர்களில் இடம் பெற்றது என்றும், கோரைக் களப்பில் இருந்து மண்டூர்க் கோவில் தலைமைக்குரிய வேளாளர் களுவாஞ்சிக் குடியிலும், கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சுரர் கோயிற் கடமைகளுக்கு வேண்டிய வேளாளர் பழுகாமத்திலும், குடியேற்றப் பெற்றிருக்கிறார்கள் என்றும் மட்டக்களப்பு மான்மியம் கூறும். மதிசுதன் (கலி: 4209) என்ற மட்டக்களப்புத் தமிழ் மன்னனே வேளாளர், முக்குவர் முதலான திருப்படைச் சாதியருக்கு உரிய கடமை, நிபந்தனைகள், மானியம் முதலானவை பற்றி முதன் முறையாக வரையறைசெய்து திருப்படைச் சாசனமும் எழுதிவைத்தான் என்றும், பின் 13 ம் நூற்றாண்டில் மாகோனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியின் போது மேலும் திருத்தமும் திட்டமும் செய்யப் பெற்றன என்றும், மட்டக்களப்பு மான்மியம் என்ற வரலாற்றுச் சாசனத்திலும், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் கோவிலிலுள்ள திருப்படைக் களஞ்சியக் கல்வெட்டுக்கள் முதலிய சான்றுகளினாலும் அறிகின்றோம். இதனை விரிவாகவும் விளக்கமாகவும் மட்டக்களப்பு மான்மியம் என்ற நூற்பதிப்பில் காணலாகும். மதிசுதன் என்ற மன்னவனே போர் முடை நாட்டு (போரேறுதீவுச்) சித்திரவேலாயுதசுவாமி கோவிலையும், அவன்காலத்துக்கு முன்பிருந்த மண்டு நாகன் என்பவனால் ஆக்கப் பெற்று, காலசேனமன்னனால் அழித்துத் தள்ளப்பட்ட மண்டூர் முருகையன் கோவிலையும் திருத்திப் புதுப்பணிகள் செய்துள்ளான்.

இக்கோவிலின் வரவு செலவுப் பதிவுகளுக்கும், வீண்செலவுத் தடுப் புக்களுக்குமாக கணக்கர்கள் என்ற பெயரால் அல்லது குழு உறுப்பினர்கள் என்ற பெயரால் கோயிற் சூழலைச் சார்ந்த மற்றைய ஊர்களிலிருந்தும் நியமனம் பெறும் வழக்கம் இருந்துவந்திருக்கின்றது. காலத்துக்குக்காலம் கைவிடப்பெற்ற, அல்லது மாற்ற வேண்டியேற்பட்ட இந்த ஒழுங்கு நியதி, குடிவழமை முதலியன யாவும் மாகோன் (கி.பி. 1215-1242) என்ற மட்டக்களப்புத் தமிழ் மன்னனாலும், பின்னர் இறுதியாக ஸ்ரீவிமலதருமன் (1604) என்ற மட்டக்களப்புத் தமிழ் மன்னனாலும் சாசனங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த ஆதாரங்களைத் தான்தோன்றீச்சரர் கோவிலிலுள்ள குடுக்கை கூறும் கல்வெட்டு நன்கு குறிப்பிடுகின்றது.

இவைகளைவிட, உகந்தமலை முருகன் கோயில், தாந்தாமலை முருகன் கோயில் என்ற பழைமையான மலைக் கோயில்களும், மட்டு நகர்ப் பெரியதுறை முருகன் கோவிலும் இப்பகுதியில் உள்ள பிரசித்த மான முருகன் தலங்களாகும். முருகன் கோவில்கள் அமைந்துள்ள இடங் களைப் பொதுவாக நோக்கினால் மூர்த்தி, தலம் தீர்த்தம் என்ற மூன்றும் பெரும்பாலும் அங்கு சிறப்பாக அமைந்திருக்கக் காண்போம். உகந்த மலையும், திருக்கோவிலும் கடல் சார்ந்து முந்நீர்ப் பெளவமே தீர்த்தமாகக் கொண்ட சிறப்பும் பொருந்தியவை. உகந்தமலை முருகனுடன் வள்ளி நாயகியார் மட்டுமே கோயில் கொண்டுள்ளமையையும், மண்டூரில் தெய் வகுஞ்சரிக்கும் கோவில் இருப்பினும், திருவிழாக்காலங்களில் கதிர்கா மத்தைப் போன்று வள்ளி நாச்சியார் கோவிலை மட்டுமே சுவாமியின் ஊர்வலம் தரிசித்துச் செல்லுதலையும் இங்கே ஊன்றி நோக்குதல் வேண்டும்.

மிகப்பழைய தமிழ் நூல்களில் எல்லாம் குறிஞ்சித் தலைவனான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப் பெருமானுக்கு வள்ளிநாயகியார் ஆகிய ஒருமனைவி மட்டுமே குறிப்பிடப்படுதலையும் உற்று நோக்கினால், மட்டக்களப்பாருடைய முருக வழிபாட்டின் ஒழுங்குகள் தொன்றுதொட்டு, எவ்வளவோ பழமை யான கலாசாரத்தின் வழியாக வளர்ந்து வந்திருக்கின்றன என்பது புலனாகும்.

ஆரியர், தமது கார்த்திகேயனுக்கு இந்திரனுடைய மகளாகிய தெய் வநாயகி அம்மையைச் சக்தியாகக் கொண்டு வழிபட்டு வந்தவர்கள். அன் னாரின் தெற்கு நோக்கிய படையெடுப்புகள் தமிழர் மீது வெற்றிய ளிக்காமல் போனபின்னர், அன்னார் தமிழருடன் இணைந்து கலந்துவாழ இயைந்துகொண்ட சம்பவத்தையே அகத்தியர் இமயத்திலிருந்து பொதிகை மலைக்கு வந்த வரலாறு மறைத்துக் கூறுகிறது. அதனைப் போன்றதுதான் கார்த்திகேயனும் தமிழ்முருகனும் ஒன்று படுத்தப்பட்ட பின்னர் வள்ளிநாயகியாரோடு தெய்வநாயகியும் முருகக் கடவுளுக்கு மனைவியராகத் தமிழகத்திலும், ஈழநாட்டிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டி ருக்கிறார்கள் என்றும் மூன்று சக்திகளையும் முருகப் பெருமான் கொண்டவன் என்றும் கருதப்படுகிறது. வள்ளி நாயகியும் தெய்வயா னையும், ஞானவேற்படையும் முறையே இக்கருத்தையே காட்டும் என்பர். எப்படியிருப்பினும் கிரியாசக்தி என்று கொள்ளப்படும் தெய்வயானை அம்மையாரைப்பற்றிய செய்தி மட்டும் மிகப் பழந்தமிழக வழக்கில் இல்லாததாய்ப் பிற்காலத்திலே தமிழரிடைக் கலந்திருக்கின்றது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியே உள்ளது.

மண்டூர்க் கந்தசுவாமி கோவிலிலும் கதிர்காமத்தைப் போன்று மூலத்தானத்தைத் திறந்து திரை நீக்கம் செய்து காட்டாது பூசனையாற்றும் வழக்கமே உடையது. இது சைவ சமயத்துக் கிரியை வழிபாட்டு முறை யின் உச்சநிலையாகிய அருவத்திருவுருவக் காட்சி நிலைக்கு அடியார் களை இட்டுச் செல்லும் உயர் பண்பினதாகும்.

முருகன் கோவில் இல்லாத ஊர் இருத்தல் கூடுமாயினும் பிள்ளை யார் கோவில் இல்லாத ஊர் ஒன்றை மட்டக்களப்புத் திருநாட்டில் காணு தல் அரிதாகும். அவ்வாறு சைவப் பொதுமக்கள் அனைவரது உள்ளத் திலும், இடம்பெற்ற கணபதி அல்லது விநாயகக்கடவுள், மக்கள் தமது செயல் எதனைத் தொடங்கு முன்பும் முதலில் மனத்தில் தியானித் துக்கொள்ளும் மங்கலமான தெய்வம் என்று கருதுகிறார்கள். தாம் தொடங்கும் செயல் கடவுட்பூசையாயினும் சரி கல்வி, தொழில் முதலான வேறு எதுவாயினும் சரி பிரணவவடிவமான மகா கணபதிக்கு முதலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம் செய்து தொடங்காவிடில், அக்கருமம் இனிது நிறைவேறாது என்றும், கணபதியின் திருவருளைத் துணைக்கொண்டு விட்டால், அத்தொழில் முடிவுபெறும்வரை இடையூறெதுவும் ஏற்படாதென்றும் மக்கள் இங்கு நம்புவர். தற்போது பிள்ளையார் என்ற சொல் கணபதியையே குறிப்பினும் பழந்தமிழகத்திற் கூட இச்சொல் முருகனையும் குறிக்குமொன்றாகவே இருந்திருக்கின்றது. இதனால் மட்டக்களப்புத் தமிழ் வழக்கிலும், மூத்தபிள்ளையார் (விநாயகப் பெருமான்), இளைய பிள்ளையார் (முருகப் பெருமான்) என்ற சொற்கள் வழங்கி வந்துள்ளன.

''மூத்தபிள்ளைக்கொரு தேங்காய்
முறையோடே கொடுவா''

என்று மட்டக்களப்பு வசந்தன் பாடலொன்றில் இப்பயிற்சியைக் காணலாம்.

இவ்வாறு முதன்மைத் தெய்வமான கணபதியாகிய பிள்ளையார் பிரணவ சொரூபமே ஆனவர். பிரணவம் என்ற மூல ஒலியிலிருந்தே உலககிருத்தியங்கள் தொடங்கப் பெற்றன என ஆன்றோர் கூறுவர். அதனாலே எல்லாவற்றுக்கும் முதல் வணக்கம் பிரணவத்துக்குச் செலுத்தப்படுகின்றதென்று கொள்ளுவதும் பொருத்தமானதே.

''பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடுதனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர்பயில்வலி வலமுறை இறையே''

என்ற ஆளுடைய பிள்ளையாருடைய தேவாரம், கணபதியின் திருவவதாரம் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆண், பெண் யானை வடிவில் அகரமாகிய சிவமும், உகரமாகிய சக்தியும் கூடியதனால் சுத்தமாயாகாரியமாகிய நாதப் பிரணவம் (ஓம்) வடிவில் தோன்றிற்றென்று இதன் தத்துவத்தைக் கூறலாம். விநாயகருடைய யானைமுகம், பெருமான் பிரணவ வடிவினன் என்பதையும், ஐந்து கரங்களையுடையவன் என்பது பஞ்ச கிருத்தியங்களையும் தானே செய்பவன் என்பதையும், விசாலமான இரண்டு திருச்செவிகள் மலவாதனை ஆன்மாக்களைத் தாக்காமல் காத்து, வினை போக்கியருள வல்லவன் என்னும் உண்மையினையும் மூன்று கண்கள் சூரியர், சந்திரர் அக்கினியாகிய முச்சுடர்களையும் பெருவயிறு எல்லா அண்டங்களும், சராசரங்களும் தன்னுள்ளே அடங்கியுள்ளன என்ற தத்துவத்தையும் குறிப்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களுள்ளே மிகப்பழமையானதாகிய இருக்கு வேதத்திலும் கணபதி என்ற கடவுட் பெயர் குறிப்பிடப்பட்டு, வணக்கத்துக்கான மந்திரங்களும் சொல்லப்படுகின்றன. தைத்திரீய ஆரண்ய சுத்தில் ''தந்திந்'' என்று குறிப் பிடப்பெறுபவன் தந்தங்களையுடைய விநாயகக்கடவுளே யாகும். காயத்திரி மந்திரத்தில், ''தந்தோ தந்திந் பிரசோதயாத்'' என்று, ''தந்திந்'' என்ற பெயர் குறிப்பிடப்பெறுவதால், விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்தும் ஒழுங்கு மிகப்பழமையானது என்றே கொள்ளல் வேண்டும். எனினும், தமிழகத்தின் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியி லேயே விநாயகர் வணக்கம் குடியேறியுள்ளதென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். விநாயகருடைய திருவுருவங்கள் 32 வகையாக உள்ளன என்று கருதப்பெற்றபோதிலும், மட்டக்களப்பிலுள்ள விநாயகர் கோவில்களிற் பெரும்பாலானவை சித்தி விநாயகர்வடிவைக் கொண்ட ஆலயங்களாகவே உள்ளன. இதனால் மக்கள் வேண்டும் சித்திகள் யாவும் விரைந்து நன்கு நிறைவேறப்பெற்று, நாடும் நலம்பெற்று வாழ்கின்றது. வாரந்தோறும் வரும் வெள்ளிக்கிழமையும், மாதந்தோறும் வரும் வளர்பிறைச் சதுர்த்தியும், சிறப்பாக ஆவணி மாத சதுர்த்தியும், மார்கழி வளர்பிறை தோறும் வரும் சஷ்டியும் முக்கியமான விநாயகர் விரதங் களாக இங்கு அனுட்டிக்கப் பெறுகின்றன. பின்னைய இரண்டு விரதங் களுமே முறையே விநாயக சதுர்த்தி என்றும், விநாயக சஷ்டி என்றும் வழங்குவர். விநாயக சஷ்டியினைக் ''காப்புக்கிழமை'' என்று இங்கு வழங்குவர். அன்பர் வேண்டிய சித்திகளோடு குறித்த ஆண்டு முழுவதும், தமக்கும் தம் குடும்பத்தினர் உற்றார் உறவினர் யாவருக்கும் காப்பாக (காவலாக) அமையும் பெரும் பயனையும் விநாயகன் அருளுவத னாற்போலும் விரதமும் இப்பெயர் பெறுவதாயிற்று.

இவ்வாறான அடிப்படையில் மட்டக்களப்பெங்கும் உள்ள பிள்ளை யார் கோவிற் பூசனை, திருவிழா, விரதங்கள் ஆகிய நிகழ்ச்சிகள் பெரும் பாலும் பொதுவானவையே. மட்டக்களப்பிலுள்ள அம்மன் கோவிற் பூசனையைச் சடங்கு என்றும், பூசனையின் முதன் நாள் நிகழ்ச்சியைக் கதவு திறத்தல் என்றும், இறுதி நாள் நிகழ்ச்சியை கண்ணகியம்மன் கோயிலாயின். குளுத்தி' என்றும், ஏனையவற்றிற்காயின் 'பள்ளயம்' அல்லது 'பலிச்சடங்கு' என்றும் கூறுதல் வழக்கம். சடங்கு காலத்தில் அடியார் தமது வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தொடர்ந்து, குறித்த கோயில்களிற் தங்கியிருத்தலைக் கோயில் காத்தல் என்றும் கூறுவர். அம்மன் கோவில்கள் பெரும்பாலும் ஊர் எல்லையி லேயே அமைந்திருக்கும் நியதியை மட்டக்களப்புத் தமிழகம் எங்கும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனும் சக்தியும், நெருப்பும் சூடும் போலப், பிரிக்கமுடியாது அர்த்தநாரீச்சுர கோலத்தினராய் இருப்பதனால், சக்தியைத் தனியாகக் கண்டு வழிபடவிரும்பும் அடியார்கள் தத்தமது மனோநிலைக்கும் தேவை களுக்கும் ஏற்ற வகையில் பெயரும், உருவும் கொடுத்து வழிபாட்டினை அமைத்துக்கொண்டாரென்று நாம் கொள்ளலாம். இதனால், சக்தி வழிபாட்டின் மூலம் சிவப்பேறெய்துதலும் இலகுவாக்கப் பெற்றிருக்கிற தேயன்றி வேறில்லை.

இந்த இடத்தில் ஆன்மீக அறிவின் உயர்படியில் நிற்பாருக்கெழக் கூடிய ஐயம் ஒன்றிற்கு விடை கூற வேண்டியுமுள்ளது. மாயைதான் அம்பிகை என்றும், அம் மாயையின் தோற்றமே நாம் காணுவனயாவும் என்றும் கூறுகிறார்கள். மாயை அனைத்தையும் மறைப்பது. அப்படியா யின் அம்பிகையின் பெருமை சிறிது குறைவுடையது போலத் தோன்றும். பக்திமார்க்கத்தை அணுகாது சென்ற பெரு ஞானியர் சிலர் கூறியிருப்பது போல் அம்பிகையே மாயா காரியங்களைச் செய்து, அஞ்ஞானத்துக்குக் காரணமாகிவிடுவதும் உண்டு. தேவியின் பக்தர்களும், மாயையை நாமா கக் கடக்க முடியாது; அவள் கருணை வைத்தாலே தான் விலகி மேற் செல்ல வழிவிடுவாள்; அதற்காகத்தான் அவளைப் பிரார்த்திக்கின்றோம்; என்று சொல்லும்போது இதே பொருள்தானே தொனிக்கின்றது; ஏதோ துர்த் தேவதையை விலக்கிப் போவதற்காக, உபாசனை செய்வது போன்ற ஒரு சிறுமை, தேவி வழிபாட்டில் தோன்றுகின்றது. இது சரியான முடிபு அன்று. மேல்மாடியிலிருந்து கீழே இறங்க உதவும் அதே படி வரிசைகள் தாம், மேலே ஏறவும் துணைசெய்கின்றன அல்லவா? பரம் பொருளின், அல்லது பிரம்மத்தின் நிலையிலிருந்து பார்க்கும்போது அதனைக் கீழே இழுத்து உலகமாகத் தோற்றுவிக்கிற படிவரிசையாக இருக்கும் அதே தேவிதான், உயிர்க் குலத்தின் நிலையிலிருந்து பார்க்கும் போது உயர்ந்த பரம் பொருளின் நிலைக்கு நம்மையிட்டுச் செல்கின்ற உயர்வைத் தருகிற படிவரிசையுமாகிறாள். இதனை நன்கு விளங்கிக்கொண்டால், சக்தி மூர்த்தமெதுவும், துர்க்கையாயினும் சரி காளியாயினும் சரி, மகாமாரி யாயினும் சரி அன்றி வேறு எப்பெயருடையவை ஆயினும் சரி, உரிய முறைப்படி வழிபாடியற்றப்பெற்றால் உயிர்களைப் பொறுத்தமட்டில் உயர்ந்த பிரம்ம நிலையை மறைக்கவில்லை என்பதையும் நாம் அறியலாகும். பரம் பொருள் என்ற அமிர்தக் கடலைக் கண்டு பயப்படும் சர்க்கரைப் பொம்மைகளாக இருப்பவர் நாங்கள். மென்மையான அமிர்தப் பாங்கானது, வன்மையான கற்கண்டாக இறுகி,அழகிய தோணியாக வருகிறது என வைத்துக் கொண்டால் அந்தத் தோணிதான் அம்பிகை யாகிறாள். அந்தப்புணையில் ஏறி அமிர்தக்கடலூடு செல்கின்ற ஆனந் தமே அம்பாள் பக்தியாகும். கற்கண்டு நாவாயினோடு சர்க்கரைப் பதுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் முடிவில் அமிர்த சாகரத்தில் கரைந்தே விடுகின்றன. பக்திப் படகில் சென்றாலும் முடிவில் ஞான சாகரத்தில் கரையத்தானே வேண்டும்? இந்தப் பேருண்மையைத்தம் வாழ்வில் கடைப்பிடித்து, அதாவது தேவி உபாசனை மூலம் ஞான நிலைக்குச் செல்லலாம் என்று காட்டிய மகான் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சரின் சரிதை, இத்துறையில் நல்லவொரு சான்றாக இருக்கின்றது அல்லவா?

மட்டக்களப்பில் வாழ்வோரிற் பெரும்பாலானோர் சைவ சமயிகளாக இருப்பினும், இங்கு கலந்து வாழும் ஏனையோராகிய இஸ்லாமிய, கிறிஸ்தவ, புத்தமதத்தார் யாவரினதும் புனித வணக்கத்தலங்கள் சைவ சமயத்தினராலும் மிக்க கண்ணியமாகவும் பெருமதிப்போடும் பேணப் படுகின்றன. அச்சமயத்தாரது புனித சேவைகளுக்கு வேண்டிய மரியாதை, சமரசப்பாங்குகலந்த பணிவு யாவற்றையும் உரிய மதிப்புடன் அளித்து, சமய ஒற்றுமை கலந்தவராகவே சைவ மக்கள் இந்நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். சமயப் பூசல் என்பது ஒரு போதும் இங்கே ஏற்பட்டதாகக் கேட்டும் அறியோம். பாடசாலை பலவற்றை நிறுவி, சைவம் வளர்த்து வந்த சமய சமரச நல்லடியார் கூட்டமான ஸ்ரீராம கிருஷ்ண சங்கத்தின் பெருஞ்சேவை, மற்றைய சமயத் தலைவர்களுக்குள்ள காலத்திற்கேற்ற பரந்த மனப்பான்மையின் உயர்ச்சி என்பவை காரணமாக இந்தச் சிறந்த நிலை மட்டக்களப்புத் தமிழகத்தில் வளர்ந்து வருகிறது எனலாம். சிறப்பு வாய்ந்த இந்த உயர்நிலை என்றும் நிலைத்தோங்குமாக.

''யாதுமனம் நினையுமந்த நினைவுக்கு நினைவாகி
யாதின் பாலும்
பேதமற நின்றுயிருக்குயிராகி அன்பருக்கே
பேரானந்தக்
கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறி ஒன் (று)
அறத்தன்னைக் கொடுத்துக் காட்டும்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச்
சிந்தை செய்வாம்''

-**தாயுமான சுவாமிகள்**

குணங்குறி ஒன்றறத் தன்னைக் கொடுத்துக் காட்டும் சித்தாந்தப் பேரொளியை அடைய வழிகாட்டும் செம்மை நெறிகளையும், சீரிய வழக்கங்களையும் கொண்டதாய்த் தொன்று தொட்டு நிலவிவரும் தெய்வ மதமே மட்டக்களப்புத் தமிழகத்தாரின் சிவசமயம் என்று இவற்றால் நாம் தெளிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (2) வது இயல் : ஈச்சரம் இரண்டு

### *1. மாமாங்கேச்சரம்*

ஆடி அமாவாசை என்று சொன்னாலே, மட்டக்களப்புத் தமிழகத்து மக்கள் அனைவர் மனதிலும் அது மாமாங்கேச்சரத்திருத்தலத்தையே முதல் நினைவிற் கொண்டு வரும். அவ்வளவு தூரம் ஆடி அமாவாசைத் தீர்த்தச் சிறப்புக்குப் பேர்போன திருத்தலமாக இப்பகுதியில் விளங்கும் பெருமை இதற்குண்டு. ஈச்சரம் அல்லது ஈச்சுரம் என்று வழங்கும் பெயர் கொண்டு மாமாங்கக்கோவில், சிவன்கோவில் ஆதல் வேண்டும். எனினும், மாமாங்கப்பிள்ளையார் கோவில் என்றே மட்டக்களப்பு மக்கள் வழங்குவர் என்றும், மூலத்தானத்தில் உள்ள சிவலிங்கமானது, பெரும் பாலும் விநாயகர் அங்கியினுடனே காட்சியளிப்பதால், விநாயகரே மூலத் தானத்தில் எழுந்தருளியிருக்கின்றார் என்று பக்தர்கள் கொள்கிறார்கள் என்றும் அறிமுகவுரையுட் கண்டோம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றிலுமே பிரசித்தி பெற்று விளங்கும் மிக்க பெருமை வாய்ந்த புண்ணியப் பழம்பதி, மாமாங்கேச் சுரம். இத்திருத்தலத்து மூர்த்தியைப் பற்றியும், தீர்த்தத்தினைப் பற்றியும் தொன்றுதொட்ட ஐதீகமான கதைகள் பல இங்கு வழங்குகின்றன. இவை இரண்டும் இராமாயண காலத்துடன் சம்பந்தப்படுத்தப் பெறுகின்றன. இரா வணனை வென்று சீதையைச் சிறைமீட்டு, மீண்டு செல்லும் வழியில், இராம பிரான் இவ்வழியே வந்தார் என்றும், கடல்முகம் சார்ந்த தூய தனி யிடமாய், ஆல், அரசு, திருவாத்தி, நெல்லி, கொக்கட்டி முதலிய மரங் களை ஓரிடத்திற்கொண்டு பஞ்சவடி போன்றமைந்து விளங்கி, காடு நிறைந்திருந்த இப்பகுதியில் ஒரு போது இராமர் தங்கினாரென்றும், அவ்வேளை தனது சிவபூசைக்காக, மணலிற் பிசைந்தமைத்த இலிங்க மொன்றை அவர் ஆக்கி, அதற்கு அபிஷேகம் செய்வதற்காக, தனது கோதண்டத்தை நிலத்தில் ஊன்றிப் பதித்துண்டாக்கிய பெரிய பள்ளத்தி லிருந்துண்டான அமுதவெள்ளத்திலிருந்து புனித தீர்த்தத்தைப் பெற்றுச் சிவபூசனையினை முறைப்படி நிறைவேற்றினார் என்றும் கூறப்படு கின்றது. இதற்கிடையில், இராமருடைய பூசனைக்காக விந்திய மலையி லிருந்து இலிங்கமொன்றைக் கொண்டுவரச் சென்ற அனுமான் சிறிதுதாழ்த்து வந்தமையினால், அந்த இலிங்கமும், பூசனை செய்யப் பெற்று, இராமரால் ஆக்கப்பெற்ற திருக்குளத்தில் நடுவண்புதைத்து விடப்பெற்ற தென்றும், அந்தப் புனித லிங்கத்தின் மகத்துவத்தினால், தன்னுட்படிவோர்மீது படிந்துள்ள பாவமனைத்தையும் போக்கவல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருட் சக்தி இத்திருக்குளத்திற்கு நிரந்தரமாகக் கிடைக்கலாயிற் றென்றும், இத் தீர்த்தத்தின் மகிமையும் சிலாகிக்கப் பெறுகிறது.

அன்றியும் காசியிலிருந்து வந்த ஒரு முனிவர் தம் கமண்டலத்திற் கொண்டு வந்த கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, துங்கபத்திரை, பவானி, காவேரி, தாமிரபரணி, சேது முதலான ஒன்பது மங்கை (பெண் களின் பெயராலமைந்த) தீர்த்தங்களையும் இத் திருக்குளத்திற்கலந்து, நீராடி, இராமலிங்கத்தை வழிபட்டுப் பெரும் பயன் பெற்றார் என்றும், எல்லா மங்கை நதிகளினதும் தீர்த்தம் கலக்கப் பெற்ற திருக்குளமாதலால், மாமங்கைத் தீர்த்தம் என்று இது பெயர் பெற்றதென்றும் தீர்த்தப் பெயர்க் காரணமும் ஐதீகமாக வழங்குகிறது. முனிவர் கலந்தது ''அவிமுத்தி'' தீர்த்தம் ஆதலால், தன்னிடை மூழ்குவாரது வினைப்பயனை அறுக்கும் ஆற்றல் பெற்றது இத் திருக்குளம் என்றும் கூறுவர். ''அவிமுத்தி'' என்பது தன்னை அடைந்தவரை விட்டு நீங்காதது என்ற பொருளுடைய வடமொழிச்சொல். தன்னிடை மூழ்கி எழுந்தார்க்கு நற்பயன் அளித்தலில் மாறாத பெருஞ் சிறப்புடையது, மாமாங்கத் தீர்த்தம்.

இத்தீர்த்தச் சிறப்பு, ''ஆடகசவுந்தரி'' என்ற இளவரசியின் வரலாற்றி னோடும், இணைந்ததாகத் தெரிகின்றது. மூன்று முலைகளையுடையவரும், நூற்றுப்பதினேழு ஆண்டு வரை கன்னிப்பருவம் எய்தாமல், இளம் பெண்ணாகவே இருந்தவருமான இப் பெண்ணரசி மட்டக்களப்பின் தென்கோடியிலிருந்த உன்னரசுகிரியிலிருந்து மட்டக்களப்பு முதலான கிழக்கிலங்கையின் பல இடங்களுக்கு அதிபதியாக ஆண்டு வந்தா ளென்றும், இத் திருக்குளத்தின் மகிமையைக் கேள்வியுற்ற இம் மாதரசி தன் பரிவாரங்களுடன் இத் தலத்துக்கு வந்து, இத் திருக்குளத்தில் பயபக்தியோடு, மூழ்கி எழுந்ததும், மூன்றாவது முலைத்தடம் நீங்கப் பெற்றதோடு கன்னித்தன்மையும், பேரழகும், மேலும் இளமையும் அடையப் பெற்றாளென்றும் அதனாலேதான் இத் திருக்குளம் அவளால் மாமங்கை நதி எனப் பெயர் சூட்டப் பெற்றது என்றும் கூறுவர். அவளைப் பின்னர் குளக்கோட்டு மகாராசா என்ற தமிழ் மன்னன் மணந்து கொண்டான் என்றும், குளக்கோட்டு மன்னனன்றி, மகாசேனன் என்ற பெயருடைய சிங்கள மன்னனே அவளை மணஞ் செய்தவனென்றும் கூறுவர். இச் செய்தி மட்டக்களப்பு மான்மியத்திலும் கூறப்படுகின்றது. விட்டுணு மதத்தில் அதிக பற்றுடையவளும், இராம மந்திரவலிமையு டையவளுமாகிய ஆடகசவுந்தரிக்கு ஒரு நாள் கனவிடை இராமன் தோன்றி, இத்திருக்குளத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறியதாக மட்டக்களப்பு மான்மியம் தெரிவிக்கின்றது. இராவணனைக் கொன்றபின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும், சீதையும் அயோத்திக்குச் செல்லும் வழியில், ''அனுமானை ஏவிக் காசியிலிருந்து அவிமுத்தி தீர்த்தமெடுத்து ஒரு வாவியில் கலந்து இருவரும் ஸ்நானம் செய்து பாவத்தை நீக்கி அயோத்திக்குப் போய் வாழுங்காலம், குசன் பிறந்து வால்மீகரால் உபதேசம் அளிப்பித்து (சீதையாகிய நீ) பரமபதம் அடைந்தாய். அதேபோல் இச் செனனமும் எடுத்தாய். இப்போது காசி அவிமுத்தி நீர் கலந்த நதி உன்னுடைய ஆசிரமத்திலிருக்கிறது. அந்த நதியை அறிய வேண்டில் பசுஞ்சேறாயி ருக்கும், குஷ்டரோகிகள் ஸ்நானம் செய்தாலும் உடனே நோய் தீர்ந்து போகும் என்று மறைந்தனர். அரசியும் விழித்து அந்நதியை ஆராய்ந்து கண்டறிந்து, பார்க்கும் போது, காசி அவிமுத்தி நதிகலந்ததெனவறிந்து ''மாமங்கை நதி'' என நாமஞ்சாற்றி ஸ்நானம் செய்து, ஆண்டாண்டு தோறும், தீர்த்தமெடுத்துக் கொண்டு, திருக்கோவில் சமுத்திரத்தில் விட்டுக்கலந்து ஆடித்திங்கள் அமாவாசையன்று ஸ்நானம் செய்து கொண் டாடி வந்தனர். தொடர்ந்து வைதூலியமென்னும் சைவசமயத்தவனான,. மகாசேனன் என்ற மன்னன் ஆடகசவுந்தரியை மணம் செய்த வரலாறு மட்டக்களப்பு மான்மியத்தில் விரிவாகக் கூறப்படுகிறது. மகாவம்சத்தின் கடைசி மன்னனான மகாசேனன் வைதூலிய மதத்தவனாக இருந்தமை வரலாற்று உண்மை. அவனது ஆட்சிக்காலம் கி.பி. 274-301 ஆகும். ஆடகசவுந்தரியின் காலம் கலியப்தம் 3180 க்கும் 3370 க்கும் இடைப்பட் டதாக (கி.பி. 78-268) மட்டக்களப்பு மான்மியத்தாலறிகின்றோம். ஓரளவு இக்காலங்களில் ஒற்றுமை இருப்பதை அறியலாம். எனவே, ஆடகசவுந்தரி வாழ்ந்த 2 ம், 3 ம் நூற்றாண்டு காலத்திலே மாமாங்கத் திருக்குளம் சீரும் சிறப்பும், பேரும் புகழுமுடையதாய் இருந்திருக்கின்றதென்று, நாம் ஒருவாறு துணிந்து கூறலாகும்.

ஆடகசவுந்தரி என்று மட்டக்களப்பிற் புகழப்படும் பேரழகியான இளவரசி, ''கிழக்கிலங்கையை ஆண்ட மும்முலை அரக்கி'' என்று வேறு பகுதிகளிற், குறிப்பிடப் பெறுகிறாள். ஆடகசவுந்தரியின் அமங்கலமான மூன்றாவது முலைத்தடம் மறைந்தமை மாருதப்புர வீகவல்லி, கீரிமலைத் தீர்த்தத்தில் மூழ்கிக் குதிரைமுகம் நீங்கப்பெற்ற செய்தியினையும், இராமர் மாமாங்கத்தில் இலிங்கத்தை அமைத்து வழிபட்டார் என்பது இராமேஸ் வரத்தில் இராமர் வழிபாடாற்றிய செய்தியினையும் முறையே ஒத்திருப் பதைக் காணலாம்.

மாமாங்கத் தீர்த்தக்குளம், ஆதியில் அதனை அடுத்திருந்த சிறு தோணாக்களுடன் (நெய்தல் நில நீர் நிலைகளுடன்) தொடர்பு கொண்டு மாரி காலத்தில் நதிபோன்று கடலுடன் கலப்பதனாற் போலும் மாமங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதி என்றே வழங்கப்பெற்றது. மாமங்கை நதி, அனுமார் தீர்த்தம், காக்கைத் தீர்த்தம், பழையாறு, நற்றண்ணீர்மடு, பாலமீன்மடு, மட்டிக்களி ஓடையெனப்படும் கிண்ணையடித்தோணா என்ற ஏழுதீர்த்தங்கள் மாமாங்கத் திருத்தலத்தில் இருந்திருக்கின்றன. இவற்றில் சில காலப் போக்கில் தூர்ந்து மறைந்து போயிருக்கலாம். இலங்கையை எரியூட்டிவந்த தனது வாலை அனுமான் தோய்த்துச் சுகம் பெற்றானாதலின், மாமாங்கத் திருக்குளத்தின் மேற்குப் புறமாகவுள்ள ஒரு பகுதி அனுமார் தீர்த்தம் என்று வழங்கப்படுகிறதென்பர். மாமாங்கத்திருக்குளம் நிறைந்த சந்தனச்சேறு கொண்டது. மெல்லிய பசுமை நிறமான இச்சேறு, உடம்பின் வெளிப்புற நோய்களனைத்தையும் மாற்றிவிடும் சிறப்புடையதாதலால் அமிர்தச்சேறு என்றும், பசும்சந்தனம்போற் குளிர்மையாயிருத்தலால் சந்தனச்சேறு என்றும் வழங்கப்படும், தீர்த்தக் குளத்தை அடுத்துள்ள சிறிய நீர் நிலைகளான தோணாக்களின் அடியிலும், அயலில் உள்ள ஊர்க்கிணறுகளின் அடியிலும் இந்த அமிர்தச் சேற்றின்படிவு உள்ள காரணத்தினாற்போலும், மாமாங்கத்திருத்தலத்தை அடுத்துள்ள ஊரும் அமிர்தகழி என்று பெயர் பெற்றுள்ளது.

''பட்டினப்பாங்கர்ப் பரந்த தோணாமுகமாய்

ஐங்கரன் கோவில் அமிர்தகழிக்கணித்தாய்'' என்று யாழ்நூலுள் இப்பெயரை விபுலாநந்த அடிகளாரும் எடுத்தாள்கின்றார்.

ஆடி அமாவாசைத் தினத்தன்று திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி கோவிலைச் சார்ந்துள்ள கடலிற் தீர்த்தம் ஆடுதலும், கீரிமலைத் தீர்த்தத்தில் ஆடுதல் போன்று விசேடம் என்பர். ஆடகசவுந்தரி காலத் திருந்தே, மாமாங்கத் திருக்குளத்திலிருந்து தீர்த்தம் எடுத்துக்கொண்டு போய்த், திருக்கோவிற் கடலிற் கலந்தே ஆடி அமாவாசைத் தீர்த்தமாடி வந்த வழக்கம், அண்மைக்காலத்திலிருந்து கைவிடப்பட்டுள்ளது. புரட்டாதி மாதத்து, மஹாளய பட்சம் முழுவதும் பிதிரர் கடன் கழிக்க உகந்த காலம் என்பர். அந்த முழுப்பலனையும் ஆடி அமாவாசையன்று விரதமிருந்து மாமாங்கேசுவரத் தீர்த்தத்தில் நீராடினாலே பெறலாகும் என்றும், இறந்துபோனவர்களின் சாதக ஓலைகளை ஆடி அமாவாசை யன்று மாமாங்கக் குளத்திலே கிழித்துப்போட்டு விடுவதினால், அன்னார் பரகதி பெறுவர் என்றும் மட்டக்களப்பில் பெரிதும் நம்பப்படுகிறது. இவை மட்டுமன்றி, சந்நியாசிகள் துறவு பூணும் போது இறுதியாகத் தமக்குத் தாமே இறுதிக்கடன்களைச் செய்வது போன்ற பெரும்பயனை மாமாங் கத்தீர்த்தத்தில் ஆடி அமாவாசையின் போது நீராடுவதனால் பிற்சந்ததி பெறாதோரும் மற்றும் எவரும் கூடத் தமக்குத் தாமே பெற்றுக்கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் என்றும், இப்பகுதியில் ஒரு பெரும் நம்பிக்கை உண்டு. ஆறு அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து அவ்வாறு நீராடுவோர் வேண்டிய சித்திகளையும் பெறுவர் என்பர். இவ்வாறு இம்மைக்கும், மறுமைக்கும் நற்பயன் அளிக்கவல்ல திருக்குளம் இப்பகுதியில் உள்ள சைவ சமயிகளால் மட்டுமன்றி ஏனைய சமயத்தோராலும், மிகப் பரிசுத்தமானதொன்றாகக் கருதப்பட்டு வருகின்றது.

இத்தலத்திலுள்ள இலிங்கம் இராமபிரானால் ஆக்கப்பெற்றதென்ற ஐதீகத்தை அறிந்தோம். அதனையடுத்த நீண்டகால இடைவெளிக்குள், அந்த இலிங்கம் மரவேர்களாலும், பற்றைகளாலும் மறைக்கப்பட்டுப் போயிருத்தல் வேண்டும். ஒருமுறை காடுகள் நிறைந்த அப்பகுதியில் வாழ்ந்த வேடனொருவன், வேட்டையாடிக் களைப்படைந்து, ஒரு ஆலமரத்தடியில் தனது கோடாலி,வில், அம்பு முதலானவற்றை வைத்து விட்டு, சிறிது துயின்றானென்றும், அப்போது அவன் கனவில் இந்த இலிங்கம்பற்றித் ''தரிசனம்'' ஒன்று பெற்றான் என்றும் கூறுவர். தான் கண்ட கனவுப்படி, வில்லைச் சார்த்தி வைத்திருந்த அந்த முள்ளாலமரத் தடியைச் சற்றுக்கிளறி, அதன் அடி விழுதுகளையும் வெட்டிப்பார்த்த பொழுது குறித்த இலிங்கம் காணப்பட்டதென்பதும், உடனே தனது இனத்தவர்களையும் அழைத்துவந்து காட்டி, சிறு கோவிலொன்றமைத்து அந்த ''முள்ளாலிங்கப்'' பெருமானுக்குத் தொடர்ந்து பூசனையாற்றி வந்தானென்பதும் கர்ணபரம்பரைக் கதைகள். இப்பகுதியில் வேடர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்குச் சான்றாக அவர்களுக்கே உரியதான ''குமாரத்தன்'' (முருகன்) கோவிலொன்று மாமாங்கத்தின் தென்மேற்கே காட்டுள், இன்னமும் இருக்கக்காணலாம். வேடர் வசத்தில் இருந்த, இலிங்கமும், அதனைச்சார்ந்த இடமும், மக்கட் குடியேற்றம் பெற்றபோது மற்றையோர் கைக்கு மாறியிருக்கின்றது. மாமாங்கேச்சுரர் கோவில் இன்று இருக்கும் எல்லைக்குட்பட்ட பகுதி மாமாங்கம் என்ற பெயருடைய ஊராகவே அழைக்கப்படுகின்றது. எனினும் மாமாங்கத்தைச் சார்ந்த மக்கட்குடியிருப்பு ஊர்ப்பகுதியின் பெயர் அமிர்தகழி என்பதேயாகும்.

மட்டக்களப்பு நகர மத்தியிலிருந்து வடக்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் மாநகரசபை எல்லையினுள்ளேயே அமிர்தகழி என்ற ஊரில், இத்திருத்தலம் இன்று இருப்பினும், முன்னைய வழக்கப்படி, மட்டக்களப்பு நகரமானது புளியந்தீவு,கோட்டைமுனை என்ற இருபெரும் பகுதிகளா கவே வழங்கப்பெற்றிருந்தமையினால், மாமாங்கேச்சுரம் கோட்டைமு னைக்குரிய அரச நிருவாகப் பகுதியையே சேர்ந்ததாகக் கொள்ளப் பெற்றிருக்கின்றது. இதனால், பொது மக்களால், இவ்வாலயம் கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனையாருக்கும் அமிர்தகழியாருக்குமே சேர்ந்ததென்று கருதப்பட்டிருக்கின்றது. இன்றும் கோவிற் தலைமை நிர்வாகிகளான வண்ணக்கமார் இருவரும் முறையே கோட்டைமுனை வேளாளரிலிருந்து ஒருவரும், அமிர்தகழிக்குருகுல வம்சத்தாரிலிருந்து ஒருவருமாகத் தெரிவு செய்யப் பெற்று வருதலைக் காண்கின்றோம். காலப்போக்கில் இவர்களின் சந்ததியார் பரந்து குடியேறி வாழ்ந்த வேறு சில ஊர்களிலிருந்தும், உரிமை பூண்டோர் இந்நிருவாகத் தெரிவின்போது கலந்து கொள்கிறார்களென்றும் கூறப்படுகின்றது.

மட்டக்களப்புக் கோட்டைக்கு எதிர்ப்புறமாக இருந்த முனையாதலால், அவ்வாறு குறிப்பிடப்பெற்றதேயன்றி, கோட்டைமுனை என்ற பெயரால் ஒரு ஊர், முன் ஒரு போதும் இருந்ததாகத் தெரியவில்லை. வெட்டுக்காடு, தாண்டவன்வெளி, தாமரைக்கேணி, மோரிசாப்பிட்டி, புளியடிக்குடா, சின்ன உப்போடை, சீலாமுனை என்ற ஊர்களையடக்கிய பகுதியே கோட்டைமுனை என்று இப்போது வழங்கப்பெறுகின்றதென்பதை இங்கு நாம் அறிந்து கொள்ளுதல் நன்று. இவற்றுள், தாமரைக் கேணியைச் சார்ந்த பகுதியே முதலிற் குடியேற்றம் பெற்றதாகத் தெரிகின்றது.

மாமாங்கேசுரர் கோவில் மட்டுநகரைச் சார்ந்துள்ளதே எனினும், மிக்க அமைதியான சூழ்நிலையில், தென்னை, ஆல், அரசு, வேம்பு, குருந்து, கொக்கட்டி, முதலான மரங்கள் நிறைந்து நிழல் செய்யும் குளிர்ந்த நெய்தல் நிலப்பரப்பில் அமைந்திருக்கின்றது. இதன் தலவிருட்சம் போன்று குருந்தமரமொன்று, பல்லாண்டுகளாகியும் ஒரேபடித்தாகக் கோவிலின் நேர்வாசலில் அருள் நிழல் பரப்பிக்கொண்டு நிற்கின்றது. கோவிலுக்கும் அதன் வடபுறத்தேயுள்ள அமிர்தகழி என்ற ஊர்மனைக்கும் இடையில் அமைந்திருக்கின்றது பளிங்குபோற் தெளிந்த நீர்ப்பரப்பினையுடைய மாமாங்கக்குளம். எந்தக்கொடிய வெயில் வேளையிலும், இக்குளத்திற்படிந்துவரும் தண்ணென்ற பூங்காற்றானது, சூழலையும் அங்கு வரும் அடியார்களையும், குளிர்மையும், அமைதியுமுறச் செய்து நிறைந்த இன்பத்தை எப்போதும் அளித்துக்கொண்டிருக்கும். இவைகளால், மலமயக்கமற்ற மனவளம், நோயில்லாத உடல்வளம் முதலானவற்றை வேண்டும் அடியார்க்கெல்லாம் புகலிடம் தந்து மாமாங்கேச்சுரம் ஆன்மவளம் சுரந்து நிற்கும் காமதேனுவாக இந்நாட்டில் விளங்குகின்றது.

மட்டக்களப்பிலுள்ள பொதுக்கோவில்களில், பல ஊர்களிலுமிருந்து ஏராளமானோர், ஒருமித்துக்கூடும் மிகப்பெரிய தலமாக மாமாங்கப்பிள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையார் கோவில் பிரசித்தி பெற்றிருந்த போதிலும், மட்டக்களப்பின் ஏனைய பழங்கோவிலாகப் பிரகடனம் செய்திருக்கப் பெறவில்லை. மட்டக்களப்பினை ஆண்ட பழந்தமிழ்ச் சிற்றரசர்கள் யாவரும், பண்டைய மட்டக்களப்புத் தேசமாக, மண்முனைக்குத் தென்பால், பாணமை வரைக்குமிருந்த பகுதியையே பெரும்பாலும் ஆண்டிருக்கிறார்கள். சிலகாலங்களில் தோப்பாவை (பொலநறுவையின் ஒருபகுதி) வரை அன்னார் ஆட்சி செலுத்தியிருப்பினும், மக்கட்குடியேற்றமற்று நிலவளச் சிறப்புமில்லாது காடு மண்டியதாய் ஒரு புறமாய்க் கிடந்த இப்பகுதியும், சிறிய கோவிலும் மட்டக்களப்புப் பொது மக்களின் தொடர்புக்கு உட்படாது ஒதுங்கியிருந்திருக்க வேண்டும். இதனால் மட்டக்களப்பிலுள்ள திருப்படைக் கோவில்களுக்கு இருப்பது போன்று, மாமாங்கேச்சுரர் கோவிலுக்கும் உரிய வரலாறு, முதலியவற்றைப் பற்றித் திட்டமான குறிப்புகளைப் பெறத்தக்க கல்வெட்டுக்களோ பட்டயங்களோ அன்றி வேறு சாசனங்களோ கிடைக்கக்கூடியதாயில்லை. மூலத்தானத்தில் உள்ள இலிங்கம் மட்டும், நிலைபெயர்க்க முடியாததாய்க் ''கைபுனைந்தியற்றாக் கவின்பெறு'' சுயம்பு லிங்கமே என்பதை, அண்மையில் நடந்த மூலத்தானத் திருத்தம், கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் என்பவற்றின் போதும் நிரூபித்து விளங்குகின்றது. சிவலிங்கத்துக்கான வழிபாட்டுமுறைகள், பிள்ளையாருக்குரிய முறையில் என்று மாற்றம் பெற்றன. அம் மாற்றத் துக்கான புறக்காரணம் யாது என்பனவும் தெளிவாகப் புலப்படவில்லை. மட்டக்களப்புத் துறைமுகத்துக்கு அண்மையிலிருந்தும், இந் நாட்டுட் புகுந்த போத்துக்கீசரோ, ஒல்லாந்தரோ, அன்றி ஆங்கிலேயரோ இக் கோவிலைக் கொள்ளையடிக்கும் நோக்கினோடு எட்டித்தானும் பார்த்ததாகத் தெரியவில்லை. மாமாங்கேச்சுரரது திருவருட் சிறப்பினால், அழிவு நோக்குடன் வந்த அன்னியரது கண்ணுக்கும், காதுக்கும் எட்டாத பெருமான் மாமாங்கேச்சுரர் என்று பக்தியோடு இச்சிறப்பை அன்பர் கூறுவர்.

மட்டக்களப்பின் சிவசமயப் பொதுமைச் சிறப்பை அறிமுகவுரையுட் கண்டோம். அதன்படி பிள்ளையாரும், சிவபெருமானும் இருவேறு தெய்வங்களல்லர் என்பதையும், ''ஓம்'' எனப்படும் பிரணவமே மூல ஒலி என்றும், விநாயகப் பெருமான் அப் பிரணவமே வடிவானவர் என்றும் கூறுவர். எனவே, அனைத்துக்கும் மூலமான பரம்பொருளாகிய சிவமும், பிரணவமும் வேறுவேறானவையல்ல என்ற தத்துவத்தைப் போதிப்பதே விநாயக அங்கியுடன் முள்ளாலிங்கர் அளிக்கும் ஒளிவடிவின் உட்பொருள் என்று ஆன்றோர் கூறுவர். திருவிழாக்களின்போது சிவனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையம்மனும், விநாயகப் பெருமானும் ஒருமித்து வருவதையும், அதே கோலத்துடன், இடப வாகனத்தில் ஊர்ந்த படியே தீர்த்தமாட எடுத்துச் செல்லப்பெறுவர், என்பதையும் இங்கு நாம் நோக்குதல் வேண்டும்.

ஆடி அமாவாசைக்குப் பத்து நாட்களுக்கு முன்னர்க் கொடி யேற்றமும் பின் ஒன்பது நாட் திருவிழாவும் நடந்து அமாவாசைத் தீர்த்தத்துடன் நிறைவுறுதல் ஆண்டுதோறும் இத் தலத்தில் தற்காலம் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சியாகும். அடுத்த பெருவிழா, விநாயக சஷ்டி விரதமும் கயமுகாசூரன் போர் நிகழ்ச்சியுமாகும். கந்தர் சஷ்டிவிரதம், அதற்கான கந்தப்புராணப் படிப்பு,என்பனவும் இக்கோவிலில் தவறாது நடைபெறுவன. சித்திரை வருடப்பூசை, தைப்பொங்கல்விழா, தைப்பூச விழா என்பனவும் சிறப்பாக நடைபெறும் விழாக்களாம். எனினும், தைப்பூசத்தன்று நவக்கிரகக் கோவிலில் நவக்கிரகங்களுக்குத் தனித்தனி அபிஷேகமும் செய்து விசேட பூசையொன்றும் நடப்பது, மற்றைய கோவில்களில் நடைபெறாதவொரு தனி நிகழ்ச்சியாகும், கோவிற் பூசனைகளை பிராமணக் குருக்களே வேதாகம முறைப்படி தினம் மூன்று வேளையும் ஆற்றிவருகின்றனர்.

எமக்குக்கிடைத்துள்ள குறிப்புகளின்படி 1880 ம் ஆண்டில்தான், தற்போதுள்ள அமைப்பினை மாமாங்கக்கோவில் பெற்று, முதலாவது கும்பாபிஷேகமும் நடைபெற்றிருக்கின்றது. அக்கால முதல், கொடியேற் றத்தினை அடுத்து ஐந்து திருவிழாக்களும், தீர்த்தமும் நடைபெறும் ஒழுங்கு இருந்துள்ளது. அப்போது நடைபெற்ற கோவில் கட்டிட வேலைகளுக்கு வேண்டிய செங்கற்களையும், சிரமதான வேலையினை யும் அவ்வாறு வேலை செய்வோர்க்கான உணவு வசதிகள் முதலியவற் றையும், கொத்தியாவலை, கன்னங்குடா, ஊறணி, செங்கலடி முதலான கிராமங்களில் வாழ்ந்த மக்கள் மனமுவந்தளித்துள்ளனர், என்றும் கூறப்படுகின்றது. திருவிழாக்களை மேலும் நடத்துதற்குச் சேர்ந்தோரின் தொகை முதலானவற்றை ஒட்டித் திருவிழாக்கள் பத்து ஆக அதிகரிக்கப் பெற்றுள்ளன. எனினும், இந்த மாற்றம் எப்போதிருந்து இடம் பெற்ற தென்பது முதலியனபற்றித் தெளிவாகத் தெரியவில்லை. அண்மையில் 1963 ம் ஆண்டு கோவிலிற் சில புனருத்தாரண வேலைகளும், தொடர்ந்து மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளமையை அனைவரும் அறி வோம்.

அண்மைக்காலத்தில், இத்தலத்தின் பெருஞ்சிறப்பு நோக்கி, மட்டக் களப்புப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. இராஜன் செல்வநாய -கம் அவர்கள், அரசாங்கத்தைக் கொண்டு பெரும் பணச்செலவில், தூர்ந்துபோய்க்கொண்டேயிருந்த இத்திருக்குளத்தைமேலும் அகழ்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்தைச் சுற்றிப் படிக்கட்டுகளும் அமைத்து மின்சார விளக்குகளால் அழகுபடுத்தி திருவீதிகளையும் அகலமாக்கித் திருக்குளப் புனிதத்தையும் மேலும் வளம்படுத்தியுள்ளார். மட்டக்களப்பு இந்துக்களின் புனித தலமாக அரசாங்கம் இதனைப் பிரகடனப்படுத்தல் வேண்டும் என்ற கோரிக்கையும் பொது மக்களிடை வலுப்பெறத்தக்கதாகத் திருவருள் சொரிகின்றது மாமங்கேச்சுரத்திருத்தலம். திருத்தலத்தின் அழகும், பொலிவும் தினமும் கூடும் அடியார் கூட்டத்தால் மேலும் சுரந்து கொண்டே செல்கின்றது. தற்காலத்தில் அடியார் தினமும் வந்து போகத்தக்க, பிரயாண வசதிகளும் இத்திருத்தலத்தை நோக்கி நிறைந்துள்ளன. கோவிலுக்கு வருவோர் தங்கிச் செல்லத்தக்க மடங்களும், அன்ன சத்திரங்களும், தண்ணீர்ப் பந்தல் என்ற புண்ணிய கைங்கரியத்தைப் புரியும் ஆறுதல் மண்டபங்களும் அங்கங்கே அமைக்கப்பெற்றுள்ளமையால், மாமாங்கேச்சுரருக்கும், திருக்குளத்துக்கும் அடியாருக்கு அருள் முழுக்காட்டும் வேலையிலிருந்து ஓய்வேயிருப் பதில்லையெனலாம். புதிய திருத்தவேலைகளால் திருக்குளத்தைச் சுற்றிவர அமைக்கப் பெற்றுள்ள பெரிய மின்விளக்குகள், இத்தலத்தில் இரவையும் பகலாகச் செய்து வைக்கின்றன.

இவ்வாறு வளர்ந்து கொண்டேவரும், மாமாங்கேச்சுரத்தின் மீது முன்பிருந்தே புலவர் பலர், பல பாடல்களை அருளியுள்ளனர். வித்து வான் சரவணமுத்தன் அவர்களால் மாமாங்கேச்சுரர் கீர்த்தனை என்ற நூலும், மாமாங்கர் பதிகம் என்ற நூலும் பாடப்பெற்றுள்ளன. இயல், இசை, நாடகம் என்ற மூன்றிலும் வல்லவரான சரவணமுத்தனாரது இசைவளம் இழையோடிய பாடல்களானமைந்த இந்நூற்பாடல்கள், படிப்போரது கல் மனத்தையும் பக்தியிற் கரைத்துவிடவல்லன. மாமாங்கர் ஊஞ்சல், மாமாங்கர் காவடிச்சிந்து என்ற வேறு இரு நூல்களும் இத்தலத்தின் மீது எழுந்துள்ளன. மாமாங்கேச்சுரர்மீது பித்துக் கொண்டவர் போன்ற பெரும் பக்தரான காலஞ்சென்ற, பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்கள், மாமாங்கேசுவரர் பதிகம் என்றும், பக்திநலம் சொட்டும் விருத்தப் பாக்களானமைந்த ஒரு நூலைப் பாடியுள்ளார். புலவர்மணி, பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் அளித்துள்ள மாமாங்கேச்சுரர் பதிகமும், மண்டூர் பூ. சின்னையா ஆசிரியர் அவர்கள் யாத்துள்ள மாமாங்கப் பிள்ளையார் விருத்தம் என்ற பக்திப் பதிக நூலும், மாமாங்கேச்சுரப் பெரு மானது திருவருட் பெருக்கினை, நன்கு விளக்குவன. இந்நூல்களில் எது வும் அச்சூர்ந்து பொது மக்கள் கையில் கிடைத்ததாகத் தெரியவில்லை. மட்டக்களப்புத் தமிழகத்தின், பக்திப்படைப்புகளான இவையனைத்தையும் வெளிக்கொணருதல், இந்நாட்டின் திருத்தலவளத்துக்குமட்டுமன்றித், தமிழ்மொழியினதும், தமிழ் இலக்கியப் புலமையினதும் வளத்துக்கும் சான்றாகிப் பெரும்பயன் தருவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (2) வது இயல்: ஈச்சரம் இரண்டு

## 2. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரம்

மட்டுநகரிலிருந்து தெற்கே மண்முனைத்துறையினுடாக ஒன்பது மைல் தொலைவில் கொக்கட்டிச்சோலை என்னும் கிராமம் அமைந்துள்ளது. பண்டைக்காலத்தில் கொக்கட்டி அல்லது கொக்கு நெட்டி என்னும் மரங்கள் நிறைந்தமையால் இக்கிராமத்திற்கு கொக்கட்டிச்சோலை எனும் இப் பெயர் ஏற்படலாயிற்று. இயற்கை எழில் மிக்க இக் கிராமத்தில் நிழல் மரங்கள் நிறைந்த திருவீதியிலேதான், தான்தோன்றீஸ்வரர், கோயில் கொண்டுள்ளார்.

பண்டைக்கால அரசர்களது மதிப்பும் மானிய சீர்வரிசைகளும் பெற்றவையாக உள்ள கோயில்கள் சில மட்டக்களப்பில் உள்ளன. இவை திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் எனப்படும். அவ்வாறு வழங்கப் பெற்றுள்ளனவற்றுள், தான்தோன்றீஸ்வரர் கோயிலும் ஒன்றாகும். மட்டக்களப்புத் தமிழகத்திலே உள்ள ஒரேயொரு சிவன் கோயில் என்ற தனிப்பெருமை இக்கோயிலுக்குண்டு. இக்கோயிலில் இறைவன் சுயம்பு இலிங்கமாக தானே தோன்றி வீற்றிருந்து அருள் தருகிறார் எனக் கருதப்படுகின்றது.

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோயிலைப்பற்றி மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூலில் கூறப்படுகிறபடி ஓரளவு அறிதல் இங்கு நல்லது. குணசிங்கன் என்னும் அரசன் மட்டக்களப்பை ஆளும்போது கலிங்க ஒரிசா தேசத்தை அரசுபுரியும் குகசேனனுடைய புத்திரியாகிய உலக நாச்சி என்பவள் கௌதம புத்தரின் தசனத்தை எடுத்துத் தனது நெடுங்கூந்தலில் மறைத்து வைத்து, கைலயங்கிரியிலிருந்து குருவம்சத்தார் மூலம் எடுத்துக் கொண்டு வந்து மணிபுரத்தில் இறங்கி விசய துவீபத்தில் வந்து மேகவர்ணனைக் கண்டு கோத்திரம் எல்லாம் கூறி விளங்கப்படுத்தி புத்தருடைய தசனத்தைக் கொடுத்தாள். அவனும் அளவில்லாத மகிழ்ச்சி கொண்டு அவளுக்கு வேண்டிய சன்மானமெல்லாம் கொடுத்து, மேலும் வேண்டுவது என்னவென்று கேட்டான். அவள் குடிவாழ்வில்லாத ஊர் ஒன்று தனக்கு வேண்டுமென்று கேட்டாள். அதைக் கேட்ட மேகவர்ணன் மட்டக்களப்பை அரசுபுரியும் குணசிங்கன் தனது நண்பனாகையால் ஒரு திருமுகமும் வரைந்து அவனுக்குக் கொடுத்து அனுப்பினான். மீதியை மட்டக்களப்பு மான்மிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டிலுள்ளபடி நீங்களே கண்டு கொள்ளுவது நன்றென்றே நினைக்கின்றேன்.

''குணசிங்கனும் திருமுகத்தை வாசித்து சந்ததியுரிமை கொண்டாடி மட்டக்களப்புக்கு வடபாகமாய் உள்ள அம்பிளாந்துறைக்கப்பால் மண்ணேறுமுனை வளர்ந்து காடு செறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிரந்தரமாயீந்து ஒரு இடத்தில் குடிகளை அனுப்பி வெட்டித்தூர்த்து மாளிகை உண்டாக்கி உலக நாச்சிக்குக் கையளித்தான். உலகநாச்சியும் குடிவாழ்ந்து சில காலம் சென்ற பின் தனது தம்பி உலகநாதனைத் தந்தையிடத்திலனுப்பிக் குகன் குடும்பம் நூறும், சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்துக், குகக்குடும்பங்களைத் தன் அருகாயிருத்தி அந்த இடத்தில் ஆலயமியற்றிச் சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கிவந்தனர். பின்பு இன்னும் ஒரிசா நகரமிருந்து அநேக குடும்பங்களை அழைத்து களப்புமுனைக் காட்டை அழித்துச் செப்பனிட்டு அப்பகுதிக்கு அரசியாகி மண்முனை என நாமஞ்சூட்டி வாழுங்காலம் களப்பு முனைக்குத் தென்பாகமாயுள்ள காட்டை அழிப்பிக்கும் போது திடகனென்பவன் கொக்குநெட்டி மரத்தை வெட்ட உதிரம் பாய்ந்தது. அதைக்கண்ட திடகன் தனது உடைத்துணியால் மரத்து வெட்டு வாயைக் கட்டி வைத்துப் போட்டு உலக நாச்சியிடத்தில் இந்த செய்திகளை அறிவித்தான். உலக நாச்சியும் அந்த இடத்தில் போய்ப் பார்க்கும் போது அந்த கொக்கு நெட்டி மரத்தடியில் ஒருலிங்கம் இருந்தது. மறுபேர்கள் கண்ணுக்குப் புலப்படாத படியால் உலகநாச்சியும் சிவலிங்கமெனத் திட்டம் பண்ணி அவ்வனத்தை அழிப்பித்து தூசுநீக்கி ஆலயமியற்றி வட நாட்டுக் கொல்லரிடத்திலிருந்து பட்டர் மூவரை அழைத்து பூசை புரியும்படி திட்டம் செய்து, அதிக கழனிகள் திருத்தி குணசிங்கனுடன் பிறந்தவனாகிய கிரசரசன் என்பவனை மணந்து ஒரு புத்திரனையும், ஒரு புத்திரியையும் பெற்று வாழ்ந்து வருங்காலம் தந்தபுரத்திலிருந்து ஆரம் தொடுக்கும் குடிகள் பதின்மரை அழைத்து தனது குடிக்கருகாயிருத்திப் பத்தனென்பவனை அவர்களுக்குத் தலைவனாய் வைத்து இரண்டு ஆலயத்துக்கும் ஆரங்கட்டும் குடிகளாக வகுத்தனள். பின்பு கலிபிறந்து மூவாயிரத்து ஐந்நூற்று முப்பதாம் வருஷம் குணசிங்கனின் புத்திரன் அதிசுதன் என்பவனுக்கு மண்முனையையும் இருதினங்களில் பட்டங்கட்டினாள். அதிசுதன் மனைவியின் நாமம் நாமவல்லி, கனகசேனனுடைய மனைவி அருந்தாள், இவர்கள் இலங்கையிலுள்ளவர்கள். இவர்களின் சந்ததிகள் மட்டக்களப்பு, மண்முனை இருபகுதிகளையும் இரு நூறு வருஷங்களாக ஆண்டுவந்தனர். பின்பு கலிங்க குலத்து வங்கலாடன் என்பவன் அரசுக்கு வந்தான் ''என்பது மட்டக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளப்பு மான்மியம் கூறுவது.

இங்குவரும் மேகவர்ணன் என்பவன் மகாவம்சத்தில் கூறப்படும் அரசனாவன். அவன் ஆட்சிக்காலம் கி.பி. (301-382) முந்நூற்றியொன்று தொடக்கம் முந்நூற்றி எண்பத்திரெண்டு என்பர். குணசிங்கனுடைய இறுதிக்காலம் கலிபிறந்து மூவாயிரத்து எழுநூற்று முப்பத்தைந்தாம் வருடம். இது கி.பி. (370) முந்நூற்றி எழுபதுக்கு சரியாகும். எனவே இந்த வரலாறு சரியாக இருக்கலாம் என்று தெரிகின்றது.

கிழக்கிலங்கையிலே சைவமும் தமிழும் நீண்ட காலமாக நிலைத்து வாழ்ந்து வருகின்றன. இதனால் காலத்தால் தொன்மை வாய்ந்த கோயில் கள் பல இப்பகுதியில் காணப்படுகின்றன. இக் கோயில்களில் ஒரு பகுதி ''திருப்படைக் கோயில்கள்'' அல்லது ''தேசத்துக்கோயில்கள்'' என்று வழங்கப்பட்டும் வருகின்றன. ''திருப்படை'' என்பது பல்வேறு சாதி மக்க ளினதும் உரிமை உடையது என்று பொருள் கொள்ளத்தக்கதாக உள்ளது. தேசம் என்பது மட்டக்களப்பு என்னும் தேசமாகும். இது இன்றைய மட்டக் களப்பு மாவட்டத்தையும், அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கிய பிரதேசமாகும். எனவே திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் என்று அழைக்கப்பட்டு வருபவை மட்டக்களப்புத் தேசம் முழுவதிலுமுள்ள பல்வேறு சாதி மக்களுக்கும் உரிமையுள்ள கோயில்கள் எனப் பொருள்படும். இத்தோடு குளக்கோட்டு வேந்தனது திவ்விய திருப்பணியைப் பெற்ற பெருமையும் இக் கோயில்களுக்கு உரியதாகும்.

இக் கோயிலின் வழிபாட்டு ஆரம்பம் பற்றிச் செவிவழிக் கதை யொன்று நிலவி வருகிறது. இக்கதை வேடர்களே முதன் முதலில் இங்கு வழிபாட்டை ஆரம்பித்தனர் என்று கூறுகிறது. தேன் தேடிச் சென்ற வேடர் சிலர் அங்கிருந்த கொக்கட்டி மரமொன்றில் தேனிருக்கக்கண்டு மேலும் அவதானித்த போது அம் மரத்தின் அடியில் ஒரு இலிங்கம் இருக்கக் கண்டனர். அன்று முதல் கொத்துப் பந்தலிட்டுத் தமது வழிபாட்டு முறைப் படி பூசை செய்து வரலாயினர் என்று கூறப்படுவது ஒன்று. மேலும், கதிர்காம யாத்திரைக்கு வந்த கொக்கட்டியார் என்னும் இந்திய நாட்டைச் சேர்ந்த தபோதனர் இங்கு சமாதி இருத்தப்பெற்றதாயும் சிலர் கூறுவர். இந்த இலிங்கத்தை முதன் முதலில் கண்ட வேடர்குலத் தலைவன் திடகன் என்று மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இக்கதைகளைக் கொண்டு இக்கோயிலின் வழிபாடு எப்பொழுது ஆரம்பித்தது என்று கூறமுடியாது. எனினும் இப்பகுதிகளில் வேடர் வாழ்ந்த காலத்தில் இவ்விலிங்க வழிபாடு ஆரம்பமாயிற்று. இது எவ்வாறு இருப்பினும் இங்கு நிலையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் கட்டப்படுவதற்கு நீண்ட ஒரு காலப்பகுதிக்கு முன்பே வழிபாடு ஆரம்பித்தது எனக் கொள்வதும் இலிங்கம் கண்டு பிடிக்கப்பட்ட தென்பதும் பொருத்தமாகும்.

கோயில் அமைப்புப் பற்றிச் சிந்திக்கின் இக் கோயிலுக்கு இரு சுற்று மதில்கள் உள்ளன. வெளிப்புற மதிலோடு தொடர்புள்ளனவாக நான்கு சிறு மடங்கள் நாற் புறங்களிலும் உள்ளன. உட்புறத்தில் சிவன் கோயிலின் பக்கங்களில் பார்வதியம்மன், விநாயகர், முருகன்,வள்ளி, தெய்வானை, விஷ்ணு, நவக்கிரகங்கள், நாகதம்பிரான், வைரவர் என்னும் தெய்வங்களுக்குரிய கோயில்கள் காணப்படுகின்றன. இச்சிறிய கோயில்கள் காலத்துக்குக் காலம் தனிப்பட்டவர்களால் கட்டி அர்ப்பணிக்கப்பட்டவையாகும். சிவன் கோயில் சிகரத்தையுடையது. கர்ப்பக்கிரகத்தையும், நான்கு மண்டபங்களையும், கோபுரம் இல்லாத முகப்பு என்னும் முன் பகுதியினையும் கொண்டது. இக்கோயிலின் தம்ப மண்டபம் மிக அண்மையிலே கட்டப்பட்டுள்ளது. சுமார் அறுபதடி உயரமுடைய கொடித் தம்பத்தை இங்கு காணலாம். இக் கொடித் தம்பத்திலும் கர்ப்பக்கிரகச் சிகரம் பதிவாகவே அமைந்துள்ளது. இக் கோயிலின் தம்ப மண்டபம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் காலத்தால் முற்பட்டவை. கட்டிடங்கள் யாவும் தற்போது திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள மூன்றாவது மண்டபத்தில் பார்வதி அம்மன் கோயிலுக்கு முன்புறமாக இடதுபக்கத்தில் கற்சிலை ஒன்றுள்ளது.

ஒரு போது கோயிலைக் கொள்ளையிட வந்த போத்துக்கீசத் தளபதிக்கு முன்னால் மாடுவடிவமான, அக்கற்சிலை உயிர் பெற்று எழுந்து நின்று அவனையும் கூட்டத்தாரையும் மிரண்டோடச் செய்ததென்பர். கர்ப்பக்கிரகம் சுயம்புலிங்கத்தைக் கொண்டே கட்டப்பெற்றது. ஆயினும், இந்த இலிங்கம் வெளியில் நின்று பார்க்கும் போது கண்ணுக்குத் தோன்றுதல் குறைவு.

கட்டிட அமைப்பை நோக்கினால், இப்பகுதிகளில் கலிங்கரின் செல்வாக்கு அதிகரித்திருந்த பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே தான் தோன்றீஸ்வரர் கோயில் கட்டப்பட்டுள்ளது எனலாம். திருக்கோயிலின் கட்டிட அமைப்பைக் கொண்டு அது திட்டமாக பதின் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று சொல்லிற் தவறில்லை.

இக் கோயில் சுண்ணத்தாலும் சாந்தாலும் கட்டப்பட்டது. இதனால் கட்டிடத்தில் காலத்துக்குக் காலம் சில மாற்றங்கள் செய்யப் பெற்றன. எனினும் திருக்கோயிலினதும், தான்தோன்றீஸ்வரர் கோயிலினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிட அமைப்பும், சிற்ப வேலைப்பாடுகளும், கோயில் அமைப்பு விதிகளும் ஒரே பாணியில் இருப்பதைத் தெளிவாக உணரலாம். எனவே இக் கோயிலை யார் கட்டினர் என்பதற்குத் திடமான பதில் கூறமுடியா விட்டாலும் பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் கட்டப்பட்டுள்ளது என்று திடமாகக் கூறலாம்.

வேடரால் கொத்துப்பந்தலிட்டு நீண்டகாலமாக வழிபட்டு வந்த அதே இடத்தில் நிலையான கோயில் கட்டியது முதலில் யார் என்பது அறியமுடியாததாய் உள்ளது. இது பற்றி மட்டக்களப்பு மான்மியத்தில் மூன்று வேறுவேறான கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.

1. மண்முனையைத் தலைநகராகக் கொண்டு சிற்றரசியாக இருந்த உலக நாச்சி என்னும் கலிங்க அரசியால் கட்டப்பட்டது.

2. இந்தியாவிலிருந்து கதிர்காம யாத்திரை வந்த செட்டி ஒருவரால் கட்டப்பட்டது.

3. பொலநறுவையில் அரசனாக இருந்த சேனன் என்பவனால் பாண்டிய நாட்டுக்கு அனுப்பப்பட்ட படையின் தளபதியும் மட்டக்களப்பின் நீதியரசனுமாகிய தருமசிங்கன் என்பவனால் கட்டப்பட்டது.

இதில் கூறப்பட்டுள்ளபடி செட்டி குலத்தார் என்பார்க்குத் தேர், திரு விழாவிலே முதல் திருவிழா கொடுக்கப்பட்டிருந்தது. இத் திருவிழாவைச் சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முன் வரையில் செட்டிக் குலத்தார். நடாத்தி வந்துள்ளனர். இவற்றால் இத் திருவிழா இன்றும் ''செட்டித் திருவிழா'' என்று அழைக்கப்பட்டே வருகிறது.

இவற்றுக்கெல்லாம் மேலாக, குளக்கோட்டு மன்னனால் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது என்பது இக்கோயிலுடன் தொடர்புடைய அனைவரதும் அசையாத நம்பிக்கையாகும்.

இக்கருத்து கோணேசர் கல்வெட்டு இப்பகுதிகளிற் பெற்ற செல்வாக் கால் ஏற்பட்டது எனலாம். குளக்கோட்டனது திருப்பணியைப் பெற்று ஒழுங்குபடுத்தப்பட்ட கோயில்கள் பற்றி இங்கு நிலவும் ஒரு கல்வெட்டுப் பாடல் கூறுவது:-

''சீர் மேவு இலங்கைப் பதி வாழ்வுதரு
செல்வமும் சிவநேச இருசமயமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்புதற்கரிதான மாணிக்க கெங்கையும்
      செக மேவு கதிர மலையும்
ஏர் பெறும் தென்கயிலை வாழ் கோணலிங்கம்
      மேன்மை தான் தோன்றுலிங்கம்
வெற்றி புனை மயூர சித்திர சங்காரவேல்
      வெள்ளை நாவற் பதிய தாம்
பேர் பெறும் தென் திருக்கோயில்
      சிவாலயம் சிவபூசை தேவாரமும்
செய்முறைகள் என்றென்றும் நீடூழி காலமும்
      தேசம் தளம்பாமலும்
ஏர் பெருகு பரிதி குலராசன்
      குளக்கோட்டர் எவ்வுலகமுய்வதாக
ஏழு கோபுரம் கோயில் தொழுவார் தினம்
      தேட எங்கெங்கு மியற்றினரே''

இப்பாடலிற் குளக்கோட்டனது சேவையைப் பெற்ற ஏழு கோயில்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவை கதிர்காமம் (மாணிக்க கங்கை), கதிரமலை, கோணேஸ்வரம் கொக்கட்டிச்சோலைத் தான் தோன்றீஸ்வரர் கோயில், போரைதீவுச் சித்திரவேலாயுதர் கோயில், வெருகல், திருக்கோயில் என்பனவாகும். திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் என்னும் தொகுப்புக்குள் இக் கோயில்களே கூறப்பட்டு வருகின்றன. மண்டூர்த் திருத்தலத்துக்குக் குளக்கோட்டன் பணி கிடைத்திலது. இங்கு நிலவும் மரபு வழியான தகவல்களில் இருந்து குளக்கோட்டன் இக் கோயிலைப் புதிதாக அமைத்துள்ளான் என்றோ புதுப்பித்தான் என்றோ கொள்ள இடமுண்டாகிறது. நிருவாகத்தைப் புதிய முறையில் அமைத்தும், தொண்டூழியங்களையும் அவற்றிற்குரியோரையும் வகுத்துப் பூசை விழாக்களைத் திட்டம் செய்தும் மானியங்களை வழங்கியும் இம்மன்னன் இக்கோயில்களுக்குத் திருப்பணி புரிந்தானென்று மேலும் இவற்றால் அறியமுடிகின்றது.

குளக்கோட்டனது மறுபெயர் சோழகங்கன் என்றும் கூறப்படுகின்றது. இம்மன்னன் பத்தாம் நூற்றாண்டின் பின்னரே வாழ்ந்திருக்க முடியும் என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. திருமலைக் கோட்டையிலுள்ள வடமொழிக் கல்வெட்டிற் கூறப்படுகின்ற கி.பி. 1223 இல் ஈழத்துக்கு வந்த சோழகங்கன் என்பவனே கோணேசர் கல்வெட்டுக் கூறும் குளக் கோட்டன் என்று சி. பத்மநாதன் ஐயுறுவர். கா. இந்திரபாலா, குளம் கட்டிவளம் பெருக்கிய மகாசேன மன்னன் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேஸ்வர ஆலயத்தைத் திருத்திக் கட்டிச் சிற்றரசனாக ஆட்சி புரிந்த கலிங்கத்துச் சோழகங்கன், குளக்கோட்டன் ஆதல் கூடும், எனக் கருதுவர். தான்தோன்றீச்சுரர் கோயிலில் வழங்கிவரும் மரபு வழியான செய்திகளும், பாடல்களும் குளக்கோட்டன் பற்றிப் பொதுவான சில முடிபுகளுக்கு வர உதவுகின்றன. ''இவர் கலிங்கர் இலங்கையில் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் வாழ்ந்தவர், ஓர் இந்தியர். அதிலும் கலிங்கர் அல்லது கலிங்கத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவர். சோழ நாட்டிலும் இவருக்குத் தொடர்பிருந்தது. வீர சைவத்தில் ஈடுபாடு உடையவர். கிழக்கிலங்கையில் போதுமான அரசியல் அதிகாரம் இவரிடம் இருந்திருக் கிறது'' என்று இவ்வாறாகக் குளக்கோட்டனைப் பற்றி நாம் ஊகம் கொள்ளக்கூடியவாறுள்ளது.

இக் கோயிலிற் பூசை செய்யும் குருக்கள் பரம்பரையினர் சைவத்தைச் சேர்ந்த சங்கமர் ஆவர். ''சங்கமர்'' என்பது ''முழுமை பெற்ற'' அல்லது ''இலட்சியத்தை அடைந்து விட்ட ஆன்மா'' எனப்பொருள்படுவது. சீவன் முத்தர் நிலையிலுள்ளவவர்களே சங்கமர். இச் சங்கமக் குருமார் இலிங்கத்தை அணிந்திருப்பர். பிராமணர்களுக்கும் சங்கமர்களுக்குமி டையே சில ஒழுக்க முரண்பாடுகளைக் காணலாம். சங்கமம் பற்றிக் கூறும் நூல் ''வீராகம்'' எனப்படும். இவர்களை ''நாகார்ச்சனபுரம்'' என்னும் இடத்தில் இருந்து குளக்கோட்டன் கொண்டு வந்து தன் திருப்பணிகளைப் பெற்ற கோயில்களிற் பூசை செய்ய அமர்த்தியதாகக் கூறப்படுகிறது. சங்கமர் இப் பிரதேசத்தில் குடியேற்றப்பட்ட இடம் தம்பட்டை என்னும் கிராமமாகும். பண்டைக் கிழக்கிலங்கைக்கோயில்களுக்கெல்லாம் சங்கமர் களே பூசகர்களாக அமர்த்தப்பட்டிருந்தனர் என அறிய முடிகிறது. ஆனால் இன்று தான்தோன்றீஸ்வரர் கோயிலிலும் இன்னும் ஒரு சில கோயில்களிலும் மட்டுமே அம்மரபினர் பூசை செய்கின்றனர். தற்பொழுது தூய்மைவாய்ந்த இப் பரம்பரையும் அவர்களது உயரிய வாழ்க்கை முறைகளும் அருகி வருகின்றன எனலாம்.

இங்கு பதினெண் சிறைகள் செய்ய வேண்டிய ''தொண்டூழியம்'' பற்றி மட்டக்களப்பு மான்மியம் முதலியன கூறுகின்றன. இச் சிறைகளுக் குத் தலைமை பூண்டொழுகி ஏனைய சிறைகளின் சேவையையும் பெற்றுக் கொடுப்பதோடு பொறுப்பும் தூய்மையுமுள்ள தொண்டூழியங்களையும் வேளாளர்களே செய்ய வேண்டுமென்பது நியதி. வேளாளரிலே பொன் னாச்சிக்குடி, வைத்திகுடி, அத்தியாகுடி என்ற மூன்று குடிகளும் இக் கோயிலுடன் தொடர்புடையோராக உள்ளனர். இக்குடிப் பிரிவினர்கள் தாங்கள் குளக்கோட்டனால் ஆலய சேவைக்கெனக் கொண்டுவரப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையினர்.

இக் கோயிலிற் செய்யப்பட்ட தொண்டூழியங்களுக்கு நெல் வயல்கள் மானியமாகக் கொடுக்கப்பட்டு வந்தமையும் நெல் படியாகக் கொடுக்கப் பட்டு வந்தமையும் நாம் அறிந்து கொள்ளலாம். உதாரணமாக, இன்றும் ஒரு திருவிழாச் சேவைக்கு எழுபது மரைக்கால் நெல் படியாகக் கொடுக் கப்படுவதைக் குறிப்பிடலாம். இந் நெல்லளவு சேவைக்குத் தக்கபடி ஐந்து மரக்கால் முதல் ஒரு கொத்து வரை பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

இக் கோயிலின் பரிபாலனம் பழமை வாய்ந்ததாக மூன்று வண்ணக் குமாரைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. கோயிற் பரிபாலகரை ''வண்ணக்கர்'' அல்லது ''வண்ணக்கு'' என்று அழைப்பது மட்டக்களப் பின் பரவலான வழக்கமாக இருந்து வந்துள்ளது. ''வண்ணக்கர்'' என்பது ஒரு தமிழ்ச் சொல். இது கணக்கறிஞர் தலைவன் எனப் பொருள்படும். இவ்வாறு கோயிற் பரிபாலகர்களை வண்ணக்கர் என்று கூறும் வழக்கினை மட்டக்களப்புத் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் காணமுடியவில்லை. கண்டிராச்சியத்தில் பௌத்த ஆலயப் பரிபாலகர்களை ''வண்ணக்கு நிலைமை'' என்று கூறுகின்ற வழக்கம் இருந்தது என அறிகின்றோம். இதனால் கண்டிராச்சியத்தின் கீழ் மட்டக்களப்பு பிரதேசம் இருந்த காலத்தில் வண்ணக்கர் முறை மட்டக்களப்பிலிருந்து கண்டிக்கோ, அல்லது கண்டியிலிருநது மட்டக்களப்பிற்கோ, பரவியிருத்தல் வேண்டும். இம்முறை இந்தியாவில் எங்காவது இருப்பதாகத் தெரியவில்லை.

தான்தோன்றீஸ்வரர் கோயில் மூன்று வண்ணக்குமாரும் தனித்தனியா கவும் கூட்டாகவும் பொறுப்புகளுக்குப் பாத்திரமானவர்களெனக் காணப் படுகின்றனர். முக்குகருள்ளே காலிங்காகுடி என்றும் உலகிப்போடிகுடி, படையாண்டகுடி என்றும் சொல்லப்படும் மூன்று குடியினருக்குமே இக் கோயிலின் பரிபாலனம் சொந்தமாகும். இம் மூன்று குடிப்பிரிவுகளிலும் இருந்து பதவி பெறும் இவ் வண்ணக்குமார் ஆயுள் முழுவதும் பதவியி லிருப்பர். இவ் வண்ணக்குமாருடைய பொறுப்புக்களைத் தனித்தனியே நோக்கும் போது காலிங்கர் குடி தலைமைப் பதவிக்கும், உலகிப்போடிகுடி பொருளாதார அலுவல்களுக்கும், படையாண்டகுடி நிருவாக நடைமுறை களுக்கும் பொறுப்புடையவராவர்.

மட்டக்களப்புத் தமிழக வரலாற்றில் முக்குகருடைய பங்கு மிக முக்கியம் எனலாம். இச்சாதியினருடைய எழுச்சியை இலங்கையிற் கலிங்கர் எழுச்சி பெற்றிருந்த காலந்தொடக்கம் காணப் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புத் தேசத்தின் சிற்றரசர்களாகவும், நீதியதிபதிகளாகவும், நிலமைகளாகவும், நிலமைப் போடிகளாகவும் வன்னியர்களாகவும் இச் சாதியர் காலத்துக்குக்காலம் அதிகாரம் செலுத்தி வந்துள்ளதாகக் குறிப் புக்கள் காணப்படுகின்றன.

இச் சாதியினர் பண்டைக்காலம் முதல் விவசாயத்தைச் செய்தொழி லாகக் கொண்டவர்கள், இவர்களில் மலையாளத் தொடர்பு அதிகமிருப் பது இவர்களை மலையாளத்தவர்கள் என்று கொள்ளுவதற்கு வழி செய்கின்றது. கலிங்கரும் கலிங்கருடன் படைவீரராய் கேரளத்திலிருந்து வந்தவர்களும் இங்கு வாழ்ந்த ஆதி குடிகளிற் சில பகுதியினரும் மட்டக்களப்பு நகரில் முக்கிய பங்கு பெறுகின்றனர் எனலாம். இச் சாதியி னரே தான்தோன்றீஸ்வரர் கோயில் உருப்பெறவைத்து, மானியங்கள் வழங்கி, பண்டைக்காலம் முதல் ஆதரித்து வந்துள்ளனர் என்று கொள் ளுதல் பொருந்துவதாகும்.

தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தினந்தோறும் மூன்று நேரத்துப் பூசை நடைபெற்று வருகிறது, தைப்பொங்கல், தைப்பூசம், சித்திரைப் பிறப்பு, சித்திரைச் சித்திரை, திருக்கார்த்திகை, மார்கழித்திருவாதிரை என்னும் நாட்களில் விசேட பூசைகளும் திருவிழாக்களும் இங்கு இடம் பெற்று வருகின்றன. சிவராத்திரி, கந்தசட்டி, விநாயகசட்டி என்னும் விரதங்கள் பெருந் தொகையினரால் இங்கு அனுட்டிக்கப்படும் விரதங் களாகும்.

முற்காலத்தில் வருடாந்த உற்சவம் பங்குனி உத்திரத்தில் நடைபெற்று வந்தது என்று கூறுவர். இது காலப்போக்கில் கட்டாயம் மாற்றி அமைக் கப்பட வேண்டிய ஒன்றாயிற்று. பங்குனி மாதம் இச் சுற்றாடலில் உள்ள விவசாயிகளின் பெரும்போக அறுவடைக் காலமாகும். மேலும் பண்டைக் காலத்தில் தகுந்த போக்குவரத்து வசதிகள் இன்மையால் வெளியிடத்த வர்கள் இவ்வருடாந்த உற்சவத்திற்கு வருதல் குறைவாக இருந்தது. இதனால் சுற்றாடலிலுள்ள மக்கள் ஓய்வாக உள்ள காலப்பகுதிக்கு வரு டாந்த உற்சவம் மாற்றப்படுவது அவசியமாயிற்று. தற்போதைய முறைப் படி ஆவணி மாதத்தில் வரும் முதற்பிறையில் கொடியேற்றப்பட்டு அதையடுத்து வரும் பூரணைக்கடுத்த திங்கள் கிழமை தீர்த்தமும், அதற்கு முதல்நாள் ஞாயிறு பிற்பகல் தேர்த்திருவிழாவும் இடம்பெறுவதாயிற்று. கொடியேற்றத்திலிருந்து தேர்த்திருவிழா வரையும் பதினெட்டுக்கு மேற்பட்ட திருவிழாக்கள் நடை பெறுகின்றன. இவற்றின் இறுதியேழு திரு விழாக்களும் முக்குகர் ஏழு குடியாளராலும் நடத்தப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கு முதல் நாட் திருவிழா இங்கு தொண்டூழியம் செய்வோரால் நடத்தப்பட்டு வருகின்றது. முதற்பகுதித் திருவிழாக்கள் கோயிலின் பொதுக்கணக்கில் நடைபெறுதல் ஒழுங்கு.

இக்கோயிலில் நடைபெறும் தேர்த்திருவிழாவை மட்டக்களப்பு மக்கள் ''தேரோட்டம்'' என்று போற்றுவர். மட்டக்களப்பில் தேரோடுகின்ற கோயில் இது மட்டுமேயுள்ளது. தேரோட்டத்தில் இரண்டு தேர்கள் திருவீதி வலம்வரும் தெய்வீகக் காட்சியைக் காணலாம். சித்திரைத் தேர் எனப்படும் பெரிய தேரில் சிவன், பார்வதிபாகராய் வருவர். பிள்ளையார் தேர் எனப்படும் சிறிய தேரில் வினாயகர் முருகப்பெருமானோடும் எழுந் தருள்வர். மறுநாள் தீர்த்தநாளாகும்.

தீர்த்தத்தினத்தன்று அதிகாலையில் திருவேட்டை நடைபெறும். இது ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்குத் தடையாக இருக்கும் மலங்களை இறைவன் அழிக்கும் பாவனையில் அமைந்த ஒரு புது நிகழ்ச்சியாகும். திருவேட்டையை அடுத்து கோயில் பரிபாலகர்களையும் தொண்டூழியர் களையும் விழாவிற் கலந்து கொண்டோர்களையும் கௌரவிக்கும் சீர்வரிசையாக ''குடுக்கை கூறுதல்'' என்னும் நிகழ்ச்சி நடைபெறும். இந் நிகழ்ச்சி பற்றிய விபரங்களையும் வரலாற்றுச் செய்திகளையும் மட்டக் களப்பு மான்மியத்திலுள்ள குடுக்கை கூறும் விபரம் பற்றிய பகுதியில் வரும் ''சூத்திரசாதி முதற் குலம் வெள்ளாளனுக்கும், உங்கள் பதினெட்டுச் சிறைகளுக்கும், பட்டுப் போடப்படாதென்றும் கட்டளையிட்டு வரிசை முட்டி பண்ணும்படி பண்ணினான்.'' என்பது முதலாவது உள்ள பகுதி யினுட் காணலாம். ஆனால் முட்டியின்மேலே பட்டுப்போட்டு எக்கால மும் வரிசை முட்டி கூறவேண்டுமென்றும், இக்குடுக்கை கூறும் வைபவத் தில் இந்நாட் பல்வேறு பிரதேச மக்களும், பிராமணர் முதல் பறையர் ஈறாக எல்லாச் சாதியினரும் குடுக்கை பெற்றுக் கௌரவிக்கப்படுதல் வேண்டும் என்றுங் கொள்ளப்படுகின்றது.

இக் கோயிலில் தேர்த்திருவிழாவைப் போல தீர்த்தோற்சவம் அவ்வளவு முக்கியம் பெறுவதில்லை. தீர்த்தக்குளம் ஒன்று இல்லாமையே இதற்கு முக்கிய காரணமாகும். இங்கு கிணற்றிலேயே இன்னமும் தீர்த்தம் ஆடப்பட்டு வருகிறது. முன்னோரால் இதற்காக ஆலய வீதியில் ஒரு கிணறு கோயிலின் முன்புறமாக ஆக்கப்பட்டுள்ளது.

இக் கோயிலுக்கு குளக்கோட்டன், கலிங்கமாகன், விமலதர்மசூரியன், விக்கிரமசிங்கன் என்னும் மன்னர்கள் மானியங்களை வழங்கினர் என்ற செய்திகள் மரபு வழியாகக் கூறப்பட்டு வருகிறது. இத்தோடு இம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானியங்களை அடையாளம் கண்டு கொள்ளவும் முடியவில்லை. இங்கு குருக்கள் பரம்பரையினரின் மானியமாக இருந்த தேவுலாமுனை பள்ளி, கொண்டான்வெளியும், வேளாளருக்கு மானியமாகக் கொடுக்கப்பட்ட அத்தியா முன்மாரியும் இக் கோயிலுக்கு அரசர்களாற் கொடுக்கப்பட்ட மானியங்களே என்று கூறுவார்கள். இம் மானியங்களும் தற்போது இக்கோயிலின் வசம் இல்லை. இப்பொழுது கோயிலுக்கு உடைமையாக வுள்ள, நூற்றி ஐம்பது ஏக்கர் அளவிலான காணித்துண்டுகள் காலத்துக்குக் காலம் இக் கோயிலில் ஈடுபாடுள்ள போடிமாரால் தானமாகக் கொடுக்கப் பட்டுள்ளன எனலாம்.

தான்தோன்றீஸ்வரர் மேலே பாடப்பெற்ற பழைமை வாய்ந்த பக்திப் பாடல்கள் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. நாட்டுக்கூத்துக் களிலும் மற்றும் சில கிராம இலக்கியங்களிலும் இவ் வீசன் மேலே பாடப்பெற்ற காப்புச் செய்யுள்கள் பல கிடைத்துள்ளன. வெற்றிலைக்காரப் புலவர் என்று கூறப்படும் சின்னவப் புலவரும், புலவர்மணி பெரியதம் பிப்பிள்ளை அவர்களும் தான்தோன்றீஸ்வரர் மேல் இரண்டு பதிகங்கள் பாடி உள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (3) வது இயல்: மலைக்கோவில் மூன்று

### *1.* உகந்தைமலை முருகன் கோவில்

''சீர்மேவு பழனியங் கிரிதனில் வள்ளியம்மை தன்னுடனே
செப்பமாய் ஓடமதில் ஏறியே வேலவ்ன் சீரிலங்காபுரிக்கு
நேரகாப் பாய்விரிகத் தோடியே ஒரு கப்பல் நிமிடத்தில் ஓடிவந்து
நீண்டமாமேருவை ஒத்ததொரு மலையினில் நேசமாய் வந்திறங்கி
பார்மீது உமை பெற்ற பாலகன் பரிவாய் உகந்தமலையும்
பட்சமுடன் கங்கைபதினெட்டும் உண்டாக்கினாய்
தார்குலவு முருகவேள் திருநாமம் அபிஷேகம் ஆடியருளே
அப்பனே உகந்தமலை அன்பனே கதிரமலை ஆடியருளே''

என்ற ஒரு பாடலை, உகந்தமலையில் வைத்து திரு. தம்பிமுத்து குமரப்பெருமாள் என்பவர் மனமுருகப் பாடி நின்றார். இவர் காலம் சென்றவரும் தம்பிலுவில் என்னும் ஊரைச் சேர்ந்தவருமான பண்டிதர் - குஞ்சித்தம்பி அவர்களின் மூத்த சகோதரர் என்னும் முதியவர் என்று தெரிந்தது. இந்தப் பழம்பதி உகந்தைமலைத் திருப்பதியாகும்.

இத்தலம் மிகப் பழங்காலத்தில் உண்டானது என்பது ஐதீகம். இங்கு கோவில் கட்டுமுன் மலையிலுள்ள நீர்ச்சுனைகளும், வடிவேல் குன்றமும் பக்தரை உளம் கனியச் செய்தன என்பர். நீண்டகாலம் அவ்வாறு நடந்து வந்த பின்னர் கோவில் என்ற பெயரால் ஓலைகளால் பந்தலிட்டு பன்னெடுங்காலமாகப் பிரார்த்தனை செய்து வந்தனர். குன்றம் எறிந்த குமரவேள், தனது அடல் பெருக்கி வாழ்வு உயர்த்தி நின்ற அவுண குல மன்னனை உரங்கிழித்த பின்னர், எறிந்த வேலானது பல் பொறிகளாகிய தென்றும், மீண்டும் வந்த அத்தகைய வேற்படைக் கதிர்களுள் முதன்மை யானது இங்கே தங்கிற்றென்றும் ஐதீகமாகக் கூறுகிறார்கள். அன்றியும் முருகனே தனது படை வீடுகளில் ஒன்றாக உகந்தைமலையைக் கொண்டா னென்றும், போர் முடிந்த பின்னர் மீண்டுவந்து களைப்பாறிச் சில காலம் இங்கேயே இருந்தானென்றும் அப்படிப் போருக்கு முன்னரும், பின்னரும் முருகன் உவந்து இருந்தபடியால் இந்த இடமே உகந்தை மலையாயிற் றென்றும் அந்த ஐதீகத்தின் ஒரு பகுதியாகச் சொல்லப்படுகிறது. நீண்ட காலம் இப்படி இருந்து வந்த பின்னர் மட்டக்களப்பில் குடிவந்திருந்த யாழ்ப்பாணத்தவரான மார்க்கண்டு முதலாளி என்பவரால் கோயில் ஒன்று 1885 இல் இங்கே கட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகளுக்குள்ளே யானை, புலி, கரடி முதலான கொடிய விலங்கு களுக்கு மத்தியில் இவ்வாறு ஆலயம் எழுப்பப்பட்டமை அக்காலம் மிகவும் விசித்திரமாகவும் கருதப்பட்டது. அவர் தான் கட்டிய கோவிலுக்கு முதன் முதற் பூசகராக கோளாவில்லைச் சேர்ந்த காளியப்பன் என்பவரைக் கொணர்ந்து நியமித்தார். கோவிலின் வண்ணக்கராக ஜெயசேகர ஸ்ரீ வர்ணதிசநாயக்கா என்றும் முதியன்சே பண்டார மகாத்மியா என்றும் அழைக்கப்பெறும் ஒருவரை நியமனம் செய்யலாயினர். இன்னார் தமிழ்ப் பாடல்களும் நன்கு தெரிந்த பாணமையைச் சேர்ந்த முதலாவது வண்ணக் கராவார்.

இவருக்குப் பின்பு வந்த வண்ணக்கர் அவருடைய மருமகன் கிரிபண்டா சந்தகாமி என்னும் சிவ பக்திமான். அவருக்குப் பின்னர் இன்று வரை வண்ணக்கராகக் கடமையாற்றி வருபவர் இவருடைய மகன் முறையினராகிய தந்தகாமி புஞ்சிமாத்தையா என்பவராவார். இவர்கள னைவரும் சிங்களப் பெயர்களுடையவர்களாயினும், தமிழே தாய் மொழியாகக் கொண்டவர்கள். தமிழருள் திருமணமும் செய்தவர்கள். தற்போதைய வண்ணக்கரை நேரில் கண்டால் அவருடைய தமிழ்ப்பற்றும் இனிது விளங்கும். இவர்களனைவரும் பாணமையைச் சேர்ந்த ஒரு குடும்பத்துக்குரியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பூசகராக இப்போது இருப்பவர் மானாகட்போடி குழந்தைவேல். இவருக்கு முன்னர் இருந்தவர் நல்லதம்பிக் குருக்கள் அவர்கள். அதற்கு முன்னர் முறையே மாரிமுத்துக் குருக்களும், கணபதிப்பிள்ளைக் குருக்களும் பதவி வகித்துள்ளார்கள். இவர்கள் ''தினப்பூசகர்'' என்ற முறையில் நியமனம் பெற்றவராவர். தற்போதுள்ள கொடியேற்றக் குருக்கள் தம்பிலுவில்லைச் சேர்ந்த கே. லோகநாதசர்மா என்பவராவார். இவர் பனங்காட்டுச் சிவன் கோவில் பூசகராகவும் உள்ளார். கோவிலின் இவ்வாறான ஒழுங்கு முறைகளால் நிருவாகம் நன்கு நடைபெற்று வருகின்றது எனலாம். 1885 இல் ஓலைக் கட்டடம் நிரந்தரமாக்கப்பட்ட பின்னர் இன்னமும் கட்டடவேலைகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. புதிய மடங்களும் கோவில் முன்மண்டப வேலைகளும் விரைந்து முடியும் என்று எதிர்பார்க்கின்றோம்.

கோவிலில் திருவிழா வருடந்தோறும் நியதி தவறாமல் நிகழ்வது கதிர்காமத் தீர்த்தத்துடன் ஆடிப் பூரணை அன்று அல்லது அதனை அண்மிய திருவோண நட்சத்திரத்தன்று தீர்த்தம் நடைபெறுவது வழக்கம். முதல் மூன்று திருவிழாக்களின் போதும் சுவாமியைத் தாம்பாளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துப் பட்டுச்சீலையால் மூடி வீதிவலம் வருகிறார்கள். அப்போது கொண்டுவரப்படுவது வேல் ஒன்றேயாகும். 4-15 ம் திருவிழாக்களின் போது திறந்த தேரில் மயூரம், வேல் என்பவற்றுடன் முருகன் வலம் வருவார். வள்ளி அம்மனோ, தெய்வானை அம்மனோ இவ்வீதிவலத்தின் போது பங்கு கொள்ளும் வழக்கமில்லை. கொடியேற்றம் மற்றைய கோயில்களிற் போல் பிராமணரின் விதிகளின் படியன்றி சாதாரணமான செயல் போலவே இங்கு நடைபெறுகின்றது. கொடியேற்றத்தின் பின்னர் கொடியையும் சேர்த்துப் பக்தர்கள் கடனாக காசு முடிப்புக்களைக் கட்டு வது சாதாரணமாக இங்கு நடைபெறும் வழக்கமாகும். கொடிமரத்துக்கும் தினம் மந்திர விதிப்படியான அபிஷேக பூசனை எதுவும் செய்யப்படு வதில்லை. சாதாரணமாக பூசனை வேளைகளைப் போலவே அம் மரத்துக்கும் குருக்கள் பூசை செய்வது வழக்கமாகும்.

சுவாமி தீர்த்தமாடும் முன்னரே அன்று கொடி இறக்கப்படும். அதனையும் சுவாமியுடன் (வேல்) தீர்த்தமாடக் கடலுக்கு எடுத்துச் செல்வர். கடற்கரையிலே கோவில் இருப்பதென்றாலும் அதற்கு நேராக உள்ள வாசலில் தீர்த்தம் ஆடாமல் சிறிது வடபுறமாக விலகியே தீர்த்த மாடும் இடம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. தீர்த்தத்துக்குச் சுவாமியைக் கொண்டு போகும் போது சுவாமியைப்பட்டுச் சீலையால் அலங்கரித்துச் சிறப்புடன் கொண்டு போவது வழக்கம். அதனாற் போலும் தீர்த்தமாடக் கொண்டு செல்லப்படும் சுவாமியை ''பட்டுச் சாமி'' என்றே யாவரும் கூறுவர். கோலாகலமாகக் குருக்களும் அடியார்களும் சேர்ந்து தீர்த்த மாடும் போது பட்டுச்சாமியின் பெயரைச் சொல்லி எழும் அரோகராச் சத்தம் எவரையும் மெய் சிலிர்க்கவைக்கும். தீர்த்தமாடி முடிந்த பின்னர் சுவாமி கோயிலுக்குச் செல்லும் வழக்கத்தை இங்கு காணமுடியாது. பக்கத்து மலைமீதிருக்கும் வள்ளி நாச்சியாரின் கோயிலுக்குப் பட்டுச் சுவாமியைக் கொண்டு அடியார்கள் மலையில் ஏறுவர். மலையில் பொங்கல் செய்து பூசைக்கு அவ்வேளை ஆயத்தமாக இருக்கும். அன்று காலை வேற்றவர் யாரும் பொங்கல் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. பொங்கலைப்படைத்து, சுவாமிக்கும் அம்மனுக்குமாக நடைபெறும் பூசனை மிகவும் சிறப்பானதென்று கருதப்படுகின்றது.

உகந்தைமலையின் அடிவாரத்தில் மலையுடன் சேர்த்து பிள்ளையார் கோவிலொன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்கோவில் வாசலில் மலையடி வாரத்தில் தான் இப்பகுதிக்குரிய தல விருட்சம் என்று சொல்லப்படும் (வெள்ளை) நாவல் மரம் நிற்கின்றது. பருத்து உயர்ந்து பரந்த கொம் பர்களை எங்கும் வீசி நிற்கும் பெரிய மரம் இது. திருவிழாக் காலங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாருக்கு அடியார்கள் தினமும் வேளை நியதியின்றி பூசையாக பொங்கிப் படைத்தபடியே இருப்பர். பிள்ளையார் கோவிலுக்கும் மரத்துக்குமிடையே அதிக இடமில்லையாயினும் பக்தர்கள் தாமதமின்றி கோவிலின் முன்பு சென்று வணங்குவதைக் காண்கிறோம். உகந்தை மலை இரண்டு பிரிவாக உள்ளது. அவற்றுள் இரண்டாம் மலை அடிவாரமே தலவிருட்சம் உடையதாயிருத்தல் ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

உகந்தை மலையின் மீது நாம் ஏறி நின்று பார்த்தால் எங்கும் பரவ சமான காட்சி தென்படும். வள்ளிமலை எனப்படும் முதலாவது மலையின் மீது கோவில்கள் அமைந்துள்ளன எனலாம். எப்படி இருந்த போதிலும் உகந்தை மலையிலோ அடிவாரத்தில் தானுமோ தெய்வானை அம்ம னுக்குக் கோவிலே இல்லை. முதலாவது பகுதி மலையின் மீது வள்ளியம் மன் கோவிலும் தனியாக வேல் மட்டும் உள்ள 3' உயரமான ஒரு சிறிய கோவிலும் உண்டு. இப்பகுதியில் சுமார் 7 நீர்ச் சுனைகள் இருக்கின்றன. வள்ளியம்மன் கோவிலுக்கு முன்னுள்ள பெரிய தீர்த்தத்தை அல்லது சுனையைச் சரவணப் பொய்கை என்று சொல்லுவர். கடலில் நீராடி விட்டு வரும் அடியவர்கள் அச் சுனைகளில் எல்லாம் நீராடுவதை, சிறப்பாகச் சரவணப் பொய்கையில் நீராடுவதைப் பெரிய புண்ணியமாகக் கருதுவர். வள்ளி அம்மன் கோவிலில் வள்ளி நாச்சியாரின் சிலா விக்கிரகம் ஒரு புறமும் பிள்ளையார் சிலை ஒன்றும், மறுபுறம் வேலாயுதம் ஒன்றும் உள்ளன. மலையடிவாரத்தில் கடற்பக்கமாக உள்ள கோவிலில் சன்னியாசிகள் உறைகின்றார்கள் என்றும் இறுதியாக 1975 இல் ஒருவர் இருந்து இறந்தார் என்றும் அறிகிறோம்.

கதிர்காமத்துக்கு நடந்து செல்லும் யாத்திரீகர் யாவரும் இவ்வழியே வந்து உகந்தைத் திருவிழாவைப் பார்த்து தங்கி, சுனைகளில் நீராடி, பிள்ளையாருக்குப் பொங்கிப் படைத்து அமுது கொடுத்துச் செல்வது வழக்கம். முருகன் கோவிலின் மூலஸ்தானத்தில் பிள்ளையார் சிலையும் பக்கத்தில் ஒரு தங்க வேலாயுதமும் உண்டு. முருகன் கோவில்களில் நந்திக்குப் பதிலாக மயில் இருப்பது வழக்கம். ஆயினும் இந்தக் கோவி லில் மயிலுக்குப் பதிலாக மூஷிகமே இருக்கின்றதை நோக்குதல் வேண் டும். உகந்தைமலைக் கோவிலின் பக்கத்தில் வடபுறமாகவும், பிள்ளையார் கோவிலுக்குச் சற்று தெற்கேயும் ஒரு பெரிய ஆலமரம் நிற்கின்றது. இந்த ஆலமரத்தின் கீழ் ஒரு தனிவேலாயுதம் நிலத்தில் வைத்து மேடை அமைத்துக் கட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கு மேற்கூரை இல்லை. ஆதிகாலத்து வேல் இந்த இடத்தில் தான் இருந்த தென்கிறார்கள். திருவிழாவின் போதெல்லாம் சுவாமியை இந்த இடத்தில் இறக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துப் பூசை செய்வது வழக்கம். ஒரு பெரியாரின் சமாதியும் இம் மேடையின் பக்கத்திலுண்டு. இங்கு இவ்வாறான பெரியார்கள் பலர் காலத் துக்குக் காலம் வந்து முன்பிருந்தே சமாதியடைந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

கோவில் வீதி எங்கும் பெரிய தேத்தா மரங்களும், பெரிய ஆலமரங் களும் நிழல்தரும் மரங்கள் பலவும் உள்ளன. இவை இங்கு வரும் அடியார்க்கு நல்ல உறைவிடமாகப் பயன்பட்டு நிற்பனவாகும். கோவி லின் பின் புறமாக ஒரு பெரிய நீர்க்கேணி உள்ளது. இந் நீர்க்கேணி கோவி லுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கின்றதெனலாம். பாணமையிலிருந்து கூமுனை செல்லும் காட்டுப்பாதை ஓரமாகக்கடற்கரைப் பக்கத்தில் உள்ளது இக் கோவில். இக் கோவிலில் இருந்து கதிர்காமம் செல்வோர் தெற்கே காட்டு இலாகாச் சந்தியிலிருந்து நடந்து செல்வது வழக்கம். கோவிலுக் காக மார்க்கண்டு முதலாளியார் காலத்தில் 100 ஏக்கர் வரை நிலம் கொடுக் கப்பட்டதென உறுதிகளும், சாதனங்களும் கூறினாலும் தற்போது உள்ள நிலம் 30 ஏக்கர்தான் என்பது தெரிகிறது. மேற்கே மேலே கூறிய பாதை யும் கிழக்கே கடலும், வடக்கே காடும், தெற்கே காட்டு இலாக சந்திப்பும் என்பவற்றிற்கு இடைப்பட்ட பூமிதான் இப்போது கோவிலுக்குக்கி டைத்துள்ளதென்று தெரிய வருகின்றது.

இக் கோயிலுக்குத் தென் மேற்கே சுமார் 10 மைல் தூரம் காட்டுள், கூமுனைலிருந்து வடமேற்கே 12 மைல் தூரத்தில் கபிலித்த அம்மன் கோயில் என்று ஒரு அம்மன் கோவில் உண்டு. உகந்தைக் கோயிலுக்கு ஒரு காவல் தெய்வம் போன்றது இது என்று சொல்லப்படுகிறது. இக் கோவிலில் ஒன்றுகூடும் சிங்கள மக்களும் கூமுனை, பாணமை முதலான இடங்களிலிருந்து செல்லும் தமிழ்ப் பக்தர்களும் இன்னமும், தம்முள் வேறுபாடின்றிக் கலந்து வழிபாடாற்றுவதை நாம் காணலாம்.

1908 இல் ஒரு மகா கும்பாபிஷேகம் கோவில் கட்டப்பட்ட பின்னர் நடைபெற்றது. அதுவே முதலாவது கும்பாபிஷேகம் என்று சொல்கிறார் கள். அதன் பின்னர் இன்றுவரை கும்பாபிஷேகம் ஒன்றும் செய்யப்பட வில்லை. இப்போது ஒரு கும்பாபிஷேகத்துக்கான மனநிலை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளமை உணரப்படுகிறது.

இத்தகைய உகந்தைமலைக் கோவிலைப் பற்றி மட்டக்களப்பு மான்மி யம் என்னும் பழைய வரலாற்று ஏடொன்று செப்புவதை நாம் இங்கு நோக்குவோம். இராவணன் என்னும் அரசன் இங்கே ஆண்ட காலத்தில் அவனுக்கு ஆற்றானாய்ச் சென்ற இயமதர்மன் ''நீ பெரும் பாவி'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்று ஓடி தன் இருப்பிடம் செல்ல இராவணனும் தன் பாவம் தீர்க்கும் பொருட்டாய் தட்சணாகிரி, (திருக்கோணமலை) உகந்தகிரி (உகந்தமலை) எனும் இரு மலைகளிலும் ஆலயம் பற்றிய பூசாரம்பம் செய்து வாழ்ந் தான். அப்பால் ஆட்சிக்கு வந்த விபூடணன் முதலியோரான இராவண னுடைய சந்ததியினர் சீதையின் சாபத்தால் வேரற்றுப் போனபடியால் ஒரு யுகம் வரையும் பாழடைந்திருந்தது. அதன்பின் சிங்ககுமாரனது தந்தை தட்சணாகிரி ஆலயத்தை செப்பமிட்டு திருக்குளமும் கட்டுவித்து ஆறுகால பூசையும் நடக்கச் செய்து சிவபதமடைந்தார். அதேபோல ''உகந்தகிரியில் ஆலயமேற்றி உமது எண்ணம்போல் வாழக்கடவை'' என்று மந்திரிமார் அரசனுக்குக் கூறினார்.

''அதையுணர்ந்து சிங்ககுமாரன் பிரதானிகளோடு உகந்தமலையில் ஏறிப்பார்த்து மனமகிழ்ச்சி கொண்டு வடநாட்டுச் சிற்பிகளை அழைத்து மலையுச்சியிலே சிவாலயம், விஷ்ணு ஆலயம், பிரம்மாவாலயம் மூன்றும் இயற்றுவித்து மலையடிவாரத்து எட்டுத் திக்கிலும் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன் என்னும் எண்ம ருக்கும் ஆலயம் எட்டுத் திக்கிலும் இயற்றுவித்து செப்புக் கொடித்தம்பம் ஒவ்வொன்றுக்கும் நிறுத்தி மலையுச்சியிலே மூன்று ஆலயத்திற்கும் நடுவிலே ஒரு தங்கக் கொடித்தம்பம் நிறுத்தி அந்தணர் புத்தியின்படி அபிசேகமும் செய்து ஆயிரம் அவண நெல் கழனிகள் திருத்தி குமுகனல் வெட்டு வாய்க்காலில் இருந்து நீரெடுத்து மூன்று ஏரியில் நிறுத்தி செந்நெல் செழித்தோங்கும்படி செய்து உகந்தைத் திருப்பணிக்கு 500 அவணத்தறையையும் ஈந்து அந்தணர் முதலான ஆலய ஊழியர்களுக்கு இரு நூறு அவணத்தறையையும் ஈந்து, புவனத் திருப்பணி அதிகாரரே எக்காலமும் கடமைக்காரரென திட்டம் செய்து மட்டக்களப்பை அரசு புரியும் பிரசேதுவிடம் முகமன் கொண்டாடி ஆடித் திங்கள் அமாவாசை இரண்டு தினமும் இராவணேஸ்வரன் பேரில் உகந்தைத் திருப்பணியில் பெரிய தீபம் ஒன்று ஏற்றும்படி திட்டம் செய்து அரசு புரிந்து வந்தான். அக்காலம் தனது மனைவி தராகச் சோதி வயிற்றிலிருந்துதித்த சிறீசிங்கன் பருவகாலமான போது மட்டக்களப்பை அரசு புரியும் பிரசேதுவின் புத்திரி அரசினாச்சி என்பாளை பாணிக்கிரகணம் செய்து வைத்து உன்னரசு கிரியையும் பட்டம் கட்டி சில காலத்தின் பின் தேகவியோகம் ஆயினன்''. என்று கூறுவது மட்டக்களப்பு மான்மிய வரலாற்றுச் செய்தி. இதன்படி சிங்குமாரன் ஆட்சிக்கு வந்தது கலி பிறந்து 337 ஆகும். அது சுமார் கி.மு. 268 க்குச் சரியாகும். எனவே உகந்தமலை வரலாறு இற்றைக்கு முன் இரண்டாயிரம் வருடம் பழமை வாய்ந்ததென்று கூறப்படுவது உண்மை யேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19-10-1975 தொடக்கம் ஒரு மகா சபையின் கீழ் கோயில் நடந்து கொண்டு வருகிறது. அதன் போஷகராக மார்க்கண்டு முதலாளியின் மகன் கே.வி. எம். சுப்பிரமணியம் இருந்தார். இவர் காலமான பின்பு அவரது வம்சத்திலிருந்து அதற்கொருவர் தெரிவு செய்யப்பட வேண்டும். தலைவராகப் பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ம. கனகரெத்தினம் அவர்களும் உபதலைவராக திரு.க.த.சு. சுப்பிரமணியம் அவர்களும் பதவி வகிக்கின்றனர். செயலாளர் பொத்துவிலைச் சேர்ந்த திரு. செ. முத்தையா அவர்களாவர். உப செயலாளர் பொத்துவில் திரு. அ. கந்தசாமி அவர்கள். வண்ணக்கர் பாணமையைச் சேர்ந்த திரு. கந்தசாமி புஞ்சிமகாத்மியா அவர்களாவார். நிருவாக சபை, உறுப்பி னர்கள், மண்டூர், தம்பலவத்தை, காரைதீவு, தம்பிலுவில், திருக்கோவில், பாண்டிருப்பு, பொத்துவில், பாணமை, வண்ணார், அம்பட்டர், தட்டார், இப் பகுதியிலுள்ள வர்த்தகர்கள் முதலிய பிரதிநிதிகள் என்பர். அண்மைக் காலத்தில் சிறுசிறு இனக்கலவரங்களுக்கு அடிமையானவை தோன்றி னாலும் காலகெதியில் இவையெல்லாம் மறைந்து தமிழரும் சிங்களவரும் ஆகிய இரு இனமும் ஒன்றுபட்டு வாழ்வார்களென உகந்தைமலையான் திருவருளால் நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (3) வது இயல்: மலைக்கோவில் மூன்று

## 2. தாந்தாமலை முருகன் கோவில்

தாந்தாமலை என்னும் கோவில் மட்டக்களப்புப் பிரிவில் கொக்கட்டிச் சோலைக் கிராமத்திலிருந்து மேற்கே சுமார் 10 மைல் எல்லையில் உள்ளது. இனச்சூழ்நிலை காரணமாக, கதிர்காமத்துக்குச் செல்லும் அடியார்கள் அதை ஒளித்து இங்கு செல்லும் வழக்கத்தை இடைக்காலத் தில் மேற்கொண்டனர். இக் கோவிலுக்குச் செல்லும் வழி அருமையும், கோவிலின் காட்சி முதலானவையும் கோவில் அடிவாரத்தில் தோன்றி யுள்ள நீர்க் கேணியும் முதலானவை யாவும் கதிர்காமத்தை நினைவூட்டு வனவாய் உள்ளன.

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரரின் ஆலய வைப்புத்திர வியம் உள்ள இடமாதலால் இது பொக்கிஷ மலை என்று பெயர் பெறலா யிற்று. தான்தோன்றீஸ்வரர் தாண்டவமாடிய இடமாதலால் இதற்குத் தாண்டவமலை என்ற சொல் சிதைந்து வந்தமையினால் தாந்தாமலை என்று வழங்கலாயிற்று. எது எவ்வாறாயினும் மலையின் கோவில் அமைப்புக்களும் உள்ள நிலை நோக்கி, தாந்தாமலை என்ற பெயர் பொருந்தி வாய்க்கப் பெற்றதென்று இதனைக்காணும் அடியார்கள் புளகாங்கிதம் கொள்வர்.

வடக்குத் தெற்காக நீண்டு பரந்த பல குன்றங்களின் தொடர்ச்சியாக உள்ளது தாந்தாமலை. பெரும்பாலும் ஒவ்வொரு மலையிலும் ஒவ்வொரு கோவிலாக கோவில்கள் பல இங்குண்டு என்பர். எனினும் அடியார்களின் வழிபாட்டுக்குரிய இடமாய் உள்ள பிள்ளையார் மலையின் உச்சியில் பிள்ளையார் கோவிலும், அடுத்து கீழே கிருஷ்ணன் கோவில், வள்ளி அம்மன் கோவில், முத்துலிங்க சுவாமியார் கோவில் என்பனவே முதன் மையாகக் கருதப்படுகின்றன.

முற்காலத்தில் மழையற்றவிடத்துத் தான்தோன்றீசுரர் ஆலயத்திலி ருந்து விழாவெடுத்துச் சென்று இத் தாந்தாமலையின் மேலுள்ள விநாயகப் பெருமானுக்குப் பொங்கல் விழா எடுக்கப் பெருமழை பொழிந்ததென்பர். இப்பொழுதும் மழையற்ற காலத்தில் இவ்வாறு செய்து மழைவளம் கொழிக்கப் பெறல் கண்கூடு. இதை இந்திரவிழா என்று இப்பகுதியில் கூறுகிறார்கள்.

குளக்கோட்டு மன்னன் இலங்கையின் கிழக்குப் பக்கத்தில் ஏழு சிவ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் ஆலயங்களை நிர்மாணித்தான் எனப் பேசப்படுகிறது. அவை மாணிக்ககங்கை, கதிரமலை, வெள்ளை நாவல்பதி, சித்திரமயூரர், சங்காரவேல் பதி, கோணையம்பதி, தான்தோன்றீசுரர் என்பவைகளாகும். அப்பொழுது உன்னரசுகிரியைத் தலைநகராகக் கொண்டு இப்பிரதேசத்தை ஆடக சவுந்தரி என்பவள் ஆட்சி புரிந்தாள் என்று கூறப்படுகிறது. அவளுக்கும் மகாசேனன் எனப்படும் குளக்கோட்டு மகாராசாவுக்கும் திருமணம் நடந்ததென்பது ஐதீகம். அரசனும், அரசியும் தான் தோன்றீஸ்வரர் மலைப்பாகத்தே சிறு அரண்மனை இயற்றி இங்கிருந்து கொண்டே குளக்கோட்டன் என்பவன் கொக்கட்டிச்சோலை தான்தோன் றீஸ்வரர் ஆலயத்தை நிர்மாணித்தான் என்பர். இது 5 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. அரசனும் அரசியும் வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றாக இப்பொழுது இங்கு சிலமாகிக் கிடக்கும் பொருட்களை காணலாம். சந்திரவட்டக்கல், கொடிச்சீலைகள், தட்டி படிக்கட்டுகள், கற்றூண்கள் ஆகியன அவற்றின் சின்னமாக இன்னமும் அங்கு காணப்படுகின்றன.

இவ்வாறு தாந்தாமலையையும் ஆட்சி புரிந்த மன்னன் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து 678 களஞ்சி பொன்னை வைப்புத்திரவியமாக இக் கோவிலுக்கு அளித்துள்ளான். இக்குறிப்பு கோணேசர் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. மன்னரின் காலமும் பெயரும் இதில் காணப்படாமையால் நிலைமை தெளிவாகத் தெரிய வில்லை. குளக்கோட்டனுக்குப் பிந்திய வரலாறாகவும் இது இருக்கலாம் என்று தெரிகின்றது. இது ஒரு இராசதானியாக இருந்ததென்பதற்குச் சான்றாக மலைத்தொடர் எங்கணும் மிக ஆழமான கிணறு போன்ற இடங்களை நாம் இப்போது பார்க்கலாம். இவைகள் யாவும் திரவியம் எடுக்கப்பட்ட இடங்கள் எனவும் கூறப்படுகின்றன. இற்றைவரை கற்களினால் ஆக்கப்பட்ட பல அலங்கார வடிவங்களைக் காணக்கூடிய தாக இருக்கின்றது.

விநாயகர் வழிபாட்டிலிருந்து முருக வழிபாட்டிற்கு முதலிடம் கொடுத்து வந்து இறுதியில் முருகன் ஆலய வழிபாட்டுத் தலமாக இது மாற்றம் பெற்றுள்ளது. ஆயினும் இப்பகுதியில் மழைவளம் குன்றிய போது பழைய முறைப்படி விழா எடுத்து விநாயகருக்குப் பூசை செய்து மக்கள் மழையைப் பெறத் தவறுவதில்லை. வருடம் தோறும் முருகன் கோவிலில் ஆடிப்பிறையினை அடுத்துக் கொடியேறி நிறைமதி நாள் அன்று தீர்த்தம் நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது கொடியேற்றம் கோவில் பொறுப்பில் நடைபெறும்.

| | |
|---|---|
| 2 ஆம் திருவிழா | கொக்கட்டிச்சோலை |
| 3 ஆம் திருவிழா | 40 வட்டை ஊர்மக்கள் நடத்துவார்கள். |
| 4 ஆம் திருவிழா | பனிச்சையடி முன்மாரி ஊர்மக்கள் நடத்துவார்கள். |
| 5 ஆம் திருவிழா | எருவில் ஊர்மக்கள் நடத்துவார்கள். |
| 6 ஆம் திருவிழா | மகிழயடித்தீவு, பண்டாரியாவெளி, தாளங்குடா ஊர்மக்கள் நடத்துவர். |
| 7 ஆம் திருவிழா | அரசடித்தீவு, கடுக்காமுனை, அம்பிளாந்துறை ஊர்மக்கள் நடத்துவர். |
| 8 ஆம் திருவிழா | முதலைக்குடா ஊர்மக்கள் நடத்துவர். |
| 9 ஆம் திருவிழா | கன்னங்குடா, மண்டபத்தடி, குறிஞ்சாமுனை ஊர்மக்கள் நடத்துவர். |
| 10 ஆம் திருவிழா | கொக்கட்டிச்சோலை ஊர்மக்கள் நடத்துவர். |
| 11 ஆம் திருவிழா | முனைக்காடு ஊர்மக்கள் நடத்துவர் |
| 12 ஆம் திருவிழா | நாள்காலை சுவாமி தீர்த்தமாடுதல். |

திருவிழா எல்லா நாளிலும் முருகன், பிள்ளையார், சிவன் ஆகிய சுவாமிமார் மூவரும் வீதிவலம் வருவர். முதலில் சுவாமி (முருகன்) கோயிலைச் சுற்றிய பின் மலைக்கு ஏறி பிள்ளையார் கோயிலில் பொங்கல் படைத்து, பூசனை செய்து சுவாமி மீண்டுவருதல் வழக்கம்.

இவைகளை விட கார்த்திகைத் திருவிழா நாளில் ஒரு விசேட திரு விழா நடாத்துதல் கதிர்காமத்தை நினைவூட்டுகின்றது. புதுவருடம், தைப்பொங்கல் புதிர்ப்பொங்கல் நாட்கள் என்பனவற்றின் போதெல்லாம் முருகன் கோவிலிலும், பிள்ளையார் கோவிலிலும் விசேட பூசனைகள் நடைபெறுவது வழக்கம்.

தினசரி பூசனை ஒருவேளை நடைபெறுகிறது. அதனை அங்கு போய்த் தங்கும் சிவனடியார்கள் செய்து வந்தனர், தற்போது அங்கு பூசகர் தங்கியிருந்து இத்தினப் பூசையைச் செய்து வருகின்றார். இக் குருக்கள்மார் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவில் குருக்கள் பரம்பரையி லுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். இங்கு சைவக்குருக்கள்மாரன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணர் பூசனை செய்வதில்லை. களுவாஞ்சிக்குடி திரு. கந்தையாக் குருக்கள், களுவாஞ்சிகுடி திரு.சி.கு. ஞானாபரணக்குருக்கள், வந்தாறு மூலை திரு. சோதிக்குருக்கள் என்னும் இவர்களே தான்தோன்றீஸ்வரர் கோவிலுக்கும் அதனால் தாந்தாமலைக் கோயிலுக்கும் அர்ச்சகர்களாக இருந்தனர் என்பர்.

மலையுச்சியில் பிள்ளையார் கோவிலும் அடிவாரக்குன்றின் மீது முருகன் கோவிலும் இருப்பதாக முன்பு கண்டோம். முருகன் கோவிலுக்கு எதிர்ப்புறமாக வள்ளியம்மன் கோவிலும் இருக்கின்றது. வள்ளியம்மன் கோவிலையடுத்து ஒருபக்கம் கிருஷ்ணன் கோவிலும் மறுபக்கம் முத்து லிங்க சுவாமி கோவிலும் உள்ளன. முருகன் கோவிலுக்கு இடது புறத்தே தெய்வானை அம்மன் கோவிலொன்று தற்போதுதான் அமைக்கப்பட்டு வருகின்றது. இக் கோவில் மலைகளின் மிக அடிவாரத்தே ஒரு தீர்த்தக் குளம் இருக்கின்றது. பெரும்பாலும் ஆடிமாதப் பூரணை நாட்களில் தண் ணீர் மிகக் குறைந்து காணப்படும். இத் தீர்த்தக்குளம், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றுள் தலமும் மூர்த்தியும் சிறந்தோங்கும் அளவுக்கு இங்கு தீர்த்த வசதி இல்லை என்றே குறிப்பிடலாம்.

இக்கோவில் வண்ணக்குமார்களின் ஆட்சியில் நிலவுகிறது. இவ் வண்ணக்குமார் கொக்கட்டிசோலை தான்தோன்றீஸ்வரகோவிலுக்கு உரியவர்களேயாவர். திரு.பா.வ.வி. கதிர்காமப்போடி (காலிங்காகுடி), திரு. நல்லதம்பி (உலகநாச்சிகுடி), திரு.த.வி. கதிர்காமப்போடி (படை யாண்டகுடி) என்னும் மூவரும் தற்போது பிரதம வண்ணக்கர்களாய் இருக்கின்றார்கள்.

ஆடி மாதம் தீர்த்தோற்சவ காலமாக இருப்பினும் நிறைந்த வெயில் தங்கும் காலமாகவே உள்ளது. அதனால் தொண்டர் படையினர் முதலா னோர் அங்கு குடிசையமைத்து அடியார்களுக்கு நீர், பால் என்பனவும் அமுதுங் கொடுத்து ஆறுதல் அளிக்கிறார்கள். இப்பொழுது இப்பிர தேசத்தில் குறைவுபட்ட தமிழும், சிங்களமும் பேசும் மக்கள் வாழ்கின் றார்கள். இவர்கள் தங்களை ஆதிக்குடிகள் என்று பேசிக் கொள்கிறார்கள். இவர்களுடைய பெயர்கள் தமிழிலே காணப்பட்டாலும் இந்த மொழியை எழுதவோ, வாசிக்கவோ மாட்டாதவர்களாக இருக்கிறார்கள்.

இப்பதியின் மீது திரு. வ.வி. சம்பாப் போடி ஆசிரியரால் இயற்றப் பட்ட தாண்டவமலை சக்திவேலவர் பெயரில் பதிகம் என்னும் பாடல் நூலொன்று வெளியாகியுள்ளது. ஏ.தியாகராசா ஆசிரியர் என்பவரின் வேண்டுகோளின்படி 1960 ஆம் ஆண்டு இந்நூல் வெளிவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (3) வது இயல்: மலைக்கோவில் மூன்று

## 3. சங்குமண் கண்டி மலை

மட்டக்களப்பிலிருந்து பொத்துவிலுக்குச் செல்லும் பிரதான பாதையில் சுமார் ஐம்பத்தாறு மைல் தொலைவில் பாதை ஓரத்தில் ஒரு சிறு கோவில். இவ்வழியே போக்குவரத்துச் செய்யும் வாகனங்களும் மக்களும் கற்பூரம் கொழுத்தியும், தேங்காய் உடைத்தும் வழிபாடு செய்து தங்கள் பிரயாணத்தைத் தொடர்கின்றனர். ஆற்றங்கரையோரத்திலும் அரசமரத்து நிழலிலும் கூட வீற்றிருந்து அருள் செய்யும் பிள்ளையார் இத்தெருவோரத்திலுள்ள இச்சிறு கோவிலில் எழுந்தருளி மக்களின் வினையைத் தீர்த்தருளுகின்றார் என்ற நம்பிக்கையும், இதனால் இங்கு பிள்ளையாரை வணங்கிச் செல்லாவிடின் காரியத் தடைகளும், தாமதமும் கஷ்டங்களும் உண்டாகும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே வேரோடிக் கிடக்கின்றன. இவ்வழிச்செல்பவர் அனைவரும் சாதி சமய பேதம் பாராட்டாது இவரை வணங்கியே சென்று வருகின்றனர். விக்கினம் தீர்க்கும் இவ்விநாயகப் பெருமானை சங்கமான் கண்டிப்பிள்ளையார் என்றும், சங்கமன் கண்டிப் பிள்ளையார் என்றும், சங்கமக் கண்டிப்பிள்ளையார் என்றும் மக்கள் அன்போடு அழைக்கின்றனர்.

இக்கோயிலிலிருந்து சுமார் ஒரு மைல் மேற்கே இருப்பது சங்குமண் கண்டிமலை. இதில் உள்ள வில்வமர நிழலின் கீழ் இருக்கும் ஒரு பீடத்தில் ஆவுடையார் இல்லாதனவாய் இலிங்கம் போல மூன்று விக்கிரகங்கள் இருந்தன. இவை இலிங்க வடிவமாய்க் காணப் பெற்றாலும், பிள்ளையார் எனவே நினைந்து, அவற்றிற்கு அபிஷேகம் செய்து, பொங்கிப்படைத்துப் பூசை செய்யும் மக்கள் சங்கமான் கண்டிக் காட்டுப் பிள்ளையார் என ஆராமையோடும் கூறுகின்றனர்.

இவ்விடத்தைச் சுற்றி திருவாத்தி, திருக்கொன்றை, அத்தி, விளா, பாலை, வீரை, சமளை, முதிரை முதலிய மரங்கள் செழித்து வளர்ந்து நிழல் கொடுத்து அடர்ந்த காடாகக் காட்சி தந்தன. இதனூடே பலவித கொடிய வன விலங்குகளும் வசித்தன. சில வேளைகளில் யானைகள் வழிபாட்டுக்குரிய இலிங்கங்களைப் புரட்டி, உருட்டி விடுவதும் பக்கத்தி லுள்ள குளத்தில் போட்டுச் செல்வதுமுண்டு. அவ்வமையம் பூசைக்காகப் போகிறவர்கள் அவற்றைத் தேடி எடுத்து வந்து உரிய வில்வமர நிழலில் வைத்து அபிஷேகம் செய்து பொங்கிப் படைத்து வணங்கிச் செல்வர். வனவிலங்குகள் நிறைந்த கொடிய பிரதேசமானாலும், தங்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கைகளை நிறைவேற்றும் திருவருட்சக்தியாக விளங்கும் சங்கமக் கண்டிப்பிள்ளையாரிடம்,

''காட்டுவழி போனாலும் கள்வர் பயமானாலும்
கேட்டு வழி காணலாம் கிட்டிடவே-நாட்டமுடன்
நம்பிக்கையாக நமக்கு விநாயகர்
தும்பிக்கை உண்டு துணை''

என்ற உறுதிப்பாட்டோடும் சென்று, தாம் நினைத்த வரங்களைக் கேட்டுப் பூசனையாற்றி மீளுவர். வேண்டினார்க்கு வேண்டியவாறு சித்தி தரும் பிள்ளையான சங்கமான் கண்டியானை அறியாதார் இப்பகுதியில் இல்லை எனலாம்.

இலங்கையின் பல பாகங்களிலுமிருந்தும் கதிர்காமம் செல்வதற்குக் கால் நடையாக வரும் யாத்திரீகர்கள், திருக்கோயில் சித்திரவேலாயு தரையும், சங்கமான்கண்டிப் பிள்ளையாரையும், உகந்தைமலை முருக னையும் தரிசித்துத் தங்கிச் செல்வது என்ற மரபு மிகப் பழங்காலந் தொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

திருக்கோவிலிருந்து ''ஒருகாமூச்சு'' தூரத்திலுள்ளது சங்கமக்கண்டி என்பர். ''ஆடவர் தோளிலும் கா அரிவையர் நாவிலும் கா'' என்பது மட்டக்களப்பிற்கே உரியவொரு பழமொழி. இதில், முன்னையது ஆடவர் தோளில் வைத்துச் சுமக்கின்ற ''கா'' வினையும் பின்னையது அரிவை யரது பேச்சில் வருகின்ற காவினையும் குறிப்பது. தோளில் வைத்துச் சுமந்து செல்லும் காவினைத் தூக்கிய இடத்திலிருந்து, இறக்கி வைத்துக் களைப்பாறும் இடம் வரைக்குமுள்ள தூரத்தையே ''ஒருகாமூச்சு'' எனக் குறிப்பர். இது சுமார் நான்கு மைல் தூரமாக இருக்கலாம்.

கதிர்காம யாத்திரீகர்கள் சங்குமண்கண்டியானுக்குப் பொங்கிப்ப டைத்துப் பூசனை ஆற்றிய பின், சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு அங்கு தங்கிப் பின்னர் அங்கிருந்து காட்டு வழியாகச் செல்லும் ஒற்றையடிப் பாதையூடாக ''அரோகரா'' எனும் ஒலி வானைப்பிளக்கப் பக்திப் பரவசத்தோடு கதிர்காம யாத்திரையைத் தொடர்வர். இதனால் இச்சங் குமண் கண்டிப் பகுதியைக் கதிர்காமத்துக் கந்தனுக்குரிய பிரதேசமெனச் சொல்வது வழக்கம். கதிர்காமத்துக்குச் செல்லும் பிரயாணிகளுக்கு வெயில், பனித் தாக்கத்தினாலும், உணவொறுத்தல், தண்ணீர் மாற்றங் களினாலும் நோய்களேற்படுவதும், பேதி நோய் என்னும் தொற்று நோயால் மரணம் ஏற்படுவதுமுண்டு. இதனால், கதிர்காமத்துக்குக் கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையாகச் செல்பவர்கள் இலங்கை அரசாங்கத்திடம் இதற்கான அனுமதி பெற வேண்டிய கட்டுப்பாடு ஒருபோது இருந்தது. நோய் பரவி இருக்கும் நிலை நோக்கி யாத்திரீகர்களுடைய தொகை கணிக்கப்படும். இவ்வாறு 1871 ம் ஆண்டில் கதிர்காமம் செல்வதற்கு இருபதினாயிரம் பேருக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டதாயினும், 1873 ம் ஆண்டில் இரண் டாயிரம் பேருக்கு மாத்திரமே அநுமதி கொடுக்கப்பெற்றதும் நோக்கற் பாலது. இவர்கள் அனைவரும் சங்குமண் கண்டிப்பிள்ளையாரை வேண் டுதல் புரிந்து கொண்டு செல்லும் வழக்கத்தைக் கொண்டே இருந்தனர் எனலாம். நடந்து செல்பவர்கள் இவ்வாறு தமது பாதையைத் தொடர, வாகனங்களிற் செல்வோர் உள்ளே செல்வதற்கு வழி வசதி இல்லாத காரணத்தாற் போலும், சங்குமண்கண்டி மலைக் கோவிலிலிருந்து கிழக்கே ஒருமைல் தூரத்தில் உள்ள பிரதான தெருவோரமாக ஒரு சிறு கோவி லைக்கட்டி சங்குமண் கண்டிப் பிள்ளையாரை நினைந்து, வழிபாடு செய்து யாத்திரையைத் தொடர வழிவகுத்த புண்ணிய சீலர்களின் இத்திருத் தொண்டு போற்றற்குரியதே.

சங்குமண்கண்டிப்பிள்ளையார் மலைக்குக் கிழக்குப் புறத்திலுள்ள மலையில் அல்லிக் கொடி நிறைந்த குளிர்ந்த நீர்ச்சுனையொன்று உண்டு. மேற்குப் புறத்திலுள்ள மலையிலுள்ள சிறுகுகையே துவட்டா முனிவர் குகைக்கோவிலாக இருக்கவேண்டுமென அனுமானிக்கப்படுகின்றது. இங்கு மக்கள் செல்வதும் அரிது. இது பற்றிய கதை ஒன்று ஐதீகமாக வழங்கி வருகின்றது.

ஒரு மனிதன் கொடி வெட்டுதற்கென இக்காட்டுக்குப் போயிருந்தான். தன் வேலை முடிந்ததும் வழக்கமாகத் தான் செல்லும் வழியை இவன் தவற விட்டதால் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்க வேண்டிய நிலைக் குள்ளானான். வழியும் தெரியவில்லை, பொழுது மறைந்து இருளுமாகி விட்டது. விட நாகங்களும் வினைமிருகங்களும் நிறைந்த காட்டினூடே செல்ல முடியாத அச்சம் கொண்டவனாய் ஒரு மரத்தடியில் இருந்தான். உடற்களைப்பும் உளக்களைப்புமுற்றிருந்த அவனுக்குத் திடீரென்று ஒரு மணியோசை கேட்கலாயிற்று. சற்றுப்பயம் தெளிந்த நிலைமையோடு சத்தம் வந்த திசை நோக்கிச்சென்றான். அங்கு ஒரு குகைக் கோவிலைக் கண்டு மனக்களிப்புற்றவனான். அவனுக்கு ஒரு தாம்பாளத்தில் உணவு கிடைத்தது. அதனை உண்ட பின் அவ்விடத்திலேயே நித்திரை செய்யும் படி இடமும் காட்டப்பெற்றது. அத்தோடு, அங்கு நடந்த விஷயங்களை எவரிடமும் கூறக்கூடாது என்ற கட்டளையும் வற்புறுத்திச் சொல்லப் பட்டது. இதனை மனத்துட் கொண்ட அம்மனிதன் அவ்வுணவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தினான். அது தேவாமிர்தம் போன்றிருந்தது. அதனால், தனது மனைவி மக்களுக்குக் கொண்டு போய்க் கொடுப்பதற்கென்று, ஒரு பகுதி உணவினைச் சீலையில் முடிந்து வைத்துக் கொண்டான். அதிகாலையில் ஒருவர் வந்து அவனை எழுப்பிக் கூட்டிக் கொண்டு போய்ச் சரியான வழியைக் காட்டி விட்டுச் சென்றார். அம்மனிதனும் தன் வீடு போய்ச் சேர்ந்து, உணவுப் பொட்டலத்தை அவிழ்த்து மனைவிடம் கொடுத்தான். மனைவியும் மக்களும் அதனை அருந்தினர். மிகுந்த சுவை உடையதா கவிருந்த இவ்வுணவு கிடைத்தது பற்றி, அவள் தன் கணவனிடம் விசாரித் தாள். அது கூறக்கூடாத இரகசியம் என்று பலமுறை அவன் கூறியும் அவள் அவனை விடவேயில்லை. அவன்மேல் சந்தேகமும் அதிருப்தியும் கொண்டாள். மனைவியைத் திருப்திப்படுத்த நினைத்த அவன் தனக்குக் குகைக் கோயில் வாயிலிற் கிடைத்த கட்டளையைக் காப்பாற்ற முடியாத வனாய் நடந்த உண்மையைக் கூறத்தொடங்கினான். கூறி முடிந்த உட னேயே அவன் ஊமையன் ஆனான். அவன் மனைவி மூலம் இவ்விஷ யத்தைக் கேள்வியுற்ற ஊரார் சேர்ந்து அக்குகையைத் தேடினார்கள். எவ்வளவு தேடியும் அவர்களது முயற்சி பலனளிக்கவேயில்லை.

அப்பால் 1915 ஆம் ஆண்டு சங்குமண் கண்டியைச் சார்ந்த காடா கவிருந்த சல்லித்தீவு என்னும் பகுதியை அரசாங்கத்திடமிருந்து திரு.கே.வீ. மார்க்கண்டன் என்பவர் வாங்கினார். இவருடைய பெற்றார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே எனினும், இவரது தந்தையாரை மட்டக்களப்பு வைத்திலிங்கம் என்றே யாழ்ப்பாணத்திலும் குறிப்பிடுவர். அதற்கமையவே அவருடையதும், அவரது மக்கள், பேரப்பிள்ளை களினதும் தேட்டமும் நாட்டமும் மட்டக்களப்பைச் சார்ந்ததாகவே இருந்தது, பணம் படைத்து வாழ்ந்த இந்த மட்டக்களப்பு வைத்திலிங்கம் எனப் பேசப்படுகின்ற திரு.கே. வைத்திலிங்கம் என்பவரது மகனே மேற்குறித்த மார்க்கண்டன். பொதுமக்களால் பின்னர் மார்க்கண்டு முத லாளி எனப்படுவரும் ஆவார். இவர் சைவ நெறியினர், சமயத்தில் கொண்ட பற்றுக் காரணமாக சைவப்பள்ளிக் கூடம் ஒன்றினை மட்டக்க ளப்பு ஆனைப்பந்தியில் வைத்து நடத்திய பெருமைக்குரியவர். சிறந்த கொடை வள்ளல். இத்தகைய சிறப்புக்கள் கொண்ட திரு. கே. வீ. மார்க் கண்டன் அவர்களே சல்லித் தீவிலிருந்த காட்டை அழித்து பெருந் தென்னந் தோட்டத்தை உண்டாக்கினவர். மங்கமாரியம்மன் தோட்டம் என்ற பெயரால் இன்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது இத் தென்னந்தோட்டம். இதில் ஒரு மாரியம்மன் கோவிலைக் கட்டி ஒழுங் கான முறையில் தாபரித்து வந்தார். இன்றும், அது மங்க மாரியம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் என்னும் பெயரால் வழங்குகிறது. உகந்தைமலை முருகன் கோவிலிலும், திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி கோவிலிலும் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்ததால் அடிக்கடி அங்கேயும் பூசைக்குச் சென்று வேண்டியவற்றை உதவுவார். தோட்ட முதலாளியான இவர், வருஷமொரு முறை சங்கமன் கண்டிப் பிள்ளையார் கோவிலுக்கு, குருத்து முதல் பூசைக்கு வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் யானை பூட்டிய வண்டியில் ஏற்றிக் கொணர்வார். கோவில் சுற்றுப்புறமெல்லாம் அழகுற அலங்கரித்து, பெருமானுக்குப் பொங்கல், அபிஷேகம் பூசைகளாற்றி இவர் செல்வது வழக்கம்.

ஆடிமாதப் பூரணையில் உகந்தை, குமுக்கன், நாவலடிமடு, யாழ, கட்டகாமம் ஆகிய இடங்களில் தமது ஆட்களையும் பொருள்களையும் அனுப்பி அன்னதானம் கொடுக்கும் வழக்கத்தை உடையவர். நாட்டுக்கோட்டைச் செட்டிமாராற் கட்டப்பெற்ற ஒரு மடத்தை மட்டும் கொண்டதாயிருந்த கதிர்காமத்தில் 1915 ல் மற்றுமொரு மடத்தைக் கட்டியவர் இப்பெருமகனாரேயாவார். இதுவே கதிர்காமத்தில் எழும்பிய இரண்டாவது மடமாகும். இரு நிதிக் கிழவரான திரு.கே.வீ. மார்க்கண்டன் முதலாளியாரிடத்து, சங்குமண் கண்டிப்பிள்ளையாருக்குக் கோவில் ஒன்றை நிலையாக எழுப்ப வேண்டுமென்ற ஆசை மீதூர்ந்தும் இறைவ னின் அநுமதி கிடைக்காததால், அவரால் கோவில் கட்ட முடியவில்லை. எனினும் திருவருட் குறிப்பிற்கமைய மலையில் பெய்யும் மழை நீர் தங்கி நிற்கும் படி ஒரு அணைகட்டி வைத்துள்ளார். இது மலையிலிருந்து வரும் மழை நீர்தேங்கி நிற்க உதவுகிறது. இவரது அரும்பணிகளைப் பாராட்டிய அரசாங்கத்தினர் இவருக்கு "முதலியார்" பட்டத்தை வழங்கிக் கௌர வித்தனர். தன்னை இவ்வாறு கௌரவப்படுத்திய பெருமை, மங்கமாரி யம்மனையும், சங்கமண் கண்டிப் பிள்ளையாரையுமே சாரும் எனப் போற்றிப் புகழும் பண்பு படைத்தவர் முதலியார் கே. வீ. மார்க்கண்டன் அவர்கள்.

சில காலத்தின் பின், ஓடலியாகவிருந்த திரு. வேலுப்பிள்ளை என்பவருக்குக் கோவில் கட்டுவதற்கு அநுமதி கிடைத்தது. இப் பெரியாரும் 1950 ம் ஆண்டு மலையில் ஒரு சிறு கோவிலை எழுப்பினார், பக்கத்துக் காடுகளை அழித்து மா,பலா, வாழைத் தோட்டத்தையும் உண்டாக்கினார். இவருடைய கடைசிக் காலத்தில் கோவில் நிர்வாகத்தை ஒரு நிர்வாக சபையிடம் ஒப்புக் கொடுத்தார். பின்னர் கருங்கல்லால் பெரிய அமைப் பில் கோவில் கட்டப்பெற்று, 1960 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. வேலுப்பிள்ளை அவர்களால் ஆக்கப்பெற்ற மா, பலாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டம் இன்னமும் குத்தகைக்குக் கொடுக்கப்பெற்றுக் கோவிலுக்கு ஒரு வருவாயாக உள்ளது. 1979 ல் ஒரு பஞ்சாயம் சேர்ந்து ஓரளவு முறை யான கோவிலாக, கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், யாளி மண்டபம், ஆதியனவற்றை அமைத்து 19.10.1979 ல் கும்பாபி ஷேகம் நடாத்துவித்து தினப்பூசையும் நடக்க ஒழுங்குகள் செய்துள்ளது. தெருவோரத்திலுள்ள பிள்ளையார் கோவிலையும் திருத்தியமைத்ததோடு பக்கத்தில் ஒரு முருகன் கோவிலும் கட்டித் தினப்பூசை நடைபெறவும் ஒழுங்கு பண்ணப்பட்டுள்ளது. மலைக் கோவில் வீதியும் ஒப்பம் செய்யப் பெற்றுள்ளது. இருபத்தைந்து அடி ஆழத்திற்கு மலையைக் குடைந்து ஒரு தீர்த்தக் கிணறு கட்டப்பெற்றுள்ளது. பிரதான பாதையான தெருவோரத்தி லிருந்து மலைக் கோவிலடி வரையும் தெருவொன்று போடப்பட்டுள்ள தால் போக்கு வரவு இலகுவாகியிருக்கிறது. பக்கமெல்லாம் இப்பொழுது சனங்கள் அங்கங்கு குடியேறியுள்ளார்கள். எங்கும் பயிர்த் தோட்டங்கள் காணப்படுகின்றன.

சங்குமண் கண்டி மலையில் முருகன் கோவில் இருந்ததென்ற சிலரு டைய கூற்றுக்குத்தகுந்த ஆதாரங்கள் கிடைத்திலவாயினும், தெருவோரத் தில் முருகன் கோவிலுமொன்று கட்டுவதற்கு வழிவகுத்த திருவருட் குறிப்பினால் இம் மலையிலும், குன்றுதோறாடிய முருகனுக்கும் வழிபா டுகள் இருந்திருக்கலாமோவென ஆராய வேண்டியது அறிஞர் கடனாகும்.

இவ்விடத்திலிருந்து சுமார் ஒரு மைலுக்குள் அரண்மனையொன்றி லிருந்து அழிந்து போன அடையாளங்கள் தென்படுகின்றன. இது விஜயபாகு மன்னனுடைய அரண்மனையாயிருக்கலாமெனக் கூறுபவரு டைய கூற்றும் ஆராய்வுக்குரியதாகும்.

இங்கு வருடாந்த உற்சவம் ஆடி மாதப் பிரதமை முதல் பூரணை ஈறாக நிகழும்: ஆடி அமாவாசை, திருக்கார்த்திகை, தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரை வருடப் பிறப்பு, முதலிய விசேட தினங்களில் பூசை கள் சிறப்பாக நிகழுகின்றன. வெள்ளிக்கிழமை தோறும் பொங்கல் பூசைக் காக வருபவர்களுடைய தொகை பெருகிக் கொண்டே போகிறது. அழ கான வீதியும் மடமொன்று கட்டி இருத்தலும் போற்றுதற்குரியவை. கோவில் திருப்பணி வேலைகளுக்கென நியமிக்கப் பெற்றுள்ள ஒரு நிர்வாக சபையினர் வேண்டிய திருப்பணிகளைத் தொடர்ந்து செய்ய ஊக்கத்துடன் உழைக்கின்றனர். இக்கோயில் பரிபாலன சபையினரின் அயராத உழைப்பினால் சிறந்த நிர்வாகம் நடைபெற்று வருவதும், கோவில் முன்னேற்றத்திற்குரிய வழிவகைகள் செய்யப் பெற்று வருவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டற்குரியவைகளாம்.

''அன்னைதனை வலம் வந்த அரசே வாவா
ஆனைமுகமுடையோனே அருகே வாவா
என்னவினை செய்தாலு மென்முன் வாவா
என் சித்தத் தென்று மிருப்போனே வாவா
கன்மவினை சூழாமற் காக்க வாவா
காயாம்பூ மேனியனின் மருகா வாவா
சொன்னவினை தீர்சங்கமக் கண்டி வாழும்
சோதியே இதுசமயம் வருகுவாயே''

''ஔவைக்குக் கனிகொடுத்தாருனது தம்பி
அரிய தமிழ் வரைந்த துன தருளினாலே
செவ்வையுறக் கோவில் கட்டி அமரச் செய்தேன்
தேடுமடியார் வினையை யகற்ற வேணும்
பையரவு பக்கத்திற் காவலுண்டு
பார்ப்பதற்குக் கதிர்காமத் தோற்றமுண்டு
வையம் புகழ் சங்கமக் கண்டி வாழும்
வாரணமே இதுசமயம் வருகுவாயே''

அகர முதல் அஃகேனம் வரையுள்ள பதின் மூன்று எழுத்துக்களையும் முதலாகக் கொண்டு 13 பாடல்களைச் சங்குமண்கண்டிப் பிள்ளையார் பேரில் பாடி வைத்தவர் இக்கோவிலுக்குப் பூசை செய்தவரும் தம்பட்டையைச் சேர்ந்தவருமான உயர் திரு.க. நல்லதம்பிக் குருக்களாவர். அவற்றில் இரு பாடல்களே மேலே தரப்பெற்றுள்ளவையாகும். இப்பாடல்கள் முற்றும் ஒரு நூலாக வெளிவரத்தக்கவை, காலத்தாற் பிந்தியவை எனினும், இத்தகைய பாடல்கள் வெளிக் கொணர்ந்து பேணப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (4) வது இயல் : திருப்படைக் கோவில்

## 1. திருக் கோவில்

மட்டக்களப்பிலே பழமையும் பிரசித்தமும் உடையனவான முருகன் கோவில்களைத் திருப்படைக் கோவில்கள் என்று கூறுவர். பண்டைய அரசரின் மதிப்பும், மானியமும், சீர்வரிசைகளும் பெற்ற கோவில்களே திருப்படைக் கோவில்களாம். திருக்கோவில் என்னும் ஊரில் உள்ள, சித்திர வேலாயுத சுவாமி கோவிலே மட்டக்களப்பில் உள்ள முதலாவது திருப்படைக் கோவிலாகும். இதனைத் ''தேசத்துக் கோவில்'' என்று பொதுவாகக் கூறுவர். மட்டக்களப்பாகிய தேசம் முழுவதற்கும் சொந்த மானது மட்டுமன்றி, ''கோவில்'' என்ற பெயரால் இங்கு அழைக்கப்படும் ஒரே ஒரு கோவிலாயுள்ளதும் இதுவே யாதலால் இச்சிறப்புப் பெயர் இக்கோவிலுக்கு உரியதாயிற்று. மற்றைய திருப்படைக் கோவில்களாக முறையே எழுந்தவை: கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோவில், பெரிய போரை தீவுச் சித்திரவேலாயுத சுவாமி கோவில், மண்டூர்க் கந்தசுவாமி கோவில் என்பவையாகும். உகந்த மலையிலுள்ள கந்தசுவாமி கோவிலும் பழமையான ஒன்றாய்த் திருக் கோவிலை அடுத்து திருப்படைக் கோவிலென்ற பெருமை பெற்றிருந்ததென்று கூறப்படுவதெனினும், அது பற்றிய தெளிவான குறிப்புக்கள் இன்று இலகுவில் கிடைப்பதில்லை. அடுத்ததாகத் திருப்படைக் கோவிலென்று கொள்ளத் தக்க சிறப்புடைய இன்னொரு கோவில் சிற்றாண்டிக் கந்தசுவாமி கோவில் ஆகும்.

திருப்படைக் கோவில்களின் நிருவாகம், பராமரிப்பு, மற்றும் தொண்டுகள் என்பவற்றைச் செய்யும் சாதியார்களை வகுத்து நியமித்து, அக் கோவில்களில் நடக்க வேண்டிய விழாக்கள் முதலியவற்றையும் ஒழுங்குற அமைத்து, மட்டக்களப்புச் சிற்றரசரும், கண்டிச் சிங்கள மன்னரும் அவற்றுக்கான மானியங்களையும் அவ்வப்போது வழங்கியுள்ளனர். பெரும்பாலான திருப்படைக் கோவில்களின் நிருவாகத் தலைமைக்கு எனக் ''கலிங்க வெள்ளாளர்'' என்னும் சாதியார் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கையைத் திரிசிங்களத் தீவாக்கித் தீவின் முப்பகுதியையும் முறையே ஆண்டவங்கர், (தெற்கும் மேற்கும்), சிங்கர் (வடக்கு), கலிங்கர் (கிழக்கு), என்பாருள், கலிங்கராலே தம் நாட்டிலிருந்து கொண்டுவரப் பெற்று அங்கங்கே பிரதானிகளாக வைக்கப்பட்டிருந்தோர் ''கலிங்கவேளாளர்'' ஆவர். அதனாற் ''பூபால கோத்திரம்'' என்றும் இவர்கள் அழைக்கப்பட்டனர். பூமியை ஆள்பவரது குலம் என்பது இத் தொடர்க்குப் பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்கட்டிச்சோலையிற் ''குடுக்கை கூறும்'' விபரம் கூறுகின்ற பட்டயத் திலே ''பூபால கோத்திர மென்பது கலிங்கவெள்ளாளர்'' என்ற குறிப்புக் காணப்படுகின்றது. முற்காலத்தில், சேரன், சோழன், பாண்டியன் இவர் களை முறையே நாயர் குலம் என்றும், பிள்ளைக்குலம் என்றும், காராளர் வமிசம் என்றும் விருது கொடுத்து வந்தனர், என்று ''திருப்படைக் களஞ் சியம்'' என்ற திருக்கோவில் பட்டயமும் இவரைப்பற்றிக் கூறக் காணலாம். இவர்கள் திருக் கோவிற்பணிக்கென்றே முதலில் கொண்டுவரப்பெற்று அப்பகுதியிற் குடியேற்றப்பட்டனர். அவர்கள் குடியேற்றப்பட்டிருந்த இடம் கோரைக் களப்பாகும் என்றும் கூறுவர். இலங்கைக்கு மாகோன் வந்தபோது, இவர்களது பணிமுறையும் மற்றும் ஒழுங்குகளும் சீர்கெட்டு மாறியிருந்தமையைக் கண்டனன். கோவசியர் (பூபால கோத்திரத்தார்) என்று அழைக்கப்பட்ட இவரை ஏழுகுடிகளாக மீண்டும் அம்மன்னன் வகுத்து நிறுத்தி அவரவர் பணிகளைத் திட்டமிட்டானென்று ''குளிக்கல் வெட்டு முறைப்பட்டயம்'' குறிப்பிடுகின்றது.

''கண்டனொடு, சருகுபில்லி, கட்டப் பத்தன்,
கருதாரிய கவுத்தனு, மத்தியாயன்,
மண்டலத்தில் பொன்னாச்சி, வயித்தி யென்று
கோவசியர் மக்களிலே வருணமாக்கி
பண்டுமுறை தவறாமல் எழுகுடியாய்ப்
பகுத்தீசர் பணிபுரியப் பரவணியாய்
அண்டர் தமைச் சாட்சி வைத்துத் தத்தம் செய்தான்
அணிதிகழும் மாகோனாம் அரசன்தானே''

என்ற அப்பாடற் பகுதியால் கண்டன்குடி, கருகுபில்லிகுடி, கட்டப்பத் தன்குடி, கவுத்தன்குடி, அத்தியாயன்குடி, பென்னாச்சிகுடி, வயித்திகுடி என்று ஏழு குடிப் பிரிவினையுடையர் பூபால கோத்திரத்தார் என்று அறிகின்றோம். இக்குடிகள் இன்று முறையே கண்டங்குடி, சருவிலிகுடி, கட்டப்பத்தாங்குடி அல்லது சங்கரப்பத்தாங் குடி, கவுத்தங்குடி, அத்தியா குடி, பொன்னாச்சி குடி, வச்சினா குடி என்று வழங்கப் பெறுவ. இக்குடிக ளொவ்வொன்றினும் உள்ள உட்பிரிவுகளையே வகுத்துவார் என்றழைப் பர். வகுத்துவார் என்பது குறிப்பிட்ட ஒருவரது வயிற்றில் பிறந்த வழிமரபினர் என்பதாகும். இவற்றுள் முதல் குடிகளான கண்டங் குடி, சருவிலி குடி, கட்டப்பத்தாங்குடி, ஆகிய மூன்று குடிகளாருமே இன்று கோயில் நிருவாகத்துக்காக அங்கு தங்கி இருப்போராவர்.

மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நூலில் திருக்கோவில் பற்றி யான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியுள்ளவற்றை இங்கே குறிப்பிடல் பயன் தரும் என்று கருதுகின்றேன். அப்பகுதி முழுவதும் திருக்கோவில் பற்றி அறிதற்கு ஓரளவு கருவி செய்வதாகும். மட்டக்களப்புத் தமிழரது சிற்பக்கலை ஆர்வத்துக்குத் திருக் கோவிலில் அமைந்த மிகப் பழங்காலத்து இந்தியச் சிற்பவேலைப்பாடுகள் ஒரு காட்டாக இருந்திருக்கின்றன. சோழர்களால் ஆதியில் இரு முறை களும் பின்னர்ப் பாண்டியரால் ஒரு முறையும் அக் கோவில் புதுப்பிக் கப்பட்டுள்ளது. கி.பி.1315 க்குப் பிறகு பாண்டிய நாட்டினர்க்கும் மட்டக்களப்புத் திருக்கோயிலுக்கும் கலையுறவு பற்றிய நேரடித் தொடர்பு கள் ஏற்பட்டமைக்குச் சான்றுகள் இருக்கின்றன. திருக்கோவிலை அடுத்துத் தம்பிலுவில்லில் உள்ள கண்ணகி அம்மன் கோவிலுடனும் அதிக தொடர்பினைப் பாண்டியர் கொண்டிருந்தமை சாத்தியமான ஒன்றேயா கும். திருக்கோவில் ஆலய அமைப்புப் பற்றிய வரலாற்று வருணனைகளை மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூலிலும் விரிவாகக் காணலாம்.

மட்டக்களப்பிலுள்ள முருகன் ஆலயங்களைப் பற்றிய குறிப்புகளிற் காணப்படும் செய்தி ஒன்றை முதலில் அறிதல் இங்கு பயன்தருவது. சுப்பிரமணியருடைய ஆணைப்படி சூரனைக் கொன்று வெற்றியுடன் மீண்ட வேலானது உக்கிரத்தோடு வரும் வழியில் எதிர்ப்பட்ட வாகூர மலையை இரு கூறுகளாய்ப் பிளந்தெறிந்து கடலில் மூழ்கிய பின் மூன்று கதிர்களைச் சிந்திச் சென்றதென்றும் வேலுருக் கொண்ட அக்கதிர்கள் மூன்றும் முறையே உகந்த மலை உச்சியிலும், திருக்கோவிலில் ஒரு வெள்ளை நாவல் மரத்தின் மீதும், மண்டூரில் ஒரு தில்லை மரத்தின் மீதும் தங்கி இருந்தன என்றும் அவ்வவ் விடங்களில் வாழ்ந்த மக்கள் யாவரும் வேடரே என்பதும் பழைய கதை.

வியப்புடன் நோக்கிக் கொத்துப் பந்தர்களால் ஆலயம் அமைத்து வழிப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது. உகந்தமலை உச்சியில் அந்த இடத்தை அடுத்து உண்டான தீர்த்தக் கிணறும் கோயிலும் பக்திக்குரிய பழம் பெருஞ் சின்னங்களாக இன்றும் அப்பகுதி மக்களாற் போற்றப்பட்டு வருகின்றன. மண்டூர்க் கந்தசாமி கோவிலும் அத்தகையதே. இவ்விரண்டி டத்துக் கோவில்களையும் பார்க்க; வரலாற்றோடு தொடர்புடைய செய்திகளை அதிகம் கொண்டிருப்பது திருக்கோவிலாகும். திருக்கோவி லில் வேடர்களால் இலை, குழைகளைக் கொண்டு முருகனுக்கு அமைக்கப் பட்டிருந்த கோவிலைத் தமிழரின் இரண்டாம் படை எழுச்சியின் போது வந்த சோழ நாட்டு மன்னர் எழுவர் கல்லினாற் கட்டி முடித்தனரென்றும், வேடரது பந்தருக்குள் வடக்கு முகமாக வீற்றிருந்த வேலானது புதிய கற்கோயிலிலும் கிழக்கு முகமாகத் திரும்பி விட்ட காரணத்தினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''திருக்கோவில்'' (திரும்பிய கோவில்) என்று பெயரிட்டாரெனவும் திருக்கோவில் பற்றிய பதிகம் ஒன்று கூறும். இங்குத் தமிழரின் இரண்டாம் படை எழுச்சி என்றது வாலகம்பாகு காலத்தே (கி.மு. 103 இல்) தமிழர் எழுவர் இலங்கைக்குப் படை எடுத்து வந்த செய்தியைக் குறிப்பிடுவதா கலாம்.

மட்டக்களப்பு மான்மியத்தின்படி திருக்கோவிலின் பழைய பெயர் நாகர்முனை என்றும், கோவில் அமைக்கப்பட்ட பின்னர் அக்கோவிற் சிறப்பால் இடப் பெயரும் திருக்கோவில் என மாறிற்று என்றும் அறிந்தோம். மட்டக்களப்பினைப் பிரசன்னசித்து என்பான் ஆண்ட காலத்தில் கலிங்க குமரனான புவனேயகயபாகு தன்மனைவியுடன் மக்கட்பேறில்லாக் கவலையால் வாடித்தலயாத்திரை மேற்கொண்டு இராமேச்சுவரம், திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சுரம், என்னும் புண்ணியப்பழம் பதிகளைத் தரிசித்துக் கொண்டு நாகர் முனையிலுள்ள வேற்பெருமானின் சிறப்பினைக் கேள்வியுற்று மட்டக்களப்புக்கு வந்தான். அவனது மனைவியாகிய தம்பதி நல்லாள் ஒரு சோழ அரசன் மகளாவாள். நாகர் முனைச் சுப்பிரமணியர் ஆலயத்தை நல்ல முறையில் அமைத்தற்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை அவர்கள் வரவாற் பெற்ற மட்டக்களப்பு மன்னனும் புவனேயகயபாகுவுக்குத் தன் கருத்தைத் தெரிவித்து அவன் துணையை வேண்டினான். அதற்கிணங்கித் தம்பதி நல்லாளின் தந்தையான திருச்சோழனுக்குப் புவனேயகயபாகு நல்ல சிற்பியர் முதலானோரை அனுப்பி வைக்குமாறு விட்ட ஓலையின்படி, கைதேர்ந்த சிற்ப நூல் வல்லார் பலர் நாகர்முனைத் துறை முகத்தில் வந்திறங்கினர். சிற்பக்கலை யின் சிறப்பை எடுத்து விளக்குவதான திருக்கோவிலின் திருப்பணியும் நன்முறையில் விரைவிலே நிறைவேறலாயிற்று. மட்டக்களப்பிற் சிறப்புற எழுந்த முதலாவது பெருங்கோவிலாதலால் திருக்கோவில் என மன்னன் அதற்குப் பெயர் சூட்டி மகிழ்ந்தான். இத் திருப்பணியைச் செய்வித்துக் கொடுத்த புவனேயகயபாகுவுக்கு கைமாறு செய்ய விரும்பிய மட்டக்க ளப்பு மன்னன் தனது நாட்டின் தென் பகுதியைத் தன் அரசாக்கி அவனுக்கு அளித்தனன். தெற்கு ''மாணிக்க கங்கையும்'' வடக்கு முக்கனல் வெட்டு வாய்க்காலும், மேற்குக் கடவத்தையும், கிழக்குச் சமுத்திரமுமாய்க் கொண்ட ஒரு நிலப்பகுதியை வகுத்தமைத்துக் கவடா மலையில் மாளி கையுங் கோட்டையுங் கட்டிக் கொடுத்துப் புவனேய கயபாகுவை அங்கி ருந்து அரசாள வைத்தான். புதுவதாய் அமைக்கப்பெற்ற நகருக்குப் ''புன்னரசி'' என்று பெயரும் இடலாயினன். இது நடந்தது கலிபிறந்து 3130 ஆம் ஆண்டில் (கி.பி. 28 இல்) என்றும் இந்நிகழ்ச்சிகள் யாவும் கல்வெட்டில் அம்மன்னனாற் பொறிக்கப் பெற்றன வென்றும் மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்மியம் கூறும். புன்னரசி என்ற பெயர் பின்னர் உன்னரசுகிரி என்றாயிற்று. மட்டக்களப்பு மான்மியத்தின் இக்கூற்றுப்படி கிறிஸ்து பிறந்த காலத்திலேயே திருக்கோவில் நன்முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. கோவிற் பதிகம் ஒன்றிற் கண்டதாக நாம் முற்கூறிய செய்தியின் படி கிறிஸ்து பிறந்ததற்கு முந்திய முதல் நூற்றாண்டிற் கோவில் எழுந்திருத்தல் வேண்டும். இரண்டிற்கும் இடையிலுள்ள காலவேறுபாடு ஏறக்குறைய நூறு ஆண்டுகளாயினும் இரு கூற்றுக்களின் படியும் இந்தியச் சிற்பியரால் அமைக்கப் பெற்ற திருக் கோவிலின் ஈராயிரம் ஆண்டுப் பழைமை உறுதி பெறுகின்றது.

புவனேய கயபாகுவுக்குத் திருக்கோவிற் சித்திரவேலாயுத சுவாமியின் அருளால் பிறந்த மகனான மேக வருணன், தந்தைக்குப்பின் கலி 3150 இல் (கி.பி. 48 இல்) மனுநேயகயவாகு என்னும் பெயரோடு உன்னரசுகிரி இராச்சியத்தின் பட்டத்திற்கு வந்தான். தந்தை செய்த திருக்கோவிற் பணியை மேலுஞ் சிறப்பித்துச் செப்பனிட எண்ணங்கொண்டான். செப்பனிடக் கருதிச் சோழ நாட்டுச் சிற்பிகளை அழைத்து ஏழுதட்டுத் தூபியும், மதில், மண்டபங்கள், யாகசாலை, வாகனவீடு, கோபுர வாசல், தங்கத் தகடு பூட்டிய கொடித்தம்பம் என்பவற்றை அமைத்துத் தூபியின் மேலே ஏழு தங்கக் குடமும் நிரைத்து ஆறு வீதியும் அலங்கரித்து அந்தணர்களால் அபிடேகங்கள் செய்வித்து, வங்கம், கலிங்கம், சிங்கம், சோழபாண்டி நாட்டு மன்னர்களுக்கெல்லாந் தான் செய்த திருப்பணிச் சிறப்பினையும் அறிவித்தான். அவர்களும் மகிழ்ந்து விலை உயர்ந்த பல பொருள்களை ஏழு இராசாக்களிடம் (இது ஏழு பிரதானிகளாக இருக்கலாம்) கொடுத்து நாற்பது திறைக் குடிகளையும் உடன் அனுப்பினர். யாவரும் இந்தியாவிலிருந்து கப்பலேறித் திருக்கோவிலுக்கருகே உள்ள களப்பில் (இக் களப்பு இன்றும் உள்ளது) இறங்கினர். கோவில் விழாவினைச் செவ்வனே நடத்தி வருதல் வேண்டுமெனத் தம்மை எதிர் கொண்டு வாழ்த்திய அந்தணர்களைத் ''தம்பட்டர்'' என ஏழு அரசரும் போற்றினர். ''தம்பட்டர்'' என்பது அக்காலத்தே சோழ மன்னர்களாற் கொடுக்கப்படும் உயர்ந்த ஒரு கௌரவப்பட்டமாக இருந்திருக்கலாம். திருக்கோவில் பணியைச் செய்த மனுநேய கயவாகு காலத்திலிருந்த மட்டக்களப்பு மன்னன் நாம் முன்பு கண்ட பிரசன்ன சித்துவின் மகனான தாசகன் ஆவான். மட்டக்களப்பு மன்னனுடைய ஆட்சிக்குட்பட்ட பகுதியிலேயே திருக்கோவில் இருந்த படியால் அத்தாசகனுடைய அனுமதியும் ஒத்துழைப்புங் கொண்டே மனுநேய கயவாகு திருக்கோவிலைப் புதுப்பித்திருக்கின்றான். மனுநேய கயவாகுவும் இந்தியாவிலிருந்து வந்தவர்களை ஆசீர்வதித்து அறுசுவையு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-டன் அமுதளிப்பித்து, அபிஷேகம் செய்து ஆறுகாலம் பூசை நடக்கும் படி ஏழு இராசாக்களையும் படையாட்சி குலத்தில் மூன்று வன்னியர்களையும் வகுத்து, இரு பாகை முதன்மையாக கலிங்க குலத்துப் பிரசன்ன சித்துவினுடைய சந்ததிகளே வரவேண்டுமென்றும், ஐந்து பண்டாரங்களும், அந்தணர் முதன்மை இராசர் இவர்களுடைய ஊழியர் என்றும், மனுநேய கயவாகுவும் தாசகனும் கற்பித்தனர் என்று திருக்கோவில் நிருவாகத் திட்டம் அம்மன்னரிருவராலும் வகுத்தமைக்கப்பட்டவற்றையும் மட்டக் களப்பு மான்யம் கூறும். மேலும் கோவிலின் திருப்பணி வளர்ச்சிக்காகப் பல ஏக்கர் வயல்களைக் கொடுத்ததோடு நீர்ப்பாய்ச்சுதற்காக ஒரு பெரிய குளத்தையும் கட்டி, சங்கு மண் கண்டி (சங்கமான்கண்டி) மலைக்குக் கீழ்பால் அவர்களைக்குடி இருத்திய இடத்திற்குத் ''தம்பட்டார்'' ஊர் (இன்றுள்ள தம்பட்டை ஊர்) என்று பெயரும் சூட்டினர். மனு நேய கயவாகு திருக்கோயிலுக்குப் பக்கத்தில் மேலும் ஒரு வாவியினைத் தன் தாயாகிய தம்பதி நல்லாள் நினைவாய் அமைத்து அதற்குத் ''தம்பதிவில்'' என்று பெயரிட்டனன். ''வில்'' என்னுஞ் சொல் மட்டக்களப்பிலே குளத்தைக் குறிக்க வழங்குவதாகும். இக்குளத்தைச் சார்ந்த பகுதியில் அமைந்த ஊரும் தம்பதிவில் என இருந்து இன்று தம்பிலுவில் என்று மருவி வழங்கப்பெறுகின்றது.

அழகிய சிற்ப வேலைப்பாடு முதலியவற்றாற் சிறந்து மட்டக்களப்பில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் புகழ் பரந்து விளங்கிய திருக்கோவில் போர்த்துக்கீசரால் அழிக்கப்படலாயிற்று. இலங்கையில் போர்த்துக்கீசர் அழிவு செய்த பல நூற்றுக் கணக்கான கோவில்களைப் பற்றி குலரோஸ் அடிகள் (Conguesta of The Historic Tragedy of the Island of Ceilaa - By Rev. Fr. Quoroz) கண்ணீர் கலந்து குறிப்பிடுகின்றார். தன் மத ஆர்வத்தாலும் பிறமதக் குரோத உணர்ச்சியினாலும் போர்த்துகேய தேசாதிபதியாகிய அசவீடோ தகர்தெறிந்த சைவக் கோவில்களுள் திருக்கோவிலும் ஒன்று. குவரோஸ் அடிகள் திருக்கோவிலைப்பற்றித்தரும் குறிப்புகளிலிருந்து அங்கு மூன்று கோபுரங்கள் (Pagodes) இருந்தன என்றும், அவை மூன்றும் அசவீடோவினால் அழிக்கப்பட்டுவிட்டன என்றும் அறியலாகும். கடற்கரைகளில் இருந்த கோவில்களே புற மதத்தினரால் இவ்வாறு அழிக்கப்பட்டன என்றும் மட்டக்களப்பின் உட்பகுதியில் விளங்கிய கோவில்களை அன்னார் எக்காரணத்தாலோ அழிக்க முடிந்திலர் என்றும் தெரிவிக்கின்றது. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சுவரர் கோவிலைத் தகர்த்தெறியும் நோக்கத்தோடு சென்ற போர்த்துக்கீசர், அங்கிருந்த கருங்கல்லாலான நந்தி, கோயிற் பூசகரின் ஏவற்படி புல் தின்றதைக் கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்தவராய்த் தாங்கள் கருதியபடி அழிவு செய்யத் துணிவு பெறாது மீண்டனர் என்று ஒரு கதை வழங்குகின்றது. அவ்வாறே மண்டூர்க் கந்தசுவாமி கோவிலை நோக்கிச் சென்றவர் கோவில் வீதியை அடைந்ததும் கருங்குளவிகளாற் கொட்டப் பெற்றுப் பதைபதைத்து உயிருக்கஞ்சி ஓடினரென்பர். ஓடும் அவசரத்திலே போர்த்துக்கீச வீரர்கள் விட்டுச் சென்றனவாகக் கூறப்படும் துப்பாக்கி, வாள், ஈட்டி, என்னும் ஆயுதங்கள் சில இன்னும் மண்டூர்க் கந்தசுவாமி கோவிலுள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய திருக்கோவிலில் மூன்று கல் வெட்டுக்களும் இன்னும் பல கல்வெட்டுக்களை ஒத்த சிதைவுகளும் காணப்படுகினறன, முதலாவது கல்வெட்டு தம்பிலுவில் அம்மன் கோவிலிலிருந்து கிடைக்கப்பெற்றது. இக்கல்வெட்டிலே ''சிவஞான சங்கரர் கோவில்'' என குறிப்பிடப்படுவதால் இது திருக்கோவிலுக்கு உரியது என்பது தெளிவு.

> ''சிறிசங்கபோதி பருமரான திரிபூவன சக்கிரவர்த்திகள் சிறி விசயவாகு தேவர்க்கு ஆண்டு பத்தாவதில் தை மாதம் 20 ந் திகதி சிவஞான சங்கரகோவிலுக்கு கொடுத்த வோவில. இதை தன்மத்துக்கு அகித்தம் செய்தானாகில் கெங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தைக் கொள்ளக் கடவராகவும்''.

இது ஏறக்குறைய ஐந்து அடி - உயரமுள்ள தூண் ஒன்றில் இரு பக்கங்களிலுமாக 38 வரிகளில் பொறிக்கப் பெற்றுள்ளது. மற்றைய இரு பக்கங்களிலும் ஒரு சூலாயுதமும் ஒரு மயிலும் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுத் தொடக்கத்திலே சூரியனும் சந்திரனும் பொறிக்கப்பட்டுள்ளார்கள். கல்வெட்டுக்காலம் 15 ம் அல்லது 16 ம் நூற்றாண்டாக இருக்கலாம். இக்கோயிலுக்கு ஒருவர் செய்த மான்யம் ஒன்றைக் குறிப்பிடுவது இக்கல்வெட்டின் பொருள்.

மற்றைய கல்வெட்டு திருக்கோவிலின் தெற்கே உள்ள மதில் ஓரமாக சாத்தி வைக்கப்பட்டுள்ளது. இரண்டு அடி நீளமும் இரண்டு அடி அகலமுமான ஒரு கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது.

1. ................சங்கபொதி (வர்மரான)
2. திறிபுவன சக்கரவர்த்திகள்
3. (ரன) சிவஞான சங்கர (ரசார)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஸ்ரீ விசயவாகு தெவகு (க்கு) யா

5. ண்டு......வதில் தைமா (தத்)தி..........

6. திருக்கோயில் சித்(திர)வெ.

7. லாயுத சுவாமி கொயி.........

8. இளக்கு.....................

இதன் தமிழும் 16 ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகிறது என்பது தெளிவு. முன்பின் வாசிக்க முடியாமையால் இக்கல்வெட்டின் நோக்கம் விளங்க வில்லை.

அடுத்த கல்வெட்டு, நாலு அடி உயரமும் எட்டரை அங்குல அகலமு முடையதாக உள்ளதொருகல்லில் ஆறுவரிகளில் எழுதப்பட்டுள்ளது. இக்கல் கோயில் வாசலில் கற்பூரம் வைத்து கொழுத்தப் பயன்படுத்தப்படு கின்றது. இதன் காலம் 18ம் நூற்றாண்டு ஆரம்பமாகலாம் எனத் தெரிகின்றது.

''சகார்த்தம், 16,74 ஆண்,கு நெல்லு. க்கு அரவா, சி எல்லை''. இது ''எல்லை'' கூறும் விடயமாக எழுதப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. இப்படிச் சிதறுண்ட பலவற்றைத் திருக்கோவில் வீதிகளிலே காணலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்திசையில் 46 கல் தொலைவில் அமைந்துள்ளது திருக்கோவில் என்னும் இத் திருப்பதி. தற்போது ஈழத்து திருச்செந்தூர் என்று அடியார்களால், போற்றப்படுவது. பல ஆண்டு களுக்கு முன்னரே வெள்ளை நாவற்தருவும், சுவை தரும் நீர்ச்சுனைகளும் அமைந்து இயற்கை வளத்தோடு இலங்கியதால் வெள்ளை நாவற் பதி என்று விளங்கியதென்பர். வீரமகேந்திர புரியை ஆட்சி புரிந்த சூரபன்மன் கொடுமைகளுக்கு ஆற்றாத தேவர்கள் பரம்பதியை வேண்ட அதற்கிரங் கிய முக்கண் மூர்த்தி தந்த கந்தப் பெருமான் அமர் புரிந்த வேளையிலே அருட்சக்தி நிலவிய அநேக பாணங்கள் அவுணசேனைகளையும் தலை வர்களையும் அதம் செய்தன. அவைகளிலே ஒரு சித்திரவேலாயுதம் அசுரன் நெஞ்சைத்துளைத்து வாகூர மலையை இருகூறாக்கி மூன்று குளங் களையும் அகழ்ந்த பின்பு வேகந்தணிந்து மேற்குறித்த வெள்ளை நாவல் மரத்திலே வந்து தங்கியது. காடுசுற்றி வந்த வேடுவர்கள் தாம் செய்த தவப்பயனால் வெள்ளை நாவல் மரத்திலேயே ஒளிவீசும் தங்கவே லொன்று பிரகாசிப்பதைக் கண்டு, கொத்துப்பந்தரிட்டுக் கும்பிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கினர்.

காலம் பல கடந்த பின்பு குளக்கோட்டன், பாரராசசிங்கன் என்னும் அரசர்களுக்கு அறிவிக்க, செய்தி அறிந்த மன்னர்கள் விரைந்து வந்து தரிசித்து நாவற்கிளையின் ஊடுருவிப் பிரகாசித்திருக்கின்ற சித்திர வேலைப் பார்த்து, சித்திர வேலாயுதன் எனவே எண்ணிப் போற்றிப் பணிந்து அந்த இடத்தில் தென்னிந்திய சிற்ப சாத்திர முறைப்படி ஆலய மொன்றை அமைத்து ஆலய பணிக்கென மக்களையும் குடியேற்றி மானி யங்களும் வழங்கினார்கள்.

இவ்வேல் வந்து தங்கிய செய்தியின் உண்மையை:-

**''ஆதி நாளிற் கதிர்காமத்தலந்தனில் ஐயன்சிலை குனித்தெய்த தோர் அத்திரச் சோதி பறந்து கயமுகன் நெஞ்சைத் தளைத்து உதிரம் குடித்து ஆதிபட்டதோர் வாகூரக் கல்லைப்பிளந்து இருபதி செய்து முக்குளம் கல்வி ஒதுக்கடலொலி தீர்த்து வெண்ணாவலில் உற்றபதியென்றுல் கறியாதோ''**

என்னும் பழம்பாடல் உணர்த்தி நிற்கின்றது. வேல்வந்து தங்கிய காரணத்தால் வேலூர் என்றும் இப்பகுதியைக் குறிப்பிடுவர்.

**''தெங்கு திரள் சோலைகளும் செந்தமிழின் சாலைகளும்**
**எங்கும் மலரோடைகளும் இசைந்த தென்றல் மேடைகளும்**
**கங்குள் பகல் எல்லையெல்லாம் கந்தநம என்னும் ஒலி**
**பொங்கி வரும் கந்தநகர் என்றறிவாய் பைங்கிளியே''**

என்ற இசைமணி சி.க. பிள்ளை அவர்களின் பாடலுக்கமைய நல்ல கிராம எழிலையும், திருவருட் பொலிவு தரும் கந்தன் ஆலயத்தையும் கொண்டு விளங்கும் கந்தநகர் எனவும் வழங்கப் பெறும் கந்தர் பாணத் துறை தான் திருக்கோவில்.

நாகர்முனைக் கோவில் எனப் பண்டையநாளில் வழங்கப்பெற்ற இது திருக் கோவில் என்றமைந்ததற்குக் காரணமான கர்ண பரம்பரைக் கதை யொன்றும் கூறப்படுகிறது. இங்குச் சித்திர வேலாயுதருக்கு வழமையாகப் பூசனை புரியும் பூசகர் ஒரு நாள் அதிகாலையில் திருப்பள்ளி எழுச்சிப் பூசையை முடித்து விட்டு எதிரேயுள்ள கடற்கரைப் பக்கமாகச் செல்ல லானார். சூரியன் உதயமாகும் அவ்வேளையில் கதிரவனின் செங்கிரணம் கனகமெனக் கலந்தொளிரும் கண்கொள்ளாக் காட்சியினைக் கண்டு களிகொண்டு கந்தன் பொற்கோவில் வாயிலுக்கு மீண்டு வந்தார். எம்குமரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பதிக்கு ஈடெதுவுமாகாதே, கதிரவன் உதயங் கண்டு உந்தன் திருவடி நினைவு கொண்டேன். வடக்கு வாயிலாக அமைந்திருக்கும் நின்னாலயம் கிழக்கு வாயிலாக அமைந்திருந்தால் தினமும் தினகரன் தன் செங்கதிர்க் கரங்களால், நின்சேவடி பற்றி அடிவருடி வணங்குவானே, இவ்வெழிற் காட்சியை அடியேன் காணக் கருணை புரியுமாட்டாயா, என்று இரந்து நின்று வேண்டினார். அன்று முழுவதும் ஆறெழுத்தை உச்சரித்த படியே இருந்தார். அன்று இரா சித்திர வேலனின் திருவருளை வேண்டி இதே சிந்தனையிற் துயின்றார். பொழுதும் விடிந்தது. காலைக் கடன்களை முடித்துக் கொண்டு விடியற்காலப் பூசைக்குச் சென்றார். கோவிற் கதவைத் திறந்ததும் அங்குத் திருமுகம் கொடுக்கும் சித்திரவேலைக் காணவில்லை. பதைபதைத்தார், பயந்தார், மூர்ச்சித்து வீழ்ந்தார், எழுந்தார், உற்றுப் பார்த்தார். இல்லாமலில்லை, கிழக்குத் திசையாகத் திரும்பியிருந்தது சித்திரவேல். சந்நிதிவாயிலும் கிழக்குத் திசையாகவே திரும்பி இருந்தது. உதய சூரியனின் கிரண ஒளி உள்ளே நுழைவதையுங் கண்டார். அர்ச்சகர் ஆனந்த மேலீட்டால் ஆடினார், பாடினார், பரவினார், நாயினும் கடையேனாகிய அடியேனுடைய வேண்டுதலுக்குச் செவி சாய்த்த கந்தப் பெருமானுடைய அருட்திறத்தை எண்ணி ஆராமையோடும், பூசை செய்து தனது வாழ்நாளை எல்லாம் எம்பிரான் திருப்பணிக்கே அர்ப்பணித்தார். இவ்வாறு கிழக்குத் திசையை நோக்கிச் சித்திரவேலும் சந்நிதிவாயிலும் திரும்பிய காரணத்தால் அன்று தொட்டுத் திருக்கோவில் என்னும் பெயரோடு வழங்கி வருகிறது என்று கர்ண பரம்பரையாகக் கூறுகிறார்கள்.

மேலும் இக்கோவில் திருப்பணிகளுக்காகச் சோழநாட்டிலிருந்து குடிகள் வரவழைக்கப்பட்டனர். அவரவர்க்குரிய திருப்பணிகளை ஒவ்வொரு குடியினரும் தவறாது செய்து வந்தனர். அதில் குறித்தொரு குடிசையைச் சார்ந்தவள் குழந்தை தங்கம்மை. சிறுவயதிலிருந்தே சுவாமிக்கு ஆலாத்தி எடுக்கும் பணி இவருக்குக் கொடுக்கப் பெற்றது. கள்ளமில்லாப் பிள்ளை உள்ளம் பெற்ற இச்சிறுமி, தனக்குக் கிடைத்த அப்பணி பெறுதற்கரியதெனப் பக்தியுடனும், பணிவுடனும், செய்து வந்தாள், ஏனைய சிறுமிகளைப் போலன்றி நாள் முழுவதும் அறுமுகன் நினைவும், அயராத பக்தியும் உடையவளானாள். முருகனது சிந்தனையும் பக்தியும் வளாந்ததேயன்றி, உலகப் போக்கில்யாதும் உணர்ந்திலள். பருவமும் அடைந்தாள். வயதுக்கமைய பேதை பெதும்பை, மங்கை, மடந்தைப் பருவங்களெல்லாம் கழிந்து கொண்டே சென்றனவாயினும் அவ்வப்பருவகால உணர்ச்சிகள் தூண்டுதல்களுக்கு அவள் அடிமைப் பட்டாளில்லை. பருவங்கள் மாறின வெனினும் தான் செய்துவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுமுகனுக்கு ஆலாத்தி எடுக்கும் பணியைக் கைவிட்டாளில்லை. காதல் வளர்ந்தது முருகன் மீது. வயது முதிர்ந்தது எண்பதுக்கு. உடல் நலத்தைப் பேணாது உயிர் நலத்தைத் தானே பேணி வளர்த்தவள் தங்கம்மை. குழந்தை முதலே குமரன் பணியை ஆவலோடும் ஆரம்பித்த தங்கம்மை பாட்டியானாள். தளர்ச்சியுற்ற உடலைச் சுமந்து முன்னப்போல் உற்சாக மாகத் தனது பணியை நேரத்திற்குச் செய்ய முடியாமலிருப்பதை உணர்ந் தாள். ஆயினும் தனது உடல் வீழும் வரை திருப்பணியில் வழுவலாகா தென்ற உறுதியும் பூண்டாள். எனினும் ஒரு நாள் சாமப் பூசையின் போது குறித்த பணியை செய்யத் தவறினாள். இதனால் கோபமடைந்த ஆலய வண்ணக்கர் அதட்டிப் பேசியதோடமையாது, அப்பணியையும் கொடுக்க மறுத்து விட்டார். மற்றுமொரு இளம் பெண் ஆலாத்திக்கான ஆயத்தங்க ளுடன் நிற்பதையும் பார்த்த தங்கம்மைப் பாட்டி முருகா, முருகாவென ஓலமிட்டாள், ஓடினாள், கோயிலுள் விழுந்தாள், மூர்ச்சையானாள், ஆனால் நடந்ததென்ன?

**''முருகா என உனை ஓதும் தவத்தினர் மூதுலகில்.......வியாதி அடைந்து நையார்''** - என்பதனை எல்லோரும் அறிந்து உய்யும் வண்ணம் எண்பது வயதுத் தங்கம்மைப்பாட்டி, ஏழு வயதுச் சிறுமியாக சாமப்பூசையில் அறுமுகனுக்கு ஆலாத்தி எடுக்க ஆயத்தமாய் நின்றாள். பார்த்தவர்களெல்லாரும் பரவசப்பட்டு மெய்ம்மயிர் சிலிர்த்தனர், உள்ளம் உருகினர், கந்தன் கருணையை எண்ணி எண்ணிக் கண்ணீர் உகுத்தனர். இப்போது அங்கு வதியும் முதியோரும், பெரியோரும் கூட இதனை உண்மை என்று மிகுந்த ஆராமையோடு கூறுகின்றனர்.

தங்கம்மைப்பாட்டி இளையவளாக உருவெடுக்க அருளிய, திருக்கோ வில் சித்திர வேலாயுதர் திருக்கருணை நாடெங்கும் பரவலாயிற்று.

**''கேளடி பெண்ணே கிழவி இருமலும் கிண்கிண்ணென வயது எண்பதுமானவள்**
**ஆதிநாள் வேலவர் கோயிலில் அன்றவள் ஆலாத்தி பிந்திடவே சூழுந் தலத்தோர் முனிந்திடக் கண்டவள் சொன்ன**
**பலிபீடம் முன்னே**
**ஏழுவயது இளம்பிள்ளையாய் வர ஈன்ற திருக்கோவிலென்றறி யாயோ''**

என்னும் பழம் பாடல் மேற் கூறிய செய்தியை வலியுறுத்துவதாய்த் திருக்கோவிற் திருவருட் திறத்தையும் விளக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிகாலந்தொட்டே, தமிழ் நாடு முதல் யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் இருந்தும் மெய்யடியார்கள் பாதயாத்திரையாகவே பல மாதங்கள் நடந்து திருக்கோவில் முருகன் சந்நிதி தேடிவந்து தரிசித்துப் பின் திருக்கதிரைமலைக்குச் செல்லுவார்கள்.

உலகிலே திருக்கோவில் என்று சிறப்பாகக் கூறும் திருநாமம் திருச் சிற்றம்பலம் என்னும் சிதம்பரத்தையே குறிக்கும். அடுத்ததாக இலங்கை மணித்திரு நாட்டின் கிழக்குத்திசையின் பாகமாக அமைந்திருக்கும் திருமுருகன் திருக்கோட்டையாகிய இந்தத் திருக் கோவிலையே குறிக்கும். திருக்கோவிலென்று பெயர், ஊருக்கும் கோவிலுக்கும் ஒரே பெயராக அமைந்திருக்கும் தனிப்பெருஞ் சிறப்பு தமிழ் நாட்டிலே கூட வேறெங்கும் இல்லை.

இந்தத் திருப்பதியிலே ஆடிமாதத்து அமாவாசைத் தினத்திலே சமுத்திர தீர்த்த உற்சவம் நடைபெறும் பொழுது ஈழமணித் திருநாட்டின் ஒன்பது மாகாணங்களிலிலுமிருந்து பக்த கோடிகள் வந்து முருகன் அருளைப் பெறுவது பண்டைய வழக்கம். இனம், மதம், குலம் என்ற பேதமின்றி எல்லா மக்களும் ஆறுமுகன் அன்பென்னும் பிணைப்பினால் ''அரகர'' என்று கூவும் ஒலி கீழ்த்திசைக்கடலொலி போன்று முழங்கும். குறிப்பாக மட்டுநகரின் பல பாகங்களிலுமிருந்து மெய்யடியார்கள் கூட்டங்கூட்டமாக வந்து காவடியை தோளில் வைத்தும், கற்பூர விளக்கு எடுத்தல், மாவிளக்கு எடுத்தல் போன்ற திருத்தொண்டுகள் புரிந்தும் முருகன் திருவருளைப் பெற்றுச் செல்வார்கள். முருகவேளின் புகழ்பாடும் புராணிகர்கள் காலம்தோறும் கந்தபுராணம் பாடிப்பயன் கூறிச் சிந்தையில் நினைத்ததெல்லாம் பெற்றுச் சீருடன் வாழ்கின்ற திருத்தலம் இது. ஆருத் திரா தரிசன நாளிலே மாணிக்கவாசகப் பெருந்தகையாரின் வரலாற்றுப் புராணம் பாடுவார்கள் மெய்யன்பர்கள்.

கூமுனை முதல் திருமலை வரை திருக்கோயில் ஆவணங்கள், செப்பேடுகள் ஆதியன உளதாதலால், கூமுனைப்பற்று, பாணமைப் பற்று, அக்கரைப்பற்று, கரவாகுப் பற்று, எருவில் பற்று, போரதீவுப்பற்று, மண் முனைப்பற்று, கோறளைப்பற்று, என்னும் பகுதி மக்களுக்கும் வருடாவ ருடம் முருகனுக்கு மானியமும் பூசையும், திருவிழாவும், வழங்கப்பட்டு வருகின்றன. மெய்யடியார்களுக்கு முருகன் இன்னும் பல பல அற்புதத் திருவிளையாடல்களைப் புரிந்த வண்ணமே இருக்கின்றான். நாகர்முனை, வேலூர், கந்தபாணத்துறை, திருக்கோவில், ஈழத்துத்திருச்செந்தூர் என்னும் திருப்பெயர்களால் வழங்கி வரும் இப்பதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மூர்த்தி, தலம், தீர்த்தம், முறையே வணங்கினார்க்கு,
வார்த்தை சொல்லச் சற்குருதான் வாய்க்கும் பராபரமே,

எனும் அருள் மொழிப்படி, மூர்த்தி-ஸ்ரீசித்திரவேலன், தலமும் கோவிலும்-திருக்கோவில், தீர்த்தம்-கிழக்குத் திருக்கடல் துறையும் பெற்று வளம் பெற்றுள்ளது. கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாம லையும், மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்டம் சூழ்ந்த திருக்கே தீச்சரமும், திருக்கதிரைமலை விளங்கும் கதிர்காமமும், மாணிக்க மாநதியும் திகழ்ந்திலங்கும் திருநாடாகிய ஈழமணித்தாயின் திருமுகம் போல் கருணைநிறை திருக் கோவில் பதியின் திருப்புகழைப் பாடிப்பாடித் திருவருள் பெற்றுய்தல் நம்கடன்.

கோவிலின் ஆதிநாளைய அமைப்பின்படி சிதம்பரத்துக் கனகசபை அமைப்புப் போல் இருபக்கமுமே சந்நிதிக்குள் புக வழி இருந்தது. வேடமுகப்பும் சாமிமுகப்பும் என அவ்விரண்டு முகப்பும் பெயர் பெற்றன. பண்டு சுவாமி வலம் வருவதற்கு மூன்று வீதிகளும் இருந்தன. இம்மூன்று வீதிக்குரிய அடையாளமாக மதிலின் அடிப்பாகங்கள் மட்டுமே இன்று தெரிகிறது.

நித்திய பூசைகளாக காலை, உச்சி, மாலையென முக்காலமும் நடைபெறும் ஒழுங்குண்டு. விசேட பூசைகள், ஆடி அமாவாசையில் முதல் எட்டுத் திரு விழாவும், அமாவாசையன்று தீர்த்தமும் நடைபெறும். இத்தீர்த்தத்திலன்று, கடல் நீரெடுத்து மாமாங்கத் தீர்த்தத்தில் கலக்க வேண்டும் என்ற ஒரு நியதியும் இருந்துள்ளது. ஐப்பசி மாதத்தில் கந்தர் சஷ்டியும், சூரபத்மனுடன் சூரன் போரும் நடப்பன. கார்த்திகை விளக்கீடு, விநாயகர் காப்புவிரதம், திருவெம்பாவை, மார்கழித் திருவாதிரை, சிவராத்திரி, சித்திரைப்புத்தாண்டு விழா என்பனவும் நடக்கும்.

பஞ்சாயத்தார் குழு, தலைவர், செயலாளர், வண்ணக்கர், உபதலை வர், தனாதிகாரி, வட்டாரப்பிரதிநிதிகள் என தம்பிலுவில், திருக்கோவில் மட்டக்களப்பு எட்டுப்பகுதியிலும் இருந்து தெரிவு பெறுவர். இது ''பண்டு பரவணி'' யென்ற போர்வையிலேயே இயங்குகிறது. திருக்கோவில், தம்பிலுவில் இவற்றுள் ஓர் ஊரைச் சேர்ந்த ஒருவரே வண்ணக்கராவார்.

அக்கிரகாரப்பிள்ளையார், வெட்டுக் குழந்தைப்பிள்ளையார், மாணிக் கப்பிள்ளையார் என்பார் உள்வீதியிலும், சித்தி விநாயகர், வைரவர், நாகலிங்கேஸ்வரர் மூவரும் மூன்று வீதிகளிலுமாக இடம் பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியில் ''வேல் வந்த வரலாறு'' என்னும் பாடல் நூலொன்று இருந்ததாகவும் செப்பேடு, திருமுகம் உள்ள பரம்பரையினரிடமிருந்து அதைப்பெற்றுவெளியிட முனைந்தும் அவை மறைந்து ஒழிக்கப்பட்டதென வும் கூறப்படுகிறது. பின்பு தம்பிலுவிலைச்சேர்ந்த பண்டிதர் திரு. த. குஞ்சித்தம்பி அவர்களால் சித்திரவேல் முருகன் வருக்கமாலை ஒன்று பாடப்பெற்றுள்ளது. மொட்டை வேலாப் போடியாரால் திருக்கோவில் ஊஞ்சல் நூல் ஒன்றும் பாடப்பெற்றுள்ளது. மேலும் தற்போது பாடப்பெற்று அச்சேறாமல் பல நூல்கள் கிடக்கின்றன.

பண்டிதர் குஞ்சித்தம்பியினால் திருக்கோவில் சிவசுப்பிரமணியக் கடவுள் மீது வருக்கமாலை பாடப்பட்டுள்ள 13 கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களாலமைந்து ஒவ்வொரு பாடலின் ஈற்றடியிலும் முருகனது வேல் அடியவர்களுக்கு நிரந்தரமான இன்பம் அளிப்பதற்கே அமைந்தது என்னும் உயர்ந்த கருத்தைக் கொண்டுள்ளது. உதாரணத்துக்கு வருக்க மாலையில் இருந்து ஒரு பாடலை மட்டும் நோக்குவோம்.

''கேளிருற வினர்கள்பகை கொண்டார் மற்றுக்
குணமிகுந்த வினியமனத் தீன்றாள் மாண்டாள்
கோளில்வலி யன் பகைத்துக் கொண்டானந்தக்
குறுகுதுயர் தமையிசைக்கக் காலம் போதா
மீளில்துயர் எனினு முந்தன் முகைப்பூம் பாதம்
முன்னிடுவோர் தமக்களிக்கும் மூர்த்தி வாவா
ஊழிசுக மெனக்களிக்க ஓகை யோடே
இலங்கிலைவேல் பிடித்து விளையாடும் கோவே''

அடுத்து நாம் நோக்குவதற்குரியது மொட்டைப் வேலாப் போடியார் பாடிய ''திருக்கோவில் ஊஞ்சல்'' என்பதாகும்.இப்பாடல்களில் தேச மக்களின் பேச்சு மொழியைக் கையாண்டு எளிய சந்தமும், தாளக்கட்டும், இனிய சொற்கோப்பும் என்ற முறையினைக் கொண்டு விளங்குவது. வேலாப் போடியாரின் தனிக் கவிதைப் பண்பு இது. உதாரணத்திற்கு ஒரு கவிதையைக் குறிப்பிடலாம்.

தந்தன்ன தந்தன்ன, தந்தன்ன தந்தன்ன
தந்தன்னத் தானானா-தன

1. செம்பவ ளப் பொருள் தங்கள் முகத்துதி
தேன்மொழி யாளுடைய-நல்ல
கும்பமுலைக்கிணை வெங்கட கக்கரிக்
கோடென ஓதிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மின்னற் கொடி யிடை கன்னித்திருவுரு
மெல்லி நல் லாளுடைய-அந்த
வண்ணத் தொடைக் கிணைகன்னிச் சினையின்
வராலென ஒப்பிடலாம்.

**வேறு**

3. பாலைப் பழித்த சொல்லாளைச் சிறந்த
பதியில் மணம் முடித்து
வேலப்பர்தன் திருக் கோவிலிற் பூசை
விரும்பி நடத்தினராம்.

என்ற இப்பாடல்கள் ஒரு பெண்ணின் அங்க நலன்களைச் சொல்லி அவளது காதல் வரலாறு கூறும் ''திருக்கோவில் ஊஞ்சல்'' என்னும் தொகுதியுள் இடம் பெற்றுள்ளன. உடல் நல வர்ணனைக்கு மொட்டை வேலாப் போடியார் கையாளும் உவமைகளும், அவைகளில் எடுத்தாண்ட செஞ்சொற்களும், பொருளுக்கேற்ற பாடற் சந்தமும் இப்பகுதி மக்களின் வழக்கிடை மலிந்து உவகை தருவனவாகும்.

புலவர் மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் கிழக்கு மாகாணத்திலுள்ள பல சிவதலங்களுக்கு பதிகம்பாடி சிறப்பினைப் பெற்றவர். ஆனைப்பந்தி, மண்டூர், சிற்றாண்டி, கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீசுவரர் ஆகியவற்றிக்கு பதிகம் பாடியது போலவே திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமிக்கும், பதிகம் பாடியுள்ளார், என்றும் அது வெளிவரவில்லை என்றும் தெரிகின்றது. திருவாளர் வ. இராசையா என்பவர் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி பெயரில் ''தமிழ்மொழி அனுதாபம்'' பத்து பாடியுள்ளார். இது 1956 ஆம் ஆண்டில் வெளி வந்திருக்கின்றது. மேலும் இசை ஆசிரியர் திரு.சி. கணபதிப்பிள்ளையால் இயற்றப்பட்டவைகளாக பின்வரும் நூல்களை அறிகின்றோம்.

1. திருக்கோவில் முருகன் பிள்ளைத்தமிழ்
2. திருக்கோவில் கலம்பகம்
3. திருக்கோவில் முருகன் தோத்திரம்
4. திருக்கோவில் முருகன் பஞ்சகம்
5. திருக்கோவில் முருகன் திருப்பள்ளியெழுச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 6. | திருக்கோவில் | முருகன் | கலிவெண்பா |
| 7. | திருக்கோவில் | முருகன் | மும்மணிக்கோவை |
| 8. | திருக்கோவில் | முருகன் | ஞானமணி மாலை |
| 9. | திருக்கோவில் | முருகன் | தமிழிசை மலர்கள் |

இவைகளை நூலாசிரியர் வாழும் போதே அச்சிற் பதிப்பித்தல் அறிஞர் கடனாகும்.

இவ்வாறு பல கதைகளையும் பின்னணிகளையும் கொண்டதான திருக்கோவில் இடைப்பட்ட காலங்கள் பலவற்றில் அழிந்து கிடந்துள்ளது. பின்னர் சோழரால் இருமுறைகளிலும் பாண்டியரால் ஒரு முறையும் திருப்பணிகள் புதுக்கி அமைக்கப்பட்டதற்குச் சரித்திரம் சான்று பகர்கின்றதெனக் கண்டோம். சோழரது காலப்புது நியமப்படி சிற்ப வேலைப்பாடுகள் ஒரு வகையானது; பாண்டியர் காலப்புது வேலைப்பாடு கள் இன்னொரு வகையின. இவைகளொவ்வொன்றும் ஏழுதட்டுத்தூபிக ளும் ஏழடுக்குக் கோபுரங்களும், ஏழு அடுக்கு வீதிகளுமாக இருந்தன என்று விபரமாக அறிகின்றோம். ஆயினும் இவை ஒன்றும் இன்று இல்லை. அவையாவும் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டுப் போயிருக்க வேண்டும் என்று குவரோஸ் அடிகளார் கண்ணீர் கலந்து எழுதியுள்ளாரன்றோ!

இற்றைக்கு, சுமார் முப்பது வருடமாக இடைப்புகுந்து இருந்து வரும் ''பண்டு பரவணி'' யென்னும் பழைய வழக்கத்தை ஒட்டிய நிருவாக ஆட்சியில் மாற்றம் வேண்டும் என்பதும் ஆலயம், மடம், தேர், திருப்பணி யாவும் திருத்தப்பட வேண்டுமென்பதும் இப்பகுதியைச் சேர்ந்த பல்லோரதும் விருப்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (4) வது இயல்: திருப்படைக் கோயில்கள்

## 2. தில்லை மண்டூர் முருகன் திருத்தலம்

''பண்டூரு முகிற் குலங்கள் எமதிறைவர்
மருகர் திருப்பதியீதென்ன
விண்டூர மழைபொழியுஞ் சிறப்பதனால் வளம்
மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரில் உறைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூருமினிய மொழிப் பெரியதம்பிப்பிள்ளை
எனும் கலைவல்லோனே''

மண்டூர்ப் பதியின் வளம் அனைத்தையும் தொகுத்தளிக்கும் இக் கவிதை விபுலாநந்த அடிகளாராற் பாடப்பெற்றது. மண்டூர்க்கவிஞர் பெருமானாகிய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 1922 ம் ஆண்டில் வெளியீடு செய்த மண்டூர்ப் பதிகம் என்னும் கவிதை நூலுக்கு அடிகளார் அளித்த சிறப்புப் பாயிரமாக இக் கவிதை அமைந்து நூலை அணி செய்வது. ''இந்திரன்'' மேகவாகனன்; மண்டூர் இந்திரனுடைய மருமகனாகிய முருகன் உறையும் திருப்பதி, என்று மதிப்புக்கொடுத்த மேகக்கூட்டங்கள் அளவறிந்து மழையினைப் பொழியும் சிறப்பினாலே நல்ல நீர்வளமும் அதனால் நிறைந்த பயன் நல்கும் நிலவளமும் கொண்டது மண்டூர்ப்பதி. அந்த மண்டூரில் உறையும் அருள் வள்ளலான முருகன் மீது கவிதை செய்தார், கற்கண்டுபோல இன் தமிழ்க் கவி படைக்கவல்ல அருட்கவியான பெரியதம்பிப்பிள்ளை என்று அடிகளார் கூறுவதை மட்டும் கொண்டே, மண்டூர்ப்பதியின் அருள் வளமும் நீர்வள நிலவளங்களும் அங்குதோன்றும், கவிஞர் பெருமக்களின் சிறப்பு முதலாக மக்களது கவிவளம், கலைவளம், மனவளம் முதலிய யாவற்றையும் நாம் ஒருவாறு உணருதல் கூடும்.

மட்டக்களப்பு வாவியின் தென்கோடியைச் சார்ந்து படுவான் கரையோரமாக மட்டுநகரிலிருந்து சுமார் 20 மைல் தூரத்தே அமைந் துள்ளது, மண்டூர் என்னும் பழம்பதி. பண்டை நாளிலிருந்தே தில்லை மரங்கள் அடர்ந்த காடு, கோயிற்புறமாக இருந்தமையாலும் இன்றும் மண்டூர் முருகன் கோவிலின் மூலத்தானத்திலிருந்து அருள் ஒளிவீசும் வேலாயுதமானது தில்லைமர மொன்றிற் தங்கியிருந்தபடியே அமைந்திருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலினாலும் பக்தர்களும், கவிஞர்களும் இப்பதியினைத் தில்லை மண்டூர் என்றே வழங்குகிறார்கள்.

சூரபன்மனைத் தொலைத்த வேலாயுதத்தில் இருந்து பிறந்த மூன்று ஒளிப் பிழம்புகளில் ஒன்று உகந்த மலையிலும், இன்னொன்று திருக்கோ விலில் இருந்த வெள்ளைநாவல் மரமொன்றிலும், மற்றையது மண்டூர் தில்லைமரத்திலுமாக அடியார்க்கருள் பொழிந்து கொண்டு தங்கி நிலை பெற்று விட்டன என்பது ஐதீகம். மண்டூரில் இவ்வாறு இடம்கொண்ட வேலாயுதமானது தில்லைமரத்தில் தங்கியிருந்தபோது அப்பகுதியில் வாழ்ந்த வேடர்கள் அதனைக் காத்துப் போற்றிப் பூசனையாற்றி வழிபட்டு வரலாயினர் என்றும், பின்னர் மட்டக்களப்பு வாவியில் மீன்பிடித்தற்கு வந்து இளைப்பாறுவதற்காகக் கரைசேர்ந்த துறைநீலாவணைச் சீர்பாத குலத்தார் சிலரும் அவ்வேடருடன் சேர்ந்து வழிபாட்டுக் கடமைகளில் முன்னின்றனரென்றும் கர்ணபரம்பரையாக அறிகின்றோம். அக்காலத்தில் மட்டக்களப்பின் கிழக்குப்பகுதிகளில் முக்குவ வன்னிமைகள் சிற்றரசராக இருந்தன ரென்பது சரித்திரக்கூற்று. அன்னாருடைய அங்கீகாரமும் அதிகாரமும் பெற்றுக் கொள்ளுதல் பொதுத் தலங்களுக் கெல்லாம் நியதியும் சிறப்புமாக இருந்தமையால் அதன்படி தேசத்தலைவரான முக்குவ வன்னிமையின் தலைமையில் கோயிலமைப்பும் நிருவாக ஒழுங்குகளும் வகுக்கப்பெற்றன என்பர். அன்னாரால் பல மானியங்களும் கோயிற் பரிபாலனத்துக்காக வழங்கப்பெற்றிருக்கின்றன. அவர்களின் திட்டப்படி பெரிய கவுத்தன்குடி வேளாளர் குலத்தினர் கோயிற் பரிபாலனத்திற்காக மண்டூரில் குடியேற்றப் பெற்றனர். தில்லை மண்டூர் முருகனின் அருள் வளத்தினால் நிலவளமும் மற்றும் பொருள்வளமும் கோயிலை நோக்கிச் சுரக்கவே கோவிற் சொத்துக்களின் வரவு செலவுகளை ஒழுங்குபடுத்துதற்கும், முக்கியமல்லாத செலவுகளைக் கட்டுப்படுத்தற்கு மாக நான்கு கணக்கர்கள் நியமனம் பெறும் ஒழுங்கும் தேசத்து வன்னி மைகளால் திட்டமிடப்பெற்றது. மண்டூர்க்கோயிலின் அயற் கிராமங்களும், அக்கோவில் வழிபாட்டில் அக்காலை தொடர்பு கொண்டிருந்தோர் வாழ்பதிகளுமான துறைநீலாவணை, குறுமன்வெளி, கோட்டைக்கல்லாறு, பெரியகல்லாறு என்னும் நான்கு கிராமங்களிலிருந்துமே இவர்களின் நியமனம் இடம்பெறும் நியதியாயிற்று.

கிழக்கிலங்கையில், சிறப்பாக மட்டக்களப்புப் பகுதியில், மிகப் பழமையும் பிரசித்தமுமாயிருந்த, முருகன் கோயில்கள் திருப்படை கோயில்கள் என்று அழைக்கப்பெற்றன என்றும், பண்டைய அரசரின் மதிப்பும், மானியங்களும் சீர்வரிசைகளும் நிருவாக அமைப்பும் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களே திருப்படைக் கோயில்களாகும் என்றும் அவை தேசத்துக் கோயில் என்னும் புகழ் பெற்றன என்றும் கண்டோம். தெற்கே நாகர்முனை என்று வழங்கப்பெற்ற திருக்கோவிலில் உள்ள சித்திரவேலாயுத சுவாமி கோயிலே மட்டக்களப்பின் முதலாவது திருப்படைக்கோயிலாகும் என்பதும் அதனை அடுத்து, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுரர் கோயில் போரைதீவுச் சித்திரவேலாயுத சுவாமிகோவில், மண்டூர் முருகன்கோவில், வெருகல் சித்திரவேலாயுதசுவாமிகோவில் என்பன திருப்படைக்கோயில்களாயின என்பதும் பிரசித்தமான உண்மைகள். இவற்றுள் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீசுரம் என்ற கோயில் மட்டுமே சிவன் கோயில் என்று கூறப்படுவது.

திருப்படைக்கோயில்களின் நிருவாகம், பராமரிப்பு, பூசனை, ஒழுங்கு முதலானவையும் அதற்கென நியமனம் பெற்ற குடிவழிப்படியே (சாதிய டிப்படையில்) நடைபெறுகின்றன. ஆலயத் திருப்பணிக்கென்றே இங்குக் குடிமுறை வகுத்து அமைக்கப்பட்டதன்றி, சமூகத்தில் ஏற்றத்தாழ்வு கற்பித்தற்காகவல்ல என்பதை வரலாற்றுச் சான்றுகளினாலும் நாம் நன்கு அறிகின்றோம். இம்முறைப்படி மண்டூர் முருகன் தலைவரான வண்ணக்கர் என்பார் ஆதியிற் கலிங்க வேளாள வகுப்பினராக இருந்தனர். இலங்கை திரிசிங்கள நாடு என மூன்று பிரிவாக்கப்பெற்று (வங்கர் வடக்கிலும், கலிங்கர் கிழக்கிலும், சிங்கர் தென்மேற்கிலுமாக) நாடு ஆளப்பெற்ற போது, கிழக்குப் பகுதிக்குரி[illegible]ோராகிய கலிங்க மன்னரது நெருங்கிய நண்பராயிருந்தமையால் இவ்வேளாளர் இப்பெயர் பெற்றிருந்தனர். கலிங்க வேளாளரே, பூபாலகோத்திரத்தார் (அரசகுலத்தைச் சார்ந்தவர்) என மாகோன் என்ற மன்னனால் திட்டம் செய்யப்பெற்றோராவர். திருப்படைக்கோயில்களின் பணிமுறையும், ஒழுங்கு நியதிகளும், ஒருபோது தவறிப்போகவே, அந்நிலையைக் கண்ணுற்ற மாகோன் (கி.பி. 1215-1245 வரை) அக் கோவில்களின் நிருவாகம், பூசை புனற்காரம், முதலிய யாவற்றையும் புதுக்கிச் சீர்செய்து வைத்தான் என்று பட்டயங்களால் அறிகிறோம். மண்டூர்ப் பகுதியினை மண்டு நாகன் என்பானோர் சிற்றரசன் கலிவருடம் 4209 (கி.பி.1107) வரை மண்டு நாகன் சாலை எனப் பெயரிய மண்டூர்க் கோட்டையிலிருந்து ஆண்டான் என்றும், அவன் மண்டூர் முருகன் கோவிலைக் கட்டுவித்தான் என்றும், போரைதீவுச் சித்திர வேலாயுதசுவாமி கோவிற் திருப்பணி பலவற்றையும் செய்தானென்றும், மட்டக்களப்பு மான்மியம் கூறும். இவற்றால் கி.பி. 12 ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலமிருந்து மிகப் பிரபலமாக மண்டூர் முருகனது திருத்தலம் விளங்கிற்றென்றும் அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றின் சிறப்புக்களே ஒரு கோயிலின் பெருமையினை எடுத்துக் காட்டவல்லன என்பர். மண்டூரில் உறையும் முருகப் பெருமானுடைய திருவுருவத்தைக் கோயிலில் காணக்கூடியதா யில்லை. கதிர்காமம் என்ற பழம்பதிக்கும் மண்டூருக்கும் பூசனை, வழிபாடு முதலிய பல்வேறு வழிகளிலும் ஒற்றுமையுண்டு. பூசனை வேலைகளில் கூட மண்டூர்க் கோயிலது மூலத்தானம் திறந்து காட்டப்பெறாது திரைச்சீலையால் மூடப்பெற்றதாகவே இருக்கும். திருவிழா முதலான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுவாமி மூடுவாகனங்களிலேயே கொண்டு செல்லப் பெறுகின்றார். இறைவனின் அருவத்திருமேனி வழிபாடாகிய உயர்ந்த நிலைக்கு பக்தர்களை ஈடுபடுத்தும் மூர்த்தி, மண்டூர் முருகமூர்த்தி என்று ஞானியர் கூறுவர். திருத்தலம் தெற்கு வாயிலைக் கொண்ட கோவிலையுடையதாய், கோவிலின் எதிரே கடல் போன்ற பெரு நீர்ப்பரப் பினையுடைய மட்டக்களப்பு வாவியினைக் கொண்டதாய், வம்மி, ஆல், அரசு, கோங்கு முதலான நிழல் மரம் நிறைந்த பெரிய திருவீதிகளை யுடையதாய் இருக்கிறது. முல்லை, மருதம், நெய்தல், குறிஞ்சி என்ற நானிலச் சார்பினையும் மண்டூர்த் திருத்தலம் கொண்டு, தன்னிடத்து ஒரு முறை வந்த யாவரையும் மீண்டும் வருமாறு கவர்ந்து, இனிமையும் பக்தியுமூட்டி நிற்கும் சிறப்பும் வாய்ந்ததாயிருக்கின்றது. சுவாமி தீர்த்த மாடும் இடம் மண்டூரின் வடபுறத்தே சுரந்து பாயும் மூங்கிலாற்றின் சங்கமமாக ஒருபோது இருந்தது. நதிப்படுக்கையின் களிமுகக்கால், ஒன்று பிற்காலத்தே தன் இடத்தை மாற்றிக்கொண்ட காரணத்தாற் போலும் இன்று அந்நதியின் சங்கமமன்றி கடலோடு சங்கமம் கொண்டுள்ளதாகிய மட்டக்களப்பு வாவியே தற்காலம் தீர்த்தமாடும் தானமாக விளங்குகிறது. பழம்பெரும் அடியார் பலருடைய ஆன்ம தலமாகவும் விளங்கும் இப்பதி யின் சிறப்பினைச் ''சின்னக் கதிர்காமம்'' என்ற இதன் மறுபெயர்கொண்டு நாம் நன்கு உணரக் கூடியதாய் இருக்கின்றது.

ஆவணிமாதப் பூரணையிலன்று தீர்த்த விழாவும் அதற்கு முன்ன ருள்ள இருபது நாட்களும் திருவிழாக்களும் நடைபெறத்தக்கதாக, கதிர்காமத் தீர்த்தம் கழித்து பத்தாம் நாள் (ஆடிமாதப் பூரணையின்பின் வரும் பத்தாம் நாள்) மண்டூர் முருகன் கோவிலில் கொடியேற்றம் நடைபெறும். தினமும், திருவிழாக்களிற், கதிர்காமத்திற்போலவே சுவாமி வள்ளியம்மன் கோவிலுக்குச் சென்று தங்கியிருந்து செல்லுதலும், இறுதியிற் தீர்த்தமாடி மீண்டுவரும் போது சுவாமி தமது கோயிலுட் செல்லாது வள்ளியம்மன் கோவிலுக்கே சென்று பூசனை செய்யப் பெற்று அன்று மாலைவரை தங்கியிருத்தலும் வழக்கம். தீர்த்தமாடியபின் சுவாமியின் ஊர்வலம், தெய்வயானை அம்மன் கோவிலைக் கடந்து செல்லுகையில், சுவாமியின் பணியாளராய் ''ஆலாத்தி'' எடுத்துவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் தெய்வயானையம்மையின் கோபத்துக்கு ஆளாகிப்போலும், மயககமுற்று வீழ்தலும், அவ்வாறு மயக்கமுற்றோரும் சுவாமியுடன் வள்ளி யம்மன் கோயிலுக்கே எடுத்துச் செல்லப்பெற்றுச் சில மணித்தியாலங்களின் பின் சுயநிலைக்கு வரப்பெறுதலும், அடியார்களைப் பக்திபரவசத்தில் ஆழ்த்துவதாய் இன்றும் மாறாது நடைபெற்று வரும் அற்புத நிகழ்ச்சியாய் இருக்கின்றது.

மண்டூர்த் திருவிழா காவடியாட்டத்துக்குப்பேர் போனது. உடம் பெங்கும் அலகுகளும் முதுகில் நான்கு சோடி முதல் எட்டுசோடி வரை வளைந்த ''முள்ளுச்செடில்'' என்கின்ற கொழுக்கிகளும் பாய்ச்சியபடி, கூட்டம் கூட்டமாகப் பலர் மேளதாளங்களுடனும் காவடிச்சிந்து முதலான பத்திப்பாடல்களின் இசையுடனும் ஆடிச் செல்வது பார்ப்போரை மெய்ம்மறந்து பக்தியிற் திளைக்கச்செய்யும். இதேபோல் பக்திபரவசமும், புதுமையும் நிறைந்த வேறு ஒரு நிகழ்ச்சியையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அது கந்த சஷ்டி காலத்தில் இங்கு நடைபெறுகிறது. நூற்றுக்கணக்கான விரதகாரர் கோவில் வீதிகளிலுள்ள மடங்களிற் தங்கியிருந்து கந்தர் சஷ்டி விரதம்பிடிக்கும் காலத்தில் மற்றைய ஊர்க் கோவில்களிற் போலக், கந்தப்புராணப் படிப்பன்றித் திருச்செந்தூர்ப் புராணமே மண்டூர் முருகன் கோவிலிற் படித்துப்பயனும் சொல்லப்பெறு கிறது. மூன்றாம்நாள் விரதத்திலன்றிரவு, முருகனுக்கும் குறவர்மடமகளாகி வள்ளிநாயகியாருக்குமான திருமணப்படிப்பும் அதற்கேற்ப மட்டக்களப்பு தமிழ் முறைப்படியான திருமண நிகழ்ச்சியும் இடம் பெறுகின்றன. அப்போது கோவிலானது, ஒரு திருமணவீடு போலவே மங்கலக்கோலம் பூண்டு விளங்கக் காணலாம். மாப்பிள்ளை வீட்டார், பெண்பிள்ளை வீட்டார் என்று அவற்றிற்கு உரிமைபெறும் குடியார் பிரிந்து நின்று சீர்வரிசைகளைப் பரிமாற பெண்கள் யாவரும் தம்மை மறந்து குரவை ஒலியால் கோவிலை நிரப்பி ''மங்கலக்குரவைத் திருநாளாக'' அம் முகூர்த்த வேளையைச் சிறப்பித்து நின்று முருகப் பெருமானையும், வள்ளி நாச்சியாரையும், பக்தர்கள் முன்னிலையில் மானசீகமாகக் கொணர்ந்து நிறுத்தி, திருமணச் சடங்குகள் அனைத்தையும் செய்வது ஒரு கண்கொள் ளாக் காட்சியாக இருக்கும். அருள் ஒழுகும் தமிழ் முருகனது தெய்வத்திரு மணம், இதனால் மண்டூர் எங்கும் கலந்து பரந்து, வீசுவதாற்போலும்,

''தீராத நோயெல்லாம் தீர்க்கும் செவ்வேள்
தீந்தமிழின் பாலவரை ஈன்று தந்து
தேனான மண்டூர்க்கே சொந்தமானான்'' எனலாம்

(புலவர் செ. வினாசித்தம்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டூரில் நடைபெறும் கந்தசஷ்டி விரத முடிவிலன்று, கோவில் வீதி எங்கும், விரதகாரர் தனித்தனி பொங்கல் செய்து, கோவிற் கலியாணக் காலின் முன்னாற்படைப்பது வழக்கம். மற்றைய கோவில்களில் நடைபெறு வதுபோல், சூரன்போர் நிகழ்ச்சி மண்டூர் முருகன் திருத்தலத்தில் நிகழ்த்தப்பெறுவதில்லை. இவ் விரதகாலமுற்றும் திருச்செந்தூர்மகிமை, வள்ளியம்மை திருமணம், சைவ விரதங்கள், திருநீற்று மகிமை, முருகனது படைவீடுகளின் சிறப்பு, முருகனது தீர்த்தங்களின் மான்மியம் என்பவை யே விரதகாரருக்குப் படித்துக்காட்டி பயனுறுத்தி, மகிழ்ச்சியான பொங்க லில் விரதத்தை நிறைவுறுத்துதல் இங்கு மட்டுமே உள்ள ஒரு சிறப்பாகும்.

கதிர்காமத்தைப் போலவே, இங்கும் கார்த்திகை மாதத்துக்கார்த்திகை நட்சத்திரத்தன்று நடைபெறும் கார்த்திகைத் திருவிழாவும் சிறப்பான ஒன்று. அன்று முருகன், மயில்வாகனத்தமர்ந்து கோவில் வீதிகள் இரண்டிலும் உலாவருவான். தேனிற்குழைத்த தினைமா நிறைந்த புதுச் சட்டிகளிற் கற்பூர விளக்குகளை ஏந்திய வண்ணம் மகளிர் பலர் அன்று தமது முருக பிரார்த்தனையினையும், நேர்த்திக்கடன்களையும் நிறைவேற்றித், தாம் நினைத்தவற்றைப் பெற்று மகிழ்வுறுகின்றார்கள். இதனால் மண்டூர் ''மாவிளக்கு'' மிகப் பிரசித்தமாயிற்று.

மண்டூர்த்தீர்த்தம் முடிந்த அன்று சுவாமி கோவிலில் மதிய பூசை நிகழ்வதில்லை. மாலை சுமார் மூன்று மணியளவில், சுவாமியை வள்ளியம்மன் கோவிலிலிருந்து ''எழுந்தருளப்பண்ணி'' வந்தபின்னரே பூசனையாற்றுதல் வழக்கம். அன்றிரா கொடியிறக்கம் நடைபெறுவதற்கு முன்னர், தேசத்து வன்னிமையின் தலைமையில் ஒரு ''மகாசன சங்கக்கூட்டம் நடைபெறும். அது போலவே கொடியேற்றத்தன்றும், கொடியேற்றுதற்கு முன்னர், ''மகாசன சங்கம்'' கூடப்பெறும். அக் கூட்டங்களில் கொடியேற்றுதற்குத் ''தடைபிசகு'' ஒன்றும் இல்லை என்று, வண்ணக்கர், கப்புகனார், நாலு ஊரவர், கங்கானி, கவுடாக்காரன், கோவிலார், மற்றும் பொது மக்கள் யாவரும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். தடைபிசகுகள் இருப்பின் உடனே அவை கலந்துரையாடித் தீர்த்துக் கொள்ளப்படும், கொடியிறக்கமும் அப்படியே நடைபெறுவதாகும். இது நிலையான கொடிமரம் இல்லாத மடாலய வகையைச் சேர்ந்த கோயிலாதலால், கொடியேற்றத்தன்று அதற்கென்று குறிக்கப்பட்ட கொக்கட்டி மரமொன்றிலிருந்து வெட்டி வரப்பெற்ற நேரிய தடி ஒன்றை, மூலத்தாளக்கதவின் மூடுதிரைச் சீலைக்குப் பக்கமாக இதற்கென உள்ள இடத்தில் நாட்டி நெற்கதிர்களை நிறைய வைத்துக் கட்டித் தினமும் பூசனையாற்றி வருதலும், கொடியிறக்கத்தன்று விசேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலிட்டு அத்தடியினைப் பிடுங்கி எடுத்தலும், கொடியேற்றத் தன்று, கோயிலின் நாற் திசைகளிலும் வள்ளி, தெய்வானையம்மன் கோவில் களிலும் நட்டு வைத்த திசைக் காவற் கொடி மரங்களையும் பிடுங்கி எடுத்தலும் நிகழும்.

கோவிற் திருவிழா நாட்களில், நாள்தோறும், ஐந்தாம் திருவிழா தொடக்கம் மாலை வேளையில் கோவில் சங்குகளை ஊதிக்கொண்டு அதற்குரியோர் வீதிவலம் வருதல் நியதி. இதற்குச் ''சந்திமறித்தல்'' என்று பெயராகும்.

தீர்த்தம் நடந்த மூன்றாம் நாள், மதியம் கோவிலின் உள்வீதியில், சுவாமி கோவிலின் பின்புறமாக உள்ள குமார தம்பிரான் கோவிலை அடுத்து ''வேடர்பூசை'' எனப்படும் விசேட பூசை ஒன்று நிகழும். அதன் போது சுவாமிக்குப் பலவித மரக்கறிகளும் சேர்ந்த கறியுடன், சிறப்பாக, மானிறைச்சிக்கறியும், பச்சரிசிப்புக்கை வாழைப்பழங்களுடன், வேடர் பிரானான, வேலனுக்கு மண்குடுக்கைகளிற் படைப்பார்கள். அன்றிரவு கோவிலின் பின்புறமாக வெளிவீதியில், பெரிய பந்தலிட்டு, பலவித பலகார வகைகளுட்பட நிறைந்த ''மடைப்பலி'' கள் கொடுத்து ''அடுக்குச் சடங்கு'' எனப்படும் வெறியாட்டு விழா நடப்பதும் வழக்கமாகும். அவ் வெறியாட்டின் போது, பேயாடும் (வெறியாடும்) பத்தர் (வேலனார்) திருவிழா நிறைவின் நற்பலன் முதலான பல எதிர்கால நிகழ்ச்சிகளையும் கட்டுரைப்பார். இதனையும் மண்டூர் மக்கள் மிக்க பயபக்தியோடு, கண்டு வழிபட்டு மனநிறைவுறுவர்.

மண்டூர், பழமையான வழக்கங்கள் சிலவற்றை இன்னமும் நடைமுறையிற் கொண்டுள்ள ஒரு கோவிலாகும். கொடியேற்றத்தன்றும், கொடியிறக்கத்தன்றும், கோவிற் செலவில், மகாசங்கக் கூட்டத்துக்கு வந்தோருக்குச் சாப்பாடு கொடுப்பதுண்டு. அனைவரையும் ஒரு இடத்தி லன்றி, வண்ணக்கருக்கும் வேளாளருக்கும் ஓரிடத்திலும், கணக்கப்பிள் ளைமாருக்கும் அவரவர்களது ஊரவர்களுக்கும், வேறு வேறு குறித்த இடங்களிலும், தேசத்து வன்னிமைக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் வேறோரிடத்திலுமாகக் குறிக்கப்பெற்ற பல்வேறு இடங்களில் அரிசி, காய்கறி, தயிர் முதலியன கோவிலிலிருந்து அனுப்பப் பெற்று விருந் துக்காகப் ''பேரவியல்'' நடைபெறும். மகாசங்கக்கூட்டம் முடிந்ததும், ஒவ்வொரு பகுதியையும் கோவிலாரில், சிலர் சிலராகத் தீக்கொளுத் தப்பட்ட தென்னம்பாளை வெளிச்சத்தில் (பாளைப் பந்தத்தில்) சாப்பிடும் இடத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் விடுதல், மரியாதை கலந்த ஒரு மாறாத வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியிறக்கத்திலன்று பூரணைநிலவு பால்பொழிந்து கொண்டிருந் தாலும், அந்நிலவிலும் இப்படியே அழைத்துச் செல்லுதல் மாறாது. லண்டன் பாராளுமன்றத்துள் மின்சாரவிளக்குகள் நிறைந்திருந்தபோ திலும், சபாநாயகரை, டோர்ச் வெளிச்சத்திலேயே அழைத்துக் கொண்டு போய் அவரது ஆசனத்தில் அமர்த்தும் தொன்று தொட்டு வருகிற வழக்கம் போன்றது இது எனலாம். சுவாமி தீர்த்தமாடும் இடத்திலுள்ள இளைப் பாறும் சபாமண்டபத்துள், கப்புகமார், கோவிலார், வேளாளர், தவிர்ந்த ஏனையோர் செல்லுதல் கூடாது என்பது பண்டையவழக்கம். இவ்வழக்கத் தோடு, தேசத்துவன்னிமை, தேசத்துக்குருக்கள், கணக்கப்பிள்ளைமார் ஆகியோரும் அண்மையிலிருந்து உட்செல்ல அனுமதிக்கப் பெற்றுள்ளனர். சுவாமி தீர்த்தமாடிவந்து வள்ளியம்மன் கோவிலுட் புகுந்தபின், வேளாளர் என்பார் சுவாமியின் வாகனத்தைத் தூக்கிக்கொண்டு ஓடிவிடுதல் இன்றும் நடக்கின்றது. திருவிழாக் காலங்களில் சுவாமியின் முன்னால், தலைமை வண்ணான் சீலையொன்றை ஏந்திவருதலும், வேடர்சாதியாரில் ஒருவர் சுவாமிக்குப் பாதுகாவலராக வருபவர்போன்று, வில்லும் அம்பும் ஏந்தி முன்னால் செல்லுதலும் வழக்கம். வெள்ளிக்கிழமைகளில் மதியபூசை பிள்ளையாருக்கும், இராப்பூசை வயிரவருக்கும் சிறப்பாக நடைபெறும். தினம் மூன்று வேளை பூசனை நடைபெற்றுவருகிற இக் கோவிலில், சனிக்கிழமை அதிகாலைகளில் மட்டும், அட்டதிக்குப் பாலகருக்கும் பூசை நடக்கும். திக்குப்பாலகர் பூசையை, வள்ளியம்மனின் சகோதரரும், முருகன்கோவிற் பாதுகாவலருமான எட்டு வேடர்களுக்குமே இப்பூசை நடக்கிறது என்றும் கூறுவர். பூசகர், கப்புகனார் எனப்படுவர் கப்புகக் குடியிலிருந்து வாரிசுவழியே இடம் பெறும் இவர், மந்திரம் எதுவும் சொல்லுதலின்றி, வெண்சிலையால், வாயினைக் கட்டியபடியே பூசைக ளைச் செய்வர். இளம் கப்புகனார் ஒருவர் பூசை செய்தற்கேற்ற தகுதி பெறும் நிகழ்ச்சி ''படிகடத்தல்'' என்ற ஒரு தனிப்பூசையாகும். இவ்வாறான பல தனிப்பட்ட வழக்கங்களும், சிறப்புகளும், மரபுகளும் தில்லைமண்டூர் முருகையன் திருத்தலத்தில் உள்ளன.

தில்லை மண்டூர் ஞான பண்டிதனான இள முருகனது அருள்வளச் சிறப்பினால் காலத்துக்குக் காலம் புலவர், தமிழ்க்கலைஞர், பேரறிஞர் ஞானியர் முதலாக மல்கு புகழாளர் பலரை மண்டூர் தோற்றுவித்துள்ளது. மட்டக்களப்புத் தமிழ் விளக்காகிய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, புலவர் வினாசித்தம்பி, கோணாமலை வாத்தியார் விடவைத்தியப் புலவரும், பேர்பெற்ற விடவைத்தியருமான தியாகப்ப முதலியோருடைய புலமைச்சிறப்பு நாடறிந்தது. தமிழ் முருகனைத் தேடி மண்டூரையடைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துப் பேரறிஞரான வித்துவான் சந்திரசேகரம்பிள்ளை, பண்டிதர் முருகேசப்பிள்ளை, வித்துவான் வைத்திலிங்கதேசிகர் முதலானோரும், மட்டக்களப்பில் சைவமும் தமிழும் பரப்பிய வீரத்தளபதிகளான பண்டிதமயில்வாகனனார் (சுவாமி விபுலாநந்தர்) அருணாசலதேசிகமணி, வித்துவான் சரவணமுத்தன் என்பாரும் காலத்துக்குக்காலம் மண்டூரில் தங்கியிருந்து புராண படனப்பயன் வகுப்புக்களையும், சமயவிரிவுரைத் தொடர்களையும் முறை முறையே நடத்தி, மண்டூருக்குப் புலமைப்பயனுட்டி இருக்கிறார்கள். புராணப்பயன் வகுப்புகளிற் பாடங்கேட்டுத் தேறிய பேரறிஞருள் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, புலவர் வினாசித்தம்பி, கோணாமலை உபாத்தியார், வினாசித்தம்பி விதானை, நாவிதன்வெளிக் குமார வேலுத் தோம்புதோர், பெரியகல்லாற்றுப் பெரியதம்பி விதானை, கோட்டைக்கல்லாற்று வினாசித்தம்பி விதானை, முதலியோர் குறிப்பிடத் தக்கோராவர்.

இவர்களிற் சிலராலும் வேறு கவிஞர்களாலும் மண்டூர் முருகன் மீது பாடல் நூல்களும், தனிப்பாடல்கள் பலவும், பாடப்பெற்றுள்ளன. ''மண்டூர்ப் பதிகம்'' என்ற பெயரில் முறையே, வித்துவான் வைத்திலிங்க தேசிகர், பண்டிதர் முருகேசபிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியமூவரும் தனித்தனி அருளொழுகும் கவிதைகளைப் படைத்திருக்கிறார்கள். வைத்திலிங்க தேசிகர் அவர்கள் மண்டூர் முருகன்மீது, மேலும் லீலாசங்கரமானவரூஞ்சல் மண்டூர் இரட்டைமணிமாலை என்னும் இரு அருள் நூல்களையும், புலவர் வினாசித்தம்பி அவர்கள் மண்டூர் முருகன் காவடிவிருத்தம், மண்டூர் வடிவேலவர் குறம் என்னும் இரு பக்திக் கவிதைப் படைப்புக்களையும், நிகழ்காலக் கவிஞர் மு. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் ''திருமண்டூர் முருகமாலை'' என்னும் அருட்பாசுரம் ஒன்றையும் யாத்துள்ளனர்:-

''தங்கமணிக் குடைவிரிந்து நிழலைச் செய்யத்
    தளிர்க்கரத்தாற் சிறுமியராலாத்தி காட்டப்
பொங்கு மலர்ப் பூமாலை புனைந்து சூட்டிப்
    போற்றி எனப் புகழ்ந்துன்னைத் தொண்டர் பாடச்
சங்கதிரக் குழலூதத் தாளந்துள்ளச்
    சாமரையும் இரட்டைமணிக் கொடிகளாட
எங்குமுனை ஏத்துதிரு வீதி வந்தாய்
    எழிலொழுகுந் திருமண்டூர் இலங்குந் தேவே.''-(30)

என்று மண்டூர் முருகனது திருவிழா எழுச்சிச் சிறப்பை நேரிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாதோரும் மானசீகமாகக் கண்டு பயன் கொள்ளுமாறு மண்டூர்த் தலத்திற் கேற்றவாறு முருகனது திருக்கோலச் சிறப்பை மட்டும் காட்சி ரூபமாக அன்றி (இக் கவிதையினுள்) அருவமாகவே காட்டி, உள்ளுணர்வு ஊட்டிப் பயன் கொள்ளச் செய்கின்றது, பக்தி உணர்ச்சி நிறைந்த இத் திருமண்டூர் முருகமாலைச் செய்யுள், பழைய வழக்கப்படியான சீர் சிறப்புக்களுடனேயே இன்றும் மண்டூர்த்திருவிழா நடைபெற்று வருவதைக் கல் வெட்டுப் போன்று இப்பாடல் உணர்த்துகின்றது. பழமைக்குக் காட்டுவது பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவுமுள்ள மண்டூர் முருகன் எந்த நிலையில் உள்ள பக்தர்களுக்கும் ஏற்றபடியான தமிழ்த் தெய்வமாக மண்டூரில் அருள் ஒளி வீசி விளங்குகின்றான். அவன் திருவடிகளை நோற்று எண்ணில் அடங்காதோர் வாழ்வு பெற்றுள்ளனர்.

''மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையு மிங்கு வாழவைப்போன் வெய்ய வாரணம் போல்
கைதானிருப துடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே''

-அருணகிரிநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (4) வது இயல் : திருப்படைக் கோயில்கள்

## 3. கோயில் போரைதீவு சித்திர வேலாயுதர் கோயில்

ஈழத்தின் கீழ்த்திசையில் மட்டுமா நகருக்குத் தெற்கே சுமார் 19 மைல் தூரத்தில் அமைந்துள்ள அழகிய கிராமமே கோவில் போரைதீவாகும். பழமைக்கும் புதுமைக்கும் ஈடுகொடுத்து கிராமியக் கலைகளின் சிறப்பிட மாகி நான்கு பக்கமும் சூழவர பசுமையான வயல் நிலங்களை உள்ளடக்கி மட்டக்களப்பு வாவியின் மருகிலே தன்னை உயர்த்தி நிற்கிற் இக் கிராமம். வெள்ளை நாவலம் பதி எனவும் இதற்கு ஒரு பெயரும் உண்டு. வன்னிமை ஆட்சி நிலை பெற்ற காலம் தொடக்கம் கோவில் போரைதீவுப்பற்று எனும் பகுதிக்கே முதன்மையானதாக இக் கிராமம் மிளிர்ந்துள்ளது.

கூத்து, குரவை, வசந்தன் போன்ற பாரம்பரிய கிராமிய கலைகளுக்கு உறைவிடமாக இன்றும் இக்கிராமம் இருப்பதைக் காணலாம். இத்தனை சிறப்புக்கும் இணையென வாய்ந்த இக் கிராமத்தின் கிழக்கும் புறத்திலே கம்பீரமாகக் காட்சியளிக்கும் ஆலயமே ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலய மாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று சிறப்புக்களும் இவ்வால யத்துக்குண்டு. அத்தோடு இவ்வாலயத்தை அண்டியதாக கண்ணகியம்மன் ஆலயமும் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தினுடைய சரியான வரலாற்றினைக் கூறமுடியாதாயி னும் இதனது காலத்தே எழுந்த வெருகல், திருக்கோவில், மண்டூர், கொக்கட்டிச் சோலை ஆகிய ஆலயங்களின் வரலாற்றின் பின்னணியை இதற்கும் உகந்ததாகக் கொள்ளலாம். இவ்வாலயத்துக்கென உரித்தான கல்வெட்டோ அல்லது செப்பேடுகளோ தற்போது இல்லையாயினும் மேற் சொல்லப்பட்ட ஆலயங்களின், சிறப்பாக திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலா யுதர் ஆலயத்தினைப் பற்றிய கல்வெட்டுக்களைக் கொண்டு இதனது ஆரம்ப காலத்தையும் நடைமுறைகளையும் அறிந்து கொள்ள வாய்ப் புண்டு.

இதற்கிடையில் மண்டு நாகன் சாலை என்னும் பகுதியைப் பற்றிய குறிப்பு ஒன்று மட்டக்களப்பு மான்மியத்தில் உள்ளது. அதில் உள்ளபடி மண்டு நாகன் என்பான் கலிபிறந்து 4209 ம் வருஷம் ஏறக்குறைய கி.பி. 1107 இல் மண்டு நாகன் சாலையில் இருந்து ஆண்டான் என்று அறிகின் றோம். இது இன்று மண்டூர் என்றும் நாகஞ் சோலை என்றும் வழங்கப்படும் இரண்டு இடங்களாகும். இதன் வடக்கே ''நாதனணை'' என்று ஒரு அணையை நாதன் என்பவனது பெயரால் அவனது தந்தையாகிய மதிசுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அரசன் கட்டுவித்தான். போரைதீவு சித்திர வேலாயுத சுவாமிக்கு அவன் மானியமாக அளித்த வயலிற்கு நீர் பாய்ச்சுவதற்காக மேட்டு நீரைத் தகைக்க அம்மன்னனினால் இவ்வணை கலி 4280 இல் கட்டப்பட்ட தென்பதும் குறிப்பிடப்படுவது. இதிலிருந்து சித்திர வேலாயுத சுவாமி கோவிலுக்கு அம் மன்னன் செய்த பெரிய மான்யம் ஒன்று விளங்குகிறது.

இதன் தொடர்பாக ''காலசேனன் என்னும் அரசன் பெருத்த போர் முனை வீரர்களோடு இலங்கை வந்து நாகர், இயக்கர்களை வென்று மண்டு நாகனையும் போர்வீரர்களையும் அடக்கித் தள்ளி அவர்களியற்றிய ஆலயங்களிரண்டையும் இடித்து அரசு செய்து, விஜயபாகுவினால் இறந் தான். இங்கு ஆலயம் இரண்டு என்பது மண்டூர் முருகன் ஆலயத்தையும், போரைதீவு சித்திர வேலாயுதசுவாமி கோவிலையும் ஆகும். இந்தக் காலம் தொட்டு மண்டு நாகன் பகுதி பாழடைந்து இருக்க மதிசுதனும் முருகைய னும் ஆலயத்தை நேர்பண்ணக்கருதித் தொண்டை நாட்டுச் சிற்பிகளை அழைத்து அந்தணர் புத்தியின்படி ஐந்து தட்டுத் தூபியும், கோபுரவசால், வாகனவீடு, ரதசாலை, மூன்று சுற்று மதில்கள் தங்கத்தகடு பூட்டிய கொடித் தம்பமுமிட்டுத் தங்கக்குடமும் தூபியின் மேல் நிறுத்தி அபிசேகமும் செய்வித்து அந்தணர் இரு பாகையும் அவர்களுக்கு முதன்மையும், முதன்மைச் சிறைகளும் வகுத்து, பூசாரம்பம் நடைபெறச்செய்து சித்திர வேல் ஆலயமென்றும் அந்தப்பகுதிக்கு போர்முடை நாடென்றும் மண்டு நாகன் இருந்த இடத்துக்கு மண்டுநாகன்சாலை என்றும் நாமம் சூட்டிக் குடிகளை இருத்தி அரசுபுரிந்து வரத் தனது மனைவிக்குப் புத்திர சந்தான முண்டாகி ஒரு புத்திரன் பிறந்தான். அப்புத்திரனுக்கு நாதனென்னும் நாமஞ் சூட்டி வளர்த்து வாழ்ந்து வருங்காலம், நாதன் போல் மதிசுதனும் சித்திர வேல் ஆலயத்துக்குத் தானமாக ஆயிர அவணக் கழனிகள் திருத்தி செந்நெல் குறைவின்றி விளையும்படி மேட்டுநீரைத் தகைய ஒரு அணையும் கட்டி மதகு வைத்துக்கழனிகட்குப் பாயச் செய்து நாதனணை என்றும், வேலாயுதர் வெளி என்றும் நாமஞ்சாற்றி சித்திர வேல் ஆலயத் துக்கு ஈந்து அரசியற்றி வருங்காலம் நாதன் பட்டத்துக்குப் பருவ காலமான போது தோப்புவை அரசுபுரியும் விசுவதாசனுடைய புத்திரி சித்திரேகை என்பவளைப் பாணிக்கிரகணஞ் செய்து வைத்து மட்டக்களப்பையும் பட்டங்கட்டி பரமபதமடைந்தார் என்று மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. இங்கு வரும் போர் முடை நாடு என்பது இந்தப் போரை தீவினை (சித்திர வேலாயுத சுவாமி கோவிலைக்) குறிக்கும். வேலாயுதர் வெளி என்பது வெல்லாவெளி என்னும் ஊரே ஆகும். இக்குறிப்புகளைக் கொண்டு 11 ம் நூற்றாண்டு முதல் ஓரளவு சித்திர வேலாயுத சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் வரலாற்றை நாம் அறியலாகும். ஆயினும் அது அதற்கு முந்திய காலத்தில் கட்டுப் பட்டதென்று தெளிவாகிறது.

தமிழகத்தின் வரலாற்றில் சிறப்புக் காலமாகத் திகழ்வது சோழப் பேரரசின் காலமாகும். இக் காலத்தே தமிழ் நாட்டில் மாத்திரமின்றி ஈழநாட்டிலும் இந்து சமயத்தின் வளர்ச்சி மிகவும் உன்னத நிலையில் அமைந்திருந்தது. இக்காலத்தைய சிறப்பியல்புகளிலே மைல் கல்லாய் அமைவது இராஜராஜ சோழனது ஆட்சிக்காலமாகும். ஆலயங்களை அமைத்ததோடு நில்லாமல் அவற்றை நிர்வகிக்கவும், பேணவும் வேண்டி, மானியங்கள் வழங்கப்பட்டதும் இம்மன்னனது காலத்திலே ஆகும். அதைத் தொடர்ந்து இம் முறைகள் மற்றையோர்களால், பின்பற்றப்பட்டு வந்தது. சோழமன்னர்களது ஆட்சிக் காலத்திலேயே இவ்வாலயம் புனர் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். இவ்வாலயமும் இதனுடன் ஒத்த காலத்தே அமைக்கப்பட்டனவாகக் கருதப் படும், திருக்கோவில், மண்டூர், கொக்கட்டிச் சோலை, முதலான ஆலயங்களினதும் அமைப்பினை ஒப்பு நோக்கும் போது தமிழகத்தில் சோழரது ஆட்சிக் காலத்தே எழுப்பப்பெற்ற ஆலயங்களினது அமைப்போடு ஒன்று பட்டு நிற்பதை அவதானிக்க முடியும்.

இவ்வாலயத்தைப் பற்றிப் பலரும் பலவிதமாகச் சொன்னாலும் சாதாரண மக்களிடையே பின்வரும் கதை பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. இந்தியாவைச் சேர்ந்த கொங்கண முனிவர் என்பவர் தமது ஆத்மீகத்துறையை விருத்தி செய்யும் நோக்கோடு ஈழத்தல யாத்திரையை மேற் கொண்ட போது ஏழு லிங்கங்களைத் தன்னுடன் கொண்டு வந்தாரென்றும் ஆரம்பத்தில் வெருகலம்பதியில் சில நாட்கள் தங்கி அங்கு மகாவலி நீரில் நாளாந்தம் நீராடி தன்னுடனிருந்த லிங்கங்களில் ஒன்றை அவ்விடத்தே பிரதிஷ்டை செய்து வணங்கி வந்தாரென்றும், பின்னர் அவ்விடத்திலிருந்து புறப்படுவதற்காக லிங்கத்தை எடுத்த போது அதை எடுக்க முடியாது போகவே அவ்விடத்தே விட்டு விட்டு புறப்பட்டார் எனவும் அது பின்னர் வெருகல் ஆலயத்துக்குக் கால் கோளாக அமைந்த தெனவும் அதன் பின்னர் மற்றைய ஆறுலிங்கங்களுடனும் மட்டுநகர் நோக்கி தனது யாத்திரையை ஆரம்பித்து, கொக்கட்டிச்சோலை தாந்தா மலை, கோவில் போரைதீவு, மண்டூர் கந்தபாணத்துறை, உகந்தை, முதலிய இடங்களுக்குச் சென்றதாகவும் அந்தந்த இடங்களில் தன்னிடமிருந்த லிங்கங்களில் ஒவ்வொன்றை பிரதிஷ்டை செய்ததாகவும் அதைத் தொடர்ந்து அவ்வவ் விடங்களில் வழிபாடு மேற்கொள்ளப்பட்டதாகவும் வெள்ளை நாவலம்பதி என அன்று அழைக்கப்பட்ட இடமே தற்போது கோவில் போரைதீவு என அழைக்கப்படுகிறதெனவும் கூறப்படுகின்றது. ஆரம்பத்தில் சிவவழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் கொள்ளப்பட்ட இவ்விடத்தில் ஐரோப்பியரின் படை எழுச்சியின் போது சின்னாபின்னப்படுத்தப்பட்ட ஆலயங்களில் வெல்லாவெளியில் அமைந்திருந்த சித்திரவேலாயுதர் ஆலயத்தில் பூசிக்கப்பட்ட வேலாயுதத்தை சில பக்தர்கள் மறைத்து வைத்திருந்து பின்னர் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்து வைத்ததாகவும் ஒரு கதை உலாவுகின்றது. இதற்கு ஆதாரமாக வெல்லாவெளிக்கிராமத்தில் ஆலயம் அமைந்திருந்து அழிந்து போனதாகக் கருதப்படும் ஒரு இடமும், ஆலயத்துப் படிகளுக்காகப் பாவிக்கப்பட்ட சில கற்களும் அதையண்டித் தூர்ந்து போன ஒரு கிணறும் இன்றும் காணப்படுகின்றன. அத்தோடு இப்பகுதி கோவில் தீவு என்று இப் போது அழைக்கப்படுகின்றது.

மேலும் வேலாயுதர் வெளி என்றே அக்கிராமம் அழைக்கப்பட்டதாகவும் இது காலகெதியில் மருவி வெல்லாவெளி ஆயிற்றென்றும் சொல்லப்படுகின்றது. இலிங்கத்துக்குப் பதிலாக சித்திரவேலாயுதமே பிரதிஷ்டிக் கப்பெற்ற தென்பதும் பரவலான கதை. ஆரம்ப காலத்திலே இலைகுழைகளால் கொத்துப்பந்தலிட்டு வழிபாடு இயற்றப்பட்ட இவ்வாலயம் காலகெதியில் சூழவர உள்ள கிராமங்களில் வாழ்ந்த மக்களை எல்லாம் தன் வசம் ஈர்த்துக் கொண்டாலும் இதற்கென உகந்த ஒரு கட்டிடத்தை அமைக்கும் வாய்ப்பு அக்கட்டத்தே இருக்கவில்லை. ஆலயத்தில் குடிகொண்ட முருகப் பெருமான் இவ்விடத்தே ஒரு மகத்தான, சகல அம்சங்களையும் கொண்ட ஆலயம் ஒன்றினை அமைக்க வேண்டுமென கருத்தில் கொண்டு தென்னிந்தியாவிலே காரைக்குடி என்னும் கிராமத்தில், மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய பெரும் தனவந்தருமான கண்ணாயுத பிள்ளை செட்டியாரின் புத்திரரான நாகப்பச் செட்டியாரின் கனவிலே தோன்றி, ஈழத்திரு நாட்டின் கீழ்த்திசையில் வெள்ளை நாவலம்பதி என அழைக்கப்படுகின்ற கிராமத்தே திருவுளங் கொண்டு அருள் பாலித்து வருகின்ற ஸ்ரீ முருகப்பெருமானுக்கு கோவில் எழுப்ப வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி மறைந்தார். அதிகாலை எழுந்த செட்டியார் முருகப் பெருமான் தனக்கிட்ட அன்புக்கட்டளையை மனதில் கொண்டவராக எப்படியும் அந்த இடத்தில் குமரனது உள்ளத்திற்கு இயைந்த கோவில் ஒன்றினைக்கட்டி முடிக்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு அதற்குத் தேவையான பொற்காசுகளை மூட்டையில் கட்டி தனது மனையாளுடன் வெள்ளை நாவலம்பதியை வந்தடைந்து சொறிக் கல்லும் மருதமரச் சாம்பலும் தேனும் சேர்த்து உறுதியான அத்திவாரமுமிட்டு இக்கோவிலை கட்டியெழுப்பியதாக வழங்கப்பெறும் கதைகள் மூலம் நிச்சயப்படுத்த முடிகின்றது. மேலும் மூலஸ்தான வாசலிலே படிக்கல்லாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டுள்ள கல்லிலே ''தென்னிந்திய காரைக்குடி நாகப்பச்செட்டி உபயம், பிராமணர் பராபரிப்பு'' எனப் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மூலமும் இதற்கு சான்றுபகரலாகும்.

இவ்வாலயமானது கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம் என நான்கு மண்டபங்களுடன் கூடியதாக களஞ்சிய அறையும் மதிலும் அமையப்பெற்று விளங்குகின்றது. இவ்வாலயத்திற்குப் பல்வேறு நன்கொடைகளாக நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வழங்கப்பட்டன. சிறப்பாக வெல்லா வெளியில் வன்னிமையாக ஆளுகை செய்த நாதன் என்னும் வன்னியனாரால் நாதனைக் கண்டம் என்னும் பெரும் வயல் பிரதேசம் முன்னர் வழங்கப்பட்டிருந்ததாகவும், காலகெதி யில் அவற்றைச் செய்கை பண்ணி வந்தவர்கள் தம்வசப்படுத்திக் கொண்ட தாகவும், தற்போது மண்டூர் வடதென் கண்டத்தில் பிராமணன் காக்காத்தீவு என்னும் பெயரோடு 43 ஏக்கர் நீர்ப்பாய்ச்சல் காணியும், கோவில் போரைதீவு தென் கண்டத்தில் கல்லடி வெளியில் 56 ஏக்கருமாக மொத்தம் 99 ஏக்கர் வயல் நிலமே மீதியாகிக்கிடக்கின்றது. இவற்றில் 8 ஏக்கர் பூமி ஆலய அர்ச்சகருக்கு வருட வேதனமாகவும் 7 ஏக்கர் காணி வண்ணக்கு மாரின் செலவினத்திற்காகவும் 13 ஏக்கர் பூமி ஆலய கண்காணிப்பாளர் களுக்காகவும் வழங்கப்பட்டிருந்தன. இக்காணிகளைப் பெற்றுக் கொண்ட வர்கள் வருடம் முழுவதும் அவரது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் மற்றைய காணிகளைச் செய்கை பண்ணி அதன் மூலம் கிடைக்கும் நெல்லை ஆலயக் களஞ்சியத்தில் சேகரித்துவைக்க வேண்டுமெனவும் தீர்மானம் செய்யப்பட்டிருந்தது.

இவ்வாலயத்தைப் பராபரிக்க வேண்டி களுவாஞ்சிகுடி பெரிய கவுத்தன் குடியைச் சேர்ந்த வேளாளர் இவ்வாலய வண்ணக்கராகவும் கோவில் போரைதீவு பொன்னாச்சி குடியைச் சேர்ந்த கோவிலார் கண்கா ணிப்பாளராகவும் முற்குகர் இனத்தின் பணிக்கனா குடியைச் சேர்ந்தவர் முகாமையாளராகவும் இப்பகுதியைச் சேர்ந்த வண்ணார், அம்பட்டர், பறையர், தட்டார் உட்பட சகல குடிமக்களும் இவ்வாலயத்திற்கு உரித்து டையோர் ஆக்கப்பட்டு இவ்வாலயம் பரிபாலிக்கப்பட்டு வந்தது. அநேக ஆண்டு காலமாக இந்நடைமுறை சிறப்பாகப் பின்பற்றப்பட்டு வந்தது. ஏறத்தாழ களுவாஞ்சிக்குடி பெரிய கவுத்தன் குடியைச் சேர்ந்த பதினான்கு தலைமுறையினர் இவ்வாலயத்திற்கு வண்ணக்குமாராகப் பணியாற்றியுள் ளமை அறியக்கிடக்கின்றது. அவர்களில் கடைசியாக திருவாளர்கள் ஞானமுத்து ஓவசியர், கதிரேச பிள்ளை ஆகியோர் வண்ணக்குமாராகக் கடமையாற்றிய அண்மைக் காலத்தவர் ஆவர். இவர்களது காலத்திலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் போரை தீவைச் சேர்ந்த பெரியதம்பிப் போடி உடையார் என்பவர் செல்வாக்கு மிக்கவராக இருந்தமையால் இவ்வண்ணக்குமா ரோடு சேர்ந்து வசந்த மண்டபம், ஸ்தம்ப மண்டபம் ஆகியவற்றைக் கட்டி முடித்தார்.

பின்னர் இவ்வாலயத்தின் நிருவாகச் சீர்கேடு காரணமாகவும் நிர்வாகப் போட்டி காரணமாகவும் இவ்வாலயத்தின் நிதி நிலைமையும் பராபரிப்பு முறையும் பின்னடைந்து செல்லத் தொடங்கின. இக்கட்டத்தே பொதுமக்கள் சிலர் ஆலய நிருவாகத்துக்கு எதிராக மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றைத்தாக்கல் செய்தனர். இதன் பின்னர் ஆலயத்துக்கான வருமானங்கள் அனைத்தும் நீதிமன்றத்தின் பொறுப்பில் கொண்டுவரப்பட்டது. இதன் பின்னர் இவ்வாலயத்தோடு ஆரம்பகால முதல் தொடர்பை வைத்துக் கொண்டிருந்த வேளாளர் இவ்வாலய நிர்வாகத்தில் இருந்து தங்களுக் கேற்பட்ட மனக்குறை காரணமாக அவர்களது ஒத்துழைப்பை விலக்கிக் கொண்டனர். இதன் பின்னர் சுமார் 30 ஆண்டு காலமாக ஆலய நிருவாகம் ஸ்தம்பிதம் அடைந்ததோடு திருவிழா முறையும் அற்றுப் போயிற்று. எனினும் நித்தியப் பூஜை தொடர்ந்து நடைபெற்று வந்தது. இக்காலத்தே பெரிய தம்பிப்போடி உடையாரின் (முற்குகர்) மகன் சின்னத்தம்பி உடையார் அவரது தந்தையாரின் செல்வாக்கை அனுகூலமாக்கி வண்ணக்கரானார். இவரது காலத்தே ஆலயம் சிறப்பிழந்து போனதோடு நிருவாகமும் சீர்குலைந்து காணப்பட்டது. இதன் பின்னர் முற்குகர் இனத்தில் பணிக்கனார் குடியைச் சேர்ந்த திரு.கே. மார்க்கண்டு என்பவர் வண்ணக்கராக நியமிக்கப்பட்டார். களுவாஞ்சிக்குடியினருடைய உரிமை இதன் மூலம் ஆலய முகாமைத்தரத் திற்கு செயல்பட்டு வந்த பணிக்கனார் குடியிடம் கை மாறியதோடு இடைச் செருகலாக முற்குகர் இனத்தில் பெத்தான் குடியைச் சேர்ந்தவர்களும் வண்ணக்கராகும் வாய்ப்பைப் பெற்றனர். தற்போது பணிக்கனார் குடியைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் அவர்களும் பெத்தான் குடியைச் சேர்ந்த திரு. பாலகப்போடி அவர்களும் வண்ணக்கர்களாகச் செயற்பட்டு வருகின்றனர்.

1974 ம் ஆண்டு ஆனிமாதம் புனருத்தாரணம் செய்யப்பட்ட இவ் வாலயத்தின் மகாகும்பாபிஷேகம் 33 ஓம குண்டங்களோடு மிகச் சிறப்பாக நடாத்தி முடிக்கப்பட்டது. பிரம்மஸ்ரீ வை.மு. குமாரசாமி குருக்கள் அவர்கள் இக் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடாத்தி வைத்தார். கோவில் போரைதீவைச் சேர்ந்த சிவஸ்ரீ வி.கு. கணபதிப்பிள்ளைக் குருக்கள் இக் கும்பாபிஷேகம் நடை பெறப் பெரும் முயற்சி மேற் கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆவர். மட்டக்களப்பிலேயே மிகச் சிறப்பாக 33 ஓம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டம் நிரைத்து நடந்து முடிந்த மகா கும்பாபிஷேகம் கொண்ட பெரு விழாவினை இக் கோயில் தட்டிக் கொண்டது.

முன்னைய காலத்தே இவ்வாலயத்தில் நாளாந்தம் ஒரு நேர பூஜை உச்சிக் காலத்தே மட்டும் நடைபெற்று வந்தது. மகாகும்பாபிஷேகத்தின் பின்னர் மூன்று நேரமும் பூஜைகள் நடைபெறத் தொடங்கின. ஆண்டுத் திருவிழாக்கள் வருடந்தோறும் ஆடிமாதத்தில் நடைபெற்று வருகின்றது. முன்னர் 21 நாள் திருவிழா நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் கொடியேற்றத்தோடு கூடிய நான்கு நாட்களும் ஆலயச் சார்பிலும், அடுத்த திருவிழா வேளாளர் சார்பிலும் அதன் பின்னர் தொடர்பாக பறையர், வண்ணார், தட்டார், சிங்களக்குடியினர், கோப்பி குடியினர், கச்சிலார்குடி, மாதவி குடியினர், பெத்தான் குடியினர் ஆகியோர் ஒரு நாள் வீதமும் அடுத்த மூன்று நாட்களும் படையாண்ட குடியினரும், அடுத்த இரு நாட்களும் காலிங்கா குடியினரும், பின்னர் வரும் மூன்று நாட்களும் பணிக்கினார் குடியினரும் 20 ம் நாள் திருவிழா செட்டி வேளாளருமாக செய்து இறுதியான தீர்த்தத் திருவிழா ஆலயத்தின் சார்பிலும் நடைபெற்றது. ஆனால் தற்போது நிருவாகம் மறுபடியும் சிறப்பு நிலையில் இல்லாத காரணத்தால் இத் திருவிழாக்கள் 10 ஆகக் குறைக்கப்பட்டதோடு அதன் சிறப்பும் மங்கி விட்டது எனலாம்.

மாதந்தோறும் வரும் விசேட பூசைகள் இவ்வாலயத்தில் கொண்டா டப்பட்டு வந்தாலும் சில பூசைகள் அன்று தொடக்கம் குறிப்பிட்ட குடியினரால் செய்யப்பட்டு வந்தன. சித்திரை பௌர்ணமி விரதம் கச்சிலார் குடியினராலும், கார்த்திகை விளக்கீடு எருவில் பணிக்கனார் குடியாராலும், திருவெம்பாவை பெரிய போரைதீவு பணிக்கனார் குடியினராலும், திரு வாதிரை மகிழூர் பணிக்கனார் குடியினராலும் விழாவாகக் கொண்டாடப் பட்டு வருகின்றன.

இவ்வாலயம் அமைக்கப்பட்ட காலத்தில் நாதனை (வெல்லாவெளி) என்னும் இடத்தில் முற்குக வன்னிமை ஆட்சி நடைபெற்று வந்தது. இவ்வாலயத்தை அமைத்த செட்டியார் இவ்வாலயத்தைப் பராமரிக்க வேண்டி நாதனை வன்னியனாருடனும் ஏனைய பெரியோருடனும் ஆலோசித்த பின் இவ்வாலயத்தைத் தேசத்துக்குரியதாக்கி (திருப்படைக் கோவில்) பொதுமக்களிடம் ஒப்படைத்து விட்டார். அக்காலம் தொடக்க மாக தென்னிந்திய பிராமணக் குருமாரையே அர்ச்சகர்களாக நியமித்து அவர்களுக்கு மானியமாக நெற்காணிகள், வீடுகள் என்பன உருவாக்கி அவர்களையே நிலைபதியாக அமர்த்தினர். 17 ம் நூற்றாண்டின் ஆரம்பப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் வெல்லாவெளியில் இருந்த பூபால கோத்திர வன்னிமையின் கீழ் இவ்வாலயம் வந்ததும் திருப்படை முறைகளுக்கு அமைவாக இதன் நிருவாகம் சிறப்பாக நடைபெறத் தொடங்கியது. இவ்வாலயம் சீர்குலைந்து காணப்பட்ட காலத்தில், பொது நோக்கு கொண்ட பலர் இதைப் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்காக முயற்சி மேற்கொண்டனர். இதன் பிரதிபலிப்பாக 1942 ம் ஆண்டு பட்டிருப்புத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் எஸ்.யூ. எதிர்மன்னசிங்கம் அவர்களின் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. இவ்வாலயத்துக்குரிய சகல கிராமத்தைச் சேர்ந்த பிரதி நிதிகளும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தே பல முடிவுகள் எடுக்கப்பட்டதாயினும் கவுத்தன் குடியாரின் சரியான உரிமைகள் மீள வழங்கப்படாமையாலும் இது தொடர்பாகப் பல சிக்கல்களுக்கு இடமேற்பட்டமையாலும் ஆலய நிருவாகத்தில் எதுவித மறுமலர்ச்சியும் ஏற்படவில்லை எனலாம்.

ஆனால் தற்போது பணிக்கினார் குடியைச் சேர்ந்த திரு. சோம சுந்தரம் என்பவரும் பெத்தான் குடியைச் சேர்ந்த திரு. பாலகப் போடி என்பவரும் வண்ணக்கர்களாகவும், கோவிலாரைச் சேர்ந்த திரு. வைரமுத்து என்பவர் கங்காணியாகவும் மேலும் நிருவாக உறுப்பினராக 21 பேரும் இவ்வாலய பரிபாலன சபையில் அங்கம் வகிக்கின்றனர். வரவு செலவுகள் அனைத்தும் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டாலும் இவ்வாலயத்தினுடைய வரவு செலவுகள் திருப்திகரமாக அமையவில்லை என்று பொதுவாகக் கருதப்படுகின்றது.அத்துடன் நிருவாக குழறுபடி இவ்வாலயத்தையும், அதன் சிறப்பினையும் மீண்டும் படுகுழியில் தள்ளிக் கொண்டு இருக்கின்றது என்பது பலருடைய அபிப்பிராயமாகும்.

இவ்வாலயத்தினுடைய நிருவாகச் சீர்கேடு காரணமாகக் கடந்த சில ஆண்டுகளாக ஆர்வம் மிக்க சிலரால், சிறப்பாக இளைஞர்களால் குரல் எழுப்பப்பட்டு ஒரு புது மாற்றத்தை நிருவாகரீதியில் செயற்படுத்துவதற்கு முயற்சி மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும் இப்பகுதியைச் சேர்ந்த பழமை விரும்பிகளும் சாதி, குடி, மரபு, என்பவற்றை கட்டிக்காப்பவர்களும் சில படித்தவர்களும் கூட பெரும் தடைக்கல்லாய் இருக்கின்றனர்.

இளைஞருடைய கருத்துப்படி இவ்வாலயத்திற்குத் தெரிவு செய்யப்படும் நிருவாக சபைக்குச் சகல உரிமைகளும் வழங்கப்பட வேண்டுமெனவும் வண்ணக்குமாரின் எதேச்சாதிகாரப் போக்கைக் கட்டுப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை அதற்கு உரித்தாக்கப்பட வேண்டுமெனவும் ஆலயத்தின் சார்பில் வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் வருடாந்தம் சுமார் ஒரு லட்ச ரூபாய் வருமானம் அளிக்கக்கூடிய இவ்வாலயத்தினுடைய வரவு செலவுகளைக் கணக்கீடு செய்வதற்கு வேதன அடிப்படையில் ஒரு கணக்கப்பிள்ளை நியமிக்கப்பட வேண்டும் எனவும், வருடம் ஒரு தடவை யேனும் கணக்கு வழக்குகள் ஒன்று அல்லது இரண்டு எண் பார்வையாளர் மூலம் பரிசீலிக்கப்பட்டு மகாசபைக் கூட்டத்தில் பொது மக்களின் கவனத்திற்காகவும் அபிப்பிராயங்களுக்காகவும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நடைமுறைப் படுத்தப்பட்டால் ஆலயத்தினுடைய வருமானத்தை மேலும் பெருக்கிக் கொள்வதோடு அதன் மூலம் ஆலயத்திற்கான அவசிய கருமங்களைச் சிறப்பாக ஆலயத்திற்கான மணிக்கோபுரம், தூர்ந்து போய்க்கிடக்கும் தீர்த்தக்குளம், சூழவரவுள்ள நிலத்தின் ஒரு பகுதியில் அழிந்து கிடக்கும் நந்தவனம், சிதைந்து கிடக்கும் மின்சார அலங்காரம், ஆலயத்திற்கான வர்ணவேலைப்பாடுகள், கட்டிடத்தின் பழுதடைந்த பகுதிகளில் அவசியமான திருத்த வேலைகள், அழிந்து கிடக்கும் மடைப்பள்ளிக் கட்டிடம், ஆலயத்திற்கான நித்திய மேளம் என்பவற்றை அவசியமாக மேற்கொள்வதோடு எதிர்வரும் காலங்களில் ஆலயத்தின் நிதியைக் கொண்டு சமுதாயத்திற்கு உதவக்கூடிய வகையில் கல்வி, மருத்துவம், சிறிய சிறிய தொழிற்சாலைகள் என்பவற்றை விருத்தி செய்யவும் வாய்ப்பேற்படும்.

கூடிய விரைவில் இவ்வாறான செயற் திட்டங்களை நிறைவேற்றும் வகையில் ஒரு வாய்ப்பான காலம் ஏற்படும் என நம்பலாம். கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீசுவரர் கோவில், போரைதீவு சித்திரவேலாயுத சுவாமி கோவில் போன்றவற்றிலிருந்து வேளாளருக்கு முதன்மை அளிக்கப்படாமையும் வேளாளர் அதைப் பெற்று அக்கோவில்களில் தம்முடைய கடமையைச் செய்வதில் தவறாமையையும் பார்த்துக் கொள்ளல் வேண்டியது ஒரு தவறாத நியதி. திருப்படைக் கோவில்களுக்கு வேளாளர் சம்பந்தப்படவில்லையென்றால் திருப்படைத் தன்மையும் குன்றிவி[illegible] பொது மக்களும் கருத்தூன்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (4) வது இயல்: திருப்படைக் கோவில்கள்

### 4. சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோவில்

நாட்டின் ஓர் ஆலயம் தேவ அருள் பரப்பி, நிலம், புலம் சொத்துக்க ளோடு புகழ் பூத்து சிறந்து விளங்கிக் கொண்டு இருக்கிறதென்றால், அந்நாட்டு மன்னன் கோவில் கட்டி முடித்தான், கோவில் பாராமரிப்புக்காக ஆதன சாதனங்களை மானியமாக வழங்கினான் என்று எல்லாச் சரித்திரங்களும் சாலவும் கூறிக் கொண்டிருக்கும்.

ஆனால் சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேற் பெருமான் சன்னிதானத்தைப் பொறுத்த வரை, எந்த மன்னரோ, எந்தப்பிரபுவோ, கட்டிலிட்டுச் சென்ற தாகச் சரித்திரம் கூறவில்லை. சித்தாண்டி வரலாறு பற்றிய ஆதாரங்கள் கிடைக்காவிட்டாலும், கர்ண பரம்பரையான கதைகள் மூலம் சித்தாண்டி யில் வாழ்ந்து கொண்டிருக்கும், வேளாளப் பெருங்குடி மக்களது அரும் பெரும் முயற்சியால், இம்மாபெரும் ஆலயம் கட்டப்பட்டு அதற்குரிய காணி, பூமிகள், யாவும் வழங்கப்பட்டன என்றுதான் அறியவருகிறது.

பல நூற்றாண்டுக்கு முன் ''சிகண்டி'' என்னும் முனிவர் பெருமான் இங்கு வந்து தம்மிடமிருந்த இரும்பு வேலாயுதத்தைச் சிறு குடிசையில் வைத்துப் பூசித்தாரென்றும், இதை அறிந்த மக்கள் அங்கு சென்று வழிபட்டு முனிவரால் இஷ்ட சித்திகளைப் பெற்றனர் என்றும் சொல்லப்படுகின்றது. இம்முனிவர் பெருமான் பல அற்புத சித்திகளைச் செய்தமையால் சித்தர் என்ற பெயரும், நீறு பூத்த மேனியுடனும் உருத்திராக்க கோலத்துடனும் விளங்கியமையால் ஆண்டி என்ற பெயரும் சேர்ந்து, (சித்து-ஆண்டி) ''சித் தாண்டி'' என காரண இடு குறிப்பெயரால் அமைந்ததாகச் சொல்லப்படு கிறது.

சித்தாண்டி என்னும் இக்கிராமம் மட்டக்களப்பு நகரின் வடபால் பதின்மூன்று கல் தொலைவில் மேற்குப் பக்கமாக நெல்வயல்களும் ஏரிகளும் சூழ்ந்த இயற்கைச் செழிப்போடு அமைந்துள்ளது. இவ்வாலயம் இராச கோபுரம், மணிக் கோபுரங்கள் ஆகியவற்றோடு கிழக்கிலங்கையின் அதி உன்னத ஸ்தானத்தில் சிறப்புற இன்றும் காட்சி தருகின்றது.

இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச் சிறப்புகளோடு அமைந்துள்ளது என்பதற்கு தென்கிழக்கில் அமைந்துள்ள ''தீர்த்தக்கேணி'' சான்று பகர்கின்றது. இங்கு முன்பொரு காலத்தில் சுவாமி தீர்த்தமாடிய அன்று மக்கள் பலர் தாம் வேண்டியவாறு திருவருள் பெற்றனரென்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்படுகின்றது. இக் குளத்துக்கடியில் இயற்கை திருநீறுபொழியும் வளத்தை இன்றும் காணலாம்.

இக் கோவிலில் வருடாவருடம் ஆவணி பிரதமையில் கொடியேறி பௌர்ணமித் தினத்தன்று நடக்கும் தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும் திருவிழாக்கள் பதினைந்தும் குடி வாரிசாக நடக்கும் எனவும், அக்குடி களின் தொகை ஏழாக இருப்பினும் அவற்றுள் மூன்று குடிகளே முக்கியம் என்பதும் பட்டயம் ஒன்றால் தெளிவாக்கப்படுகின்றது. இம் மூன்று குடிகளும் வன்னிமைக்குடி, தலைமை வண்ணக்கரை வன்னியனார் என் றும் சொல்வர். மற்றைய இருகுடிகளும் புதூர்க்குடி, அத்தியாகுடி என்று சொல்லப்படுவன.

இக் கோயிலின் உற்பத்திக் காலம் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் எனலாம். ஆதியில் வேடரும் அதன் பின்னர் சித்தர் எனப்படும் ஆண்டி யும் போற்றி வழிபாடு செய்து வந்தமையை ஆதியிற் கண்டோம்.

கொடி ஏற்றத்தின் பின்னர் நடைபெறும் பதினைந்து நாள் திருவிழாக் களில் முதல் மூன்றும் கோவில் திருவிழாக்களாகும். 4 ம் திருவிழா முதல் முருகன் வள்ளி, தெய்வானை சமேதராய்ப் பவனி வருவார். 7 ம் திருவிழா பட்டியன் குடித் திருவிழா எனப்படும். அன்று முதல் சுவாமி குதிரை வாகனத்தில் பவனி வருவார். 12 ம் திருவிழா அன்று மயில் கட்டுத் திரு விழா எனப்படும். அன்றுமுதல் காலைத்திருவிழாவில் மட்டும் சுவாமி மயில் வாகனத்தில் வருவார். உடன் அடுத்த வாகனத்தில் பிள்ளையார் பவனி வருவார். கொடி இறக்கத்தன்று இரவு இடும்பன் பூசை நடை பெறும். இடும்பன் பூசைக்காக பூசணிக்காய்ப் பலியிடுதல் வழக்கம். உயிர்ப்பலி நீக்கி அதற்குப் பதிலாக பூசணிக்காய் அறுப்பது இதனைக் காட்டுகின்றது. வள்ளி அம்மானை என்னும் ஏடு திருவிழாக் காலம் முற்றும் வள்ளி நாச்சியார் கோவிலின் முன் படித்து வரப்படுதல் வழக்கமாகும்.

தெய்வானை அம்மன் கோவில் மாத்திரம் திரை திறவாது பூசனை நடை பெறுவதைக் காண்கிறோம். மூலஸ்தானமும் மற்றைய கோயில்களும் வள்ளியம்மன் கோயிலும் பூசனையின் போது திரை திறந்து பூசனை நடத்தும் வழக்கத்தை இங்கு காணலாம். மயில் கட்டுத் திருவிழா அன்று முதல் தீர்த்தம் முடியும்வரை வள்ளியம்மன் கோவில் சிறப்பான அலங் காரங்களுடன் விளங்கும். இதற்கும் மட்டக்களப்பு முருகன் வழிபாட் டிற்கும் உள்ள தொடர்பு இன்னதென்றும் நாம் நோக்குதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தத்தன்று மாலை, தலைப்பற்றோலை, குடை, கொடி, ஆல வட்டம், தீ வட்டி முதலிய ஆசாரங்களுடன் தலைமை வண்ணக்கரான வன்னியனார் வீட்டிற்கு ஆலயம் சம்பந்தப்பட்டோர் செல்வதும், அங்கு அனைவருக்கும் வன்னியனார் சாப்பாடு கொடுத்தலும் வழக்கமாகும். பின்னர் பலகாரப் பெட்டிகளுடன் மீண்டு யாவரும் வள்ளியம்மன் கோவிலுக்கு வந்து சேர்தல் இங்கு வள்ளியம்மனுடைய திருமணம் சம்பந்தமானவொரு நினைப்பாகும்.

கோயிலுக்குப் புதிர் காவிக் கொடுத்த பின்னரே மக்கள் தமது விளைவினை உண்பது வழக்கமாகி உள்ளது. புதிர்க் கோட்டை (நெல் அல்லது அரிசி என்பன) பழம், தயிர்ப்பானை என்பன சேர்த்துக்காவிக் கொண்டு வருதல் வழக்கம். இப்புதிர்காவும் காலங்களில் கோவில் பட்டறை புது நெல்லால் நிரம்பி வழியும் என்பர்.

சித்தாண்டியை விட, செங்கலடியில் பொன்னையா வன்னியனார் குடும்பம், நாட்டூர் (கிரானில் ஓர் பகுதி) காரருக்கு ஒவ்வொரு திருவிழாவும் உண்டு. நாட்டூரார் தற்போது களுவாஞ்சிக்குடி, முத்தகல், காரைதீவு என்னும் ஊர்களில் குடியேறியுள்ளார்களாதலால் அவ்வூர்களிலிருந்தும் பிரதி நிதிகள் திருவிழாக் காலங்களில் கலந்து கொள்வர். முறக்கொட்டான் சேனை திரு. கந்தையா குடும்பம் ஒரு திருவிழாச் செய்து வந்து, தற்போது அவர் மறைந்த பின்னர் கோயிலே அதனைச் செய்து வருகின்றது. இவ்வாறு வந்தாறுமூலை ஒரு பகுதியார் ஒரு திருவிழாவினைச் செய்து வருகின்றனர். தற்காலம் கோவிலுக்கு வடபுறத்தில் உள்ள வாவித் துறையில் தீர்த்தமாடப்படும் இடத்தில், மண்டபம் ஒன்று உண்டு. சுவாமி தீர்த்தமாடச் செல்வது என்றாலும் வேல் மாத்திரமே தீர்த்தமாடுதற்குரியதாயுள்ளது.

கோபுரப்புனர் அமைப்பு ஆலயப் பணத்தில் சுமார் 1956 ம் ஆண்டில் இடம் பெற்றது. இக் கோபுரம் மட்டக்களப்பு நாட்டிலேயுள்ள வேறு கோவில்களுக்கு இல்லாதவாறு மிகச் சிறந்த தொன்றாய் இருக்கிறது. அக் கோபுரத்தில் ஏழு தளங்கள் அமைந்துள்ளன. முருகனுடைய திருவிளையாடல்கள் அனைத்தும் இங்கு உருவங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் சிறப்பைப் பார்க்க மட்டக்களப்புக்கு வருவோர் யாவரும் வந்து செல்வது வழக்கம்.

தினமும் மூன்று வேளை பூசனை நடைபெறுவதாக உள்ள இக் கோவில் தற்போது ''சிற்றாண்டிக் கந்தசுவாமி கோவில்'' என்ற வழங்கப் படுகின்றது. சித்திரவேலாயுதர் என்ற சொல் கந்த சுவாமியாக மாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளமையை இங்கே நோக்கலாகும். கந்த சுவாமி கோவிலின் வெளிப்புறத்தே அம்பலத்தடி பிள்ளையார் கோவிலும், வள்ளிநாச்சியார் கோவிலும், தெய்வானை அம்மன் கோவிலும், குமாரத்தன் கோவிலும் உண்டு. குமாரத்தன் கோவிலில் பெரியகோவில் தீர்த்தத்தின் பின், ஆறுகள் நாட்களுக்கு சடங்கு நடைபெறும். தெய்வம் ஆடல், கட்டுச் சொல்லுதல் என்பன இங்கு உண்டு. நோற்புச் சோறு, கறி என்பன சமைக்கப்பட்டு இலையால் மூடியபடியே இங்கு தெய்வத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. தெய்வம் ஆடித் திரிந்து குறை நிறை சொல்லும் வரலாறு, முக்கியமாக கட்டுச் சொல்லல் கவனிக்கப்படும். முக்கியமான நன்மை தீமைகளுக்கு அறிகுறியாகக் கொள்ளப்படும் இக்கட்டுச் சொல்லப்படும் வழக்கமும், அதனைக் கேட்கும் வழக்கமும் மிகப் பயபக்தியாக நடைபெறுதலுண்டு.

சைவ சமய விழாக்கள் யாவும் இச் சைவ ஆலயத்தார் தலைமையில் நடத்தற்கு இதன் பக்கத்திலுள்ள சைவப்பாடசாலையும் அனுசரணையாகும். மார்கழி மாதத்தில் நடைபெறும் திருவெம்பாப் பூசையும் அதன் போது 3 ம் நாள் முதல் தொடர்ந்து நடைபெறும் 6 நாட் திருவிழாக்களும் மிகச் சிறப்பாகவும், ''அம்மை திருவிழா'' என்னும் பெயரோடு இங்கு நடைபெறுதல் ஒரு விசேட அம்சமாகும். இறுதி நாள் அன்று வீதி முழுவதும் வாழைக்குலை, உரொட்டி என்பன கட்டித் தூக்கி அலங்கரிக்கப்படும். பூசையின் பின்னர் பக்தர்கள் இவற்றிற்குப் பாய்ந்து, அடித்து பிடுங்கி மகிழ்வது சிறப்பாக இருக்கும்.

மழையில்லாத காலத்தில் கொம்பு முறித்தல் இங்கே நடைபெறும். கொம்புக்குரிய சேரி தந்தை வழியிலேசார்வது மட்டக்களப்பு எங்குமுண்டு. கொம்பு வம்மியடியில், செவ்வாய்க்குத்தி, தரித்து வந்த பின்னர் கொம்பு விழா ஆரம்பமாகும். இதற்கெனச் சிறப்பாகப் பூசனை ஒன்று நடைபெறும். கொம்பு விழாக்காலம் சிறந்த கலை துளும்பும் ஒன்றாகக் காட்சி கொடுப்பதாக இருக்கும்.

கோவில் ஆதனங்கள் நெற் காணி முந்நூறு ஏக்கர் அளவில் கொண்டதாக உண்டு. இது பண்டைய மன்னர்களாலும், பிற்காலத்துப் புலவர்களாலும் மானியமாக வழங்கப்பட்டது. இதை விடக் குருக்கள் பட்டி என்ற வயல் சுமார் பத்து ஏக்கர் அளவுடையதாக உண்டு. ஆதி நாளிலிருந்து இந்த பத்து ஏக்கர் காணியும் குருக்களுக்காகச் செய்யப் பெற்று அதன் வரும்படி கூட கோயில் குருக்கள் பேரிலேயே வரவு வைக்கப்பட்டபடியால் இந்தக் காணிக்கு இப் பெயர் ஏற்பட்டு விட்டது. கோவில்விழா நாட்களில் மேளக்காசு என்னும் வரிப்பணம் அத்தியா குடியார் மட்டும் கட்டுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அவரின் முன்னோர் உப்போடை என்ற ஒரு காணியை இதற்காக மானியம் செய்தமை இதற்குக் காரணமாகும். கோவில் வளவுகளில் கோயிலுக்காகத் திருத்தொண்டு புரிவோர் குடியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கோவில் வருடம் ஒன்றுக்குச் சுமார் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத வருமானமுடையது. இந்நிதியெல்லாம் வங்கியிலிடப் பெற்று குறித்த வண்ணக்குமார் மூவரும் வேண்டியபோது ஒற்றுமையாக எடுத்து நிருவகித்து வருகிறார்கள். இதனால் கோவில் சொத்துக்கள் நிரம்பியும் மக்களிடைப் பின்னம் வராமல் ஒற்றுமை நிலவுவதற்கு இக்கோயிலும், ஊருமே மட்டக்களப்பு முழுவதற்கும் எடுத்துக் காட்டாக உள்ளது.

பூசகர் பரம்பரை சைவக் குருக்களான குருநாத வம்சத்தார் என்பவர்களிடை இருந்தது. இவர்கள் வீரசைவக் குருமாரே என்று தெரிகின்றது. இக் குடியார் பண்டிருந்தே குறைபாடு இன்றிக் கோயிற் பூசனையைச்செய்து வந்தமை தெரிகின்றது. இப்பரம்பரையில் பின்னர்க் குறைவு ஏற்படுதல் காரணமாகப் போலும் 1975 ம் ஆண்டு முதல் பிராமணரை அழைத்து பூசனை நடாத்தப்பட்டு வருகின்றது. கோயில் குடியார் எனப்படும் கோயிலார் என்னும் புனித மக்கள் கோயில் தொண்டுகளைத் தவறாது செய்து, அதற்கென ஒதுக்கப்பட்ட மானியங்களைக் கொள்கின்றார்கள். கார்த்திகை ஆண்டுப் படி என்பது கார்த்திகை மாதத்துத் திருவிழாவுக்கு முன்னர் வன்னியனார் முதல் சகலருக்கும் வழங்கப்படும்.

கோயிலின் மூலமூர்த்தி வேலாயுதமாகும். இது ஆதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இடம் பெயர்க்கவும், முடியாதது. பின்பு செய்யப்பட்ட வேலாயுதங்கள் இரண்டு இதன் பக்கத்தில் உள்ளன.

கோயிலைப் பற்றிய தல புராண நூலொன்று அண்மையில் ஆரப்பற்றை அழகேச முதலி என்பவரால் சித்தாண்டித் தல புராணம் என்னும் மகுடமிட்டு பாடப்பட்டுள்ளது. இதைவிட தனிப் பிரார்த்தனைப் பாடல்கள் திருவாளர், பிள்ளையான் சிவலிங்கம், திருவாளர் பணிக்கன் - மயில் வாகனம் என்போர் இயற்றியுள்ளார்கள். பட்டயம் என்று வழங்கப்படும் தலைப்பற்று ஓலையிலான ஏடு ஒன்று, இக்கோயிலின் பண்டைய வரலாற்றுக் குறிப்புகள் மானியங்கள், நடைமுறைகள் பற்றி உள்ளது. இதனைக் கொண்டு இக் கோயிலின் வரலாறு முதலியவற்றை ஓரளவு தெரியக் கூடியதாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (4) வது இயல்: திருப்படைக் கோவில்கள்

## 5. வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி கோவில்

கிழக்கிலங்கையின் சின்னக்கதிர்காமம் என்று சொல்லப்படுவது மண்டூர் என்று முதற் கண்டோம். இன்னும் ஓரிடம் இப்பக்திப் பெயரால் வழங்கப்படுகின்றது. அவ்வாறான சின்னக் கதிர்காமம் எனப்பெறும் வெருகலம் பதியிலுள்ள சித்திரவேலாயுத சுவாமி ஆலயமானது மிக்க பழமையும், பெருமையும், புனிதமும் பெற்று விளங்குகின்றது. இவ்வா லயம் வயல் வெளிகளுக்கு மத்தியில் கங்கையின் ஒரு கிளையாகிய வெருகல் ஆற்றின் ஓரத்தில் மருது, புளி முதலான மரச் சோலையின் எழில் மிகு ஓரத்தில் இயைந்து விளங்குகின்றது. ஆலயத்தைச் சூழவுள்ள அழகும், குளிர்ச்சியும் வாய்ந்த பச்சைப்பசேலென்னும் காட்சி காண் போரை அள்ளும் தன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் எதிரே தாமரைத் தடாகம் ஒன்று பொலிந்து விளங்குகிறது. அது இன்னுமோர் அழகினைக் கூட்டும் தன்மை வாய்ந்ததாகும். கதிர்காமத்தை அடுத்து மாணிக்க கங்கை பாய்ந்து ஓடுவது போல வெருகலம்பதி ஆலயத்துக்கு அருகாமையில் வெருகல் கங்கை பாய்ந்து ஓடுகின்றது. பழமை முதலான சிறப்புகளோடு அமைதியும், சமத்துவமும் நிலவும் இத்திருத்தலத்தில் தமிழ்க் குமரனாகிய முருகன் வேலோடு வள்ளி தெய்வானை சகிதம் கொலுவீற்றிருந்து தன்னை நாடிவரும் அடியார்க்கெல்லாம் அருள் மாரி வழங்குகின்றான்.

வெருகல் கங்கைத் தீரத்திலே இருப்பதால் இவ்வூருக்கும் வெருகலம் பதி என்று பெயராயிற்று. மட்டக்களப்பின் வடபால் எல்லையில் வெருகல் கங்கை பாய்ந்து ஓடுகின்றது. இக் கங்கையை இயந்திரப்படகின் மூலம் கடந்து சென்றால் வருவது வெருகலம்பதி எனப்படும் கோவில். இது மட்டக்களப்பு எல்லைக்கு வடக்கே உள்ளதாயினும் தெற்கே உள்ள உகந்த மலை போன்று வடபால் மட்டக்களப்புக்கு காவலாக உள்ளது எனப்படு வது. இதன் இருப்பிடம் திருகோணமலைப் பகுதியையே சேர்ந்ததாகும். தென் புறம் வெருகல் கங்கையையும் மற்றைய புறமெல்லாம் வயற்பரப்பு களையும் எல்லையாகக் கொண்டுள்ளது. இறைவன் படைப்பில் மனிதர்கள் அனைவரும் சமன் என்பதைச் சுட்டிக் காட்டவும் கதிர்காமத்தில் சாதி சமயம் கடந்து அனைவரும் ஒன்று கூடுதல் போல, திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களும் மட்டக்களப்பு மக்களும் தம்முட்கலந்து கூடி வணங்கப் பெறுவது வெருகலம்பதி.

தீராத நோய்க்கும் மருந்தாக அமைந்த அருட் குமரனின் வெருகலம் -பதி வாயிலை அடைந்தாலே பிணியாவும் நீங்கும் என்பர். பக்தர்களின் பிணிமட்டுமன்றி, துன்பம் எத்தகையதாக இருப்பினும் அதுவும் கூட நீங்கும். வெருகலம் பதியில் முருகப் பெருமானது சித்திர வேலாயுதமானது தானாக எழுந்தருளியதாகக் கூறப்படுகிறது. இது பற்றிப்பின்வரும் ஐதீகக் கதை ஒன்றும் இங்கு உலாவுகின்றது.

இந்தியாவில் திருநெல்வேலியிலிருந்து திருகோணமலைக்கு வந்து வியாபாரம் செய்த நல்லை நாத செட்டியார் என்பவர் குஷ்ட நோயினால் மிகத் துன்பப்பட்டார். அங்கிருந்து கால்நடையாகக் கதிர்காமத்துக்கு சென்றால் அந்நோய் நீங்கும் என்று வந்த செட்டியார் வழிநடையின் போது ஓர் இரவு வெருகலம்பதியில் தங்கலானார். அன்றிரவு முருகக் கடவுள் இவருக்கு சொர்ப்பனத்தில் தோன்றி ''நீர் இவ்விடத்தில் எமக்கு ஒரு நிலையான ஆலயத்தைக் கட்டி முடிக்கக்கடவாய்'' என்று கூற ஏழையாகிய நான் இத் திருப்பணியைச் செய்வது எவ்வாறு என மனங்கலங்கி நின்று முருகனை செட்டியார் வழிப்பட்டார் என்றும் அறிகின்றோம்.

மறுநாள் இரவு முருகப் பெருமான் அவருடைய சொர்ப்பனத்தில் தோன்றி ''இவ்விடத்திலிருந்து ஒன்பது மைல் தூரத்திலுள்ள அரிப்பு என்னும் இடத்தில் ஒரு புற்றினுள் திரவியங்கிடாரங்கள் புதைந்துள்ளன. அவற்றை நீர் எடுத்து இவ்வாலயத் திருப்பணியைச் செய்து முடிக்கக்கட வாய்'' எனக் கூறி மறைந்து விட்டார். இதன்படி செட்டியார் ஆலயத்திருப் பணியை முடித்து அவ்வாலயத்துள் முருகனையும், வள்ளி நாச்சியார், தெய்வானை அம்மன் என்போரையும் பிரதிஷ்டை செய்து கோயில் கும்பாபிஷேகமும் செய்து நித்திய நைமித்திய கருமங்களையும் குறைவின் றிச் செய்வித்து நடாத்தி வந்தார். அதன் பின்னர் நோய் நீங்கப்பெற்று செட்டியாரும் புளகாங்கிதம் அடையலாயினார்.

இதன் பின்னர் செட்டியார் இவ்வாலயத்தை அடுத்துள்ள ஈச்சிலம்பத் தையில் வாழும் சிந்து நாட்டார் எனப்படும் திமிலர் பரம்பரையினரிடம் ஒப்படைத்து ஆலய கருமங்கள் குறைவற நடக்கச் செய்வித்து திருகோண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை சென்றார் என்பர். காலத்துக்குக் காலம் நிருவாகத்தில் மாற்றங்களும் கட்டட அமைப்புக்களில் மேலும் பல சிறப்புக்களும் செய்து வரப்பட் டுள்ளன.

வெருகலம்பதியின் வருடாந்த உற்சவம் ஆவணித் திங்கள் உத்தரட் டாதி நட்சத்திரத்திலன்று ஆரம்பமாகி 18 நாளைக்குத் திருவிழா நடந்து 19 ம் நாட்காலை தீர்த்தோற்சவத்துடன் முடிவுறும். விழா ஆரம்பமாகி 6 நாட்களும் பிள்ளையாரும் உடன் அத்திரத் தேவரும் உள் வீதி மட்டுமே வலம் வருவர். 7 ம் நாள் சந்தி தோறும் காவல் செய்து வெளிவீதிக்கு சுவாமி வலம் வருவார். 9 ம் நாள் அன்று சித்திரவேலாயுத சுவாமி கேடகத்துள் எழுந்தருளி வருவார். 13ம் நாள் கதிர்காம சுவாமி வீதி வலம் வருவார். அப்படி வரும் போது இயந்திரம் ஒன்று பெட்டியில் அடைக்கப் பட்டு எவரும் காணமுடியாதபடி திரை மறைவில் கொண்டுவந்து வைக்கப்படும். யானை போலச் செய்யப்பட்ட அலங்காரத்தண்டிகை மேலே மறைபொருளாகிய இயந்திரத்தை குருக்கள் கொண்டு வந்து வைத்ததும் வீதிவலம் ஆரம்பமாகும்.

கதிர்காம சுவாமி வீதிவலம் வந்ததும், நாள்தோறும் சித்திர வேலாயுத சுவாமி வள்ளி தெய்வானை சமேதராய் 18 ம் திருவிழா முடியும் வரை வெளி வீதிவலம் வருவார். 18 ம் தினம் சூரன் வேட்டையாட சித்திர வேலாயுத சுவாமி சென்று வந்த பின்னர் அப்போது நடைபெறும் பூசனை நடைபெறும். தூது செல்லும் வைபவம் பார்ப்பவர்க்கு பக்தியை ஊட்டு வதாய் பல துறைப்பட்டு இயங்குவதால் பத்திப்பரவசம் கூட்டுவதாய் இருக்கும். இதைத் தொடர்ந்து அதிகாலையில் தீக்குளிப்பு வைபவம் நடைபெறும். தீக்குளிப்பு வைபவத்தில் பல பக்தர்கள் பங்கு கொள் வார்கள். அதை அடுத்து மதியவேளையில் சுவாமி வெருகல் கங்கையில் தீர்த்தம் ஆடுவதற்காகச் செல்வார். அங்கு திரை மறைவில் இயந்திரப் பெட் டியை யானை போலச் செய்யப்பட்ட தண்டிகையின் மீது எடுத்துச் செல்வார்.

அச்சமயம் தீர்த்தம் ஆடுவதற்காக அங்கே சென்றிருக்கும் மக்களின் அரோகராச் சத்தம் வானைப் பிளக்கும். வெருகல் கங்கை எங்கும் பக்தர்களின் தலைகளே நிறைந்து காணப்படும். தீர்த்தம் ஆடும் காலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பெருக்கு நிலவழுக்கல் முதலியவற்றால் யாரும் அள்ளுண்டு போனது கிடையாது. தீர்த்தோற்சவத்தைத் தொடர்ந்து அன்று இரவு சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறும்.

பின், அன்றிரவு வண்ணமலர்களால் அலங்கரிக்கப்பட்ட நந்தவனத்தில் வள்ளி, தெய்வானை மணாளனாய சித்திரவேல் பெருமானை இருத்தி ஊஞ்சலில் ஆட்டுவதோடு திருவிழா உற்சவம் முடிவு பெறும். மற்றைய கந்தசுவாமி கோயில்களைப் போல எல்லா சமய விழாக்களும் இங்கு நடைபெறும். இவ்வாலயத்தில் தினம் மூன்று வேளை பூசை நடப்பது நியதி. எனினும் மத்தியானப் பூசையே மிகவும் விசேடமாகக் கருதப்படுகின்றது. புதிர் விளையும் நாட்களில் இங்கு பொங்கல் செய்து சுவாமிக்குப் படைத்து அனைவரும் கொண்டாடுதல் வழக்கமாக இருக்கின்றது.

இக் கோயில் தருமகர்த்தா சபையில், திருக்கோணமலை முதல் வெருகலம்பதி வரை உள்ளோர் பங்கு கொள்ளுகின்றார்கள். மட்டக்களப்புப் பகுதியிலிருந்தும் வாழைச்சேனை, வந்தாறுமூலை, கிரான் முதலிய கிராமத்தவர்கள் பங்குகொள்ள, இக்கோயில் நிருவாகம் வண்ணக்கர் தலைமையில் தற்போது இங்கு நடைபெற்று வருகின்றது. சில காலத்துக்கு முன்னர் இருந்த கோட்டு வழக்குகள் எல்லாம் முடிந்து தற்போது சீரான நிலைக்கு இக்கோயில் வளர்ந்து வருவது மட்டக்களப்பு நாடும் திருக்கோணமலையும் செய்த தவப்பேறே எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (5) வது இயல் : பிள்ளையார் கோவில்கள்

### *1. புளியந்தீவு ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவில்*

மட்டக்களப்புத் திருநாட்டின் தலைப்பட்டினமும் இங்கு மட்டக்களப்பு என்றே வழங்கப்பெறுகிறது. இந்நகர்ப்பகுதியை மட்டும் குறிக்கும் போது மட்டுநகர் எனக் கூறுவதுமுண்டு. மட்டக்களப்பின் தலைநகரம் ஆதியில் மட்டக்களப்பு நாட்டின் தென்கோடியிலே இருந்துள்ளது. போர்த்துக்கீசர் காலத்தின் பின், சிறப்பாக ஒல்லாந்தர் காலம் முதலாகவே மட்டக்களப்பு நகரம் நாட்டின் வட பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு புளியந்தீவில் அமைந் திருக்கிறது. நகர எல்லை விரிவடைய வேண்டி வந்த போது கோட்டை முனைப்பகுதியும் உடன் சேர்க்கப்பட்டுள்ளது. புளியந்தீவு என்னும் பழந்தீவின் பெயர்க்காரணத்தையும் இதன் அமைப்பையும் பற்றி நாம் முதலில் அறிந்து கொள்ளுதல் அவசியமானதால் அவை பற்றி யாழ் நூலா சிரியர் கூறுவதை இங்கு தருவதற்கு விரும்புகின்றேன். இக் கட்டுரைக்கு சிறப்பாகவும் இந்நூல் முழுவதற்கும் பொதுவாகவும் பயன்படுவதாக இருக்கும் அப்பகுதியை முதலில் கீழே காண்போம்:-

''மட்டக்களப்பிலே 30 மைல் நீண்ட வாவி ஒன்றுள்ளது. இது கடலோடு கலக்கும் வடகோடி அமிர்தகழி என்னும் புண்ணியப் பழம்ப திக்கு அண்மையானது. அழகிய மேற்குக் கரையிலே மண்டூர் என்னும் புண்ணியப் பழம்பதி உளது. வாவியின் மேற்குக் கரைமுழுதும் மருதத் தண்பணை ஆகும். கிழக்குக் கரையிலுள்ள ஊர்கள் தெங்கு, மா, பலா முதலிய மரங்கள் செறிந்து கண்ணுக்கும் மனத்துக்கும் உவகை தருவன. புலியன் என்னும் வேடர் குலத் தலைவன் அரச புரிந்த இடமாதலால் முன்னாளில் ''புலியந்தீவு'' என வழங்கப் பெற்றதும் இந்நாளிலே மொழிச் சிதைவினாலே ''புளியந்தீவு'' என வழங்கப்படுவதும் மூன்று மைல் சுற்றளவுடையதுமான அழகிய நகரம் ஒன்று காவிரி நடுவணமைந்த திருவரங்கம் போல மட்டக்களப்பு வாவியின் நடுவணமைந்துள்ளது. இந் நகர் மட்டக்களப்புப் பிரிவிற்குத் தலைநகராகும்.'' என்பது யாழ் நூலாசிரி யர் கூற்று.

இலங்கையின் பூர்வீகக் குடிகளுள் புளிந்தர் என்ற ஒரு சாதியாரும் இருந்ததாக மகாவம்சம் கூறுதல் அடிகளார் கூற்றுக்கு ஆதாரமாகவுமிருக் கிறது. எனினும் ''மட்டக்களப்புத் தமிழகத்தின் ஊர்ப்பெயர்களுட் பல இங்குள்ள மரம், காடு, முனை, குளம் முதலான இயற்கைப் பொருள்க ளோடு ஒட்டியனவாகவே காணப்படுவதால், புளிமரங்கள் நிறைந்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீவும் இம்மரப்பெயரின் தொடர்பினாலேயே ''புளியந்தீவு'' எனப் பெயர் பெற்றிருக்குமென்பதே பொருத்தமாகும் என்று இன்னொரு காரணமும் கூறலாகும். மிகப்பழமையான புளியமரங்கள் பல அண்மைக் காலம் வரை புளியந்தீவிற் காணப்பெற்றமை இக்கருத்தை வலியு றுத்துவதெனலாம். எனவே, அழகிய அமைப்பினைக் கொண்ட பழமை யான புளியந்தீவகத்தின் நடுப்பகுதியிலே வேடர்கள் வாழ்ந்த காலத்தி லிருந்து ''சாமி'' கோவிலொன்று இருந்ததென்று அறிகின்றோம். அதுவே பின்னர் ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவில் என இன்று வழங்கப்பெறும் புளியந்தீவுச் சித்திவிக்கினேஸ்வரர் கோயிலாக வளர்ந்து வந்திருக்கிறது என்று வழங்கும் ஐதிகத்துக்கு ஒரு பொருத்தம் இருப்பதைக் காணலாம்.

புளியந்தீவின் மத்திய பகுதியை நோக்கி, தீவின் எல்லாப்பகுதிகளிலி ருந்தும் நிலம் உயர்ந்து சென்று முடிவில் சிறிய ஒரு சமதரையாக அமைந்திருக்கிறது. இப்பகுதியே ''ஆனைப்பந்தி'' என்ற பெயரால் வழங்குகிறது. இதன் தென்பகுதியும் கிழக்குப் பகுதியும் கல்லடித் தெரு என்றும், மேற்குப்பகுதி, ஆயித்தியன்காடு என்றும், வடமேற்குப் பகுதி சிங்களவாடி என்றும், வடகிழக்குப்பகுதி வெட்டவளவு என்றும் முன்னா ளிலிருந்து எல்லைப்பெயர் பெற்றிருக்கின்றன. பெருவெள்ளம் ஏற்பட்ட காலங்களில் தீவினையடுத்த காடுகளில் வாழ்ந்தயானைக் கூட்டங்கள் உயர்ந்த மேடாக இருந்த இந்தப் பகுதிக்குப் பந்தி பந்தியாக (நிரைநிரை யாக, அல்லது கூட்டங் கூட்டமாக) வந்து தங்கித் தப்பிப்பிழைத்த வழக்கம் இருந்ததால் இப்பகுதி ஆனைப்பந்தி என்று பெயர் பெற்றது என்பர்.

யானைக் கூட்டம் யாவும் இங்கிருந்து சிறு பந்தராலமைந்த கோவி லுக்கு எவ்வித ஊறுமே செய்யாது கோவிலைச் சுற்றிப் பாதுகாப்பா ளர்போலத் தங்கி நின்று வணங்கிச் சென்றமையால் வேடர் பூசை செய்த ''சாமி'' ஆனைமுகக்கடவுளான பிள்ளையாராகவே இருத்தல் வேண்டு மென்று கருதிய மக்கள் அவ்வாறான வழிபாட்டுத்தலமாகவே காலப்போக் கில் இதனை ஆக்கினர் என்றும் தெரிகிறது. ஆனைப்பந்திப் பிள்ளையார் அடியவர்களுக்கு மிக எளிமையாகக் காட்சியும், திருவருளும், வேண்டும் வரமும் அளிப்பவரென்று பிரபலம் பெற்றவர். ஆகமவிதிகளுக்கமையாத கோவிலுள், குறி எதுவும் தோற்றாத ''கல்'' வடிவாகவே இருந்த ''சாமியார்'' சைவ மதக் கொள்கைக்கு ஏற்ற தன்மையான விநாயகராகவே காணப்பட்டார். விநாயகக்கடவுளே பிள்ளையார் என்றும் விக்கினேஸ்வரர் என்றும் குறிப்பிடப்படுவர். முறைப்படி அமைந்த தேவாலயத்திலே வைத்துத்தான் வணக்கம் செய்யப் பெற வேண்டும் என்ற நியதி இவருக் கில்லை. நாற்சந்தி, மரநிழல், குளத்தங்கரை, ஆற்றோரம் முதலான எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமாயினும் பிள்ளையார் சைவக் கிராமங்களில் வைத்துக் கும்பிடப் பெறுவர். அவருடைய திருவுருவம், எந்தத் தோற்ற வெளிப்பாடும், இல்லாத வெறும் கல்லாக இருத்தலும் கூடும். இவருக்குப் படைக்கப்பெறும் நிவேதனம் எதுவும் உயர்ந்த பொருளாக இருக்க வேண்டிய அவசிய மில்லை. அவல், கடலை மரவள்ளிக்கிழங்கு, பனங்கிழங்கு, மோதகம், வாழை, பலாப்பழம், எள்ளுப்பொரி, கரும்பு முதலான உணவு வகையே பிள்ளையாருக்கு நிவேதித்தற்குப் போதுமானதாகக் கருதப்படுகிறது.

தோன்றலும் முடிவுமில்லாத பரம்பொருளை தோற்றமும் மறைவும் உடையதுபோலக் கற்பித்தல் சைவசமயப் புராணமரபு. அவ்வாறு விநாய கருக்கும் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. கைலாயத்திலுள்ள பூஞ்சோலைச் சித்திர மண்டபத்தில் ஓம் என்னும் பிரணவத்தை விளக்கும் பொருட்டு ஆணும் பெண்ணுமான இரண்டு யானைகள் சித்திரிக்கப்பட்டிருந்தன. அதனைக் கண்ட அம்மையார் திருநோக்கம் பட்டவுடன் அவை உயிர் பெற்றுக் கூடின என்றும், அப்பொழுது விநாயகமூர்த்தி தோன்றினா ரென்றும் புராணங்கள் கூறுகின்றன. அவரைக் கண்டு அம்மையும் அப்பனும் வியந்து, நீயே மூத்தபிள்ளையாவாய் என்றும் உன்னையே முதலில் நினைத்து அனைவரும் தம்தொழிலை இயற்ற வேண்டும் என்றும் அவர்களுடைய விக்கினங்களை நீக்கி ஆள்பவனாய் நீ இருக்க வேண்டிய படியால் நீயே விக்கினேஸ்வரன் என்றும் ஆசீர்வதித்து, கஜமுகா சூரனைக் கொன்று தேவர்களைக் காத்து இயற்கையை நிலைநிறுத்துவாயாக என்றும் கூறிச்சென்றனர். இது ஒருவகையான கதையாக வழங்குகிறது. மூத்தபிள் ளையார் முதல் பல பெயர்களைக் கொண்ட விநாயகர் தங்கியிருப்பதற்கு உயர்ந்த கோபுரம் முதல் எதுவும் வேண்டியதில்லை என்றும் இவருக்கு நைவேத்தியங்கள் சமைத்து வைக்கப் பெரிய மடைப்பள்ளிகள் வேண்டிய தில்லை என்றும் கண்டோம். அப்படியிருந்தும் ஆனைப்பந்தி விநாயகப் பெருமானுக்கு என்று தனியாக ஒரு தேவாலயம் நகர் நடுவே அமைக்கப் பட்டு விளங்குகின்றது.

புளியந்தீவின் மத்தியில் வெள்ளப்பெருக்குகளால் சேதம் அடைய முடியாத உயர்ந்த சமபூமியில் சதுரமுடைய அகன்ற அழகான வீதியின் நடுவில் விக்கினேஸ்வரப்பெருமான் ஆலயம் அமைவதாயிற்று. கல்லைக் கண்ட இடமெல்லாம் கடவுள் என்று கும்பிடுகின்ற மனித மூர்த்திக்குரிய அங்க அமைப்புக்களில்லாத சிலையினை திருவுருவ மூர்த்தியாக அமைத்து அதன் பழமையான வழிபாட்டு முறையை, நம்பிக்கையாக விடாது பற்றி வணங்கி வந்தார்கள். பின் வந்தோர் இச்சிலைகளை என்ன செய்தார்கள் என்று சொல்வதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் செல்லச் செல்ல புளிய நகரில் சைவ மக்கள் மிகுதியாகக் குடியேற ஆரம்பித்தனர். அப்படிக் குடியேறிய சைவ மக்களில் ஒரு அம்மையார், சோலைக்காடாயிருந்த கோவிலடியில் குடியிருந்தாரென்றும், அவரே தனது வழிபாட்டிற்கு கல்லால் பிள்ளையார் செய்வித்து தோடைமரத்தடியில் வைத்து வணங்கி வந்தாரென்றும் அந்தப் பிள்ளை யாரே ஆரம்பத்தில் ஆனைப்பந்தியில் இருந்த பிள்ளையார் என்றும் பின்னர் குடியேறிய மக்கள் கோவிலமைத்த காலத்தில் இந்தியாவிலிருந்து எடுப்பித்து நிலை நாட்டிய பிள்ளையாரே இப்பொழுதிருக்கும் பிள்ளை யாரென்றும் கூறுபவர்களும் இருக்கிறார்கள்.

காடாயிருந்த காலத்தில் பந்திபந்தியாய் யானைகள் தங்கி இங்கு வசித்தபடியாலும், பெருவெள்ளம் ஒன்று வந்து எல்லா இடங்களையும் மூடிக்கொள்ள இந்த இடம் மாத்திரம் தனது நிலத்துயர்ச்சி காரணமாகத் தப்பியிருக்க, யானைகள் அங்கு பந்திபந்தியாய் நின்ற காரணத்தினால் இக் கோயில் ஆனைப்பந்தி பிள்ளையார் கோயில் எனப் பெயர் பெறலாயிற்று. இந்த ஆனைப்பந்தியில் அமைந்திருந்த ஓலைக் குடிசை ஒருபோது எரிந்து போக, ஒருவாறு பணம் சேகரித்து மக்கள் கற்கோயிலொன்றைக் கட்டி சைவ ஆறுமுகத்தார் என்பவரைப் பூசகராக நியமித்தனர். அதன் பின்னர் ஆகம விதிப்படி கோயில் அமைத்துப் பூசையும் செய்விக்க வேண்டி யாழ்ப்பாணத்திலிருந்து திரு. கோபால ஐயர் என்பவரை அழைப்பித்துப் பூசை செய்ய அமர்த்தினர். அவருடைய முயற்சியால் கோவில் கற்றூண் களால் அமைந்த பெருங் கோயிலாயிற்று. பின்னர் திரு.க. முத்தையா என்னும் சமாதான நீதவான் தனது செல்வாக்கினாலும், ஊக்கம், உறு துணை என்பவற்றினாலும் இக்கோயிலை இன்றைய நிலைக்கு சுற்று மதிலும், கொடித்தம்பமும் ஆக்குவித்து கும்பாபிஷேகம் செய்வித்து குருக்கள், உதவி அர்ச்சகர்கள், கணக்குப்பிள்ளை, பரிசாரகர், கூலிக்காரன், மேளகாரன் இவர்களைச் சம்பளத்துக்கு நியமித்து, கோயிலைச் செவ்வனே நடத்தி வந்தனர். அப்பால் திரு. ஈ. ஜே. வேலுப்பிள்ளை ஓவசியர், திருமதி அன்னம்மை, திரு. மு. கனகசிங்கம், திரு. வைரவமூர்த்தி, தி.க. துரையப்பா என்போரால் வேறு வேறு ஆலயத்திருப்பணிகள் செய்யப் பட்டன. பின்னர், மட்டக்களப்பு இந்துமகளிர் மன்றத்தினரால் மனோன்மணி அம்பாள் திருவுருவச்சிலையும், மேற்படி மன்றத்தலை வியார் திருமதி கு. வள்ளியம்மை அவர்களால் மாணிக்கவாசகர் விக்கிரகமும் சண்டேசர் விக்கிரகமும், திருமதி அ. செல்லத்தங்கம், என்பவரால் அவரது மகன் சிவநாயகம் என்பவரின் பேரில் அளித்த பழனியாண்டவர் திருவுருவச்சிலையும் திரு.சி. சிவகுரு என்பவரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப்பட்ட நடேசர் திருவுருவச் சிலையும் இவ்வாலய மண்டபத்தை அலங்காரம் செய்து பூசனைக்குப் பயன்பட உதவின. தொடர்ந்து ஆலயப்பணி வளர்ந்து வரலாயிற்று. 1969 ம் ஆண்டு வித்துவான், சைவப்புலவர் கா. அருணாசல தேசிகமணி அவர்களால் கோயில் மண்டபத்தில் வலப்புறமாக சிவலிங்க அமைப்புக் கோயிலும், இடப்புற மாகப் பார்வதி அம்மன் கோயிலும் அமைக்கப்படலாயின.

இக்கோயிலில் தினமும் மூன்று வேளைப் பூசையும், அதிலும் வெள்ளிக்கிழமைப் பூசை சிறப்பாகவும் நடைபெறுகின்றது. ஒவ்வொரு மாசமும் சதுர்த்தி அன்று விசேட ஆராதனைகளும் திருவிழாவும் நிகழும். மாசந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்திலன்று முருகப் பெருமானுக்கும், பூரணைதோறும் அம்பாளுக்கும் அலங்கார பூசைகள் நடக்கின்றன. சித்திரா பூரணைக்குப் பத்துநாள் முன்பதாக கொடியேறி வருடாந்த உற்சவம் மிகச் சிறப்பாக நடக்கும். பூரணைக்கு முதல் நாள் திருவேட்டைத்திருவிழா எனப்படும். அன்று சுவாமி, திரெளபதி அம்மன் கோயில் வீதிக்கு எழுந்தருளிச் செல்வர். அங்கு இத்திருவேட்டைத் திருவிழா நிகழ்வதைப் பல்லாயிரக் கணக்கானோர் பார்த்துப் பயன் பெறுவர். சித்திரா பூரணை யிலன்று சுவாமி, அமிர்தகழி மாமாங்கேச்சுரர் திருக்குளத்தில் தீர்த்தமாடக் காலையிற் சென்று மாலையில் மீள்வர். எம்பெருமான் திருவேட்டைக்கும், தீர்த்தத்துக்குமாக வெளியே வீதி வலம் வரும்போது, வீதி முழுவதும் அலங்கரிக்கப்பெற்று, வாயில் தோறும் பூரண கும்பங்களும், மக்களின் அரோகரா ஒலியும் நாட்டைப் புனிதப்படுத்துவதோடு; மனதையும் பரவசப் படுத்தும் தன்மை உடையனவாயிருப்பதை நன்கு உணரமுடிகின்றது.

ஆனி உத்தரத்தன்று அதிகாலையில் நடேசப் பெருமானுக்கு விசேட அபிஷேக பூசையும், அடுத்து வரும் வரலட்சுமி பூசையும், ஆவணி ஓணத்திலன்று, பிள்ளையாருக்கும், மனோன்மணி அம்பாளுக்கும் மணவாளக் கோலவிழாவும் நடைபெற்று வருகின்றன. கடந்த சூறாவளி யினாற் சிதைவுற்ற கோயிற் திருப்பணிகளை இப்போதுள்ள ஆலய பரிபாலன சபையார் திருத்திப் புதுக்கி அமைத்து 22.8.80 வெள்ளிக் கிழமை காலை மகா கும்பாபிஷேகமும் செய்வித்துள்ளனர். ஆதலால் அடுத்த ஆண்டு தொடக்கம் ஆனைப்பந்திப் பிள்ளையாருடைய மணவா ளக்கோல விழா வேறு நாளாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஆவணி ஓணத்தன்று மகாகும்பாபி ஷேகம் நடந்தது என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

புரட்டாதிச் சனிக்கிழமைகளில் சனீஸ்வரப் பெருமானுக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரி காலத்தில் முறையே துர்க்கை, இலட்சுமி,சரஸ்வதியாக அம்பாளுக்கும் விஷேட பூசனைகள் ஆற்றப் பெறுகின்றன. விஜயதச மியன்று நிகழும் மானம்புத் திருவிழா கார்த்திகை விளக்கீடு, கார்த்திகைச் சோமவாரங்களில் சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேக பூஜை வழிபாடு என்பன ஒழுங்காக நிகழ்கின்றன. கேதாரகௌரி விரதப் பூசை விசேடமாக நிகழும். பல ஊர்களிலுமிருந்து வரும் நூற்றுக்கணக்கான இவ்விரதகாரர், இப்பூசையில் பங்குகொண்டு, வழிபட்டுப் பயன்பெற்றுச் செல்வர். இங்கு அநுட்டிக்கப்பெறும் கந்தசஷ்டி, சூரன்போரும், விநாயக விரதமான (21 நாள் காப்புக்கிழமை) பெருங்கதைக் கிழமையும் குறிப்பிடத்தக்கவை. கந்தசஷ்டியின் போது சூரபத்மன் வதைப்படலப் புராணபடனமும், விநாயக விரதத்தின்போது பிள்ளையார் கதையும் படிக்கப் பெறுவதுண்டு. சிவகாமசுந்தரி சமேத நடேசப் பெருமானுக்குத் திருவாதிரைத் தீர்த்தத் தோடு முடிவுறும் திருவெம்பாவை காலப் பூசைகள் மக்களைப் பரவசப் படுத்தும் தன்மையன. திருவெம்பாவை காலத்தில் திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பயன் சொல்லப்பெறும். தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி நாட்களில் விசேட பூசைகள் மேற்கொள்ளப் பெற்றும் வருகின்றன.

இக்கோவில், ஒரு பஞ்சாயத்தின் அதிகாரத்தின் கீழ் நடை பெற்று வருகின்றது. பஞ்சாயத்தினர் தமக்குத் தலைவராக ஒரு வரைத் தெரிவு செய்து கொள்வர். பஞ்சாயக் கூட்டம் அனைத்திலும் செயலாளர் இருவரும், பொருளாளர் ஒருவரும் சேர்த்துக் கொள்ளப்படுதல் வழக்கம். அதனால் இப் பஞ்சாயம் என்பது எண்பெரும் குழுவினரைப்போல இயங்கும் ஒரு சபையாகும். இக்குழு வருடமொருமுறை தெரிவு செய்யப்படும். இது ஆலயபரிபாலன சபை என்று அழைக்கப்படும். இவ் ஆலயபரிபாலனசபையின் கட்டுப்பாடு, விதி என்பவற்றிற்கு கட்டுப்பட்டு நடப்பதால் கோவில் பரிபாலனம் எவ்வித தடையும் இன்றி நடைபெற்று வருகிறது. இவ்வாலயத்துக்கு கோட்டைமுனையிலுள்ள கடையொன்றும், பெரியகளம் எனப்படும் எருமைத்தீவில் சில ஏக்கர் நிலமும், ஒரு பெரிய வீடும் உள்ளன. இவ்வாலயத்தின் மீது வித்துவான் பூபாலபிள்ளை அவர்களும், 1949 ல் வித்துவான் வி.சீ. கந்தையா என்பவரும் திருப்பதி கங்கள் பாடியுள்ளார்கள். 1977ம் ஆண்டு புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் ஒரு பதிகம் இயற்றியுள்ளார்கள். இது இன்னும் அச்சேறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (5) வது இயல்: பிள்ளையார் கோவில்கள்

### *2. களுதாவளைப் பிள்ளையார் கோவில்*

மட்டக்களப்பிலிருந்து தெற்கு நோக்கி ஒரு நீண்ட வழி செல்கின்றது. இவ்வழியில் சுமார் ஒரு மைல் நீளமான ஒரு கிராமம் உண்டு. அக் கிராமம் களுதாவளை எனப் பெயர் பெறுகிறது. 13 வது மைல் கல்லில் உள்ளது. இவ்வூரும், களுதாவளைப் பிள்ளையார் கோவிலும் மேற்கே வாவிக் கரையைச் சேர்ந்த வயல் பரப்பும், கிழக்கே குளமும், குளத்துக்கு அப்பா லுள்ள நீண்டு செல்லும் மேற்குறிப்பிட்ட இராச பாட்டையும், தெற்கே இக் கோயிலுக்குச் செல்லும் தனிவழிப் பாதையும், வடக்கே வயல்வெளிகளும் எல்லையாகக் கொண்டுள்ளது இக் கோயில்.

கிழக்கே கடற்கரையையும், மேற்கே மட்டக்களப்பு வாவியையும் அண்டியிருப்பதனால் அது இயற்கையின் எழிலோடு சிறந்து விளங்கு கின்றது. பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்று பசிய வயல்களும், பணவருவாயை அள்ளிக் கொடுத்து இவ்வூரைச் செல்வம் சேர்த்து வைக் கும் வெற்றிலைத் தோட்டங்களும் அழகு படுத்துகின்றன.

''காலி விளை பாக்கிற்கும், களுதாவளை வெற்றிலைக்கும்
ஏலம் கிராம்பிற்கும் ஏற்றதுகாண் உன் எழில் வாய்''.

என்பதாக உள்ள நாட்டுப்பாடலில் கிராமியக் கவிஞர் ஒருவர் களுதாவளை வெற்றிலையைப் புகழ்ந்து பாடியுள்ளார். இதனோடு இக்காலத்துக்கேற்ற விவசாயத் தோட்டங்களிலும் களுதாவளை பெயர் பெற்று விளங்குகிறது.

இவ்வூர்ப்பிள்ளையார் கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட தாகக் கருதப்படுகின்றது. எனினும் சரித்திர காலத்துக்கு உட்பபட்ட நரேந்திரசிங்கன் என்னும் அரசனுடன் கோயிலுக்குத் தொடர்புண்டாகி இருந்தமை தெரிகின்றது. சிங்கள அரசவம்சத்துக் கடைசி மன்னவன் இந்த நரேந்திர சிங்கன். அதன் பின்னர் உரிமையின் படி நாயக்கர்கள் கண்டி அரியணையை அழகு படுத்தினார்கள். அவர்கள் தமிழர்களைப் போல் சைவ நெறியில் நின்று ஒழுகினாலும் புத்த வழியினை கண்டியிலே கைநெகிழ விடவில்லை. இருந்தும் நாயக்கர் காலத்தில், கண்டி மாவட்டத்தில் சைவநெறி தழைத்தோங்கிற்று எனலாம். கண்டி மன்னனான இராசாதி இராசசிங்கனின் நீண்ட ஆட்சியில் கதிர்காமம் சிறப்புற்று விளங்கியது. இந்த இராசாதி இராசசிங்கனின் ஆட்சியின் போது காரைதீவு கண்ணகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் கோயிலுக்கு விஜயம் செய்தானென்று வசந்தன் பாடலொன்று கூறுகின்றது. அதனால் கிழக்குப்பகுதி முழுவதும் சைவம் இவன் காலத்தில் பரவியது என்பது அறியக் கிடக்கிறது.

இக்காலத்தில் கதிர்காம யாத்திரை செல்வதற்காக இந்தியாவிலிருந்து காளிதாஸ் என்பவர் தனது மனைவியுடனும், மகளுடனும், இன்னும் பலருடனும் வந்தார். அப்படி வந்தவர் இவ்வூரில் மூன்று, நான்கு தினங்கள் தங்கி உடம்பாறி ஒருநாளைக்கு மூன்று வேளைப் பூசை வணக்கம் நடாத்தினார். இதையறிந்த கிராம மக்கள் அவரவருக்கு ஏற்ற விதமாய் நேர்கடன் வைத்து அவரவர் நினைத்தபடி வழிபட்டு வந்தார்கள். இக்காலம் மட்டக்களப்புப்பகுதியின் தென்பால் உள்ள நற்பிட்டிமுனையிலுள்ள வன்னிமை முதலியார் இங்கு வைக்கப்பட்ட வேலையும், தகப்பன், தாய், மகள், முதலானோரையும் தன்னிடம் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அவர்கள் இதை அறிந்து பயந்து ஒருத்தருக்கும் தெரியாதபடி மேற்குப் பக்கமாக வனம் உள்ள பகுதிக்குள் மண்ணுள் நன்றாக மடுத்தோண்டி வேலினை ஆழமாகப்புதைத்து விட்டுக் கதிர்காமத்தை நோக்கிச் செல்லலாயினர். வேலுக்குப்பதிலாக, பிள்ளையார் லிங்கம் ஒன்றும் இந்த இடத்தில் பேசப்படுகிறது. நாளைந்து வருடங்கள் செல்ல இந்த லிங்கம் மறைபட்டிருப்பது சிலருக்கு கனவில் தோன்றலாயிற்று. உடனே அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தபோது பெரிய லிங்கம் ஒன்று யானை முகத்துடன் தெரிந்தது. உடனே அதைச் சுற்றி மக்கள் வளைத்து வேலி கட்டி, லிங்கத்தை மறைத்துக் கல்லினால் கட்டி ஒரு வாரத்துக்கு ஒரு முறை வெள்ளிக்கிழமைகளில் அபிஷேகம், பூசனை என்பன நடாத்தி வழிபட்டனர் என்பர்.

இந்த லிங்கம் ஊரவர் தோண்டிப் பார்த்த போது 13 லிங்கங்களாகப் புலப்பட்டது என்பதும் ஒரு கதை. அதனால் 13 லிங்கங்களை ஏக காலத்தில் களுதாவளையில் காணமுடியாது என்பதனால் இந்த ஒரு சிரஞ்சீவியான பெயர் இங்கு ஏற்பட்டது என்பர். அதுவே காலப்போக்கில் இந்த 13 லிங்கங்களிலும் ஒன்றைமாத்திரம் கொண்டு கோயில் அமைக்கப்பட்டது எனலாம். கோயில் மூலஸ்தானத்தின் மேல் மச்சு அமைக்கப்பட்டுள்ளது. இம் மச்சு நாகங்களின் உறைவிடமாக இன்றுவரை திகழ்கின்றது. கோவில் வதியும் நாகங்கள் வழிபாடு செய்வோருக்கு எவ்விதமான இடையூறும் செய்வதில்லை. தீயநோக்குடன் வருபவர்களை நாகங்கள் கோயிலினுள் செல்லவிடுவதில்லை. எனில் வினாயகருக்கு காவல் புரியும் நாகங்களின் பெருமை சொல்லமுடியாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலஸ்தானத்தை நடுவாகக் கொண்டு உள்வீதி அமைக்கப்பட்டுள்ளது. பலிபீடம், தம்பமண்டபம், சந்தனமண்டபம், வெளிமண்டபம் என்பவையும் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் முன்னே மடாலய விதிக்கமைந்த கோயில் முகப்பு மண்டபம் இருக்கின்றது. இம்முகப்பு மண்டபத்தை உடைத்து சிறந்த கோபுரம் ஒன்று எழுப்புவதற்காக கோயில் பராமரிப்புக்காரரான திரு. தன்மம்பிள்ளை வண்ணக்கரும், அவர் தலைமையில் அமைந்த மற்றைய வண்ணக்குமாரும் சிரமமெடுத்து வருவதாகத் தெரிகிறது. இம்முயற்சி நிறைவேறப் பெறின் மட்டக்களப்பு மக்கள் செய்த தவப்பேறெனலாம்.

தற்காலம் ஆனிமாதம் உத்தரநட்சத்திரத்தில் தீர்த்தோற்சவமும், அதற்கு முன்னர் ஒன்பது திருவிழாக்களும் நடைபெறுவதுண்டு. விழாக்கள் அனைத்தும் பெரும்பாலும் கிராம மக்களின் ஒற்றுமையால் அவர்களாலேயே நடாத்தப்பட்டு வருகின்றன. கோவில் தலைமைக்காரரும், ஆறு குடும்பத்தாரும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்கள். பெத்தா கிழவி குடும்பம், பேனாச்சி குடும்பம், சுரக்காமுத்தி குடும்பம், போத்தாச்சி குடும்பம், செட்டி குடும்பம், வள்ளிநாயகி குடும்பம் (வந்தார் குடும்பம்) என்பன அக்குடும்பங்களாகும். ஆறாவதான வள்ளிநாயகி குடும்பம் என்பது சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகும்.

வாரம் தோறும் கோயிலில் வெள்ளிக்கிழமை மாத்திரம் பூசனை நடைபெற்றது. அன்று பக்கத்து ஊரவர்களும் வந்து பொங்கலிட்டு பூசனை செய்வார்கள். சில வருடங்களுக்கு முன்னர் தினப்பூசை செய்யும் வழக்கம் நிலை நாட்டப்பட்டது. இந்தப் பூசனையில் ஒரு நாளாவது கோயில் கணக்கால் பொங்கல் நடத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எப்போதாவது, யாராவது இந்தப் பொங்கல் பூசனைக்கு வந்து சேர்ந்து விடுவார்கள்.

களுதாவளை வினாயகர் கோயில் கிழக்கில் விசேடம் பெற்ற ஒன்று. அதற்கு நேர் எதிரில் ஒரு மைலுக்கு அப்பாலுள்ள குளத்தோரத்தின் மீதும், இராசபாட்டை ஓரமாகவும் ஒரு வினாயகர் கோயில் அமைப்பு உண்டாகி இருக்கின்றது. எந்த ஊருக்குச் செல்லும் வண்டியும் அந்த இடத்தில் நின்று தேங்காய் உடைத்துக் கற்பூரம் கொளுத்திச் செல்லும் வழக்கம் இன்னும் நிகழ்ந்து வருகின்றது. அவ்வாறு களுதாவளைப் பிள்ளையார் பிரசித்தமாக உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் வினாயகரை வழிபடுவது முயற்சியானதே. ஆனால் மட்டக்க ளப்பைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் சிலரும் இவ்வழிபாட்டில் ஈடுபாடு கொண்டுள்ளமையை நாம் காணலாம். ஒரு முஸ்லிம் வியாபாரி, தனது குழந்தை ஊமையாக இருப்பது கண்டு செய்யாத வைத்தியம் எல்லாம் செய்து பார்த்தார். தெய்வக் குற்றமென்று பல நேர்கடன்கள் செய்தும் பார்த்தார். இறுதியில் களுதாவளைப் பிள்ளையார் கோயிலுக்கு அக் குழந்தையைக் கொண்டு வந்து, கோயில் வீதியில் சுவாமி முன்னிலையில் கிடத்தி, பின்னர் குழந்தையைப் பேசுவித்தார். உடனே பிள்ளை வாய் திறந்து கதைக்கத் தொடங்கிற்று, என்பர். இப்படி அற்புதங்கள் பல களுதா வளைப் பிள்ளையாரால் நிகழ்ந்து வரக் காணுகின்றோம். கோயிலில் நேர்த்திக் கடனாகத் தமது பிள்ளைகளைப் பெற்றார் கொண்டு வந்து விற்று வாங்குவதை ஒவ்வொரு மத்தியானப் பூசையின் போதும் இங்கு காணலாம்.

கோயிலுக்கு மானியமாக பதின் மூன்று ஏக்கர் விளை நிலங்கள் இருக்கின்றன. இந்த விளைநிலங்களின் வருவாயைக் காட்டிலும் பொதுமக்கள் செலுத்தும் காணிக்கை மிக மிக அதிகம் என்று சொல்லலாம். இவற்றை விட, செலவின்றி கோயிலுக்கு வேண்டிய மரங்கள் கோயிலுக்கு நேரே கடலில் வந்து அடைகின்றன. களுதாவளைப் பிள்ளையாரின் ஆணையின்றி வேறுயாரும் அசைக்கவும் முடியாதபடியான பெரிய மரங்களாகவே இருப்பதை நாம் நேரில் அண்மையில் கூடக்கண்டுள்ளோம்.

வண்ணக்கர் குழு எடுத்துக் கொள்ளும் பெருமுயற்சிகள் யாவும் ஊர்மக்களது பொது முயற்சியாகவே கருதப்பட்டு வரவேற்கப்படுகின்றன. அவையாவும் நிறைவேறி இக்கோவிலால் மட்டக்களப்பு நாடு மிக்கோங்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (5) வது இயல்: பிள்ளையார் கோவில்கள்

### 3. அம்பாறை வில்லுப் பிள்ளையார் கோவில்

ஆற்றங்கரையோரத்திலும் பெரிய மரங்களின் நிழலிலும் வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார் என்று கூறுவர். அறிவு வாய்ந்தவர். சாணி, மஞ்சள் முதல் களிமண், கருங்கல், ஐம்பொன் வரை தம் தகுதிக்கும் வசதிக்கும் ஏற்றவாறு திருவுருச் செய்து ஆற்றும் பூசனையை மகிழ்வோடும் ஏற்று வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈயும் வள்ளலாக, தெருக்களிலும், சந்திகளிலும், காட்டுவழிகளிலும் கூட தனதிருப்பிடத்தை வைத்துக் கொள்ளும் விநாயகருக்கு எந்த ஊர்களி லாவது ஆலயம் இல்லை என்று கூறமுடியாது. தலையிலே, நெற்றியிலே மூன்று முறை குட்டி தோப்புக்கரணமிட்டு பக்திப் பரவசத்தோடும், தம் வினை சிதறுவதாக நினைத்து தேங்காயைச் சிதற உடைக்கும் பக்தர்களின் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற மகாகணபதியே இவ்வருளாளன். எந்தக்கருமத்தைத் தொடங்கும் போதும் முதலில் கணபதியை நினைத்து பூசை செய்து தொடங்குகின்ற வழக்கத்தை அறியாத இந்து மக்களே இல்லை எனலாம். கணபதி பூசையோடு ஆரம்பிக்காத எந்தக் கருமமும் இடையூறின்றி முடியாது என்ற நம்பிக்கை நம்மவர்களிடையே வேர் கொண்டுள்ளது. இதனாலேயே ''விநாயகனே வெவ்வினையை வேரறுக் கவல்லன், விநாயகனே வேட்கை தணிவிப்பான், விநாயகனே விண்ணுக் கும் மண்ணுக்கும் நாதனாவான்'' அவனை வழிபடுவதால் வாக்கும் நல்ல மனமும், மாமலராள் நோக்கும் கிடைப்பதோடு வாடாத உடம்பும் பெற்று, பசி, பிணியின்றி வாழமுடியும் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. மழையின்றித் தவிப்புறுகின்ற காலத்தில் வழியில் தாம் வணங்குகின்ற பிள்ளையாரின் திருவருவத்தை ஒருவித பரவசநிலையில் தூக்கி நீர் நிலையொன்றினுள் ஆழ்த்திவைக்கின்ற அடியவர்களின் கோரிக்கையை ஏற்று சோனாமழையை வருஷிக்கப்பண்ணும் திருவருட் செய்கையை நாம் கண்டும் கேட்டுமுள்ளோம். இவ்வாறு மழைபெய்ததும், நீர் நிலையுள் வைத்த திருவுருவத்தைக் கொணர்ந்து முன்னர் இருந்த இடத்திலே எழுந்தருளப் பண்ணிப் பொங்கல் பூசைகள் செய்து பரவுவது பற்றியும் அறிந்துள்ளோம். இந்த வகையிலோ வேறு அந்நியரின் கோபத்துக்கிலக் காகியோ குளத்தில் வீசப் பெற்றுள்ளது ஒரு விநாயகரின் வடிவம். அதனைத்தேடி எடுத்து வெளிக்கொணர்ந்து பூசனைகளியற்றி வழிபாடாற்ற வேண்டுமென்று ஒரு அடியவருக்கு அவரது உள்ளுணர்வு உறுத்தலா யிற்று. இது கனவோ நனவோ என்று கூடத் தீர்மானிக்க இயலாத வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தைப் பறிகொடுத்தார் இத் தொண்டர். இவர் பெயர் துரைசாமி.

வீரமுனை என்னும் அழகிய தமிழ்க்கிராமம் சம்மாந்துறையின் பக்கலின் அமைந்துள்ளது. பண்டைக்காலத்தில் மட்டக்களப்பு வீர முனையைச் சார்ந்தே இருந்தது என்பது நினைவுகூரத்தக்கது. இங்கிருந்து மேல் திசையில் பன்னிரண்டுகல் தொலைவுக்கப்பால் இருப்பது அம்பாறை. இங்கு ஓர் குளமுண்டு. இதனை ''அம்பாறை வில்'' என்பர். எங்கு பார்த் தாலும் அடர்த்தியான காடுகள். காட்டினைச் சார்ந்துள்ளது இக் குளம். காட்டுயானைகள் கூட்டங் கூட்டமாகச் செல்வதையும் குளத்தில் குளிப்ப தையும் பார்க்கவும், அவற்றின் பிளிறல் ஓசையைக் கேட்கவும் பயங்கரமா யிருக்கும். யானைகளும் பயப்படத்தக்க சில்வண்டுகளின் ஓசையும் போகிறவர்களுக்கு வழியிடை அச்சத்தை உண்டாக்கும்.

அழகான மலைக்குன்றுகள் அமைந்த அந்த இடத்தின் கரையோரமாக கற்பாறைகள். அந்தப் பாறைகளில் மெல்லென வந்து முட்டி மோதி நுரை யெழுப்பும் குளத்தின் நீரலைகள். அருகில் ஆலயம் ஒன்று அமைந் திருந்தது போன்ற தோற்றச் சூழல். இவற்றை அவதானித்த தொண்டர் துரைசாமி சிந்தனையிலாழ்ந்தார். தலத்தின் அழகு, தீர்த்தம், அருகில் ஓர் ஆலயம் அமைந்திருப்பது போன்றவொரு தோற்றம். ஆகவே கீர்த்தியுள்ள மூர்த்தியும் இருந்திருக்கவே வேண்டும் என்று நிச்சயம் கொண்டார். அதே மூர்த்தி யானை முகவனாகத்தானிருக்க வேண்டும் என்று அவரது அங்கலாய்ப்புத் தூண்டியது. அப்படியானால் இதனை இந்தக் குளத்தில் தான் வீசியிருப்பார்களா? என்ற கேள்வியும் இதற்குக் காரணம் அந்நிய ராதிக்க மாகத்தானிக்கும் என்ற முடிவும் கொண்டார்.

இத்தகையவொரு பக்தி பரவசமும், உள்ளுணர்வுத் தூண்டுதலும், கொண்டு தவிப்புற்ற அடியவர் துரைசாமிக்குப் பக்கபலமொன்று வாய்ந்தது. அதுதான் ஆனைக்குட்டிச் சாமியாரின் உதவி. இவர் ஒரு சித்த புருஷர். இவருடைய சமாதி காரைதீவிலே இன்றும் உள்ளது. அங்கு இப்பொழுதும் பல அற்புதங்கள் நிகழ்கின்றன என்பர். சென்றகால, நிகழ்கால, வருங்கால நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டும் வல்லமையும், வியக்கத்தக்க பல அற்புதங்களைச் செய்யும் வல்லமையும் சித்தர்களுக்கு உண்டு. இந்த வகையில் சிறப்புப்பெற்ற சித்தர் என்றே ஆனைக்குட்டிச் சாமியாரைக் கூறலாம். இப்பெருந்தகை துரைசாமித் தொண்டரின் தேடுத லுச் ந சகல வழிகளிலும் வழிகாட்டியாகவும், பக்க ட'லமாகவுமிருந்து உதவினார். இந்த அருந் துணை கிடைத்ததும் அந்தக்குளத்திலேயே ஆனை முகவிக்கிரகம் இருக்கிறது என்ற உறுதிமொழி பெற்றும் பக்திப் பரவசமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார் தொண்டர் துரைசாமி.

சாரிசாரியாக ஆனைகள் குளிப்பதையும், ஆனைகளைப் பிடித்து அப்படியே விழுங்கும் பெரு முதலைகள் வாழும் குளம் என்பதையும் கண்டும், கேட்டும், அறிந்தும் ஒருவித பயமுமின்றி விக்கினம் தீர்க்கும் விநாயகனைத் தோத்தரித்துக் கொண்டும் குளத்தில் இறங்கினார். நீருள் அமிழ்ந்து, அமிழ்ந்து மணிக்கணக்காக, நாட்கணக்காகத்தேடி வெற்றியும் கண்டார். ஆனைமுகத்து ஐங்கரத்தண்ணலை நீரினுள் கண்டதும் அவனருள் துணையில் அச்சிலையினை அரக்கி அரக்கிக் கரை கொணர்ந்தார். ஆனந்தக் கண்ணீர் விட்டு ஆடினார், பாடினார், அபிஷேகித்தார், ஆராதித்தார். தனக்குத்தெரிந்தபடி கல்லால் பீடமமைத்து, ஐங்கரன் உருவை அப்பீடத்தில் வைத்துக் கிடுகினால் பந்தலமைத்துச் சிறுகோயிலொன்றாக்கி வழிபட்டு வரலானார்.

''அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோயில்'' என்று அழைக்கப் பெற்ற அந்தக் கோயிலை நாடி அப்பகுதியில் பயிர்ச் செய்கையும் வேளாண்மைச் செய்கையும் செய்து வந்த, வீரமுனை, மல்வத்தை, சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, நீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த கமக்காரர் பயபக்தியோடு வழிபாடாற்றிப் பொங்கலிட்டு வணங்கிச் செல்வராயினர். பிற்காலத்தே ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் அதிகாரிகளும் ஊழியர்களும் வழிபாட்டில் கலந்து ஆர்வம் காட்டிவரும்வரை இதுதான் கோவில் வரலாறாக இருந்தது.

துரைசாமித் தொண்டர் வைத்து வழிபட்டு வந்த அம்பாறை வில்லுப் பிள்ளையாரின் சக்தி, கீர்த்தி, மெல்ல மெல்ல எங்கும் பரவலாயிற்று. அண்டை அயலிலுள்ளவர்களும் வெகு தொலைவில் இருந்தவர்களுமான இந்து மக்கள் கேள்வியுற்று, மாட்டு வண்டிமுதல் தத்தமக்கு வசதியான வாகனங்களில் வந்து பொங்கிப்படைத்து நேர்த்தி வைப்பவர்களும், தமது நேர்த்திகளை நிறைவேற்றுபவர்களுமாக ஆராதித்துச் செல்வது வழக்கமாயிற்று. தாம் நினைத்ததை முடிக்கும் கண்கண்ட தெய்வமாக இருந்த வில்லுப்பிள்ளையார் சாதிபேதமின்றிச் சகலராலும் போற்றி செய்யப் பெறுவராயினர்.

தனது காணாமற் போன மாடு ஒன்றினைத் தேடி, ஓடி அலுத்துக் களைத்தார் ஒரு முஸ்லீம் சகோதரர். அம்பாறையில் பிள்ளையாருடைய மகிமைகளைக் கேள்வியுற்ற இவர் அம்பாறை வந்து பிள்ளையாரிடம் தனது மாடு காணாமற் போன செய்தியை முறையிட்டு, மாட்டைக்காட்டித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தால் பெரும் பெரும் காணிக்கை செய்வேன், என்று நேர்த்திக் கடனும் வைத்து வேண்டிச் சென்றார். பின்னர் எங்குதேடியும் மாட்டைக் காணாமை யால் விரக்தியுற்ற இம் மனிதன் அடியவர்களின் அன்புக்குத்தான் ஆனைமுகன் கட்டுப்படுவாரன்றிக் ''காணிக்கை'' என்ற கைலஞ்சத்திற்கு இலேசில் கட்டுப்படமாட்டார் என்பதை உணரமுடியாதவனாய் தனது கையில் இருந்த கோடரியால் வில்லுப்பிள்ளையாரின் சிலையை அடித்து நொறுக்க அவரின் ஒரு திருக்கரம் துண்டிக்கப்பட்ட நிலையில் சிலை சேதமடையலாயிற்று. அதே சமயம் அந்த மனிதன் கைகால் வழக்கமின்றிப் போனான் என்றும், குறித்த நேரத்தில் மாடு எங்கிருந்தோ ஓடி அவனண்டை வந்து சேர்ந்தது என்றும், அதனைக்கண்ட மனிதன் தான் செய்த தவறை எண்ணிப்பார்த்து ஏக்கத்தால் இரத்த வாந்தி எடுத்துத் துடித்து, துடித்துச் செத்தான், என்றும் தெரிய வருகிறது. இதனை அறிந்த பலரும், அம்பாறைப் பிள்ளையாரின் அற்புதத்தை வியந்து போற்றிப் பக்தியில் திளைக்கலாயினர்.

இந்த நிலையில் ஒருநாள், இளைப்பாறிய நீதிபதியான ஸ்பென்ஸர் இராஜரத்தினம் அவர்களும், கதிர்காமம், மாணிக்கப்பிள்ளையார், தெய்வானை அம்மன் கோவில் என்பவற்றுக்குப் பொறுப்பாளரான சுவாமி இராம ஸ்ரீ பாவா அவர்களும், கதிர்காமம் இராமகிருஷ்ண மடத்தின் முகாமையாளரான சுவாமி சர்வாதீதானந்தா அவர்களும் கதிர்காமத்தி லிருந்து திக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு துரைசாமித் தொண்டரையும் அழைத்துக் கொண்டு அம்பாறை வில்லுப் பிள்ளையாரின் சிறு கோவிலை அடைந்தார்கள். அவர்கள் இத்தொண்டர் வாயிலாகவும், ஆனைக்குட்டிச் சாமியார் வாயிலாகவும் விபரங்கள் யாவும் அறிந்தனர்.

இந்த இடம், மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கமையப் பெற்ற சிறப்பு வாய்ந்ததோடு முன்னர் இவ்விடத்தில் ஆனைமுகன் ஆலயமே இருந்தது என்பதற்குப்பல அறிகுறிகள் தென்படுகின்றன. இவ்வாலயத் தைப் புதிதாகக் கட்டியெழுப்பவேண்டியது இந்துக்களுடைய கடமை யாகும். ஆலயத்தைக் கட்டிமுடித்து எமக்கு அறியத்தந்தால், கதிர்காமத்தில் தெய்வானையம்மன் கோவிலில் நித்திய வழிபாட்டில் வைத்திருக்கும் விநாயகப் பெருமானைத் தந்துதவுவோம் என்று இராம ஸ்ரீ பாவா சொல்லிச் சென்றார்.

கதிர்காம றஸ்டி (Trustee) இராம ஸ்ரீ பாவா அவர்களும் சுவாமி சர்வாதீதானந்தாஜீ அவர்களும், ஸ்பென்ஸர் இராசரெத்தினம் அவர்களும் வாக்களித்ததற்கமைய அம்பாறையிலிருந்து பிள்ளையார் விக்கிரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து வரச்சென்ற திரு. இ. புஷ்பரெத்தினம், ஸ்டோர் சுப்பரீண்டண்ட் அவர்களையும், மல்வத்தை விதானையாரான திரு.எஸ். செல்லத்துரை அவர்களையும் வரவேற்றுக் கதிர்காமத்தில் தெய்வானை அம்மன் கோயிலில் நித்திய பூசையிலிருந்து வந்த பிள்ளையார் விக்கிரகத்தை அபிஷேகம் செய்து பூசனையாற்றிக் கையளித்தனர். பிள்ளையார் அம்பாறைக்குக் கொண்டுவரப்பட்டு அதற்கான மூலஸ்தான மகாபீடத்தில் வைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இம் மகாபீடம் சற்று சிறிதாக இருக்கவே அப்போது செயற்பட்டு வந்த அம்பாறை ஆலயத்தின் பரிபாலன சபையார் தீவிரமாகச் சிந்தித்து அம்பாறையிலிருந்து சுவாமி ஏழு மைலுக்கு அப்பாலுள்ள இறக்காமத்துக் கோவிலுக்காக யாழ்ப்பா ணத்தில் இருந்து தருவிக்கப்பட்டிருந்த பிள்ளையார் விக்கிரகத்தைப் பெற்று வந்து மகாபீடத்தில் வைத்துப் பார்த்தனர். இம்மியளவேனும் குறைபா டின்றி அதற்காகச் செய்யப்பட்ட பீடம் போன்று அமைந்து இருந்ததைக் கண்டு எம் பெருமான் திருவுள்ளம் இருந்தவாறு என்னே என்று ஆனந் தித்தனர் சபையாரும் பக்தர்களும்.

கதிர்காமத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட விக்கிரகத்தை, இறக்கா மம் ஆலய பரிபாலன சபையாரிடம் கையளித்து அவர்களிடமிருந்து பெற்று வந்த விக்கிரகத்தை அம்பாறைக் கோவில் மகா பீடத்தில் எழுந் தருளப் பண்ணும் முயற்சியில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கவேல் ஆச்சாரியாரால் வனையப்பெற்ற கோவில் கோபுர வேலைப்பாடுகள் முற்றுப் பெற்றவுடன், கல்லோயா இந்து பரிபாலன சபையாரின் திட்டப்படி, யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் அவர்களால் 1965 ம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. அன்றிலிருந்து இக்கோவில் அம்பாறை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் என்ற பெயர் பெற்றது. இதுவே ஆலயத்தின் முதலாவது மகாகும்பாபிஷேகம் ஆகும். இது நடந்தேறியதும் ஆலயத்தின் பெருமையும். கீர்த்தியும் சித்தியும், நாலாபக்கமும் பரவத் தொடங்கியது.

துரைசாமித் தொண்டரினால் தனிப்பட்ட ஆளுமைக்குள்ளிருந்த ஆலயவேலைகள் அவரின் பணிப்புக்கமைய கல்லோயா அபிவிருத்திச் சபையில் உத்தியோகம் பார்த்து வந்த இந்துமத அன்பர்களில் சிலர் சேர்ந்து ''கல்லோயா இந்து பரிபாலன சபை'' என்ற பெயருடன் செயற்பட்டுப் பல நற்கருமங்களை ஆலய வளர்ச்சிக்காகச் செய்து வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயபரிபாலன சபையின் தலைமைப் பொறுப்பை, முன்னர் கூறிய திரு.இ. புஷ்பரெத்தினம் அவர்கள் கையேற்றுத் திறம்படச் செயற்பட்டார்கள். சபையின் நன்மையும் வளர்ச்சியும் கருதி, நம்பிக்கையாளர் சபையொன்றும் அமைக்கப்பட்டது. அதில் கல்லடி உப்போடையைச் சேர்ந்த எஸ். கணபதிப்பிள்ளை (அக்கால காணி உத்தியோகத்தர்) அவர்களும், மல்வத்தையைச் சேர்ந்த எஸ். செல்லத்துரை விதானையார் அவர்களும், மண்டூரைச் சேர்ந்த எ. சிதம்பரப்பிள்ளை தோம்புதோர் அவர்களும், காரைதீவைச் சேர்ந்த என். நவரெத்தினம் அவர்களும் அங்கம் வகித்தனர்.

இந்த இந்து பரிபாலனசபை, ஆலயவளர்ச்சி கருதி ஏதாவது தீர்மானம் எடுத்தால், அத்தீர்மானம், அடுத்து நிகழும் தானீகர் சபையின் ஆலோசனைக்கும். அங்கீகாரத்துக்கும் விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பெற்ற பின்னரே கருமம் தொடங்கப் பெறும். இது, இந்தப் பரிபாலன சபையின் முக்கால நடைமுறையாகும். வருடம் ஒரு முறை ஆட்சிக்குழுத் தெரிவு நடைபெறுதல் உபவிதிகளின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

1950 முதல் 1980 வரையிலான 30 ஆண்டுகாலத்துள் மாறி மாறி வந்த ஆட்சிக் குழுக்கள், கோவிலின் சட்ட அபிவிருத்தியில் ஆர்வம் காட்டி வந்துள்ளன. வடதிசை நோக்கி எழுந்தருளியுள்ள ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையாரின் பிரதான மண்டபத்தின் வலப்பக்கத்தில் ஒரு நீண்ட மண்டபம் நடராஜர் வாயிலைத் தொட்டு அமைக்கப்பட்டுள்ளது. இடது பக்கமாக நவக்கிரகக் கோவிலை உள்ளடக்கி ஓர் நீண்ட மண்டபம் அமைக்கும் எண்ணம் இன்றைய பரிபாலன சபையின் நோக்கில் உள்ளது. அது அவ்வாறு அமைவது சாலச் சிறந்த கைங்கரியமாகும்.

சேதம் அடைந்த முதற் பிள்ளையார் திருவுருவம் இன்று ''பழைய பிள்ளையார்'' என்று அழைக்கப் பெற்று ஆலயத்தின் ஒரு கோடியில் வைத்து வழிபட்டு வரப்படுகின்றது. ஆலயத்தில் மூன்றுகால பூசைகளும் முறைதவறாமல் காலை 6 மணிக்கும், மதியம் 12 மணிக்கும் மாலை 6 மணிக்கும் நடை பெற்று வருகின்றன. வினாயகர் சதுர்த்தி, சஷ்டிவிரதங்கள், நவராத்திரி, சிவராத்திரி முதலிய விசேட பூசைகளும், ஆவணிமாதத்தில் வருடாந்த திருவிழா, தீர்த்த உற்சவங்களும் சிறப்பாக நிகழ்ந்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை மாணிக்கப்பிள்ளையாரின் அருமை, பெருமைகளை வைத்து அடியார்களால் பாடப்பெற்ற சில நூல்கள், பின்வருமாறு:-

1. **''ஊஞ்சலும் இரட்டை மணிமாலையும்''** கல்லோயா பரிபாலன சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க சைவப்புலவர் சி. சரவணமுத்து என்பவரால் பாடப்பட்டது.

2. **''கல்வெட்டும்-திருப்பாடல்களும்''** ஆசிரியர் க. அம்பிகாபதி அவர்களால் பாடப்பெற்றுத் தொண்டர் சி. சிவலிங்கம் அவர்களால் வெளியிடப் பெற்றது.

3. **''அம்பாறை மாணிக்க வினாயகர் திருப்பதிகம்''** காரைதீவு வி. நமசிவாயம் அவர்கள் இயற்றியது. இம் மூன்று நூல்களும் அச்சூர்ந்து வெளிவந்தனவாகும்.

இன்னும் வெளியிடப்படாத பக்தி பாடல்கள் பல உள்ளனவென்றும் அறிகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (5) வது இயல்: பிள்ளையார் கோவில்கள்

### *4. காரைதீவு பாலையடிவால விக்கினேஸ்வரர் கோவில்*

மட்டுநகரின் தென்பால் இருபத்தேழாவது மைல் தூரத்தில் முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரையும், சேவையின் சின்னமாய்த் திகழ்ந்து சிவபதமடைந்த நடராஜானந்த அடிகளாரையும் தமிழ் கூறும் நல்லுலகுக் களித்த காரைதீவு என்னும் ஊர் உள்ளது. நெய்தலும் மருதமும் ஒருங்கி ணைந்து வளங்கொழிக்கும் இவ்வூரின் தென்பாகத்தே வங்கமா கடலின் திரை தவழ, வாழ்வுக்குதவும் திருவிளக்காய்ப் பாலையடிவால் விக்கி னேஸ்வர் ஆலயம் காட்சி தருகின்றது. இன்று அபிஷேகங்கள் ஒழுங்குற நடந்து, ஒழுங்காகப் பூசனைகளும் நடந்து வரும் திருவாலயம் இது.

வெள்ளைக்காரப்பிரமுகர்கள் தென்னந் தோட்ட நிர்மாண வேலையில் ஈடுபட்டிருந்த காலம் அது. காடுகள் அழிக்கப்பட்டன. அக்காட்டிடையே பலநூறு ஆண்டுகள் பழமையை நினைவுறுத்தும் பல விருட்சங்கள் பரந்து கிடந்தன. தற்பொழுது ஆலயம் உள்ள இடத்தில் இருந்த பாலை மரத்தை யும் அழிக்குமாறு கட்டளை இட்டார்கள். எனினும் மரத்தைக் தறிக்கச் சென்ற அனைவரும் மயக்கமுற்றனர். இச்செய்தி கிராம மக்களிடையே பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. இதற்கான காரணத்தை ஆராயும் அவாவையும் தூண்டியது. மரத்தையும் அதன் சூழலையும் ஆராய்ந்தவிடத்து மரத்தின் அடிப்பாகத்தே வினை தீர்க்கும் விக்கினேஸ் வரப் பெருமான் திரு உருக் கொண்ட கற்சிலை ஒன்று தென்பட்டதுடன் நிலத்தில் அடியில் புதையுண்டு கிடந்த தூபதீபங்களும், அகல் விளக்கு களும், சங்கு போன்ற சைவ ஆலய சின்னங்கள் பலவும் கண்டெடுக் கப்பட்டன.

அன்றிலிருந்து, கிராம மக்கள் மரத்தையும் அதை அண்டிய சூழலையும் புனித பிரதேசமாகக் கருதி வழிபட்டு வந்தனர். எனினும், அத்தலத்தைச் சாத்திரி சிற்றம்பலம் என்பவர் பொறுப்பேற்று நடாத்தி வந்தார். மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் எனும் கொள்கைக்கிணங்க வாழ்ந்த இப்பெரியார் மனைவியின் பெயர் மாசாத்தா வள்ளியம்மை, என்பதாகும். இவர் பாண்டிய நாட்டின் தலைநகரமாகிய மதுரைப்பகுதியில் இருந்து குடிபெயர்ந்து இக்கிராமத்தை வசிப்பிடமாகக் கொண்டவர். இவரின் சந்ததியினரே இன்றும் இவ்வாலயத்தைப் பராமரித்து வருகின்றனர் என்று அறிந்தோர் கூறுகிறார்கள்.

சாத்திரி சிற்றம்பலம் பெரியார் தெய்வீக மடைந்த பின்னர், அவரின் மகன் பொன்னம்பலக் கங்காணியார் இவ்வாலய நிர்வாகத்தை நடாத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். இவருக்கு இவ்விடத்தில் ஓர் ஆலயத்தைக் கட்ட அவர் இருந்த போதும் அப்பெருமான் எழுந்தருளி இருக்கும் மரத்தைத் தறிப்பது எப்படி? எனக் கவலை குடி கொண்டிருந்தது. ஒரு நாள் விநாயகப் பெருமான் கனவில் தோன்றி ''அன்பனே உன் ஆசையை நான் அறிவேன், உன் விருப்பப்படி ஆலயத்தை அமை'' எனக் கூறினார். அதைத் தொடர்ந்து இவ்விடத்தில் ஓர் மடாலயம் அமைக்கப்பட்டு வழிபாடு நீண்டகாலம் நிகழ்வுற்றது.

அக்காலத்தின் பின்னர் ஆலயப் பூசகராக இருந்தவர் வித்துவான் பு.பொ. வைத்திலிங்க தேசிகர் ஆகும். சைவ சித்தாந்தப் பேரறிவும், புராண இதிகாசங்களில் பாண்டித்தியமும் பெற்ற இப் பெரியார் பூசகராகப் பணிபுரிந்த காலத்தில் இவ்வாலய மூர்த்தியின் பெருமை மேலும் ஒளி பெற்று விளங்கியதோடு அவர் காலத்தே பரிவார தெய்வங்களாகிய முருகன், வைரவர், நாக தம்பிரான் முதலியோருக்கும் ஆலயங்கள் நிறுவப்பட்டன. தேசிகர் பூசகராகக் கடமையாற்றிய காலத்தில் சைவ மாணவர்கள் பலர் அவரிடம் புராண காவியங்களிற் பயிற்சி பெற்றனர். அவர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட புராண வகுப்பை இன்றும் அவரின் மாணவர் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மைக்காலத்தில், ஆலயத்தில் பலவழிகளிலும் திருத்தவேலைகள் நடந்து பூசைகள் தினமும் நடைபெறுவதோடு இந்துக்களின் விசேட தினங்களிலெல்லாம் விசேட பூசை ஒழுங்கு நிர்வாகத்தால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. வருடாந்த மகோற்சவம் சித்திரை மாதத்தில் ஆரம்பமாகிச் சித்திரைப் பூரணைத் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும். பரிவாரக் கோயில்களில் ஒன்றாக விளங்குவதும் இம் மாவட்டத்தில் பழமை வாய்ந்ததுமாகிய நவக்கிரக கோயிலுக்கு வெளியூர்மக்கள் தினசரி வருகை தந்து வழிபாடாற்றுவர். வைகாசி அச்சுவினி நட்சத்திரங்களிலும், வருடாந்த ஆவணிச் சதுர்த்தி, புரட்டாதி சனி, ஐப்பசிக் கந்த சஷ்டி, கார்த்திகை தீபம், வினாயக விரதம், திருவாதிரை, சிவராத்திரி காலங்களிலும் இவ்வாலயத்தில் விசேட வழிபாடுகள் நிகழ்வுறும்.

பெரு மதுரை வேளாளர் எனப்படும் முற்கூறிய பரம்பரையில், தர்மகர்த்தாக்கள் ஐவர் இருந்து வருவர். இந்து ஐவராலும் கருமாதிகாரி ஒருவர் நியமனம் செய்யப்படுவர். ஆலயத்தில் நடைமுறை ஒழுங்குகளை இவரே உத்தரவாதப் பொறுப்புடன் நடாத்தி வருவர். தர்மகர்த்தாக்கள் வம்சத்தவர்களுக் கெல்லாம் வேண்டிய சந்தர்ப்பங்களில் அழைப்பு விடுத்து, கூட்டத்தினைக்கூட்டி, கூட்டத்தீர்மானங்கட்கு அமைவாக, கருமாதிகாரி நடந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் மனத்தைக் கவரும் வகையில் இவ்வாலயத்தில் பெரும் வேலைகளாகக் குறிப்பிடத்தக்கன கிழக்கு வாசல் இராச கோபுரமும், தெற்கு வாசல் கோபுரமாகும். இராச கோபுரம் முன்னை நாள் கருமாதிகாரி ச.வ.வி. சீனித்தம்பி அவர்களாலும் தெற்கு வாசல் கோபுரம் ஆலயவம் சத்தைச் சார்ந்த அரசாங்க சேவையில் உள்ளவர்களாலும் ஆக்கப்பட்டவை களாகும். இவ்விரு கோபுரங்களிலும் மேலும் வேலைகள் செய்ய இடமுண்டு. இவை முற்றுப் பெறும் காலம் இவ்வாலயம் இந்திய நாட்டுக் கோவில்களைப் போன்று கிழக்கிலங்கையில் ஓர் கலைக் கோயிலாக காட்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை. தனியார் தியாக ஒழுங்கு செய்யவும், சிலர் பாடிய தனிச்செய்யுள்களும் இக்கோயிலின் சிறப்பைமி குப்பன. வித்துவான் பு. பொ. வை. தேசிகர் அவர்கள் பாலையடிவால விக்கினேஸ்வரர் அச்சூர்ந்து பேரில் ஒரு ஊஞ்சற்பா பாடியுள்ளார். அப்பாக்கள் தேசிகர் காலத்திலேயே வெளிவரலாயின. அதிலுள்ளபாடல் களிற் சில:-

**காப்பு**

திருவள ரீழ பூர்வந் திகழ மட்டக்களப்பின்
மருவளர் சோலை சூழ்ந்து வளங்கொள்கா ரேறுதீவின்
உருவளர் பாலை நீழலுகந்தம ரைங்கரத் தெம்
அருவளர் வால விக்கி னே சுரனடிகள் போற்றி

**ஊஞ்சல்**

(1) தத்துவங்க ளொருங்கமைந்து விட்டமாக
சுத்த சதுர் மறைகளுமே கயிறதாக
தூய சிவாகமமதன்மீப் பலகையாக
அத்துவித முத்தியடி யவர்கள் காண
அமரர் தொழ ஓங்கார பீடமேறி
அத்திமுக வத்திமுக வாடீருஞ்சல்
அருட்பாலை யடியிறையா டாமோ வூஞ்சல்

(2) உத்தமவை திகசைவ முலகில் வாழ
வோங்குமனு நீதியர சூழிவாழ
நித்தியசன் மார்க்கமறம் நீட்டி வாழ
நீலமிடற் றவனடியார் நிலமேல் வாழ
வித்துபய னுதவுமுகில் மேன் மேல் வாழ
மேதினில் நால்வருணம் மேவிவாழ
அத்திமுகவத்திமுக வாடீருஞ்சல்
அருட்பாலை யடி யிறையா டாமோ வூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (5) வது இயல்: பிள்ளையார் கோவில்கள்

### 5. பழுகாமம்-மாவேற்குடாப் பிள்ளையார் கோவில்

கிழக்கிலங்கையின் கீர்த்தி பெற்ற இந்துக் கோயில்களில் இதுவும் ஒன்று. குளக்கோட்டரசால் புனருத்தாரணம் செய்யப்பட்ட பண்டைப் புகழ் மிக்க சம்புநாவற் பதி (திருக்கோவில்) சித்திர வேலாயுத சுவாமி (போரதீவு) ஆலயத்துக்கும், மண்டூர் முருகன் ஆலயத்துக்கும், சமமான காலத்தில் இக்கோயில் விளங்கியது எனப்படுகிறது. சீர் சிறப்போடு, மூர்த்தி, தலம், தீர்த்தமாய் மூன்றினும் சிறந்து விளங்கியது இத்தலம் என்பது கர்ணபரம்பரை. கால வெள்ளத்தாற் தாக்குண்டு வரலாறந்த இவ்வாலயத்தையிட்ட கர்ண பரம்பரைக் கதைகளே தற்பொழுது சான்று பகர்வனவாயினும் எஞ்ஞான்றும் வேண்டுவார் வேண்டுவன ஈயும் மூர்த்தியின் கீர்த்தியும், தலச்சிறப்பும் அதை வலியுறுத்துவனவாயுள்ளன.

மாகோன் என்னும் தமிழரசன் பழுகாமத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டானென்றும், கண்டியக்கட்டு எனப்படும் பிரசித்தமான வழிமூலம் கண்டி மன்னர்களோடு தொடர்பு பூண்டு இருந்தானென்றும் சரித்திரங்கள் கூறுகின்றன. எனினும் இவ்வூர்க்கோவில் ஒன்றும், திருப் படைக் கோவில் வரிசையில் சேர்க்கப்பட்டிலவாகும் என்பது இங்கு நோக் கற்பாலது.

இன்று ஸ்ரீமாவேற்குடாப்பிள்ளையார் ஆலயம் என இது அழைக்கப் படுகிறது. ஆனால், இதன் ஆதிமூர்த்தி பிள்ளையார் அல்லர் எனவும், பெருமை பொருந்திய தங்கவேல் தான் இவ்வாலயத்தில் பிரதிட்டை பண்ணப்பட்டிருந்த தெனவும் கூறுகிறார்கள். இதனால் இதன் பெயர் ஸ்ரீமாவேற்குடையார் ஆலயம் என்பதே எனவும் ஒருசாரார் கூறுவர். இன்னுமொருசாரார், இவ்வாலயத்தில் பிரதிட்டை செய்யப் பெற்றிருந்த மூர்த்தி மாவைக்குடையார் என வழங்கப்பட்டார். என வாதிடுவர். எது எவ்வாறாயினும், பலர் குறிப்பிடுவதும் முருகப் பெருமானையே. ஆத லின், ஆதியில் கிழக்கிலங்கையில் கீர்த்தி வாய்ந்த முருகன் ஆலயங்களில் இதுவும் ஒன்றென்பதை ஆலயத்தை அடைந்தோர் தெற்றேன உணர்வர்.

குளக்கோட்டரசர் புனருத்தாரணத்தின் போது தென்னிந்தியாவிலுள்ள காரைக்கால், மருங்கூரினின்றும் தருவித்த வேளாண் மரபினரே இவ்வால யத்தைப் பரிபாலித்து வந்தனர் எனவும், அவர்கள் சந்ததியின்றி அழிய, யாழ்ப்பாணத்தில் அளவெட்டி, மாதகல் ஆகிய இடங்களிலினின்றும், அவர்களுடைய சந்ததியினரே மீண்டும் வந்து இவ்வாலயத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலித்தனர் என்றும் கூறுவர். ஆயினும் இன்று இக்கோவிலே அழிந்து போயிற்று எனலாம்.

இப்பொழுது பழுகாமம் முதலிய இடங்களில் வாழும் அத்தியார்குடி, வைத்தியனார் குடி, வேளாளரே ஒரு புதுக்கோவில் கட்டிப் பரிபாலனம் செய்து வருகின்றார்கள். மற்றைய குடியினர்க்கும், இவர்க்கும் இதன் நிருவாகத்தில் பங்குண்டு என்ற வழக்கொன்று எழுந்ததும் அது கோடு வரை சென்று, இச்சாதியினர்க்கே வெற்றியில் முடிந்ததும் பலரும் அறிந்ததொரு செய்தியாகும்.

மட்டக்களப்பு வாவியில் உள்ள அத்தியார் முன்மாரிக்குடாவில் "குடாஆறு" எனப்படும் ஒரு சிற்றாறு கலக்கும் சங்கமத்தின் தென்மேற்கே கால்மைல் தொலைவில் அத்தியார் முன்மாரி, தென்கண்டத்தின் கிழக்கிலுள்ள கோயிற் தீவு என்றும் திடரில், பழுகாமம் தும்பங்கேணிப் பாதையின் வடக்கே, பழுகாமத்திலிருந்து ஒன்றரைமைல் தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. காலகெதியில் ஆலயத்தின் பெயரால், மேலே சொன்ன ஆறும் மாவேற்குடா ஆறு என வழங்கப்படலாயிற்று.

இவ்வாலயத்தைச் சூழ வயல் நிலங்களே உள்ளன. முன்மாரி போகச் செய்கையின் போது எங்கும் பசிய காட்சியாக விளங்குவது கண்ணுக்கு இனிமையாக விருக்கும். காலத்துக்குக் காலம் நேர்த்தியின் பொருட்டு மக்கள் இவ்விடத்தில் பொங்கலிட்டுப் பூசிப்பது வழக்கம். காலம் தமக்கு வாய்க்கும் போதெல்லாம் மக்கள் இவ்விடத்தில் ஓர் ஆலயத்தை மீண்டும் அமைக்க எத்தனித்தும், திருவருள் கைகூடாமையால் அவர்களது எண்ணம் நிறைவுறவில்லை. உயர்ந்து வளர்ந்திருந்த ஒரு வெள்ளைக் கரையாக்கு மரத்தின் கீழே பொங்கல், பூசனைகளை மக்கள் தொடர்ந்து செய்து வந்தனர். மரத்தின் பக்கத்திலே ஒரு பழைய பெரிய புற்றும் இருந்தது. புற்றில் உள்ள நாகம் பூசை நடக்கும் போது பார்த்துக் கொண்டு இருக்கும். ஒருவருக்கும் தீங்கு செய்யாது. இந்நிலை சுமார் முன்னூறு அல்லது நானூறு ஆண்டுகளாய் இருந்தே வந்தது என்பர்.

ஈற்றில் 1960 ஆம் ஆண்டு வைகாசித் திங்களில் பழுகாமத்து வேளாள மக்கள் ஒன்று சேர்ந்து மிகச் சிறிய உருவில் ஒரு கர்ப்பக்கிருகமும், ஒரு மண்டபமுமாகக் கட்டி, கார்த்திகைத் திங்களில் கும்பாபிஷேகமும் செய்து, நித்திய பூசை ஒழுங்கும் செய்வித்தனர். அக்காலம் மரத்தினடியில் ஆழமாகப் புதைக்கப் பெற்றிருந்த இரு கற்களுமே இன்றைய மூலத்தானத்தில் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளன. பெரியகல் முருகனாகவும், சிறிய கல் பிள்ளையாராகவும் கருதப் பெறுவதற்குக் காரணங்கள் இல்லாமலில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் 1963 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 14 பேர் சேர்ந்த ஒரு நிருவாகம் இதன் பரிபாலனத்தைக் கையேற்றது. காலவரையில் இந்த நிருவாகம் இருப்பத்தினாலு நிருவாகிகளையும், இரண்டு கணக்குப் பரிசோதகர்களையும் கொண்டதாக இயங்கி வருகிறது. இதன் வண்ணக்கராக இவ்வூர்த் திரௌபதியம்மன் கோவில் தலைவரே தற்போது பணியாற்றி வருகின்றார். இந்த நிருவாகம் இவ்வாலயத்தைப் பழமைபோல் சகல மண்டபங்களையும், மடைப்பள்ளியையும், மதிலையும் கொண்டதாகக் கட்டி முடித்தது. எனினும் அண்மையில் ஏற்பட்ட சூறாவளியினால் தாக்கப் பட்ட இவ்வாலயம் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாயளவில் நட்டமடைந்தது. திருவருட் செல்வத்தினால், இந் நிருவாகத்தினர் களைப்படையாமல், திருத்த வேலைகளை மீண்டும் ஆரம்பித்துச் செய்து வருகின்றார்கள். இவ்வாலயத்தின் கர்ப்பக்கிருகம், தூபி, தளவிமானம் உடையதாக, திரு. பாலசுப்பிரமணியம் ஆசாரியரவர்களால் தற்போது நிர்மாணிக்கப் பெற்று வருகிறது.

ஆனி உத்தர விழாவே இவ்வாலயத்தில் நடைபெறும், வருடாந்த உற்சவமாகும். இது, ஆனி மாசத்துப் பரணி நாளில் ஆரம்பித்து பத்து நாட்கள் திருவிழாவும், பதினோராம் நாள் உதயத்தில் தீர்த்தோற்சவமும் நிகழ்தலோடு முடிவடையும். திருவிழாக்கள் ஒவ்வொன்றும் அவ்வூரிலே குறிப்பிட்ட பகுதியாரால் நடாத்தப்பெறும்.

கந்த சஷ்டி விரதம் அடுத்த சிறந்த விழாவாகும். இந்த விரத காலத்தில் கந்த புராண படனம் நடை பெறும். அந்நாளிறுதியின் போது சூரன் போரும், திருமணம் ஆகிய நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடப்பனவாகும். விநாயக சஷ்டி 21 நாட்களும், பூசைகள் மிகச் சிறப்பாக நடக்கும். அநேகமான மக்கள் 21 நாளும் விரதமிருந்து பெருங்கதையோடு விரதத்தை முடித்துக் கொள்ளுவர். திருவெம்பாவை, திருவாதிரையும், நவராத்திரி, விஜயதசமியும் விசேட பூசைகளாக அவ்வக் காலத்தில் நிகழும். சித்திரா பௌர்ணமி விழா மிக மிகச் சிறப்புடைய தொன்றாகும். இவற்றைவிட மாதாந்தம் வரும் விசேட தினங்களில் கோவில் நிருவாகிகள் பூசை, திருவிழாக்களைச் செய்வார்கள்.

இக்கோயிலை நடத்திவருவோர், கொக்கட்டிச் சோலைத் தான் தோன்றீச்சர முடையார்களோடு நிருவாகத்திலே சிக்கல்பட்டு, இக்கோயிலைப் பெரிய கோயிலாக அமைத்தார்கள் என்பதும், முன்னைய கோயிலுக்கு இவர்கள் மூலம் சென்ற சுமார் ஐம்பது ஏக்கர் நெற்காணியின் வருமானம் முழுவதையும் பின்னையதற்கே உரிமை செய்தார்கள் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இத்தகைய சிக்கல்கள் மாறுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (5) வது இயல்: பிள்ளையார் கோவில்கள்

## 6. ஆரையம்பதி திரு நீலகண்ட விநாயகர் கோவில்

இலங்கையின் கிழக்குப்பகுதியின் தலைநகராக விளங்கும் மட்டக்க ளப்பு தனக்கென ஓர் வரலாற்றைக் கொண்டுள்ளது என்று கண்டோம். அது மட்டக்களப்பு மான்மியம் என வழங்குகிறது. இந்த மான்மியத்திற் குறிப்பிட்ட காலத்தில் தற்போது ஆரைப் பற்றை என வழங்கும் கிராமத் திற்கு அயலில் தென் புறமாக அமைந்துள்ள ''கோயிற்குளம்'' என்னும் சிற்றூர், முன்னொரு காலத்தில் பெரிய பட்டினமாக விளங்கியது என்ப தற்கு இங்கு இருந்த பெரிய கோயிலும், அதன் அருகேயுள்ள குளமும், தூர்ந்து அழிந்த நிலையில் இன்றும் காட்சி தருவது சாட்சியாகும். இக் கோயில் உயர்ந்த சிகர கோபுரங்களை உடையதாய் விளங்கிய படியினா லேதான் இப்பகுதியைச் ''சிகரம்'' என்றும் கூறும் வழக்கம் இன்றும் நிலவுகின்றது. இங்கிருந்த கோயில் 16 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த போர்த்துக்கீசத் தளபதி ''அசவீடோ'' என்பானால் கொள்ளையடிக்கப்பட்டு அழித்துத் தரைமட்டமாக்கப்பட்டது என்றும், அதன் பின்பே அவனது படை கொக்கட்டிச் சோலைத் தான் தோன்றீஸ்வரர் கோயிலை நாடிச் சென்றதென்றும் நம் முன்னோர் வாயி லாக அறிகிறோம்.

அன்றியும், ஆரைப்பற்றைக் கிராமத்திற்குக் கிழக்குப் பக்கமாக ஒரு கல்தொலைவில் கடற்கரையை அண்டிய பகுதியில் பாலமுனை என்னும் ஊர் உண்டு. இங்கு தற்போது முஸ்லீம் மக்கள் வாழ்கிறார்கள். இப்பால முனையின் தென்புறமாக ''வேடர்குடியிருப்பு'' என்னும் கிராமம் ஒன்று இருந்தது. இன்றைக்கு ஏறக்குறைய அறுபது வருடங்களுக்கு முன் அங்கு வேடுவர்கள் வசித்து வந்தனர். பின்னர் முஸ்லீம்கள் அங்கு தொடர்ந்து குடியேறத் தொடங்கியதால் இவர்கள் குடிபெயர்ந்து நாளாவட்டத்தில் கோயிற்குளம், தாழங்குடா, புதுக்குடியிருப்பு முதலிய கிராமங்களுக்குச் சென்று அக்கிராம மக்களோடு சேர்ந்தனர். அதனால் வேடர் இனம் மறைந்து போயிற்று. இக்கோயிற் குளப்பகுதியும், வேடர்குடியிருப்புப் பகுதியும் புதைபொருள் ஆராச்சியாளரின் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டு ஆராயப்பட வேண்டிய விடயங்கள்.

கோயிற் குளத்தில் சிகரகோபுரத்தையுடைய ஓர் முருகன் கோயில் இருந்ததென்றும் இக் கோயிற் பூசை முதலிய காரியங்களுக்கு நீர் பெறு வதற்கு ஓர் குளம் வெட்டப்பட்டதென்றும் கோயிலும், குளமும் அமைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தால் இக்கிராமம் கோயிற்குளம் என வழங்கப்பட்டதென்றும் பழைய கதைகள் வழங்குகின்றன. இக் கோயில், முருகன் கோயில் என்றும் இக் கோயிலுக்கு இந்தியாவிலிருந்து விக்கிரகங்கள் கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்டு, பின் மட்டக்களப்பு வாவி மூலமும், அதன்பின் சிறு தோணிமூலமும் ஆரைப்பற்றைக்கு அண்மையிலுள்ள காங்கேயனோடை என்னும் வாய்க்கால் வழியாகவும் கோயிற்குளத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்றும் கதை வழங்குகின்றது. கந்த சுவாமி விக்கிரகம் கொண்டு வரப்பட்டபடியால் இவ்வோடை காங்கேயனோடை எனத் தற்போதும் பெயர் வழங்கப் பெறுகிறது.

இக்கோயிலைப் போர்த்துக்கீசத் தளபதி ''ஜெறானிமோடீ அசவேடோ'' என்பான் கொள்ளையடித்து கட்டிடத்தை இடித்து அழித்தான் எனச் சரித்திரங்களில் உண்டு. இக்காலத்தில் அக்கோயிலைச் சூழவிருந்த மக்கள் பயத்தினால் குடிபெயர்ந்து ஆரைப்பற்றைக் கிராமத்தை நோக்கிக் குடியேறலாயினர். அக்காலத்தில் ஆரைப்பற்றை பெரிய காடாயிருந்ததோடு, கோயிற்குளப்பகுதி நாடாகவும் இருந்தமை நோக்கத் தக்கது. அங்கு குடியேறிய மக்கள் இக் கோயிலின் இடிபாடுகளுள் ஓர் சிறிய வேலாயுதத்தைக் கண்டெடுத்தனர். இச்சிறிய வேலாயுதத்தை ஆரைப்பற்றையில் ஓர் மர நிழலில் பந்தலிட்டு அதன் கீழ் வைத்து வழிபடலாயினர். இந்த இடமே தற்போது ஆரையம்பதி முருகன் ஆலயம் அமைந்த இடம் ஆகும். இதை இவர்கள் அன்போடு வழிபட்டுவரும் போது கைக்கோளர் மரபைச் சேர்ந்த நாகப்பர் என்னும் ஓர் பெரியாருக்கு முருகன் கனவில் தோன்றித் தனக்கு ஓர் ஆலயம் அமைத்துத் தரும்படி கேட்டதாகவும், அவர் கற்களால் ஒரு சிறு ஆலயத்தைத் கட்டி அதில் அந்த வேலாயுதத்தைத் தாபித்து அபிஷேகம் செய்வித்ததாகவும் கதைகள் வழங்குகின்றன.

இந்த நாகப்பர் பிள்ளையில்லாமல் இருந்து முருகன் கோயிலில் விநாயக விரதம் அனுட்டித்தாரென்றும் விநாயகர் கனவில் தோன்றி இவருக்குப் புத்திரபாக்கியம் கிடைக்கு மென்றும், பிள்ளை பிறந்தவுடன் தனக்கு ஓர் தனி ஆலயம் அமைக்க வேண்டுமென்றும் கூறினார். அதன்படி சில வருடங்கள் சென்றபின் அவருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதனால் மனம் மகிழ்ந்த நாகப்பர் ஆரையம்பதியின் வட பகுதியில் ஓரிடத்தில் வில்வ மரத்தின் கீழ் வெள்ளைச் சலவைக் கல்லால் ஆன ஓர் விநாயகர் உருவத்தை ஸ்தாபித்தார். கனவில் அவருக்குக் காட்சி கொடுத்த விநாயகர் நீல நிற மேனியுடையவராகவும் சிறப்பாகக் கண்டம் (கழுத்து) நீல நிறமுடையவராகவும் காணப்பட்டபடியால் அவர் ஸ்தாபித்த விநாயகருக்கும் ''நீலகண்டவிநாயகர்'' எனப் பெயர் வழங்கிற்று. இவ்வாலயமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் மேலேகண்ட திருநீல கண்ட விநாயகர் ஆலயம் ஆகும்.

16 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இவ்வாலயம் களி மண்ணால் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாலயம் தற்போது ஆரையம்பதி 2 ஆம் குறிச்சி செங்குந்தர் வீதியில் அமைந்திருக்கின்றது. இக் கோயில் அமைந்திருக்கும் இடத்தின் வட எல்லை, காத்தான் குடிக்குத் தெற்கு எல்லை வீதியாக இன்று உள்ளது. ஆனால் இக் கோயில் ஏற்பட்ட காலத்தில் செங்குந்தர் குல மக்கள் வசித்த பகுதியின் கிழக்குப்புறமாக அமைக்கப்பட்டது. இன்று இவர்களின் வளவுகள் இஸ்லாமிய மக்களால் கொள்வனவு செய்யப்பட்டு அவர்கள் குடியேறியமையால் தமிழ் மக்கள் வாழ்ந்த இடம் காத்தான்குடியோடு சேர்க்கப்பட்டு விட்டது. எனினும் இக் கோயிலுக்கு நன்கொடை செய்யப்பட்ட தென்னங்காணிகள் இன்றும் காத்தான்குடி எல்லைக்குள் கோயில்வளவு என்னும் பெயரோடு அமைந்திருக்கக் காணலாம்.

இக் கோயில் அமைந்துள்ள இடத்திலிருந்து ஊற்றெடுத்துப் பாயும் நீரோடையின் சங்கம ஸ்தானமே காங்கேயனோடையென வழங்குவதும் ஈண்டுக் குறிப்பிட வேண்டிய ஒன்று. இக்கோயில் அமைக்கப்பட்ட நிலம் ஆரம்பத்தில் அரசினருக்குச் சொந்தமாயிருந்தது. அதை அரசினரிடமி ருந்து காசி நாதப்பட்டங்கட்டியார் வாங்கினார். இதற்குரிய பணத்தை ஆரையம்பதிச் செங்குந்த குல மக்கள் கொடுத்தனர் என்று கோயில் வளவு உறுதி கூறுகின்றது.

18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலக நாதப்பட்டங் கட்டியார், சோமநாதப்பட்டங்கட்டியார் ஆகியோர் வண்ணக்குமாராக இருந்து செங்குந்தகுல மக்களும் ஏனைய சைவ நன் மக்களும் உதவிய நன்கொடை களைக் கொண்டு இக் கோயிலைச் செங்கற்களாற் கட்டிச் சுற்றவர மதிலும் அமைத்தனர். சொறிக்கற்களே பாவிக்கப்பட்டன. இதன் அமைப்பு கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோயிலின் தோற்றத்தையே முற்றிலும் கொண்டதாய் அமைந்துள்ளது.

19 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் நொத்தாரிஸ் மூத்ததம்பி முதலியாரும் சிவஞானமுத்து விதானையாரும், பரிகாரி குஞ்சித்தம்பியும் வண்ணக்குமாராக அமர்ந்த காலத்தில் கோயிலுக்கு முன் ஓர் முகப்பு என்று சொல்லப்படும் தங்குமடம் போன்ற ஓர் கட்டடம் மண்டூர்க் கந்தசுவாமி கோயிலின் முன் பக்கம் இருப்பது போன்று கட்டுவிக்கப்பட்டது. இவர்களே இவ்வாலயத்தின் பக்கலிலுள்ள மாரியம்மன் கோவிலையும் கல்லினாற் கட்டுவித்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயில் மூலஸ்தானத்தில் ஸ்தூபி அமைந்திருக்கின்றது. முன்புறம் சாதாரண மண்டபமே உண்டு. இக் கோயிலுக்குள் பரிவாரமூர்த்திகளாக வைரவர், நாகதம்பிரான், மகாவிஷ்ணு ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். உட்பிரகாரத்தின் வடபுறம் ஓர் தீர்த்தக் கிணறும் தென் புறமாக மடப்பளி அறைகளும் அமைந்திருக்கின்றன. எல்லாக் கோயிலுக்கும் அசையா மணிக் கோபுரம் முன்புறம் அமைந்திருக்க இக் கோயிலில் மட்டும் தென் திசையில் அமைந்துள்ளது.

இவ்வாலயம் காப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நானமண்டபம், தம்ப மண்டபம், சபாமண்டபம் என்னும் மண்ட பங்களையுடையது. இவற்றில் மகாமண்டபம் கட்டப்பட்டு நாட்டு ஓடு வேயப்பட்டது. தம்பமண்டபம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கட்டப்பட்டு நாட்டோடு வேயப்பட்டது. ஏனைய மண்டபங்கள் 20 ஆம் நூற்றாண்டில், 20 அடி அகலமுடையனவாகக்கட்டப்பட்டு கொழுக்கியோடு வேயப்பட்டு உள்ளது.

இவ்வாலயத்தில் தினசரி மதியத்திலும், இரவிலும் பூசைகள் நடைபெறும். வெள்ளிக்கிழமைகளில், காலைப் பூசையும் நடைபெறும். வெள்ளிக்கிழமை இராப்பூசையை இக் கிராமத்திலுள்ள செங்குந்த குல மக்கள் ஒவ்வொரு குடும்பத்தினரும் முறைவைத்து செய்வித்து வருகின் றனர்.

சித்திரை வருடப் பிறப்பு, சித்திரைக் (கஞ்சி) கதை, தீபாவளி, கந்த சட்டி, விநாயகர் நோன்பு, விநாயகர் சதுர்த்தி, சிவராத்திரி, திருவெம் பாவைப் பூசை, மாசிமகம் முதலிய விசேட பூசைகள் நடைபெறுகின்றன. காசிகாண்டம், கந்தபுராணம், வாதவூர்ப்புராணம், சிவராத்திரிபுராணம், விநாயகர் காப்புக் கதை, சித்திர புத்திரன் கதை, கம்சன்கதை முதலியன பண்டைய காலம் தொடக்கம் படிக்கப்பட்டு வந்தன. தற்போது காசிகாண் டமும், கம்சன் கதையும் படிக்கும் வழக்கத்தை நிறுத்தி விட்டனர்.

விசேட பூசனைகள் காலத்தில் காப்பு விரதத் தீர்த்தம் மட்டக்களப்பு வாவியிலும் ஏனைய தீர்த்தங்கள் யாவும் சமுத்திரத்திலும் ஆடுவது வழக்கம். இக் கோயிலில் இன்னமும் கொடியேற்றித்திருவிழா செய்யும் முறை உண்டாக வில்லை. கோயில் அதிகாரக்குழு எனும் இக் குழு காலத்துக்குக் காலம் கோயில் முன்றிலில் கூட்டப்படும். ஆரையம்பதியிற் செங்குந்தகுல மக்களாற் தெரிவு செய்யப்படும் இவர்கள் வண்ணக்குமார் குழு என அழைக்கபபட்டனர். இக் கோயிலுக்கு ஆரம்பகாலத்தில் நாகப்பரும், வைரவநாதரும் வண்ணக்குமார்களாக இருந்தனர். பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிநாதப்பட்டங்கட்டியாரும், சோமநாதப்பட்டங்கட்டியாரும், உலகநாதரும் வண்ணக்குமார்களாக இருந்தனர். இவர்கள் கோயில் வளவுகளில் பெறப்படும் பிரயோசனங்களையும், ஊர்ப் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மாதாந்த நன்கொடைப் பணத்தையும் கோயிற்காணிக்கை வரும்படி முதலியவற்றையும் கொண்டே பூசைகளையும் கோயிற் குருக்களின் சம்பளத்தையும் கொடுத்து வந்தனர். திருவிழா போன்ற விசேட பூசைகளுக்கு விசேட நன்கொடைகளைக் கிராம மக்களிடமிருந்து பெற்று நடத்தினர். அவ்வாறே தற்போதும் நடைபெற்று வருகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நொத்தாரிஸ் மூத்ததம்பியும், சி. ஞானமுத்து விதானையும், குஞ்சித்தம்பி வைத்தியர், இரத்தினேசர் என்போரும் வண்ணக்குமார்களாக இருந்து பல கட்டிடங்களைக் கட்டுவித்தனர். 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து இன்றுவரை 5 முறை வண்ணக்கர் தெரிவு நடை பெற்றிருக்கின்றது. இத் தேர்வுகளின் போது இடம் பெற்றோர் யாவரும் தமது கடமையைக் கவர்ந்து நின்றார்கள் எனலாம்.

1917 ஆம் ஆண்டுக்குப் பின் நெசவுத் தொழில் வீழ்ச்சியடைந்ததால், பொது மக்களிடமிருந்து நிதி திரட்டி கோயிற் குருக்களுக்குச் சம்பளம் கொடுக்க இயலாது போனமையால் நிருவாகம் சரியாக இயங்கவில்லை. எனவே மூ, சிவசிதம்பரப்பிள்ளை விதானையாராகவும், பெரு நிலக் கிழாராகவும் இருந்தபடியால் தம் சொந்தப் பணத்தைக் கோயில் குருக்களின் சம்பளமாகக் கொடுத்து தனது மரண பரியந்தம் அதாவது 1935 ம் ஆண்டுவரை, கோவிலைச் செம்மையாக நடத்தி வந்தனர். அதன் பின், 1935 ஆம் ஆண்டு தொடக்கம் 1936 ஆம் ஆண்டு பங்குனி மாதம் வரை சிவசிதம்பரப்பிள்ளையின் மகன் டாக்டர். சி. சோமசுந்தரம் அவர்களும் தம் சொந்தச் செலவில் ஐயரின் சம்பளத்தைக் கொடுத்துக் கோயிலை நிருவகித்தார்.

1936 ஆம் ஆண்டு சித்திரை தொடக்கம் 1942 ஆம் ஆண்டு வரை திரு. க. சபாபதிப்பிள்ளை விதானையாரும், வ. சின்னையா முதலியாரும் கா. சோமநாதனும், ந. அழகேசமுதலியாரும் வண்ணக்குமார்களாக இரு -ந்து கோயிலின் பெரும் பகுதியை முற்றாக இடித்து புதிய திருத்தங்களைச் செய்து 1940 இல் கும்பாபிஷேகமும் செய்வித்தனர்.

1942 ஆம் ஆண்டுக்குப் பின் க. சபாபதிப்பிள்ளை விதானையாரின் மரணத்தையடுத்து திரு. ஞா. செல்வநாயகம் ஆசிரியர் அவர்கள் வண்ணக்கராக இருந்து ந. அழகேசமுதலியார், த. செல்வநாயகம் ஆசிரியர், சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்த முதலியார், இ. வடிவேல் ஆசிரியர், மு. தர்மலிங்கம் ஆசிரியர், அ. தேவராசமுதலி ஆசிரியர் ஆகியோரின் உதவியுடன் 1970 ஆம் ஆண்டுவரையும் கோயிலைப் பரிபாலித்து, ஸ்தூபி மண்டபங்கள், மதில், மடைப்பள்ளி, மணித்தூண் முன் மண்டபம் என்பனவற்றைப் புதுப்பித்து 1957 இல் கும்பாபிஷேகமும் செய்வித்தனர்.

1970 ஆம் ஆண்டு முதல் க. கந்தையா ஆசிரியர், த. இராசரெத்தினம். மு. தர்மலிங்கம், ந. அழகேசமுதலியார், சி. விவேகாநந்தமுதலியார், ஞா. செல்லத்தம்பி ஆகியோர் நிருவாகஸ்தர்களாகவிருந்து 1974 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடத்தினர். கோயில் வளவில் கடைகளும் கட்டுவித்தனர். மாரியம்மன் கோயிலையும் புதிய முறையில் திருத்தி அமைத்தனர்.

1976 ஆம் ஆண்டில் இ. வடிவேல் தலைவராகவும் சி. விவேகானந்த முதலியார், காரியதரிசியாகவும், மு. தர்மலிங்கம் பொருளாளராகவும், ந. அழகேசமுதலியார், சீ. சீவஞானமுதலியார் ஆகியோர் உதவியாளர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டு கோயில் நிருவாகம் ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

இவ்வாலயத்திற்கு உலகநாதர் என்பார் ஒரு தென்னைமர வளவை நன்கொடை செய்திருக்கிறார். நொத்தாரிஸ் வே. மூத்ததம்பி முதலியார் அலங்கார மண்டபத்தையும், 1907 ஆம் ஆண்டில் ஒரு மணிக்கோபுரத்தையும் கட்டிக்கொடுத்தார். இந்தியாவிலிருந்து வெண்கலக்கும்பாகுடமும், அசையாமணியும் கொண்டுவந்து அன்பளிப்புச் செய்தார். சி. விவேகானந்தமுதலியாரால் 1950 ஆம் ஆண்டு மரத்திருவாசி, சகடை எனப்படும், வண்டி முதலியன அன்பளிப்புச் செய்யப்பட்டன. 1958 ஆம் ஆண்டு சீ. மாரிமுத்து தவ நிலைக்கோபுரம் சுற்றுமதில் திருத்தினார். சி. இரத்தின சபாபதி முதலியார் ஆகியோரால் அலங்காரமணிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. 1975 ஆம் ஆண்டு ஐ. தம்பிப்பிள்ளையின் உபயமாகக் கோயிலின் முன் மண்டபத்திற்கு இரும்புக் கதவு போடப்பட்டது. 1957 ஆம் ஆண்டு சி. திருமலர்ப்பாக்கியம் ஆசிரியையால் மூலஸ்தான மூர்த்தியின் பத்மாசனத்திற்கு ஓர் அலங்கார முகப்பு ஒன்று பித்தளைத் தகட்டினால் செய்து கொடுக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டு டாக்டர் சி. சோமசுந்தரம் அவர்களின் கூடுதலான நன்கொடையைக் கொண்டு சபாமண்டபம் கட்டிக் கொடுக்கப்பட்டது. அதே ஆண்டில் ஞா. செல்வநாயகம் ஆசிரியரால் இரு அரை விளக்குகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. திருமதி. ந. லெட்சுமிப்பிள்ளை அவர்களால் ஓர் குதிரை வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்புச் செய்யப்பட்டது. கோயிலுக்கு முன்புறம் பூ. சுப்பிரமணியம் என்போரால் ஓர் கிணறு கட்டிக் கொடுக்கப்பட்டது.

திரு நீலகண்ட விநாயகர் பதிகம்

திரு நீலகண்ட விநாயகர் மாலை

திரு நீலகண்ட விநாயகர் பிரணவாட்டகம்

இவை மூன்றும் சேர்ந்த ஒரு நூல் 1911 ஆம் ஆண்டு தென்னிந்திய குமாரசாமிப்பேட்டையைச் சேர்ந்த சதோதய முனிவரால் இயற்றப்பட்டது. நொத்தாரிஸ் மூத்ததம்பி முதலியாரின் கேள்விக்கு இணங்கிப் பாடப்பட்டு அச்சிடப்பட்டது. திரு நீலகண்ட விநாயகர் அகவல் என்னும் நூல் ந. அழகேசமுதலியாரால் பாடப்பட்டது. விநாயகர் ஊஞ்சல் டாக்டர். சி. சோமசுந்தரம் அவர்களால் இயற்றப்பட்டது.

தற்போதுள்ள நிருவாகத்தில் இளைஞர்களையும் சேர்த்து அவர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்கள் வருங்காலத்தில் கோயிலை நல்ல முறையில் நிருவகிக்கச் செய்ய வேண்டும். இளைஞர்களிடையே சமயப் பற்றும் திருமுறை, புராணம் என்பவற்றில் ஈடுபாடும் ஏற்பட வழி செய்ய வேண்டும். இவ் ஆலயத்தின் பேரில் பாடப்பட்ட சில பாடல்கள் இங்கே குறிக்கப்படுகின்றன. இப் பாடல்கள் சதோதய முனிவரால் இயற்றப்பட்டவை:-

## திரு நீலகண்ட விநாயகர் பதிகம்

கனக மணி மகுட வொளி சடில முடி நிலவு
காந்தி பரம்பர மென்னக்
கவுளயலிலிழியருவி சுடரதனைப் பருகவரு
கானன்மது கர சீவரா
மினகதிரெயிறுவிரிய நுதலிலணி தரு சுவண
வில்லேந்து பா சாங்குச
மிலகுகர கரமசர சரமுதவு நெடியகர
மீர்ங்கிரண மின் பவடிவா
மனகமவடியரிடு சிறு பயறு கடலை பொரி
யகடு பெரி தெரியாதப
மழிவிலொரு கதியுதவுபதயுகள கதிரறிய
வருளுரு மிது ததியமலனே
தினகரனை பொருவு சின கரவா ரையம் பதிச்
செங்குந்தர் வீதிமேவுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித மனோரதந் தந்த மா தங்கமுத
திரு நீலகண்டபரமே.

-சதோதய முனிவர்-

## திரு நீலகண்ட விநாயகர் மாலை

சேவிளக் கமாய தசாசிவன் செல்வத்
திரு விளக்கே யடியரகத் திருக்ககலத்தோன்று
மாவிளக்கே யென்னிருகண் மணி விளக்கே யேழை
மதிவிளக் கமாயிருக்க வேண்டி யுனைப்பணிந்தேன்
விளக்கம் வனச மலர்த் தடந்தாங்கநாளும்
பொறிவிளக்க ங்கொண்ட நகர்ப்புறத் தகத்துவம் புனிதக்
கூவிளக்கா நிறையாரையம் பதியங் கோயில்
கொண்டருளுத் திருநீலகண்ட விநாயகனே.

-சதோதய முனிவர்-

## பிரணவ அட்டகம்

காராயு னையல்லால் கதி காணேனடியேனே
ஏராருல கெல்லாந்தரு மெந்தாயுமை மைந்தா
பாரார் தொழும் பொருளேயிசை பண்ணேயிருகண்ணே
சீராரையம்பதி மாமுக சிவமே பிரணவமே.

-சதோதய முனிவர்-

இக்கோயில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தம்பட்டை என்னும் கிராமத்திலிருந்து இங்குவந்து பூசை செய்த சங்கமக் குருக்கள் மாரே நியமிக்கப்பட்டிருந்தனர். பாலநம்பியார், சிவலைக்குருக்கள், குழந்தைக் குருக்கள் ஆகியோர் பூசை புரிந்து வந்தனர். 1907 ஆம் ஆண்டில் செங்குந்த மரபைச் சேர்ந்த கனகசபை நம்பியார் குருப்பட்டம் தரித்து பூசை புரிந்து வந்தார். 1927 ஆம் ஆண்டுக்குப் பின் யாழ்ப்பாணம் கெருடாவில் லில் இருந்துவந்த சைவக்குருமார் பூசை செய்துவந்தனர். அவர்களில் சின்னத்துரைக் குருக்கள், பாலசுப்பிரமணிய ஐயர், சண்முகஐயர், சிவகுரு ஐயர், இராசரெத்தின ஐயர் ஆகியோரின் சந்ததியினரே தற்காலத்துப் பூசை புரிந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (5) வது இயல்: பிள்ளையார் கோவில்கள்

## 7. வாழைச்சேனை (மருங்கையடிப்பூவல்) கைலாய பிள்ளையார் கோவில்

மட்டக்களப்பின் வடக்கே இருபது மைல் தொலைவில் கடல் ஏரி ஓரமாக இருந்த காட்டுப் பிரதேசம் மருங்கையடிப்பூவல் என வழங்கியது. இது கற்குடா என அழைக்கப்படும் ஊரில் இருந்து மேற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ளது. அக்காட்டில் புலி, கரடி, முதலிய கொடிய விலங்குகளும் சஞ்சரித்தன. அதன் கிழக்குப் பகுதியில் சுதேசிகளான வேடு வர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தமக்கே உரித்தான வேட்டையாடுதல், தேன் வெட்டுதல், மீன் பிடித்தல் ஆகிய தொழில்களுடன் சேனைப்பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டு வந்தனர். இதனால் இவர்கள் நல்ல பிரயோசனம் பெற்று வளம் உற வாழ்ந்து வரலாயினர்.

இவ்வித மண் வளத்தையும் எரியில் காணப்படும் மீன் வளத்தையும் அவதானித்த பலர், அமிர்தகழி, மட்டக்களப்பு, நாவற் குடா, ஆரை யம்பதி, அக்கரைப்பற்று, திருக்கோவில் முதலிய இடங்களிலிருந்து வந்து தாம் விரும்பிய இடங்களிலுள்ள காடுகளை வெட்டித் துப்பரவு செய்து மரவள்ளி, சோளம், வாழை, முதலியவற்றைச் சேனைப்பயிராகச் செய்கை பண்ணியும், பக்கத்திலுள்ள ஏரியில் மீன் பிடித்தும் வருவாயைத் தேடிக் கொண்டு வாழந்து வந்தனர்.

தங்கள் சேனைப்பயிர்களில் வாழையே கூடுதல் பிரயோசனம் கொடுத்ததால் காலஞ் செல்ல சேனை முழுவதும் வாழைகளையே நட்டனர். தமது ஊரில் இருந்து புறப்படும் போது இவர்கள் தமது வாழைச் சேனைக்குப் போவதாக குறிப்பிடுவது வழக்கமாயிற்று. இவ்விதமாக எல்லோரும் வழங்கி வந்ததால் இந்தப் பிரதேசம் முழுவதும் வாழைச் சேனை என்ற காரணப் பெயரால் அழைக்கப்படலாயிற்று. அதனால் மருங்கையடிப்பூவல் என்ற அதன் உண்மைப் பெயர் மறைந்து வாழைச் சேனை என்ற பெயரே நிலை பெறலாயிற்று.

வாழைச்சேனைப்பகுதி நல்ல வளமுடையதாகவும், குடியிருப்பதற்கு வாய்ப்பான நிலமுடையதாகவும், அமைந்ததால் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்தவர்கள் எல்லோரும் நிரந்தரமாகவே இங்கே குடியேற லாயினர். இவர்களின் சந்ததி பெருகிக் கால வரையில் ஒரு ஊராக வாழைச் சேனை பரிணமித்தது. இதனால் மேலும் பலர் வந்து குடியேறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதமாக முன்னேற்றமடையும் வாழைச்சேனை, தமது பழக்க வழக்கங்களுக்கு ஒத்து வராதெனக் கண்ட சுதேசிகளான வேடுவர்கள் தமது நிலங்களை விற்று விட்டு பேத்தாளை, கற்குடா, வாகனேரி, மாங்கேணி முதலிய இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர். வாழைச் சேனைக் கிராமம் கண்டி இராச்சியத்தின் ஆட்சிக்குள் ஆறுமுகம் என்ற பட்டங்கட்டியின் அதிகாரத்தின் கீழ் இருந்து வருவதாயிற்று.

வாழைச்சேனையில் சந்ததியில் கூடியவரும் செல்வ நலன்கள் உடையவருமான உடையார் என்பவர், கிராமத்தின் கிழக்குத் திசையில் ஏரியோரமாக ஓரிடத்தில் அனாதரவாக ஒரு கற்பிள்ளையார் கிடப்பதைக் கண்டார். கண்டு தாம் அவரைக் கொணர்ந்து ஓடையோரமாகவுள்ள தமது காணியில் ஒரு மரத்தின் கீழ் வைத்து வழிபட்டு வருவராயினர்.

ஊர் மக்கள் எல்லோரும் சைவசமயிகளாதலால் ஒரு மனதாய் இப்பிள்ளையாரை வழிபட்டு வந்தனர். காலவரையில் வெள்ளி தோறும் பொங்கல் பூசை நியமமாக நடை பெறலாயிற்று. கோயிலின் மகிமையில், அற்புதங்களும் பிரசித்தமாயின. அற்புதங்களுள் ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிடுவோம்.

பிச்சிலான் என்ற பட்டப் பெயரால் அழைக்கப்பட்ட கணபதி என்ற சிறுவன் ஒரு நாள் பூசைக்கு வரப் பிந்தி விட்டான். அவன் கோயிலுக்கு வந்தபோது ஆட்கள் எல்லோரும் கலைந்தும் விட்டனர். அவனுக்குப் பொங்கல் கிடையாததால் மனவருத்தமும் பிள்ளையார் மீது கோபமும் உண்டாயிற்று.

அதனால் தென்னை மட்டையினால் பிள்ளையாரை அடித்தும், காலால் உதைத்தும் உருட்டியும், கொண்டு போய் ஓடையில் விட்டு விட்டுப் போனான். அன்று பின்னேரம் பிள்ளையார் இல்லாதிருப்பதை அவதானித்தவர்கள் காலடிச் சுவட்டைப் பின் பற்றிச் சென்று ஓடைக்குள் கிடக்கும் பிள்ளையாரைக் கண்டனர். கண்டதும் அவரைத் தூக்க முயன்றனர். ஆனால் பிள்ளையார் மிக்க பாரமாக இருந்ததால் தனித்தோ, சேர்ந்தோ அவர்களால் தூக்கிக் கொள்ள முடியவில்லை. ஆகவே அச்செயலைச் செய்தவன் பிச்சிலானே என்றும், அவனைக் கொண்டே பிள்ளையாரைத் தூக்கச் செய்தல் வேண்டுமெனவும் உணர்ந்து அவனைத் தேடிக் கண்டு பிடித்தனர்.

அவனோடு இனிய வார்த்தைகள் பேசி அவனை அழைத்து வந்தனர். பிச்சிலான் வந்ததும் மிகவும் இலகுவாகப் பிள்ளையாரைத் தூக்கிச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கூறியபடி முன்பிருந்த இடத்தில் வைத்தான். அதன் பின்னர், பிச்சிலான் கணபதிக்கு, அவன் பிந்தினாலும் பொங்கல் பிரசாதம் பிந்தாது கிடைத்தே வந்தது.

இவ்விதம் மகிமையுடைய பிள்ளையாருக்கு ஊர்மக்கள் களி மண்ணினால் கோயில் அமைத்தனர். அதனைப் பரிபாலிக்கவும், ஊர்க்கட்டுப்பாட்டைப் பேணவும், இரண்டு வண்ணக்கர், ஒரு கங்காணி, ஒரு அதிகாரி, பத்து முகாமைக்காரர் ஆகியோரைக் கொண்ட ஒரு நிருவாகத்தையும் அமைத்துக் கொண்டனர். இந்த நிர்வாகிகளின் முயற்சியால் பூரணத்துவமான கற்கோவில் கட்டப்பட்டு 1906 ம் ஆண்டில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட கருங்கல்லில் செதுக்கப்பட்ட பிள்ளையார் மூலஸ்தானத்தில் பிரதிட்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற லாயிற்று. முன்னைய பிள்ளையாருக்கும் ஆலயத்தில் ஓரிடம் ஒதுக்கப் பட்டு அவருக்கும் பூசை நடை பெற்று வரலாயிற்று. இன்றும் இப் பிள்ளை யாரின் அநுக்கிரகத்தால் பிள்ளைச் செல்வம் பெற்ற பலர் வாழைச் சேனையிலும் வேறிடங்களிலும் உள்ளனர்.

முன் சொன்ன நிருவாக முறையைப் பின்பற்றி பரிபாலனம் செய்து வரும் சபையானது, இப்போது (1978 ல்) ஏற்பட்ட சூறாவளியால் மிக மோசமாகச் சேதமடைந்துள்ள ஆலயத்தைத் திருத்துவதிலும், மூலஸ்தானத் தைப் புதிதாக அமைப்பதிலும் ஈடுபாடு கொண்டுள்ளது.

கற்கோயில் அமைக்கப்பட்ட காலம் முதல் நித்திய பூசை நடை பெறுகின்றது. விநாயக விரத காலங்களிலும், திருவெம்பாவைக் காலங்க ளிலும் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன. திருவெம்பாவைக் காலத்தில் திருவிழாக்களும் விமரிசையாக நடைபெற்று வரலாயின. இவ்வேளை கண்ணப்பர் கந்தையா என்பவரின் ஆதிக்கத்தில் சில ஆண்டுகள் கோயில் பரிபாலனம் நடை பெற்றது. இந்த இடைக்காலத்தில் மக்கள் ஒதுங்கிக் கொண்டதால் திருவிழா நின்று போயிற்று.

ஆனால் அவர், விசேடமாக வசந்த மண்டபம் கட்டுவித்து நடராஜர், சிவகாம சுந்தரி, விநாயகர் ஆகிய எழுந்தருளிகளை இந்தியாவிலிருந்து தருவித்து, வசந்த மண்டபத்தில் பிரதிட்டை செய்து, திருவாதவூரடிகள் புராண படனத்தையும் தொடங்கி வைத்தார். திருவெம்பாவைப் பூசைக் காலமே இவ்வாலயத்தின் விசேட உற்சவ காலமாகவுள்ளது. மூலஸ்தானத் திருப்பணி நிறைவேறியதும் வருடாந்தம் திருவிழா நடாத்த ஆலோசிக் கப்பட்டுள்ளது. இத்திருப்பணி நிறைவேறி, இவ்வாலயம் செவ்வனே நடைபெற்றோங்கத் திருவருள் சித்திக்குமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (6) வது இயல்: அம்மன் கோவில்கள்

## 1. கொத்துக்குளத்து முத்துமாரி அம்மன் கோவில்

இந்துமதத்தின் எல்லாப் பிரிவுகளும் பரம் பொருளிடம் ஜீவனைச் சேர்ப்பதற்கே வழி செய்கின்றன. இதில் வேறுபாடு இல்லாத காரணத்தினாலேதான் பல பிரிவினர், பல மூர்த்திகளை இஷ்ட தெய்வங்களாக வழிபடுவதைக் காண்கிறோம். மட்டக்களப்பின் மிகப் பழமையான சைவ மதத் தெய்வம் முருகனே என்று முன்பு கூறினேன். முருகனோடு வள்ளிநாயகியையும் சேர்த்த அந்த வழிபாடு, காலப்போக்கில் வெவ்வேறு தெய்வப் பெயரானமைந்த வழிபாடுகளாகவும் மாறிவந்திருக்கின்றது. இந்த வழிபாட்டுமுறை, வெளித்தொடர்புகளாலும், மக்களது விரிந்த சமய நூற் பயிற்சிகளாலும், சிவவழிபாடும், சக்திவழிபாடும் என்று மற்றைய இடங்களிற் போலப் பிரிந்து விட்டதும் உண்டு. எனினும், மட்டக்களப்பைப் பொறுத்தவரையில், சிவன் கோவில்களையமைத்துச் செய்யும் வழிபாடு நிலைபெறாது போகச் சக்திவழிபாடுதான் பெரிதும் கால்கொண்டு வளர்ந்து வருவதாயிற்று. பத்திரகாளி, மாரியம்மன், பேச்சியம்மன், கண்ணகையம்மன் துரோபதையம்மன், கடலாட்சியம்மன் முதலாக மட்டக்களப்பிற் காணப்படும் அம்மன் பெயர்கள் யாவும் உமையம்மனின் வெவ்வேறு அம்சமும், தோற்றமுமான ஒரே தெய்வப் பெயரே என்றும், இப்பெயர்களாற் குறிப்பிடப்பெறும் கோவில்கள் யாவும் அன்னை பராசக்தியும், உலக மாதாவுமான ஒரே அம்பிகையின் திருக்கோவில்களே என்றும் மட்டக்களப்பு மக்கள் கருதுகிறார்கள். இதற் காதாரமாக அம்மன் காவியங்கள், சிந்து, குளுத்தி முதலான பாடல்கள் பலவற்றிலும் நிறைந்த சான்றுகள் காணப் படுகின்றன.

''அவ்வும் உவ்வும் கிறியும் ஆன கிவசோதி
ஆதியுடனே நடனம் ஆடுமகமாரி'' என்பது மகாமாரியம்மன் சின்னக் காவியப்பாடலொன்றின் ஓரடி.

''அணையாத கலியாணி அதிரூப நாரணி
அகிலமுழுதறமே வளர்த்த அபிராமி
மனமகிழ்ந்தன்பரை ஆளுமகமாரி
மாதரி, துரந்தரி, மதனகெம்பீரி
கனகநற் கயிலைவளர் கண்ணுதற்பரையே
காளியென வந்தருளும் ஆதிமாதாவே
எனதுபகை வினைதீர வந்த உமையவளே
ஏகபரமேஸ்வரி உன்பாதமலர் துணையே.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது மகமாரியம்மன் பெரிய காவியப் பாடலின் இறுதிச் செய்யுள். மகாமாரி, காளி, உமையம்மை என்ற பெயர்கள் எவ்வித ஐயமுமின்றி மட்டக்களப்புச் சைவசமயத்தைப் பொறுத்தமட்டில் ஆதிபராசக்தியும், சிவசக்தியுமான அம்பிகையையே குறிப்பனவாக இருப்பதை எங்கும் காணலாம். இதற்கேற்ப, மேலே காட்டிய முதலாவது செய்யுளடிகளுள், ஓங்கார வடிவானவளும், எல்லாச் செயல்கட்கும் காரணமாயிருப்பவளும் சிவனுக்குரிய ஒளிவடிவான சக்தியும், ஆதிபரம் பொருளான அச்சிவபெருமானுடனே நடனமாடுகின்ற (உமாதேவியுமாகிய) மகாமாரித் தேவியே'' என்று மாரித்தாய் வணக்கம் செலுத்தப்பெறுவதைக் காண்கின் றோம். அதே அம்பிகையின் குணப்பரப்புக்களும், தோற்ற வடிவங்களும், மகாமாரியாகக் காட்டப் பெறுகின்றன, மற்றைய பாடலில். ''குறைவுபடாத மங்களஸ்வரூபியும் பேரழகுவாய்ந்த நாரணியும், முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த நாயகியுமாகிய அபிராமி என்றழைக்கப்படும் காமாட்சியன்னையும், அன்பரை மனமகிழ்வோடு ஏற்றுக் கொள்ளும் மகாமாரியும், பொன்மயமான கயிலைமலையில் வீற்றிருக்கின்ற நெற்றிக் கண்ணெம்பிரானுடைய திருவருட்சக்தியும், காளிமாதாவாக வருகின்ற ஆதிபராசத்தியும், உமாதேவியும், பரமேஸ்வரியுமான அன்னையே உன்பாதமலர்களைச் சரணடைகின்றேன்'' என்று அடுத்த பாடலில் மகா மாரியம்மனைத் துதிசெய்கிறார் நூலாசிரியர். எனவே வணக்கமுறைகளிற் காணும் சிறுசிறு வேறுபாடு கொண்டு, மட்டக்களப்பில் வழங்கும் ''அம்மன்'' என்ற சத்தி வழிபாட்டைச், ''சிறு தேவதை வழிபாடு'' என்று கொள்ளுதல் பொருந்தாததாகும்.

இவ்வாறான பராசத்தி கோவில் ஒன்று புளியந்தீவின் வட மேற்கிலே, மட்டக்களப்பு நகர் எல்லையில் கொத்துக்குளம் என்று வழங்கப்பெறும் பாங்கரில் அமைந்திருக்கின்றது. இக் கோவிலில் எழுந்தருளியிருக்கும் பராசத்தியை, மாரியம்மன் என்றும், மகாமாரியம்மன் என்றும், முத்துமாரி யம்மன் என்றும் பெயர் குறிப்பிடுவர். இந்தக்கொத்துக்குளத்து மாரியம்மன் கோவில்தான், மட்டக்களப்புப் பகுதி முழுவதிலும் அறியப் பெற்ற ஆதியான ஒரு மாரியம்மன் கோவில் என்று கூறுகிறார்கள். கலிங்கநாட்டில் இருந்து மட்டக்களப்புக்கு வந்த சக்தி வழிபாட்டுக்காரரான மூன்று சகோதரியர், மாமங்கை நதியில் நீராடி வழிபாடாற்றியபின் புளியந்தீவின் வடமேல் புறவாவி எல்லையை வந்தடைந்தனர் என்றும், அவர்கள், அக்காலம் மக்கள் குடியேறியிருந்த கொத்துக்குளத்தில் ஒருவரும், தாண்டவன் வெளியில் இருவருமாக தாம் கனவிடைப் பெற்ற திருவருளா ணைப்படி, தங்கிவிட்டனர் என்றும், முன்னவர் கொத்துக்களத்தில் நிறுவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி வழிபாட்டு நிலையம் முத்துமாரியம்மன் கோவிலாகவும், தாண்டவன் வெளியில் இரண்டாமவர் நிறுவிய பராசக்தி, கண்ணகை அம்மன் என்று பின்னர் கோவில் கொள்ளப் பெற்றார் என்னும், மற்றையவர் அதே சூழலில் நிறுவிய அன்னை வழிபாட்டு நிலையமே பின்னர் ''மாதா'' கோவிலாயிற் றென்றும் ஐதீகங்கள் வழங்குகின்றன.

மட்டுநகரின் தற்போதைய எல்லைப்புறங்களே ஆதியில் குடியேற்றம் பெற்றிருந்த இடங்கள் என்று தெரிகிறது. அக்கூற்றுக்களின் படி இன்று கொத்துக்குளம் என்று வழங்கும் இடப் பகுதி, முன்பு கதலிவனம் என்ற பெயரில் வழங்கியிருக்கிறது. அந்த ஒழுங்கில், கொத்துக்குளம், அதனை அடுத்த பெரியதுறை, வேப்படித்துறை, விண்ணாங்காடு என்ற நான்கு ஊர்களும் குடிசனங்கள் நிறைந்து வாழப்பெற்றிருக்கின்றன. இவை தற்போது காடடர்ந்து கிடப்பினும், இதற்குச் சான்றாகப் பெரியதுறை என்னும் திருப்பதியிலே, பழமையான முருகன், சிவன், அம்மன்கோவில் களும் மற்றைய ஊர்ப்பகுதிகளில், இடிபாடுகளுடன்கூடிய பழைய பாழ்ங் கிணறுகளும், வயது முதிர்ந்து கிழந்தட்டிப் போன மா, பலா, தென்னை முதலான மரங்களும், பழம் வீடுகளின் இடிபாடுகளும் அங்கங்கே காணப் படுகின்றன. இந்த நான்கு ஊர் மக்களாலும் சிறப்பாகப் பேணிப்போற்றி வரப்பெற்ற ஒரு வழிபாட்டுத்தலமாக விளங்கியிருக்கிறது கொத்துக்குளத்து மகாமாரியம்மன் திருக்கோவில்.

கோயில் எழுந்தகாலம் சுமார் 300 ஆண்டுகட்குச் சற்று முன்னராக இருக்கலாம் என்றே தோன்றுகிறது. இக்கோவிலைப்பற்றிய சாதனங்களில் ஆனைப்பந்திப்பிள்ளையார் கோவிலையும், கல்லடி உப்போடைப் பிள்ளையார் கோவிலையும் பற்றிய குறிப்புக்கள் வருதலும் காலத்தை இவ்வாறு கொள்ள இடம் தருகின்ற தென்னலாம். அக்கோவில் ஆரம்பித்த காலத்திலிருந்து, நீண்டகாலத்துக்கு, மூலத்தானமாகிய ஒரு அறைமட்டும் கொண்டதாகவும், மக்கள் நின்று வழிபடுதற்காக பெரிய ஒரு பந்தரை முன்புறமாகக் கொண்டதாகவுமே இருந்திருக்கிறது. மாரியம்மன் கோவி லாக இத்தலம் பிரபலம் பெற்று வழங்கத் தொடங்கிய காலத்திலிருந்து உயிர்ப்பலி கொடுக்கம் வழக்கம் இருந்து வந்துள்ள தென்றறிகிறோம். தொடக்கத்தில் மூன்று நாட்சடங்குடன் ஆனிப்பூரணைதோறும் நடக்கும் பெருவிழாவே அத்தலத்தின் புகழ்பெற்ற விழாவாகவும், அக்காலத்திலே, அம்மன், தான் அதிட்டித்துத் தோன்றும் பூமரங்கள் மூலமாக (தெய்வமாடிக் கட்டுச் சொல்வோர் வாயிலாக) பக்தர்க்கும், கோவில் தலைவர்கட்கும், ஊர்த்தலைவர், அதிகாரி முதலானோருக்கும், தனிப்பட்டனவும் பொதுவா னதுமான பல உண்மைகளை அறிவிக்கும் வழக்கம் இருந்திருக்கிறதென்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கப் பெறுகின்றது. கொத்துக்குளத்து மாரியம்மன்கோவிலில் கூறப் பெறும் கட்டு (தெய்வீகவாக்குகளின்படி) ஒழுகுதல் மிகுந்த பயபத்தியோடு அனுசரிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இத்தகைய ஆண்டுச் சடங்குவிழாவை விட, வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் மதிய வேளைகளில் மட்டும் பல ஊர்களிலிருந்துவரும் அடியார்கள் பொங்கல் செய்து படைத்து வழிபா டாற்றி வந்ததாகவும் அறிகின்றோம்.

காலப்போக்கில், மேலே குறிப்பிட்ட நான்கு ஊர்களிலும் இருந்த மக்கள் மெல்ல மெல்லக் குடிபெயர்ந்து தூர இடங்களுக்குச் சென்றிருக் கிறார்கள். பிள்ளையாரடி, கல்லடித்தெரு (புளியந்தீவின் தென் கிழக்குப் பகுதி), வலைபிறவு, செங்கலடி என்ற நான்கு ஊர்களுக்கும், இம் மக்கள் கலந்து சென்று குடியேறியுள்ளனர். இந்த இடப் பெயர்ச்சிக்குக் காரணம், நீர்வசதிக் குறைவு, தொற்றுநோய்கள் பரவியமை, முக்கியஸ்தர் சிலருக்குக் கிடைத்த அம்மனின் கட்டளை முதலியனவாகக் கூறப்படுகின்றது. கோவிலை அண்டியிருந்த குடி மனைகளிலிருந்து அடிக்கடிகேட்கப் பெற்ற அவலிடிக்கும் சத்தம் அம்மனுக்குப் பிடிக்கவில்லையாம். அதனால் மக்கள் தாம் பெற்ற கனவுக் கட்டளைகளின்படி இடம் பெயர்ந்தனரென்றும் கூறுகிறார்கள். மட்டக்களப்பு நாட்டிலுள்ள அம்மன்கோவில்களில் கதவுதிறந்து சடங்கு தொடங்கினால் அவ்வூர்களில் அவல் இடித்தல், மா இடித்தல், மஞ்சள் இடித்தல், பொரியல் வகைசெய்தல், பலகாரம் சுடுதல் முதலானவையும் தடுக்கப்படுதலை இன்னமும் காண்கின்றோம். கொத்துக்குளத்து மாரியம்மன் கோயில் பராமரிப்பாளர் குடிபெயர்ந்து சென்றாலும், அதே மக்களுக்கே, குறிப்பாக பிள்ளையாரடி, கல்லடித்தெரு, வலையிறவு, செங்கலடி ஆகிய நான்கு ஊரவர்களுக்குமே இந்த கோவில் அதிகாரம், நிருவாக உரிமை என்பவை உரியனவாக இருத்தலைக் காண்றோம். கொத்துக்குளம் முதலான நான்கு ஊர்களின் சார்பிலும் கோவில் நிருவாகத்தவர்களாக இரு வண்ணக்குமார் நியமனம் பெறுதல் வழக்கமாக இருந்துள்ளது. மக்களின் குடிப் பெயர்ச்சிக்குப்பிறகு, பிள்ளையாரடியின் சார்பில், ஒருவரும் கல்லடித்தெரு அல்லது வலையிறவி லிருந்து இன்னொருவருமாக இரு வண்ணக்குமார் தெரிவு பெறுதல் நியதியாயிற்று. 1957 ம் ஆண்டில் இருந்து இந்த வண்ணக்குமுறைமாறி நிருவாகக் குழுமுறையிலும், பின் 1965 ம் ஆண்டு தொடக்கம் அதிகாரசபை அமைப்புமுறையிலும், கோயில் நிருவாகம் நடைபெறத் தொடங்கியுள்ளது. முன்னைய நான்கு ஊர்களுடன், காலத்திற்கேற்ப ஊறணி, தூண்டி, என்ற இரு ஊர்களையும் சேர்த்து ஊருக்கு இரண்டு பிரதி நிதிகள் வீதமாக 12 உறுப்பினரும், ஒரு தலைவர், இரு உபதலைவர், இரு இணைக்காரியதரிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், ஒரு பொருளாளர் என்னும் உத்தியோகத்தருமாக, ஆகப் பதினெட்டுப்பேரைக் கொண்டது தற்போது நடைமுறையிலிருக்கும் ஆட்சிக்குழு ஆகிய அதிகாரசபை. எனினும், பிள்ளையாரடியைச் சேர்ந்த ஒருவரே அந்தப் புதிய அதிகாரசபைத் தலைவராக இருத்தல் வேண்டும் என்ற நியதி தவறாமை கவனிக்கத்தக்கது. இதிலிருந்து பிள்ளையாரடியிற் தற்காலம் வசிப்பவரின் முன்னோரே, அன்று கொத்துக்குளத்து மாரியம்மன் கோவிலை அண்டியிருந்து நிருவாகம் முதலான பல கடமைகளிலும் முக்கியத்தராக இருந்திருக்ககக்கூடும் என்ற கருத்து வல்லமையுறக்கூடியதாகின்றது.

நமக்குக் கிடைக்கின்ற சான்றுகளின்படி வெள்ளை வண்ணக்கர், கறுத்தவண்ணக்கர் என்ற இருவரின் நிருவாக காலம் தொடக்கம் இக் கோவிலைப்பற்றிய செய்திகள் தெளிவாக உள்ளன. இவ்வண்ணக்குமாரே கொத்துக்குளத்து மாரியம்மன் கோவிலைச் சூழ்ந்துள்ள சுமார் பன்னிரண்டு ஏக்கர் வயல் நிலங்களையும், கோவிலுக்கு நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள். இவர்களின் பெயர்கள் இப்படியே சாதனங்களிலும் காணப்பெறுகின்றபடியால் இன்னாரின் உண்மைப் பெயர்களை அறியக்கூடியதாயில்லை. அவர்களைத் தொடர்ந்து கடமை புரிந்த வண்ணக்குமாரில் பிள்ளையாரடியைச் சேர்ந்த நல்லையா உடையார், குமானிப்போடியார் ந. உ. வேல் நாயகம், சி.தோ. ஐயாத் துரை, கல்லடித்தெருவைச் சேர்ந்த மாப்பிள்ளைராசா எனப்படும் இராசாப்போடியார், முத்துலிங்கப் போடியார், வலையிறவைச் சேர்ந்த மாரிமுத்து விதானை, சிக்கிப்போடி என்றழைக்கப்படும் ச. பொன்னுத்துரை, என்பார் பதவியில் இருந்த காலத்தில் ஆலய நிருவாக முறையிலும், பூசை, சடங்கு, திருவிழா, உயிர்ப்பலியிடல் முதலான கோயிற் கருமங்களிலும், குறிப்பிடத்தக்க இடையீடுகளும் மாற்றங்களும் இடம் பெற்றுள்ளன.

அம்மனுடைய வருடாந்தச் சடங்கு முடிவில், உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் நீண்டகாலமாக இக்கோவிலில் இருந்துள்ள தென்று கண்டோம். பேயாட்டத்துடன் கூடிய இந்தச் சடங்குகளையும், உயிர்ப் பலியிடும் வழக்கத்தையும் நிறுத்தவேண்டும் என்ற எதிர்குரல் காலத்துக்குக் காலம் பொதுமக்களிடையிருந்து எழுப்பப்பெறுவதும் பல தடவைகளில் அது வலுப்பெறாமல் போவதும் அடிக்கடி நடந்துள்ளன. மேலே குறிப்பிட்டுள்ள வண்ணக்குமாரில் சிலர் மாற்றத்தை ஏற்க விரும்பாமலும் இருந்திருக்கிறார்கள். நல்லையா உடையாரும், குமானிப்போடியாரும், வண்ணக்குமாராயிருந்தபோது சுமார் 1922 ம் ஆண்டில் சடங்குகளின் ஒழுங்கிலே ஏற்பட்ட சில குறைபாடுகளால், சடங்கு செய்யும் வழக்கம் நிறுத்தப்பட்டதோடு மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடகாலம் தொடர்ந்து திருவிழாச் செய்யும் நடைமுறையும் இடம் பெறலாயிற்று. இந்த இடைக்காலத்தில் பக்கத்து ஊர்களில் மழை குறைந்து பஞ்சம், பசி, வறுமை, தொற்றுநோய்கள், அகாலமரணம் முதலான சஞ்சலம் என்பன பரவலாகத் தோன்றின என்ற சாட்டில் திருவிழா முறையைக் கைவிட்டு சடங்கினை, அதன் ஆதரவாளர் மீண்டும் சேர்க்கச் செய்தல் இலகுவாயிற்று. பன்னிரண்டு வருட காலம் சடங்குகள் ஒருவாறு நடந்து வந்த போதும் எதிர்ப்பு நிலை கைவிடப்படவில்லை. சடங்குகள் நடப்பினும் உயிர்ப்பலி கொடுத்தல் நிறுத்தப்படல் வேண்டும் என்று வைத்திய கலாநிதி வா. பொன்னுத்துரை அவர்களும், அவரது தமையனாராகிய வா. ஐயாத்துரை அவர்களும், சா. பொன்னுத்துரை என்பாரும் 1935 ம் ஆண்டு உயிர்ப்பலியிடுதலை எதிர்த்துச் சத்தியாக்கிரக இயக்கமொன்றை ஆரம்பித்தனர். இம்மூவரும் ஆலய நிருவாகத்துக்குரிய நாலு ஊர்களில் ஒன்றான வலையிறவு என்னும் இடத்தைச் சேர்ந்தோராதலால், ''இவர்கள் கோவிற் பூசைகளைக் குழப்புகிறார்கள்'' என்று இவர்மீது குற்றம் சுமத்தி இவர்களை அகற்றவும் மற்றையோரால் முடியவில்லை. ஆண்டுதோறும் சத்தியாக்கிரகம் விரிவடைந்து வளர்ந்து, வலுப்பெற்று 1939 ல் உச்சக்கட் டத்தையும் அடைந்தது. எனவே இதனை மேலும் நீண்டுசெல்ல விடாமல் வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் தீர்த்துவைத்துக் கோவில் ஆராதனைகளைச் சமாதானமாகச் செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் பலரும் விருப்பம் தெரிவித்தனர். அதன்படி வாக்கெடுப்பும் நடைபெறலாயிற்று. வழக்கமாக நடைபெற்று வந்த உயிர்ப்பலி கொடுக்கும் ஒழுங்கினை மாற்றவோ நிறுத்தவோ கூடாது என்ற கட்சிக்கு வெற்றியும் சத்தியாக்கிரகிகளின் கட்சிக்கு தோல்வியுமாகவே அது முடிவுற்றது. உயிர்ப்பலியிடக்கூடாது என்று சத்தியாக்கிரம் செய்யக்கூடாது என்று ஒரு தீர்மானமும் மகா சபையில் நிறைவேற்றப்பெற்றது. இது மட்டக்களப்பு நாடு முழுவதும் பரந்த ஒரு கிளர்ச்சியையும், எதிரொலிப்பையும் உண்டாக்கிவிட்டதெனலாம். இந்நிலையில் சடங்கும், உயிர்ப்பலியும் பல சங்கடங்களுக்கிடையில் ஒருவாறு நடந்து வந்தன. இறுதியில் உயிர்ப்பலியிடாது சடங்கு மட்டும் நடைபெறும் ஒழுங்கொன்று 1948 ம் ஆண்டு முதல் அமைதியான முறையில் கொண்டுவரப் பெற்றேவிட்டது எனலாம். சில ஆண்டு கழிந்தபின் (1951 முதல்) சடங்கின் போது தெய்வமாடும் வழக்கமும் கைவிடப்பெற்றது. உயிர்ப்பலிக்குப் பதிலாக, அம்மனைப் பூசிப்போர் தத்தம் வீடுகளில் ஆண்டுக்கொரு முறை செய்வது போன்ற, ஆனால் பெரிய அளவிலான, சர்க்கரை அமுது கொடுத்துச் செய்யும் பெரும் படையற் பூசை வழக்கம் சேர்க்கப் பெற்றிருக்கின்றது. எனினும் சக்தி வழிபாட்டிற்குரிய வேதாகம முறைகளுக்கமைந்த பூசைபுனற்காரங்களே கொத்துக்குளத்துமாரியம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலிலும் சரிவர இடம் பெறல் வேண்டும் என்ற பொது நோக்கு மக்களுள்ளத்தில் பரவலாக வேரூன்றி விட்டதால், 1952 ம் ஆண்டு (27.7.1952 ல்) நடந்த மகாசபைக் கூட்டமானது, இக்கோவிலில் இனிமேல் சடங்குகள் செய்வதில்லை என்றும், பதிலாகத் திருவிழாக்களே நடைபெறல் வேண்டும் என்றும், நிரந்தரத் தீர்மானமொன்றை நிறைவேற்றியதோடு, திருவிழாக்களையும் உரியோருக்கு நியமித்துத் திட்டமும் செய்து வைத்துவிட்டது. அத்திட்டத்தின்படி, திருவிழாக்களின் முடிவில், -ஆனிப் பூரணையிலன்று பிள்ளையாரடியிலுள்ள மட்டக்களப்பு வாவிப்பகுதியில் தீர்த்தமாடி வரும், ஒழுங்கும், பின்னர் சர்க்கரை அமுதுப் பூசை நடை பெறுவதும் நிலையான வரன்முறையாக ஏற்றுக்கொள்ளப் பெற்றன. இன்று வரை இந்த ஒழுங்கு தவறாமல் நடந்துவரக் காண்கின்றோம்.

சடங்குமுறை நீக்கப்பட்டு விட்டமையால், அந்தச் சடங்கு முறைகள் இக் கோவிலில், எவ்வாறு இருந்தனவென்பதை ஒருவாறு அறிந்து கொள்வதற்காகவேனும் பயன் படலாமென்று கருதி சிலவற்றை இங்குக் குறிப்பிட முற்பட்டேன். இக் கோவில் தோன்றிய காலத்திலிருந்து, வீரசைவர் பரம்பரையைச் சார்ந்த சைவக்குருக்கள்மாரே மூலத்தானத்தில் அம்மனுக் குப் பூசையாற்றி வருகின்றனர். கோவிற் சடங்குகளைமட்டும் அதற்கென உள்ள கட்டாடிமார், (பூசாரிமார்) செய்வது வழக்கம். கோவில் மூலத்தானத் துள் இவர்கள் செல்வ தில்லை. மூன்றாம் மண்டபத்துள் சடங்குக்காக அம்மனுக்கென அமைக்கப்படும் முதற் பந்தலில் தலைமைக் கட்டாடி நின்று தமிழ் மந்திரங்களால் உடுக்கு, தவில் முதலான வாத்தியங்கள் ஒலிக்கப் பூசனைசெய்து உருக்கொள்வோர் மீது உரிய தேவதைகளையும் ஏற்றி ஆடச்செய்து, அதாவது தெய்வம் ஆடுவோர் ஆவேசங் கொண்டு ஆடத்தக்கதான சூழ்நிலையை மந்திரங்களாலும், காவியப்பாடல்களாலும், உடுக்கை ஒலி முதலியவற்றாலும் உண்டாக்கிவைப்பர். அவ்வேளை, கோவில் முழுவதும் பயமும் பக்தி பரவசமும் கலந்த நிலை பொங்கக் காணலாம். மேலும் கோவில் உள்வீதியில் வடபுறமாக வயிரவர் கோவிலின் முன் காளி தேவிக்கு ஒரு பந்தலும், தெற்கு வீதியில் வீரபத்திரர், நரசிங்கர், சுவாமியர்க்கு இரு பந்தல்களும் அமைத்து அவற்றிலும் இவ்வாறே தினமும் பூசை நடக்கும். இவைகளைவிட கோவிலின் நேர் எதிரே வெளிவீதியில் யாகசாலை எனப்படும் ஒரு பெரிய பந்தலையும் அமைத்து பூசை செய்வர். சடங்கின் இறுதிநாள் ஒட்டிப் பலி கொடுக்கப்படுதற்குரிய ஆடு, கோழிகளை இந்த யாகாசலைக்கு கொண்டு வருவர். யாகசாலைக்குண்டத்தின் பக்கலில் உள்ள கழுமரத்தடியில், ''கழுவடிக்கிடா'' எனப்படும் தலைப் பலிக்கிடா வும், தலைப்பலிச் சேவலும் கட்டப்பெற, யாகசாலையின் நான்கு வாசல்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிலும் ஒவ்வொராடும், ஒவ்வொரு கோழியுமாகக் கட்டிவைக்கப்படும். மறுநாளாகிய உயிர்ப்பலி நாட்காலை வேளையில் கோவிற்கதவு, வெளிமதில் வாசலிலுள்ள ''கேற்'' என்பவற்றை மூடி, வெளியில் நடப்பது கோவிலுள் தெரியாதவாறு வெள்ளைச் சீலையால் கேற்றை மேலும் மூடி மறைத்தபின் தலைக்கடா, தலைச்சேவல் என்ற ஒழுங்கிலிருந்து பலியெடுக்கும் தேவதைகட்காக உரிய கடாக்களும் சேவல்களும் முறையே கழுத்துத் துண்டித்துப் பலிகொடுக்கப்படும். அந்நிகழ்ச்சியின் பின்னர் நீரிற் தோய்ந்து உடைமாற்றியன்றி, இந்த வெளி நிகழ்ச்சியிற் பங்கெடுத்தோரோ, பார்த்து நின்றோரோ உள்வீதிக்குக்கூடச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. சடங்குகாலமுற்றும் கட்டாடிமார் எனப்பெறும் பூசாரிமாரும், தெய்வம் ஆடுவோரும், ஆலாத்தியெடுக்கும் சிறுமியர்களும் முதலான யாவரும் கோவிலிலேயே தங்கியிருத்தலும் கோவிற் செலவில் அவர்கள் பராமரிக்கப் பெறுதல் வழக்காறு. வருடந்தோறும் இவ்வாறு நடைபெற்று வந்த, சடங்குகள் ஒன்பதும், இறுதியான பலிச்சடங்கு ஒன்றுமாகும். இச்சடங்குகள் முறையே, கோவில் ஐயர், வண்ணார், ஊறணிமக்கள், தூண்டிமக்கள், வலையிறவுமக்கள் ஆகியோரால் நடத்தப் பெற்று வந்தன. பலிச்சடங்குச் செலவுகள் பொதுமக்களாற் கொடுக்கப்படும் நேத்திக்கடன்களேயாகும். சடங்குகள் திருவிழாக்களான பின்னும் இதே ஒழுங்கிலேயே அவை நடைபெறுகின்றன. பலிச்சடங்கு நிறுத்தப்பட்டு அது பள்ளயமாகவும், சர்க்கரை அமுதாகவும் மாறியபின் பொதுச் செலவில் அவை இலகுவாக நடந்து வரக் காணலாம்.

தலைக்கட்டாடியார், சடங்கின் முதல் நாளில் கோவிலுக்கு எதிரிலுள்ள வாவியிலிருந்து கலசத்துள், நீர் கொண்டு வந்து அம்மனின் திருவடி விளக்கில் ஊற்றி விளக்கேற்றி வைப்பர் என்றும் அது அணையாத நிறைமணி விளக்காக இறுதிநாள் வரையும் எரிந்து கொண்டிருக்கும் அதிசயம், அண்மைக்காலம்வரை நிகழ்ந்து வந்ததென்றும் கூறப்படுகின்றது. இதே தலைக்கட்டாடியார், பலிச்சடங்கின் முதல் நாள் மாலை அம்மனின் வேடம் பூண்டு நிறை குடமும் பிரம்பும் தாங்கி, ஊர்வலம் வருவர் என்றும், வழியில் பெரியதுறை, விடத்தல்முனை, வலையிறவு, அனுமார்மாவடி, தாண்டவன்வெளி, கண்ணகியம்மன் கோவிலடி ஆகிய இடங்களில் மக்கள் திரளாகக் காத்திருந்து நேர்த்தி செலுத்தி கட்டுக் கேட்டுப் பயன் பெறுவது வழக்கம் என்றும் கூறுகிறார்கள். இவ்வாறான ஊர்வலம் ஒன்றின் போது, போத்துக்கீசரான பறங்கியர் இருவர் ஊறணிக்கருகாமையில் பனைமரச் செறிவில் மறைந்திருந்து இந்த ஊர்வல அம்மன் கட்டாடியாரைச் சுட்டுக் கொல்லக் காத்திருந்தனர் என்றும், ஊர்வலம் அந்த இடத்துக்கு வருவதற்கு சிறிது முன்பே அம்மன் கட்டுரைத்து, அவர்களைக் காட்டிக் கொடுத்ததாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், தமது குற்றத்தை ஒப்புக் கொண்ட அவர்கள், தண்டனையாகக் கோவிலுக்குச் செய்து கொடுத்த வெண்கலமணி ஒன்று கோவிலில் இன்றும் உளது என்றும் அறிகிறோம்.

சுமார் 1832 ம் ஆண்டளவிலேதான் உட்புகுந்து கொண்டதாகக் கருதப்படுகின்ற இந்தச் சடங்கு முறை திருவிழாவாக மாறியதற்கேற்ப கோவில் அமைப்பும் மாற்றம் பெற்று வளர்ந்து வந்திருப்பதை நாம் காணலாம். பாரிய சொறிக்கற்களை அடுக்கி வம்பரைத் தேனிற் குழைத்த, சுண்ணாம்பாலாகிய வலியகொங்கிறீட்டினாற் திண்ணமுறக் கட்டிடங்களை அமைப்பது பண்டிருந்தே மட்டக்களப்புக்கட்டிட அமைப்பு முறையாகும். இவ்வாறே கொத்துக் குளத்து மாரியம்மன் கோவிலும், ஆதியில் கருவறை மட்டுமாக அமைந்திருந்த போதும் இதேமுறையில் மூன்று அடிக்கனமான வலிமை வாய்ந்த ''தேன்சுவர்'' களால் அமைக்கப் பெற்றிருக்கிறது. சிறிது காலத்தால் இம்முறையில் 2 ம், 3 ம் மண்டபங்களும் கட்டப் பெற்றிருக் கின்றன. பின்னர்க் கோவிலின் தெற்கில் வெளிவீதியில் ஒரு தீர்த்தக் கேணியும் கட்டப் பெற்றிருக்கின்றது. 1815 ம் ஆண்டில் வீரசைவ மரபினரும் சைவக்குருக்களுமான கதிரேசக்குருக்களும் அவரின் சகோதரர் சிதம்பரக் குருக்கள், கணபதிக்குருக்கள் என்பாரும், வந்து இக் கோவிற் பூசனையைக் கையேற்கும்போது கோவில் அமைப்பு இவ்வாறே அமைந்திருந்ததாக அன்னார் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத்து உடுப்பிட்டியைச் சேர்ந்த துவாளியைப் பிறப்பிடமாகக் கொண்டோர். இவர்களது பரம்பரை யினரே தொடர்ந்து இங்கு பூசை செய்து வருகிறார்களென்றும் இன்று பூசை செய்வோர் அவரின் எழாவது தலைமுறையினரென்றும் அறிகின்றோம். சைவக்குருக்கள்மார் கோவிலைக் கைறேற்கும்போது முறையான கும்பாபி ஷேகம் எதுவும் நடந்திருக்கவில்லை. இதனால் ஆகம அமைப்புகளுக் கேற்பக் கட்டிடத்திற் சில திருத்தங்கள் செய்து கோவிலின் முன்னால் ஒரு நந்தியும் அமைத்து 1864 ம் ஆண்டு, வைகாசிப்பூசத்திலன்று சம்புரோட்சண கும்பாபிஷேகமொன்று நடத்தியிருக்கின்றனர். பின்னர் நாலாம் மண்டபமும் உள்வீதிச் சுற்று மதிலும் எழுப்பப்பெற்று, 1922 ல் இரண்டாவது முறையாக கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள். இந்த இரண்டாவது கும்பாபிஷேகம் வரை தினமும் மூன்று வேளையும் பட்டைச்சாதம் படைத்துப் பூசை நடத்தப் பெற்று வந்திருக்கிறது. அத்தோடு வெள்ளிக்கிழமை மதியந்தோறும் விசேடபூசை, பொங்கல் என்பனவும் நடந்துள்ளன. ஆனால் இக் கும்பாபிஷேகத்தின்போது கோவிலின் முன்னாலிருந்த நந்தி, பராசத்தியின் சின்னமான சிங்கமாக மாற்றப்பெற்றுள்ளது. வயிரவர் கோவிலையடுத்து ஒரு நாகதம்பிரான் கோவிலும் கட்டப்பெற்றது. சில காலத்தின் பின், கோவில் வாசலின்பக்கத்தில் அம்மனுக்கு எதிர்த்திசையினை நோக்கியவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தவராயர் கோவிலொன்றும் கட்டப் பெற்றுள்ளது. இக்காலத்தில் தான், கேணியருகில் உள்ள மடமும் கட்டப் பெற்றிருத்தல் கூடும். தொடர்ந்து வண்ணக்குமுறை நிருவாகம்மாறி நிருவாகசபை ஒழுங்கும், பதினெண்மர் கொண்ட ஆட்சிக்குழு அமைப்பும் பெற்றபின் கோவில் நிருவாகம், கட்டிடத்திருத்தம், புனரமைப்பு, வேறு புதிய கோவில்கள் கட்டுதல், முதலான பல முன்னேற்றமான மாற்றங்களை இத்தலம் அடைந்துள்ளது. பழைய கட்டிடம் முழுவதும் இடிக்கப்பெற்று புதிய முறையில் கருங்கற் தளமும், வீதியும் அமைந்தன, புதுமுறையிலான ஓவியமும், சிற்பமும், நிறைந்த விமானம் கொண்டதாய், ஆகம விதி முறைக்கமைய நிருமாணிக் கப் பெற்ற கொத்துக்குளத்து மாரியம்மன் கோவிலின் மகா கும்பாபிஷேக மும் 1973 ல் நடந்தேறியது. மகாமாரியம்மையார் உமையம்மையாராகவே காட்சி தந்து, அக்கோவிலிலுள்ள சிங்கவாகனத்தின் மீது இருந்த கோலத்தில் காட்சிகொடுத்து விளங்கும் அருளன்னையாக விளங்குகிறாள். இன்றுள்ள முத்துமாரியம்மன் இதற்கு முன்பு இக் கோவிலுள் இருந்த அம்மன் சிலையின் கீழ் வைக்கப் பெற்றிருந்த ''யந்திரம்'' மலையாள மந்திரம் வரையப் பெற்ற, தாமிரத்தகட்டினாலான தென்றும், அந்தத்தகடு இறந்து படப்பட உயிர்ப்பலி கோரும், அம்மனின் கோரமூர்த்தமும் காலகதியில் வலியிழந்து போயிற்றென்றும் இங்கு கூறுவார்கள். இக்கூற்றை மெய்ப்பித்து, அருளொளி வீசிக் கொண்டிருக்கிறாள் இன்றைய அன்னபூரணியான மகமாரி.

மட்டக்களப்புப் பகுதிக் கோவில்கள் பலவற்றில் இருந்த உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கத்தினை மாற்றியமைத்தவகையில் மட்டுமன்றி, கோவிலமைப்பு பூசை முறைகள் முதலிய முக்கியமான வேறு பலவற்றிலும் முன்னோடியாக விளங்கும் இக் கோவிலில், வருடாந்தத் திருவிழாவாக மாற்றம் பெற்ற ஆனிச்சடங்குடன் சித்திரை வருடப்பூசை, தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திராபூரணை, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடி அமாவாசை, ஆவணிச்சதுர்த்தி, புரட்டாதிச் சனி, நவராத்திரி, கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவாதிரை முதலான 52 சிறப்புப் பூசைகள் ஒருவருடத்தில் நடக்கின்றன. மார்கழித்திருவாதி ரையிலன்று காலை அம்மனைக் கோவிலின் வீதிவலமாகக் கொணர்ந்து, உள்வீதியின் வடமேற்கு மூலையிலுள்ள தீர்த்தக்கிணற்றடிக்கு வந்ததும் திரைச்சீலையால், மறைப்புக்கட்டி அம்மனுக்குத் திருமுழுக்காட்டுகிற வழக்கமொன்று இத்தலத்தில் நடைமுறையிலிருக்கிறது. இது ஒரு புதுமை யான எண்ணத்தை வலியுறுத்தும் நிகழ்ச்சியாகும். அது, மார்கழித்திரு வாதிரை நாளிலேயே உமையம்மன் ருதுவானார் என்ற ஐதீகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலேயே அம்மனுக்கு அன்று முழுக்காட்டுவதும் மஞ்சள் விளை யாட்டு நடத்துவதும், அன்றைய விசேட பிரசாதமாக பிட்டு, களி என்பன செய்து அம்மனுக்கு படைத்தலும் நடக்கின்றன என்பர். அம்மனை இவ்வாறு வடமேல் மூலையில் வைத்துத் திரையிட்டு மறைத்து அபிடேகிக்கும் வழக்கம் இங்கு நடைபெறுவது போல் வேறு கோவில்களில் காணப் பெற வில்லை. இது போலவே, ஆனிப்பூரணையிலன்றும், அம்மன் தீர்த்தமாடு தற்குப் பிள்ளையாரடிக்குச் சென்று திரும்பும் போதும், வழியெல்லாம் பக்தர்கள், ஆண், பெண் பேதமின்றி ஒருவர்க்கொருவர் மஞ்சள் நீர் தெளித்து விளையாடி, மகிழ்ந்து கலந்து அம்மனுடன் வரும் வழக்கமும் இங்கு மட்டுமே உண்டு.

இந்த 1977 ம் ஆண்டில் அம்மன்கோவிலின் உள்வீதியில் பின்புற முள்ள இரு மூலைகளிலும் முறையே பிள்ளையார் கோவில் ஒன்றும், முருகன் கோவில் ஒன்றும் புதுவதாக அமைத்துக் குடமுழுக்காட்டித், கோயிற் சிறப்பை மேலும் உயர்த்தியுள்ளார்கள், இன்றைய ஆட்சிக்குழு வினரும், அன்பின் வள்ளலான அதன் தலைவர் திரு.வ. நாகையா அவர்களும். அவர்களது நற்பணி மேன்மேலும் சிறந்து வளர்ந்தோங்க அன்னையின் திருவருள் என்றும் உடனிற்குமாக.

இத்திருத்தலத்தைப் பொறுத்தவரையில் வருமானத்துக்கும், செல்வத் துக்கும் குறைவே இல்லை எனலாம். கோவிலைச் சூழ்ந்துள்ள 12 ஏக்கர் நெல்வயல்களைவிட, கரவெட்டியில் உன்னிச்சைப் பாய்ச்சலால் இருபோ கமும் பொன்விளையும் 40 ஏக்கர் நெற்காணியும் சென்ற ஆண்டு, இன் னொரு அன்பரின் நன்கொடையான 10 ஏக்கர் நெற்காணியும் ஏராளமான தங்க வைர நகைகள், பல பட்டுச்சேலைகள் முதலானவற்றைக் கொண்ட பெரும்பணக்காரி, கொத்துக்குளத்து மகாமாரி. அருள் வள்ளலான அந்த அன்னை தன்னைச் சரண்புகுந்தவர்க்கும் நிறைய வாரி வாரி வழங்கி இருக்கிறாள், அள்ளிச் சொரிகிறாள்.

இவ்வன்னையைத் தண்ணளிச் செல்வியாக்குதற்காக 1815 ன் முன் னரே சைவக் குருக்கள் சிலர் இங்கு வந்து சேர்ந்து விட்டனர் என்றும், அவர்கள் ஆறுமுகநம்பியார் முதலாக நம்பியார் என்ற பெயர் பூண்டவராய் இருந்தனரென்றும் தெரிகிறது. அன்னார் தாழங்குடாவிலேதான் முதலிற் குடியிருந்தார்களென்றும், அவர்கள் குடியிருந்து, காணி கைமாறிப்போன பின்னரும் அந்த இடம் நம்பியார்வளவு, அல்லது ஐயர் வளவு என்றே இன்னமும் வழங்குகிறது என்றும் அறிகின்றோம். மட்டக்களப்பிற் பல்வேறு கோவில்களிலும் பூசனை செய்து வந்த சங்கமக்குருக்கள்மார் கொக்கட்டிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலை, தாழங்குடா, வந்தாறுமூலை, களுவாஞ்சிக்குடி என்ற ஊர்களிலுமே முக்கியமாகக் குடியேறியிருந்தனர் என்பதற்கு வேறு சான்றுகளுமுண்டு. ஊறணியில் குடியிருந்த வேடவெள்ளாளர் பரம்பரையினரே கொத்துகுளத்துக் கோயிற் தொண்டுகளுக்குரியோராக இருந்து வருகின்றார்கள் என்பது மட்டும் தொண்டூழியம் பற்றிய ஒரு வழக்கமாகத் தெரிகின்றது. இன்னொரு பொதுவான ஐதீகமும் இக் கோவில் பற்றியுள்ளதை இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. மட்டக்களப்பில் உள்ள அம்மன் கோவில்களில் சடங்குக்காகக் கதவு திறந்து செய்யப்படும் பூசையின் போது ''பிதிர்மடை'' ஒன்று வைத்துக் கோவிலைக் கட்டினவர் அல்லது முதலாவது வண்ணக்கர், அல்லது குறித்த கோவிலின் தலத்தினது அமைப்புக்குக் காரணமாயிருந்தவர் முதலானோருக்கு அம்மடைப் பூசையை ஒப்புக் கொடுத்து அன்னாரின் பெயர்களையும் முறையே சொல்லி அர்ச்சனை போடுதல் பெரும்பாலும் வழக்கம். கொத்துக்குளத்து மாரியம்மன் கோவிற் சடங்கின் முதல் நாட் பூசனையின் போது, ஆடகசவுந்தரிக்குப் பிதிர்மடை வைத்துப் பூசை செய்யும் வழக்கம் இருந்து வந்திருக்கின்றது. இதனால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் மட்டக்களப்பினை ஆட்சிசெய்த இளவரசியாகிய ஆடகசவுந்தரிக்கும், இக்கோவிலுக்கும் இருந்துள்ள தொடர்பு என்ன என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது, இக்கோவில் கட்டுதற்கு நிலமோ அன்றி மானியம் எதுவுமோ அவ்வழகி கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு கொடுத்தமைக்குரிய சான்றுகள், மறைந்திருக்க வேண்டும் அல்லது மட்டக்களப்பிலுள்ள மற்றைய பெருங் கோவில்களிற் போல அப்பேரரசிக்கு இங்கும் ''முன்னீடு'' செய்தல், கோவிலுக்குச் சிறப்பாக இருக்கலாம் என்று பிற்காலத்தில் யாரேனும் கருதி அவ்வரசிக்கான ''பிதிர்மடை'' யினையும் சேர்க்கச் செய்திருத்தல் வேண்டும் என்று ஊகிக்கவும் கூடியதாயிருக்கின்றது.

மட்டக்களப்பு அம்மன் கோவில்களிற் பழமையும், நிருவாகச் சிறப்பு, மறுமலர்ச்சிச்சிறப்பு, அன்னையின் அருள்வளர்ச்சிறப்பு என்பனவற்றிற் பெருமையும் ஈட்டி நிற்கும் கொத்துக்குளத்து மகாமாரி அம்மன் மீது பல தனிப்பதிகங்களும், பல தனிப்பாடல்களும் காலத்துக்குக் காலம் எழுந்திருக்கின்றன. மட்டக்களப்புப் புலவர் பரம்பரையின் தலைவர் என்று போற்றத்தக்கவரான வித்துவான் பூபாலபிள்ளை அவர்கள் கொத்துக்குளத்து மகாமாரியம்மன் அந்தாதி என்ற பெயரில் நெடிலடி விருத்தங்கள் நூறு கொண்ட நூல் ஒன்றைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் அவரது தோத்திர மஞ்சரி என்ற திரட்டு நூலின் முதலாம் பாகத்தில் உள்ள பத்து நூல்களில் ஒன்பதாவதாக இடம்பெற்றுள்ளது. 1923 ம் ஆண்டு செ. வை. ஜம்புலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை இதனை அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளாரெனினும், தற்போது அத்தொகுப்பிலுள்ள பத்து நூல்களில் எதுவும் கிடைக்கக்கூடியதாயில்லை. கொத்துக்குளத்து மகாமாரியம்மன் பதிகம் என்ற இவரது இன்னொரு நூல் வெளிவராதே போயிற்று என்றும் அறிகின்றோம். பெயர் குறிப்பிடப் பெறாத இன்னொருவர், ''கொத்துக்குளத்து மகாமாரியம்மன் காவியம்'' என்னும் பெயரில் எழுதிய எண்சீர் விருத்தம் பதினொன்றாலான நூலொன்று கைப்பிரதியாகக் கிடைத்துள்ளது. இந்நூற் செய்யுள்கள் நடை வளமும், கனிவும் உடையதாகத் தெரியவில்லை எனினும் யாத்தோரின் வேண்டுதற் தன்மையையும் பக்திச்சிறப்பையும் அவை நன்கு காட்டுகின்றன.

''பேச்சி நீ பிச்சி நீ பெருமாள் சகோதரிநீ
பெண்ணரசியானதொரு வண்ணமாமயிலும்நீ
ஆச்சிநீ அம்மைநீ அகிலநாரணியும் நீ
ஐம்பத்தோரட்சரமதானவளும் நீயே
தாழ்ச்சியில்லாமலே கிரகநோய் சூனியம்
சஞ்சலமகற்றியே அஞ்சலென்றருள்வாய்
காட்சிதந்தென்னை நீ காத்தருளவேணும்
காரணியே கொத்துக்குளத்து மாதாவே!''

இது அந்நூலின் பத்தாம் பாடலாகும். சிறியேனும் இவ்வன்னையின் அருளமுதத்தினை வேண்டிப் பதினொரு விருத்தங்களாலான பதிகம் என்றபெயரில் ஒரு நூலினை யாத்து உள்ளேன். இவ்வாறான எல்லாப் பாடல்களையும் இத்தலம்பற்றிக் கிடைக்கக்கூடிய காலக்குறிப்புகள் அனைத்தையும் சேகரித்து, ஆராய்ந்து தனி நூலொன்றாக்கித் தருதல் வேண்டும் என்று கொத்துக்குளத்து மகாமாரி அம்மன் கோவிலின் தற்போதைய ஆட்சிக்குழுத் தலைவர் எம்மைக் கேட்டுக் கொண்டுள்ளபடி, காலமும் திருவருளாணையும் கிடைப்பின், மேலும் விரிவாக இக்கட்டுரைப் பொருளை விரித்தமைத்துத் தருதற்கு எண்ணுகின்றேன். அனைத்தையும் மறைப்பவளும், மறைப்பினை விலக்கி விளக்கம் தந்து தன்னைக் காட்டி ஒளியுறுத்துபவளும் எல்லாம் வல்ல மகாமாயையுமான அன்னை பராசக்தியின் திருவருளாகிய கற்கண்டுப்படகு சிவனருட் சாகரமாகிய அமுதக்கடலூடு சர்க்கரைப் பதுமைகளாகிய நம்மை எடுத்துச் சென்று அதனோடு இரண்டறச் சேர்த்துவிட வல்லது என்பதை நாம் உணர்ந்து, அவளது பொன்னடிகளைப் பற்றி வாழ்வு பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (6) வது இயல் : அம்மன் கோவில்கள்

## 2. மட்டக்களப்பு - கோட்டைமுனை புன்னையம்பதி - மகாமாரியம்மன் கோவில்

ஏறக்குறைய நூறு ஆண்டுகட்கு முன்னர் கோட்டைமுனைப் பகுதியில் வாழ்ந்த சைவநன் மக்கள் அடிக்கடி, கொடுமையான அம்மை நோய்க்கு ஆட்பட்டு அழிவுறலாயினர். தற்போது ஆலயம் நிறுவப்பட்டுள்ள பகுதி புன்னை மரங்கள் நிறைந்த சோலையாகக் காணப்பட்டது. அப்புன்னை மரங்களின் நடுவே வெள்ளிக் கிழமை தோறும் பிரகாசமான சோதி தோன்றுவதைக் கண்ணுற்ற மக்கள், அது அம்மையின் அருட்சோதிதான் என்று துணிந்து அவ்விடத்தணுகித் தம்மைப் பீடித்த அம்மை நோய் நீங்க, சிறியதோர் பந்தர் அமைத்து அம்பிகையை வெள்ளிக்கிழமை தோறும் வழிபடலாயினர். அவ்வாறு வழிபட்டதன் பின்னர் அம்மைநோய் படிப்படியாக அவ்விடத்தை விட்டு நீங்கக் கண்டனர். இதனால் அகமகிழ்ந்த அம்மக்கள் ஆலயம் அமைத்து ஆண்டுக்கொரு முறை வரும் ஆனிப் பூரணையில் சடங்கு செய்து பெரு விழாக் கொண்டாடினர். இற்றைக்கு அறுபது ஆண்டுகட்கு முன்னர் செங்கல்லாலான ஆலயத்தை நிறுவி அம்பிகையைப் பிரதிஷ்டை செய்தனர்.

ஆரம்ப காலத்தில் புன்னைமரச் சோலை சூழ்ந்த இடமாக இருந்த இந்த இடத்தில் களிமண்ணாலும், செங்கல்லாலும் ஒரு சிறு கோவில் அமைக்கப் பெற்றது. இது ஒரு மடாலயம் போன்ற தோற்றத்தில் அமைந்திருந்தது. இக் கோயில் சுமார் நூறு வருடப்பழமை வாய்ந்ததெனக் கருத இடமுண்டு. இக்கோயிலுக்குப் ''புன்னைச்சோலை'' என்றே பெயருண்டாகியது. 1930 ஆம் வருடம் தை மாதம் 15 ஆம் தேதி என். எஸ். இராசையா என்னும் நொத்தாரிசு அவர்கள் செய்த 3631 ஆம் இலக்க உறுதியின்படி இக் கோயில் சாதனம் முதன் முதலிற் செய்யப்பட்டது. 1929 ஆம் வருடம் மார்கழி மாதம் 29 ம் தேதி ஆலய வீதியிற் கூடிய கூட்டத்தைக் கொண்டு இச் சாதனம் வரையறுக்கப் பெற்றது.

அவ்வாண்டுக்கு முன்பு ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. அதற்குச் சிறிது காலத்தின் முன்பு இப்போதுள்ள அம்மனின் சிலையொன்று காமாட்சி அம்மனின் தோற்றப் பொலிவுடன் மகாமாரி அம்மன் என்ற பெயரால் இங்கு கொணர்ந்து வைக்கப்பட்டது.

கிழக்கிலங்கை வாழ் சைவ நன்மக்கள் சக்தி வழிபாட்டில் திளைத்தவர் கள். கிராமங்கள் தோறும் காளி, மகாமாரி, பேச்சி, கடல் நாச்சி எனப் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரிலும் ரூபத்திலும் அவர்கள் ஆதிபாரசக்தியை பூசை செய்வது இன்றும் கண்கூடு.

மாரியென்னும் சொல் மழையைக் குறிக்கும். மாரி இல்லையேல் புல் பூண்டுகள் தொடக்கம் எவ்வித உயிரினங்களும் வாழா என வள்ளுவ நாயனாரே கூறியுள்ளார். அதேபோல் இறைவன் தன் திருவருளை உயிர்களின் மேல் வழங்காவிட்டால் உயிர்கள் ஈடேற்றம் காணா. வெம்மை யான சிவன் தண்மையான சக்தியை தன் வாம பாகத்தில் வைத்திருப் பதனாலன்றோ ஆன்றோர், ''நீலமேனி வாலிழை பாகத்தன்'' என்றனர். மாரி பொழிந்து உயிர்களின் உலக வாழ்வில் துன்பத்தை நீக்குவது போல், இறைவ னின் திருவருட் சக்தியானது இறைவன் உயிர்கள் மேல் கொண்டுள்ள பெருங்கருணையால் அருள் மழை பொழிந்து ''தண்ணிலைமை மன்னுயிர்க கள் சாரத்தரும் சக்தியாகி'' ன்றாள்.

இங்கெழுந்தருளியிருக்கும் மகா மாரியம்மனுக்கு ''சிம்மவாகினி'' என்று ஒரு பெயர் உண்டு. மாரியம்மன் ஆலயங்களில் சிங்கமே பலிபீடத்திற்கு முன்னால் வைப்பது வழமை. ஆனால் புன்னையம்பதி மகா மாரியம்பாளுக்கு நந்தி பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது தனிச்சிறப்பாகும். அம்பிகை சாந்த (சொரூபிணியாக) காட்சியளிக்கிறாள். காமாட்சியின் கருணையை அவள் கண்கள் சொரிய அருள் வீற்றிருக்கின்றாள்.

ஆலயத்தின் முன்னாள் பரிபாலகராக இருந்தவரும், துறவறத்தை மேற் கொண்டவருமான காலஞ் சென்ற பாலானந்தம் ஆச்சாரி அவர்களுக்கு அம்பிகை கனவில் தோன்றி ''நான் மகா மாரியாகவும் காமாட்சியாகவும் இருந்து இப்பதியிலே அருள் பாலிக்கின்றேன்''. எனக் கூறிப் போந்துள் ளாள். அதனாற் போலும் நம் முன்னோர் நந்தியை வைத்து இத் தலத்தில் போற்றினர். நந்தி வைக்கப்பட்ட மகா மாரியை ''சிவநாயகி'' என அழைப் பது மரபு. இலங்கையில் இவ்வாறு அமைந்த ஆலயம் எமது அறிவுக்கு எட்டிய மட்டில் இவ்வாலயம் ஒன்று மட்டுமே ஆகும்.

தன்னை வழிபடும் அடியார் துயர் அகற்றி வேண்டுவார்க்கு வேண்டுவன ஈந்து திருவருள் பாலிப்பது அம்மையின் திருவிளை யாடல்களாகும். அவன் பக்தர்களுக்கு அற்புதங்களை நிகழ்த்திய வரலா றுகளைக் கூறின் விரியுமாதலின் ஒன்றை மட்டும் இங்கு கூறுவோம்.

மலைநாட்டில் வசித்து வந்த அம்பிகை அடியார் ஒருவருக்குக் கொடுமையான கூகைக்கட்டு நோய் ஒருபோது ஏற்பட்டது. நோயை இன்னதென அறியாது வைத்தியம் செய்த வைத்தியர் நோயை பெருப்பித்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கலாக்கி விட்டார். இதனால் நோயாளியின் ஈரலும், வெளியில் அடிவயிறும் வீக்கமுற்றன. பீதியடைந்த அவர்தம் மனைவியார் புன்னையம்பதி மகாமாரியை நினைந்து உருகி, கணவனையும் அழைத்துக் கொண்டு நள்ளிரவில் மட்டுநகர் நோக்கி மோட்டார் வண்டியில் புறப்பட்டு வந்து சேர்ந்தார். உடனடியாக அம்பிகைக்கு நேர்கடன் வைக்கப்பட்டது. வைத்தியரும் அழைத்துவரப் பட்டார். வந்த வைத்தியர் நிலைமையை உணர்ந்து ஒரு வகைக் குளிகையைக் கொடுத்து விடிந்ததும் பார்க்கலாம் எனக் கூறிப்போனார். கொடுமையான சுரத்தால் அல்லலுற்ற நோயாளி அம்பிகையை நினைந்து மனமுருகித்தனது நோயைத் தீர்க்கும் படி வேண்டி அழுதார். தூக்கம் ஆட்கொள்ளவே உறங்கிய நோயாளியின் கனவில் தோன்றிய பெண்ணொருத்தி குறிப்பிட்ட மருந்தைக் கூறி அதை உடனடியாக உட்கொள்ளுமாறு பணித்தாள்.

மனைவியை எழுப்பி தான் கண்ட கனவினைக் கூறி, மருந்தை தயாரித்து உட்கொண்ட பின்னர் மீண்டும் தூக்கம் அவரை அரவணைத்துக் கொண்டது. காலை எழுந்ததும் சுரமும் நீங்கி, வீக்கமும் வற்றி உற்சாகமாகக் காணப்பட்டார். நோயாளியைக் காணவந்த வைத்தியர் ஆச்சரியத்தால் திகைத்து நின்றார். இறைவனுக்கு வைத்தீஸ்வரன், வைத்தியநாதன் என பல பெயர்கள் உண்டு. அவன் ''மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி, தீரா நோய் தீர்த்தருள வல்லான்'' அப்பருக்கு சூலை நோயைத் தீர்த்தவனும், பாண்டியனுக்கு சூலை நோயைத் தீர்த்தவனும் தம்மை நினைந்துருகிய அடியாருக்கு வரும் உள, உடற் பிணிகளையும் தீர்த்து பிறவிப் பிணியையும் தீர்க்கும் அருமந்தாவானும் அவனன்றோ!

ஆலயத்தைச் சூழவுள்ள பக்தர்கள் 1929 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ந் திகதி ஆலயமுன்றிலில் ஒன்று கூடி ''ஸ்ரீ'' மகாமாரியம்மன் ஆலய சங்கம்'' எனும் பெயரில் ஒரு பரிலான சபையை உருவாக்கினர். அதற்குரிய சட்டதிட்டங்களை அமைத்துப் பதிவு செய்தனர். அன்றிலிருந்து ஆண்டுக்கொருதரம் சடங்கு செய்வது நிறுத்தப்பட்டுத் தினப்பூசை முறை கைக்கொள்ளப்பட்டது. ஆண்டு தோறும் நவராத்திரியும், சிவராத்திரியும், திருவெம்பாவையும் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆண்டுக்குரிய விசேட உற்சவமாக நவராத்திரி கொண்டாடப்பட்டு மானம் பூவோடு முடிவடையும்.

1968 ம் ஆண்டு மார்ச் மாதம் 15 ந் திகதி புதிய ஆலயத்திற்கான கல் நாட்டுவிழா நடைபெற்றது. கோட்டைமுனை வாழ் விஸ்வப் பிரம்ம கோத்திர மக்கள் தந்த பெரும் நிதியுதவி கொண்டு, சுமார் இரண்டு லட்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா செலவில் பிரமாண்டமான ஆலயம் இன்று காட்சியளிக்கிறது. 30.11.1979 வெள்ளிக்கிழமை காலை மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. புனராவர்த்தன மகாகும்பாபிஷேகத்திற்கு இலங்கை வாழ் சைவ நன் மக்கள் பலரும் நிதியுதவி செய்துள்ளனர். அன்னாருக்கு அம்பிகையின் திருவருள் கிடைப்பதாகுக.

''வச்சிரமணித் தங்கத்தாற் கால்கள் நாட்டி
வைரம் கோமேதகத்தாற் பலகை பூட்டி
பச்சை எனுமரகதத்தாற் கொடுங்கை சேர்த்து
பசும் பொன்னின் சங்கிலியால் வடங்கள் பூட்டி
உச்சிதமாய் பிரமதேவர் அமைக்கப் பெற்ற
கச்சையணி திருவூஞ்சல் தனிலே மேவிப்
பட்சிகள் சூழ் புன்னையம் பதியில் வாழும்
பரிபூரணியாம் மகமாரி ஆடீர் ஊஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (6) வது இயல்: அம்மன் கோவில்கள்

## 3. காரைதீவுக் கண்ணகை அம்மன் கோவில்

விபுலாநந்த அடிகளாரை ஈன்றது காரைதீவு. தொடர்ந்தும் நடராஜானந்த அடிகளாரையும் அவ்வூரேதான் தோற்றுவித்தது. இன்னும் எத்தனையோ சந்நியாசிகளைத் தரவும் காத்திருக்கின்றது இவ்வூர். இக் காரைதீவு மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்காகச் செல்லும் நெடும் வீதியில், 27 வது மைல் தொலைவில், அம்பாறைக்குச் செல்லும் வீதிபிரியும் சந்தியில் இருக்கின்றது. இவ்வூரிலே பிரதான வீதி செல்வதை அடுத்துத்தான் கண்ணகையம்மன் கோவில் காட்சி தருகின்றது. ஒரு பக்கம் கண்களுக்கு எட்டிய தூரம்வரை பரந்த கரவாகுவட்டை என்னும் வயல் வெளியும், மறுபக்கம் கடற்கரை சார்ந்த தென்னைமரச் சோலைகளும், காரேறு மூதூர்க் குடியிருப்பு மனைகளும் விரவியிருக்கின்றன, இந்த மனைப்பகுதிகளிலே தான்.

''கண்ணையப்ப அன்றிடந்த கண்ணர் திருநன்னாட்டில்
பண்ணை ஒத்தமொழி மடவாள் பரவை தன்பாற் தூதுசென்றோன்
எண்ணமற்ற வேடனருள் எச்சில்தனை உகந்த பிரான
மொண்ணையப்பர் சீர்பாதம் முடிவிலும் நான்மறவேனே''

என்ற கண்ணகை அம்மன் குளுத்திப்பாடலில் கண்ட மொண்ணையப்பர் குடும்பங்களும் இருந்து இக்கோவிலுக்கும் தொண்டு செய்து வருகின்றனர்.

ஆதிநாளையில், இக்கண்ணகி சிலையுடன் ஒரு கிழவியும் அவரது, மகளும் கதிர்காம யாத்திரைக்காக வந்தனர். வந்தவர்கள் காரைதீவில் ஒரு மரத்தின் கீழ் தமது மூட்டை முடிச்சுக்களை வைத்துத் தங்கினர். இவர்கள் தாங்கள் கொணர்ந்த சிலையை அம்மரத்தடியில் வைத்து முறத்தால் மூடி, தினசரி பூசை செய்யும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். அந்நாட்களில் ஒரு நாள் பூசை நேரத்தில் அட்டப்பள்ளத்திலிருந்து (சிங்காரத்தோப்பு) இப்பகுதியை ஆண்ட வன்னிமை, யானை மீதேறி நாட்டுவளம் பார்க்கச் சென்று கொண்டிருந்தார். காரைதீவில் மேற்கூறிய மரத்தடியில் இச்சிலை வழக்கம் போல் நடைபெறும் பூசைநேரத்தில் இவ் வன்னிமை, யானை மீதேறியபடியே தற்செயலாக அவ்வழிச் செல்ல நேரிட்டபோது அந்த யானையானது, அவ்விடத்தில், மண்டியிட்டுக் கிடக்கலாயிற்று. வன்னிமை செய்வதறியாது மிகுதியும் திகைப்படைந்து யானையை விட்டு இறங்கி நின்றார். யானையோ எழுந்த பாடாயில்லை. அப்போது பூசைவழி பாட்டுக்காக நின்ற சிலருடைய வேண்டுகோளுக்கமைய, பூசைசெய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவியான அம்மையார் தாம் சிலைக்கு அபிஷேகம், செய்த தீர்த்தத்தை எடுத்துச் சென்று தெளித்ததும் அந்த யானை செல்லுவதற்கு எழுந்தது. இந்த விளைவினால் பக்திப்பரவசம் அடைந்த வன்னிமை, மனதார வணங்கி இத்தெய்வச் சிலைக்கு நிலையான ஒரு கோவில் கட்டிக் கொடுப்பதாக நேர்த்திக்கடன் செய்து சென்றார். அதன்படி நிலையான கட்டிடம் கட்டி அக் கோவிலில் பூசையும் தொடர்ந்து நடைபெறலாயிற்று.

இக்காலத்தில் ஒருநாள் தேசத்து வன்னிமையான ''கங்கன்'' தனது மனையாட்டியுடன் கோயிற் பூசைக்குச் சமூகமளித்தான். பூசைநேரத்தில் வன்னிமையினது மனைவியின் கண்கள் இரண்டும் பார்வையிழந்து போயின. குருடான நிலையில் பரிதவிக்கும் தனது மனைவியின் நிலை கண்டு கலங்கி மனம் வருந்தி வன்னிமை கண்ணகித்தாயாரின் திருவருள் இவ்வாறான பெரும் துன்பத்தைத் தருவதற்கு என்ன தீவினை செய்தோமோ எனப் பதைபதைத்து, கணவனும், கண்ணிழந்த மனைவியுமாக ஏதேதோ நேர்த்திகள் எல்லாம் செய்தனர். ஈற்றில் 101 ஏக்கர் காணியை மானியமாக உரிய நேர்த்திகளோடு கொடுத்ததும் கண்கள் பார்வை பெற்றன. வன்னிமையும் மனைவியும் கண்ணகைத்தாயாரின் திருவருளைப் போற்றித் தமதில்லம் ஏகினர். கண்ணகைத்தாயாரை நேரே எதிரில் நின்று தரிசித்தமையாலேயே எம் பெருமாட்டியுடைய கண் அருளின் ஒளியைத் தாங்க முடியாமல் மேற்குறித்த வன்னிமையினுடைய மனைவியின் கண்கள் பார்வை இழந்தனவென்றும், ஆரம்பகாலத்தில் உக்கிரத்தோடும் தான், தாயாருடைய சில விக்கிரகம் இருந்த தென்றும் இன்றும் காரணம் கூறுகின்றனர். திருவருள் திறம் எப்படியோ, அதனை நாம் திட்டமாகக் கூறவல்லோமல்லோம் ஆயினும், கோயிலுக்குப் போகிறவர்கள் மூலஸ்தானத்துக்கு நேர் எதிரே நின்று வணங்காமல் பக்கலில் நின்று தெய்வத்தின் கடைக் கணருளைப் பெறவேண்டும் என்பதை ''கடைக்கணித்தருளே'' என்று பாடிய பேரருளாளர்களுடைய வாக்கிலிருந்து உணர முடிகிறது.

தேசத்து வன்னிமை கங்கனால் அளிக்கப் பெற்ற இம் மானிய வயல், கங்கன் வெளி என இன்னமும் அழைக்கப்படுகின்றது. கண்கள் கிடைத்தமைக்கு காரணமான மானியவயல் ஆதலால் ''கண்கண் வெளி'' எனவும் ஆர்வம் மிக்கூரக் கூறும் அடியார்களையும் காண்கிறோம். எது எவ்வாறாயினும் கங்கன் வெளியான இம்மானிய வயலால் கிடைக்கின்ற ஊதியத்தைக் கொண்டு பூசைகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

இக்காலத்தில் பக்குவமடைந்த பெண்ணான தனது மகளுக்கு, தாயான பூசைக்கிழவி அம்மையார் களுவாஞ்சிகுடியிலிருந்து வேளாள மரபைச் சேர்ந்த ஒரு ஆடவனை தெரிவு செய்து மற்றவர்களோடும் சேர்த்து திருமணத்தைச் செய்து வைக்கலாயினர். சில காலத்தின் பின்னர் கிழவியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரகதியடைந்தாள்.

மகளுக்கு மூன்று பெண் குழந்தைகள் பிறந்தன. அவர்களின் சந்ததியார் களே இன்றும் இக்கோவிலுக்குத் தொண்டு செயற்தற்குரியர் எனக் கூறுவர். இந்த மூன்று சந்ததியிலும் மூன்று கப்புகமார்கள், மூன்று தருமகர்த்தாக்கள், மூன்று கணக்குப்பிள்ளைமாரோடு ஆறுபேர்கள் அடங்கிய ஒரு குழுவும் ஆக பதினைந்து பேர் கோவிலைப்பரிபாலனம் செய்து வருகின்றனர். இந்த மூன்று சந்ததியினரில் ஒரு சந்ததியில் மட்டும் கூடியளவு ஆண்களும் பெண்களும் விருத்தியாகியிருக்கின்றார்கள். மற்றைய இரண்டு பாகைகளில் மிகவும் குறைந்த தொகையினரே உள்ளனர். இப்போது ஆட்சிக்குழுவில் உள்ளவர்களை விட மேலதிகமான தேவை ஏற்படின் மிகுதி ஆட்கள் இல்லை என்று சொல்லலாம். எனினும் இதில் மாற்றங்களுக்கு இடமில்லாத வாறு பரிபாலனம் திருப்தியாக நடைபெறுகிறது.

இக்காலம் வரை நடைமுறையில் உள்ள நிகழ்ச்சிகளைத் திரட்டி இங்கு கூறலானேன் எனினும், இக் கோவிற் சிலை கஜபாகு காலத்தில் கொண்டு வரப்பட்டது என்பது ஐதீகம். அதற்கு இங்கே வழங்கும் மேற்படி கதைகள் பொருந்துவனவாகத் தோன்றவில்லை. ஆயினும் கண்ணகி வழக்குரை, வசந்தன் கவித்திரட்டு என்னும் நூற்பாடல்களிலிருந்து இதன் பழமை தோன்றுகின்றது. கண்டி இராச்சியத்தோடு இணைத்தே கிழக்குக் கரை யோரப்பகுதி என்றும் இருந்தமைக்குச் சான்றுகள் பல உள்ளன. அதனால் கண்டிக்கு வந்த கண்ணகி வழிபாடு கண்டிக்கட்டு வழியாக வீரமுனைக்கு வந்து, அங்கிருந்து காரைதீவுக்கும் வந்திருக்கக் கூடும் என்றும் நம்பக் கிடக்கின்றது. அதற்கு ஊர்ச்சுற்றுக் காவியத்தில் வரும் ஊர்ப்பெயர்கள் பற்றிய குறிப்புக்களும் சான்றாகின்றன. ''பட்டிநகர் தம்பிலுவில் பாடல்பெறு வீரமுனை காரைதீவு'' என முதலானவைகளைக் காட்டலாம். எவ்வாறா யினும் இவ்வூர்க் கண்ணகி அம்மன் கோவில் மிகப் பழமையான தென்பதை அறிவோம்.

இங்கேயும் ஆதிகாலத்தில் வருடத்திற்கொருமுறையே கதவு திறந்து பத்துநாள் சடங்கும், குளுத்தியும் வைத்தபின்னர், கதவைப் பூட்டி விடுவார் கள். இடையிலே கோவில் வழிபாட்டுக்காக வெள்ளிக்கிழமைகளில் பொங்கல் செய்து வெளியில் படைத்துக் கும்பிட்டு வந்திருக்கிறார்கள். காலம் செல்லச் செல்ல வெள்ளிக்கிழமை தோறும் பூசகர் வந்து பூசனை செய்யும் வழக்கம் உண்டாயிருக்கிறது. பின்னரே, சடங்கென்று விசேடமாகக் கோயில் திறப்பதோடு, மற்றைய நாட்களிலும் திறந்து பூசை நடைபெறும் வழக்கம் வந்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன் கட்டிடங்கள் யாவும் புனரமைப்புச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கும்பாபிஷேகம் செய்யப் பெற்ற பின்னர், கோவில் சிறப்பான தோற்றத்தை அளிக்கிறதெனலாம். இதிலுள்ள விமானம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. சுற்றிவர உயர்ந்த மதிலினால் அரண் செய்யப் பெற்றுள்ள இக்கோவிலில் இப்போதுள்ள இராஜ கோபுரம் மிக அண்மையில் மேலும் புனருத்தாரணம் செய்யப்படவுள்ளது. கண்ணகை அம்மன் கோவிலைச் சுற்றிவர, பிள்ளையார், கந்தசுவாமி, நாகதம்பிரான், கோயில் களும், நவக்கிரக கோவில் வயிரவர் கோயிலும், காலத்துக்குக் காலம் அமைக்கப் பெற்றுப் பூசைகள் நடைபெறுகின்றது. இதனால் கண்ணகை அம்மன் கோவில் ஒரு பூரண கோவிலாக விளங்குகின்றதெனலாம்.

இன்னும் நித்திய பூசைகள் மூன்று காலங்களிலும் பிராமண உத்தமரால் நடைபெற்று வருகின்றது. இதைவிட மாதச் சங்கிராந்தி அபிஷேகங்களும், பூரணைத் தினங்களில் விசேட அபிஷேக பூசையோடு திருவிழாவும், பங்குனி உத்தரத்தன்று தீர்த்தத்தோடு முடிவடையும் ஒன்பது நாட் திருவிழாக்களைக் கொண்ட வருடாந்த மகோற்சவமும் நிகழ்கிறது. இக்காலத்தில் அம்மன் அகிலாண்ட கோடிப்பிரமாண்ட நாயகியாக, இராஜராஜேஸ்வரியாக எழுந்தருளித் திருவீதி உலாவருதலும், அடியவர்கள் பக்தியோடும் அம்பாளை வேண்டி நின்று உருகும் தன்மையும் கண்கொள்ளாக் காட்சியாக அமையும்.

வெள்ளிவாரம் தோறும் விசேட பூசையும், கூட்டுப்பிரார்த்தனையும், நற்சிந்தனை நிகழ்ச்சியும் ஒழுங்காக நடந்தேறுகின்றன. மேலும் சித்திரைக்கதை படிப்பும் பூசையும், விழாவும், ஆனி உத்தரதரிசனம், ஆடிப் பூர உற்சவம், ஆவணி மூலவிழா, ஆவணியில் விநாயகர் சதுர்த்தி உற்சவம் ஆதியனவும், திருக்கார்த்திகை, தைப்பூசம், மாசிமகம், மகாசிவராத்திரி, கால உற்சவங்களும் சிறப்பாக நடந்தேறுகின்றன. இவற்றை விட நவராத்திரி கால பூஜையும், விஜயதசமி சமீவிருட்ச பூஜையும், இருபத்தொரு நாள் கேதாரகௌரி பூஜையும், ஸ்கந்தசஷ்டி விரத பூசை, திருக்கல்யாணம் ஆதியனவும் திருவாதிரைத் தரிசனத்தோடு நிறைவு பெறும் பத்துநாட் திருவெம்பாவைக் கால பூசைகளும், மார்கழி மாதத்தில் விநாயகசஷ்டி யோடு முடிவுறுகின்ற இருபத்தொரு நாள் விநாயக விரத (காப்புக்கட்டு, பெருங்கதைக்கிழமை) கால பூசைகளும் ஒழுங்காக நடைபெறுகின்றன. வேண்டியபோது இடையிடையே சங்காபிஷேகங்களும் நிகழ்த்தப்பெறுவ துண்டு.

மேலே கூறியுள்ள பூசை, அபிஷேகம், திருவிழாக்கள் எல்லாம் சிறப்பாகவும் ஒழுங்காகவும், நடைபெறுகின்ற இக்கோயில் பத்தினிக் கண்ணகை அம்மனுக்கும் உரிய இடமளித்துள்ளது என்பதை வைகாசி மாதத்தில் நிகழுகின்ற சடங்கு, குளுத்தி, முதலிய வைபவங்களிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிய முடிகின்றது. வேறு பல கண்ணகை அம்மன் கோவில்களில் குளுத்தி வைபவம் வைகாசிப் பூரணையன்றே நிகழ்த்தப் பெறுவதைக் காணுகின்றோம். வைகாசித்திங்கள் வருவேனென்று பத்தினித் தெய்வமான கண்ணகிதேவி திருவாய் மலர்ந்துள்ளார் என்பதில் ''திங்கள்'' என்பதை சந்திரன் - பூரணைச் சந்திரன் என்று கொண்டு அவர்கள் குளுத்தி பாடிச் சடங்கை முடிக்கின்றனர் என அறிகிறோம். ஆனால், ''திங்கள்'' என்பதைத் திங்கட்கிழமையெனக் கொண்டு, வைகாசிப்பூரணையை ஒட்டிய திங்கட் கிழமையிலேயே குளுத்தி பாடிச் சடங்கினை நிறைவு செய்யும் வழக்கம் காரைதீவுக் கண்ணகையம்மன் கோயிலில் நடைமுறைப்படுத்தப் பெற்று வருகின்றது. திங்கட்கிழமைக்கு முந்திய எட்டுநாள் பூசையும், குளிர்த்தியும் மட்டும் பெறுவதையும், மக்கள் மிகுந்த பயபக்தியுடன் இருந்து கேட்பதையும் இங்கு காணலாம். இந்த ஏட்டிலிருந்து ''கோவலன் வெட்டுண்ட காதை'' படிக்கப் பெறும் அன்று அங்கு நடைபெறும் பூசைமுறையும், அதற்காகக் கையாளும் வாத்திய ஓசையும், மிகவும் அமைதியான சூழ்நிலையும் பார்ப்போருக்கும். கேட்போருக்கும் மிக்க அச்சத்தினையும் பயத்தினையும் விளைவிப்பனவாயிருக்கும். அநீதியான முறையில் தான் கோவலன் வெட்டுண்டான் என்பதை இவ்வச்சமும் பயமும், மக்களுக்கு உணர வைக்கும். அன்றைய பூசைமுடிவில் உரிமைக் குடிகளுக்கு அமுது உள்ளிட்ட சிறு குடுக்கைகள், (முட்டிகள்) கொடுக்கப் பெறுவதைக் காணலாம்.

கப்புகன்மாரால் நடாத்தப் பெறும் இவ்வெட்டு நாள் சடங்கின் போதும், பூசனை அடுத்து உடுக்குச்சிந்து என்று சொல்லப்படும் ஊர்ச்சுற்றுக் காவியம் முதலான காவியப் பாடல்கள் பாடப்படுவதையும், அவற்றிற்குப் பொருத்த மான வகையில் நிலத்தில் வைத்து மூன்று பேரால் அடிக்கப் பெறும் பெரிய உடுக்கை வாத்தியம் வாசிக்கப்படுவதையும் காணலாம். இந்த உடுக்கை வாத்தியம் இக்கோயிலில் மாத்திரமே உள்ளதென்று கொள்ளலாம். குளுத்திவிழா நடக்கும் இரவு ஒரு விசேடமான நாளாகக் கருதப்படும். அன்று அதிகாலை நேரத்தில் குளுத்திப் பாடல்களை முறைப்படி இருவர் சேர்ந்து இராகத்தோடுபாடி, குளுத்திப் பாணக்கத்தை அனைவருக்கும் பங்கீடு செய்வதோடு குளுத்தி விழா இனிதே நிறைவுறுகிறது. அது வரை கோவில் அடையாளம் கொடுத்தல், பொங்கல் செய்தல் முதலாக பல வேலைகள் நடை பெறுவனவாகும்.

இக்கோயில் வருவாய் சீருற அமைந்திருப்பதும், கோவிலில் பெருமக்கள் தொடர்புகள் தொடர்ந்திருப்பதும், எல்லாவற்றுக்கும் மேலாக அம்பாளின் திருவருட்கண்ணோட்டம் அருள் பொழிவதும், இதன் குலையா நலத்துக்குக் காரணம் எனலாம். விபுலானந்த அடிகளார் மிகுதியும், பக்தி பூண்ட திருக்கோயில் இக் கண்ணகி அம்மன் கோவிலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (6) வது இயல்: அம்மன் கோவில்கள்

## 4. களுவாஞ்சிகுடி கண்ணகியம்மன் கோவில்

மட்டுநகரிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் வீதியில் 16 வது மைலில் களுவாஞ்சிகுடி என்னும் ஊர் உள்ளது. இவ்வூரில் பனங்கிழங்கு, பனங்காய்ப் பலகாரம், வெற்றிலை என்பன ஒரு போதும் குறைவதில்லை. இவ்வூர்க் கண்ணகியம்மன் கோவிலைப் பற்றி நினைக்கும் போது, எனது மனக் கண் முன்னர்த் தோன்றுவது பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளதும், மட்டக்களப்பில் இருந்து கொண்டு செல்லப்பட்டதுமான கண்ணகி சிலை தான். இவ்வுருவச்சிலை களுவாஞ்சிக்குடியில் இருந்து பிரிட்டிஷ்காரரால் கொண்டு போகப் பெற்றிருத்தல் வேண்டும் என்று எனது ஊகம் வலுவடையத் தக்கதாய் இருக்கின்றது. இதற்கான பழைய ஐதீகக் கதைகளும், குறிப்புகளும் கொண்ட வரலாறுகளை அங்காங்கே காணக் கூடியதாய் இருக்கின்றது. இவ்வாலயம் இக்கிராமத்திலுள்ள இன்றைக்கு 200 வருடங்கட்கு மேற்பட்ட புராதன ஆலயங்களில் ஒன்று. பண்டைய சரிதையின் படி இவ்வாலயம் மட்டக்களப்பு வாவிக்கணித்தாய் குளக்கட்டுகள் சந்திக்கும், மருதமரச்சோலையில் அமைய நேர்ந்தது. அதற்குரிய காரணங்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.சேர நாட்டினின்றும் ஸ்ரீ கண்ணகை அம்பாளின் சிலை, பத்தி, முத்தி, என்னும் இரு பெண்மணிகளால் மட்டக்களப்பு வாவியினூடாக மட்டக்களப்புக்குக் கொண்டு வரப்பட்டது. இச் சிலை வைக்கப்பட்டிருந்த சிலைப்பேழை தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்திலேயே இடம் பெயராது, பத்தி, முத்தி, ஆகிய இருவரும் இளைப்பாறத் தங்கிய போதில் நிலைத்திருந்த தென்றும், அப்பெண்மணிகள் தாங்கண்ட கனவின்படி அவ்விடத்திலேயே ஆலயம் அமைக்கச்சிலையை உதவி ஒத்துழைப்பு நல்கினார்கள் என்றும், கர்ணபரம்பரை வாயிலாக அறிய வருகிறோம்.

அக்காலையில் எருவில் பகுதியை ஆண்ட முக்குகர் குல வன்னிமை அச்சிலைப் பேழையில் உள்ள சில உருவங்களைத் தனது கிராமமாகிய எருவிலுக்குக் கொண்டு போய் அங்கும் ஓர் ஆலயத்தைக் கற்கோவிலாகக் கட்டி வழிபாடு செய்துவந்தார் என்பதற்கும் பல ஆதாரங்கள் இன்றும் உள. களுவாஞ்சிகுடியில் கல்லினால் ஆலயம் எழுப்ப முன், வன்னிமை, எருவிலில் கல்லினால் ஆலயம் அமைத்துக்களுவாஞ்சிகுடி மக்களையும், களுவாஞ்சிகுடியில் கோவில் அமைக்கும் வரை எருவில் கிராமத்துக் கோவிலிலேயே எல்லா மூலமூர்த்திகளையும் வைத்துச் சடங்கு ஆராதனைகள் செய்வித்து வந்தார்கள். அப்போது களுவாஞ்சிகுடி வாழ் மக்களுக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலை களுவாஞ்சிகுடியின் ஆதிபரம்பரைக் குடி மக்களாக வதிந்த பெரிய கவுத்தன்குடி, சின்னக்கவுத்தன்குடி, ஆகிய இரு பெருங்குடி மக்களுக் குமே, எருவில் கோவிலில் சடங்கு, பூசைப் பாகைகள் இருந்தன. இன்றும் உற்சவ காலங்கள் வைகாசிப்பூரணையில் எருவில் கோவிலில் களுவாஞ் சிகுடிக் கவுத்தன் குடியார் சடங்குத்தினம் ஒன்றும் நடைமுறையில் வகுக்கப் பட்டுக் களுவாஞ்சிகுடி மக்கள், எருவில் கோவிலில் பூசைப் பாகைக்குப் போகாதிருந்தும் அங்குள்ள எருவில் குடிமக்களின் முதற்குடி மக்களால் அச்சடங்கு பூசைகளும், வருடந்தோறும், நடைபெற்று வருகின்றமை ஓர் சான்றாகும்.

எருவில் கிராமத்திலேயே கோவிலில் பாகையாளராய் வழிபாடியற்றிய களுவாஞ்சிகுடி மக்கள், உடன் முதலில் செத்தைக் கோவில் ஒன்றை அமைத் துத் தங்கட்குரிய மூலமூர்த்திச் சிலையை எருவில் வன்னிமையிடமிருந்து பெற்றுத் தற்போதிருக்கும் கிடத்தில் கோவிலமைத்து வழிபாடாற்றி வந்தனர். காலக் கிரமத்தில் இற்றைக்கு அறுபது வருடங்கட்கு முன் கற்கோவிலாக அமைக்கப்பட்டு கர்ப்பக் கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், யாகமண்டபம், முதலியன உருவாகிப் பொலிவுறக் காட்சியளித்து வந்தன. சென்ற ஆண்டில் சூறாவளிச் சீற்றத்தால், கர்ப்பக்கிரக மண்டபம் தவிர்ந்த அனைத்தும் தவிடு பொடியாகின. கிராம மக்களின் பண உதவியுடன் அரசினர் நல்கிய பண உதவியையும் கொண்டு இரு மண்டபங்களை மட்டும் புனரமைப்புச் செய்ய நேர்ந்தது. பணம் போதாமையால் இன்னும் வெளிமண்டபம் அமைக்கப் பெறவில்லை. முதலாம் கஜபாகு மன்னன் இலங்கையை ஆட்சி புரிந்த 2 ம் நூற்றாண்டளவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் வழிபாடு கிழக்கு மாகாணம் எங்கும் பரவலாயிற்று.

அங்கணாமைக் கடவை காரேறு நகரெருவில் களுவாஞ்சி
ஆனதம்பிலுவில் எழில் வீரமுனைதனிலும்
மங்கைசேர் பட்டிமேடுயர் செட்டிபாளையம்
வந்தாறுமூலை நகர் மற்றுமுளபதியும்.

என்ற கண்ணகையம்மன் ஊர்சுற்றுக் காவியம் பத்தினித் தெய்வம் பதி கொண்ட கிராமங்களை நன்கு வலியுறுத்திக் கூறுகின்றது. களுவாஞ்சிகுடிக் கிராமத்தில் எழுந்தருளிய இவ்வாலயம் ஆதியில் பெரிய கவுத்தன் குடி, சின்னக் கவுத்தன்குடி ஆகிய ஆதிக் குடி மக்களால் ஸ்தாபனம் பெற்று, காலமுறைக்கேற்ப தற்போது குடிபதிகளாய் வாழும் பதினொரு பாகை மக்களும், பங்குதாரர்களாகச் சேர்க்கப் பெற்றுச் சீருற நடந்தேறி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியில் உள்ள இருகுடி மக்களாலும், இவ்வாலய நிதிக்காக ஐந்து ஏக்கர் நெற்காணி மானியமாய் வழங்கப்பட்டுள்ளது. இக் காணி வருவாய் கோவில் வேதனம் முதலியவற்றுக்காகப் பிரயோசனப்பட்டு வருகின்றது.

பாடல்கள், சிலப்பதிகார ஏடு உற்சவ காலத்தில் படித்தல் உடுகுத்தாளத் தோடு ஊர்சுற்றுக்காவியங்கள், வழக்குரைக் காவியங்கள், உற்சவமுடிவில் குளுத்தி விழாவில் படிக்கும் குளுத்திப் பாடல்கள் என்பன இவ்வாலயத் தினுக்கும் சொத்துக்களாயுள்ளன.

இங்கு நித்திய பூசை நடப்பதில்லை. அவசிய மேற்படும் போதெல்லாம், கர்ப்பக் கிரகக் கதவு திறக்காமல், மகாமண்டபத்துள் பூசை, ஆராதனைகள் நடத்திவருகின்றனர். உழவர் மழை கேட்டும், கிராமத்துள் தொற்று நோய்கள் தோன்றினால் அவை நீங்கவும், இன்னும் கிரகக் கோளாறுகள் சாந்திப் படவும் இவ்வாறான பொங்கல் விழாக்கள் செய்யப்பட்டுத் தேவியின் அருளைப் பெறுகின்றனர். இங்கு வருடந்தோறும் நிகழும் வைகாசிப் பௌர் ணமிக்கு முன் ஏழு நாட்கள் கதவு திறக்கப்பட்டு பதினொரு பாகையாள ராலும், விசேட நேர்த்தி வைத்துள்ள ஏனையவர்களாலும் பரிபாலன சபையாரின் தீர்மானப்படி பாகைச் சடங்கு முறையில் நைமித்திய விழா நடை பெற்று வருகின்றது.

இவ்வாலயக் கதவு திறந்ததும் கிராமமே ஒரு புனிதமான புதுத் தோற்றத்தைப் பெற்று விடும். பண்டைய சம்பிரதாய முறைப்படி கிராமத்துள் எங்கணும் மக்கள் பரிசுத்தராய் மது, மச்சமாமிசமற்று, வீடுவாசல்களைப் புனித நிலையில் பொலிவுறச் செய்து, பத்தினித் தேவியையே அல்லும் பகலும் வழிபட்டவர்களாய் வாழ்வர். போட்டி முறையில் பாகையாளரின் சடங்கு வழிபாடுகள் நாளுக்கு நாள் சிறப்பாகவே நடைபெறும். கன்னிக்கால் வெட்டு விழா, குளுத்தி விழா ஆகிய சடங்குகள் மிகவும் பக்தியாகவும், ஆடம்பர ஆராதனைகளுடனும் நடைபெறும். வைகாசிப் பௌர்ணமியின் அன்று பின்னிரவு 4-5 மணி அளவில், குளுத்திப் பாடல்கள், பெரிய கவுத்தன்குடி, சின்னக்கவுத்தன்குடி, ஆகிய ஆதி இருகுடிப்பாகை மக்களில் இருவரால் பாடப் பெற்று விழா முடிவடையும். திருவிழா முதலியன இங்கு நடைபெறுவதில்லை. தேவியின் அற்புதங்களையும், பூசை ஆராதனை முறைகளையும் விரிக்கிற் பெருகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (6) வது இயல்: அம்மன் கோவில்கள்

## 5. பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோவில்

மட்டக்களப்புத் தமிழகத்து மூலைமுடுக்குகளில் எல்லாம் பல முருகன் கோயில்களும், பிள்ளையார் கோயில்களுமே முதன்மையாய் உள்ளன. அங்கே அம்மன் கோயில்களும் பல காணப்படுகின்றன. பத்திரகாளி, பேச்சி, மாரி, கண்ணகி, திரௌபதி, கடலாட்சி என்ற பெயர்களானமைந்த அம்மன் கோயில்கள் அவற்றுட் குறிப்பிடத்தக்கன. மட்டக்களப்புத் தமிழகம் எங்கும் பெரும் சிறப்புடன் பரந்து விளங்கும் கண்ணகியம்மன் வழிபாடுபற்றி வேறாகத் தனி இயல் ஒன்றில் விரிவாகக் கண்டிருக்கின்றோம். கண்ணகி, திரௌபதி, பேச்சி, அம்மன் கோயில்களிலே உயிர்ப்பலி கொடுக்கப்படுவ தில்லை. மற்றைய அம்மன் கோயில்களில் இருந்த அவ்வழக்கமும் இப்போது நீக்கப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு கழிமுகத்தருகில் உள்ள நாவலடி என்னும் ஊர்க்கடற்கரையிலே இந்நாட்டிலுள்ள சிறந்ததொரு கடலாட்சி அம்மன் கோயில் இருக்கின்றது.

இவ்வரிசையிலே ஒரே ஒரு திரௌபதி அம்மன் கோயிலைப் பற்றி இங்கே எழுதுவோம் என்று நினைக்கின்றேன். மட்டக்களப்பின் பழைமை யான திரௌபதியம்மன் கோயில் கல்முனைக்கருகிலே பாண்டிருப்பு என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. அங்கு நடக்கும் வருடாந்த விழா மட்டக்களப்புத்தமிழில் ''தீப்பள்ளயம்'' என்றழைக்கப்படுவது. ''பள்ளயம்'' என்றால் பெருவேள்வி என இங்கு பொருளாகும். எனவே திரௌபதி அம்மனுக்கெடுக்கும் பெருந் தீ வேள்வியே தீப்பள்ளயமாகும் என்பது பெறப்படும். பாண்டிருப்புக்கோவிலும், திரௌபதி அம்மன் வழிபாடும் கண்டி மன்னனான விமலதரும சூரியன் (கி.பி. 1594-1604) காலத்தில் இங்கு நிறுவப்பட்டன, என்று தெரிகின்றது. அக்காலத்திலே வட இந்தியா விலிருந்து மட்டக்களப்புக்கு வந்த தாதன் கவுத்தன் என்பவர் இங்கிருந்த சிற்றரசனான எதிர் மன்ன சிங்கனின் உதவியோடு இக்கோயிலை அமைத்த னர் என்று பாண்டிருப்புக் கோயில் பற்றிய பட்டயங்கள் கூறுகின்றன.

''..................................

பார்த்திபர்கள் கொண்டாடப் பாரதத்திற் சொன்னபடி
கம்பம், வனவாசம், கடல்குளிப்புத், தீப்பாய்தல்,
அம்புவில்லுத் தண்டுடனே ஐவர் கொலு வாக்கி வைத்து,
ஆடலொடு பாடி, ஆதி துரோபதைக்கு
மாடமுயர் கோவில் வரிசையுடனியற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிட்டார், தெண்டனிட்டார் குவலயத்தைக் காருமென்றார்
தம்பட்டை, சல்லாரி, தாரை, சின்னஞ், சங்கு தொனி
உடுக்குச் சிலம்பு, மணி, ஒளிதங்கு தீபமெழ,
அடுக்கு முறையோ டராவான் களப்பலியும்,
பத்ததி போற்காட்டிப் பணிக்கன் குலத்தோர்க்கு
உற்ற புகழ் மேவ உங்களுக்கே முன்னீடு
ஈந்தே னிலங்கை எங்குமுயர்ந் தோங்கவென
..........................
..........................
விமல தருமனெனும் வேந்த னகமகிழ்ந்து
கமல விழிக்கண்ணன் கருணை தங்கு மிப்பதிக்கு
வேண்டும் வயல் நிலமும் வெள்ளிக் களஞ்சியமும்
தூண்டு திகிரிதந்தம் சோதியெழ வீழ்ந்து மன்னன்
கண்டி நகர் சென்றான்...................

என்ற பட்டையக் கூற்று பாண்டிருப்புத் திரௌபதியம்மன் கோவில் விழா ஒழுங்கு முதலானவற்றை அமைப்புக்கால முறைப்படியே கூறுவது பாண்டிருப்பினைத் தொடர்ந்து பழுகாமத்திலும் பின்னர் புளியந்தீவு, மட்டிக்களி என்னுமிரு இடங்களிலும் திரௌபதி அம்மன் கோயில்கள் எழலாயின.

தீப்பள்ளயச் சடங்குக் காலமுற்றும் கோயிலில் பாண்டவர் வனவாசம் முதலியவற்றைக்கூறும் பாரதக் கதை படிக்கப் பெறும். சடங்கின் இறுதிநா ளன்று நடைபெறுவதான தீப்பாயும் நிகழ்ச்சியே இவ்விழாவில் மிக முக்கிய மானதாகும். கோயிலின் முன்றிலில் ஏறக்குறைய 20' நீளமும், 4 அல்லது 5' அகலமும் 3 அடி ஆழமும் உள்ள குழியொன்று தோண்டப் பெற்று முதிர்ந்த வீரைமர விறகுகளால் நிறைக்கப்படும். நெருப்பூட்டப் பெற்று அனல்கக்கு தணல்களாக விறகனைத்தும் மாறியபின்னர் கோயிற்பூசகருள் முதல்வரும், ''ஐவர் ஐந்து பேரும்'' (ஐவர் - பாண்டவர், பாண்டுவின் புத்திரர்) திரௌப தியம்மனும்; தீப்பாய்ந்ததும் தம் நேர்த்திக் கடன்களைச் செலுத்த வந்த பக்தர்களும் தீக்குழியினை வலம் வந்து அதன் நடுவழியாக மெல்ல மெல்ல கோவிலின் எதிர்ப்புறத்திருந்து கோயிலை நோக்கி நடந்து செல்வர். தீயின் வெப்பம் பக்கத்தில் வெகு தூரத்தே நிற்போரையும் தகிக்கத்தக்கதாக இருக்கும்போதும், தீப்பாயும் எவருக்கும் அப்பேரழல் ஊறு செய்யாது காக்கும் அம்மனது தெய்வப் பெருஞ்சிறப்பை அனைவரும் வியந்து கொண்டாடுவர். தீப்பாயு முன்னர் பூசகர் அக்குழியின் மீது மந்திரித்த தீர்த்தத்தோடு வீசும் பூக்களும், இலைகளும் நீண்ட நேரம் சென்றும் வாடாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கும் சிறப்பு அனைவரையும் பக்திப் பரவசத்துள் ஆழ்த்துவது.

இவ்வாறு அனைவரையும் பரவசத்துள் ஆழ்த்தி நிற்கும் திரௌபதி அம்மன் கோயில் பாண்டிருப்பில் எழுந்த வரலாறு மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்படுவதை நாம் இவ்விடத்தில் நினைவுபடுத்தல் நன்றென்று கருதுகின்றேன்.

எதிர்மன்ன சிங்கன் என்னும் சிற்றரசன் மட்டக்களப்பு, உன்னரசுகிரி, போர்முனைநாடு, மண்முனை, கோறளைநாடு முதலிய பகுதிகளை எல்லாம் சீருற ஆண்டு வந்தான். அக்காலத்தேதான் நாம் முன்னர்க்கண்ட தாதன் என்பவன் பஞ்சபாண்டவர் துரியோதனாதியோர் பற்றிய கதையுடன் ஈழநாட்டுக்கு வந்தான், அத்தாதன் என்பவன் காவிகமண்டலதாரியாய் வேடம் பூண்டு கொங்கு நாடு விட்டு இலங்கையில் மட்டக்களப்புக்கு வந்த நாகர் முனைத்திருக் கோயிலைக்கண்டு தரிசனை செய்து மகாபாரத இதிகாசத்தை அவ்வாலயத்தில் போதித்தனன். அதையறிந்த திக்கதிபதிரொருவர் எதிர்மன்ன சிங்க நிருபனுக்கு அறிவித்தனர். எதிர்மன்னசிங்க நிருபன் திருக் கோயிலுக்குச் சென்று தாதனைக் குலம், கோத்திரம், நாமம், சுயநாடு இவைகளை அறிவிக்கும்படி கூறினர். தாதனும், அரசனை நோக்கி 'அரசே என் குலம் வசியன் என் நாமம் தாதன், என்னுடைய கோத்திரம் விஷ்ணு, என்னுடைய நாடு கொங்கு நகர். நான் பாண்டவ குலத்து தருமராதியோர்களுக்கு நாகர் குலத்துத் துரியோதனாதிகள் செய்த தீமைகளைக் காண்பிக்கும்படி வந்தேன்' என்று கூறினன்.

எதிர்மன்ன சிங்கனும் அதனை அறிவிக்கும்படி வேண்டினன். தாதனும் அரசனை நோக்கி 'அரசே பஞ்சபாண்டவர்களை, துரியோதனாதிகள் சகுனி என்பவனைத் துணைக் கொண்டு இந்திரப் பிரசித்தத்தை அத்தினாபுரத்தோடு சேர்த்து அரசாளக்கருதி, சகோதர உரிமை கொண்டாடி விருந்துக்கு அழைத்துச் சூதாடி வெற்றி கொண்டு, இந்திரப்பிரசித்தத்தை அத்தினாபுரத்தோடு சேர்த்து பஞ்சபாண்டவர்களை வனவாசம் போகும்படி திட்டம் செய்து, துரியோதனனுடன் பிறந்த துச்சாதனன் என்பவன் பாஞ்சாலனுடைய புத்திரி திரௌபதியினுடைய உடைத்துகிலை உரிய, பஞ்சபாண்டவர் முன்பாகத் திரௌபதியின் மயிரைப்பிடித்து இழுத்து வந்து துகிலைத் கிளைய, விதுரன் அதைத் தடுக்க, பஞ்ச பாண்டவர் துகிலைத்கிளைய, விதுரன் அதைத் தடுக்க, பஞ்சபாண்டவர்கள் தங்கள் இந்திரப் பிரசித்த நாட்டை இழந்து, காட்டிற்சென்றனர். பின்பு பாண்டவர்கள் துரியோதனாதியரைக் கொன்றதும், அரவானைக், களப்பலி செய்ததும், பார்த்தன் சிவனிடத்தில் பாசுபதம் பெற்றதும், பெற்ற பின்பு அக்கினியிற் குளித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் இந்திரப்பிரசித்தம், அத்தினாபுரம் இவைகளை அரசு செய்ததும் காண்பிக்கவேண்டும், அதற்குச் சமுத்திரக்கரை அருகும் வடவால் நிறைந்த இடமும் அதற்கப்பால் வனமும் இருக்கும் இடத்தில் தான் காண்பிக்க வேண்டுமென்று வேண்டினர். அரசனும் சம்மதமுற்று திருக்கோயிலிலிருந்து கடல் அருகாய் வரும்போது தாதன் வேண்டிய படி இருந்தது. அந்த இடத்தில் பாண்டவருடைய உறுப்பை ஆறு பேருக்கு உண்டாக்கி, அதனை நம்பும்படி தீ வளர்த்து, அதிலிறங்கி மீண்டுகாட்டினன். அரசனும் மகிழ்ந்து ஆலயமுண்டாக்கி, பாண்டுறுப்பு முனை என நாமஞ்சூட்டி, வங்கர் குலத்துத் திக்கதிபரே பரிபாலிக்கும்படி திட்டஞ் செய்து தன்னிருப்பிடம் சென்றனன். பின்பு எதிர் மன்ன சிங்கன் மனுநூலோங்க மட்டக்களப்பை அரசாண்டான் என்பர். இப்பகுதியில் பாண்டுறுப்பு என்னும் சொற்பிரயோகத்திலிருந்து ஊர். பேர், காரணமும் விளங்குகின்றது எனலாம்.

அப்பால் கவுத்தன் இங்கிருந்து புறப்பட்டு, தற்போது பெரிய நீலாவணை என்று சொல்லப்படும் கிராமத்தை அடைந்து அங்கே விஷ்ணுவுக்கு ஒரு கோயிலை அமைத்து வழிபட்டு வந்தான்.

பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயிலில் நடைபெறும் 18 நாள் பூசைகளிலும் வேண்டிய உதவிகளை பக்கத்துக்கிராமங்களிலுள்ள சனங்களிடம் கேட்டுச் செய்து வந்தனர். இக்காலத்தில் இங்கு எந்தக் கோயிலும் இருக்கவில்லை. ஆகையால் பக்கத்துக்கிராமங்களிலுள்ள சனங்கள் கோவிலில் வழிபாட்டோடு, தாம் குடியிருக்கவும் பொருத்தமாக இங்கு வந்து காடுகளை அழித்து வீடு கட்டிக்குடியேறினர். இந்தத் திரௌபதி அம்மன் கோவில் தாதனால் ஆக்கப் பெற்றுப் பூசைகள் நடைபெற்று வந்ததால் தாதன் கோயில் என அழைத்தனர். பாண்டுவின் மக்களை இங்கு வைத்துப்பூசை செய்து வந்த காரணத்தால் பாண்டு இருப்பு பாண்டிருப்பு என ஊர்ப்பெயராயிற்று எனவும் கூறுவர். பாண்டவர்களின் சிலைகளை வைத்து வழிபட்டு வந்தாலும், திரௌபதி அம்மன் கோவில் என்றே வழங்கப் பெறுவதால் இன்று பாண்டிருப்பு என்றவுடன் நமது நினைவில் முதலில் தோன்றுவது இந்தத் திரௌபதி அம்மன் கோவிலே. வருடாவருடம் நடைபெற்று வரும் இக்கோவிற் பூசைகளிற் பங்கு பற்றிய சனங்கள் பூசைகளைத் தமக்குள் பகிர்ந்து கொண்டு நடாத்திவந்தனர்.

பூசை தொடங்குவதற்குச் சுவாமியை எழுந்தருளப்பண்ணுவது பெரிய நீலாவணை விஷ்ணு கோயிலிலிருந்தே நிகழ்ந்து வந்தது. காலகதியில் இங்குள்ள மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து எழுந்தருள்வதாக மாற்றிக் கொண்டார்கள். இக்கோவில்களை ஆக்கித்தந்த அண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிமார்களாகிய தாதன், கவுத்தன் ஆகிய இருவருக்குமிடையில் கலகம் ஏற்பட்டதால், ஒருவரை ஒருவர் அழிக்கப்பாடுபட்டு வந்தனர். இதன் காரணமாகத் தாதனை அவன் தம்பி கவுத்தன், துறைநீலாவணைக்குப் போகும் பாதையிலுள்ள ஓர் ஆலமரத்தில் இரகசியமாகத் தூக்கிக் கொன்று விட்டான். அதனால் இன்றும் அந்த ஆலமரம் ''தாதன் தூங்கி ஆலை'' என்று அழைக்கப்படுகின்றது என்று கூறுவர். இந்தக் கவுத்தன் தாதனோடு துலுக்கர்களும் சேர்ந்து வந்தனர் என்றும் அந்தத்துலுக்கரின் உதவியைப் பெற்றுக் கவுத்தன் தமையனைத் தூக்கிலிட்டுக் கொன்றான் என்றும் சொல்லப்படுகின்றது. இவ்வாறு வந்த துலுக்கர் சமய வேறுபாடின்றிக் கலந்து வாழ்ந்தனர் என்றும் இந்தத் திரௌபதி அம்மன் ஆலயத்திலும், துலுக்கர் எனப்படும் பட்டாணிமார்களுக்கும், ஒரு மேடை அமைக்கப் பெற்றிருப் பதை இன்றும் காணலாம் என்றும், அதற்குப் பண்டாணி மேடை என்று பெயர் வழங்குகின்றது என்றும் இவ்வாறு சகலரும் சேர்ந்துதான் ஆலயம் இப்போதுள்ள நிலைக்கு வந்துள்ளதென்றும் கூறுகின்றனர். இந்தத் துலுக்கரே தற்போது மருதமுனை என்று வழங்கும் கிராமத்தில் குடியேறினர் என்றும் சொல்லப்படுகிறது.

இக்கோயிலிலுள்ள விக்கிரங்கள் எல்லாம் தாதன் கொண்டு வந்தவைகளேயாகும். சகாதேவன் சிலை இப்போது இக்கோவிலில் இல்லை என்றும், அதற்குப் பூசை செய்தல் இயலாத தெனக்கூறி, இப்போதுள்ள பூசகர்கள் அதனை கடலினுள் எறிந்து விட்டார்கள் என்றும், அந்தச் சிலையை வீசிய இடத்தில் தான் தீப்பாயுமுன் சென்று மஞ்சள் குளித்து, போனவழியாலேயே திரும்பியும் வந்து தீக்குழியின் மேல் நடந்து செல்வார்கள் என்றும் அறியக்கிடக்கின்றது. தீக்குழி ஒன்றாக இருந்தாலும், அதன் நடுவிலிருந்து வடபக்கம் ஒரு குழியாகவும், தென்பக்கம் ஒரு குழியாகவும் கொண்டு, மாறி மாறி வெட்டித் தீ மூட்டுவர். அவற்றைப் பிள்ளையார் குழி என்றும், அம்மன் குழி என்றும் கூறுவர். குழி வெட்டப் படும் இடத்தின் அடியில் பலயந்திரங்கள் தாதனால் தாழ்க்கப்பட்டுள்ள தென்று சொல்கிறார்கள். அதனாலேதான் இக்காலத்திலும் எவ்வித பயமுமில்லாது தீக்குழியில் பாய்கிறார்கள். இல்லை யெனில் வீரத்தழற் பிழம்பு காலைத் துளைத்து விடுமே, அப்படி நிகழாததின் காரணம் தாதன் புதைத்த யந்திரத்தின் மகிமையே என்ற அபிப்பிராயமும் நிலவுகிறது. அஞ்சிப்பாய்கிறவர்களுக்கு அனல் அடித்தாலும் சுடுவதில்லையாம். எல்லாம் திரௌபதி அம்மனின் திருவருளே என்று பக்திபரவசத்தினாற் சொல்லுகின்றனர்.

தாதன், கவுத்தன் ஆகிய இரு சகோததர்களுடன் பல சந்நியாசிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததாகக் கதை உண்டு. இது முற்றிலும் உண்மை என்பதற்கு இடமுமுண்டு. அக்காலச் சந்நியாசிகள் குடுக்கைகளிற்தான் கஞ்சா வைத்துக் குடிப்பது வழக்கம். அதற்குரிய சான்றுகள் பல இங்கே தென்படுகின்றன. ஆகவே இவர்களுடன் பல சந்நியாசிகளும் வந்திருக்கலாமென்பது நம்பக் கூடியதாயிருக்கிறது. இந்தத்தாதனும், கவுத்தனும் கூட உண்மையான சந்நியாசிகளாகவே இலங்கைக்கு வந்தனர் என எண்ணவும் இடம் ஏற்படுகிறது. இந்தியாவிலே எல்லோரும் தங்கள் தங்களால் இயன்றளவு இச்சமயத்தைப் பரப்ப முற்பட்டனர். இந்தவகையிலேதான் தாதனும் கவுத்தனும் ஏனையோரும் இவ்வாலயத்தின் மூலம் விட்டுணு மதச் சார்பை மக்களிடையே உண்டாக்க நினைத்திருக்கலாம். ஆயினும் விட்டுணுமதம் என்பதொன்று மட்டக்களப்பில் தழைக்கவே வழியற்று எல்லாம் சிவசமயத்துள் அடக்கப்பட்டு விட்டன.

பழைய காலத்திலே, ஏன் இன்றும் கூட தந்தையின் பெயராலே தனயர் அழைக்கப்படும்மரபு உள்ளது. இதனாலேயே தான் பாண்டுவின் புத்திரர் பாண்டவர் எனவும், அவர்கள் ஐந்துபேர் ஆதலால் பஞ்சபாண்டவர் எனவும் அழைக்கப்படுகின்றனர். திரௌபதி அவர்களின் பத்தினி. மைத்துனனான துச்சாதனன் திரௌபதியின் துகில் உரியமாட்டாது கைசோரக்களைப்புற்று நின்று அலுக்கச் செய்தது அன்னையின் கற்பின் பொற்பன்றோ. இந்தப் பத்தினித் தெய்வத்தின் பெயரையே இவ்வாலயத்திற்குச் சூட்டி ''திரௌபதி அம்மன் கோவில்'' என அழைத்தனர். 18 நாட் சடங்கின்போது அங்கு படிக்கப்படும் பாக்கள் சிலவும், தீப்பள்ளயமும் இதற்கடுத்தநாள் நிகழ்ச்சியும் திரௌபதி கற்பிற் சிறந்தவளே என்பதற்குச் சான்று பகர்வனவாயமைந்து பரவசமூட்டுவனவாகும்.

கோயிலுக்கென முன்னர் தாதன் காலத்திற் கொடுக்கப்பெற்ற மானியக்காணி முழுமையும் இன்று கிடைக்காது போயினும், மீதியாகவும், போடிமார் கொடுத்தளவுமாகவுள்ள காணி வரும் படிகள் கோவிலைப் பரிபாலிக்கப் போதியதாகின்றது. உற்சவ காலத்தில் கடைவாடகையும் நியாயமான அளவு உள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (6) வது இயல்: அம்மன் கோவில்கள்

## 6. வெல்லாவெளி ஸ்ரீ முத்து மாரியம்மன் (சுவாதியம்மன்) கோவில்

வெல்லாவெளி என்னும் கிராமம் படுவான் கரையில் பட்டிருப்பு துறையிலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. மண்டூருக்குப் போகும் வழியில் வெல்லாவெளிச் சந்தி பாலையடி வட்டைக்கிராமத் துக்காகப் பிரிந்து செல்கின்றது. இக் கிராமச் சூழ்நிலை முழுவதும் வயல் வெளிகளே தென்படுவதாகும். ஆனால் மாரி காலத்தில் பெரும் போக வேளாண்மை எங்கும் நிறைந்து பச்சைப் பசேலென்ற தோற்றமுள்ளதாய் இருக்கின்றது. இந்த வெல்லா வெளிக் கிராமம் பன்னெடுங்காலமாக நாதனை என்ற பெயரில் வழங்கி வந்துள்ளது. ''நீதி தோய் வன்னிமைக்கு நிகரில் நாதனை நாடு'' என்றும் ''நல்லருள் ஆட்சி நல்கும் நாதனை மாரி யாலும்'' என்றும் வருகின்ற பாடல்கள் இதனை உணர்த்துகின்றன.

இந்த ஊரிலே வடகரையால் நாம் செல்லும் போது முதலில் தெரிவது ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயமாகும். வெல்லா வெளிக் குளத்தின் தென்கரை சார்ந்து பசிய வயல் பரப்புகள் சூழவர காட்சி தரும் ஆலயமானது பார்ப்போர் கண்ணையும், கருத்தையும் கவர்வனவாய் உள்ளன. சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுக் காரணங்களோடு கூடியது இக்கோயில். அக்காலத்தில் இக்கோயில் சுவாதி அம்மன் பெயரால் வேறு ஒரு இடத்தில் இருந்திருக்கின்றது.

அக்காலம் வதனமார் என்று அழைக்கப்படும் இடையர் கூட்டம் வட இந்தியாவிலுள்ள அயோத்தியிலிருந்து புறப்பட்டு, தென்னிந்தியாவிலுள்ள காஞ்சிக்கு வந்து அங்கிருந்து கும்பகோணம், இராமேஸ்வரம் வழியாக திருகோணமலை சென்றது. அக்கூட்டம் அங்கிருந்து கந்தளாய், தம்பல காமம், கிளிவெட்டி, தம்பன் கடுவை என்னும் ஊர்களுக்குச் சென்று அங்கி ருந்து உகந்தை மலைவரையும் அலைந்துள்ளது. அப்பால் அங்கிருந்து பாணமை திருக்கோயில், காரைதீவு, கல்முனை ஊடாக நாதனையை வந்தடைந்து அதுவே தங்களுக்கு உகந்த இடமெனக் கருதி தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டது. இவற்றை வதனமார் காவியம் என்னும் பாக்களால் நாம் அறியலாம்.

நாதனை கல்லடி என்னும் அடுத்தடுத்த இரு மலைக்குன்றுகளில் ஒன்றில் வினாயகரது கற்சிலையைச் செதுக்கியும், மற்றதில் மாரியம்மனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு உருவான சுவாதி அம்மனை உருப்படுத்தியும் வழிபாடு செய்து வந்தனர். இவ்விடத்திலிருந்து அரை மைலுக்கப்பால் கனிவகைகள், தேன், பால் மலிந்து காணப்பட்டதாலும் நாதனை ஆறு வளம் செய்வதாலும் வெளி இடங்களைச் சேர்ந்த மக்கள் அங்கு குடியேறத் தொடங்கினர். சில வருடங்களின் பின்னர் இங்கு ஒருவித கொள்ளை நோய் பரவத் தொடங்கி, பலர் அடுக்கடுக்காய் மரணமுற்றதாகவும் இதனால் கவலையுற்ற ஊரவர்கள் வேள்விகள் செய்தும், பொங்கல் படைத்தும், மடைவைத்தும் பல குலதெய்வங்களை வழிபட்டும் பலனளிக்காமையால், இங்கு ஒரு பகுதியில் வாழ்ந்த வதனமாரிடம் சென்று முறையிட்டனர். அவர்கள் நீண்ட தூரம் யோசனை செய்த பின்னர் முத்துமாரியம்மனை தாங்கள் குலதெய்வமாகக் கொள்ளலே முறை என்று கருதி, அவ்வாறு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தனர். அதனை எல்லோரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டு தலைக்குன்றின் அடிவாரத்தில் குளவெளியின் கரையில் இப்போது மாரியம்மன் கோயிலுள்ள இடத்தில் கொத்துப் பந்தரிட்டு வழிபாடு செய்யத் தொடங்கியதாகவும் பரம்பரைத் கதை ஒன்றின் மூலம் அறியக்கூடியதாயுள்ளது.

இவ்வழிபாடு மிகுந்த நன்மையை அளித்ததால் கி.பி. சுமார் 1820 ம் ஆண்டளவில் சிறிய அளவிலான ஆலயத்தை நிருமாணித்து ஸ்ரீ முத்துமாரி அம்மனை வழிபடத் தொடங்கினர். பின்னர் 25 ஆண்டுகள் சென்றதும் சூழவர வயல் நிலங்களையும் முற்பக்கத்தில் அழகிய தாமரைத் தடாகத்தையும் கொண்டிருந்த அதே இடத்தில் அம்மனுக்குச் சிறப்பான முறையில் ஆலயத்தை நிருமாணிக்கத் திட்டமிட்டார்கள். அன்பர்களின் மன எண்ணப்படி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் எழுந்தது. அவ்வாலயத்தை அண்டி சிவன், பிள்ளையார், முருகன், விஷ்ணு, நாகதம்பிரான் போன்ற தெய்வங்களுக்கும் ஆலயங்கள் தனி அன்பர்களின் உதவியாலும், கோவில் பணத்தினாலும் எழுப்பப்பட்டன.

1850 இல், திட்டமாக இடம் தீர்மானிக்கப்பட்டு ஆலயம் எழுப்பப்பட்ட பின்னர் 1917 ம் ஆண்டளவில் மேலும் திருத்தியமைக்கப்பட்டது. அதன் பின்னர் 1967 ம் ஆண்டில் இவ்வாலயம் முற்றாக இடிக்கப்பட்டு மூலஸ்தானம் முன்பிருந்த இடத்திலிருந்து சிறிது பின் நகர்த்தி கோயிலை விட்டு விசாலிப்பித்து நிர்மாணித்தார்கள். 1968 ம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதோடு கோயில் திருப்பணி நிறைவேறிற்று எனலாம்.

ஆரம்பகாலத்தில் ஆண்டுக்கொரு முறையே கதவு திறக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவம் நடைபெற்றுவந்தது. அதன் பின்னர் உச்சிக்காலப்பூசையும், கடந்த 20 ஆண்டுகளாக வெல்லாவெளி இந்துசமய அபிவிருத்திக் கழகத்தின் சார்பில் வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனையுடன் கூடிய மாலை நேரப் பூசையும் நடைபெற்று வருகின்றது. பூசைகளின் முறைகள் மற்றைய மாரியம்மன் ஆலயங்களில் நடைபெறுவதைப் போன்றே நடை பெறுகின்றன.

வருடந்தோறும் ஆனித்திங்கள் பூரணைத்தினத்திற்குப்பத்து நாட்க ளுக்கு முந்தியதாகவரும் மகம், பூரம், உத்தரம் என்னும் ஏதாவது ஒரு நட்சத்திரத்தில் கும்பஸ்தாபனத்துடன் ஆரம்பமாகிய 10 நாட்களுக்கு உற்சவம் நடை பெற்று, மூலம் அல்லது கேட்டை நட்சத்திரத்தில் கும்பம் சொரிதலுடன் திருவிழா முடிவடையும். அதில் சிறப்பம்சமாக மூன்றாம் நாள் தொடக்கம் ஆறாம் நாள் வரையும் மாரியம்மன் வீதி உலாவருவதும் 7 ம் நாள் நாதனைப் பிள்ளையாரடிக்கும் நாச்சிமார் கல்லடிக்கும் செல்லுதலும், அங்கு வதனமாரோடு சுவாதியம்மனுக்கும் பால்பள்ளயம் என்பன ஏற்றலும், 8 ம் நாள் கம்பம், தவநிலை, தீக்குளிப்பு என்பனவும், 9 ம் நாள் பள்ளயம் எனப்படும் மடைச் சடங்கும், 10 ம் நாள் தீர்த்தமும் இடம் பெறும். இந்த நாட்கள் மிகவும் சிறப்பான அம்சம் பொருந்தியதாக இடம் பெறும். ஆண்டு உற்சவ காலத்தில் மாரியம்மனுக்குச் சடங்கு வைத்தலும் சடங்கின் போது பங்கு பெறும் பலர் தெய்வம் ஏறி உருக்கொண்டு ஆடுதலும், கட்டுச் சொல்லுதலும் இடம்பெறும். இதில் தலைமைக்கட்டாடியாரிடம் கட்டுக்கேட் டல் அல்லது குறிகேட்டல் எனப்படும் நிகழ்ச்சிகள் கோயில் பூசகர்களால் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும். கோயில் பூசகர்மார் அவ்வூரைச் சேர்ந்த சைவர்களே என்பது நியதியாகும். இப்போது குருக்கள் ஒருவரைக் கொண்டு பூசனை செய்யும் ஒழுங்கும் உண்டு.

இவ்வாலயம், பண்டு தொட்டு இப்பகுதி முக்குவ இனமக்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அவர்களிலுள்ள ஏழு குடிகளையும் சேர்ந்தவர்களில் ஏழு பிரதி நிதிகளும் முகவர்களாகவும், பரம்பரையாக ஒருவர் வண்ணக்கராகவும் நீண்டகாலமாக இயங்கி வந்தனர். காலம் சென்ற திரு. எஸ். வி. சுப்பிரமணியம் அவர்களும், அதன்பின் அவரின் புதல்வரான காலஞ் சென்ற திரு. எஸ்.வி. இரத்தினசிங்கம் அவர்களும், வண்ணக்கர் களாக இருந்து பெரும்பணி ஆற்றியுள்ளார்கள். இவர்களின் காலத்திலேயே இவ்வாலயம் பல்வேறு துறைகளிலும் பெருவளர்ச்சியுற்றது. திரு. எஸ்.வி. இரத்தினசிங்கம் அவர்கள் மரணமடைந்ததைத் தொடர்ந்து கடந்த 1976 ம் ஆண்டு முதல் அங்குள்ள இளைஞர்களின் தூண்டுதலின் பேரில் வண்ணக்கர் எனும் முறை ஒழிக்கப்பட்டு, ஏழு பேரைக் கொண்ட பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டு அதில் ஒருவர் ஓராண்டு காலத்திற்குத்தலைவராக திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டு செயல்படுகின்றது. ஒரு தடவை தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கும் போட்டியிலிருந்து தவிர்க்கப்படுவார். இதன் மூலம் அங்குள்ள ஏழு குடியைச் சேர்ந்தவர்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட்டு ஏழாண்டுக் கொரு முறை தலைவராக வரும் பேறு கிடைக்கின்றது.

இவ் ஆலயத்துக்குச் சுமார் 30 ஏக்கர் வயல் நிலங்கள் உண்டு. ஏலத்தின் மூலம் இந்நிலம் வருடாவருடம் குத்தகைக்கு விடப்படுகின்றது. இதை விட ஆலய நிர்வாகத்துக்கென ஊர்மக்களால் வருடந்தோறும் நெல்லும், பணமும் கொடுக்கப்படுகின்றது. இவ்விரண்டு வருமானங்களும் ஆலயத்தை நிருவகிப்பதற்குப் போதுமானவையாக இருக்கின்றன.

பொதுவாக மாரியம்மன் ஆலயங்களில் உள்ளவாறு காவியம், மாரியம்மன் உற்பத்தி, தவநிலைப் பாடல்கள், மாரியம்மன் அகவல், மாரியம்மன் அந்தாதி, மாரியம்மன் தாலாட்டு, மாரியம்மன் திருக்குளுத்தி, மாரியம்மன் வீதி உலா, மாரியம்மன் ஊஞ்சல் பாட்டு முதலானவை இவ்வாலயத்திலும் பாடப்படுகின்றன. இவ்வாலயத்தின் சிறப்புப்பற்றி கிராமிய கவிஞர் நா. தெய்வநாயகம் அவர்கள் 1948 ம் ஆண்டு கும்மி என்னும் பாடல்களையும், மண்டூர் கவிஞர். மு. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் 1958 ல் எழுதிய தனிப்பாடல்களையும், கவிஞர் வெல்லவூர்க் கோபால் ''ஊரும் உயர்வும்'' என்னும் தலைப்பில் தேனருவி என்னும் சஞ்சிகையில் 1965 ல் எழுதிய கட்டுரையும், 1960 ல் அவ் ஆசிரியர் ''நோய் தீர்க்கும் மாரி'' என்ற தலைப்பில் சிவாயவாசி என்னும் சமய சஞ்சிகையில் எழுதிய கட்டுரையும், 1968 ல் அவ் ஆசிரியர் தினகரன் பத்திரிகையில் இக் கோயிலின் கும்பாபிஷேகத்தை யொட்டி எழுதிய ''வெல்லாவெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் அருளாட்சி'' என்ற தலைப்பிலான கட்டுரையையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அட்டைப்பள்ளத்தைச் சேர்ந்த சீ. கணபதிப்பிள்ளை ஆசிரியர் தனது ''மகாமாரித் தேவி திவ்வியகரணி'' என்னும் தொகுப்பு நூலில் ஓலைச்சுவட்டில் அமைந்த இதன் தொடர்பான வதனமார் காவியங்களையும் சேர்த்துள்ளார். இவை இக் கோயிலைப் பற்றி அறிவதற்கு வாய்ந்த நற்கருவிகளாகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன்.

இவ்வாலயத்துக்கு நாளாந்தம் பலபாகங்களிலிருந்தும் மனக்குறை நிறைந்த அடியார்களும், நோயாளர்களும் பெரும் அளவில் வருகின்றனர். தீராத நோய்கள் எல்லாம் தீர்ப்பவள் இம்மாரி. இந்து சமயத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவர்கள் மாத்திரம் அன்றி, பௌத்த, கிறிஸ்தவ மக்களும் நேர்த்தி செய்து வழிபட்டு, தங்கள் குறைகளைப் போக்கிக் கொள்ளுகின்றனர். பெரும் பெரும் வைத்தியர்களெல்லாம் கைவிட்ட நோயாளர்கள் பலர் தங்கள் துயர் போக்கி, புதுவாழ்வு பெற்ற சம்பவங்கள் இங்கு நிறைய உண்டு. இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தையொட்டி பரந்து வளர்ந்திருக்கும் வேப்பமரத்தின் முன் வைத்து உச்சாடனம் செய்யப்பட்ட விபூதியும் இங்கு நோயாளர்கள் உட்கொள்ள வழங்கப்படுகின்றது, இங்கு நடை பெறும் நிகழ்ச்சிகளையும் பார்த்தால் இந்த விஞ்ஞான யுகத்தில் இப்படியொரு புதுமையா? என்று எண்ணத் தோன்றுகிறது.

''திருந்துமங் கலவீர வதனமார் வாழி
சிவ சமய மைந்தெழுத் தெப்போதும் வாழி
பொருந்து பூசனை செய்த கட்டாடி மார்வாழி
பூ லோக நற்பதிகள் நீடுழி வாழி
அருந்தவஞ் செய்கின்ற முனிவர்கள் வாழி
அழகு நெறி மட்டக்களப்பு நகர் வாழி
வருந்துயர் அகற்றி அருள்பாலிக்கும் நாதனை
மக மாரி பொற்பாதம் வாழி வாழியவே''

என்று வதனமார் காவியம் ஒன்று விளித்து நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (6) வது இயல்: அம்மன் கோவில்கள்

## 7. கோரா வெளி உறையும் கோல வள்ளி நாயகி கோவில்

மட்டக்களப்புக்கு வடக்கில் 16 வது மைல் தூரத்திலிருக்கும் ஒரு சிற்றூர் கிரான் எனப்படுவது. இங்கிருந்து சிறிது தூரம் சென்றதும் வாழைச்சேனை ஆறு குறுக்கிடும். ஆற்றைக்கடந்து 4 மைல் சென்றதும் பிரசித்தி பெற்ற கோராவெளி வள்ளியம்மன் ஆலயத்தை அடைந்து விடுவோம். பாதையின் இருபுறமும் கண்களுக்குப் பசுமையூட்டும் நெற்பயிர்கள் வளர்ந்து செழித்து நம்மை வரவேற்கின்றன. தூரத்தே தோன்றும் பதுளை மலைத்தொடர் எழுந்து நிற்கின்றது. கன்னங்கரேலென்ற அக்காட்சி பசிய வயல்களுக்கூடு கொடுத்து அக்காட்சியை மிகுத்துத் தோன்றச் செய்கிறது. கொஞ்சதூரம் சென்றதும் புலி பாய்ந்த கல் என்னும் ஊரைச் சென்றடைவோம், வழியின் இரு மருங்கிலும் பசிய பெருங்காடு. கருங்காலி, முதிரை, வேம்பு, மா, மருக்காரை முதலிய மரங்கள் காட்டை அணிசெய்கின்றன. இந்தக் காட்டில் பாம்புப் புற்றுகளுக்கும் குறைவே இல்லை. இவ்வழிச் செல்வது கதிர்காமத்திலிருந்து செல்லக் கதிர்காமம் செல்வது போன்ற பிரமையை ஏற்படுத்துகின்றது. பிரமாண்டமான நாகதம்பிரானின் புற்று குறுக்கிடும். பக்தி சிரத்தையோடு கற்பூரம் கொளுத்திக் கொண்டு அவ்விடத்தை விட்டுப்புறப்பட்டால் சுமார் 1/2 மணி நேரத்தில் கோராவெளி அம்மனின் ஆலயத்துக்கு வந்து விடுகின்றோம். ஆலயம் என்றால் பிரமாண்டமான ஆலயமல்ல, ஆலயமே இல்லை எனலாம்.

இரண்டு மெல்லிய கொக்கட்டிக் கன்றுகள், ஐந்து, அடி உயரம் இருக்கும். அவற்றின் மேல் கொத்துப் பந்தரிட்டு இருக்கும். இது தான் பிரசித்தி பெற்ற ஆலயம். அந்தக் கொக்கட்டிக் கன்றுகளைப்பற்றி ஒரு அதிசயம். சுமார் 30,40 வருடங்களாக வளர்ச்சியோ, தேய்வோ இன்றி அன்றும், இன்றும் குறையாத இளமையோடு காட்சி தருகின்றன. அவற்றின் பக்கத்தில் நிற்கும் மற்றைய கொக்கட்டி மரங்களும், வீரை மரங்களும், வம்மி மரங்களும் முதலான வேறு மரங்களும் வளர்ச்சி உற்று வான் ஓங்கி நிற்கும் போது இந்தக் கன்றுகள் மட்டும் இளமை குன்றாது, முதுமை, மூப்பும் பெறாது நிற்பது பார்ப்போரை வியப்புக்குள்ளாக்குகின்றது. அதிலும் ஒரு விந்தை என்னவென்றால் அதில் (காணிக்கை) காசு போடுவோர் ஒரு போருக்குள் போடுகிறார்கள். கணீர் என்ற சத்தத்துடன் போய்ப் பூமியில் விழுமாம். இந்தப் போர் மண்ணால் மூடப்பட்டு விட்டபடியால் நம்மால் பரீட்சித்துப் பார்க்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் குடி கொண்டுள்ள இடம் மேடாகக் காட்சி தருகின்றது. மருது, விளா, வீரை முதலிய மரங்கள் மேடையை நிழல் செய்து குளிர்விக்கின்றன. அக்குளிர்ச்சி போதா தென்று ஆலயத்தின் நாற்புறமும் மகாவலிகங்கையின் கிளைநதி ஒன்று வளைந்தோடிச் செழுமை தருகின்றது. வைகாசிப் பூரணை தோறும் ஆயிரக் கணக்கான மக்கள் பொங்கலிட்டு பக்தி செலுத்துவதன் மர்மந்தான் என்ன. அதுபற்றி பல ஐதீகங்கள் உண்டு.

பல வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பைச் சேர்ந்த சித்தாண்டி என்னும் கிராமத்தில் வேடர்கள் வசித்துவந்த காலம். இவ்வேட்டுவக் குடும்பத்தில் ஒரு நாள் நடக்கக் கூடாத சம்பவம் ஒன்று நடந்து விட்டது. வாலிபன் ஒருவன் தன் சகோதரியை மிருகத்தனமாகக் கூடி விட்டான். இதனால் சீற்றம் கொண்ட மற்றைய வேடர்கள் அவனைக் கொன்றொழித் தனர். இதன் காரணமாக ஆட்சியாளர்களால் கொலைகாரன் மீது வழக்குத் தொடரப்பட்டது. தங்களுக்குச் சாதகமாக தீர்ப்பு அமைந்தால் பிரமாண்ட மான ''பள்ளவெளி'' என்னும் வயலை, சிற்றாண்டியிலுள்ள முருகன் கோயிலுக்கு கொடுப்பதென வேண்டுதல் செய்தனர் வேடர் சமுகத்தினர். அவர்களின் வேண்டுதல் வீண்போகவில்லை. சிற்றாண்டிக் கந்தவேள் வேடர்களைக் கைவிட்டு விடவில்லை. அதனால் விடுதலை பெற்றகைதிகள் தாம் வேண்டுதல் செய்ததின் படி வயலை முருகனுக்கு அர்ப்பணம் செய்து விட்டு அங்கிருந்து மேற்கு நோக்கிக் குடி பெயர்ந்தார்கள். நேரே அவர்கள் வந்து குடியேறிய இடம்தான் இக் கோராவெளி என்பது, அவர்களது வழிபாட்டுத் தொடர்ச்சிதான் வேடர்களது வள்ளியம்மன் வழிபாட்டு வழக்க மாகக் காணப்பட்டது என்பதும் இவ் ஐதீகக் கதையினால் நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

சில காலத்தின் பின்னர் அவ்வேட்டுவக் குடும்பத்தில் அழகான ஒரு பெண் மகவு பிறந்தது. குழந்தை பிறந்து பருவ வயது எய்தியதும் தனது தாய் தந்தையாரிடம் - தான் சமாதியில் இருக்கப்போவதாகவும், அதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து தரும்படியும் வேண்டினாள். பெற்றோர் தடுத்தனர். கலங்கினர். எதற்கும் பயன் இல்லை. சில நாட்களில் பெண் சமாதியானாள். அந்த இடத்தில் ஒரு கொக்கட்டிய மரம் முளைத்தது. முளைத்து நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகத் திடீரென்று வளர்ந்து வளர்ந்த படியே திடீரென்று பட்டுப் போயிற்று. அதிலிருந்து தழைவிட்ட இரண்டு கன்றுகளே குறிப்பிட்ட கால வளர்ச்சிக்குப் பின்னர் இன்று வளர்ச்சியும், தேய்வுமின்றி காணப்படும் கன்றுகளாகும்.

ஆரம்பத்தில் வள்ளியம்மனையே மக்கள் இந்த இடத்தில் நினைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசித்து வந்தார்கள். கோரா வள்ளி என்று பக்தியோடு பெயரிட்டு வணங்கினர். அப்பெயரான கோராவள்ளி என்பது திரிந்து கோரா வெளி யாக இன்று ஆகிற்றெனலாம்.

''கோரா வெளி உறையும் குஞ்சு வள்ளித் தாயாரே
கரையாக்கம் பூப்பறிக்க கைக் குழந்தை தாராயோ.''

என்பது போன்ற நாட்டுப்பாடல்களும் ''கோராவெளி வள்ளி சீராக் கியே வைப்பாய்'' என்பது போன்ற பழமொழிகளும் இவற்றுக்குச் சான்று பகர்கின்றன. எனினும் மக்கள் இன்று வள்ளியம்மனுக்குப் பதிலாகச் சில ஆண்டுகளாக கண்ணகை அம்மனை நினைந்து வணங்குகின்றார்கள். வள்ளியும், கண்ணகியும், இரு வேறு பெயர்களால் அழைக்கப்பட்டாலும் இருவரும் உமையின் ஒரு சக்தியே என்ற தத்துவத்தை மக்கள் புரிந்து வைத்திருக்கின்றார்கள் என்பது தெரிகின்றது.

கோராவெளி வள்ளி அம்மன் பல அதிசயங்களையும், பக்தர்கள் வேண்டுவனவற்றையும் செய்திருக்கிறார்கள் என்பது தெரிகின்றது. ஒரு முறை மழையின்றி வானம் பொய்த்து வயல்கள் கருகி விட்டன. மக்கள் அம்மனை வேண்டினர். இரவு 1 மணியளவு இருக்கும். ஆலயத்தைச் சுற்றிச் செல்லும் ஆலயமடு நுங்கும் நுரையுமாக வெள்ளம் பாய்ந்து எங்கும் பசுமை தழைத்தது. இதைக் கண்டு தமது போடியாரிடம் விசயத்தைச் சொல்ல, ஓடிச் சென்ற முல்லைக்காரனும், இன்னும் சிலரும் வழியில் ஓர் கல்யானை நிற்பதைக் கண்டு முதலில் பயந்து, பின்னர் வியந்து கொத்து முறித்துப் போட்டு விட்டு தமது போடியாரிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்தனர். வயல் வளம் கொழிக்கும் மகிழ்ச்சியில் போடியார் யானையையும் பார்க்க எண்ணி அவ்விடத்துக்குச் சென்றார். அங்கு யானை இல்லை. கொத்து மாத்திரம் கிடக்கக்கண்டு அந்த இடத்தில் கோயில் கட்டுவதற்காக ஒழுங்குகள் செய்தனர். ஒரு நாளிரவு கனவில் அம்மன் தோன்றி வெறும் கல்லாலும், சுண்ணத்தாலும் அமைக்கும் ஆலயம் எனக்கு வேண்டாம் என்று கூறி நிலத்தின் கீழே இந்த யானை நின்ற இடத்தில் ஒரு சுரங்கம் தோன்றச் செய்து அதனுள் அழைத்துச் சென்று பொன்னும், மணியும், வைரமும் வைடூரியமும், இழைத்து மின்னும் கோபுரம் ஒன்றைக் காட்டி மறைந்தா ளென்பர், மறு நாள் யானை நின்ற இடமும், தாம் கொத்து முறித்துப் போட்ட இடமும் இதே கொக்கட்டியங் கன்றுகள் நின்ற இடம் தான் என்பது அனைவ ருக்கும் தெளிவாயிற்று.

இன்னுமொரு அற்புதத்தை இங்கு கூறாமல் இருக்க முடியவில்லை. இக் கோயிலைச் சுற்றி ஓடும் ஆற்றில் தினமும் ஒரு முஸ்லீம் மீன் பிடித்து வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் அயர்வைப் போக்கிக் கொள்ள கோயிலடி மணற்றிடலில் அமர்வது வழக்கம். ஒரு நாள் அவனுக்கு மீன் அடியோடு கிடைக்கவில்லை. களைப் பால் சிந்தனையோடு மணல் மேட்டில் அமர்ந்தான். மணல் மேட்டில் அப்ப டியே தூங்கி விட்டான். அம்மன் அவனது கனவில் தோன்றி ''கவலையை விடு, அந்தக் கொக்கட்டி மரத்தடியில் ஒரு தங்கப்பானை இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு....'' என்றது. முஸ்லீமும் விரைந்து மணல் மேட்டை விட்டு ஓடிப் போய்ப் பார்த்தான். ஒரு தங்கப்பானை இருந்தது. ஆர்வத் தோடு இதனைக் கையில் எடுத்தான். என்னே விந்தை இரு கண்களும் உடனே குருடாயின. அலறினான், துடித்தான் ஆயினும் அம்மன் இரங்க வில்லை. பொருள் மீது உனக்கு இத்தனை ஆசை இருந்த படியால் நான் சொல்லப் போவதைப் பொறுமையோடு இருந்து கேட்கவில்லை. பானை இருந்த இடத்தில் வைத்துவிட்டு ஓடு என்றது. பானையை முன்பிருந்த இடத்தில் வைத்ததும் கண்பார்வை பெற்றான். தகப்பானையும் மறைந்து விட்டது.

இப்படிப்பட்ட அற்புதங்களை வருடாவருடம் வைகாசிப் பூரணையி லன்று கூடும் வயோதிபர்கள் கூறுவார்கள். வைகாசி மாதப் பூரணை மட்டக்களப்பு நாட்டில் எங்கும் கண்ணகி விழாக்காலமாகையால் இவ்விழா வும் அவ்வாறு கண்ணகி விழாவோடு கலந்து போயிற்றெனலாம். ஆயினும் மற்றைய கண்ணகி விழாக் கோயில்கள் போல் இதற்குச் சடங்கு இத்தனை தான் என்ற வரையறை இல்லை. கோயில் வரும்படியைச் சேர்ப்பாரும் இல்லை. ஆயினும் வைகாசிப் பூரணை அன்று இங்கு கூடும் வழக்கம் மாறா ஒன்றாய் விட்டது. நல்ல எதிர்காலம் இக் கோயிலுக்கு வாய்த்து மக்கட் குடியேற்றமும் உற்று முன்னேறுவதற்கும் காலம் துணை செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (6) வது இயல்: அம்மன் கோவில்கள்

### 8. ஏறாவூர் பத்திரகாளி அம்மன் கோவில்

ஏறாவூர் முதலாம் வட்டாரத்தில் இக் கோயில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் வரலாறு சுமார் 175 வருடங்களுக்கு முன்னர் தான் உண்டாகியதென்று தெரிகிறது. இந்தக் காலத்தில் மட்டக்களப்புப் பகுதி கண்டியை அரசாண்ட ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கனின் கீழ் (1798 - 1815) இருந்த காலமாக இருக்கலாம். அப்படியாயின் ஏறாவூர்ப்பகுதிக்கு ஊர்ப்போட்டியாக இருந்த நிலமை பாவிப்போடியார் அவர்களே எனலாம். ஆயினும் அவருக்கும் இக் கோயில் ஆரம்பத்திற்கும் எவ்வித தொடர்பும் இருந்ததாகத் தெரியவில்லை.

மட்டுநகர் வடக்கே பிரதான வீதியில் கிட்டத்தட்ட 8 மைல் தொலைவில் உள்ளது இச்சிறிய பட்டணம். பண்டைய எகுளப்பற்றுக்கு இது தலைநகரம் போன்றது. இது தமிழர்களும், முஸ்லிம்களும் நெருங்கி வாழுகின்ற ஊர்ப்பகுதி. காட்டுமா, அம்பிளா, வம்மி முதலான அடர்ந்த மரச்சோலைகள் நிழல் பரப்ப, கிணறுகளும் நிறைந்து, பல கட்டிடங்களும் நிறைந்துள்ளது இக் கோயில் பரப்பு, வெள்ளிக்கிழமை தோறும் பக்தர் கூட்டத்தாரின் அளப்பரிய தன்மைகளால், இக் கோயில் இன்று பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. ஆடு, கோழி, முதலான உயிரினங்களும், தொட்டில், பிள்ளை முதலான வெள்ளி, தங்க அடையாளங்களும், நெற்கோட்டை, வாழைப்பழக் குலை முதலாயி னவும் புதிர்கா இனங்களும் கொடுக்கப்பெறுதல் கோயிலை இன்று வளம் படுத்துகின்றது. அதனால் மதியம் பன்னிரெண்டு மணிக்கு முடிய வேண்டிய பூசை புநர்க்காரங்கள் சாயந்தரம் இரண்டு மூன்று மணிவரையும் நீடிக்கும். இடையில் உருவந்து தன்பாட்டில் ஆட்டம் ஆடுவாரும் உண்டு. கோயில் வருடத்தில் ஒருமுறைதான் கதவு திறக்கப்படுவதென்றாலும், மூலஸ்தானக் கதவு திறக்காமல் அதற்கு முன்னால் உள்ள கதவுவரையும் திறந்து வெள்ளிக்கிழமை தோறும் பூசை செய்து வருகிறார்கள்.

ஏறாவூர் 4 ம் குறிச்சி கிராமத்தில் வசித்து வந்த பொற்கொல்லற் இனத்தைச் சேர்ந்த உலகனார் என்பவர். காட்டில் கம்புகளை வெட்டுவதற் காக இப்போது ஆலயம் இருக்கும் பகுதிக்குச் சென்று கம்புகள் வெட்டிக் கொண்டிருக்கும் போது அடர்ந்த காட்டின் பகுதியில் நெருப்பு எரிவதையும், அங்கே ஒரு கன்னிப் பெண் நிற்பதையும், கண்டு அஞ்சி தனது வீட்டுக்கு ஓடி வந்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தொடக்கம் இவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். ஓர் இரவு கனவில் ஒரு பெண் தோன்றி, நாங்கள் மூவராக இந்தியாவில் இருந்து வந்தோம். இங்கு என்னை இருக்க விட்டு மற்ற இருவரும் சென்று விட்டார்கள். எனவே நான் இங்கு இருப்பதற்கு ஓர் இடம் அமைத்துக் கொடு. உனது நோய்கள் யாவும் தீர்ந்து விடுமெனக் கூறி மறைந்தார். காலையில் கண்விழித்த உலகனார் தனது நோய்கள் தீர்ந்தவராக, சிலரின் உதவியுடன் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று காடுகளைத் துப்பரவு செய்து காட்டுக் கம்புகளினால் ஓர் பந்தலை அமைத்து வழிபாடு செய்து வந்தனர். வருடத்தில் ஒரு நாள் மாத்திரம் பொங்கல் பூசைகள் நடத்திக் கொண்டிருந்தனர்.

இதன் பின் கீழ் குறிப்பிட்ட பேர்வழிகள் அப்போதைய அரசாங்கத்திடம் குறிப்பிட்ட காணியை மானியமாகப் பெற்று, கிடுகுகளினால், ஓர் ஆலயத்தை அமைத்து வருடத்திற்கு ஒரு தடவை மூன்று நாட்கள் சடங்கு செய்து வழிபாடு செய்து வந்தார்கள்.

1. உலகனார்,
2. அருணாசலம்,
3. கோணாமலையார்,
4. மூலப்போடியார்,
5. காசிநாதர் விதானையார்.

காலகட்டத்தில் மேற்படி நிர்வாகிகள் ஐவரினாலும் இக் கோயில் களிமண்ணால் கட்டப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வந்தது. இங்கு ஆடு, கோழி பலியிடும் வழக்கமும் இருந்து வந்தது. பின் இக் கோயிலை பராமரித்து வந்த நிர்வாகிகள் ஆலயத்தை செங்கலால் கட்டி புனருத்தாரணம் செய்து, கும்பாபிஷேகம் செய்வித்து, வருடம் ஒரு முறை பன்னிரெண்டு நாட்கள் விழா நடத்தி, பதின் மூன்றாம் நாள் தீமிதித்தல், பள்ளயம் இடல் ஆகிய விசேட வைபவங்களுடன் விழா முடிவுறச் செய்தனர். இவ்வாலயத் திருப்பணிக்கு திரு. வள்ளியப்பச் செட்டியார் அவர்கள் பல தொண்டுகள் செய்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பூசையை ஏற்படுத்தக் கூடிய வழக்கையும் நிர்வாகிகளுக்கு உதவியாகச் செய்து கொடுத்தார்.

1958 ம் ஆண்டு தொடக்கம் திரு. கா. புத்திசிகாமணி அவர்களின் தலைமையில் இக் கோயில் பரிபாலனத்தைப் பொறுப்பேற்ற நிருவாகிகள் இக் கோயிலுக்குரிய சுற்று மதில், களஞ்சிய மண்டபம், கிணறுகள் ஆகியவற்றை அமைத்து 1972 ம் ஆண்டு கோயிலைத் திருத்தி, மகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம் செய்வித்து தினப் பூசையை உண்டாக்கி ஆடு, கோழி பலியிடும் முறையை நிறுத்தி கௌரி விரதம், மானம் பூ போன்ற விழாக்க ளையும் உண்டாக்கினார்கள்.

1975 ம் ஆண்டு மட்டக்களப்பு நீதிமன்றத்தில் திரு. கா. அரசரெத்தி னமும், இன்னும் சிலரும் தொடர்ந்த வழக்கில், கீழ் குறிப்பிட்ட நிபந்தனை களின் படி, வழக்கு மாவட்ட நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் அவர்களால் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

1. இவ்வாலயத்தில் மிருகப்பட்சி வர்க்கம் எதுவும் பலியிடக் கூடாது
2. மதிய பூசை தினமும் 12 மணிக்கு நடைபெறல் வேண்டும்.
3. கோயிலில் கட்டப்பட்ட சிங்கம், பலிபீடம் இரண்டையும் யாரும் அப்புறப்படுத்தக்கூடாது.

இதன்படி யாவும் ஒழுங்குற நடந்துவந்தன.

இப்போதைய நிருவாகிகள் பாரம் எடுத்தவுடன் மூலஸ்தான கதவை அடைத்து தினப் பூசையை நிறுத்தி விட்டார்கள். பூசை பண்ணிய அர்ச்சக ரையும் விலக்கி விட்டார்கள். சிங்கம், பலிபீடம் இரண்டும் இவர்களால் அகற்றப்பட்டு விட்டன. மட்டக்களப்பு நீதிபதி கோட்டில் மிருகபட்சி வர்க்கம் பலி கொடுக்கக் கூடாதென்பதே தீர்ப்பு. நாங்கள் வெட்டவில்லை, கடிக்கிறோம் என கடந்த மூன்று வருடங்களாக கோழிகளைக் கடிக்கிறார்கள். பொற்கொல்லர் குலத்தைச் சேர்ந்த பெரும்பாலோர் இவ்வாலயத்தைப் பரிபாலிக்கும் நிர்வாகிகளுடன் ஒத்துழைப்பதில்லை. நீதிமன்றத் தீர்ப்பை மீறியமைக்காக நடவடிக்கை மேற் கொண்டுள்ளார்கள். இப்போது வெள்ளிக்கிழமைகளில் பி.ப. வெளிமண்டபத்தில் பூசை நடை பெறுகின்றது. பக்தர்கள் பெருவாரியாக சமூகம் கொடுக்கிறார்கள். அம்பிகையின் அருள் இவர்களுக்கு கிடைக்கிறது.

அடர்ந்த காட்டு மாமரங்கள் இருந்தமையால் மாங்காட்டுக் காளி என்றும், பத்திரகாளி என்றும் அழைக்கப்பட்டு வரும் அம்பிகையின் வருடாந்த உற்சவம் ஆனி உத்தரத்தில் தொடங்கி தொடர்ந்து 13 நாட்கள் நடக்கும். அகில இலங்கையிலிருந்தும் இவ்விழாவிற்கு மக்கள் சமூகம் கொடுத்து வருகிறார்கள், எனினும் சூறாவளியினால் பெருமரங்கள் விழுந்து விட்டமையால் கொணாத வெயிலைக் கொடுத்தல் தவிர்க்க முடியாத நிலையிலேயே உள்ளது.

புறவீதியில் வைரவர், மாரியம்மன், கண்ணகையம்மன், பாலாவதனன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சி அம்மன் ஆகிய தெய்வங்களுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கும் வருடமொருமுறை பூசை நடைபெறும்.

ஏறாவூர் 4 ம் குறிச்சி, சிற்றாண்டி, முறாவோடை ஆகிய, கிராமங்களில் வசிக்கும் பொற்கொல்லர் இனத்தைச் சேர்ந்தோர், மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை பொதுக் கூட்டத்தில் பதினொரு பேர் அடங்கிய நிருவாகிகள், தலைவர்கள், செயலாளர்கள் தனாதிகாரி உட்பட தெரிவு செய்வார்கள். அவர்களே இக் கோயிலைப் பொறுப்பேற்றுப் பரிபாலிப்பர்.

இப்பகுதியில் வசித்து வந்த பொற்கொல்லர் இனத்தைச் சேர்ந்த கதிராமர் காளிக்குட்டி, கறுவல் தம்பி, கந்தப்பர், வீரக்குட்டி கந்தப்பர், காளிக்குட்டி, சதாசிவம் ஆகியவர்களே பூசகர்களாக இருந்து வந்தார்கள்.

விழா தொடங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன் கோயிலுக்குச் சொந்தமான ஓர் இடத்தில் பூசைக்குரிய வாழைக்காய், பலாக்காய் முதலியவற்றைப் பழுக்க வைப்பதற்கான சடங்கு நடைபெறும். மூன்றாம் நாள் இதே இடத்தில் ஒரு பந்தல் போட்டு பூசைகள் நடந்த பின் பறைமேளம் சகிதம் மண்டபம் காவற்பண்ணுதல் என்னும் சடங்கு உருக் கொண்டு ஆடுபவர்களுடன் ஊர்வலமாக பேழை பெட்டிகளையும் கொண்டு கோயிலை நோக்கிச் செல்லும். அங்கு கோயில் வாயிலில் படிமடைவைத்து, கோயில் கதவு திறக்கப்பட்டு, கோயில் பூசைகள் மூன்று நேரமும் நடைபெறும். கடைசி உற்சவ தினத்தன்று தெய்வம் ஆடுபவர்கள் பெண்களினால், அணியும் சேலை சட்டைகள் அணிந்து வாள் கேடயங்களுடன் தீக்குளிப்பதற்காகச் செய்வது மிகவும் அலங்காரமாக இருக்கும். தெய்வம் ஆடுபவர்கள் சாட்டையினால் அடிவாங்குவதும் உண்டு. பறைமேளம் நிறுத்தப்பட்டு இப்போது நட்டுவ மேளம் ஒலிக்கப்படுகின்றது.

கந்தப்பர் என்பவருக்கு எவ்வித பூசை விதிகளும் தெரியாமல் இருந்ததாகவும், அம்பிகை கனவில் தோன்றி பூசைக்குரிய மந்திரங்களை உபதேசித்ததாகவும், இவரின் காலத்தில் கோயிலில் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

திரு.கோ. காளிக்குட்டி விதானையார் அவர்கள் கோயிலின் பிரதான சின்னமான பேழைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு செல்வது வழக்கம். இவர் நிருவாகிகளுடன் பிணக்கு ஏற்பட்டமையால் ஒரு சில வருடங்கள் பேழைப் பெட்டியைக் கொண்டு செல்வதற்குப் போகாமலிருந்தார். பிணக்கு நீங்கிய பின் இவர் பேழைப் பெட்டியை எடுப்பதற்காக உற்சவ காலத்தின் போது சென்றார். வழமையான முறையில் ஊர்வலம் முடிந்து கோயிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேழைப் பெட்டியை இறக்குவதற்காக இவர் முயற்சித்த போது முடியவில்லை. பேழை இவரின் சிரசில் ஒட்டிக் கொண்டு இறங்கிவர மறுத்து விட்டது. கந்தப்பர் பூசாரி அவர்கள் அம்பிகையை நோக்கி பலவாறு பாடியபின்னரே இப்பேழை இவரின் தலையை விட்டு அகன்றது. இவர் மரணிக்கும் வரை தலையில் ஓர் பள்ளமான அடையாளம் இதற்கு அறிகுறியாக இருந்தது.

உருக் கொண்டு ஆடுபவர்களில் பத்திரகாளி உருவில் ஆடுபவரான திரு.த. கந்தையா அவர்களே இக் கோயிலில் தீமிதிப்பு வழக்கத்தை ஏற்படுத்தினார். இவர் தற்காலம் மரணித்து விட்டார். இவர் மிக உத்தமமான முறையில் நடந்து கொண்டவர்.

அடப்பன்குடி சிங்களக்குடி, மூத்தான்குடி, கட்டாடிகுடி, காமாட்சிகுடி ஆகிய குடியினரிடமிருந்து வண்ணக்குமார்களாகத் தெரிவு செய்யப்பட்டு நடைபெற்ற நிருவாகம் இப்போது மேற்படி குடிகளிலிருந்து நிருவாகிக ளாகத் தெரிவு செய்யப்பட்டு நடை பெற்று வருகின்றது. நிருவாகம் நீதிமன்றத் தீர்ப்பின் படி மாற்றியமைக்கப்பெற்று, ஆலயமும் ஒழுங்குற நடை பெற்று வருமாயின் மேலும் சிறந்து விளங்க இடமுண்டாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (6) வது இயல்: அம்மன் கோவில்கள்

### 9. பெரிய போரைதீவு பத்திரகாளி அம்மன் கோவில்

மட்டுமா நகரின் தென்பால் பதினெட்டரை மைல் தொலைவில் பெரியபோரதீவு என்னும் கிராமம் உள்ளது. இதனைப் பெரிய போர் ஏறுதீவு என்றும் சொல்வர். இக்கிராமத்தில் வடபத்திரகாளி கோயில் ஒன்றுண்டு.

இந்தியாவிலிருந்த மாந்தை மாநகரத்தை ஒருபோது விஸ்வதேவன் என்கின்ற அரசன் திறை செலுத்தி, ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு ஐந்து பெண் பிள்ளைகளே இருந்தார்கள். இக்காலத்தில் அந்நாட்டில், உலககுரு, சித்திரக்குரு, அர்ச்சனாகுரு, வாமகுரு, வாமவேதகுரு என்னும் நாமங்களைக் கொண்ட ஆச்சாரிமார் ஐவர் பஞ்ச கர்த்தாக்களாகச் சிறந்து விளங்கினர். இதே நேரத்தில் விஸ்வ தேவராசன் திருமண வயதினையடைந்த தனது புத்திரிகட்கு வரன் தேடலானான். ஏற்ற வரன் வேறு கிடைக்காத காரணத்தால், பஞ்ச கர்த்தாக்களாக விளங்கிய மேற் கூறிய ஆச்சாரிமார் ஐவரையும், தனது பெண்கள் ஐவருக்கும் திருமணம் செய்து வைத்தான். அறிவிற் சிறந்தவர்களான இவ்வைவரும். ஐந்து அரச குமாரிகளையும் தத்தம் மனைவியராக்கி, இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தனர். சிலகாலத்துள் அரசன் இயற்கை எய்தினான். அவனுக்குப் பின் அரசாளப் பொருத்தமானவர்கள் இல்லாமையால், திறமை சான்ற அர்ச்சனாகுரு என்ற ஆச்சாரியையே அரசானாய் நியமித்தார்கள்.

விஸ்வதேவன் திறை செலுத்தி வந்த மன்னனான உறுதரணிராசன், தனக்குக் கப்பம் கட்டாத காரணத்தால் அர்ச்சனாகுருவைச் சிறைப் பிடித்தான். இதனைக் கேள்வியுற்ற அடுத்த தேச அரசனாகிய மாசற்ற மகிபன் என்பவன், அர்ச்சனாகுருவைச் சிறை மீட்டற்காக, உறுதரணி ராசனோடு போருக்கெழுந்தான். இவையனைத்தும் இக்கம்மியனால் தான் வந்ததென உணர்ந்து கோபம் கொண்ட உறுதரணிராசன் அர்ச்சனாகுருவின் சிறப்புக்களை உணராதவனாய், அத்தெய்வக் கம்மியனின் சிரத்தை அறுத்தான். அறுபட்ட சிரம் அரைநொடிப்பொழுதில் அன்னை காமாட்சி அம்மனின் பொன்னடியில் வீழ்ந்திட,

''முறுகு சினமொடு விழிகள் பொரியெழக் கம்மியன் சிரசையும்
கரத்தினில் தாங்கிக் காளிரூபமாய்
உறுதரணிராசனின் குடலைப் பிடுங்கி ஓங்காரி
உயர்மாலை ஏற்றிட்டாளே''.....இதன் பின்னர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிரசை அறுபட்ட உடலில் பொருத்தி, உயிர்பெறச் செய்து,

''இன்றிலிருந்து உனது வம்சத்தோராகிய தெய்வகம்மியர் என்னைக் குல தெய்வமாய் வழிபடுக'' எனத் திருவாய் மலர்ந்து அன்னை மறைந் தனள். அதன் பின்பு அவர்கள் முகக் களைகளை உருவாக்கி வழிபட்டு வந்தனர்.

இவர்கள் இவ்வாறு தெய்வ வழிபாடுகளையும், குலத் தொழில்களை யும் செய்து வரும்போது, சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் இவற்றை அறிந்து, இவர்களால் நாட்டுக்கு ஏதாவது தீங்கு நேரிடலாமென நினைத்து, இவர்களைத் தங்கள் நாட்டை விட்டு அகலும் படி, முறையே கட்டளை இட் டார்கள். அதனால் அவர்கள் வழிபட்டு வந்து ஐந்து முகக்களைகளையும், தம் குடி படைகளையும் படகுகளில் ஏற்றிக் கடல்மார்க்கமாகப் புறப்பட் டனர். அப்படகு வங்காள விரிகுடாவைக் கடந்து, காங்கேசன், வல்வெட்டித் துறைகளைத் தாண்டி, திருகோணமலையை அடுத்த சம்பூர்க் கரையை அடைந்தபோது, பெரும் சூறைக் காற்று வீசியது. இதனால் கலக்கமுற்ற இவர்கள் தங்கள் குல தெய்வத்தை நினைத்து மனதில் வழிபட்டார்கள். அப்போது அம்மனே ''இக் கரையில் இறங்குங்கள்'' என்று திருவாய் மலர்ந் ததைக் கேட்ட படகிலிருந்தவர்கள் மெய் சிலிர்த்து ஆனந்தக் கண்ணீருடன் இறங்கினர். இவ்வாறு இறங்கிய இடம் கூனித்தீவு எனப்படுவது. அங்கேயே அம்மனை எழுந்தருளப் பண்ணி வழிபட்டனராயினும் தொழில் வாய்ப் பில்லாமையால் வெவ்வேறு இடங்களுக்குச் செல்லலாயினர். கூனித்தீவி லிருந்து ஒரு பகுதியினர் தெற்கே ஏறாவூருக்குச் சென்று குடியேறினர். பின்னர் இன்னும் சிலர் பெரியபோரதீவுக்கும், அதன்பின் சம்மாந்துறைக்கும் சென்று வாழ்வாராயினர். இவர்கள் இவ்வாறு மேற்குறித்த நான்கு ஊர்களிலும் சென்று நிலைத்ததோடு, தமது குலதெய்வமாகிய காளிதே விக்குக் கோயில் எடுத்து வழிபட்டு வரத் தவறவில்லை.

பெரியபோரதீவுப் பகுதியில் குடியேற வந்தவர்கள், முதலில் எருவில் என்னும் ஊரில் தங்கியிருந்து காடுகளை வெட்டி அழித்து, பெரிய போரதீ வில் இன்றுள்ள ஆலயத்துக்குச் சமீபமாகவுள்ள ''கிழவியாபிட்டி'' என்னும் இடத்தில் அம்மனை வைத்து வழிபட்டு, சில காலத்தின் பின் இன்றைய ஆலயத்திலிருந்து இருநூறுயார் தூரத்தில் உள்ள ஒருவளவில் அவ்வம் மனை வைத்து வழிப்பட்டனர். குடிசனப் பெருக்கத்தால் இவ்விடத்தையும் விட்டு, இப்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் கிடுகுகளினால் வேய்ந்து, ஒரு கோயில் கட்டி அதில் அம்மனைக் கொணர்ந்து வைத்து வழிபடலாயினர். இவ்வாறு வழிபாடு ஆரம்பித்த காலத்தில் பூசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்மையால், பயபக்தியுள்ள ஒருவரைத் தெரிந்தெடுத்து, அம்மனைப் பக்தியோடும் கும்பிட்டு வழிபடுவதோடு கோயிலையும் பார்த்துக் கொள்ளும்படி நியமித்தனர். ஏற்று கொண்ட அவ்வடியவர், ''படிப்பறிவும் இல்லாத என்னால் என்ன செய்ய முடியும். தாயே, நீதான் வழிகாட்டி எனது வழிபாட்டினை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று உருக்கத்தோடும், அம்மனை வேண்டினார். ஒரு நள்ளிரவு கனவில் அம்மன் தரிசனமாகி ''ஆலயத்திற்குச் சமீபமாயுள்ள மரப்பொந்தொன்றில் ஒரு ஏடு உண்டு. அதிலுள்ள மூன்று மந்திரங்களையும் முக்கியமான நேரங்களில் உச்சரித்துப் பூசை செய்தால் நான் அப்பூசையை ஒப்புக்கொள்வேன்'' எனத் திருவாய் மலர்ந்து மறைந்தனர். மறுநாட்காலை அவர் தனது மகனையும் அழைத்துக் கொண்டு போய், உரிய மரப் பொந்தில் பார்த்தபோது இவ்வேடு இருக்கக் கண்டார். மிகுந்த பயபக்தியோடும், அதனை எடுத்துப் பார்த்தபோது அவ்வேட்டில் விதி முறைமையும் எழுதப் பெற்றிருக்கக் கண்டார். படிப்பறிவில்லாத அவர், அம்மனுடைய திருவருளைப் போற்றித் தனது மகன் மூலமாக அவ்வேட்டில் இருந்தவைகளைப் படிக்கச் செய்து கேட்டறிந்து, பூசைக்கருமங்களை அதிலிருந்தபடியே செய்து வந்தார் என்பர். அன்று தொடக்கம் அவ்வேடு ''கனவு கண்ட பத்தாசி'' என அழைக்கப் பெறுவதாயிற்று. மிகப் பழமையாகக் காணப்படும், இந்தப் பத்தாசி காத்து வைக்கப் பெற்றுள்ளது. இவையனைத்தும் இங்கு கர்ண பரம்பரையாக வழங்கிவரும் ஐதீகக் கதைகளாகும்.

1556ம் ஆண்டிற்குட்பட்ட காலத்தில் இவ்வாலயம் உருவாக்கப்பட்டு, 1825 ம் ஆண்டில் கல்லால் கட்டப் பெற்றதென்று ஊகிக்கப்படுகின்றது. இன்றும் ஆலய வாயிலில் உள்ள கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ள 1876 என்பது, கோயில் மதில் கட்டிய காலம் எனக் கருதப்படுவதால், அதற்கு முன்னரே ஆலயம் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டுமென்று கூறுவோரது கருத்துப் பொருத்தமானதே எனலாம். மடாலய முறையில் அமைந்து கும்பாபிஷேகம் செய்யப் பெற்ற இக்கோயில், கர்ப்பக்கிரகம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், ஸ்தம்பமண்டபம், ஆகியவற்றை உடையதாக இன்று விளங்குகிறது. ஏனைய பரிவார தெய்வங்களுக்குச் சிறுசிறு கோயில்கள், வெளி வீதியில் இவ்வாலயத்தை சுற்றி அமைந்துள்ளன.

இங்கு நித்திய பூசை நடைபெறுவதில்லை. வெள்ளிக்கிழமைகளில் மிக விசேடமான முறையில் பூசனை நடைபெறும். இதில் நேர்கடன் கட்டுதல், பிள்ளைவிற்றல், முதலியன நிகழும். மற்றும் தைப் பூசம், சிவராத்திரி, சித்திரைப்பூசை, வைகாசி குளுத்திப்பூசை, கார்த்திகைப்பூசை, ஆதியன விசேட பூசைகளாக நிகழ்வன. இப்பூசைகள் குடிமுறையான வழக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பனவாகும். தைப்பூசப்பூசையைக் கட்டாடி குடியார்களும், சிவராத்திரி பூசையை களக்குடியார்களும், வைகாசிக் குளுத்திப் பூசையை அடப்பன் குடியார்களும், கார்த்திகைப் பூசையைச் சும்மாடு கட்டுக் குடியார்களும் செய்து வருகிறார்கள். வைகாசி மாதத்தில் குளுத்தியாகச் சடங்கும் நடக்கும். முதல் நாள் கல்யாணக்கால் வெட்டும் வைபவம் நிகழும். அன்று தேவாதிகள் தெய்வமாடிக் கொண்டு கல்யாணக்கால் வெட்டச் செல்வார்கள். வெட்டிக் கொணர்ந்த அந்தக் காலை, மண்டபத்தில் நட்டு, விதம் விதமான உடுப்புகளால் அலங்கரிப்பர். அடுத்த நாட்காலை மூலஸ்தானப் பூசையோடு குளுத்தியும் பாடப் பெறும். இது கண்ணகையம்மன் வழிபாடாக அமைந்துள்ளது.

வருடாந்த உற்சவம் புரட்டாதி மாதத்தில் நடப்பது, இவ்வுற்சவத்திற்காக நவராத்திரி பூசை காலத்தில் வரும் ஒரு சனிக்கிழமையில் கதவு திறத்தல் நிகழும். அன்று அம்மனைப் பெட்டகத்திலிருந்து வெளியே எடுத்து ஊர்வலமாகக் கொண்டு சென்று ஆலயத்திற்குக் கொணர்ந்து வைத்துக் கதவு திறக்கும் வைபவத்தினை நடாத்துவர். மகா மண்டப நடுவில் சீலை விரித்து, அதன் மேல் மடை வைத்து முதலில் இரு விளக்குகளைத் தீபமேற்றிப் பூசை செய்வர். இது லட்சுமி பூசை எனப்படும். பின்னர் கதவடியில் பூசை நடத்தப் பெற்றதும், கதவு திறக்கப்படும். உடனே அந்த இரு விளக்குகளையும் உள்ளே கொண்டு சென்று, அம்மனது பள்ளியங்கட்டிலுக்கு அருகிலுள்ள இரு தூண்களில் வைப்பர். அன்றிரவு நடைபெறும் அபிஷேக பூசையோடு சடங்கு ஆரம்பிக்கப் பெறும்.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை, கோயில் தொண்டூழியம் செய்யும் சலவைத் தொழிலாளர்கட்குரிய சடங்காகும். அன்று அம்மனை எழுந்தருளப் பண்ணி உள்வீதி வலமாகக் கொண்டு வருவர்.

திங்கட்கிழமை - பதம் சொல்லி குடியாரும்,

செவ்வாய்க்கிழமை - சம்மாங்காரக் குடியாரும்

புதன்கிழமை - கொல்லன் கந்தன்குடியாரும்,

வியாழக்கிழமை - கட்டாடி குடியாரும்,

முறையே சடங்குகளைச் செய்வர்.

வெள்ளிக்கிழமை - பூம்பந்தல் சடங்கும்,

சனிக்கிழமை சிங்களக் குடியாருக்குரிய சடங்கும், ஞாயிற்றுக்கிழமை சும்மாடு கட்டுக் குடியாரின் வீரகம்ப பூசையும் வாழைக்குலைகளை எழுந்தருளப் பண்ணி மடுவில் பழுக்கப் போடுதலும், சடங்கும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகம்ப பூசை என்னும் போது, வீரகம்பம் வெட்டும் வைபவம் பற்றி இங்கே குறிப்பிட வேண்டியதாகும். ஞாயிற்றுக்கிழமை காலையில் கோயிலில் மடை வைத்து, தீர்த்தக் கலசத்தில் இயந்திரம் போட்டு பெண்வேஷத்தில் அம்மனாகக் கருதப்பெறும் பூசாரியார் அந்தத் தீர்த்தக் கலசத்தைக் கையில் எடுத்து தேவாதிகள், ஆடிவர வடக்குப்புறம் நோக்கிப் புறப்படுவார். இடையிலுள்ள பழுகாமம் என்னும் ஊர்ப் பகுதியில் நிறைகுடங்கள் வைத்து அம்மனை வரவேற்பார்கள். பழுகாமத்திலிருந்து சுமார் ஐந்து மைலுக்குட் பட்ட ஓர் இடத்திலுள்ள சதுரக் கள்ளி மரத்தின் அடியில் மடை வைத்து, காடேறி என்கின்ற தேவதையை அழைத்து, தெய்வங்களை ஆட்டி, அம்ம ரத்தை வெட்டுவார்கள். பின்னர் அம்மரத்தைச் சீவி, மஞ்சள் பூசி, நூல் கட்டி, சீலையால் சுற்றித் தாம்பாளத்தில் வைத்து, தெய்வக் காரரின் தலையில் சுமத்திக் கொணர்ந்து ஆலயத்தில் வைத்தலாகிய பூசை ஞாயிற்றுக்கிழமை அன்று பகல் நிகழும். அன்று இவ் வீரகம்பத்துக்குப் பூசையும், வாழைக்குலை எழுந்தருளப் பண்ணி மடுவில் போடுவதும், சடங்கு நடப்பதும் நடை பெறுவன என்பது நோக்கத் தக்கது. இதற்கு அடுத்த நாளான திங்கட்கிழமை, சூரிய அடப்பன் குடியார், சடங்கு நடத்துவர். மறுநாள் செவ்வாய்க்கிழமை காலையில், நோற்பு நெல் குற்றுதல், யாகம் வளர்த்தல் சக்தி பூசை என்பன தொடர்ந்து நடைபெறும். மகா மண்டபத்தின் நடுவில், சக்தி வேலுக்குப் பூசை நடத்தி, தெய்வங்கள் ஆடிவர நோற்புக் கட்டும் இடத்திற்கு அனைவரும் செல்வர். கோயில் அமைந்திருக்கும் இடத்தில், மதிலுக்குப் பின்னால் மேற்குப் பக்கமுள்ள மாரியம்மன் வாயிலின் முன் நின்று நோற்புச் சோற்றினை மஞ்சள் சீலையில் கட்டி, ஆடு, கோழி, முதலியவைகளை நோற்பு நேர்ந்து, அச்சீலையில் கட்டிய அமுதை, பூசாரியார் தலையில் சுமந்து கொண்டு செல்வார். கோயிலுக்கு தென்மேற்காக அமையப் பெற்றுள்ள அம்மூலையில் அம்முடிச்சைக் கட்டியதும் பூசை நிகழும்.

அதன் பின்னர் கடல் குளிப்பு நடைபெறும். வடக்குப் பக்கமாக உள்ள ஆற்றில் தீர்த்தமாடச் சிங்க வாகனத்தில் அம்மன் எழுந்தருள்வது வழக்கம். அவ்வாற்றிற்குட்பட்ட இடத்தில் அமைந்துள்ள பீடத்தில் அம்மனை எழுந்தருளப் பண்ணி, முன்பாக மடைகள்வைத்து, கங்கா தேவி பூசை செய்து, பின்னரே அனைவரும் நீராடுவர். கங்கா தேவி அழைப்பின் போது, ஆடும் தேவாதிகள் அம்மன் இருக்கும் இடத்திற்கு வந்ததும் மக்களுக்குக் ''கட்டு'ச் சொல்வர். விபூதி சாத்தி, மந்திரங்கள் ஓதித் தெய்வங்கள் ஆட்டப் படும். அம்மன் மடையில் வைத்துள்ள தேங்காயை எடுத்து, அம்மனை அழைத்து அந்தத் தேங்காயை வெட்டியதும், ஆடாது நின்றவர்கள் உட்பட தெய்வம் பிடித்த தேவாதிகள் அத்தனையுமே ஆடுவது பார்ப்பவர்களுக்குப் புதுமையான அச்சத்தையும், பக்தியையும் உண்டாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அம்மனை ஆலயத்திற்குக் கொண்டு செல்வர். அன்றிரவு சில முக்கியமான நிகழ்ச்சிகள் நிகழும். முதலில் ஊர்காவற் பண்ணுவதற்காக, உருக்கொண்டு ஆடிவரும் தெய்வங்களின் மத்தியில், அம்மன் முகக்க ளையை தம் கைகளில் ஏந்தியபடி பூசாரியார் ஊருக்குள் செல்வர். அப்படிச் செய்கையில் சந்திகளொவ்வொன்றிலும் தேய்காய் வெட்டிச் செல்வது வழக்கம். ஊர்காவற் பண்ணி முடிந்ததும், ஆலய முன்புற வீதியில் தீமூட்டும் வைபவம் நிகழும். தேவாதிகளில் தலைத்தெய்வம் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளவர், சேலை உடுத்த படி உருவேறியவராய்த் தணல் அள்ளிச் செல்வார். அங்கு தீக்குழியின் நான்கு மூலையிலும் நடுவிலும் மடைகள் வைத்து, இளநீர்களும் வைத்து, முன்கொண்டு வரப்பெற்ற வீரகம்பத்தை மூலைகளில் நட்டு, பூசை செய்யப் பெற்றதும் தீ மூட்டுவார்கள்.

பின்னர் மகா மண்டபத்தின் நடுவில், பெரிய சீலையை விரித்து, அதன்மேல் அரிசியைப்பரப்பி, இயந்திரம் தாபித்து, பன்னீராயிரம் என்னும் அளவிற்கு மடைகள் வைக்கப்படும். இது முடிந்ததும், மேற்கேயுள்ள வாசலில் மடைகள் வைத்து ''மது'' கொடுக்கும் வைபவம் நடக்கும். அது சும்மாடு கட்டுக் குடியார்களில், ஆலய செயலாளரின் பகுதியிலுள்ள ஒருவரைக் கொண்டு மதுப்போத்தல் கொணரச் செய்து, அவருக்கு உருப்பண்ணி, பெரும் சிரட்டை ஒன்று எடுத்து, அதில் இயந்திரம் தாபித்து, மதுவை அந்தச் சிரட்டைக்குள் விட்டுக் கோயிலுக்குள் கொண்டு செல்வர். மகா மண்டபத்தில் ஏற்கனவே வைக்கப்பெற்ற மடைகளின் முன்பாக, மதுக் கொணர்ந்தவரை இருத்தி, பூசாரியார் கையில் எந்திரம் போட்டு தர்ப்பணம் பண்ணி ஒன்பது யந்திரத்துடன் ஒன்பது மந்திரமும் சொல்ல ஒவ்வோர் தரமும் ஒவ்வொரு வாழைப்பழமாக ஒன்பது தடவைகள் வாழைப்பழத்தை உரித்து, மதுச்சிரட்டைக்குள் போட்டு அம்மாளை நோக்கி அதனைப் பலியாகக் கொடுப்பர். இதன் பின்பே பலி கொடுக்கும் வைபவம் நடக்கும். ஆலய வாசலுக்கு எதிரேயுள்ள வீரபத்திர சுவாமி கோயிலுக்கு முன்பாக மடை வைத்து, அதில் ஆடு, கோழிகளைப் பலியிடுவர். தற்போது 1980 ம் ஆண்டிலிருந்து இப் ''பலி கொடுத்தல்'' நிறுத்தப் பெற்றுள்ளமை அனை வரும் அறிந்ததே.

அதிகாலையில் தீக்குளிப்பு வைபவம் தொடங்கும். பூசாரியார் முதற்செல்ல, தெய்வங்கள் தொடர, மானிடர் பின்னால் அணிவகுத்துச் செல்ல, தீக்குளிப்புச் சம்பவம் விமரிசையாக நடைபெறும். இதனைப் பார்த்திருந்த மக்கள் பக்தியால் பரவசப்படுவர். தீக்குளிப்பு முடிந்து வந்த தேவாதிகள், அங்கு வந்திருக்கும் அனைவர்க்கும், நல்வாக்குக் கூறுவது விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டிய தொன்றாகும். வாக்குக் கூறி முடிந்ததும் இத்தெய்வங்கள், மஞ்சள் நீராடித் தங்களுக்குரிய பலி கருமங்களை முடித்துக் கொண்டு ''ஆணை'' கூறுவார்கள். ஆணை கூறுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் சுயநிலைக்கே திரும்புதல் ஆகும். இதன் பின்னரே ஆயுத பூசை நிகழும். கிழக்குப் பக்கமாக உள்ள வெளி மண்டபத்தில் இரு மடை வைத்து, அம்மனுக்குரிய ஆயுதங்களை எல்லாம் பரப்பி பூசை நடக்கும். இப்பூசையில் தேங்காய் வெட்டி நல்லது, கெட்டது, அறிவார்கள். அது முடிந்ததும், கோயிலுக்குள் சென்று தாலாட்டுப் பாடி, வழிபடப் பெறும். இத்துடன் கதவு பூட்டப்படும்.

அன்றிலிருந்து எட்டாம் நாள் செவ்வாய்க்கிழமை ''வைரவவேள்வி'' பூசை நடக்கும். அன்றிரவு உரொட்டிகள் சுட்டு, கதவு திறந்து மடைகளெல்லாம் வைத்து, உருவேறி ஆடுகின்ற தெய்வங்கள், கோயிற் தரிசனத்திற்காக வந்து, விரும்பிக் கேட்கின்ற மக்களுக்கெல்லாம் நல்வாக்குக் கூறும். முடிவுற்றதும், வைரவகாவியம், வாழிப்பாடல்கள் பாடப் பெற்று, மறுநாட் காலை அனைத்தும் முடிவுறும். அத்துடன் கதவும் பூட்டப் பெற்றால், வைகாசி மாதச் சடங்குக்கே தகவு திறப்பார்கள்.

வருடாந்த உற்சவ காலத்தில் இரவுவேளைகளில் திருவிழா மிக விமரிசையாக நடக்கும். கடைசி ஐந்து திருவிழாக்களிலும் மூன்று உற்சவ மூர்த்திகள் சகிதம் அம்பாள் வெளிவீதி வலம் வரும். அவ்வமயம், உபய காரக் குடியினரில் முதியோரிருவரை அழைத்து அவர்களுக்கு, மலர்மாலை அணிந்து, வெண்சாமரத்தைக் கொடுத்து, வாகனத்தில் ஏற்றி, அம்மனுக்குச் சாமரம் வீசும் திருப்பணியைச் செய்யும் உரிமையைக் கொடுத்தல் குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். திருவிழா முடிந்ததும், கோயிலின் முன்புறத்தில் வைக்கப் பெற்றுள்ள மேசை ஒன்றின்மேல், சுவாமிக்குரிய பிரசாதங்களைக் கொணர்ந்து வைத்து, முறையே, தலைவர், காரியதரிசி, தனாதிகாரி, என்பவர்களையும் குடிவழமையில் உள்ளவர்களையும், வரிசைக் கிரமமாகப் பூசகர் அழைத்துப் பிரசாதங்களை வழங்குவார். இறுதியில் தேசத்துக்கென்று ஒரு பங்கும் வழங்கப்பெறும்.

நேர்த்திக்காக வரும் ஆடு. கோழிகள், சடங்கின் இறுதியை அடுத்த புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கிராம சேவகர், பொலிஸார் முன்னிலையிலே இவ்விற்பனை நடக்கும்.

இவ்வாலயத்திற்கு 1915 ம் ஆண்டிலே ஒரு சிங்க வாகனம் கிடைக்கப் பெற்றது. இவ்வாகனம் மண்டூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு உபயமாக வந்தது என்றும், அங்கு ''பணிவிடை'' ஆகியதன் படி, அந்தக் காளி கோயிலுக்குக் கொண்டு வரப்பெற்றது என்றும், சொல்லப்படுகிறது. அதன் பின்னரே இம்முறையே திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. ஆரம்ப காலங்களில் இரண்டு மூன்று நாட்கள் கொத்துப்பந்தலிட்டுச் சடங்குகள் செய்து வந்தவர்களுக்கு, பத்திரகாளித் தாயார், இவ்வாறு திருவிழாச் செய்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுத்திக்கிலுள்ளவர்களும் அறிந்து வந்து அருளைப் பெற்றுய்ய வழிகாட்டியுள்ளார் என்றே கூறலாம்.

1945 ம் ஆண்டிலிருந்து வண்ணக்கு முறையாக, பெரிய வண்ணக்கர், இரண்டாவது வண்ணக்கர், கணக்கப்பிள்ளை ஆகிய மூவரை மக்கள் தெரிவு செய்து, ஆலயத்தை நடத்தினர். பின்னர் ஏற்பட்ட சில மாற்றங்களின் காரணமாக, அண்மையில் நிர்வாக சபை என்கிற ஒரு அமைப்பை அமைத்து, கொமிஷனர் அறிக்கையின் மூலம், உதவி அரசாங்க அதிபர் தலைமையில், நிர்வாக சபையினர் தெரியப்படலாயினர். அடப்பன் குடியாரிலிருந்து தலைவரும், சும்மாடு கட்டுக் குடியாரிலிருந்து, காரியதரிசியும் சிங்களக் குடியாரிலிருந்து தனாதிகாரியும் தெரிவு செய்யப் பெற்றதும், ஏனைய குடிகளிலிருந்து எட்டுப்பேர் அங்கத்தவர்களாகவும், இரண்டு பேர் எண் பரிசோதகர்களாகவும் தெரிவு செய்யப் பெறுவர். இவ்வாலயத்திற்குரிய நிதி, மக்கள் வங்கியில் சேமிப்புப்பணமாக வைக்கப் பட்டிருக்கின்றது. திருப்பணிகளான கோயிற் தேவைக்கு அவ்வப்போது, மக்கள் வங்கியிலிருந்து பணத்தை எடுத்துச் செலவழிப்பர்.

இக்கோவில் பற்றிய பாடல்களில் ஆதி காவியம் என்று கூறப்படுகின்ற காவியச் செய்யுள்களிரண்டு:-

1. சீர் பெருகு கொட்டியாபுரமருவி வாழ்கின்ற
 செய்ய பொன் புலவர் குலம் உய்யவந்த
 பேர் மருவு மாகாளி மீது தமிழ் ஓத அருள்
 பேழை வயிறுடைய மத வேழமாமுகனே
 தார் மருவு கொன்றைமதி நதிசூடு னர்ப்பரவு
 சரவணபவன் கிருபைதர இரவு பகலும்
 கார் மருவு அன்னநிகர் நாடுகலைமாது
 காளி புகழோத நிதமும் காப்பதாமே....(1)

2. சிறைவைத்த செய்தியை அறிந்திதையடுத்த
 தேசத்தை அரசாளும் மாசற்ற மசிபன்
 முறைகெட்ட செய்கையது செய்தான் தரணி
 மகராச னெனமுனி வாகி அமர் செய்ய
 பறைதிமிர முரசதிர வருதருசைந் நியங்கண்டு
 பயமுளத்தோடு தரணி மகராசன்
 சிறைதரா முறை என்று சிறைதனிலிருந்திடும்
 தெய்வநாள் கம்மியன் சிரமதை அறுத்தான் .....(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபோரதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் உற்சவகால இறுதியில் பாடப்படும் தாலாட்டும், வாழியும்

**தாலாட்டு:**

1. உற்பத்தியாக்கி உலைமுகத்தில் பூசை கொள்ளும்
   கற்பிக்க வந்தவளோ காளிகா தேவியரோ.

2. ஓதச் சமுத்திரத்தில் ஓங்கார மண்டபத்தில்
   காதலுடன் வீற்றிருக்கும் காளிகா தேவியரோ.

3. கன்னாரோ சுப்பர்களோ கட்டாண்மை தட்டாரோ
   சொன்னாரோ உண்மை சிவலோக மாதாவே.

4. மார்க்கத் தரணிபனை மாளவெட்டிக் கம்மியனை
   காத்துப் புகழ்படைத்த காளிகா தேவியரோ.

5. பட்டாடைக்குள்ளே பழப்பாக்கும் வெற்றிலையும்
   வட்டா மடை தருவேன் மடமயிலே கண்வளராய்.

**வாழி:**

திருவினும் திருவான திரவியக் கடலே
தேனிலும் தெளிவான தெள்ளமுத மானே
மருவிலும் மணமான கஸ்தூரி மானே
மணியிலும் தெளிவான மாணிக்க மலையே
உருவிலும் திருவான ஓவியத் திருவே
ஓங்கார முழுமுதற் பொருளான ஒளியே
கருவிலும் தளிரான போரேறு தீவுவளர்
காளிகா தேவி என் தாய் வாழ்க அம்மே.

**துதிமாலை:**

சீருலவும் ஈழமா தேவிமடி மீதிலுறை
சிங்காரமாய் வளரும் மட்டுமாவட்ட
பேருலவும் போரேறு தீவுப் பகுதி மிளிர்
பெருமையுறு முன்மக்கள் பொற்புலவரோடு
ஏருலவும் உழவர் வாழ் இனிய நல்லூரில்
இலங்கியெழில் ஓங்கிவளர் ஈஸ்வரியேயாகி
ஊருலவும் உத்தமியாம் உமையவள் தம்
உருவிலொளிர் மாகாளி சக்தி உமையவளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பாடல்களும், கனவு கண்ட பத்தாசியில் உள்ள பாடல் முதலியனவும் அச்சூர்ந்து வெளிப்படின் அனைவரும் பயனடையலாகும்.

இக்கோயிலினருகில் முத்துலிங்க விநாயகர் பேரால் ஒரு ஆலய முண்டு. இது 1912 ம் ஆண்டளவில் தான் உண்டாக்கப் பெற்றது. முனைத்தீவுதரு என்னும் பக்கத்தூரில் உள்ள கற்பக விநாயகர் கோயில் வழிபாட்டில், ஏற்பட்ட சாதிப்பாகுபாடு காரணமாக அதிலிருந்து சுமார் ஐந்நூறுயார் தூரத்துள் இவ்வாலயம் அமைக்கப்பட வேண்டிய அவசியம் உண்டாயிற்று. தொடக்கத்தில் கம்பு தடிகளினாற் கட்டப் பெற்று, ஓலையினால் வேயப்பெற்றிருந்த இவ்வாலயம் 1922 ம் ஆண்டில் ஸ்ரீ பத்திரகாளி கோயில் நிதியிலிருந்து கல்லினால் நிலையாக அமைக்கப் பெறலாயிற்று அதற்காக காளிக்குட்டி ஆச்சாரி என்னும் சிற்ப கலாவல்லுநர், வார்ப்பு வேலைகளுக்காக மண்ணரைக்கும் கல்லில் விநாயகர் உருவ மொன்றினைச் செதுக்கிக் கொடுத்தார். தற்போது, சிற்பங்களமைந்த விமானத்தோடு கூடிய கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபங் களோடு கோயில் அழகுற அமைந்துள்ளது. இம் முத்துலிங்க விநாயகரா லயத்தின் உள்வீதியில் நவக்கிரக கோயிலும் வைரவ கோயிலும் அமைந் துள்ளன.

இக்கிராமத்தில் ''மணிப்பூசை'' என்றொரு பூசைக் கிரமத்தை நியமித்து, நாள் தோறும் ஒவ்வொரு வீட்டாரும், இப்பிள்ளையார் பூசைக்குரிய பொருள்களைக் கொடுத்து வருவதும், அவற்றைக் கொண்டு தினமும் ஒரு நேரப் பூசையாக, மதிய பூசை மட்டும் நிகழ்ந்து வருவதும் இங்கு சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டிய தொன்றாகும்.

நிர்வாகம் வெறுவேறாக இயங்கினாலும் ஸ்ரீ முத்துலிங்க விநாயக ருடைய பூசையினை அடுத்தே, ஸ்ரீ பத்திரகாளியம்மன் பூசை நடைபெறு வதும், காளி கோயிலின் வருடாந்த உற்சவத் திருவிழாவின் போது, முத்துலிங்க விநாயகர், அலங்காரத் தேரிலேறி பத்திரகாளியம்மனுடைய வாயிலை அடைந்ததும், அம்மனும் ஏனைய உற்சவ மூர்த்திகளுடன் வந்து சேர்ந்து திருவிழா தொடங்குவதும், இவ்விரு கோவில்களினுடைய தொடர்பினையும் எடுத்துக் காட்டுகிறது எனலாம். இப்பிணைப்பினால் போரதீவு ஸ்ரீ பத்திரகாளி யம்மன் கோயிலைப்பற்றிய குறிப்புகளோடு, இவ்விநாயகர் ஆலயம் பற்றிய குறிப்புக்களும் சேர்க்கப்படலாயிற்று.

இவ்வாலயம் பற்றிய தோத்திரத்திரட்டும், முத்துலிங்க விநாயகர் பதிகமும் கையெழுத்துப் பிரதிகளாய் உள்ளன. இவையும் அச்சில் பதிக்கப் பெற்று வெளிக் கொணர முயற்சித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (7) வது இயல் : பொது

## *1. ஏறாவூர் வீரபத்திரசுவாமி கோவில்*

மட்டுநகருக்கு வடக்கே செல்லும் பிரதான வீதியில் சுமார் ஏழாவது மைல் தொலைவில் ஏறாவூர் என்னும் சிறிய பட்டினம் உள்ளது. கோறளைப்பற்று (பண்டைய எகுளப் பற்று) க்கு இது தலைநகர் போல விளங்குவது. இங்கு அப்போது முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் நெருங்கி வாழுகின்றனர். இந்த வீதியின் மேற்குப்புறமாக உள்ள தமிழர் வாழும் பகுதியில் அழகியதும் கண்ணுக்கினியதுமான மருதநிலப் பரப்பின் விளிம்பில் அமைந்துள்ளது நாம் குறிப்பிட விரும்பும் வீரபத்திரசுவாமி கோவில். கோவிலிருந்து சுமார் நூறுயார் தூரத்தில் முகுந்தனை ஆற்றின் கிளையொன்று சலசலவென்று ஓடிக்கொண்டிருக்கின்றது. வயல்களில் பசும்பயிரேறி இருக்கும் போது அவ்விடம் கண்ணுக்கினிய காட்சியாய் விளங்கும். கோவில் அமைந்துள்ள இடத்திலே மருத மரச்சோலையும், அரசு, ஆல், வாகை முதலான மரங்களும் நிறைந்து குளிர்மையும், பசுமையும் தவழ்ந்து கொண்டிருக்கும். இம்மரங்களிற்பட்டு ஒலி எழுப்பிய வண்ணமாக இருக்கும் பசுங்காற்றின் சுகத்தை விரும்பி அங்கு தினமும் மக்கட்கூட்டம் திரண்டபடி இருக்கக் காணலாம். இந்த இயற்கை வளம் நிறைந்த இடத்திலே தான் வீரபத்திரர் மூலமூர்த்தியாகவும், காளியன்னை பக்கத்தில் வீற்றிருப்பவராகவும் வெளிப்புறத்தே நாகதம்பிரானும், வயிரவரும் சுற்றுப்புறத் தேவதைகளாகவும் அமர்ந்து அருள்புரியும் வண்ணம் வீரபத்திரசுவாமி கோவில் அமைந்துள்ளது.

முழுமுதற் கடவுளான சிவபிரானைத் தவபலத்தால் தனக்கு மருகன் ஆக்கிக் கொண்ட தக்கன் தானே முதல்வன் எனக் கர்வங்கொண்டான். இதனாற்தான் செய்த யாகத்திற்கு தன்மகளான தாட்சாயணியையும் மருமகனையும் தவிர மற்றை யாவரையும் அழைத்துக் கொண்டான். தக்கன் செய்வது பெருங்குற்றமும் மகாபாதகமும் என உணராத தேவர்கள் யாகத்தில் அவிப்பலி ஏற்கத்தயாராகினர். இதனால் சிவபெருமானுக்கு கோபமுண்டாயிற்று. அப்போது ஏற்பட்ட நெற்றி வியர்வையினின்றும் உதித்தவர் தான் வீரபத்திரர் என்றும், எம்பிரான் சொற்படி மிகுந்த அகோரத்தன்மையுடையவராய்ச் சென்று தக்கன் யாகத்தை அழித்தமையால் அகோரவீரபத்திரர் என்று அழைக்கப்பெற்றார் என்றும் புராணங்கள் கூறுவ. விநாயகர், சுப்பிரமணியர், வயிரவர், வீரபத்திரர் நால்வரும் சிவபெருமானுடைய திருக்குமாரர்களென்றே அறிகின்றோம். தக்கனுடைய அதர்மமான செயலை அழித்துத் தேவர்களைக் காத்த அகோர வீரபத்திரருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வச்சிலை கிடைக்கப் பெற்றதும் இவ்வூர் செய்த புண்ணியமே எனலாம்.

மட்டக்களப்புப்பகுதி, கண்டியை அரசாண்ட ஸ்ரீ விக்கிரமசிங்கனின் கீழ் ஆட்சியில் இருந்த காலம் 1798 - 1815 ஏறாவூர்ப்பகுதி ஊர்ப்போடியா ராகவிருந்த நிலமை பாலிப்போடியார் அவர்களாவர். அக்காலத்தில் கதிர்காம யாத்திரைக்கு வந்த யாத்திரிகர் ஒருவர் தக்கன் யாகத்தை ஸ்ரீ வீரபத்திரர் அழித்த கோலமாகிய அகோர வீரபத்திரசுவாமி விக்கிரகத்தை யும் தம்முடனே கொண்டு வந்திருந்தார். இது ஐம்பொன்னால் ஆக்கப் பெற்றதாயிருந்தது.

இப்போது ஏறாவூர் ஐந்தாங்குறிச்சியில் ஸ்ரீவீரபத்திரசுவாமி கோவிலிருக்கும் இடத்திலுள்ள ஆலமர நிழலில் மேற்குறித்த யாத்திரிகர் வாடிவிட்டுதிரை வளைந்து தாம் கொணர்ந்த அகோர வீரபத்திர சுவாமியின் சிலையை எழுந்தருளப் பண்ணி, அபிஷேகித்து, திருவமுது படைத்துப் பூசனைகளையாற்றி, அவ்வமுதினையே தாம் உண்டு, உறங்கலாயினர். அன்றிரவு சுவாமி யாத்திரிகர் முன் கனவில் தோன்றி ''நான் இவ்விடத்தி லேயே இருக்க விரும்புகிறேன். ஆதலால் இவ்வூர்ப்பெரியாரிடம் என்னை ஒப்படைத்துப் போகவும்'' எனத் திருவாய் மலர்ந்தார். அதன்படி அடுத்த நாள் இந்த யாத்திரிகர் அவ்வூர்ப் பெரியாராகவிருந்த ஊர்ப்போடியாரான நிலமை பாலிப்போடியாரிடம், தான் கண்ட கனாவைக்கூறி விக்கிரகத்தை ஒப்படைத்துவிட்டு, தம்முடன் கூடவந்த யாத்திரிகர்களுடன் கதிர்காமம் சென்றார்.

பின்னர் ஊர்ப்போடியார் ஊரவர்களைக்கூட்டி எல்லோரும் சேர்ந்து செய்து கொண்ட தீர்மானப்படி ஒரு குடிசையை அமைத்து அதில் சுவாமியின் சிலையை எழுந்தருளச் செய்து, பூசை செய்துவர, ஒரு பூசகரையும் நியமனம் செய்யலாயினர். சிலகாலத்தின் பின்னர் வள்ளங்களின் மூலம் கல், மண், முதலியவற்றைக் கொண்டு வந்து, ஓர் மடாலயம் அமைத்துச் சுவாமியைக் கோயிலுள் வைத்துப் பூசை செய்து வரலாயினர்.

நிலமைப் பாலிப்போடியாரின் காலம் வரை கோயில் நிருவாகத்தில் மாற்றம் இருக்கவில்லை. அவருடைய காலத்திற்குப்பின் பாலிப்போடி யாரின் மருமகனாகிய வேலாயுதம் கதிர்காமத்தம்பி என்பவரும் அவருக்குப்பின் அவருடைய மகன் வேலுப்பிள்ளைத் தோம்புதோரும் கோவிலை முறையே நன்கு தொடர்ந்து பரிபாலித்து வருவாராயினர். அக்காலம் வரை சடங்கும் பலியிடலும் நடைபெற்று வந்தன.

பின்னர் நடந்த கூட்டம் ஒன்றின் தீர்மானப்படி 1916 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டளவில் கோவிலில் சடங்குமுறை நிறுத்தப் பெற்று திருவிழாச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. திருவிழாச் செய்ய வேண்டுமென விருப்பம் கொண்டோர், முதற்கண் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து எழுந்தருளிச் சுவாமிகளும், வாகனம், கொடி, குடை, சந்திரப்பிறை, சூரியப்பிறை முதலியனவும் வள்ளம் மூலம் கொண்டு வந்து, புரட்டாதி மாதத்தில் பத்துத்திருவிழாச் செய்து புரட்டாதிப் பூரணையில் தீர்த்தமும் ஆடி முடித்தனர்.

இவ்வாறாக மூன்று ஆண்டுகள் நடைபெற்றுக் கொண்டு வருகையில் கோவிலுக்கு எழுந்தருளிச் சுவாமிகளும், வாகனங்களும் சொந்தமாகத் தேவை என நினைத்தனர். அதன்படி காளி, வீரபுத்திரர் ஆகிய எழுந்தருளிச் சுவாமிகளும், குதிரை, எருத்துவாகனங்களும் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டன. இவைகளே இப்பொழுதும் கோயிலில் பயன்படுத்தப்படுகின்றன.

1935 ஆம் ஆண்டுக்குப் பின் கோவில் நிர்வாகம் சீர்கெட்டு, நித்திய பூசைகளும் தடைபட்டு ஒரு சிலரின் சர்வாதிகாரப் போக்கில் இயங்கிக் கொண்டிருந்தது. உடனே ஊர் மக்கள் ஒன்று கூடி.

''முன்னவன் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங்குன்றும்''

என்பதனால் எப்படியும் முன்னர் நடந்தபடி கோயிற் பூசைகள் ஒழுங்காக நடைபெறச் செய்ய வேண்டுமென்று விரும்பினர். இதனால் 1960 ஆம் ஆண்டில் DC/2069/MIS இலக்க வழக்கை தாக்கல் செய்து 3.8.65 ல் வெற்றியும் கண்டனர். கோட்டுத் தீர்ப்பின்படி பெத்தான்குடி, படையாண்ட குடி, காலிங்காகுடி உலகிப்போடிகுடி, வேளாளர் ஆகிய ஐந்து குடியினர்க்கும் கோவிலில் உரிமை கொடுக்கப்பட்டது. குடிக்கு இரண்டு பேராகப் பத்துப்பேரை நிர்வாக சபைக்குக் கோட்டு முதலியார் முன்னிலையில் தெரிவு செய்து கோயில் நிர்வாகத்தைக் கோட்டாரே நேரில் ஒப்படைத்தனர். கோட்டுத் தீர்ப்பின்படி நிர்வாகசபை மூன்று ஆண்டுகளுக்கொருமுறை மாற்றி அமைக்கப்படும்.

1965 ம் ஆண்டு தொடக்கம் நிர்வாக சபை, கோவில் முன்னேற்றத்திற்கு அல்லும்பகலும் அயராது பாடுபட்டு உழைத்து வருகின்றது. இதன்பயனாக மடாலயமாகவிருந்த கோவிலைச் சிகரக்கோவிலாகக் கட்டி 1978 ம் ஆண்டு ஆவணிமாதம் கல்லாலாகிய காளி, வீரபத்திரர், வயிரவர் ஆகிய மூர்த்திகளை ஸ்தாபனம் செய்வதோடு மகாகும்பாபிஷேகத்தையும் பிரம்ஸ்ரீ சாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வநாதக் குருக்கள் அவர்களும், அவரைச் சார்ந்த ஏனைய பிராம ணோத்தமர்களுமாக நிறைவேற்றி வைத்தார்கள். தற்போது வசந்தமண்ட பத்து வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

கோவிலில் நித்திய பூசைகள் தினமும் நடக்கின்றன. ஆலயக்குருக்க ளாகச் சைவக்குருக்கள் பரம்பரையினர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், சித்திரை வருடப்பிறப்பு, கந்த சஷ்டி விரதம், கார்த்திகைத் தீபத்திருவிழா, திருவெம்பாவை மகாசிவராத்திரி என்பன விசேடமாகக் கொண்டாடப் படும், கார்த்திகை, திருவெம்பாவை முதலிய காலங்களில் நிகழும் தீர்த்தோற்சவம் கோவிலுக்கெதிரில் உள்ள ஆற்றில் அழகுற நடந்தேறும். புரட்டாதிப் பூரணைக்குமுன்னுள்ள பத்துநாட் திருவிழாவும், அந்தப் பூரணையிலன்று நடைபெறுகின்ற தீர்த்தமும் மிகச் சிறப்பாக நடக்கின்ற வருடாந்த மகோற்சவமாகும். இப்பூரணைத் தீர்த்தோற்சவத்திற்கு மட்டும் கோவிலிலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள கடலுக்கு ஊர்வலமாகச் சுவாமி சென்று தீர்த்தமாடி வருவர்.

எட்டுக்கைகளை உடையவரான அகோர வீரபத்திரசுவாமியின் உருவமானது, கால் அங்குலக்கனமும், ஒன்றரை அடி உயரமும், ஒரு அடி அகலமுமுடையதாய் ஐம்பொன்னாற் செய்யப் பெற்றது. இத்தகைய உருவம் இலங்கையில் வேறு எந்த ஆலயத்திலும் இல்லை எனலாம். வீரபத்திரன் கோயில், காரைதீவு, களுவாஞ்சிக்குடி முதலான மிகச் சில ஊர்களிலேயே இங்குக் காணப்படுகின்றன.

இக்கோவிலுக்குச் சொந்தமாக 45 ஏக்கர் நெல்வயலும் இரண்டு வளவுகளும் உள்ளன. இவற்றின் வருவாயினாலும், ஆலய நிர்வாகிகளின் தளரா முயற்சிகளினாலும் கோவில் வளங்குறைவுறாது நடந்தேறி வருகின்றது எனலாம்.

இக்கோவிலின் பெருஞ் சிறப்புகளால் இதனை, மதுமலர்க்கா எனவும் அழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (7) வது இயல் : பொது

## 2. வந்தாறுமூலை - மகாவிஷ்ணு கோவில்

நிறைமதி நாளான பூரணை தோறும் பழம், பாக்கு, வெற்றிலை, மலர், தீபம், ஆகியவற்றை கையிலேந்திக் கொண்டு அந்திப் பூசை நேரத்தில் பெண்கள், வந்தாறுமூலையிலுள்ள மகாவிஷ்ணு ஆலயத்திற்கு வரிசையாகச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகவிருக்கும். அண்மையில் நடந்த கும்பாபிஷேகத்தின் பின்னர் இப்படியொரு அற்புதமான நிலையை அங்கு காணலாம். பூரணையன்று மூலமூர்த்தியான மகாவிஷ்ணுவுக்கு பூசனை களாற்றியதும், உள்வீதியிலுள்ள இலக்குமி கோயிலின் முன் இப் பெண்கள் இரு வரிசையிலமைந்து தாம் கொணர்ந்த தீபத்தை எண்ணெய், திரியிட்டு ஏற்றி வைத்து பழம் பாக்கினை முன்னுக்குப் பரவி, கோயிற் குருக்கள் வாசிக்கின்ற சுலோகங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு மலராகத் தீபத்திற்குப் போட்டு வணங்கி

''அந்தி விளக்கே அலங்கார நாயகிக்கே
பசும் பொன்விளக்கு வைத்துப் பஞ்சுத்திரி போட்டு
குளம் போலே எண்ணெய் விட்டு கோலமுடன் ஏற்றி வைத்தேன்
வைத்தேன் திருவிளக்கு மாளிகையும் தான் விளங்க
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடி விளங்க''

என்று போற்றித் தமக்கு வேண்டிய மாங்கல்யம், சந்தானம், தனம், தானியம், தைரியம் முதலிய சௌபாக்கியங்களையும் தந்தருளும்படி தீப வழிபாட்டின் மூலம் மகாலட்சுமியை வேண்டிக் கொள்வது பார்ப்பவர்க ளைப் பரவசப்படுத்தும். பண்டைக் காலத்தில் சூரியனை, அக்கினியை வழிபடுதல் வழக்கிலிருந்தது. புறவிருளைப் போக்குவது சூரியன். வீட்டிருளைப் போக்குவது விளக்கு, அல்லது அக்கினி. அகவிருளைப் போக்குவது ஞானம். இதனைப் பெறுவதற்காகவும் உடற் புனிதத் தோடு, உளப்புனிதத்தை ஏற்படுத்தவும் விரதம் அனுட்டித்தல், தெய்வ வழிபாடு செய்தல் வேண்டியதாகின்றது. தாய்மையைத் தெய்வமாகப் பூசிக்கும் சக்தி வழிபாடு இந்துக்களுடைய வாழ்க்கையின் சிறப்பம்சமாகும். இதனால்,

| | | |
|---|---|---|
| தனம் தருவது | - | தனலெட்சுமி |
| தானியம் தருவது | - | தானியலெட்சுமி |
| தைரியம் தருவது | - | தைரியலெட்சுமி |
| சௌபாக்கியம் தருவது | - | சௌபாக்கியலெட்சுமி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் ஆராமையோடும் தாயாகப் பூசனை செய்தனர். இப்படியே வீட்டிருளைப் போக்கும் விளக்கினைத் தீபமற்றி தீபலெட்சுமியாக வழிபட்டு வேண்டியவற்றைக் கேட்டுப் பெற்ற திரு விளக்கு வழிபாடு மிகப் பழமையானது. இந்த வழிபாட்டிலே நிறைவு காணும் பெண்குலத்தை வந்தாறுமூலை மகாவிஷ்ணு ஆலயத்தில் பூரணை நாளன்று அந்திக் காலப் பூசையின் போது காண முடிகிறது.

மட்டக்களப்பிலிருந்து வடக்குத் திசையாக சுமார் பத்துமைல் தொலைவிலுள்ளது, வந்தாறுமூலை என்னும் கிராமம். இக்கிராமத்தின் மத்தியில் கோயில் கொண்டிருப்பது மகாவிஷ்ணு ஆலயமாகும். ஏறக்குறைய ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு இவ்வாலயம் சிறிய ஓலைக்குடில் வடிவில் அமைக்கப்பட்டு மக்கள் வழிபாட்டு இடமாக விளங்கியது. இக்கோவிலுக்கு அவ்வூர்ப் போடிமாரே பராமரிப்பாளராக இருந்திருக்கின்றனர் எனத் தெரிய வருகின்றது. இவ்வூர் முதியவர்களிடமிருந்து கிடைத்த தகவல்களின்படி இக் கோவிலின் நிர்வாகம் கைலாயப்போடி என்பவரிடமிருந்து தம்பிப்போடி, கந்தப் போடி என்னும் இருவருக்கும் கைமாறிக் கொடுக்கப்பட்ட தெனத் தெரியவருகிறது. இவர்களிருவரும் வயது முதிர்ச்சியுற்றனர். இதனால் சர்வாதிகாரத்துடன் கோவில் நிர்வாகம் முழுவதையும் பார்ப்பதற்கு கயிலாயப்போடி என்பவருக்கு சகல உரிமைகளையும் இவர்கள் வழங்கியிருந்தனர். இவ்வாறு தனிப்பட்ட ஒருவருடைய கோவிலாக நிர்வகிக்கப்படுவதை அக்கிராமத்து மக்கள் ஏற்றுக் கொள்ளாதிருந்தனர். இதனால் கோவில் நிர்வாகம் ஊரிலுள்ள எல்லோருக்கும் பொதுவான உரிமையைக் கொண்டு இருத்தல் வேண்டுமென்று கிராமத்து மக்கள் கோட்டில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தனர். இதன் பயனாகத் தேசத்து வன்னிமை முன்னிலையில் குறிப்பிட்ட கைலாயப் போடியார் பரம்பரைக்குக் கோவிலுரிமை தொடர்ந்திருக்குமாயினும், இவர்கள் தனித்தியங்காமல் ஊரின் குடியுரிமைப்படி மற்றுமுள்ளோரும் சேர்ந்தே நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்ற தீர்ப்புக் கிடைத்தது. இத்தீர்ப்புக் கமைய குடியுரிமைக் கணக்கின்படி மயிலிப் போடியார் பராமரிப்பின் கீழ் தோம்புதோர் க. கோணேசியார் ஆகியோர் கோயில் நிருவாகத்தை ஏற்று நடத்தி வந்தனர்.

அன்று தொடக்கம் இன்று வரை குடிக் கணக்குப்படி கிராமத்தில் உள்ளவர்கள் திருவிழாக்களைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். பரமக்குட்டிக் குடியார், காவேரி கண்டம் குடியார், புதூரார், செட்டியாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையார், அத்தியா குடியார், கழகத் தம்பணி குடியார், மஞ்சள் பரமக்குட்டிக் குடியார், என்பவர்களே குறிப்பிடத் தக்கவர்கள்.

ஆரம்பத்தில் வருடாந்த உற்சவத் திருவிழா புரட்டாதி மாதத்தில் நடைபெற்று வந்தது. பின்னர் சுமார் 15 வருடங்களுக்கு முன்பிருந்து ஆனி மாதத்தில் நிகழ்ந்து வருகிறது. இவ்வுற்சவம் ஆனிப்பூரணை முந்திய பத்து திருவிழாவோடும் பூரணையன்று நிகழும் தீர்த்தோற்சவத்தோடும் முடிவுறும். புரட்டாதி மாதத்தில் கஞ்சன் கதை படித்தலும் மார்கழி மாதத்தில் வைகுந்த ஏகாதசியும் சிறப்பான பூசனைகளுடன் நடைபெறும்.

இவ்வுற்சவ காலத்தில் காவேரி கண்டங்குடியாரால் சர்ப்பசயனமும், கண்ணப்ப போடியார் கெருடன் கட்டும், திருவேட்டையும், பரமக்குட்டிக் குடியார் தீர்த்தோற்சவமும் ஏற்று நடத்துகின்றனர். கெருடன் கட்டு அன்று தயிர்முட்டி உடைத்தல், தீக்குளித்தல் என்பனவும் நிகழ்கின்றன. கருடன் திருவிழா சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் இவ்வூர்ப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், சேர்ந்து நடாத்தி வந்ததாகவும், ஆசிரியர்களுடைய இடமாற்றங்கள் காரணமாக அவர்கள் கைவிடவேதான் மேற்குறித்தபடி கொடுக்கப்பட்டது எனவும் கூறுகின்றனர். தீர்த்தம் கழுவங்கேணிக் கடலில் நடைபெற்று வருகின்றது. இக்கடற்கரைப் பகுதி தென்னை, புன்னை மரச் சோலைகளால் குளிர்ச்சி பெற்றுத் திகழ்கின்றது.

மூல மூர்த்தியாக எழுந்தருளிய இம் மகா விஷ்ணு கோவிலின் வீதியில் நாம் மன்னர் குறிப்பிட்ட இலக்குமி தேவி கோவிலோடு ஆண்டாள், நரசிங்கம், அநுமார், நவக்கிரகக் கோவில்களும் உண்டு. எல்லா மூர்த்திகளுக்கும் தினப்பூசை நடைபெறுகின்றது. இதற்கென மாதாந்த வேதனம் கொடுத்து வைக்கப் பெற்ற சைவக் குருக்கள் பூசையை நடத்துகின்றார். புறவீதியில் முற்காலத்தில் சமாதியான பெரியவர்களின் பெயரால் ஒரு ஆலயமும், மடமும், உண்டு. கோயில் சொத்துக்களாக காணிகள் பள்ள வெளிக்குளம், 33 ஏக்கரும், பாலையடி 25 ஏக்கரும், குருக்கள் பட்டி 15 ஏக்கரும் மாவிலங்கையடி 12 ஏக்கரும், வேறு முன்மாரி 18 ஏக்கரும் நிரந்தர வருவாய் கொடுத்துக் கொண்டுள்ளன.

காலத்துக்குக் காலம் நிர்வாக சபை உறுப்பினர்களில் மாற்றம் வேண்டும் என்பது இவ்வூர் மக்களுடைய விருப்பமெனத் தெரிகிறது. சிலரே கோவில் சொத்துக்களைப் பராமரித்தல், பார்ப்பவர்களுக்கு மனதில் ஓர் ஐயப்பாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டை ஏற்படுத்தும். இதனால் மாறி மாறி எல்லோருக்கும் சந்தர்ப்பமளிப்பது இவ்விதக் குறைபாடுகள் ஏற்படாமல் நல்ல நடை முறைகள் வரவும், ஊக்கம் வளரவும் வழி வகுக்கும் என்பது இவர்களது அபிப்பிராயமாகும். கோவில் ஒழுங்குகள் மேலும் சீராக வளரவும், பரம்பரை உரிமை படைத்தவர்க ளோடு, பொது மக்களில் தெரிவு செய்யப்பட்டவர்களும் கூட அங்கத்துவம் வகித்தல் மிகவும் நல்லது என்று அவ்வூர்ப் பெரியவர்கள் பலர் ஆலோசனை கூறுகிறார்கள்.

தற்சமயம் கிராமத்து மக்களால் குடிக்கணக்கில் தெரிவு செய்யப்பட்ட மூன்று பேர் நிர்வாகத்தை நடத்துகின்றனர். மகாவிஷ்ணு கோவில் நிர்வாகத்தினரேதான் வந்தாறுமூலை பிள்ளையார் கோவில், கண்ணகை அம்மன் கோவில்களையும் பரிபாலித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (7) வது இயல் : பொது

## 3. பண்டாரியாவெளி நாகதம்பிரான் கோவில்

பண்டைக் காலக் கோவில்களில் எத்தனையோ தெய்வீக நிபந்தனை களும் அற்புதங்களும் நடந்து மறைபொருளாகி மங்கிப் போய்க்கிடப்பதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம். முச்சங்க காலங்களிலுமல்லாமல் கடைச்சங்கத்திற்குப் பிற்பட்ட காலங்களிலும், தவிர்ந்த ஏனைய காலங் களிலும் தெய்வீக பக்தித் திறனைப் பல பல ஆலயங்களின் வாயிலாகவும் பக்திமான்களின் வாயிலாகவும் நிகழ்ச்சிகளும் அற்புதங்களும் நடந்தமை பற்றிக் கேள்வியுறுகின்றோம். ஆயினும் அவ்விதம் நிகழ்ந்த அற்புதச் செய்கைகள் இன்று மூடுமந்திரமாகவும் மறைபொருளாகவும் வெளிவராமற் தடைப்பட்டும், ஏட்டுப் பிரதிகள் அழிந்தும் மங்கிப் போயுள்ளன. இதனைத்தற்காலம் ஆராய முற்படுங்கால் சிற்றுரை மூலமும் நூல்கள் சிலவற்றின் சிறப்புப் பாயிரப் பாடல்கள் மூலமாகவுமே கீழ்மாகாணக் கோவில்களின் சிறப்பும் ஓரளவு இன்றுள்ள வளர்ச்சியில் சொல்லப்படு கின்றது. இது காலவரை தொண்டாற்றிவரும் பெரியார்கள் இதில் பங்கு கொண்டு வரலாறுகளை வெளியிட முன்வர வேண்டுமென்பதே எமது குறிக்கோளாகும் என்பதை மனப்பூர்வமாக தெரியப்படுத்துகின்றோம்.

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் இருந்து ஒரு பெண், கால் நடையாக இலங்கைக்கு வந்தாள் என்றும், வரும் போது அவள் அம்மன் சிலையும், நாகச்சிலையும் உடுப்பு முதலிய பொருட்களுடனும் வந்தாள் என்றும் வந்தவள் பண்டாரியாவெளி என்னும் கிராமத்தில் குடியிருந்தாள் என்றும் சொல்லப்படுகின்றது. இன்னுமோர் வரலாறு கத்திரி, வனிதை என்னும் இரண்டு சகோதரிகள் இந்தியாவில் இருந்து கால் நடையாக - பெரிய களம் ஊடாக வந்து பண்டாரியாவெளி என்னும் கிராமத்தில் குடி ஏறினார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இதில் இரண்டு சகோதரிகளும் அம்மன், நாகசிலை என்ற இரு சிலைகளுடன் பெரும் பொருள்களும் கொண்டு வந்து அவ்வூரில் குடியேறினார்கள் என்பது ஐதீகம். இதில் கத்தரி என்பவளுக்குப் பிள்ளை இல்லை. வனிதை என்பவளுக்கு ஏழு பிள்ளைகள் பிறந்தார்கள். கடைசி 7 ஆம் பிள்ளையுடன் நாகம் ஒன்று கூடப்பிறந்ததாகச் சொல்லப்படுகின்றது. இவ்விதம் பிறந்த ஏழாம் பிள்ளைக்கும் (பெண் பிள்ளைக்கும்) நாகத்திற்கும் பால் ஊட்டி வளர்த்தாள் என்றும் சொல்லப்படுகிறது. இந்தத்தாய் தன்னுடைய வீட்டில் நாகச்சிலையை வைத்து வணங்கிவந்ததாகவும் அதன் காரணத்தால் அவளுடைய வயிற்றில் நாகம் பிறந்ததாகவும் அவள் இரண்டிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது நாகத்திற்குப் பால் கறந்து பாத்திரத்தில் பாலூட்டினதாகவும் தன் பிள்ளைக்கு பால் கொடுத்ததாகவும் இவ்விதமாக வளர்த்து வந்த போது மக்களுக்கு ஏழு பேருக்கும் வீட்டுப் பொருட்களை ஏழு பங்காக பிரிவிட்ட தாகவும் இதனைப் பார்த்திருந்த நாகம் சீறிச்சினந்து படமெடுத்து ஆடிப் போட்ட பங்குகளைக் குழப்பி அடித்தாகவும் பின் பொதுமக்களின் அபிப்பிராயத்தின் படி நாகத்தையும் சேர்த்து எட்டுப் பங்குகளாகப் பிரிவிட்ட போது நாகம் குழப்படி பண்ணாமல் தன்னுடைய பங்கை தன்னுடன் பிறந்த பிள்ளைக்குரிய பங்குடன் சேர்த்துவிட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

மேலும் இவ்விதம் பங்கு போட்டும் பிள்ளைகள் தாயிடம் குழப்படி பண்ணி, தாயிடம் இருந்த எல்லாப் பொருட்களையும் மீட்டதால் தாய் வெறுப்புற்று தன் ஏழாவது இளைய பிள்ளையுடன் பிள்ளைக்குரிய பங்குடன் சிலையையும் எடுத்துக் கொண்டு போகும்போது பின் தொடர்ந்து நாகமும் போனதாகவும், போகும் வழியில் இளங்கன்றுள்ள எருமையொன் றும் தாயைத் துரத்தியதாகவும் தாய் எல்லா வற்றையும் விட்டுவிட்டு எருமையின் இரு கொம்பையும் பிடித்து வாதாட்டம் நடக்கும் போது பண்டாரியாவெளிக்கும் படையாண்டகுளக்கட்டுக்கும் பொதுவில் இருந்த இத்தி மரத்தடியில் கூட்டமாகக் கூடியிருந்த படையாண்டகுடிப் போடியார், உலையப்பா குடிப் போடியார், காலிங்கா குடிப் போடியார் மூவரும் ஓடிப் போய் விலத்திப் பாதுகாப்பளித்தார்கள் என்றும் அப்போது பயந்து ஓடிய பிள்ளை, படையாண்ட குடிப்போடியார் மனைவி (காலிங்கா குடியார்) ஆதரவில் வளர்ந்து வந்ததாகவும் தாய் சிலையுடன் மகிழடித்தீவில் உள்ள மகிழ மரத்தடியில் சிறு வீடுகட்டி வாழ்ந்ததாகவும் நாகம் அவ்விடத்திலே இருந்த இத்திமரத்தடிப் புற்றில் புகுந்து கொண்டதாகவும் சொல்லப்படு கின்றது.

பின் இச்சம்பவம் நடந்த அன்று ஆனி உத்திர தினமாக இருந்தமையால் அப்பிள்ளை அன்று தொட்டு ஆண்டு தோறும் தன்னுடன் பிறந்த நாக பிள்ளை'' என நினைத்துப் பொங்கல் செய்து வந்தனர் என்றும், அப்பிள் ளையின் மரபில் பிறந்த மரபினர் கொம்பிக் கிழவார் குத்துவார் காலிங்காகுடி என அழைக்கப்பட்டனர் என்றும், நாகத்தின் வேண்டுகோளின்படி அம்மரபினரே இப்பூசை செய்ய முக்கிய உரித்துடையோர் என்றும் அன்றைய நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப் பெற்று வருகிறது என்பதும் பண்டையக் கதை வரலாறாயிற்று.

நானூறு ஆண்டுகளாக நாகத்துடன் பிறந்த பிள்ளையின் வயிற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த சந்ததியார் கொம்பிக்கி வகுத்துவழவார் என்னும் மரபுப் பெயர் கொண்ட காலிங்கா குடியினரே இப்பூசைக்கு மிக உரித்துடையோராக இருந்து வந்தனர். இச்செயலுக்கு நாகம், நாகத்துடன் உடன்பிறந்த பிள்ளையின் கனவில் தோன்றி எமது பூசையை உமது வயிற்றில் பிறந்த சந்ததியினரே செய்ய வேண்டும் எனக் கனவில் கூறியதாகவும் ஓர் கதையுண்டு. அப்போது அப்பிள்ளையின் மூத்த மகனான "நாக நம்பி" என்பவர் பூசாரியாகப் பூசை செய்துள்ளார் என்பதற்கு சான்றுகள் உள்ளன. ஆதலால் பண்டாரியாவெளிக் கிராமத்தவர்கள் பண்டைய நாளில் இருந்த படையாண்டகுடிப் போடியார் ஆகிய பணமும் பண்புள்ள மேற்குறிப்பிட்ட மூவரும் தலைமை வகித்து நாகம் குடிபுகுந்த புற்று, பண்டாரியாவெளி வயலின் மத்தியில் இத்திமரத்தடியில் அமைந்தமையால் அவ்விடத்தி லேயே, அக்கிராம விவசாயிகள் வயற் செய்கையில் வரும் ஆதாயத்தைக் கொண்டு எவ்வித இடுக்கண்ணும் தமக்கு வரக்கூடாதென்ற நோக்கத்துடன் 60 வருடத்திற்கு முன் ஒரு நாகதம்பிரான் கோவிலும் மண்டபமும் அமைத்து ஆனி உத்தரத் தினத்தில் பால் பழம் கரைத்து பொங்கலுடன் பெரும் பூசை செய்து வந்தனர். அதன் பிறகு 20 வருடங்கள் கழித்து ஓர் விநாயகர் கோவிலும் விஷ்ணு கோவிலும் கட்டி, கோவிலும் மண்டபமுமாகக் கட்டி முடித்த பின்னர் பண்டாரியாவெளி படையாண்டவெளி, மகிழடித்தீவு, கடுக்காமுனை, அரசடித்தீவு என்னும் கிராமங்களிலுள்ள யாவரும் சேர்ந்து பூசை செய்து வந்துள்ளனர். இப்பூசை வருடாவருடம் ஆனி உத்திரத் திருநாளை முன்னிட்டுப் பெரும் பூசை ஒன்று மட்டும் நடக்கலாயிற்று. பின்னர் 1959 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை 9 நாளைய திருவிழாவுடன் நடைமுறையில் சேர்ந்து உள்ளது.

இந்நிலை சிறிதுசிறிது மாற்றங்களுடன் பூசை செய்ய ஒரு பூசகரும் பூசகருக்கு ஒரு தொண்டூழியரும் பராபரிப்பை பார்வையிடத்தலைவர் என்னும் வண்ணக்கு, காரியதரிசி, தனாதிகாரி குழுவொன்றும் நியமனம் செய்து கோவில் வருடாந்த உற்சவதினப் பூசையை, விட ஒரு காலத்தினப் பூசையும் இன்றுவரை வளர்ந்துள்ளது. இதே கால எல்லையில் 1967 இல் கவுடாலீடும் 1970 இல் சிகர கோபுரமும் கட்டப்பட்டதுடன் நாகதம்பிரான் மேடையும் கிணறு இரண்டும் கட்டப்பட்டது.

கோவில் புனருத்தாரணத்திற்கும் வளர்ச்சிக்கும் வருமானம் போதாமையால் நிருவாக சபையின் தீர்மானத்தையொட்டி செவ்வாய், வெள்ளி இரண்டு தினமும் ஒரு காலப்பூசை செய்வதாகத் தீர்மானித்து 1970 இல் இருந்து அது நடைமுறையில் கொண்டுவரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாலயத்தில் ஒரு சில விசேட பூசைகள் நியமிக்கப்பட்டன. அவை ஆனியுத்தரப் பொங்கல், கார்த்திகை தீப விளக்கீடு, கந்தசட்டிப் பூசை, தைப்பொங்கல் பூசை, தைப்பூசம், சிவராத்திரிப் பூசை, சித்திரை வருடப் பூசை என்பனவாகும். இவ்வாறாக விசேட தினப் பூசைகள் நடைபெறுகின்றன.

இக்கோவிலின் உட்பிரகாரத்தில் நாகேஸ்வரி ஆலயம், விநாயகர் ஆலயம், விஷ்ணு ஆலயம், கந்தசுவாமி ஆலயம், வைரவர் ஆலயம் என்பனவும் பால் பழம் கரைத்து வைக்கும் சுற்றுப்புற மதிலுடன் கூடிய மேடையும் மணிக்கோபுரமும் இவையனைத்தையும் உள்ளடக்கிய சுற்றுமதில் என்பவையும் உட்புற அமைப்பாகும்.

கோவிலின் வெளிப்புறம் பார்த்தாலோ நாலா பக்கமும் வயல் சூழ்ந்த பூமி. இதில் ஆனி உத்தரப் பெருநாளில் தேசமக்களால் சூழப்பட்ட விழாக் கோலங்களும் பொங்கலும் நடைபெறவுள்ள வெளிப்பரப்பாகும்.

பெரும் பூசை விழாக்கள் நடைபெறும் காலம் அசம்பாவிதங்கள் நடைபெறாமலும் வரும் வருவாயை நல்ல முறையில் பயன்படுத்தவும், பயன்படுத்தப்பட்ட பொருளையோ கட்டிடங்களையோ பாதுகாக்கவும் வரும் பக்தர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வேலைகளைச் செய்தல் முதலானவற்றிலும், சுருங்கச் சொல்லின் குழு நிர்வாகம் பாதுகாப்பான முறையில் பயனுள்ள செயல்களில் ஈண்டு முன்னேற்றமடைந்து வருதல் கருதத்தக்கது.

விசேட பூசையான ஆனித்திருநாள் பொங்கலில் குளத்து நீரை அள்ளி, பால் பழம் கரைக்கவும், பொங்கல் செய்யவும் பொது மக்கள் அழுக்கடைந்த நீரை அள்ளிப்பரிமாற விருப்பமில்லாது தயங்குவதால், கோவில் வருமானத்தைக் கொண்டும் இயன்ற பெரியார்களின் நன்கொடைப் பணத்தைக் கொண்டும் தற்போதுள்ள கிணற்றைவிட மேலும் கிணறுகள், போட்டுக் கொடுக்க வேண்டுமென்பது நாங்கள் கூறக்கூடியனவாகும். தொலைவில் இருந்து வருவோர் தங்கித் தரித்துச் செல்லத்தக்கதாக மடங்கள் ஒரு சிலவற்றை அமைத்துக் கொடுத்தலும் முக்கியமாகச் செய்ய வேண்டியதொன்றாகும்.

பெருந்திரளான மக்கள் இவ்வாலயத்திற்கு வந்து பொங்கல் செய்வதால் வேண்டிய வாகன வசதிகள் தேவைப்படுகின்றன. மின்சார விளக்குகள் இல்லாத தட்டுப்பாடும், மடவசதி, நீர்வசதி, ஆகியன இல்லாததால் இவற்றை சைவம கா சபை மூலமாகவும், அரசாங்க ஊக்குவிப்பின் மூலமாகவும் நிர்வாக சபையின் தொண்டாற்றலாலும் செய்து மேலும் இக்கோவில் பிரபலமாகி முதன்மையடையப் பொதுமக்களும் ஒத்தாசை புரியும்படி பணிவுடன் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (7) வது இயல் : பொது

### 4. மட்டக்களப்பு நரசிங்க வயிரவசுவாமி கோவில்

மட்டக்களப்பு புகையிரத நிலையத்திற்கருகில் அமைந்துள்ளது இக்கோயில். இக்கோயிலின் அமைவால் இருத்தலத்தின் பெயரே வயிரவன்காடு என அழைக்கப்பெறுகிறது. குறித்தவொரு சமூகத்தவர்க்கே சொந்தமாயுள்ள இது, இந்நாட்டிலுள்ள ஒரேயொரு வயிரவன் கோவில் என்ற சிறப்புக்குரியதாகி இன்று எல்லாராலும் வணங்கப் பெறுவது.

1845 ம் ஆண்டளவில் கந்தன், கதிராமர் என்பவர் வன்னி நாட்டின் ஒரு பகுதியிலிருந்து இப்போதுள்ள நரசிங்க வயிரவ விக்கிரகத்தை மட்டக்களப் பிற்குக் கொண்டு வந்து, விடத்தல் முனைப் பகுதியில் ஒரு மர நிழலில் வைத்து வணங்கி வந்தார். சிறிது நாட்களின் பின் சூழ் நிலையில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாகத் தொடர்ந்தும் விடத்தல் முனையில் தமது விக்கிர கத்தை வைத்திருக்க முடியாதெனக் கருதினார். அதனால் மட்டக்களப்பு நகரின் வடபாகத்தில் தற்போதுள்ள சந்தையை அடுத்துள்ள அரசடிப் பிள்ளையார் வீதியைச் சார்ந்த பகுதியில், அக்காலத்தில் திரு. கந்தன், கதிராமரின் சுற்றத்தவர்களும், அவரின் சமூகத்தைச் சேர்ந்த ஏராளமான குடும்பங்களும் வசித்தனராதலாலும் அங்கேயே தமது கோவிலை நிறுவிக் கொள்ள விரும்பினார். மேற்படி பகுதியில் வயிரவியார் என்பவருக்குச் சொந்தமான நிலத்தில் ஒரு பெரிய கூழா மரத்தினடியில் சிறு மேடை அமைத்து, அதில் விக்கிரகத்தை வைத்து, அவரும், அவரது சமூகத்தைச் சேர்ந்தவர்களுமாக வழிபட்டு வருவராயினர்.

சிறிது காலத்தின் பின் ஒரு நாள் திரு. கந்தன், கதிராமர் நித்திரையிலி ருக்கும் போது, ஆவேசம் வந்தவர் போல் எழுந்து அலறிக் கொண்டு ஓடத்தொடங்கவே, ஊரவர்களும், உறவினர்களும் அவரைப் பிடிக்கும் நோக்கத்துடன் பின் தொடர்ந்து ஓடினர். யாரையுமே கவனிக்காது வடக்குப் பக்கமாகக் காடுகளுக் கூடாக ஓடிய கதிராமர், இப்போது ஆலயம் அமைந்திருக்கும் இடம் வரையும் ஓடிச்சென்றார். அங்கேயிருந்த பெரியதொரு தேற்றா மரத்தைச் சுற்றிச்சுற்றி ஆடிக் கொண்டிருந்தார். தேடிச் சென்ற சமூகத்தவர்கள் அவரை நோக்கி விசாரித்தனர். அவர் ஆவேச நிலையிலே ஊரவர்களைப் பார்த்து, இன்று முதல் நரசிங்க வயிரவ சுவாமி குறிப்பிட்ட அந்தத் தேற்றா மரத்தடியிலேயே கோயில் கொண்டருளச் சித்தமாகியுள்ளார் என்றும், ஊரவர்கள் ஆகவேண்டியதைச் செய்து, தேற்றா மரத்தடியில் ஒரு மேடை அமைத்துத்தரவேண்டும் என்றும் கேட்டார். அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றவர்களின் சார்பில், ஒருவர் கையடித்துத் தாரை வார்த்துக் கொடுத்து அதன் படியே செய்தனர்.

ஆரம்ப காலத்தில் அந்தத் தேற்றாமர நிழலைச் சுற்றியுள்ள சிறுபகுதியே ஆலயமாகக் கொள்ளப்பட்டது. அம்மரத்தின் கீழ் அமைக்கப் பெற்ற சிறிய குடில் ஒன்றிலேயே வருடத்திற்கொரு முறை ஏழு நாட்களுக்குச் சடங்கு நடத்தி, இறுதி நாளன்று ஆடு, கோழி ஆகியவற்றைப் பலியிட்டுப் பூசையை நிறைவேற்றி வந்தனர்.

பின்னர் கந்தன் கதிராமரின் உறவினரான சின்னவியார் என்பவர் தேற்றாமர நிழலில் அமர்ந்துள்ள ஸ்ரீ நரசிங்க வயிரவப் பெருமானுக்குப் பல தொண்டுகள் செய்து, அவ்விடத்திலேயே சிறு குடிசை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார். ஒரு நாள் திடீரென அவருக்கு பெரியம்மை கண்டது. அம்மை நோய் கண்டதும் பயத்தினால் உறவினரும், ஊரவர்களும் அவரை அணுகவோ முன்வரவில்லை. தன்னந் தனிமையிலே சின்னவியார், ஸ்ரீ நரசிங்கப் பெருமானையும் முத்துமாரித் தாயையும் வேண்டித் தன் போக்கிலேயே பாடித் துதித்துக் கொண்டு கிடந்தார். சிறிது நாட்களின் பின் தெய்வ அருளால், சின்னவியார் குணமடையப் பெற்றாராயினும், அவருடைய கண்களிரண்டும் குருடாகி விட்டன. கண் பார்வையை இழந்த நிலையில் அவர் தட்டுத் தடுமாறித் திரிவதைத் கேள்வியுற்ற ஊரவர்களும், உறவினர்களும் பெரு வியப்படைந்து அவரைப் போய்ப் பார்த்து நிலைமையை விசாரித்தனர். நோயின் உபாதையால் தாம் அனுபவித்த கஷ்டங்களையும், தமது இரு கண்களும் போய் விட்டமையையும் கூறியதோடு, ஸ்ரீ நரசிங்கப் பெருமானை நோக்கியும், அன்னை முத்துமாரியை நினைந்தும், மனமுருகிப் பல பாடல்களையும் பாடினார்.

நெஞ்சுருக்கும் அப்பாடல்களைக் கேட்ட மக்கள் அவைகளைத் தொகுக்க ஆரம்பித்தனர். சின்னவியார் பாடிய பாடல்களே பிற்காலத்தில் மாரியம்மன் குளுத்திப் பாட்டாகவும், நரசிங்க வயிரவர் காவியம், வயிரவர் ஊஞ்சல் பாட்டுக்களாகவும் தொகுக்கப்பட்டு, இன்றும் இவ்வாலயத்தில் உற்சவ காலங்களில் பக்தி சிரத்தையோடும் பாடப்படுகின்றன.

சின்னவியார் காலமானதன்பின், இப்போது இருப்பது போன்றே அன்றும் கோட்டைமுனை, உப்போடை, அமிர்தகழி, ஏறாவூர், சித்தாண்டி, நாவற்குடா, மாங்காடு, ஆகிய ஊர்களில் குடியேறி வாழ்ந்து வந்த இச்சமூகத்தினர் எல்லாரும் சேர்ந்து எம்பெருமானுக்கு ஆலயமொன்று அமைக்கவேண்டுமென்று எண்ணினர். அதன்படி அப்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தையே அரசினரிடம் விண்ணப்பித்துப் பெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவும் தீர்மானமாயிற்று.

17.11.1866 ல் அரசினரிடம் மேற்கூறிய பூமியைப் பணம் கொடுத்து, திரு. வயிரவியார் - நாகப்பரும், வினாயகர் - வேலாயுதருமாகச் சேர்ந்து வாங்கி, நரசிங்க வயிரவருக்கு தேற்றா மரநிழலில் ஒரு ஆலயமும், மாரியம்மாளுக்கு அதனருகில் ஒரு ஆலயமுமாகச் சிறு குடில்கள் அமைத்து, வழிபட்டு வந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் எல்லாக் கோயில்களிலும் இருப்பது போலவே, இவ்வாலயத்திலும் வண்ணக்குமார்களின் மேற்பார்வையிலேயே பரிபாலனம் நடைபெற்று வந்துள்ளது.

வருடாந்தச் சடங்கோடு ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையிலும், தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, கார்த்திகை மாதம் மார்கழி மாதப் பூசைகளும் இங்கு விசேடமாக நடைபெறுகின்றது. சடங்கு நாட்களில் தெய்வமாடுதல் பண்டு தொட்டு நடைபெற்று வருகின்றது.

மட்டக்களப்பிலுள்ளமற்றும் தெய்வமாடும் ஆலயங்களை விட, இவ்வாலயத்தில் தெய்வமாடும் முறை விசேடமாகக் கருதப்படுகிறது. இத்தெய்வங்களிடத்தில் வாக்குக் கேட்பதற்காகவே, பிற ஊர்களிலிருந்து பக்தர்களும், பிறசமயத்தவர்களும் கூட வருடாந்த உற்சவத்தின் போது வந்து கூடுவதுண்டு. பக்தர்கள் செலுத்தும் காணிக்கைகளும், நேர்கடன் பொருட்களுமே இவ்வாலயத்தின் வருமானங்கள். இதைவிட ஆலயத்திற் கென்று சொத்துக்களோ, வேறு நிவந்தங்களோ இல்லை எனலாம்.

தெய்வமாடுபவர்களில் தலைமைத் தெய்வக் காரரை இங்கு தலைக் கட்டாடி என்று அழைக்கப்படுதல் வழக்கம். தலைக்கட்டாடிக் கென்று சில உரிமைகளும் சலுகைகளும் ஆலயத்தில் உண்டு. வருடாந்த உற்சவ காலமான எட்டு நாட்களுக்கும் இரவும், பகலுமாக நாளொன்றிற்கு இரண்டு சடங்குகள் எனப் பிரிக்கப்பட்டிருக்கிறது. எல்லாச் சடங்குகளும் ஆலய உரிமையாளர்களுக்கும், இச்சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குமே பகிர்ந்தளிக் கப்பட்டிருக்கின்றன. ஆதி நாட்களில் சடங்குகளை எந்த அடிப்படையில் பிரித்து வழங்கினார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் இன்று அது தாய் வழியான உரிமையாகவே பேணப்படுகின்றது. இவ்வாலயத்தைச் சேர்ந்த சமூக மக்களுக்குக் குடிவழிப் பிரிவுகள் பெயர்கள் இருப்பதாகத் தெரிய வில்லை. ஆகவே மட்டக்களப்பின் மற்றைய பகுதி மக்களைப் போன்று, குடிவழி உரிமைகள், பாத்தியதைகள் என்பன போன்ற பிரச்சினைகள் இவ்வாலயத்தில் எழுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.11.1866 ல் பெறப்பட்ட காணியில் அமைக்கப் பெற்றிருந்த ஆலயத்திலேயே வழிபாடுகள் தொடர்ந்து 33 ஆண்டுகள் நடை பெற்று வந்தன. 1899 ம் ஆண்டில் திரு. நாகப்பர் - இளைய பெருமாளும், திரு. வேலாயுதர் - சபாபதியும் வண்ணக்கர்களாக இருந்த காலத்தில், ஊரவர் களின் உதவியுடனும் இப்போதுள்ள ஆலயம் உருவாக்கப்பட்டது. நரசிங்கப் பெருமானுக்கு ஒரு பேராலயமும், அதனருகில் தேவி மாரியம்மாளுக்குச் சிறிதான ஒரு ஆலயமும் கட்டப் பெற்று, முறைப்படி விக்கிரகப் பிரதிஷ்டை செய்யப் பெற்றுக் கும்பாபிஷேகமும் நடைபெற்றிருக்கின்றது. இதுவே முதற் கும்பாபிஷேகமாகும்.

தேற்றா மரநிழலிலிருந்து அருள்பாலித்த எம்பிரானுக்கு அந்த இடத்திலேயே ஆலயம் அமைய வேண்டுமென்ற திருவுளம் இருந்தது போலும், எனவே அந்தத் தோற்றாமரம் திடீரெனத் தீப்பிடித்து, ஒருபகுதி முற்றாக எரிந்து விடவே, எஞ்சிய பகுதியும் நாளாவட்டத்தில் பட்டுப்போ யிற்று. பட்டுப்போன மரத்தை வெட்டி அகற்றி விட்டு, அந்த இடத்திலேயே ஆலயத்தை அமைத்ததாகவும், இப்போதுள்ள வெளி மண்டபத்தில் பலிபீடமமைந்துள்ள இடமே தேற்றா மரமிருந்த இடமென்றும் விஷயமறிந்த வயோதிப நிர்வாகிகள் கூறுகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டுச் சடங்குகளும் முடிவுற்றபின் செய்ய வேண்டிய விதிமுறைகளைச் செய்து, ஆலயக் கதவுகள் பூட்டப்பட்டால், இடையி டையே வரும் ஐந்து விசேட உற்சவங்களின் போதே அக்கதவுகள் திறக்கப் படுவதுண்டு. அதனிடையில் நிகழும் வாராந்தப் பூசைகள், விசேட நாட் பூசைகள் என்பவைகளெல்லாம் தேவி மாரியம்மன் ஆலயத்திலும் வைரவ ஆலய வெளி மண்டபத்திலுமே நடைபெறும்.

வருட உற்சவம், ஆனிமாத உத்தரத்தின் பின் வரும் ஒரு வெள்ளிக் கிழமை கதவு திறந்து ஆரம்பிக்கப் பெற்று, அடுத்த வெள்ளிக்கிழமையோடு முடிவுறும். அநேகமாக இந்த எட்டு நாட்களின் ஆரம்பத்திலோ, அன்றி நடுவிலோ, கடைசி நாளிலோ பௌர்ணமி வருவதுண்டு.

வடக்கு வாசற் கதவின் அடியில் மடை வைத்து, மந்திரங்கள் செபித்துத் தேங்காயுடைத்தே வடக்கு வாசற் கதவை முதலில் திறப்பார்கள். பின் முறைப்படி மற்றக் கதவுகள் திறக்கப்படும.

மூலஸ்தானத்தில் மூலமூர்த்தியின் அருகில் அளவிலான ஒரு இரும்புச் சூலம் வைக்கப்பட்டிருக்கின்றது. மூலமூர்த்திக்கு நடை பெறும் அபிஷேகம், சடங்குகள் அனைத்துமே இந்தச் சூலத்திற்கும் பிரத்தியேகமாக நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகிறது. இச்சூலமே இவ்வாலயத்தின் உற்சவ மூர்த்தியாகக் கொள்ள வேண்டும் போல் தெரிகிறது.

உற்சவம் ஆரம்பிக்கப் பெற்று மூன்றாம் நாளன்று மூலஸ்தானத்தில் இருக்கும் இச்சூலத்தை வெளிக்குக் கொண்டு வந்து, அதற்கென அலங்க ரித்து வைக்கப்பட்டுள்ள ஒரு மேடையில் வைப்பர். பின்னர் அதற்கு அபிஷேகங்கள் செய்து, பட்டுக்களால், அலங்கரித்து, பூமாலைகள் சூட்டித் தெய்வங்கள் ஆடிவர, வாத்தியங்கள் முழங்க, நேர்த்திக் கடன் செய்பவர்கள் கற்பூர ஆரத்தி எடுக்க, பக்தர்கள், கோஷித்துக் கொண்டு பின்னால்வர, வீதிவலமாக அச்சூலத்தைக் கொண்டு வருவர். அது மீண்டும் ஆலயத்தினுள் கொண்டு செல்லப்பெற்று மூலமூர்த்திக்கருகில் வைக்கப்படுகின்றது.

இந்த இடத்தில் இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும். சூலம் எழுந்தருளச் செய்யப்படும் வேளையில் ''வட்டா மடை'' எனப்படும் ஒன்றும் அச்சூலத்துடன் வீதிவலமாகக் கொண்டு வரப்படுகிறது. வட்டா என்பது, வீடுகளில் வெற்றிலை பாக்கு வைக்க உபயோகிக்கும் காலுடைய வெண்கலத் தட்டமாகும். ஒரு பெரிய வட்டாவில் மடை வைக்கப்பட்டு கமுகம் பாளை, தாமரை மலர்களால், அலங்கரிக்கப் பெற்றும் இருக்கும். இந்த வட்டா மடையை எடுத்து வலம் வருபவர், பரம்பரையாக இதைச் செய்வதாகக் கூறப்படுகிறது. இப்பொழுது திரு. சடாச்சரம் என்பவரே இதனை எடுக்கின்றார். அவருக்கு முன் அவருடைய முன்னோர்கள் இதை எடுத்து வந்தார்கள் என்று கூறப்படுகின்றது. இது குறிப்பிட்ட மூன்றாம் நாள் சடங்கின் போது தான் வைக்கப்படுவது. வீதி வலமாகக் கொண்டு வந்த வட்டாமடை, மூலஸ்தானத்துள் கொண்டுபோய், மூலமூர்த்தியின் பாதத்தில் வைக்கப்பட்டால், உற்சவம் முடியும் வரை தினமும் மடைப் பொருளை மாற்றி, மாற்றி ஒவ்வொரு நாளும் வைப்பர்.

புறவீதியில் இப்பொழுது விநாயகர், நாகதம்பிரான் ஆகியோருக்கும் தனித்தனியாக ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை விட, வீரபத்திரன், காளி, கிரக சாந்தி வயிரவர், காளவயிரவர், சிங்கநாதவயிரவர், திரிசூல வயிரவர், கங்காதேவி, வீரமாகாளி, காத்தவராயர் முதலான பத்தொன்பது தேவதைகளுக்கு, பத்தொன்பது மேடைகள் புறவீதிகளி லுள்ளன. அநேகமாக, ஒவ்வொரு மேடையும் ஒவ்வொரு மரத்தினடியி லேயே அமைக்கப் பெற்றிருப்பது குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

உற்சவத்தின் கடைசி நாளுக்கு முதலிரவன்று பொங்கலிடும் பானையை வீதிவலமாகக் கொண்டு வந்து, ஆலய வாயிலிலேயே வைத்துப் பொங்கல் நடைபெறும். கடைசிநாளன்று பல பொங்கற்பானைகள் பொங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவ இறுதி நாளான வெள்ளிக்கிழமையன்று மதிய பூசை ஆரம்பமான வுடன் மாரியம்மாளுக்குச் சர்க்கரை அமுது படைத்து வழங்கப்படுகிறது. அதன் பின் நிகழும் தெய்வக்காரர்கள் ஊஞ்சலாடும் நிகழ்ச்சி தான் விசேடமானது. ஊஞ்சலாடுவதென்றால் சாதாரணமாக நாம் காணும் ஊஞ்சலாட்டம் போன்றதல்ல இது. ஒரு தடித்த நீண்ட இரும்புக்கம்பியை, தெய்வக்காரரால் தெரிவு செய்யப் பெற்ற ஆண்கள், பக்க வாட்டில், எதிரெதிராகப் பிடித்துக் கொள்ள, தெய்வமாடுவோரும் உருவேறித் தெய்வமாடிக் கொண்டே அவர்களோடு சேர்ந்து பிடித்துக் கொள்ளுவர். அவர்களனைவரும் நின்ற நிலையிலேயே தண்டால் எடுப்பது போன்று குனிந்து நிமிர்ந்தும், பின்னர் சுற்றிச் சுழன்றும் வருவார்கள். இதுதான் தெய்வங்களின் ஊஞ்சலாட்டம், இவ்வேளைகளில் பழைய ஊஞ்சற் பாடல்கள் பாடப்பெறும்.

இப்படிப்பட்ட காவியங்கள், பாடல்கள், எல்லாவற்றிலுமே இவ்வால யத்தின் ஆதிகர்த்தாவான கந்தன் - கதிராமரின் பெயரும், ஆக்கியோனாகிய சின்னவியார் என்பவரின் பெயரும் அடிக்கடி வந்து கொண்டிருப்பதைப் பாடும்போது அவதானிக்கலாம்.

உதாரணமாக நரசிங்க வயிரவ காவியத்தில்:-

''ஆளும் உன் கட்டாடி கதிராமனுக்கும்
அவனிதனி லெதிராக வரும்பிணியகற்றி''.....என்றும்
அம்மன் ''குளுத்திக் கதையில்,
தாரணி புகழிலங்கை தாண்டவன் வெளிப்பதி தன்னில் வந்து
அவதரித்த நங்கையரே
காரணியே கேள் கார் தேசமடங்கலையும் கற்பு நெறி
உற்ற தவம் பெற்றவளே
சீரிலங்கு கட்டாடி சின்னவன் மனங்குளிர சென்ம துயர்
கிலேசம் தீர்த்து விட்டு

பேரிலங்கு புளியநகர் பதியிலுனது சனம் பேரிலொரு
துன்ப பிணி வாராமலே''.....என்றும்

வருவதைக் காணலாம்.

1964 ம் ஆண்டு வரை வண்ணக்குமார் நிர்வாகமே இவ்வாலயத்தைப் பரிபாலித்து வந்தது. அதன் பின்னர் மக்களால் தெரிவு செய்யப் பெற்ற சபையிடம் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சபை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்திற்கொருமுறை பொது மக்களாற் தெரிவு செய்யப் பெறும். இதில் தலைவர், செயலாளர், பொருளாளர் உபதலைவர் உட்பட, ஒவ்வொரு ஊருக்கும் இருவர் வீதம் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பெறுவார்கள். தற்போதுள்ள சபையில் சீலாமுனையைச் சேர்ந்த திரு. க. துரைராசா தலைவராகவும், கோட்டை முனையைச் சேர்ந்த திரு.சி. விநாயக மூர்த்தி உப தலைவராகவும், ஏறாவூரைச் சேர்ந்த திரு. ஞா. நாகராசா செயலாளராகவும் கோட்டைமுனையைச் சேர்ந்த திரு. செ. மகேஸ்வரம் பொருளாளராகவும் கடமையாற்றுகிறார்கள். காப்பாளராக திரு. பொ. கந்தையா அவர்களும் பணியாற்றுகிறார்கள்.

பூசகர்கள் இருவர். இவ்விருவருக்கும் வருடாந்த வருவாயிலிருந்தே வேதனம் வழங்கப்படுகிறது. காலத்திற்குக் காலம் ஏற்படும் பல சிறிய திருப்பணிகளைக் கோயில் வருவாயிலிருந்து நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

இன்னும் பலபெரிய திருப்பணிகள் செய்ய வேண்டியுள்ளன. ஆலய மூலஸ்தானத்தில் ஒழுக்கு விழ ஆரம்பித்துள்ளது. அர்த்த மண்டபம், மூலஸ்தான வடக்கு வாயில் ஆகியவற்றின் கதவு நிலைகள் இற்றுப்போய் ஆட்டம் கண்டுள்ளன. இவை போன்ற இன்னும் பல பிரச்சனைகள் நிர்வாகிகளைக் கவலைக்குள் ஆழ்த்தியுள்ளன. நிதி பற்றாக்குறையால் ஏதுவும் செய்ய முடியாதிருக்கிறது. அரசினரின் உதவி, இவற்றைச் செம்மையுறச் செய்வதற்குக் கிடைக்க வேண்டுமென ஸ்ரீ நரசிங்க வயிரவப் பெருமானுடைய திருவருளை வேண்டி நிற்கின்றனர், இக்கோவில் நிர்வாகிகள்.

சின்னவியார் பாடியுள்ள மாரியம்மன் குளுத்திப்பாடல் நரசிங்க வைரவர் காவியம், உயிரவர் ஊஞ்சல் பாடல் என்பவை நீங்கலாக வேறு நூல்கள் இத்தலம் பற்றிக் கிடைப்பதாகத் தெரியவில்லை. இப் பாடல்களும் அச்சிற் கிடைப்பனவாயில்லை. வாய் வழிக்காவியங்களான இவை மறைந்து, அன்றிப் பிழை நிறைந்து போகாதவாறு பாதுகாப்பது நம்கடன். ஆதலால் இவைகளை அச்சிடச் செய்து வெளிப்படுத்துதல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (8) வது இயல்: மட்டக்களப்பிலுள்ள

## *சைவக்கோவில்கள் - பெயர் வரிசை*

ஏழா்வது இயலான ''பொது'' என்பதனோடு இந்நூலின் கண் எழுதப் பெற்ற கோவில்களின் வரலாறு நிறைவுறுகின்றது.

பரந்து கிடக்கும் இந்நாட்டுக்கோவில்கள் முழுமையும் இந்நூலில் எழுதப் பெறவில்லை என்பதை வாசகர் அறிவர். சுமார். முப்பது கோவில்களைப் பற்றிய வரலாறுகளே இங்கு இடம் பெற்றுள்ளன. மிகுதி நூலின் இரண்டாம், மூன்றாம் பாகங்களாகத் தொடர்ந்து வரலாகும்.

இந்த இயலின் கண்ணுள்ள பெயர் வரிசையினை இன்னும் நன்கு அமைத்தற்கு முயன்றேன். அவ்வாறு அமைக்கத் தக்க சூழ்நிலை கிடைத்திலது. நான் நேரில் பெறக் கூடியதாக இருந்த பெயர்கள் சில. இந்துசமய கலாசார அமைச்சர் அவர்களது அலுவலகத்திலிருந்தும் பெயர் அட்டவணைகள் எனக்குக்கிடைத்த இரண்டையும் நோக்கம் செய்து ஒன்றுபடுத்தினேன். இரண்டிலும் விடுபட்டுப்போன கோவிற் பெயர்கள் பல உள்ளன என்றும் தெரிகின்றது.

மட்டக்களப்பு என்று யான் இங்குக் கொண்ட பெரும் பிரிவு, தற்போது மட்டக்களப்பு என்றும், அம்பாறை என்றும் இரு பிரிவாக்கப்பட்டுள்ளது. எனினும் முன்னைய எனது கருத்தின்படியே ஒருவாறு நூல் அமைந்துள்ளது எனலாம். ஆயினும் மட்டக்களப்பு, அம்பாறை என்ற மாவட்டங்களாக உள்ள இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் அவர்களின் பிரிப்பினையும் ஏற்று, இங்கு வேறு வேறாகப் பெயர் வரிசை அட்டவணையினைத் தர முயன்றுள்ளேன், அதன்படி பார்த்தாலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள சைவக் கோவில்கள் முற்றும் இங்கு இடம் பெறவில்லை. இதற்கு நூன்முகத்துட் குறிப்பிட்டது அன்றி, வேறு காரணம் இருக்கலாம் என்று நான் நினைக்கவில்லை.

அவ்வாறு விடுபட்டுப்போன கோவில்களின் விவரங்களை அன்புடன் தந்தால் அவைகளை மறு பகுதிகளில் சேர்த்துக் கொள்ளுதல் கூடும் என்று நம்பிக்க க தெரிகின்றேன்.

**வி.சீ. கந்தையா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (8) வது இயல்:- மட்டக்களப்பில் உள்ள சைவக்கோவில்கள்

## *மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோவில்கள்*

**பிள்ளையார் வழிபாட்டு ஆலயங்கள்:**

| | | |
|---|---|---|
| 01. | விளினையடி விக்னேஸ்வரர் ஆலயம் | - சேனைத்திடல் (கிரான்) |
| 02. | கணேசகாளிகா ஆலயம் | - ஏறாவூர் - 4 |
| 03. | சித்தி வினாயகர் ஆலயம் | - சின்னவத்தை |
| 04. | புளியடிப்பிள்ளையார் ஆலயம் | - 37 ம் கிராமம் (மண்டூர்) |
| 05. | மாவேற்குடாப்பிள்ளையார் ஆலயம் | - பழுகாமம் |
| 06. | சித்திவினாயகர் ஆலயம் | - ஆனைப்பந்தி, மட்டக்களப்பு |
| 07. | பிள்ளையார் கோயில் | - ஓட்டமாவடி |
| 08. | சித்திவினாயகர் ஆலயம் | - 37 ம் கிராமம் (மண்டூர்) |
| 09. | சித்திவினாயகர் ஆலயம் | - பாலையடிவட்டை |
| 10. | சித்திவினாயகர் ஆலயம் | - கடதாசிக் கூட்டுத்தாபனம் (வாழைச்சேனை) |
| 11. | சித்திவினாயகர் ஆலயம் | - புதுநகர் |
| 12. | அரசடிப்பிள்ளையார் ஆலயம் | - ஓந்தாச்சிமடம் |
| 13. | கைலாயப்பிள்ளையார் ஆலயம் | - வாழைச்சேனை |
| 14. | சுயம்புலிங்கப்பிள்ளையார் ஆலயம் | - களுதாவளை |
| 15. | சித்திவினாயகர் ஆலயம் | - மலையர்கட்டு, மண்டூர் |
| 16. | உப்போடைப்பிள்ளையார் ஆலயம் | - வந்தாறுமூலை |
| 17. | சித்திவினாயகர் ஆலயம் | - கோராவெளி, (கிரான்) |
| 18. | சித்திவினாயகர் ஆலயம் | - மயிலம்பாவெளி |
| 19. | சித்திவினாயகர் ஆலயம் | - பேரில்லாவெளி |
| 20. | பிள்ளையார் ஆலயம் | - கோட்டைக்கல்லாறு |
| 21. | சித்திவினாயகர் ஆலயம் | - கிண்ணையடி (முறாவோடை) |
| 22. | மாணிக்கவினாயகர் ஆலயம் | - அரசினர் வைத்தியசாலை |
| 23. | அரசப்பிள்ளையார் ஆலயம் | - கோட்டைமுனை (மட்டக்களப்பு) |
| 24. | கணபதிப்பிள்ளையார் ஆலயம் | - கிரான்குளம் |
| 25. | பிள்ளையார் ஆலயம் | - மகிளூர் |
| 26. | மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் | - கிரான்குளம் |
| 27. | வித்திவினாயகர் ஆலயம் | - ஈச்சந்தீவு |
| 28. | பிள்ளையார் ஆலயம் | - கன்னங்குடா |
| 29. | வெம்புப்பிள்ளையார் ஆலயம் | - கிரான் |
| 30. | கணேசர் ஆலயம் | - கிண்ணையடி |
| 31. | சித்திவினாயகர் ஆலயம் | - அரசடிச்சேனை, குருந்தையடி |
| 32. | சித்திவினாயகர் ஆலயம் | - முனைக்காடு, மேற்கு |
| 33. | சித்திவினாயகர் ஆலயம் | - உன்னிச்சை |
| 34. | சித்திவினாயகர் ஆலயம் | - செட்டிபாளையம் |
| 35. | சித்திவினாயகர் ஆலயம் | - கடுக்காமுனை |
| 36. | சித்திவினாயகர் ஆலயம் | - பூலாக்காடு (கிரான்) |
| 37. | சித்திவினாயகர் ஆலயம் | - பெரியகல்லாறு |
| 38. | சித்திவினாயகர் ஆலயம் | - பால்ச்சேனை (கதிரவெளி) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 39. | சித்திவினாயகர் ஆலயம் | - | காளம்மைக்கேணி (கன்னங்குடா) |
| 40. | பிள்ளையார் ஆலயம் | - | தம்பலவத்தை |
| 41. | திருநீலகண்டவினாயகர் ஆலயம் | - | ஆரையம்பதி |
| 42. | ஆனைப்புந்திப்பிள்ளையார் ஆலயம் | - | ஆனைகட்டியவெளி (மண்டூர்) |
| 43. | புதுப்பிள்ளையார் ஆலயம் | - | சந்திவெளி |
| 44. | மாமாங்கப்பிள்ளையார் ஆலயம் | - | அமிர்தகழி (மட்டக்களப்பு) |
| 45. | நாவலடிப்பிள்ளையார் ஆலயம் | - | கல்மடு (கல்குடா) |
| 46. | வினாயகர் ஆலயம் | - | புலிபாய்ந்தகல் |
| 47. | செல்வவினாயகர் ஆலயம் | - | வாகரை |
| 48. | வாகனேரிப்பிள்ளையார் ஆலயம் | - | வாகனேரி |
| 49. | மடத்தடி சித்திவினாயகர் ஆலயம் | - | பெரியகல்லாறு |
| 50. | கட்டுப்பிள்ளையார் ஆலயம் | - | மாங்காடு |
| 51. | மருங்கையடி வினாயகர் ஆலயம் | - | செங்கலடி |
| 52. | மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் | - | களுவாஞ்சிகுடி |
| 53. | வீரகத்திப்பிள்ளையார் ஆலயம் | - | கதிரவெளி |
| 54. | விக்னேஸ்வரர் ஆலயம் | - | 38 ம் கிராமம் (மண்டூர்) |
| 55. | அரசடி வினாயகர் ஆலயம் | - | குடியிருப்பு (ஏறாவூர்) |
| 56. | சாராவெளி சித்திவினாயகர் ஆலயம் | - | கிண்ணையடி |
| 57. | கற்பகப்பிள்ளையார் ஆலயம் | - | களுதாவளை - 4 ம் குறிச்சி |
| 58. | முத்துலிங்கவினாயகர் ஆலயம் | - | பெரியபோரதீவு |
| 59. | மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் | - | நாகஞ்சோலை மண்டூர் |
| 60. | விக்னேஸ்வரர் ஆலயம் | - | பட்டிருப்பு |
| 61. | சித்திவினாயகர் ஆலயம் | - | ஐயன்கேணி (ஏறாவூர்) |
| 62. | சித்திவினாயகர் ஆலயம் | - | வெல்லாவெளி |
| 63. | வீரகத்திப்பிள்ளையார் ஆலயம் | - | பார்வீதி, மட்டக்களப்பு |
| 64. | மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் | - | கல்குடா. |
| 65. | சித்திவினாயகர் ஆலயம் | - | கோடைமேடு (களுவாஞ்சிகுடி) |
| 66. | சித்திவினாயகர் ஆலயம் | - | கல்லடி |
| 67. | சித்திவினாயகர் ஆலயம் | - | கிரான் |
| 68. | சித்திவினாயகர் ஆலயம் | - | நாவிதன்வெளி |
| 69. | கணேசர் ஆலயம் | - | வவுனதீவு |
| 70. | பிள்ளையார் ஆலயம் | - | எருவில் |
| 71. | ஆலையடிப்பிள்ளையார் ஆலயம் | - | வங்கிளாவடி, மட்டக்களப்பு |
| 72. | கற்பகப்பிள்ளையார் ஆலயம் | - | பெரியபோரதீவு |
| 73. | வெள்ளைமலையப்பன் பிள்ளையார் ஆலயம் | - | மிறாவோடை (தமிழ்ப்பிரிவு) வாழைச்சேனை |
| 74. | சித்திவினாயகர் ஆலயம் - ஐயன்கேணி | - | செங்கலடி |
| 75. | பிள்ளையார் கோவில் | - | கரவெட்டி, நாவற்காடு |
| 76. | கணேசர் கோவில் | - | நாசிவன்தீவு - வாழைச்சேனை |
| 77. | வீரகத்திப்பிள்ளையார் கோவில் | - | கோட்டைமுனை, மட்டக்களப்பு |
| 78. | பிள்ளையார் கோவில் | - | மகிழவட்டான் (ஆயித்தியமலை) |
| 79. | பிள்ளையார் கோவில் | - | மாங்காடு |
| 80. | மாணிக்கப்பிள்ளையார் கோவில் | - | மகிழடித்தீவு |
| 81. | மாணிக்கப்பிள்ளையார் கோவில் | - | முனைக்காடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 82. | சித்திவினாயகர் கோவில் | - | நொச்சிமுனை |
| 83. | மாணிக்கப்பிள்ளையார் கோவில் | - | நரிப்புல்தோட்டம் (ஆயிரத்திய மலை) |
| 84. | சித்திவினாயகர் கோவில் | - | கல்லடி - உப்போடை |
| 85. | சித்திவினாயகர் கோவில் | - | மீனோடைக்கட்டு |
| 86. | மருங்கையடி வினாயகர் கோவில் | - | வந்தாறுமூலை |
| 87. | ஆற்றங்கரையோரப்பிள்ளையார் கோவில் | - | முறக்கொட்டான்சேனை |
| 88. | பிள்ளையார் கோவில் | - | மண்டூர் |
| 89. | சித்திவினாயகர் கோவில் | - | கரவாகு |
| 90. | வினாயகப் பெருமாள் கோவில் | - | ஒருமுழச்சோலை, கொம்மாதுறை |
| 91. | கணேசர் கோவில் | - | நாவற்குடா, நொச்சிமுனை |
| 92. | பாலையடிவட்டைவினாயகர் ஆலயம் | - | முதலைக்குடா |
| 93. | சித்திவினாயகர் கோவில் | - | வாகரை |

## முருகவழிபாட்டு ஆலயங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 01. | சுப்பிரமணியசுவாமி கோவில் | - | பெரியகல்லாறு |
| 02. | கந்தசுவாமி கோவில் | - | ஆரையம்பதி |
| 03. | கதிர்காமசுவாமி கோவில் | - | குருக்கள் மடம் |
| 04. | முருகன் கோவில் | - | குருக்கள் மடம் |
| 05. | வேலாயுதசுவாமி கோவில் | - | கோட்டைமுனை |
| 06. | திருச்செந்தூர் முருகன் கோவில் | - | நாவலடி |
| 07. | கந்தகுமாராலய கதிர்வேல் முருகன் ஆலயம் | - | பெரியபுல்லுமலை, வெலிக்கா கண்டி |
| 08. | சித்திரவேலாயுதசுவாமி ஆலயம் | - | திருப்பழுகாமம் |
| 09. | முருகையன் கோவில் | - | மண்டூர் |
| 10. | முருகன் ஆலயம் | - | பேரில்லாவெளி (குடும்பிமலை) |
| 11. | குமாரர் கோவில் | - | கிரான் |
| 12. | தண்டாயுதபாணி கோவில் | - | கோட்டைமுனை |
| 13. | முருகன் கோவில் | - | 15 ம் கிராமம் (நாவிதன் வெளி) |
| 14. | வேலாயுதசுவாமி கோவில் | - | கல்லடி |
| 15. | பாலமுருகன் கோவில் | - | தேற்றாத்தீவு |
| 16. | முத்துக்குமார வேலாயுதர் கோவில் | - | பெரியதுறை (மட்டக்களப்பு) |
| 17. | முருகன் கோவில் | - | அம்பிளாந்துரை |
| 18. | முருகன் கோவில் | - | பனிச்சங்கேணி |
| 19. | சித்திரவேலாயுதசுவாமி கோவில் | - | சித்தாண்டி |
| 20. | முருகன் கோவில் | - | தாந்தாமலை |
| 21. | சுப்பிரமணியர் கோவில் | - | பெரியகல்லாறு |
| 22. | சித்திரவேலாயுதசுவாமி கோவில் | - | திருக்கோவில் |
| 23. | முருகன் கோவில் | - | கருங்காலிச்சோலை (கல்முந்தல்) |
| 24. | முருகன் கோவில் | - | உகந்தைமலை |

## சக்தி வழிபாட்டு ஆலயங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 01. | கண்ணகை அம்மன் ஆலயம் | - | செட்டிபாளையம் |
| 02. | துரோபதை ஆலயம் | - | மட்டிக்களி |
| 03. | மாரியம்மன் ஆலயம் | - | கோட்டைமுனை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பேச்சியம்மன் ஆலயம் - வாழைச்சேனை
05. பத்திரகாளி அம்மன் ஆலயம் - ஓந்தாச்சி மடம்
06. கண்ணகை அம்மன் ஆலயம் - சத்துருக்கொண்டான்
07. மாரியம்மன் ஆலயம் - ஈச்சந்தீவு
08. முத்துமாரியம்மன் ஆலயம் - வாழைச்சேனை
09. கண்ணகை அம்மன் ஆலயம் - விடத்தல்முனை, புளியந்தீவு
10. முத்துமாரியம்மன் ஆலயம் - உன்னிச்சை
11. நாகபூசணி அம்மன் ஆலயம் - நாவலடி
12. முத்துமாரியம்மன் ஆலயம் - கோறளங்கேணி, முறக்கொட்டாஞ்சேனை
13. முத்துமாரியம்மன் ஆலயம் - ஏறாவூர்
14. கண்ணகை அம்மன் ஆலயம் - வந்தாறுமூலை
15. முத்துமாரியம்மன் ஆலயம் - கிரான்குளம்
16. முத்துமாரியம்மன் ஆலயம் - உறுகாமம்
17. திரௌபதை அம்மன் ஆலயம் - புளியந்தீவு
18. கண்ணகை அம்மன் ஆலயம் - கொக்கட்டிச்சோலை
19. காளி அம்மன் கோவில் - கரவெட்டி, நாவற்காடு
20. கண்ணகை அம்மன் கோவில் - கோரர்வெளி (கிரான்)
21. வீரபத்தினி அம்மன் கோவில் - முகத்துவாரம்
22. கண்ணகி அம்மன் கோவில் - கன்னங்குடா
23. கண்ணகி அம்மன் கோவில் - பேரில்லாவெளி
24. கண்ணகி அம்மன் கோவில் - செட்டிபாளையம்
25. காளி அம்மன் கோவில் - கரையாக்கன்தீவு
26. மாரியம்மன் கோவில் - மண்டூர்
27. பத்திரகாளி அம்மன் கோவில் - முனைத்தீவு
28. மாரியம்மன் கோவில் - வட்டிபோட்டமடு (பூலாக்காடு)
29. முத்துமாரியம்மன் கோவில் - எருவில்
30. கொம்புச்சந்தி - களுதாவளை
31. முத்துமாரியம்மன் கோவில் - ஏறாவூர்-1
32. காளியம்மன் ஆலயம் - புதுக்குடியிருப்பு
33. மாரியம்மன் கோவில் - நாசிவன் தீவு
34. மாரியம்மன் கோவில் - வந்தாறுமூலை
35. கண்ணகை அம்மன் கோவில் - சந்திவெளி
36. கண்ணகை அம்மன் கோவில் - களுவாஞ்சிகுடி
37. கண்ணகை அம்மன் கோவில் - 38 ம் கிராமம், வக்கியல்ல
38. கண்ணகை அம்மன் கோவில் - காரைதீவு
39. பத்திரகாளி அம்மன் கோவில் - காடுவாமடு, செங்கலடி
40. பத்திரகாளி அம்மன் கோவில் - பெரியபோரதீவு
41. முத்துமாரியம்மன் கோவில் - செங்கலடி
42. திரௌபதை அம்மன் கோவில் - பழுகாமம்
43. முத்துமாரியம்மன் கோவில் - கோட்டைக்கல்லாறு
44. முத்துமாரியம்மன் கோவில் - வெல்லாவெளி
45. முத்துமாரியம்மன் கோவில் - கறுவாக்கேணி
46. மாவடி மாரியம்மன் கோவில் - பேத்தாளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 47. | கண்ணகி அம்மன் கோவில் | - | சத்துருகொண்டான் |
| 48. | மாரியம்மன் கோவில் | - | பாசிக்குடா |
| 49. | கண்ணகை அம்மன் கோவில் | - | சத்துருகொண்டான் |
| 50. | கண்ணகை அம்மன் கோவில் | - | புதுக்குடியிருப்பு |
| 51. | முத்துமாரியம்மன் கோவில் | - | நாவிதன்வெளி |
| 52. | மாரியம்மன் கோவில் | - | ஆயித்தியமலை |
| 53. | பத்திரகாளி கோவில் | - | ஆரையம்பதி-2 |
| 54. | மாரியம்மன் கோவில் | - | மைலன்கரச்சை, தியாவட்டவான் |
| 55. | பத்தினி அம்மன் கோவில் | - | 53 ம் கிராமம், வக்கியல்ல |
| 56. | கண்ணகி அம்மன் கோவில் | - | மகிழடித்தீவு |
| 57. | முத்துமாரியம்மன் கோவில் | - | முறக்கொட்டான்சேனை |
| 58. | திரௌபதை அம்மன் கோவில் | - | புதுநகர், மட்டக்களப்பு |
| 59. | முத்துமாரியம்மன் கோவில் | - | வாழைச்சேனை |
| 60. | கண்ணகி அம்மன் கோவில் | - | தாளங்குடா |
| 61. | கண்ணகி அம்மன் கோவில் | - | மகிழூர் |
| 62. | கடலாட்சி அம்மன் கோவில் | - | நாவலடி |
| 63. | சிவ முத்துமாரியம்மன் கோவில் | - | பழுகாமம் |
| 64. | பேச்சி அம்மன் கோவில் | - | கல்லடி - உப்போடை |
| 65. | முத்துமாரியம்மன் கோவில் | - | கொத்துக்குளம் |
| 66. | கண்ணகை அம்மன் கோவில் | - | 14ம் கிராமம், மண்டூர் |
| 67. | திரௌபதை அம்மன் ஆலயம் | - | மட்டக்களப்பு |
| 68. | கண்ணகை அம்மன் கோவில் | - | முதலைக்குடா |
| 69. | கண்ணகை அம்மன் ஆலயம் | - | சத்துருகொண்டான் |
| 70. | கண்ணகி அம்மன் ஆலயம் | - | புதுக்குடியிருப்பு |
| 71. | பத்திரகாளி அம்மன் ஆலயம் | - | ஏறாவூர் |
| 72. | மாரியம்மன் ஆலயம் | - | கல்லடி |

## விஷ்ணு வழிபாட்டு ஆலயங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 01. | தீர்த்தக்கரை மகா விஷ்ணு ஆலயம் | - | மண்டூர் |
| 02. | மகா விஷ்ணு ஆலயம் | - | பழுகாமம் |
| 03. | மகா விஷ்ணு ஆலயம் | - | கிரான் |
| 04. | மகா விஷ்ணு ஆலயம் | - | களுவாஞ்சிகுடி |
| 05. | கண்ணன் ஆலயம் | - | மகிழடித்தீவு |
| 06. | மகா விஷ்ணு ஆலயம் | - | வந்தாறுமூலை |
| 07. | மகா விஷ்ணு ஆலயம் | - | திகிலிவட்டை |
| 08. | மகா விஷ்ணு ஆலயம் | - | மகிழூர் முனை (சேனைத்துறை) |
| 09. | மகா விஷ்ணு ஆலயம் | - | கிண்ணையடி (வாழைச்சேனை) |
| 10. | மகா விஷ்ணு ஆலயம் | - | காரைதீவு-3 |
| 11. | மகா விஷ்ணு ஆலயம் | - | பெரிய நீலாவணை |
| 12. | மகா விஷ்ணு ஆலயம் | - | வெல்லாவெளி |
| 13. | கிருஷ்ணர் ஆலயம் | - | கல்லடி |
| 14. | கிருஷ்ணர் ஆலயம் | - | குருக்கள் மடம் |
| 15. | மகா விஷ்ணு ஆலயம் | - | 37 ம் கிராமம், மாவடிமுன்மாரி |
| 16. | விஷ்ணு ஆலயம் | - | ராஜபுரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. மகா விஷ்ணு ஆலயம் - 14 ம் கிராமம், மண்டூர்
18. ஆதி நாராய்ணர் ஆலயம் - 35 ம் கிராமம் (வக்கியல்ல)
19. கிட்ணன் கோவில் - திமிலதீவு

**நாக தம்பிரான் வழிபாட்டு ஆலயங்கள்:**

01. கோட்டைக் கல்லாறு
02. களுதாவளை-4
03. களுவாஞ்சிகுடி
04. இருதயபுரம்
05. விளாவட்டவான் (நாவற்காடு)
06. மண்டபத்தடி (கன்னங்குடா)
07. செட்டிபாளையம்
08. முனைக்காடு
09. கிண்ணையடி (வாழைச்சேனை)
10. சந்திவெளி
11. பேத்தாளை, வாழைச்சேனை
12. 38 ம் கிராகம், வக்கியல்ல
13. ஏறாவூர்-5
14. குறுமண்வெளி
15. பழுகாமம்
16. கோட்டைக்கல்லாறு
17. பண்டாரியாவெளி
18. மண்டூர்

**வீரபத்திரர் வழிபாட்டு ஆலயங்கள்:**

01. வீரபத்திரர் ஆலயம் - களுவாஞ்சிகுடி
02. வீரபத்திரர் (மதுமலர்க்கா) - ஏறாவூர்-5
03. வீரபத்திரர் ஆலயம் - காரைதீவு
04. புளியந்தீவு

**வைரவர் வழிபாட்டு ஆலயங்கள்:**

01. ஸ்ரீ மகா நரசிங்க வயிரவர் சுவாமி ஆலயம் - வைரவன் காடு, தாண்டவன் வெளி
02. ஆதி வைரவர் சுவாமி ஆலயம் - மண்டூர்
03. வைரவர் ஆலயம் - 38 ம் கிராமம் (வக்கியல்ல)
04. வைரவர் ஆலயம் - நாவிதன் வெளி

**மட்டக்களப்பு மாவட்ட ஏனைய ஆலயங்கள்:**

01. பெரிய தம்பிரான் ஆலயம் - தாளங்குடா
02. ஸ்ரீ பெரிய தம்பிரான் ஆலயம் - அரசடி (கோட்டமுனை)
03. பெரிய தம்பிரான் ஆலயம் - செட்டிபாளையம்
04. சிவன் ஆலயம் - செல்வாநகர் (காத்தான்குடி)
05. பரம நயினார் ஆலயம் - ஆரையம்பதி
06. பெரிய தம்பிரான் ஆலயம் - ஆறுமுகத்தான் குடியிருப்பு
07. ஐயனார் கோவில் - மண்டூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. ஐயனார் கோவில் - செங்கலடி
09. சிவன் (கட்டிடவேலைகள் முடிவுறா நிலையில்) கோவில் - நாவற்குடா
10. தான்தோன்றீஸ்வரர் ஆலயம் - கொக்கட்டிச்சோலை
11. ஐயனார் (சபரிஐயப்பன்) - குருக்கள் மடம்

***(தற்போதைய அம்பாரை மாவட்டம்)***

**பிள்ளையார் கோவில்கள்:**

01. சித்திவிநாயகர் ஆலயம் - ஆதார வைத்தியசாலை - கல்முனை
02. மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் - பாண்டிருப்பு -1, கல்முனை
03. சித்திவிநாயகர் ஆலயம் - தம்பிலுவில் 2
04. ஆலையடிப்பிள்ளையார் கோவில் - பொத்துவில்
05. அம்பலத்தடி விநாயகர் ஆலயம் - அம்பாள் கோவில் வீதி, கல்முனை 2
06. சித்திவிநாயகர் ஆலயம் - மல்வத்தை
07. சர்வார்த்த சித்திவிநாயகர் ஆலயம் - கல்முனை
08. அம்பாரையன் ஆலயம் - சல்லித்தீவு - காரைதீவு
09. மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் - அம்பாறை
10. சித்திவிநாயகர் அரசடி அம்பாள் தேவஸ்தானம் - பாண்டிருப்பு தெற்கு - கல்முனை
11. சின்னப்பிள்ளையார் ஆலயம் - துறை நீலாவணை
12. அம்பாறைப்பிள்ளையார் ஆலயம் - துறைநீலாவணை
13. கோரக்கர் பிள்ளையார் கோவில் - சம்மாந்துறை
14. சித்திவிநாயகர் ஆலயம் - நாவிதன்வெளி
15. சித்திவிநாயகர் ஆலயம் - அக்கரைப்பற்று
16. மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் - வளத்தாப்பிட்டி
17. சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோவில் - வீரமுனை
18. சங்கமான் கண்டி விநாயகராலயம் - சங்கமான்கண்டி
19. குளவெளிப்பிள்ளையார் கோவில் - காரைதீவு

**01. சிவன் வழிபாட்டு ஆலயங்கள்:**

ஸ்ரீ பாசுவதேஸ்வரர் ஆலயம் - பனங்காடு - அக்கரைப்பற்று

**02. சக்தி வழிபாட்டு ஆலயங்கள்:**

(அ) 1. மாரியம்மன் கோவில் - நிந்தவூர்
2. மாரியம்மன் கோவில் - மல்லிகைத்தீவு
3. மாரியம்மன் கோவில் - நாவிதன்வெளி
4. மாரியம்மன் கோவில் - சேனைக்குடியிருப்பு, கல்முனை

(ஆ) 1. கண்ணகி அம்மன் ஆலயம் - வீரமுனை, சம்மாந்துறை
2. கண்ணகி அம்மன் ஆலயம் - துறைநீலாவணை
3. கண்ணகி அம்மன் ஆலயம் - காரைதீவு
4. கண்ணகி அம்மன் ஆலயம் - தம்பிலுவில்

(இ) 1. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் - வளத்தாப்பிட்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் - அன்னமலை
3. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் - நாவிதன் வெளி -சம்மாந்துறை

(ஈ) 1. மீனாட்சி அம்மன் ஆலயம் - நிந்தவூர்
(உ) 1. நாககன்னி அம்மன் - துறைநீலாவணை
2. கண்ணகி அம்மன் ஆலயம் - துறைநீலாவணை
(ஊ) 1. திரௌபதி அம்மன் ஆலயம் - பாண்டிருப்பு

03. **மகாவிஷ்ணு ஆலயங்கள்:**
1. மகாவிஷ்ணு ஆலயம் - பெரிய நீலாவணை
2. மகாவிஷ்ணு ஆலயம் - காரைதீவு
3. மகாவிஷ்ணு ஆலயம் - தம்பிலுவில் 1 ஆம் குறிச்சி
4. மகாவிஷ்ணு ஆலயம் - 35 ஆம் கிராமம், வக்கியல்ல

04. **முருகன் ஆலயங்கள்:**
01. முருகன் ஆலயம் - கணபதிபுரம் - மல்வத்தை
02. முருகன் ஆலயம் - சம்மாந்துரை
03. முருகன் ஆலயம் - பாணமைப்பற்று
04. முருகன் ஆலயம் - காரைதீவு (உகந்தமலை முருகன்)
05. முருகன் ஆலயம் - தம்பட்டை, தம்பிலுவில்
06. முருகன் ஆலயம் - சொறிக்கல்முனை - சம்மாந்துறை
07. முருகன் ஆலயம் - நாவிதன் வெளி - மத்தியமுகாம்
08. முருகன் ஆலயம் - நித்தவூர்
09. சித்திரவேலாயுதர் ஆலயம் - திருக்கோவில்
10. சித்திரவேலாயுதர் ஆலயம் - பொத்துவில்

05. **ஐயனார் கோவில்கள்:**
01. ஐயனார் கோவில் - கல்முனை
02. ஐயனார் கோவில் - புதுக்காடு, இராமனாதபுரம்
03. ஐயனார் கோவில் - பாண்டிருப்பு-2

06. **பைரவன் ஆலயம்:**
1. பைரவர் ஆலயம் - துறை நீலாவணை

07. **சித்தானைக் குட்டி ஆலயம்** - **காரைதீவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தின் பொறுப்பாளராகவுள்ள ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தாஜீ அவர்கள் அளித்த

# பொன்னுரை

மட்டுநகர் இரண்டு பெருமைகளைக் கொண்டது. ஒன்று அதன் கலாசார பாரம்பரியம், மற்றது அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் ஆத்மீக அலை. மட்டக்களப்பின் சைவக் கோயில்கள் இவற்றுக்கு ஆதார சுருதியாக அமைந்துள்ளன என்றால் அது மிகையாகாது.

இங்குள்ள கோயில்கள், தமிழகத்தில் உள்ள இராமேஸ்வரம், மதுரை, சிதம்பரம், தஞ்சைக் கோயில்கள் போல் வானளாவிய பிரமாண்டமான அமைப்பில் இல்லை. ஆனால் 'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது' என்ற மூதுரைக்கமைய சிறிய உருவ அமைப்பிலும் ஆழமான ஆத்மீக பலத்திலும் அமைந்தவை இக் கோயில்கள்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம், கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், சித்தாண்டி முருகன் ஆலயம், பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம் முதலிய நூற்றுக்கணக்கான ஆலயங்கள் இங்குள்ள சைவப்பெருங்குடி மக்களின் உயிர் மூச்சாக, இதயத்துடிப்பாக அமைந்துள்ளன. இங்கு பரந்து வாழும் இந்துக்களின் பற்றுக் கோடாகப் பரம்பரை பரம்பரையாகப் பக்தி மார்க்கத்தில் மக்களை வழி நடத்திச் செல்லும் பார்த்தசாரதிகளாக இக்கோயில்கள் இங்கு செயற்படுகின்றன.

எத்தகைய துன்ப துரங்கள் நேர்ந்தாலும் மக்கள் பக்தியுடன் இறை வழியில், ஒழுக்கநெறியில் வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கு இக்கோயில்கள் துணைசெய்கின்றன.

இக்கோயில்களின் வரலாறு, மகத்துவம், அற்புதங்கள் முதலிய இன்னோரன்ன சிறப்புக்கள் மங்கி மறைந்து போகாது, நமது எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம் அளிக்கும் முதுசமாக அமைவதற்கு மகாவித்துவான் பண்டிதர் வி.சீ. கந்தையா (B.O.L) அவர்கள் எழுதிய இந்நூல் பெரிதும் உதவும். அசக்தனான நிலையிலும் அவர் ஆற்றிவரும் இப்பெரும் சைவப்பணி, தெய்வ சங்கல்பம் என்றே நாம் கொள்ள வேண்டும். இந்நூல் ஆசிரியராகிய மகா வித்துவான் பண்டிதர் வி.சீ. கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(B.O.L) அவர்கள் மதிப்பிற்குரிய எனது ஆசான். பல தமிழ் நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதிப் பெருமைவாய்ந்த பெரியார். இந்நூலின் முதற் பாகம் "மட்டக்களப்புச் சைவக்கோவில்கள் (முதலாம் பாகம்) அதன் தொடராக அந்நூலின் இரண்டாம் பாகம் வெளிவர உள்ளது.

இந்நூலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மேலும் சில அருள் மிகு சேத்திரங்களின் வரலாற்றுக் குறிப்புகள் ஆராயப்படுகின்றன. இவை அனைத்தும் கிராமங்களிலும், குக்கிராமங்களிலும் உள்ளன. ஆனால் அவை அபூர்வமான வரலாற்றுப் பொக்கிஷம் நிறைந்தவை.

இவ்வரலாற்றுக் குறிப்புக்களில் அக்காலத்து மக்களின் வாழ்க்கை முறைகள், சம்பிரதாயங்கள், பழக்க வழங்க்கங்கள் முதலியன இழையோடியிருப்பதால், கோயில் வரலாற்றுடன் மக்களின் வரலாறு பற்றியும் நாம் பல விடயங்களைத் தெரிந்துகொள்ள முடிகின்றது. சுமார் ஒரு நூற்றாண்டு காலத்துக்கு முன் கிழக்கிலங்கை மக்களின் வாழ்க்கை எவ்வாறு ஆலயங்களுடன் இரண்டறக்கலந்திருந்தது என்பதையும், ஆலயங்களின் செல்வாக்கு எவ்வளவு தூரம் மக்கள் வாழ்க்கையை நெறிப்படுத்தியது என்பதையும் அறியும் போது நமது மனம் மிகவும் நெகிழ்ச்சியடையவே செய்யும்.

பல கோயில்களின் பெயர்கள் கூட மக்களின் பற்றுக் கோடாக இருப்பதை நாம் காண்கிறோம். உதாரணமாக, மண்டுக் கொட்டைமுனை துறையடி மாரியம்மன் கோயில், செட்டிப்பாளையம் சோமநாத இலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில், ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் கோயில், நாவலடி கடலாட்சியம்மன் கோயில் முதலிய பெயர்கள் இவ்வகையில் நம்மைப் பெரிதும் சிந்திக்க வைப்பனவாகும்.

கோயில்களின் வரலாற்றுப் பின்னணியுடன் திருவிழா, உற்சவங்கள் முதலிய ஏற்பாடுகள் பற்றியும், இவை ஊர்மக்களால் எவ்வாறு பரவலாக மேற்கொள்ளப்படுகின்றன என்ற அமைப்பு முறை பற்றியும், பாகைக் காரரின் சம்பிரதாயங்கள் பற்றியும் பல பயனுள்ள குறிப்புக்கள் இக்கட்டுரைகளில் காணப்படுகின்றன. இவையாவும் ஆழ்ந்து சிந்தித்தற்குரிய முக்கியமான செய்திகளாகும்.

இக்கட்டுரைகளைப் படிக்கும் போது பல கோயில்களுக்குத் தல வரலாறு இல்லாதிருப்பதையும், பல கோயில்கள் பற்றி எவ்வித நூலும் எழுதப்படாமல் இருப்பது பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலச் சந்ததியினர் இக்குறையைப் போக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதையே இந்நூல் மறைமுகமாக நமக்குச் சொல்கிறது. வரலாற்றுப் பிரக்ஞை இல்லாத காரணத்தால், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல செய்திகளை நமது மக்கள் பதிவு செய்துவைக்கத் தவறிய காரணத்தால், நாம் இன்று பல இழப்புக்களுக்கு ஆளாகியுள்ளோம். பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட நமது இலக்கியச் செல்வங்கள், கடல் கோள்களாலும், காலவெள்ளத்தாலும், பகைவர் செயலாலும் அழிந்தொழிந்தன. அது ஒரு வகையில் தடுக்க முடியாததாகவும் நமது சக்திக்கு அப்பாற்பட்டதாகவும் கொள்ளலாம்.

ஆனால் அண்மைக்காலச் செய்திகளை, நமது பாரம்பரியச் சிறப்புகளை நாம் பாதுகாத்து வைக்கத்தவறினால், அது நமது எதிர் காலச் சந்ததியினருக்கு நாம் இழைக்கும் பெரும் அநீதியாகும். இந்தப் பின்னணியில் மகாவித்துவான் பண்டிதர் வி.சீ. கந்தையாவின் நூல்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. அவரது ''மட்டக்களப்புத் தமிழகம்'', ''கண்ணகி வழக்குரை'', ''சைவக்கோயில்கள்'' (முதலாம் பாகம்), சைவக் கோயில்கள் (இரண்டாம் பாகம்) ஆகிய நூல்கள் முடிந்த அளவு வரலாற்றுச் செய்திகளைப் பதிந்து வைப்பதுடன் எதிர்காலத்தில் இன்னும் விரிவான ஆராய்ச்சிகளுக்கு அடித்தளம் ஆகவும் அமைகின்றன.

இச்சீரிய பணிக்கு இறைவனின் அனுக்கிரகமும் பூரணமாகக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

**சுவாமி ஜீவனானந்த.**

**ஸ்ரீ இராமகிருஷ்ண குருகுலம்,**
**கல்லடி - உப்போடை,**
**மட்டக்களப்பு,**
**இலங்கை**
15-10-91.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு கல்லடி - உப்போடை சிவானந்த வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்

# திரு.க. கணபதிப்பிள்ளை

B.A.,F.R.G.S.,Dip.Geog. (Lond.)

அவர்கள் அளித்த

## *சிறப்புரை*

பண்டிதர் மகாவித்துவான் வி.சீ.கந்தையா (பி.ஓ.எல்.) அவர்களின் மட்டக்களப்பிலுள்ள சைவ ஆலயங்கள் பற்றிய இக்கட்டுரைகளைப் படித்து நிறைவுற்றேன். அது ஒரு வரலாற்று நூல். வரலாறென்பது சாதாரணமாய் வரண்டு உலர்ந்து பசையற்றுப்போன என்புக்கூட்டினைப் போன்றுள்ளதாகக் கருதப்பட்டு வருவதுண்டு. ஆனால் கோவில்களின் வரலாறு பற்றிய இக்கட்டுரைகள் சாதாரண சரித்திரக் கட்டுரைகள் போலில்லை. **அவை உயிருள்ள, உணர்வுள்ள, வேகமுள்ள வியாசங்களாய் அமைந்துள்ளன.**

பூமியின் ஒரு சிறு மூலை முடுக்காகிய புளியமிலை போன்ற இலங்கைத்தீவின் கிழக்குக் கரையில் மட்டக்களப்பு மாநிலம் உள்ளது. அம்மாநிலத்தில் ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளாக, வாழ்ந்துள்ளவரும், இக்காலத்திற்கூட வாழ்ந்துவருபவருமாகிய மக்களின் உள்ளக் குமுறல்கள், உளவேகங்கள், எண்ணங்கள், எண்ண அடுக்குகள், நம்பிக்கைகள், விசுவாசங்கள், ஆகியவற்றினை இவ்வரிய வியாசங்கள் தம்பொருளடக்கமாகக் கொண்டுள்ளன. எனவே பொதுவாகப் பார்க்குமிடத்து **மனித உளவித்தரிப்பு அவை.**

மனித உள்ளமானது ஓர் உணர்வுப் பெட்டகம், ஒரு முழுமைப் பொருள் அது, நிறைவுப் பொருளும் அது. அது ஓய்வில்லா இயக்கம், இயங்கிக்கொண்டேயிருக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது. கூர்ப்பொழுங்கின் உச்சத்திலுள்ளது. தொடக்கமில்லாதது, முடிவில்லாதது. ஆழமுடையது, விசாலமானது. இயங்கிக் கொண்டேயிருப்பதால், அஃது முற்போக்குள்ளது, சிந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது. அளவில்லா ஆக்கத்தினைப் பெற்றுள்ளது. எனினும் முழுமையுற்றில்லாதது, அழிவில்லாதது, **ஆகிக்கொண்டேயிருக்கும் திறத்தினைப் பெற்றுள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஃது மனித உளத் தத்துவத்தினை நுஞ்சறக் கண்டறிந்துள்ள மேதாவிகளின் முடிபு. குறுகச்சொல்லுமிடத்து, அது ஒரே சீரான ஒழுங்கு, குறைவற்ற செல்வம். இத்தகைய சிறப்பியல்புகளையெல்லாம் நாம் எங்கும் காணலாம், எம் மனித கூட்டத்தாரிடத்திலும் காணலாம்.

மட்டக்களப்பு மாநிலத்தில் வதிந்துவரும் குடிகள் பெரும் பாலும் சைவநன்மக்கள். தெய்வத்தின் மாண்பினை இயற்கையின் இயக்கத்தில் கண்டுணர்ந்து கொண்டவர்கள். அன்னார் பண்டிதருமல்லர், பட்டதாரிகளுமல்லர், அவர் இயற்கையின் இயக்கத்தில் நல்லுறவுகொண்டு, அதில் நீந்திக் கொண்டேயிருக்கும் இயல்பினையுள்ளார். எனவே அன்னாரின் வரலாறானது ஊக்கம் நிரம்பியுள்ளது, ஒழுக்கமுடையது, வற்றாது ஓடிக்கொண்டேயிருக்கும் ஆற்றொழுக்கினைப்போன்றுள்ளது. It is a Process; not nesessarily a reality. கங்கையின் இடையறா நெகிழ்வுபோன்றுள்ளது.

''உழவர் ஓதைமதகோதை யுடைநீரோதை தன்பதங்கொள்
விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி''

மக்களின் உள்ளம் காவேரி. காவேரியின் ஒழுக்கு மக்களின் மொத்தச் சூழ்நிலையின் இணக்கத்தினைப் பெற்றுள்ள உள ஒழுக்கு. இளங்கோவடிகள் கண்டுணர்ந்து கற்பித்த உளப்போக்கு இது. நதிச்சேறல் உளச்சேறல். மனித உள இயைபுகளனைத்தினையும் நாம் அவர் தம் நம்பிக்கைகளிலும், எண்ணங்களிலும், உளவேகங்களிலும் கண்டுகொள்ள இயலும்.

அத்தகைய மாண்பினைப் பெற்றுள்ள இந்த ஆலயங்களின் சரித்திர நூலானது வெளுத்துப்போன என்புக்கூடுபோன்ற பசையற்ற சரித்திர நூலாக அமைந்துவிடவில்லை. எனவே இஃது ஓர் மலட்டு வரலாறாகாது. அதில் உயிருண்டு, உணர்வுண்டு, ஆசையுண்டு, அபிலாசையுண்டு, உளவேகமுண்டு, ஆக்கமுண்டு, உளவீக்கமுண்டு, பூர்வக் குமுறலுண்டு.

இவ்வரிய வியாசங்கள் சைவநீதியின் மாண்பினையும், அதன் முகிழ்ப்பு, நிறைவு, முதிர்ச்சி, மலர்ச்சி ஆகியவற்றினையும், விளக்கிக் காட்டுகின்றன. இந்நீதி அகந்தையற்றது, சுயநலமில்லாதது, பிறர் நலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதியே யாக்கப்பெற்றுள்ளதாகும். இப்பெருநலன்களை வெளியரும்பச் செய்யும் பெருநோக்குடன் தான் இவ்வியாசங்கள் யாக்கப்பெற்று, எண்ணங்கள் கோக்கப்பட்டனவென்பது எனது உள்ளக் கிடக்கை. இந்நூல் ஓர் உளக்காவியமாக அமைந்திருப்பதால், அதனைப் படிப்பவர்கள், மக்கட்சாகியத்தின் உளப்பாங்கினை அறிந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளவர்களாகக் கருதப்படுவர். இந்நூலில் பொதிந்துள்ள உட்கருத்துக்களை ஓரவாரச் சாய்வின்றி உய்த்துணர்ந்து கொள்வது இதைப் படிப்போரது நோக்கமாயிருத்தல் வேண்டும். இதைப் படித்து நிறைவுற்றேன். நீங்களும் படித்து நிறைவெய்துவீர்களாக. பண்டிதரவர் களின் நிறைவுள்ளம் இந்நூலில் இலைமறை கனி போலப் பரிணமித் திருப்பது நோக்குதற்பாலது.

அன்புள்ள,

**க. கணபதிப்பிள்ளை**

52, நல்லையா வீதி,
மட்டக்களப்பு,
30-10-1991.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியரான
## மதிப்புக்குரிய
# திருவாளர் எஸ்.டி.சிவநாயகம்
## அவர்கள் அளித்த
# *அணிந்துரை*

இருபதாம் நூற்றாண்டில், மட்டக்களப்பு மாநிலத்தில், இலக்கியத் துறையில், மலர்ச்சியும், மறுமலர்ச்சியும் ஏற்பட்ட காலகட்டங்கள் இரண்டு உண்டு.

இலக்கிய மலர்ச்சி ஏற்பட்ட முதலாவது காலகட்டத்துள் தோன்றியவர்கள் வித்துவான் பூபாலபிள்ளை, வித்துவான் சரவணமுத்தன், சுவாமி விபுலாநந்தர், ஸ்ரீ குமாரசாமி ஐயர், பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் சபாபதி, பண்டிதர் பூபாலபிள்ளை போன்ற வித்துவ சிரோமணிகளாவர். இந்தக் காலகட்டத்தை 1900 முதல் 1940 ஆம் ஆண்டு வரையுள்ள நாற்பது ஆண்டுக்காலம் எனக் கொள்ளலாம்.

இதைத் தொடர்ந்து இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட்ட இரண்டாவது காலகட்டம் 1940 முதல் 1960 வரையுள்ள இருபது ஆண்டுக்காலம் எனக் கொள்ளலாம். இந்த மறுமலர்ச்சிக்காலத்தில் தான் 'சுத்தானந்தர் கழகம்' என்ற பெயரில் மட்டக்களப்பில் ஓர் இலக்கிய அமைப்புத் தோன்றி இலக்கியத்துறையில் பேச்சாளர்களையும், எழுத்தாளர்களையும் தோற்றுவித்தது. இலக்கியப் பணியாளர்களைச் சிறப்பித்தது. சாதாரண மக்களிடையே இலக்கிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த மறுமலர்ச்சிக் காலகட்டத்துள் பல இளைஞர்கள் தமிழ்மொழி, இசை, இலக்கியம், சமயம், ஓவியம், நாடகம், எழுத்து என்று பல்வேறு துறைகளில் புகுந்து பின்னர் நிறைவான பரிணமிப்பைப் பெற்றார்கள்.

இந்த மறுமலர்ச்சிக் காலத்துள் தோன்றியவர்களுள் மகாவித்துவான் பண்டிதர் வி.சீ. கந்தையாவும் ஒருவர். கல்வியிலும், சமயத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் இவர் ஈடுபாடு கொண்டு பல பட்டங்களைப் பெற்றுத் துறைதோய்ந்த அறிஞர்களுள் ஒருவராகத் தம்மை ஆக்கிக் கொண்டார்.

திரு.கந்தையா அவர்கள் கல்வி பயின்ற காலத்திலிருந்தே என் நண்பராகவும் விளங்கிய காரணத்தால் இவருடைய படிப்படியான வளர்ச்சியையும், இவர்பால் அமைந்த திறமைகளையும் நான் நிதர்சனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியக்கூடிய வாய்ப்பைப் பெற்றவனானேன்.

பண்டிதர் வி.சீ. கந்தையா என்று சகலராலும் அன்போடு அழைக்கப் பட்டுவரும் இவர் அன்பும் பண்பும், பழகுதற்கு இனிமையும் உடைய வராவார். எழுத்தாற்றலைப்போலவே பேச்சாற்றலும் உடையவர் இவர். இவருடைய மனைவியார் பண்டிதை திருமதி. கங்கேஸ்வரி. கந்தையா வும், தமது கணவரைப் போலவே பேச்சாற்றல் உடையவராவார். சமயச் சொற்பொழிவுகளில் மட்டக்களப்பில் அம்மையார் ஈடும் இணையும் அற்றவராக விளங்கினார்.

''மட்டக்களப்புத் தமிழகம்'', ''கண்ணகி வழக்குரை'' போன்ற பல நூல்களின் ஆசிரியரான பண்டிதர் கந்தையா ஏற்கனவே ''மட்டக்களப்புச் சைவக்கோவில்கள்-1'' என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதியிருக்கிறார். இது பிரதேச அபிவிருத்தி அமைச்சின் இந்து சமயத் திணைக்கள வெளியீடாக வந்திருக்கிறது.

அதே தொடரில் இந்நூல் ''மட்டக்களப்புச் சைவக்கோவில்கள்-2 என்ற பெயரில் இரண்டாவது பாகமாக வெளிவருகிறது. முதல் பாகத்தில் இடம் பெறாது விடுபட்ட கோவில்களின் வரலாறுகள் இந்த நூலில் இடம்பெறுகின்றன.

மட்டக்களப்பில் உள்ள சைவக் கோவில்கள் பற்றி இரண்டு நூல்களை எழுதியதன் மூலம் பண்டிதர் கந்தையா ஒல்காப் பெரும் புகழை ஈட்டிய வராகிறார்.

பண்டிதர்கள் தமிழ் எழுதப் புறப்பட்டால், படிப்பவர்கள் அகராதி புரட்டும் காலம் ஒன்று இருந்தது.

எடுத்துக்கொண்ட பொருளை எவ்வளவு தூரம் குழப்பியடித்து, சாதாரண மக்களுக்குப் புலனாகாதவாறு சிக்கல்படுத்தி, முரடலும், நெருட லுமாக எழுதமுடியுமோ அப்படி எழுதினால் தான் தம்மைப் ''படித்த பண்டிதர்'' என்று படிப்போர் கருதுவார்கள் - இப்படி எண்ணி ஒரு காலத் தில் தமிழ்ப் பண்டிதர்கள் தமிழில் வசனநடையைக் கையாண்டுவந் தார்கள்.

பத்திரிகைத் தமிழ் என்று ஒன்று உருவானதும் பண்டித நடை என்ற அந்தச் சித்திரவதை சொல்லாமல் கொள்ளாமல் பயணம் கட்ட வேண் டியதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விஷயத்தைப் பொதுமக்களுக்குத் தெளிவாகவும், விளக்கமா கவும், புரியும்படியாகவும், தெரியும்படியாகவும் இலகு தமிழில் எடுத் துக்கூறக் கூடியவர்கள் தான் உண்மையில் படித்தவர்கள், நிறைமொழிப் பண்டிதர்கள் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

தமிழ் வசன நடையில் இப்படியான ஒரு நிலை மாற்றத்தைக் கொண்டு வந்து விட்ட பண்டிதர்களிடையே முதல் ஸ்தானத்தைப் பெற்ற வராகிறார் மகாவித்துவான் பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்கள்.

அவர் எழுதுகின்ற தமிழ் நடை தெளிந்த ஆற்றோட்டமான தமிழ் நடையாக மிளிர்கிறது. அதனால் அவர் எழுதுகின்ற நூல்களை மக்கள் அலுப்புச் சலிப்பு இன்றி, ஆயாசம் இன்றிப் படித்து இன்பம் பெற முடிகி றது.

பண்டிதர் கந்தையா எழுதி வெளியிட்ட 'மட்டக்களப்புத் தமிழகம்', 'கண்ணகி வழக்குரை' ஆகிய எந்த நூலை எடுத்துக் கொட்டாலும் அவற் றில் எல்லாம் அவருடைய கைவந்த தமிழ் நடையின் இனிமையை அனுப விக்கலாம்.

பண்டிதர் கந்தையா எழுதி வெளியிட்ட 'மட்டக்களப்புத் தமிழகம்', 'கண்ணகி வழக்குரை' ஆகிய எந்த நூலை நெடிது காலம் நின்று நிலவக் கூடிய பெற்றி வாய்ந்தது என்று நான் துணிந்து கூறுவேன்.

**எஸ்.டி. சிவநாயகம்.**

தொடர்மாடி வீடு,
பம்பலப்பிட்டி,
கொழும்பு.
25-10-91.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தரின் வாரிசுகளாக, அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழ்ப்பணி புரிந்த சிலருள் மகா வித்துவான் பண்டிதர் வி.சீ. கந்தையா (B.O.L), பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா ஆகியோர் முன்னணி வகிக்கின்றனர்.

இந்த இலக்கியத் தம்பதிகள் தமது சமய.சமூக,இலக்கியப் பணிகளினாலும் தமது ஆசிரியப்பணியினாலும் மட்டுநகர் மக்கள் மனதில் அழியா இடம் பெற்றவர்கள். திரு. கந்தையா அவர்கள் ஆசிரியராகவும் அதிபராகவும் பல மகா வித்தியாலயங்களில் பணிபுரிந்துள்ளார். திருமதி. கந்தையா அவர்கள் மட்டக்களப்பு ஆசிரியகலாசாலையின் தமிழ்த்துறைப் பேராசிரியையாகப் பல வருடங்கள் பணிபுரிந்துள்ளார்.

இவர்களது சமய இலக்கியப்பணிகளுக்காக இருவருக்கும் பல பட்டங்களும் விருதுகளும் கிடைத்துள்ளன. இவர்கள் எழுதிய நூல்களுக்கு சாகித்தியமண்டலப் பரிசுகளும் கிடைத்துள்ளன.

மகாவித்துவான் பண்டிதர் வி.சீ.கந்தையா அவர்கள் எழுதிய ''மட்டக்களப்புத் தமிழகம்'', ''கண்ணகி வழக்குரை'' ஆகிய இரு நூல்களும் பல வருட ஆராய்ச்சியின் பயனாய் உருவானவை. ஆராய்ச்சி அம்சத்தைப் பொறுத்தவரை சுவாமி விபுலாநந்தரின் ''யாழ் நூலை'' நிகர்த்தவை. இப்போதும் மட்டக்களப்பைப் பொறுத்தவரை இவையிரண்டும் முக்கியமான உசாத்துணை நூல்களாகப் பயன்படுகின்றன.

இருபது நூல்களுக்குமேல் வெளிவந்த பின்னர் தொடர்ந்து எழுதமுடியாது சுகவீனமுற்ற நிலையிலும் அவர் எழுதிய இரு நூல்கள் 'மட்டக்களப்பு சைவக்கோயில்கள் முதலாம் பாகம்'', ''மட்டக்களப்பு சைவக்கோயில்கள்'' இரண்டாம் பாகம். இவற்றுள் ''மட்டக்களப்பு சைவக்கோயில்கள் முதலாம் பாகம், ஏற்கனவே பிரதேச அபிவிருத்தி இந்துசமய கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சினால் 1983 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இரண்டாம் நூல் அதைத் தொடர்ந்து வெளிவர இருந்தபோதும் சில தவிர்க்கமுடியாத காரணங்களால் தாமதம் ஏற்பட்டு, இப்போது அவரது மனைவிமக்கள் மேற்கொண்ட முயற்சியினால் மட்டக்களப்பிலிருந்து வெளிவருகிறது. இந்நூல் வெளியீட்டு முயற்சியில் இணைந்து கொள்ளும் பேறு கிடைத்தமைக்கு இறையருளைப் போற்றி, இப்பணியில் என்னோடு இணைந்து கொண்ட திரு.த.செல்வநாயகம் (முன்னாள் அதிபர்), செல்வி தங்கேஸ்வரி கதிராமன் (கலாசார உத்தியோகத்தர்) ஆகியோரின் பங்களிப்பை ஏற்றி சைவப் பெருமக்கள் முன் இந்நூலைச் சமர்ப்பிக்கிறோம்.

''பார்வதியகம்'' — **இரா. நாகலிங்கம்**
ஆரையம்பதி, காத்தான்குடி. — (அன்புமணி)
15.10.91.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

''நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு''

- திருவள்ளுவர்.

பிறந்த அன்றே இறப்பு உண்டு எனத் தெரிந்திருந்தும் பேதை மனம் வேதனை உறுகின்றது. ''கணவன் மனைவி இவர் காணில் உயிர் உடம் பாம், கணவனிறந்தால் மனைவி கட்டைப்பிணம்'' நடைப்பிணமாக வாழ் கின்ற எனக்கு உயிரளிக்க ஒரு பணியை விட்டுச் சென்றுள்ளார் அமரரான எனது கணவர் பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்கள். இவர் கடந்த 12-6-90ல் திடீரெனச் சிவபதமடைந்மை யாவரும் அறிந்ததே.

இவர் எழுதிய 13 ஆவது நூல் மட்டக்களப்புச் சைவக் கோவில்கள் 1ம் பாகம், பிரதேச அபிவிருத்தி தமிழ்மொழி அமுலாக்கல் இந்து சமயம், இந்து கலாசார முன்னாள் கௌரவ அமைச்சர் செல்லையா இராசதுரை அவர்கள் அரசாங்க நிதி மூலம் வெளிவரச் செய்தது ஆகும். இவ்வமைச் சருடைய பாராட்டோடுகூடிய தூண்டுதலால், மட்டக்களப்பு மீதிச் சைவக் கோயில்களை 2ம் பாகமாக எழுத கோயில்களைப்பற்றிய வரலாறுகளைச் சேகரிக்கலானார் இந்நூலாசிரியர். 1ம் பாகம் போல் முப்பதிற்குக் குறை யாத கோயில்களைப்பற்றியாவது எழுத வேண்டுமென ஆவலோடும் தொழிற்பட்ட நூலாசிரியரை நோய்வந்தணுகிற்று. நோய் நீக்கத்துக்கு வைத்தியத்திற்கெனத் தமது மக்களின் அழைப்பிற்கிணங்கி அமெரிக்கா சென்றார். அந்த இயலாத நிலையிலும் தாம் சேகரித்துள்ள கோவில் வரலாறுகள் நூலாக வெளிவர வேண்டுமென்று விரும்பினார். சேகரித்தவற்றையெல்லாம் அமெரிக்கா போகும் போதும் தம்முடன் கொண்டு சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவி லிருந்து, மேலும் கோவிற் குறிப்புகள் தருவதாக வாக்களித்த மட்டக்க ளப்புப் பெரியார்களோடும் அவற்றைக் கேட்டுத் தொடர்பு கொண்டார். நாட்டுச் சூழ்நிலையாலும் காலத்தின் தடையாலும் அவை கிடைக்கப் பெறவில்லை.

ஆயினும் தாம் சேகரித்த வரலாறுகளை (கட்டுரையாக்கியது) யும், மனமுவந்து தந்த நால்வர் பெருமக்களின் அணிந்துரைகளையும், தாம் எழுதிய நூன்முகம், பொது என்ற இரு கட்டுரைகளுடன் சேர்த்து, தட்டச்சு, கையெழுத்துப் பிரதிகளாலமைந்த புத்தக உருவத்தில் கட்டி எடுத்தார். அதனைக் கொழும்பில் வசிக்கும் எமது மகன் முறையினரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. குணரத்தினம் - நாகராசா என்பவர் மூலம் கௌரவ அமைச்சரிடம் நேரில் கையளிப்பித்தார். அவருடைய காலத்தில் இது நிறைவேற இறைவன் திருவுளம் வேறாக இருந்ததுபோலும்! பின்னர் அமைச்சரும், அமைச்சுக் காரியாலயமும் இடம்மாறிற்று. ஆனாலும், ''புதிய கௌரவ அமைச்சரிடம் தானே நேரில் சென்று இந்த நூல் வெளிவர உதவி கேட்பேன்'' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருந்தார். ஆனால் பிரயாணம் பண்ணி மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு வரக்கூடிய உடற்சுகமில்லாத பெருங்குறையால் எதுவும் செய்ய இயலாமற் போயிற்று. இந்தப் புத்தகம் சிறிய அளவிலாவது வெளிவந்தால், இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பிலுள்ள மீதிக் கோயில்களைப்பற்றி எழுதி வெளியிட ஏனையோர்க்கு ஊக்கமுண்டாக்கியவனாவேன்'' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருந்தார். மட்டக்களப்புச்சைவக் கோவில்கள் - 2 ம் பாகம் வெளிவருவது தனக்குப் பெருமைக்காகவல்ல, தொடர்ந்து நமது நாட்டுக் கோயில் வரலாறுகள் அனைத்தும் வெளிவர மட்டக்களப்பிலுள்ள ஏனையோருக்கு ஊக்கமுண்டாக வழிவகுக்கும் என்ற நாட்டுப்பற்றே காரணமாகக் கொண்டிருந்தார் என்பது நன்கு விளங்கிற்று. ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தனவே'', என்பது ஆன்றோர் வாக்கு. இந்நிலையில் நூல்வெளிவரும் என்ற பெரு நம்பிக்கையுடன் அமரரான தந்தையின் அபிலாசையினைச் செயலுருவாக்கித் தம்கடன் தீர்க்க முன்வந்தவர்கள் அன்புச் செல்வங்களான சிவகுமாரன், இளங்கோவன், மணிவண்ணன், அருள்மொழி ஆகியோராவர். அவர்களின் உதவியுடன் வெளிவரும் இக்கட்டுரைகள், நூலுருப்பெற வழிகோலியவர்கள் நூலாசிரியரின் அன்பிற்குரிய மாணாக்கரான இளைப்பாறிய அதிபர் திரு.த. செல்வநாயகம், மட்டக்களப்பு கலாசாரப் பேரவையைச் சேர்ந்த திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி), செல்வி க. தங்கேஸ்வரி என்போர். இவர்களனைவருக்கும் எனது நன்றி.

இந்நூலுக்கு அட்டைப்படம் வரைந்துதவிய ''ஓவியச் செல்வன்'' K.S. பவான், அழகாக அச்சிட்டு உதவிய புனித வளனார் கத்தோலிக்க அச்சக முகாமையாளர், ஊழியர்களுக்கும் எனது நன்றி.

**கங்கேஸ்வரி கந்தையா**

'கூடல்'
15, மேல்மாடித் தெரு,
மட்டக்களப்பு,
11-12-1991.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூன்முகம்

## *மட்டக்களப்பு சைவக் கோவில்கள் 2*

மட்டக்களப்பு என்பது தெற்கு குமுக்கன் ஆறு தொடக்கம் வடக்கு வெருகல் ஆறு வரைக்கும் பரந்து நீண்டு கிடக்கும் பெரும் பகுதியைக் குறிப்பது. மட்டக்களப்புச் சைவக்கோவில்கள் பாகம் ஒன்று என்னும் நூலை யான் எழுதும்போது குறிப்பிட்டபடி இன்றைய அம்பாரை, மட்டக் களப்பு ஆகிய மாவட்டங்கள் இரண்டையும் குறிக்கும் பெரும் பகுதியே இது என்று குறிப்பிட்டுள்ளேன்.

இப்பகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான கோவில்களில் சிலவற்றைப் பற்றி முன்னர் எழுதியுள்ளேன். மிகுதியில் சிலவற்றைப் பற்றி இங்கு எழுதுகின்றேன். ஆயினும், இக்கோயில்களின் அமைப்பு, நிர்வாகம், ஒழுங்குமுறை முதலியன யாவும் ஒரே முறையாகவே இருப்பதை அறிகின்றோம். இதில் முக்கியமாகக் குறிப்பிடக்கூடியது என்னவென்றால், அன்பர்களது பக்தியை வளர்ப்பதே ஆலயங்களின் அடிப்படைக் கொள்கையாக இருந்திருக்கிறது. பக்தி என்பது சாதாரணமாக வணங்கு வதால் உண்டாவதாக இருக்கலாம். ஆயின், அது வளர்வதற்கும், உள்ளத் தில் இடைவிடாது ஊன்றி நிற்பதற்கும் அடிப்படைக் காரணங்களாகச் சிலவுள்ளன. அவற்றை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று அறிஞர் வகைப்படுத்தி உள்ளனர். இவைகளை வளர்ப்பதற்காக ஆலயங்கள் ஊன்றுகோலாய் இருந்திருக்கின்றன. சரியையென்பது, சிறு பிள்ளையாய் இருக்கும் போதே ஒருவரிடத்தே ஆரம்பிக்கலாம். அது பூப்பறித்தல், ஆல யங்களைக் கூட்டுதல், பெருக்குதல் முதலியனவாக அமையும். இப்போ தைய சிரமதான முறையில் இந்தப்பணி பாடசாலைகள் மூலம் பிள்ளை களிடம் வளர்க்கப்படுவதைக் கண்டு மகிழ்கின்றோம். கிரியை, யோகம், ஞானம் என்பவையும் இப்படியே தரத்திற்குத் தரம் செயல்கூடி வளர்ந்து செல்லக் காண்கிறோம்.

அவ்வாறு வளர்ந்து சென்று அவை தனிமனிதன் ஒருவனிடம்,ஞான நிலையாக வரும் போது அவன் இவ்வுலக வாழ்வை மறந்து, செயல்படு கின்றான். அவனுடைய செயல் எதுவும் சாதாரணமான மனிதனுக்கு விளங்குவதில்லை. இவ்வாறு ஞான நிலையில் மனிதன் இயங்கும் போது அவனுடைய சொல் செயல் யாவும் இவ்வுலக வாழ்வைக் கடந்து தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு கடந்து தோன்றுவதுதான் மனிதன் இன்றியமையாது வேண்டுவதாகும். அவ்வேண்டுதலுக்கு இந்நூல் அமைப்பு முழுவதும் பயன்படும் என்று கருதுகின்றேன். மட்டக்களப்புச் சைவக் கோவில்களைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்திலும் மற்றும், வெளியிடங்கள் பலவற்றிலுமுள்ள கோவில்களைப் பார்க்கிலும், நிறைய வித்தியாசம் காணப்படுகிறது. மற்றைய கோவில்கள் பலவற்றிலும் சைவ ஆகம ஒழுங்குப்படி பூசனைகள் நடைபெறும். கோவிலிற் குழுமும் பக்தர் கூட்டமும் அதற்கேற்ப நடக்கும். மட்டக்களப்புக் கோவில்கள் பலவற்றிலும் இதற்கு மாறாக சைவ ஆகம ஒழுங்கு இல்லாமல் இடத்திற்கு இடம் வித்தியாசமான ''பத்ததி'' எனப்படும் கோயில் பூசை ஒழுங்கு முறைப்படி பூசனைகள் நடைபெறும். இப்பூசனைக்காகச் சேரும் பக்தர் கூட்டமும், இதற்கேற்பவே வழிபாடு செய்யும். அவர்களிடத்தில் பெரும்பாலும், சிவாகம பக்திமுறையைக் காண்பதற்குப்பதிலாகக் கரைகடந்த பக்தி வெள்ளத்தை மாத்திரம் காணலாம். இதனால் இந்த பூசனை முறைகளிலுள்ள வேறுபாடு, பக்தி வெள்ளத்தை பக்தர்களிடம் மாற்றி அமைக்க வழிசெய்வதில்லை. எனவே, இந்தப் பூசனை முறைகளில் காணப்படும் ''பத்ததி'' முறைகளும் சிவாகம விதி முறைகளும் வேறுபாடாயினும், அவற்றின் செயற்பாடு ஒன்றாகவே தோன்றுகின்றது.

''இந்தக் கோவில்பற்றிய வரலாற்று நூலில் மட்டக்களப்புப்பற்றிய விளக்கம் மிக உந்துதலாகக் காணப்படுகின்றது'', என்று அன்பர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருந்து அன்போடு குறிப்பிட்டிருக்கிறார். இக்குறிப்பு இவ்வரலாற்று நோக்கங்களுள் ஒன்றாயினும், பக்தியை வளர்ப்பது நூலின் முதல் நோக்கமாகும். அந்நோக்கம் நிறைவேறுமேல் இந்நூலால் பயன் செய்தவனாவேன் என்று நம்புகின்றேன். அதற்கேற்பவே நூன்முகவுரையில் சில கூற விழைகின்றேன்.

இதனை எழுதத் தொடங்கும்போது பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றியும், அவரது பக்திமார்க்கத்தைப் பற்றியும் நினைவுகொண்டேன்.

'தாயே! நான் உன்னைச் சரணம் அடைகிறேன்! உடல் இன்பத்தை நான் விரும்பவில்லை! தாயே! நான் புகழை விரும்பவில்லை. அணிமா முதலான எட்டுச்சித்திகளையும் விரும்பவில்லை. எனக்கு உன்னுடைய பாத கமலங்களில் தூய பக்தியை மட்டும் கொடு. பற்றற்றதும், தூயதும், எதையும் எதிர்பாராததுமான பக்தியைக்கொடு. அன்னையே! உலகை மயக்கும் உன்னுடைய மாயையில் நான் மூழ்காமல் இருக்கும்படி செய். உன்னுடைய உலக மாயையாகிய பெண், பொன் ஆசைகளில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதும் பற்றுக் கொள்ளாமல் நானிருக்கச் செய் தாயே! உன்னையன்றி வேறு துணை எனக்கு இல்லை. நான் உன்னுடைய புகழைப் பாடாதவன், சாதனை செய்யாதவன், ஞானமில்லாதவன், பக்தி புரியாதவன். கருணை செய். உன்னுடைய பாத கமலங்களில் எனக்குப் பக்தியைக் கொடு' என்று குரு தேவர் உலக அன்னையும் பராசக்தியுமாகிய காளி அன்னையிடம் வேண்டுதல் செய்திருக்கிறார். இத்தகைய பக்திதான் மட்டக்களப்பெங்கும் பக்தர்களால் வேண்டப்பட்டதாகும்.

பக்தியோகம் என்பது இறைவனிடம் மனத்தை வைத்து அவனுடைய பெயரையும் புகழையும் பாடுவது. கலியுகத்துக்குப் பக்தியோகம் தான் சிறந்ததும் எளிய வழியுமாகும். பக்தி யோகமே இந்த யுகதர்மம், கர்ம யோகம், ஞானயோகங்களினாலும் இறைவனை அடையலாமாயினும் அவை யாவும் மிக்க கடினமானவை.

குருதேவர் கூற்றுப்படி இது நாரதீய பக்தி என்று சொல்லப்படுகின்றது. அதாவது பக்தி தவிர வேறு ஒன்றையும் வேண்டாத நன்மை. நாரதருடைய பக்திப் பாடல்களில் மகிழ்ந்த இராமர் அவர்முன் தோன்றி 'நீ என்ன விரும்புகிறாயோ அவ்வரத்தைக் கேள்; தருகிறேன்' என்றார். அதற்கு நாரதர் 'ராமா! உன்னுடைய திருப்பாத கமலங்களில் எனக்குத் தூய பக்தி என்றும் மாறாதிருத்தல் வேண்டும். அந்த ஒன்றே எனக்குப் போதுமானதாகும்.' என்று வேண்டிக்கொண்டாராம். திருத்தொண்டர் புராணம் எனப்படும் நமது பெரிய புராணத்திலும்,

''கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'' என்று சிவனடியார்களின் பெருமை பேசப்படுகின்றது. இவ்வாறான பக்தியை வளர்ப்பனவே மட்டக்களப்புச் சைவத் திருத்தலங்களும், சைவக்கோவில்களும் எனலாம்.

காளியைத் தமது தூய அன்னை என்று போற்றி வந்தவர் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர். ஆனால் காளிகோவிலை நினைக்கும் போது நம்மவர்களுக்கு ஒரு வித பயம் உள்ளத்தே தோன்றுகின்றது. இதற்கு இரு காரணங்களைச் சொல்லலாம். ஒன்று உயிர்ப்பலி கொடுத்தல்; மற்றது காளிவழிபாடு இந்து சமயத்துக்குப் புறம்பானதோ என்ற ஐயம். உயிர்ப்பலியிடல் சட்டத்தினால் இன்று தவிர்க்கப்பட்டு விட்டது. அடுத்ததாக மட்டக்களப்புக் காளி கோவில்களிலும் காளிதேவியின் காலடியில், சைவர் வணங்கும் தெய்வமான சிவன் வீழ்ந்து கிடந்து நசுக்கப்படும் தோற்றம் கொண்ட படம் காட்சியளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்த மதம் வட இந்தியாவில் பரவியுள்ளது. அங்கெல்லாம் அன்னையை காளி, துர்க்கை என்ற பெயர்களில் வழிபடுதல் பெரும்பான்மை. அங்கே காளிக்கும் சிவனுக்கும் உண்டான காதற்போரிலே சிவன் தோல்வியடைந்ததைக் குறிப்பது வேயன்றி சிவனைக் காலால் மிதிப்பது காளிதேவிக்குக் கருத்தாகாது என்பதைப் பக்தர்கள் விளங்கிக்கொள்ளல் வேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் ஒப்ப இயைந்த இப்பாடல்கள் இதனுண்மையை விளக்குவனவாம்.

தேவர்க்கெல்லாம் தேவனெனும் - மகா
தேவன் நெடுங்சாண் கிடையாக
தேவி அவள் திருவடியின் கீழ் - தன்
தேகம் வீழ்ந்து கிடக்கின்றான்''

''................................
பொன்னடிகளப் பரமசிவன் மார்பின் மீது
பொருத்தி மிக நேராக நின்று கொள்வாள்''
''என்ன இது தன் கணவன் மார்பின்மேலே
இருகாலும் ஊன்றியவா றிருக்கிறாளே!
....................................
....................................''
''என்னுடைய தாயவளின் லீலை எல்லாம்
இருக்கின்ற விதிமுறைகள் அனைத்தும் மீறும்!

திண்ணமுடன் தூய நறும் சிந்தை எய்தித்
தேவியவள் விளையாட்டை அறிவாய் நெஞ்சே.''

இத்தகைய பக்தி உடையவனை ஞானியர் பின்வருமாறு வகைப்படுத்திக் காட்டுகின்றனர்.

'பிரவர்த்தகன், சாதகன், சித்தன், சித்தசித்தன் என்று நான்கு வகையினர் இருக்கின்றனர். இப்பொழுதுதான் இறை வழிபாட்டில் ஈடுபட்டிருக்கிறவன் அவனே, பிரவர்த்தக வகுப்பைச் சேர்ந்தவன். அவன் நெற்றியில் சின்னம் அணிவான்,கழுத்தில் மாலை அணிந்துகொள்வான்; வெளி ஆசாரங்களில் ஈடுபடுவான். சாதகன் என்பவன் இன்னும் சற்று முன்னேறியவன். இவனிடம் வெளி ஆடம்பரம் குறைந்து விடும். இறைவனை அடைவதற்காக ஏங்கி நிற்பான். மனம் உருகி அவன் பெயரைச் சொல்லிச் சொல்லி அழைப்பான்; சரளமான உள்ளம் கொண்டு வழிபடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தன் என்பவன் யார் தெரியுமா? இறைவன் இருக்கிறான். அவன்தான் அனைத்தையும் செய்கிறான் என்ற திடமான அறிவு கொண்டவனாகி இறைவனைத் தரிசித்து மகிழ்கிறவனே சித்தன். சித்தசித்தன் என்பவன் இறைவனுடன் உரையாடி மகிழ்பவன். அவன் இறைக் காட்சி மட்டும் பெற்றவனல்லன். இறைவனுடன் நெருகிய உறவுகொண்டவன். சிலர் தந்தை பாவத்திலும், சிலர் தாய் பாவத்திலும், சிலர் தோழமை பாவத்திலும், வேறு சிலர் தலைவன் - தலைவி பாவத்திலும் இறைவனுடன் உறவுகொண்டு உரையாடுகின்றனர். சிலர் ஆண்டான் அடிமை பாவத்திலும் இந்நிலை உறவுகொண்டுள்ளனர்.

விறகில் நெருப்பு இருப்பது உண்மை என்று நம்புவதும், விறகினின்று நெருப்பை வெளிப்படுத்தி, சோறு சமைத்துச் சாப்பிட்டு அமைதியும் நிறைவும் அடைவது என்பதும் ஆகிய இவ்விரண்டு நிலைகளும் வேறுபட்டவை அல்லவா!

இறைவனுடைய நிலைக்கு எல்லை என்பதில்லை. ஒரு நிலை பெரியதென்றால் மற்ற நிலைகள் அதைவிடப் பெரியதும், இன்னும் அதை விடப் பெரியதுமாக உள்ளன.

மனம், வாக்கு, காயம் மூன்றாலும் இறைவனைத் துதிப்பது தான் பக்தி. காயத்தால் அதாவது உடம்பால் பக்தி செய்தல் என்பது கைகளால் இறைவனைப் பூஜிப்பது; சேவை செய்வது; கால்களால் அவன் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்குச் செல்வது; காதுகளால் அவனுடைய பெருமைகளைக் கேட்பது; கண்களால் அவன் எழுந்தருளியிருக்கும் திருமேனிகளைக் காண்பது என்பனவாகும். மனத்தால் பக்தி செய்தல் என்பது, எப்போதும் இறைவனைக் குறித்துச் சிந்தனை செய்வது, அவனது திருவிளையாடல்களைத் திரும்பத்திரும்ப நினைவுபடுத்திக் கொள்வது. வாக்கு மூலம் பக்தி செய்தல் என்பது, இறைவனைக் குறித்துப் பிரார்த்தனைகளைச் செய்வது, அவருடைய புகழைப் பாடுவது முதலியன. கலியுகத்திற்கு நாரதீய பக்தி, அதாவது எப்பொழுதும் இறைவனுடைய பெயர் புகழ் பாடுவதே சிறந்ததாகும்.

இவைகளை அப்பர் சுவாமிகளுடைய திரு அங்கமாலையில் அழகுறக் காண்கின்றோம்:-

தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேடுந் தலைவனை (தலையே)
கண்காள் காண்மின்களோ கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டோள் வீசி நின்றாடும் பிரான் தன்னை (கண்காள்)
செவிகாள் கேண்மின்களோ சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதும் (செவிகாள்)
மூக்கே நீ முரலாய் முதுகாடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை (மூக்கே)
வாயே வாழ்த்து கண்டாய் மத யானை உரிபோர்த்து
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான் தன்னை (வாயே)
நெஞ்சே நீ நினையாய் நிமிர்புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை (நெஞ்சே)
கைகாள் கூப்பித்தொழீர் கடிமாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனை (கைகாள்)
கால்களாற் பயனென் கறைக் கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழா (கால்களால்)
ஆக்கையாற் பயனென் அரன்கோயில் வலம் வந்து
பூக் கையாலட்டிப் போற்றி என்னாத இவ் (ஆக்கையால்)
உற்றார் ஆருளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு (உற்றார்)

திருத்தலங்களுக்குச் சென்று பக்திக் கனிவினால் வழி பாடாற்றுகின்றோம். சிறிதும் தளர்ச்சி அடையாத பக்தி நம்மை ஆட்கொள்ளுமேயானால் அந்தப் பக்தியை ராகபக்தி என்பர் அநுபவசாலிகள். 'ராகபக்தி அதாவது, இறைவனிடம் ஆழ்ந்த அன்பு உண்டானால் இறைவனை அடையமுடியும். வைதிக பக்தி அதாவது, சாதாரண பக்தி ஒருவனிடம் தோன்றுவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்குமோ, அவ்வளவு நேரமே அது மறைவதற்கும் பிடிக்கும். எவ்வளவு விரைவாகத் தோன்றுகிறதோ அவ்வளவு விரைவாக மறைந்துவிடும். இந்தப் பக்தியை உடையவர்கள், 'இவ்வளவு ஜபம் செய்வேன், இவ்வளவு தியானம் செய்வேன், இவ்வளவு யாகம், யக்ஞம், ஹோமம் செய்வேன், பூஜை செய்யும்போது இந்த மந்திரங்களையெல்லாம் உச்சரிப்பேன்,' என்று கணித்துக் கொண்டு செய்வார்கள். இதுதான் வைதிகபக்தி.'எவ்வளவு முறை ஒருநேர உணவு சாப்பிட்டிருக்கிறேன்? எத்தனைமுறை பூஜைகள் செய்திருக்கிறேன்? அப்படியிருந்தும் ஒரு பயனும் ஏற்படவில்லையே' என்று பலர் சொல்வதைக் கேட்டதில்லையா?'

'யாரிடம் ராகபக்தி ஏற்பட்டுள்ளதோ அவர்கள் ஒரு பொழுதும் 'எவ்வளவு நாட்கள் ஒருநேர உணவைச் சாப்பிட்டிருக்கிறோம்? எந்தப் பயனும் ஏற்படவில்லையே' என்று கூறமாட்டார்கள். புதிதாகப் பயிர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலைச் செய்பவர்கள் பூமியில் விளைச்சல் கிடைக்காவிட்டால் பயிர் செய்வதைவிட்டுவிடுவார்கள். ஆனால் பரம்பரை விவசாயி விளைச்சல் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் பயிர்த் தொழிலைத் தொடர்ந்து செய்வான். அவனுடைய தந்தை, பாட்டனார் எல்லோரும் பரம்பரை பரம்பரையாகப் பயிர்த் தொழில் செய்துவந்தவர்கள். பயிர்த் தொழில் செய்தே வாழவேண்டும் என்று உணர்ந்தவர்கள். யாரிடம் ராக பக்தி இருக்கிறதோ அவர்களிடம் தான் உண்மையான இறை பக்தி இருக்க முடியும். இறைவன் இப்படிப்பட்ட பக்தர்களுடைய பொறுப்பைத்தானே முன் வந்து ஏற்றுக் கொள்கிறான். மருத்துவ மனையில் நாம் நம் பெயரைப் பதிவு செய்து கொண்டால், நன்றாகக் குணமடைந்தாலொழிய மருத்துவர் நம்மை வீட்டுக்கு அனுப்பமாட்டார் அல்லவா!'

இத்தகைய பக்தி மார்க்கமே மட்டக்களப்புச் சைவத்திருத்தலங்கள் எல்லாவற்றிலும் பரந்து வழிவது. இந்நூல் எழுதும்போது யான் என்னும் சில திருத்தலங்களைப்பற்றியும் எழுத நினைந்தேன். அவைகளுட் சில:- நிந்தவூருக்குப் பக்கத்தில் வயல் மத்தியிலுள்ள மடத்தடி மீனாட்சியம்மன், சம்மாந்துறை பத்திரகாளி அம்மன், கல்முனை அம்பலத்தடிப் பிள்ளையார், பெரியகல்லாறு சித்திவிநாயகர், புளியந்தீவில் திமிலதீவு கிருஷ்ணர் முதலான கோவில்களுள்ள திருத்தலங்களாகும். யான் சுகவீன நிலையில் அமெரிக்கா வந்திருந்ததாலும், அக்காலம் மட்டக்களப்புப் பகுதியிலேற் பட்ட குழப்ப நிலைகளாலும், என்னுடன் தொடர்பு கொண்டவர்களிடமிருந்து மேற்படி கோவில்களைப் பற்றி அறிதல் இயலாது போயிற்று. இன்னும் நாகஞ்சோலைப் பிள்ளையார் கோவில், வீரமுனைப் பிள்ளையார் கோவில் என்பவற்றைப்பற்றி விரிவாக எழுத நினைத்தேன். அதுவும் மேற்குறிப்பிட்ட காரணங்களாற்போலும் என்னால் நினைத்தவாறு செய்ய முடியவில்லை.

மேலும், மட்டக்களப்பின் வட பகுதியிலுள்ள திருத்தலங்களைப்பற்றி இந்நூலில் சேர்க்கமுடியவில்லை. அவைகளையும், மற்றும் மேலே குறிப்பிட்ட விடுபட்ட தலங்களையும் பற்றி அடுத்துவரும் பாகங்களில் வெளியிடலாமென்று நினைக்கின்றேன். திருவருள் துணை நிற்குமாக.

இந்நூலுக்கு வேண்டிய குறிப்புரைகளையும், கட்டுரைகளையும் தந்து தவினோர் பெயர்கள் மட்டக்களப்பு மக்களால் நன்றி உணர்ச்சியுடன் என்றும் மறவாத் தன்மையனவாகும். அவர்கள்:- மட்டக்களப்பு உயர்திரு. சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்கள், திருவாளர்கள்: கோட்டமுனை ஏ.பாக்கியமூர்த்தி ஆசிரியர், காலஞ்சென்ற மண்டூர் மு.அருணாசலம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டிபாளையம் அ. அரசரத்தினம் ஆசிரியர், ஆரையம்பதி செல்வி. திருமலர் சிவசிதம்பரப்பிள்ளை ஆசிரியர், பழுகாமம் க.சீனித்தம்பி ஆசிரியர், காரைதீவு வே. தம்பிராசா ஆசிரியர், ஆரைப்பற்றை த. சந்திரசேகரம் பிள்ளை ஆசிரியர், கல்லடி சிவானந்த வித்தியாலய அதிபர் க.தியாகராசா, மண்டூர் மு. தம்பிராசா வண்ணக்கர், மட்டக்களப்பு திருமதி.சுபாஷினி சக்கரவர்த்தி ஆசிரியர், மண்டூர் மகாவித்தியாலய அதிபர் க. தில்லை நாதன், தம்பிலுவில் (பழுகாமம்) வே. குமாரசாமி R.D.O, தம்பிலுவில் வன்னியசிங்கம் ஆசிரியர், களுவாஞ்சிக்குடி கோ. பாக்கியராசா, களுவாஞ்சிக்குடி திருமதி. மகேஸ்வரி தருமரத்தினம் என்போராவர்.

செய்திகளைத் திருத்தம் செய்து கொடுத்து கட்டுரைகளைப் பிரதி செய்து, தட்டச்சுக்குக் கொடுப்பதற்கு எனது பேத்தி செல்வி. கீதாஞ்சலி கனகநாயகம் மட்டக்களப்பில் இந்நூல் வேலைகள் தொடங்கப் பெற்ற காலத்திலிருந்து உதவி செய்து தந்தார்கள். அவருக்கு மிகுதியும் நான் நன்றியுடையேன். அவ்வாறே அமெரிக்காவுக்கு வரப்பெற்ற மீதிக் கட்டுரைகளையெல்லாம் எனது மனைவியும் மக்களுமாகப் பிரதி செய்து தந்தனர். என்பதும் குறிப்பிட வேண்டியதொன்றாகும். சுகநிலை பாதிக்கப் பெற்றதனால் வைத்திய நோக்கினோடு அமெரிக்க நாட்டுக்கு இந்நிலையில் வரலானேன். இந்த நூல்வேலை இடைநில்லாது வெளி வரவேண்டும் என்றும், எனது சுகத்துக்காக இறைவனை வேண்டியும், மட்டக்களப்பிலுள்ள பல அன்பர்கள் கடிதங்கள் எழுதலாயினர். எனது இயலாமையினூடு நானடைந்த துன்பங்களோ மிகப் பலவாகும். அவைகளை ஒருவாறு நீக்கி இந்நூல் நிறைவினை இவ்வளவிலாவது தந்த இறைவனுக்கு எனது மனமார்ந்த பிரார்த்தனைகள்.

அமெரிக்காவிலிருந்த காலத்தில், தானும் சுகவீனமாக இருந்தும், பலவற்றை எனக்குத் தனது சுகநிலை கண்டு பிரதி செய்துகொடுத்த எனது மனைவி திருமதி. கங்கேஸ்வரி - கந்தையா அவர்கள் இவ்வாறு பிரதி செய்து கொடுத்ததல்லாது இந்நூலுக்குப் பலவழிகளிலும் துணைநின்றுள்ளமையை மட்டக்களப்பு நாடு நன்கறியும். அவர்களுக்கு நாடு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது. யான் இங்கிருந்தகாலத்து எனது சார்பில் மட்டக்களப்பிலிருந்து செயற்பட்டவர் எனது தங்கை திருமதி. பரமேஸ்வரி - சிதம்பரநாதன் அவர்கள். கொழும்பிலிருந்து செயற்பட்டவர் எனது மகன் முறையினரான திருவாளர் குணரத்தினம் நாகராசா அவர்கள். இவ்விருவருக்கும் யான் எவ்வாறு கைமாறளிப்பேன் என்று சொல்ல முடியாதிருக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூற்படிகள் தயாரானதும் அவற்றைத் தட்டச்சிற்சேர்த்து அச்சிற்குக் கொடுக்கத்தக்க நிலையில் ஆயத்தம் செய்து தந்தவர் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த திருவாளர் கோ. பாக்கியராசா அவர்களேயாவர். இன்னார் அத்தோடு அவ்வூர் வீரபத்திரன் கோவில், ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் ஆகிய இரண்டுக்கும் வேண்டிய குறிப்புகளைச் சேகரித்துத் தருதற்கும் தாமே முன் வந்து அவற்றையும் செய்து தந்தார். இவருடைய இந்த உதவிகட்கு யான் என்றும் நன்றிக்கடமை பூண்டுள்ளேன்.

இந்நூல் நிறைவுறல் கண்டு நூற்குச் சிறப்புரை தருதற்கு மனம் கோணாது முன்வந்த பெரியார்கள் உயர்திரு. சுவாமி. ஜீவனானந்தாஜீ அவர்களும், சிவானந்த வித்தியாலயத்தில் மதிப்புக்குரிய ஒரு அதிபராயிருந்து இளைப்பாறியுள்ள திருவாளர் க.கணபதிப்பிள்ளை அவர்களும், தினபதி சிந்தாமணி இதழ்களின் பிரதம ஆசிரியரான திருவாளர் எஸ்.டி.சிவநாயகம் அவர்களும் ஆவர். இவ்களுக்கு யான் பெரிதும் நன்றி பாராட்டுதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

மட்டக்களப்பில் பக்தியை வளர்க்க எனவும், தேசத்தின் பண்டைய வழக்கங்கள் பேணப்படுவதற்கெனவும் முக்கிய நோக்கமாகக் கொண்டு எழுதலானேன். இதில் பிழைகள் நேர்ந்திருந்தால், அன்பர்கள் அவற்றைப் பொறுக்க வேண்டுகின்றேன். எனது குறிக்கோள் நற்பயன் தருமேல் மக்களிடமிருந்து யானும் பரிசில் பெற்றவனாவேன்.

வணக்கம்

**வி. சீ. கந்தையா**

'கூடல்'
15, மாடி வீதி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் சைவக் கோவில்கள் - 2

## *1 ஆவது இயல் : அறிமுகம்*

## *பொது*

உலகில் வழங்கும் தொன்மையான சமயங்களுள் முதல் வரிசையில் வைத்து எண்ணத்தக்கது சைவம். சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் ஆதலின் சைவம் என்பது காரணப் பெயர்.கி.மு. 5000 ஆண்டுகட்கு முன்னரே பாரத நாட்டில் சிவலிங்க வழிபாடு நிலைபெற்றி ருந்ததென்பது சிந்து நதிக் கரையின் அகழ்வாராய்ச்சியால் நன்கு புலனாகின்றது. தொல் பழங்காலத்திலேயே சிவலிங்க வழிபாடு உலக முழுவதும் பரவி இருந்ததென்பதற்கு மேலைநாடுகளிலும் கீழைநாடுகளி லும் ஆங்காங்கே அருகிக் காணப்படுகின்ற சிவலிங்கத் திருவுருவங்களே சான்றாக உள்ளன.

சைவசமயம் அநாதியானதென்பதும், சர்வசங்கார காலத்தில் உலகம் மீண்டும் படைக்கப்படும் என்றும், ஆன்மாக்களது வினைகட்கேற்ப இறை வனருளால் இது தோற்றுவிக்கப்படும் எனவும் அறிகிறோம். இதனால் அவர்கள் சிவபெருமானின் அருள் மூர்த்தங்கள் பலவற்றை வழிபட்டார் கள் என்பதும் தெளிவாம். இத்தகைய அருள் மூர்த்தங்கள் சிவலிங்கம், விநாயகர், முருகன், அம்மன் வடிவங்களென்று பக்தி செய்வோர் தன்மைக்கேற்பச் சொல்லப்படுகின்றன.

நான் முன்னர் நூன்முகத்தில் கூறியுள்ளதற்கமையவே மட்டக்களப் பில் ஆசாரத்தோடு கூடிய, கட்டுப்பாடற்றவகையில் தமது இட்ட தெய்வத்தைப் பூசித்துப் பக்தி வெள்ளம் கரை புரண்டோடும் வண்ணம் மக்கள் வேண்டுதல் செய்து ஆன்மீக நலன்களைப் பெறுகின்றனர். இவர்களனைவர்க்கும் சிவபெருமானது திருவருட் பொலிவே கிடைக் கின்றது.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'

'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்'

என்பவற்றை உற்றுநோக்குக.

ஆகம விதிப்படி கட்டப் பெற்ற கோயில்களுடைய அமைப்பு முறை வேறு என்பது யாவரும் அறிந்ததே, அதில் ஒவ்வொரு அமைப்புக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு உண்மைப்பொருள் விளக்கம் உண்டு. அவற்றை நன்கு புரிந்து கொண்ட சிந்தனையோடே இக்கோயில்களிற் சென்று கும்பிடவேண்டிய அவசியத்தை மக்கள் தெரிதல் பெரும்பயன் தருவது என்ற காரணத்தால் சிவாகம விதிப்படி கட்டப்பெற்றுள்ள கோயில் அமைப்புக்களின் அர்த் தங்களையும் எழுதுவது என் கடமை என உணர்ந்து சில கூறலானேன். விரிவஞ்சிச் சுருக்கமாகச் சில கூறியிருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டு கிறேன்,

எல்லா நிலத்திற்கும் மேலாய் உயர்ந்து தோன்றும் மலை நிலத்தில் தோன்றிய சேயோன் வழிபாட்டின் வளர்ச்சியே சிவ வழிபாடென்பதும், முல்லை நிலத்திருமால் வழிபாட்டோடும், சிவ வழிபாட்டோடும் தொடர் புறும் நிலையில் அமைந்ததே கொற்றவை வழிபாடென்பதும் நானிலத்தில் உருப்பெற்று வளர்ந்த தெய்வ வழிபாடுகளின் திரட்சியாய் வளர்ந்து உருவாகிய சமய தத்துவமே சைவம் என்பதும், தமிழக வழிபாட்டு முறை களையும் தமிழகத்தொன் நூல்களையும் இடைக்காலத்தில் தமிழகத்தில் தோன்றிய தெய்வப் பனுவல்களையும் ஒப்பிட்டு ஆராய்வார்க்கு இனிது விளங்கும்

'சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு'

என வரும் திருக்குறளிற் செம்பொருள் எனப்பெற்றது சிவபரம் பொருளே என்னும் உண்மையினை.

'செம்பொருட்டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே'

என வரும் திருவாசகத் தொடர் கொண்டும் உணர்ந்து கொள்ளலாம். தாழ்சடைப் பொலிந்த அருந்தவத்தோன், ஆலமர் செல்வன், முக்கட் செல் வன், காரியுண்டிக்கடவுள், மழுவாள் நெடியோன், நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன், காலக்கடவுள் முதலாகப் பல்வேறு சிறப்புப் பெயர் களாற் சங்கவிலக்கியம் சிவபெருமானைப் போற்றிப் பரவுகின்றது. 'பிற வாயாக்கைப் பெரியோன் கோயிலும்' என இளங்கோவடிகளும், 'நுதல் விழி நாட்டத்து இறையோன்' என மணிமேகலை ஆசிரியரும், சிவபெரு மான் வழிபாட்டினைத் தமிழகத் தெய்வவழிபாடுகள் எல்லாவற்றிலும் முதன்மையுடையதாகச் சிறந்து விளங்கியதென்று கூறியிருப்பது தமிழக வரலாறு, இலக்கிய வரலாறு, தமிழகக்கோயில் வரலாறு முதலியவற்றை ஆராய்வார்க்கு இனிது விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலங்கடந்த வழிபாட்டளவில் பொதுமையமைப்பில் உருவாகிய சிவ வழிபாடு, முப்பத்தாறு தத்துவங்களையும் இணைத்து நோக்கும் நிலையில் சைவ சித்தாந்த சமயமாக வளர்ந்து நிறைவு பெற்ற காலம் திருமூலர் காலம் எனக் கொள்ளலாம். பாரத நாட்டுச் சமயங்களுள் இருபத்தைந்து தத்துவப் பகுப்பு சாங்கிய தத்துவத்தில் அமைந்துள்ளமை பலரும் அறிந்த உண்மையாகும். இருபத்தைந்திலும் அடங்காது அவற்றின் மேலுள்ள தத்துவவுண்மைகள் சில,

''காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினை இயபூதம்''

என வரும் தொல்காப்பிய நூற்பாவில் இடம் பெற்றிருத்தலைக் காண லாம். இவை எல்லாவற்றையும் உளங்கொண்டு வரையறுக்கப் பெற்ற தமிழகத்துத் தத்துவக் கொள்கையே சைவ சித்தாந்தமாகும். தத்துவ இலக் கணமாகிய இக்கொள்கை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளிற் புலனாக வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர்கள் திருத்தொண்டத்தொகையிற் போற்றப் பெறும் நாயன்மார்கள் ஆவார்கள். அவர்களில் திருமூலரும். காரைக்கால் அம்மையாரும். தேவார ஆசிரியர் மூவரும், மாணிக்கவாசகரும், திருமுறையாசிரியர்களும் அருளிச் செய்த தோத்திரப்பனுவல்கள், சைவர்களால் வழிபடப்பெறும் சிவபரம் பொரு ளின் இயல்பினை விரித்துரைக்கும் திருவருளிலக்கியமாகத் திகழ்கின்றன. சைவ சமயச்சான்றோர்களின் வரலாறும் சைவத் திருமுறைகளின் பொருள்நலனும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளின் இயல்பும் சைவ சமய தத்துவவுண்மைகளும், விளக்கும் வரலாற்றுக் காப்பியமாகச் சேக்கிழார் நாயனார் அருளியது திருத்தொண் டர் புராணமாகும்.

தமிழகச் சைவ சித்தாந்த நுட்பங்களை விளக்கும் நிலையில் வட மொழியில் இயற்றப் பெற்ற சிவாகமங்களும், உபநிடத நூல்களும் ஒருங்கே துணைபுரிதலும், எல்லாவற்றிற்கும் முதன்மையாக வேதத்தினை உடன்பட்டு வேதத் தொடர்கள் சிலவற்றுக்குச் சித்தாந்த நோக்கில் பொருள் விரித்துரைத்தலும், குமரி முதல் இமயம்வரை நின்று நிலவும் தத்துவக்கொள்கை சைவசித்தாந்தமே என்ற உண்மையை வற்புறுத்தல் காணலாம்.

ஞாயிறு, திங்கள், ஆன்மா, நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பேருருவினனாகவும், உயிரும் உடம்பும் பொது உலகுயிர்களின் உள்ளும் புறம்பும் வியாபித்துள்ள அவற்றைப் பிணித்த நின்று உலகுயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை இயக்கி நிற்பவனும், கலைகளே வடிவமாகத் திகழ்பவனும், தன்னை யன்றித் தனக்குரிய சார்பாக (ஆதாரமாகப்) பிறிதொன்றின் எல்லாப் பொருட்கும் தானே சார்பாக விளங்குபவனும் ஆகிய அவ்வியல்பினை யுடையவனே சைவர்களாற் போற்றப்பெறும் ஈசனாகிய இறைவன் என்பது தான் பண்டையோரின் முடிபு. இதன்கண் சிவபெருமான் உலகமே உருவமாக அட்டமூர்த்தியாய் விளங்கும் பருமைநிலையும், உயிர்க்குயி ராய்ப் பொருள்தோறும் இரண்டறக் கலந்து உலகுயிர்களைத் தொழிற் படுத்தும் நுண்மை நிலையும், உயிர்களின் பொருட்டு உலகு உடல் கருவி ஆகிய நுகர் பொருள்களைப் படைத்துக் காத்தலும், கறங்கோலைபோலப் பிறப்புக்களிற் பட்டுச் சுழன்றுகளைத்து உயிர்த் தொகுதிகளின் களைப்பு நீங்குதற்பொருட்டு அழித்தலும் ஆகிய தொழில்களைச் செய்து அவ்வு யிர்களின் துயரகற்றி இன்பம் நல்கும் அருட்செயலும், தனக்குச் சார்பொன்றில்லாத இறைவனே உலகுயிர்கட்குச் சார்பாதலும் ஆகிய உண்மைகள் விளக்கப் பெற்றுள்ளமையும் பழந்தமிழ் இலக்கியங்களிற் காணலாம்.

சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாத கடவுளை உருவநிலையில் வைத்தன்றி அருவநிலையில் வழிபடுதல் என்பது எல்லா மக்களுக்கும் இயலாததாகும். பிறப்புக்களுடைய உயிர்த் தொகுதியைப் போலன்றி எல்லாப் பொருள்களோடும் கலந்து நின்று அவற்றுள் ஒன்றினுந் தோய்வின்றி அப்பாற்பட்டு விளங்கும் முழுமுதற் பொருளை உலகியற் பொருள்களுக்குரிய உருவம்,அருவம், அருவுருவம் என்னும் முக்கூறுகளி லும் அடக்குதல் இயலாது. எனவே வழிபடுவோர் தமது பக்குவ நிலைக்கேற்ப இம்மூவகைத் திருவுருவங்களில் ஒன்றை வழிபடுந் திருமே னியாகக் கொள்ளுதல் இயல்பே. அண்டத்தின் அப்புறத்தும் உயிர்களின் அகத்தும் ஒளியுருவில் திகழும் இறைவனை உயிர்கள் தம் உள்ளத்து அகத்தும் புறத்தும் வைத்துப் பூசிக்கும் முறையில் அமைந்தது, உருவமும் அருவமுங் கலந்த சிவலிங்கத் திருமேனியாகும். சிவலிங்கத்தின் பீடம் உயிர்களின் நெஞ்சத்தாமரையாகிய உருவநிலையினையும், பீடத்தின் மேல் ஒளிப்பிழம்பாகச் சுடர் விட்டு விளங்கும்பாணம் அருவ நிலையை யும் குறித்தலால், இதனை அருவுருவத் திருமேனி என வழங்தல் மரபாகும்.

''ஒருவனே தேவன்'' என்றவாறு ஒவ்வொன்றிலுந் தோய்வுற விளங்கும் தனிமுதற் பொருளாய்த் திகழும் இறைவனைச் சிவம் எனவும், அதனை விட்டு நீங்காத அருட்சுடராய் உலகுயிர்கள் தோறும் ஊடுருவிக் கலந்து நின்று அவற்றை வளர்த்துப் பக்குவப்படுத்தும் ஆற்றலைச் சத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் ஒருமையின் இருமை நிலையுணர்ந்து ''நீலமேனி வாலிழை பாகத் தொருவன்'' ஆகப் போற்றிய தமிழ் முன்னோரது அருளனுபவம் உணர்ந்து பாராட்டடத்தக்கது.

கடவுளுடைய அன்பும் இரக்கமும், அருளென்றும் சத்தியென்றும் சொல்லப்படும்; ஆதலால், கடவுளை நமது பரமபிதா என்றும், அவருடைய அருட்சக்தியைப் பரம மாதா என்றும் சொல்லுகிறோம். நாம் ஒருவரிடத்திலே எவ்வளவு பற்றோடிருந்தாலும் அவருக்கு ஒரு நன்மையைச் செய்யும் போதுதான் அந்தப்பற்று வெளியாகின்றது. அதுபோலக் கடவுள் உலகங்களைப் படைத்து ஆன்மாகள் வாழ்வதற்கு வேண்டிய சரீரம் முதலியவற்றைக் கொடுத்தருளும் போதுதான் அவருடைய சக்தி வெளியாகின்றது. இப்படிச் சக்தி வெளியாதல் அவர் அருட்சக்தியோடு சேர்தலாகச் சொல்லப்படும். இது திருக்கலியாணம் என்றும் கூறப்படும்.

ஓங்காரத்துள்ளொளிக்குள்ளே முருகன் உருவங்காணப் படும். சிவபெருமானுக்குரிய சருவஞ்ஞதை, திருப்தி, அநாதி போதம், அலுப்தசக்தி, அநந்த சக்தி, சுவதந்திரத்துவம் என்னும் சுத்த அறுகுணங்களும் கந்தசுவாமியுடைய ஆறுமுகங்கள் என்பர்.

சருவஞ்ஞதை - முற்றறிவு

திருப்தி - வரம்பிலின்பமுடைமை

அநாதிபோதம் - இயல்பாகவே பாசங்களினீங்குதல்,

அலுப்த சக்தி - பேரருளுடைமை

அநந்த சக்தி - முடிவிலாற்றலுடைமை

சுவதந்திரத்துவம் - தன்வயமுடைமை

ஆன்மாக்களுக்கு முத்தியின்பங்கொடுக்கவிரும்பும் விருப்பமாகிய இச்சாசத்தியும், அதற்கு வேண்டுமிவைகளை அறியும் அறிவு எனப்படும் ஞானசத்தியும், அறிந்தவைகளைச் செய்யும் செயலெனப் படும் கிரியா சத்தியுமாகிய மூன்று சத்திகளின் அடுக்கு வேலாயுதமாம் என்க.

இச்சா ஞானக் கிரியை யெனு
மிவை மூன்றிலையாய்க் கிளைத் தெழுந்திட்
டச்சானாழியறச் சுவற்றும்
அயில்வே லொருகை வலமமைத்து

(திருத்தக்க புராணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வயானையம்மை, வள்ளியம்மை என்னும் இருவரும் முறையே சுப்பிரமணியசுவாமியினுடைய கிரியாசத்தியும் இச்சாசத்தியுமாவர்.

''நல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவதாகி
வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லு யிர்க் கருளைப் பூத்துப் பல நெறிகாய்த் திட்டன்பர்
எல்லவர் தமக்கு முத்தியிருங்கனி உதவு மென்றும்''
(கந்தபுராணம்)

ஆன்மா சிவனுடைய பரமசிவ பூரணஞானப் பிரகாசத்தில் அழுந்துவது ஆவாகனம், அதில் நிலைபெறுதல் தாபனம். ஆன்ம அறிவு சிவ பூரணத்திலும், சிவ பூரணத்துவம் ஆன்ம அறிவிலும் ஒன்றை ஒன்று பிரியாதிருத்தல் சந்நிதானம். ஆன்ம அறிவு என்றும் ஒழிவின்றி சிவத்திலே சமைந்து போதல் சந்நிரோதனம். ஆன்ம சுத்தியின் பொருட்டுக் கொடுக்கப்படுவது புஷ்பம், நிர்மலசுத்தியின் பொருட்டுச் செய்யப்படுவது மஹாபிஷேகம், அறியாமையை ஒழித்து அறிவைப் பெறும் பொருட்டுக் கொடுக்கப்படுவது நைவேத்தியம், சிவவியாபகம் ஆன்மாவில் விளங்குதலின் பொருட்டுச் செய்யப்படுவது பிரதட்சிணம். ஆன்மா சிவத்தோடு அத்துவிதமாதல் நமஸ்காரம்.

மகோற்சவ நாள் பத்தினுள் முதல்நாள் விழா தூல நீக்குதற் பொருட்டும், இரண்டாம் நாள் விழா தூல சூக்கும நீக்குதற் பொருட்டும் மூன்றாம் நாள் விழா மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மனமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும், நீக்குதற் பொருட்டும், நாலாம் நாள் விழா நாற்கரணமும், நால்வகைத் தோற்றமும் நீங்குதற் பொருட்டும், ஐந்தாம் நாள் விழா ஐம்பொறியும், ஐந்தவத்தையும் ஐந்து பலமும் நீக்குதற் பொருட்டும், ஆறாம் நாள் விழா காமாதியானும், கலையாதியானும், வினைக்குணமாறும், பதமுத்தியாறும், நீக்குதற் பொருட்டும், ஏழாம் நாள் விழா எழுவகைப் பிறப்பும் கலாதிகள் ஏழும் மாயாமலம் ஏழும் நீக்குதற் பொருட்டும், எட்டாம் நாள் விழா எண்குணம் விளங்குதற் பொருட்டும், ஒன்பதாம் நாள் விழா மூன்றுருவும், முத்தொழிலும் மூன்றிடத்துறைதலும் இலையென்றற் பொருட்டும், பத்தாம் நாள் விழா பரமாநந்தமாக்கடலில் அழுந்துதற் பொருட்டும் செய்யப்படும்.

திருவிழாக்காலத்திலே கோயிலின் கொடிமரத்திலே சீலை சுற்றியிருப்பதைக் காணலாம். அச்சீலையிலே இடபமாகிய பசு எழுதப்பட்டிருக்கிறது. சீலையோடு தர்ப்பைக்கயிறும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. கொடிமரம் சிவம் என்றும், இடபம் எழுதப்பட்ட சீலை ஆன்மா என்றும், தர்ப்பைக் கயிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம் என்றும் சிவாகமம் கூறுகிறது. கடவுளிடத்தே ஆன்மா தங்கியிருப்பது போலக் கொடிமரத்திலே சீலை தங்கியிருக்கின்றது. கொடிமரமும் சீலையும் இரு வேறு பொருள்களாயினும் அவற்றைப் பார்ப்பவர்கள் கொடிமரமாகிய ஒரே பொருளாக மதிக்கின்றனர். சிவமும் ஆன்மாவும் அத்துவித சம்பந்தமுடையவை என்பதை இது விளக்குகின்றது. கயிறு சீலையைக் கட்டியிருப்பது போலப் பாசம் ஆன்மாவைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. முப்பொருட் சம்பந்தங்களைக் கொடிமரம் நன்கு காட்டுகின்றது.

பெரும்பாலும் சிவாலய கர்ப்பக்கிருகங்களில் எளிய அமைப்பும் சொல்லொணாப் பரத்துவத்தையும் கொண்ட சிவலிங்கமே பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும். நடராஜப் பெருமான் உருவ அமைப்பில் கலைத் திறன் கொண்ட அழகின் சிகரமாயும், அருட்சோதியாயும், பிரபஞ்சத்துக்கும் எங்கள் வாழ்க்கைக்கும் உள்ளத்துக்குமே உயிர்ப்பூட்டும் தெய்வீக ஆடல் வல்லவராகவும் விளங்குகிறார். புராதனமான அருள் மிகுந்த பிரமாண்டமான நடராஜர் ஆலயம் சிதம்பரத்திலேயே இருக்கிறது. 1200 ஆண்டு கட்குமுன் திருவாசகம் பாடிப் புகழ்பெற்ற மாணிக்கவாசக சுவாமிகள் பல கால யோக சாதனத்தாலும், சிவபெருமான் மீது இனிய அருட்பாக்கள் பாடியமையாலும் சிதம்பர சிவாலய கர்ப்பக் கிருகத்துள்ளே அடியெடுத்து வைத்தார். மீளவரவேயில்லை. இரண்டறக் கலந்துவிட்டார்.

இப்பிரபஞ்ச மாயையினின்று மெய்ப்பொருளின் கண்ணும், அஞ்ஞான இருளிலிருந்து மெய்ஞ்ஞான ஒளியின் கண்ணும், மரணத்தினின்று முத்திக்கும் அழைத்துச் செல்வது ஆத்ம சாதனமே. எள்ளில் எண்ணெய்போல எங்கள் உள்ளே நிறைந்து நிற்கும் ஈசனைக் காண வேண்டும். வேறு தெய்வம் உண்டென உலகில் தேடாமல் பிறவிப் பிணியினின்று விடுதலை தந்து தனது திருவடியில் சேர்க்கும் சிவபெருமானைத் தொழவேண்டும். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர், ஆகிய அறுபத்து மூன்று நாயன்மார்க்கும், பேணிக்கொள் பெரியோருக்கும் பேறருள் கொடுத்த முழுமுதற்கடவுளை நம்முள்ளே கண்டு அனுதினம் மறவாது முப்போதும் ஏத்தவேண்டும்,

இறைவழிபாட்டுடன் பக்திசாதனம் (ஆத்ம சாதனம்) செய்தல் வேண்டும். படிக்க நா, பணியச் சிரம், பிடிக்கக்கரம், நடக்கக்கால், நாடக்கண், பேணசற்குரு இருக்கும் போது அலையாமல் நமது நாதரை இறைஞ்ச வேண்டும். இதனால் இறையுணர்வு பெருகி ஆத்மீக விழிப்புணர்ச்சி உண்டாகும். சிவபக்தன், மறு பிறப்பும் அதனால் வரும் துன்பங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுந்தவும் தேவைப்படாது, பிறவிப் பிணியினின்றும் விடுதலை பெறுவான்.

திருநெறி என்பது சிவநெறி, சைவநெறி எனப்பொருள்படும். ''திருவே என் செல்வமே'' என்ற அப்பர் பெருமானது தேவாரத்தில் 'திரு' எனும் சொல் சிவனைக் குறிக்கின்றது. ''சென்றடையாத திருவுடையானை'' என்ற சம்பந்தர் பெருமான் தேவாரக்கூற்றில் 'திரு' எனும் சொல் அருளாகிய சிவசக்தியைக் குறிக்கின்றது. ''சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்'' என்ற மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தில், 'திரு' எனும் சொல் பேரின்பத்தைக் குறிக்கின்றது.

அகங்காரம் போனாலன்றிச் சிவன்பால் அன்பு உண்டாகாது. அது போவதற்குச் சாதனங்களாவன: சரியை, கிரியை யோகம், ஞானம் என்னும் நான்குமாம். அவற்றுள் சரியையாவது சிவபெருமானது கோயில் தலத்தை அலகிடல், திருமெழுக்குச் சாத்தல், வழிபாட்டுக்காகப் பூக்கொய்தல், பூமாலை கட்டுதல், புகழ்ந்துபாடல், திருவிளக்கிடல், திருநந்தவனம் செய்தல் முதலிய தொழில்களை அன்போடு செய்தலாகும். கிரியையாவது: வாசனைத் திரவியம், தூபம், தீபம்,தீர்த்தம், புஷ்பம், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம் ஆகிய பூஜைக்குரிய பொருள்களைக் கொண்டு பஞ்சசுத்தி செய்து உட்பூஜை, புறப்பூஜை, அக்கினி கார்யம் முதலியவற்றை விதிப்படி செய்தலாம். யோகமாவது, முக்குணங்களையும் ஐம்புலன்களையும் அடக்கி, மூலவாயுவை எழுப்புகின்ற இடைபிங்கலை என்னும் நாடிகளை அடைத்துச் சுழி முனை வழியைத் திறந்து, நடனச்சிலம்போசையுடன் சென்று, பஞ்சாட்சரம் ஏகாட்சரமாம் தன்மைகண்டு, அருளைத்தரும் புதுவெளியிலே புகுந்து அருந்தியிருத்தலேயாம். ஞானமாவது பல நூல்களையும் ஆராய்ந்து பதி பசு பாசம் என்னும் மூன்று தத்துவங்களின் இலக்கணங்களைத் தெளிந்து பண்டைவினையின் பயனாக வந்த சிற்றறிவு முற்றும் நீங்கி,பேரறிவாகிய சிவஞானம் விரிந்து தோன்றும் மனதைப் பெறுதலேயாம். சரியை முதலிய நான்கும் நான்கு படிகளாகும். அவை முறையே அரும்பு. மலர், காய் கனி, போலாகும் என்பர் தாயுமானவர். அன்போடு சரியை முதலியவற்றைச் செய்து வரும் போது சிவபெருமானுக்கும் நமக்கும் ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்ளுதல் அன்பைப் பெரிதும் வளர்க்கும்.

இந்நிலையில் உள்ள அடியார்களிடத்துத் தமக்கென ஒரு செயலும் நிகழாது, எல்லாம் சிவச்செயல்களேயாகும். அவர்கள் உடம்புடையராயினும், அவ்வுடம்பால் அனுபவிக்கும் இன்பமும் பேரின்பமாகும். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற நெறி எல்லாம் செந்நெறியாகும், அவர் செய்தன வெல்லாம் அவச்செயலாகாது தவச் செயலாகும். இச்சிவ ஞானிகளின் அன்பின் பெருமையை உலகத்தார் அறியுமாறு இறைவன் தனது அருட்செயல் களையெல்லாம் அவர்கள் வாயிலாகவே, அவர்கள் செய்தனவாகவே ஆக்கியருள்வான், அன்பே சிவமாகும், மெய் அன்பு மூலமாகத் தற்போ தும் இவ்வாறு முற்றும் ஒழிந்து சிவபோதமே எப்பொழுதும் குடிகொண் டிருக்கப் பெறும் நிலையே முத்தி நிலையாகும்.

இனி, இராமகிருஷ்ணருடைய வாழ்வை ஒப்புநோக்குவோம். பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்தாரைப் போல் ஆரும் துறத்தல் அரிதரிது என்பர்; உண்மையே ஆயினும் அவர் மாதர்களது உடலைப் பழித்துரைத்தார். மனைவியைத் துறந்து சென்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணரோ எனின் இல்லறத்தில் மனைவியோடிருந்தும், மனைவியுள்ளிட்ட மாதர னைவரையும் தேவியாகவே வழிபட்டார். ''அறந்தான் இயற்றும் அவனி லும் கோடியதிகம் இல்லந் துறந்தான், அவனிற் சதகோடி உள்ளத்துற வுடையோன்'' என்ற இக்கூற்றிற்கு ஸ்ரீ இராமகிருஷ்ணர் இலக்கியமானார். கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு தம்மிடம் இல்லையென்று தாழ்மையுடன் கூறினார் மாணிக்கவாசகர். கண்ணப்பற் கிருந்த அத்தகைய பிரேமை அன்பு ஆறு நாட்களில் தெய்வத்தினிடத்து உண்டானமையும் ஸ்ரீ இராமகிருஷ்ணரது வாழ்க்கையிற் காணப்படும். 'மாது சொன்ன சூழால் இளமை துறக்கவல்லேனல்லன்' என்ற மொழிகளால் பட்டினத்தடிகள் குறிப்பிட்ட திரு நீலகண்டக் குயவனாரும், ஊடலால் ஏற்பட்ட சபதத்தால் இளமைக்குரிய இன்பத்தைத் துறந்து மனைவியுடன் வாழ்ந்தார். மனை வாழ்க்கையின் ஆரம்பமுதலே அத்தகைய காரணம் இல்லாத போதும் பெண்ணிச்சையை அறவே ஒழித்தவர் ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

மாணிக்கவாசகரைப்போல ஸ்ரீ இராமகிருஷ்ணர் இறைவனைக் காணாது ஆற்றாமையால் நீரைப் பிரிந்த மீனெனத்துடித்து அழுது அகங்குழைந்து அருளைப் பெற்றார். மாணிக்க மனையஞான வாசகங் களை உலகினர் உய்யுமாறு பொழிந்தார். நாவுக்கரசரைப் போலத் தாசமார்க்கத்தில் நிலை நின்றார். சுந்தரரைப்போலத்தோழமை கொண்டு இறைவனிடம் அன்பும் தொண்டும் செய்தார். ஞானசம்பந்தரைப்போல இறைவனது சேயாகவே தம்மைப் பாவித்து ஒழுகிவந்தார். திருமூலரை போல உயர்ந்த யோகத்தில் ஊன்றியிருந்தார். நம்மாழ்வார் கண்ணபிரா னது எளிமையை நினைத்ததும் சமாதியில் ஆழ்ந்ததுபோல பலமுறை ஸ்ரீ இராமகிருஷ்ணர் இறைவனைப்பற்றிய நினைவோ பேச்சோ வந்ததும் சமாதியில் மூழ்கினார். நம்வாழ்வாரைப்போல உறக்கம் இழந்தமையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ நன்னோய் பெற்றமையும் இறைவனது உணர்வோடும் ஒன்றிய உணர்வுடைமையும் அவரது சரிதத்தில் காணப்படும். ஆண்டாளைப் போலக் கோபிகையாகப் பாவித்து. கண்ணனைப்பெற்றார்.

அத்தகைய பக்தி வளர்வதற்குக் கால்கள் தாம் இவையெனலாம். பக்தி வளர்வதற்குரிய அனுகூலங்களைச் சுருங்கச் சொல்வோம். (1) ''ஒருமையுடன் நின்து திருமலரடியை நினைக்கின்ற உத்தமர் தம் உறவுவேண்டும்.'' அதாவது, சாது சங்கம் (நல்லோர் இணக்கம்) வேண்டும். நாரதரது பக்தி சூத்திரத்திலும் ''முக்கியமாக மகான்களது கிருபையாலும் பகவானது சொற்ப கிருபையாலும் பக்தி ஏற்படுகிறது'' என்று கூறப்பட்டுள்ளது. (2) ''உள்ளொன்று வைத்தப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்'' அதாவது தீயாரிணக்கத்தை அறவே விடல்வேண்டும். (பக்தி சூத்திரம்-43) (3) ''பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும்''. இறைவனது பொருள்சேர் புகழைப் பேசியும் அதைக் கூறும் நூல்களைப் படித்தும் பொழுது போக்கல் வேண்டும். (4) ''பொய்ம்மை பேசாதிருக்க வேண்டும்.'' மெய்மையைப் பின்பற்றவேண்டும். சொல்லும், நினைவும், செயலும் ஒன்றுக்கொன்று பொருத்தம் உடையனவாதல் வேண்டும். (5) ''பெருநெறி பிடித்தொழுகவேண்டும்.'' ஞான சாதனங்களையும் விடாது பழகிவரல் வேண்டும். (6) ''மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்.'' ஆணவத்தை ஒழித்தல் வேண்டும். எல்லாம் அவனது செயல் என்றெண்ணித் தன் செயலறுதல் வேண்டும். (7) ''மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்.'' பிரம்மசரிய விரதத்தைக் கைப்பற்றி வழுவாது ஒழுகவேண்டும். இல்லறத்தாராயினும் துறவறத்தாராயினும் சரி, பிரம்மசரியத்தால் வரும் பெரும் சக்தி அனைவர்க்கும் வேண்டும். (8) ''மனம் அமைதியிராதபோதும், துயரம் நேரும் போதும், தளர்ச்சியுறாது இறைவனை சதா நினைத்துக்கொண்டே இருத்தல் வேண்டும்.'' (9) ''மதி வேண்டும். நின் கருணை நிதிவேண்டும். நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்''- அழியும் பொருள் இது. அழியாப் பொருள் இது என்ற வேறுபாட்டை எப்போதும் விசாரித்தறியும் புத்தி வேண்டும். (10) ''நல்லாரிணக்கம் ஒன்றொழிந்தமற்றையெல்லாம் அதனின்றே பெறலாம். ஆதலின் அதனினும் உற்றதுணை பக்தியைப் பெற நினைப்பார்க்கு வேறில்லை.''

இன்னும் சில சாதனங்களும் பக்தியை வளர்க்கும்.

(1)இந்திரியங்கள் அனைத்தையும் அடக்க முயலுதலும் சிறப்பாக நாக்கை அடக்குதலும் அவசியமாம். (2) எல்லாம் உன் உடைமையே, எல்லாம் உன்னுடைய செயலே, எங்கணும் வியாபி நீ என்ற உண்மையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமார உணர்ந்து பழகவேண்டும். ஆணவத்தை ஒழித்து வாழ முயல வேண்டும். (3) ஆயினும் இறைவனது அருளின் துணையால் தான் எதையும் செய்ய இயலும் என்ற பெரு நம்பிக்கையுடையனாய், எதுவரினும் மனந்தளர இடங்கொடானாய் எல்லாம் வல்ல அவன் இருக்க ஏன் கவலைப்படல் வேண்டும்? என்று சிந்தனையற்றிருத்தல் வேண்டும். வித்தும் இன்றியே விளைவு செய்குவான் அவன். சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் இயல்புடையவன் அவன் என்று நம்புதல் வேண்டும். (4) வாழ்க்கையில் நேரும் சுகம், துக்கம், சாந்தம், மனச்சஞ் சலம் முதலிய யாவற்றையும் இறைவனது திருவடியில் சமர்ப்பித்தல் வேண்டும். பக்தியொன்றையே இறைவனிடம் மீண்டும் மீண்டும் பிரார்த் தித்தல் வேண்டும். (5) மேற்கு நோக்கிச் செல்ல, நாம் அதே அளவிற்குக் கிழக்கை விட்டு விலகுவோம்; அதுபோல, வேறு நினைவுகளை அடக்க முயலாமல் இறைவனிடம் மனதைச் செலுத்துதல் ஒன்றினாலேயே தீமை யனைத்தினின்றும் நீங்கலாம். நன்மையனைத்தையும் பெறலுமாகும்.

''உடலே 'நான்' என்ற உணர்வினால் தோன்றும் அகங்காரமே நரகம். நரகம் என்பது வேறு எதுவுமில்லை'' என்று சங்கரர் கூறியிருக்கி றார். இப்படிப்பட்ட அகங்காரம் தெய்வீகத்துக்கு எதிரான நிலை. உலக முழுவதிலும் நிறைந்து கிடக்கும் முட்களையும், கூழாங் கற்களையும் நீக்கு வது என்பது ஆகக்கூடிய செயலா? அதனால், அவைகளின் துன்பத்தி லிருந்து தப்பிக்க வேண்டுமானால் காலணிகளை அணிந்து கொள்ள வேண்டும். அது போல வேதாந்த தத்துவங்களின் துணைகொண்டு சத்தி யத்தின் மேல் பார்வையைப் பதியவைத்து, ''நானே பிரம்மம்'' என்ற நம்பிக்கையுடன் இருப்பாயானால் உலகியல் துன்பங்களை எளிதில் கடந்துவிடலாம். அப்பொழுது சத்திய தர்மத்தைக் கைக்கொள்வதுகூடச் சிரமமான செயலாக இருக்காது.

இறைவனோடு ஒன்றிவிடுவதும், உண்மையான மீட்சியைத் தேடிக் கொள்ளுதலும் ஆக இவைகளைப் பெற முயற்சிப்பதுதான் மனிதன் மேற் கொள்ள வேண்டிய தலையாய அறம் ஆகும். இந்த நிலையை அடைந்த வனை இருண்ட சிறைக்கூடத்தில் அடைத்தாலும் அவன் சுதந்திர மனிதனே. அதுவுமின்றி உடலைத்தான் சிறைப்படுத்த முடியுமே தவிர, ஆத்மாவைச் சிறைப்படுத்த யாரால் முடியும்? உடலுக்கு அடிமையான வனுக்கு ஒற்றை அருகம்புல்லும் கொலைக்கருவியே. அதைக் கொண்டுகூட அவன் உடலை மாய்த்துவிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறமென்னும் ஆற்றுப்பெருக்கு ஒருநாளும் வற்றிப்போவதில்லை. அந்தக் குளிர்ந்த நீர்ப்பெருக்கு வற்றுமானால் பயங்கரமான விளைவுகளினால் மனிதகுலம் துன்புற நேரும். சரஸ்வதி நதி புறக்கரணங்களுக்குப் புலப்படாமல் பூமிக்கு அடியில் பெருக்கெடுத்து ஓடி, தாவர இனங்களின் வேர்களுக்கு உணவளித்து நீர்நிலைகளையும் நிரப்புவதுபோல, அறமென்னும் நீர்ப்பெருக்கும் புறக்கண்களுக்குப் புலப்படாமலே மனிதகுலத்தை ஊட்டி வளர்க்கிறது.

நெடுநாட்களுக்குக் கவனிக்கப்படாவிட்டால் அழகான வயலும், தோப்பும், முள்ளும் செடியும், புதரும் மண்டி உருமாறிப்போய்விடும். ஓங்கி வளர்ந்த மரங்களை வெட்டி வீழ்த்தி விட்டால் இயற்கையின் தோற்றமே மாற்றமடைந்து விடுகிறது. காலப்போக்கில் இந்த மாறிய நிலையையே பார்த்துப் பழகிவிட்ட மனிதன் அதனுடைய முந்தைய நிலையை, இப்போது நேர்ந்துள்ள அதன் வீழ்ச்சியைத் தெரிந்து கொள்ளுவதில்லை. இன்று தர்மத்துக்கும் இந்த நிலை ஏற்பட்டுவிட்டது.

''அஞ்ஞானத்தையும் அகங்காரத்தையும் ஞானத்தின் பலிபீடத்தில் பலி கொடுத்து அங்கே தர்மத்தை ஸ்தாபி'' என்பதே வேதங்கள் போதிக்கும் உண்மை. சுயநலமற்ற ஒவ்வொரு சிறு செயலும் ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியமாவதற்கான வழியைச் செப்பனிடுகிறது. அறத்தின் பாற்படும் ஒவ்வொரு செயலும், பார்வையை விரிவுபடுத்தி, இறைவன் எங்கும் நிறைந்தவர் என்ற உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. இப்படிப்பட்ட சிறு சிறு செயல்களாகிய சிற்றாறுகள் தெய்வீகம் என்னும் புனிதமான புண்ணிய நதியோடு கலந்து பாய்ந்து சென்று வழியில் வரும் தடைகளை எல்லாம் உடைத்துக் கொண்டு கடந்து சென்று பிரம்மம் என்னும் கடலோடு கலக்கின்றன.

இளைஞர்கள், முதியவர்கள் என்ற பாகுபாடின்றி, அனைவரும் இந்த உண்மைகளை அறிந்து கொள்ளவேண்டும். உதாரணத்துக்குச் சிவன் கோயிலை எடுத்துக் கொள்ளலாம். இலிங்கத்துக்கு நேர் எதிராக நந்தியின் சிலையைக் காணலாம். நந்தி பரமசிவனின் வாகனம் என்றும், அதனால் தான் அந்த சிலை சிவன் கோயிலின் வைக்கப்பட்டிருக்கிறது என்றும் நீங்கள் சொல்லுவீர்கள். காளை அல்லது பசு ஜீவாத்மாவை உருவகப்படுத்துகிறது. இலிங்கம் பரமாத்மாவை (உருவமற்ற பரம் பொருளை) உருவகப்படுத்துகிறது. சிவனுக்கும் நந்திக்குமிடையில் (ஜீவாத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் இடையில்) யாரும் வரக்கூடாது என்றும் சிவனை நந்தியின் இரு கொம்பின் வழியாகத்தான் பார்க்க வேண்டும் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் சொல்லுவார்கள். 'வேறு வழியாகப் பார்த்தால் என்ன' என்று கேட்டால், 'அப்படிப் பார்ப்பதுதான் சிறப்பு' என்று பதில் வரும். உண்மை என்னவென்றால், ஜீவன் மூலமாகச் சிவனைப் பார்க்க வேண்டும். ஜீவனும், சிவனும் ஒருவரே என்பது தான் அதன் கருத்து. நந்தியும் ஈஸ்வரனும் சேர்ந்து நந்தீஸ்வரர் ஆகிறார்கள். தளைகளில் சிக்கித் தவிக்கும் போது அவன் நந்தி, தளைகளிலிருந்து விடுபடும் போது அவனே ஈஸ்வரன். நந்தீஸ்வரன். பசு (ஜீவன்) தன்னைப் பசுபதிக்கு அர்ப்பணிக்கும் போது அதனுடைய தனித்தன்மை களையப்படுகிறது. அதுதான் உண்மையான யாகம். இந்த உண்மையை அனைவரும் மறந்து விட்டார்கள். இவற்றை ஞாபகத்தில் வைத்த, சிவாகமமுறைப்படியான வழிபாட்டின் உண்மைகளை அறிந்து வழிபட்டுப் பயன்கொள்ளுதல் சைவமக்கள் கடனாகும். விரிக்கிற் பெருகும்.

**வி.சீ. கந்தையா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆவது இயல்:

### பிள்ளையார் கோவில்கள் மூன்று

### *(1) கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில்*

மட்டக்களப்பு வாவி சங்கமமாகும் இடத்திலிருந்து தெற்கு நோக்கிப் புளியந்தீவு, காத்தான்குடி ஆரையம்பதி, கொத்தியா வலை, கொக்கட்டிச் சோலை, மண்முனை, தாழங்குடா, அம்பிளாந்துறை, களுதாவளை, பழுகாமம், பட்டிருப்பு, மண்டூர், குறுமன் வெளி, கல்லாறு, துறைநீலா வணை ஆகிய இடங்களெல்லாம் நீண்டு பரந்து சவளக்கடை கிட்டங்கித் துறை வரையும் விசாலித்திருக்கின்றது. இத்தூரம் இருபத்தைந்து மைல் களை உடையது.

இவ்வேரி புளியந்தீவிலிருந்து வடக்கு நோக்கி கன்னன்குடா, வலை யிறவு, மாந்தீவு, சத்துருக்கொன்றான், ஈச்சந்தீவு, தன்னாமுனை, ஏறாவூர், பன்குடாவெளி வரையும் நீண்டு பரந்திருக்கிறது. இத்தூரம், ஏறக்குறையப் பத்துமைல் நீளமடையது. இந்த முப்பத்தைந்து மைல் நீளமான ஏரி சேறு நிறைந்ததாகவும், ஆழமற்றதாகவும் இருந்தபடியினாலும் ''மட்டக்களப்பு'' என அழைக்கப்பட்டு வருகிறது. இதுபரக்கும் நாடெல்லாம் மட்டக்களப் புத்தான்.

இந்த மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதும் கண்டி மன்னர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது. 2 ம் இராசசிங்க மன்னனின் காலத்திற் பாடப் பட்ட மாரியம்மன் காவியத்தின் ஈற்றிலுள்ள வாழிப்பாடலில்,

''ஈசனுடன் நாலுமறை வேதநுதல் வாழி
இந்துமதி யொத்தழக ஈசுபரி வாழி
வீசுபுகழுடைய ராசசிங்கனும் வாழி
விளை செந்நெல் மழைபெய்து நீடுழி வாழி''

என்று அம்மன்னனின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதும் எடுத்துக் காட்டாகும்.

1627 ம் ஆண்டுக்கு முன் போர்த்துக்கீசர் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழிருந்த வேருவலை, அளுத்கமம், களுத்துறை, ஆகிய இடங்களிலிருந்த முஸ்லீம்களை நாடுகடத்தியபோது அவர்களில் நாலாயிரம்பேரை கண்டி மன்னனான ''செனரதன்'' மட்டக்களப்புப் பிரதேசத்தில் குடியமர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னான். அப்படி வந்தவர்களில் ''ஷா'' என்னும் பெயருடைய ''மூர்'' வம்சத்தவனும் அவனுடைய இனத்தவர்களும் மட்டக்களப்பு வாவியினுள் உள்ள புளியத்தீவை நோக்கி நீண்டு நெருங்கியிருந்த புளியடிக்குடா முனையில் தங்கி வசித்தனர். இவர்கள் தங்கியிருந்த இடம் ''மூர்ஷாப் பிட்டி'' என அழைக்கப்பட்டது. அதைத் தற்போது ''மோரிசாப்பிட்டி'' என வழங்குவதை நாம் அறிவோம்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் முஸ்லீம்கள் குடியேறுவதால் கண்டி நாட்டுக்குள் பிரவேசிக்கும் வழி தடைப்பட்டுவிடும் என அறிந்து போர்த்துக்கீசத் தேசாதீபதியாகிய ''கொனிஸ்ராண்டின் டீசா'' மட்டக்க ளப்பை அரண்செய்ய நினைத்தான்.

அதற்காகவே போர்த்துக்கீசர் 1627 ல் தாம் கட்டிய கோட்டைக்கு மட் டக்களப்புப் பிரதேசம் முழுவதற்கும் அமைந்த ''மட்டக்களப்பு'' என்னும் பெயரை எடுத்துச் சூட்டினர். இதனால் புளியந்தீவில் மட்டக்களப்புப் பட்டினம் அமைய ஏதுவாயிற்று. மட்டக்களப்புக் கோட்டையை நோக்கி நீண்டிருந்த புளியடிக்குடா முனைக்குக் ''கோட்டைமுனை'' என்னும் பெயரும் ஏற்பட்டது. இக்கோட்டைமுனைப் பிரதேசத்துள் குருகுல மக்கள் வசித்த புளியடிக்குடா சின்ன உப்போடைப் பகுதிகளும், விஸ்வப் பிரம்மகுல மக்களும் முஸ்லீம் மக்களும் வசித்த ''மோரி சாப்பிட்டியும்'' செங்குந்த குல மக்கள் வசித்த தாமரைக்கேணியும், வெள்ளாளகுல மக்கள் வசித்த தாண்டவன்வெளியும் அடங்கியிருந்தன.

ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோவில் என்னும் இக்கோயிலைச் சூழவர 1627 ம் ஆண்டுக்காலப் பகுதியில் செங்குந்த குல மக்களே வசித்தனர். பின் நெசவுத் தொழில் வீழ்ச்சியினால் வறுமையடைந்து தங்கள் வீடுவா சல்களைப் பிறருக்கு விற்றுவிட்டுத் தாமரைக்கேணியிலும் வேறு ஊர்க ளிலும் குடியேறிவிட்டனர் ஆயினும் கோயில் நிருவாகம் செங்குந்தகுல மக்களாலேயே நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாலயத்திற்கு வடக்கில் ''பழைய வாடி வீட்டுத் தெருவும், தெற்கில் பௌத்த ஆலய வளவும், கிழக்கில் வேறு குடியிருப்பாளரின் வளவுகளும், மேற்கில் பாஞ்சாலை வீதியும் எல்லைகளாகவுடையன. இக்கோயிலின் அமைப்புக்கள் யாவும் ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை ஒத்தனவாகவுள்ளன. ஆனால் கொடிமரம் நட்டுத் திருவிழாச் செய்யும் ஒழுங்கு முறைகள் இல்லை. இவ்வாலயம் முதன் முதல் யாரால் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது என்பது அறியப்படவில்லை. ஆயினும் 1627 ல் மட்டக்களப்பில் கோட்டை கட்டவந்த போர்த்துக்கீசர் இக்கோயிலைப் பேய்வணக்கம் நடைபெறும் ஆலயமெனத்தம் சரித்திரக் குறிப்பில் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோவிலுடன் மாரியம்மன் கோவிலும் இணைந்திருந்தது. அதில் தெய்வமாடிக் கட்டுச் சொல்லும் செயல் நடைபெற்ற காலத்திலேதான் போர்த்துக்கீசர் இங்கு வந்திருக்கலாமென ஊகிக்கப்படுகிறது. இந்த மாரியம்மன் கோவில் பிற்காலத்தில் 1882ம் ஆண்டு தாமரைக்கேணிக்கு வட பகுதியில் இடம்மாற்றி அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

1627ம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் ஆலயம் பெரிய கட்டிடமாக இருக்கவில்லை. இவ்வளவில் நின்ற வில்வமரத்தடியில் ஓர் மேடையமைத்து அதை உள்ளடக்கிய ஓலைக் கொட்டிலில் கருங்கல்லினாலான ஒரு சிறு பிள்ளையார் உருவம் வைக்கப்பட்டதாயிருந்தது. இதையே யாவரும் பயபக்தியுடன் வணங்கிவந்தனர். போர்த்துக்கீசர் கட்டிய மட்டக்களப்புக் கோட்டையை 1639ல் ஒல்லாந்தர் கைப்பற்றினர். பின் அதைப் பலங்கொண்டதாகப் புதிய முறையில் 1684ல் கட்டி முடித்தனர். அக்கோட்டையை நாம் இன்னும் காண்கின்றோம். இக்காலப் பகுதியில் தான் புளியந்தீவில் ஏராளமாகச் சனங்கள் குடியேறத் தொடங்கினர்.

கோட்டைமுனையில் வசித்த செங்குந்தகுலத் தனவந்தர்களிற் சிலர் ''மூர்ஷா'' வின் இனத்தவர்களின் மரக்கலங்களிற் சென்று வியாபாரம் செய்துவந்தனர். இத்தனவந்தர்களில் ஒருவரான ''தாமோதரம்'' என்பார் மரக்கலத்தில் புடவை நூல், தேன், பசுநெய், முதலிய பொருட்களைக் கொண்டு சென்று வியாபாரஞ் செய்து அதிக பணத்தைச் சேர்த்தார். இவருக்கு மகப் பேறு இல்லாததால் தம்மிடமுள்ள பெருந்தொகைப் பணத்தைக் கொண்டு தாமரைக்கேணிப் பகுதியில் அதிகப்படியான பரப்புக் கொண்ட நிலத்தை வாங்கினார். ஏழைச் செங்குந்தகுல மக்களை அந்நிலத்தில் குடியமர்த்ததி அவர்களுக்கு நெசவு செய்வதற்கு நூலும் மற்றும் உபகரணங்களுங்கொடுத்து ஊக்குவித்தார். அவர்களிடம் புடவைகளை வாங்கிப் பிற இடங்களுக்கு ஏற்றுமதி செய்தார்.

தாமரைக்கேணியில் ஒரு சிறிய தாமரைக்குளம் இருந்தது. தாமோதரமென்பார் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இக்குளத்தில் வெண்டாமரை மலர்களை ஆய்ந்து கொண்டுபோய் ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையாருக்குச் சாத்தி வணங்கித் தனக்கோர் குழந்தையைத் தரவேண்டுமென்று பக்திபரசவத்துடன் வழிபட்டு வந்தார். தாமோதரம் தாமரைப் பூவுடன் வருவதைக் கண்ட சிறு பிள்ளைகள் இவரைத் ''தாமரையார்'' என அழைத்தனர். இவருடைய இயற்பெயர் அவர்களுக்குத் தெரியாது. அச்சிறுபிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாக வந்த பின்பும் ''தாமரையார்'' என்றே அழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்து வந்தனர். அதனால் தாமரையார் என்னும் பெயரே நிலைத்துவிட்டது. நாமும் இனிமேல் தாமரையார் என்றே அவரைக் குறிப்பிடுவோம்.

தாமரையார் தனக்குப்பிள்ளைவரம் வேண்டுமென வணங்கி வந்தநாளில் ஓர் நாள் பிள்ளையார் இவர் கனவில் தோன்றி "நானே உனது பிள்ளை; என்னையே உனது பிள்ளைபோல் நேசி" எனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். தாமரையார் விநாயகர் அருளை வியந்து மனமகிழ்ந்து வில்வ மரத்தடியில் இருந்த குடிசையைப் பெரியதாகப் பச்சைக் கல்லினாற் கட்டிக் கிடுகுவேய்ந்து அங்கிருந்த மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து வணங்கினார். இக்கோவிலுக்குப் பூசகராக அவரின் இனத்தவரில் ஒருவரான சைவ ஒழுக்க சீலமும் இறை பக்தியுமுடைய வேலாயுதர் என்பவரை நியமித்தார்.

1685 ல் தாமரையார் மரக்கலத்தின் மூலம் இந்தியா சென்று சிதம்பரத்தையடைந்தார். அங்கு நடராஜப் பெருமானை வணங்கினார். அங்கிருந்து பிள்ளையார் விக்கிரகமொன்றை விலைக்கு வாங்கி வந்தார். இங்குள்ள செங்குந்தகுல மக்களை, ஒன்று கூட்டிக் கோயிலைத் தன் பணத்தைக் கொண்டு கட்டி வெள்ளாளகுல மக்கள், விஸ்வப் பிரம்மகுல மக்கள், குருகுலமக்கள், மற்றும் சைவ அன்பர் யாவரையும் சேர்த்து தான் கொண்டுவந்த மூர்த்தியை முறைப்படி பிரதிஷ்டை செய்து, மகா கும்பாபிஷேகத்தையும் நடத்தினார். இக்கோயிலின் மூர்த்திக்குத் தன் பாட்டனாரின் பெயரான "வீரகத்தி" என்னும் பெயரைச் சேர்த்து "ஸ்ரீ வீர கத்திப்பிள்ளையார்" என நாமம் சூட்டினார். அதற்குமுன் இக்கோயிலின் மூர்த்திக்கு என்ன பெயர் இருந்தது என்பது தெரியவில்லை. இக்கோயிலைப் பராமரிப்பதற்குத் தனது மனைவியின் வழி வந்த வைரவர்நாதர் என்பவரையும், ஓமநாதர் என்பவரையும் தனக்கு உதவிய வண்ணக்குமார்களாக வைத்துக் கொண்டார். அன்றியும் தனக்குச் சொந்தமான அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களையும் தனது சீவனுக்குப்பின் இக்கோயிலுக்குச் சேரவேண்டுமென்று தருமசாதன நன்கொடை பண்ணினார். அத்துடன் இக்கோவிலில் நித்திய, நைமித்திய பூசைகளில் ஏதும் தடை ஏற்படுங்காலத்தில் வெள்ளாள குல மக்களும், விஸ்வப்பிரம்ம குல மக்களும் உதவிகொடுத்து அவற்றைச் செவ்வனே நடைபெறச் செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டார். முன்சொன்ன இருகுலமக்களும் இக்கோயிலிற் பூசைகளில் பங்கு கொள்ளும் உரித்துடையோர் எனவும் குறிப்பிட்டார். இது 1700ம் ஆண்டளவில் நடைபெற்றதெனக் கூறப்படுகின்றது. அன்றியும் கோட்டை முனைப்பகுதியில் உள்ள ஒரே கோயிலும் இதுவேயாகும். இவ்வாண்டு முதல் 1875ம் ஆண்டு வரையிலும் ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகத்திப் பிள்ளையார் கோயிலுக்குப் பலர் வண்ணக்குமார்களாகவிருந்து காலத்திற்குக்காலம் பல கட்டிடங்களைக் கட்டினர். பரிவார மூர்த்திகளின் கோயில்கள், மடப்பள்ளி, மணித்தூண், மண்டபங்கள் முதலியவற்றைக் கட்டிச் சிறப்புச் செய்தனர்.

1875ம் ஆண்டு காலப்பகுதியில் அமிர்தகழியில் ஸ்ரீ மாமாங்கேஸ் வரர் ஆலயமும் நல்ல முறையில் அமைக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டு வந்தது. 1878ம் ஆண்டு வீசிய புயலினால் கோவில் மிகவும் சேதம டைந்தபோது, அமிர்தகழி மக்களோடு சேர்ந்து, ஊறணி,கொத்துக்குளம் தாண்டவன்வெளி, தாமரைக்கேணி, செங்கலடி, ஆகிய இடங்களிலுள்ள சைவ மக்களும் உதவி செய்து கோயிலைப் புதிய முறையில் திருத்தினர். கொடிமரம் நட்டுத்திருவிழாச் செய்யும் ஒழுங்கையும் ஏற்படுத்தினர். தாண்டவன் வெளி வெள்ளாள குல மக்களுக்கு ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் பூசைத் தொடர்பும், செங்குந்த குல மக்களினதும், விஸ்வப் பிரம்மகுல மக்களினதும், நீங்கா நடப்பும் இருந்தபடியினால் 1880ம் ஆண்டு முதல் ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் கோயிலுக்கு கொடிச் சீலை, கொடி கயிறு (ஒவ்வொன்றும் தனித்தனி இருபது யார்) செங்குந்த குல மக்கள் கொடுக்கும் வழக்கமும், விஸ்வப் பிரம்மகுல மக்கள் கொடியெழுதும் வழக்கமும் ஏற்படுத்தப்பட்டது. அது இன்று வரையும் தவறாது நடந்து வருகின்றது.

ஆடி மாதத்தில் வரும் அமாவாசைக்குப் பன்னிரண்டு நாட்களுக்கு முன் (மாமாங்கக் கொடியேற்றத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்) செங் குந்த குலமக்கள் கொடிக்கயிறு மற்றும் பூசைப் பொருட்கள் முதலியவற் றை ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்தில் ஆயத்தமாக வைத்திருப்பர். ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய வண்ணக்குமார் தங்கள் கோயில் மேளவாத் தியத்துடன் ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்திற்கு வந்து பூசையிற் பங்கு பற்றுவர். இங்குள்ள வண்ணக்குமார் அவர்களைச் சன்மானித்து மரியாதை வழங்குவர். அதன்பின் கொடிச்சீலை, கயிறு, கோயிற் பூசைப் பிரசாதம் என்பவற்றை ஒரு ஏடகத்தில் (சிறு தேரில்) வைத்து செங்குந்த குல மக்கள் சுமந்து கொண்டு மேள வாத்தியம் முழங்க ஊர்வலமாகச் சென்று ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் கோயிலையடைவர். அங்கு கோயிற் குருக் களும், வண்ணக்குமார்களும் கொடிச்சீலை, கொடிக்கயிறு என்பவற்றை ஏற்றுக் கொண்டு கோயிலில் பூசை நிகழ்த்தி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில் வண்ணக்குமார்களைச் சன்மானித்துப் பிரசாதமும் வழங்கி வழியனுப்பி வைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் 1694ல் புளியந்தீவில் கோட்டை அமைத்த பின் கோட்டைமுனையும், புளியந்தீவும் ஒரு றோட்டினால் இணைக்கப்பட்டன. அந்த இடத்திலேதான் தற்போது பாலம் அமைந்திருக்கிறது. மட்டக்களப்புப் பகுதியில் ஒல்லாந்தருக்கு வியாபாரப் பொருட்களாக யானைத்தந்தம், தேன், மிளகு, மரம் என்பவையே கிடைத்தன. அதனால் அவர்கள் காடுகளில் யானைகளைப் பிடித்துப் பழக்கி மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வியாபாரத்தை மேற்கொண்டனர். அதனால் யானைகளைப் பிடித்துப் பழக்குவதில் கைதேர்ந்த அநேக சிங்கள மக்களைக் கொண்டு வந்து புளியந்தீவில் குடியமர்த்தினர். அச்சிங்களவர்கள் குடியிருந்த இடம் புளியந்தீவில் ''சிங்களவாடி'' என இப்போதும் வழங்கப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

பொத்துவில், இறக்காமம், லகுகலை (லாக்சகல்) ஆகிய இடங்களிற் பிடிக்கப்படும் யானைகள் மட்டக்களப்புக் கோட்டைக்குக் கொண்டு வரப்பட்டு அதன் உயரம்,வயது,இனம்,விலை என்பன கணிக்கப்படும். ஒரு குறித்த தொகை யானைகள் சேரும் வரைக்கும், பிடிக்கப்பட்ட யானைகள் புளியந்தீவில் வைத்து பழக்கப்படும். சிங்களவர்கள் யானையைக் கட்டிவைத்துப் பழக்கிய இடம் ''ஆனைப்பந்தியென அழைக்கப்படுகிறது. இந்த ஆனைப்பந்தியடியில் மெதெடிஸ்த மிஷனரிமார் ஒரு பாடசாலையை அமைத்து அதற்கு ''ஆலடிப்பாடசாலை'' என நாமமிட்டதையும் இந்த இடத்தில் நாம் எடுத்துக்காட்டுவது நன்று. யாழ்ப்பாணத்திலும் இதுபோலவே மாத்தறை, வன்னிமுதலிய இடங்களிற் பிடிக்கப்பட்ட யானைகள் கொண்டுவரப்பட்டு கப்பலில் ஏற்றும் வரைக்கும் கட்டிவைத்துப் பாதுகாக்கப்பட்ட இடம் ''ஆனைப்பந்தியடி'' எனத் தற்போதும் வழங்கப்பட்டு வருவது சரித்திர உண்மை.

ஆனைப்பந்தியடியில் ஓர் குருந்தமர நிழலில் (இதைச் சிலர் கோடைமரமெனவும் பிழையாகக் கூறுவர்.) அமைந்த மேடையில் கருங்கல்லாலானதும் பிள்ளையார் வடிவில் அமைந்ததுமான ஓர் உருவத்தைவைத்து வணங்கிவந்தனர். அது யாரால் எப்போது வைக்கப்பட்டது என்பது அறியப்படவில்லை. ஏற்றுமதி, இறக்குமதிகளினாலும் வியாபாரத் தொடர்புகளினாலும் ஆட்சி அமைப்பு முறையினாலும் புளியந்தீவும் கோட்டைமுனையும் பட்டினமாக மிளிரத் தொடங்கின. பல வசதிகளும் அங்கு அமைந்த படியினால் வலையிறவு, பெரியதுறை, கொத்துக்குளம், தாண்டவன் வெளி, புளியடிக்குடா ஆகிய இடங்களிலிருந்து அநேகர் வந்து அப்பகுதியெங்கும் குடியேறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வந்து குடியேறிய சைவமக்களான செட்டி வெள்ளாரும், தனக்கார வெள்ளாளரும், குருகுல வெள்ளாளரும் ஒன்றுசேர்ந்து ஆனைப்பந்தியடியில் இருந்த கோயிலை ஆகம விதிகளுக்கமையத் திருத்திக்கட்டி மகாகும்பாபிஷேகத்தையும் நடத்தினர். கிறிஸ்தவ குருமாரின் மதப் பிரசாரத்திற்கு எதிராக சைவ மக்களின் ஆர்வமும், எழுச்சியும் வீறு கொண்டெழுந்தன. 1878ம் ஆண்டுப் புயலினால் அக்கோயில் கிலமடைந்தது. எனினும் பூசைகள் நடைபெற்றுவந்தன. 1980ம் ஆண்டளவில் புளியந்தீவில், சமாதான நீதவானாக விளங்கிய திரு.ச. முத்தையா என்னும் சைவப் பெரியாரும், வித்துவான் ச. பூபாலப்பிள்ளையவர்களும் கோட்டைமுனை, புளியந்தீவு வலையிறவு கொத்துக்குளம், பெரிய துறை ஆகிய இடங்களில் வசித்த சைவ அன்பர்களின் உதவியுடன், மட்டக்களப்பில் சிறப்புடனும் அழகுடனும் திகழ்ந்து சைவத்தையும் பக்தியையும் பரப்பக்கூடியதாக ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்கினேஸ்வரர் ஆலயத்தை வழிநடத்தினர்.

கொடிமரம் நட்டுத் திருவிழாச் செய்யும் ஒழுங்கும் இங்கு அதே ஆண்டிற் செய்யப்பட்டது. வித்துவான் பூபாலபிள்ளையால் இவ்வாலயத்திற்கு ஒரு பதிகமும் இயற்றப்பட்டது. திரு. கோபால ஐயர் என்பவர் குருக்களாக நியமிக்கப்பட்டார். இவ்வாண்டிலிருந்து இக்கோயிலுக்கும் கொடிச்சீலை, கொடிக்கயிறு கொடுக்கும் வழக்கம் செங்குந்த குல மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் கோயிலுக்குக் கொடிச்சீலை, கொடிக்கயிறு கொடுக்கும் முறையைப் போலவே ஆனைப் பந்திப்பிள்ளையார் கோவிலுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இவ்வழக்கம் இடைக்காலத்தில் நிறுத்தப்பட்டு விட்டது. அதை மீண்டும் தொடங்கி நடத்த வேண்டுமெனச் செங்குந்தகுல மக்கள் விரும்புகின்றனர். இக்கோவிலில் இதேயாண்டிலிருந்தே கந்தப் புராணம் படிக்கப்பட்டு ஈற்றில் சூரசங்கார விழா நடத்தும் ஒழுங்கும் ஏற்படுத்தப்பட்டது. கந்தப்புராண வரலாற்றில் கூறப்பட்டிருப்பது போல் கந்தசுவாமியுடன் நின்று சூரசங்காரம் நிகழ்த்திய நவவீரபரம் பரையில் வந்த செங்குந்த குல மக்களே சேனைத்தலைவர் வேடம் பூண்டு சென்று விழா நடத்தும் உரித்துடையாராயிருந்து நிறைவேற்றி வந்தனர்.

ஐப்பசி மாதத்தில் வரும் பூர்வபக்கபிரதமையில் கந்த சட்டி விரதம் ஆரம்பமாகும். ஆறாம் நாள் சூரசங்கார விழா. சூரசங்கார விழாவில் ஒன்பதுபேர் வீரவாகுதேவர் முதலான நவவீரருக்கும் ஒருவர் நாரதருக்கும் வேடமணிவர். விழாவில் பங்குபற்றும் இந்த பத்துப்பேரும் கந்தசஷ்டி விரதமனுட்டித்து ஆறாம் நாள் சேனைத் தலைவர் வேடம் பூண்டு ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் (பிற்காலத்தில் தாமரைக்கேணி மாரியம் மன் கோயிலில்) ஆயத்தமாகவிருப்பர். ஸ்ரீ ஆனைப்பந்தி ஆலய வண் ணக்குமாரில் ஒருவர் அல்லது அவருடைய பிரதிநிதி மேளவாத் தியத்துடன் வந்து இந்தப் பத்துப்பேரையும் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வண்ணக்குமாரையும் அல்லது அவர்களது பிரதிநிதிகளையும் அழைத்துச் சென்று அங்கு பூசையில் பங்கு பற்றச் செய்து சன்மானிப்பர். பின் விழா தொடங்கும் போது சுவாமியினுடைய பக்கம் நின்று சூரசங்கார விழாவை நவவீரர் நடத்துவர். விழா முடிவில் ஸ்ரீ ஆனைப்பந்தி விநாயகர் ஆலயக் குருக்கள் பிரசாதம் வழங்கி வழியனுப்பிவைப்பர். இந்த ஆலயத்திற்குக் கொடிச்சீலை, கொடிக்கயிறு கொடுக்கும் வழக்கமும் சேனைத் தலைவர் வேடம் பூண்டு சூரசங்கார விழா நடத்தும் வழக்கமும் 1890ம் ஆண்டு முதல் தவறாது நடைபெற்று வந்தது. இவ்வழக்கத்தைச் செங்குந்த குல மக்கள் 1974ம் ஆண்டிலிருந்து ஏதோ காரணத்தினால் நிறுத்திக்கொண் டனர். இவ்விரு வழக்கங்களும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் பண்டைக் காலம் தொடக்கம் இன்றும் செங்குந்தகுல மக்களால் நிகழ்த் தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

1878ல் அடித்த புயல் ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயிலையும் மிகவும் சேதப்படுத்தியது. அதை அக்காலத்து வண்ணக்குமாராயிருந்த வண்ணக்குச் சின்னத்தம்பி முதலியாரும், (இவர் ஓமநாதர் நல்லதம்பியின் பெண் கொடுத்த மாமனார்) (திரு.சி. குமாரசாமி ஐயரின் பெண் கொடுத்த மாமனாரான) வண்ணக்கு சின்னத்தம்பி முதலியரும் திருத்தி அமைத்த னர். அன்றியும் தினப் பூசைகளும் விசேட பூசைகளும் சிறப்பாகச் செய்யப்பட்டு வந்தன.

ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் மேல் பக்தி விசுவாசங்கொண்ட வரும் திரு.கா. நெல்லிநாத வண்ணக்கரின் மனைவியுமான திருமதி. நெ. சின்னத்தங்கம் பிள்ளையில்லாமலிருந்து இப்பிள்ளையாரின் அருளால் ஓர் ஆண்மகவு கிடைக்கப்பெற்றார். அதனால் மனமகிழ்ந்து இவ்வாலயத்திற்கு ஓர் பெரிய வெண்கலக் குத்து விளக்கை அன்பளிப்புச் செய்து மகிழ்ந்தார்.

ஆரையம்பதி ஸ்ரீ திரு நீலகண்ட விநாயகர்மேல் பற்றும் பத்தியும் கொண்ட நொத்தாரிஸ் திரு. வே. மூத்ததம்பி முதலி கோட்டை முனையில் வசித்த தமது மருமகன் திரு.சி.கணபதிப்பிள்ளையவர்களுக்கு விதானை வேலை கிடைக்கவேண்டுமென்றும் கிடைத்தால் ஸ்ரீ வீரகத்திப்பிள்ளை யாருக்கு ஒரு மடமும் கிணறும் கட்டித்தருவதாகவும் நேர்த்திவைத்தார். திரு.சி.கணபதிப்பிள்ளைவர்களுக்கு விதானை வேலை கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் மனமகிழ்ந்து 1900ம் ஆண்டில் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வளவில் ஓர் மடமும் கிணறும் கட்டிக் கொடுத்தார். இக்கட்டிடம் பல வருடங்களாக ''சிவாநந்த'' வாசிகசாலையாகவும் சைவ மாணவர்களின் ஞாயிறு பாடசாலையாகவும் திகழ்ந்தது. இதில் திரு.பொ.செல்வராசா, திரு.ஆ.விநாயகமூர்த்திச் சாமியார் ஆகியோர் சமய வகுப்புக்களை நடத்தினர். இதில் கல்வி பயின்றவர்களில் திரு.வி. நாராயணதாஸ், திரு.வி. ஈஸ்வரதாஸ், திரு.க. கந்தையா, திரு.சி.விவேகானந்த முதலி யார், திரு.க. நடராசா முதலியார், காலஞ்சென்ற திரு.வே. கந்தசாமி முதலி ஆகியோர் சைவசமயப் பணியில் மிக்க ஈடுபாடுடையோராய்த் திகழ்வது குறிப்பிடத்தக்கது. அன்றியும் இவ்வாசிகசாலை அங்கத்தவர்கள் நாடகங்களையும் நடத்தியுள்ளனர். 'ஐயாதி' என்ற நாடகத்தில் சுப்பிறீந்தர் திரு. ஏரம்பமூர்த்தி, திரு.பொ.வி.கந்தையா நொத்தாரிஸ் ஆகியோர் திறம்பட நடித்தனர், என்று பலரும் கூறுவர். இக்கட்டிடம் தற்போது கோயிற் பூசகரின் வாசஸ்தானமாக உபயோகிக்கப்படுகிறது. திரு.கா.நெல் லிநாதர் அவர்கள் வண்ணக்கராயிருந்த காலத்தில் 1907ம் ஆண்டில் ஒரு பெரும் புயல் அடித்ததால் ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோவில் மிகவும் கூடிய சேதமடைந்தது. அந்நிலையில் தொடர்ந்தும் பூசை செய்ய முடியாத படியினால் சில வருடங்களின் பின் விக்கிரகங்களைக் கொண்டு வந்து தாமரைக்கேணியில் சைவ ஆசாரசீலரும், கல்விமானும், வைத்திய கலாநி தியும், சுவாமி விபுலாநந்தருக்கு சங்கத மொழிக்கல்வியைத் தொடங்கி வைத்தவருமான திரு.சி. குமாரசாமி ஐயர் அவர்களது இல்லத்தில் அமைந்த சுவாமி அறையில் வாலஸ்தானபம் பண்ணி பூசை புரியத் தொடங்கினர். இந்த ஐயர் அவர்களே பூசைகளையும் நிறைவேற்றிவந் தார். ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் புனருத்தாரண வேலைகளுக்காக விடப்பட்டது. சில வருடங்களின் பின் திரு.சி. குமாரசாமி ஐயர் அவர் களையே இவ்வாலய வண்ணக்கராகவும் தெரிவு செய்தனர்.

1924ம் ஆண்டு திரு.சி. குமாரசாமி ஐயரவர்கள், செங்குந்தகுல பெரியார்களும் மற்றும் சைவ அன்பர்களும் கொடுத்த நன்கொடைக ளையும் தன் கையிருப்புப் பணத்தையும் கொண்டு கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தம்பமண்டபம், மணிக்கோபுரம், பரிவார மூர்த்திகளின் கோயில்கள் ஆகியவற்றைத் திருத்தியும் சிலவற்றைப் புதிதாகவும் அழகாகவும் சிறப்பாகவும் கட்டிமுடித்து 1928ம் ஆண்டு பிரா மணக் குருக்கள்மாரைக் கொண்டு ஆகம விதிமுறைப்படி சம்புரோட்ஷ ணமாக கும்பாபிஷேகத்தையும் செய்து முடித்தார். அன்று தொடக்கம் 1947ம் ஆண்டு வைகாசி மாதம் அவர் சிவபதம் அடையும் வரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய நைமித்திய கருமங்கள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்று வந்தன.

1947ம் ஆண்டுக்குப்பின் வண்ணக்குமுறை நிறுத்தப்பட்டு நிருவாக சபை மூலம் கோயிற் கருமங்கள் நடைமுறைப்படத் தொடங்கின. அதன் பின் திரு.டி. என் நல்லதம்பி ஆசிரியர், திரு.வெ. திருநாவுக்கரசு ஆசிரியர், திரு.சி. சிவசுப்பிரமணியம் ஆசிரியர், ஆகியோர் காலத்திற்குக் காலம் தலைவர்களாகவிருந்து கோயிலை நடத்தினர். 1964ம் ஆண்டில் திரு.க.வே. சிதம்பரப்பிள்ளை நொத்தாரிஸ் அவர்கள் தலைவராகவும், வித்தவான் திரு.ந. நாகலிங்கம் அவர்கள் காரியதரிசியாகவும் இருந்து ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வளவின் எல்லைகளுக்கு மதில் கட்டி இரும்புக் கம்பியால் தலைவாசற் கதவும் அமைத்தனர். மதில் 1978ல் வீசிய சூறாவளியால் சேதமுற்றது.

1969ம் ஆண்டு முதல் திரு.பொ.வி.கந்தையா நொத்தாரிஸ் அவர்கள் தலைவராகவும், திரு.நா. ஸ்ரீபத்மநாதன் (நீர்ப்பாய்ச்சற் பகுதி அலுவலர்) அவர்கள் செயலாளராகவும் இருந்து ஆலய புனருத்தாரண வேலைகளுக்காக மூர்த்திகளை வாலஸ்தாபனஞ் செய்தனர். புனருத்தாரண வேலைகள் தொடங்கப்பட்டும் காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறவில்லை. அதனால் 21-11-76ல் நிருவாகம் புனரமைக்கப்பட்டு திரு.பொ.வி. கந்தையா நொத்தாரிஸ் அவர்கள் தலைவராகவும், திரு.செ. பூபாலரெத்தினம் ஆசிரியர் அவர்கள் செயலாளராகவுமிருந்து தூபி வேலை, பரிவாரக் கோவில்களின் திருத்தம் ஆகியவற்றைச் செய்தனர். 1978ல் வீசிய சூறாவளியால் சில சேதங்கள் ஏற்பட்டன. 1980ல் மதில்கள், திருத்தப்பட்டதுடன் மகா மண்டபமும், சீமேந்துபிளேட் போட்டுக்கட்டப்பட்டது. 1982ல் நிருத்த மண்டபமும், திருத்தியமைக்கப்பட்டது. இத்துடன் பெரும்பகுதி வேலைகள் நடைபெற்றுவிட்டன.

இந்த நிலையில் மீதி வேலைகளை நிறைவேற்றிக் கும்பாபிஷேகத்தை நடத்தவதற்குப் பொருட்களின் விலையேற்றமும், பணப் பற்றாக்குறையும் நிருவாகத்தினரை மனந்தளரச் செய்தது. எனினும், திரு.பொ.வி. கந்தையா (பிரசித்த நொத்தாரிஸ்) தலைவராகவும், திரு.கு. சோதிராசா (அதிபர்) செயலாளராகவும், திரு.ந. நாகலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்), திரு.ந. சுந்தரேசன் (கட்டிடக் கொந்தராத்துக்காரர்) ஆகியோர் உறுப்பினராகவும் கொண்டு இயங்கிய ஆலய பரிபாலன சபையினர் பெருமுயற்சி செய்து கோயில் திருத்த வேலைகளைப் பூரணப்படுத்தி சுக்கில வருடம் ஆவணி மாதம் 22ம் திகதி (7-9-1989) வியாழக்கிழமை மஹா கும்பாபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷேகம் செய்வித்து ஆனைமுகன் அருள் பெற்றனர்.

பிரதிஷ்டா குருவாக வியாகரண சிரோமணி சிவஸ்ரீ பூரண தியாக ராஜ சிவாச்சாரியார் B.A. Hons. அவர்கள் தலைமையில் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தின் பின்னர், சுக்கில வருடம் ஐப்பசி 6ம் திகதி (22-10-1989) ஞாயிற்றுக்கிழமை அஷ்டோத்திர சஹஸ்ர (1008) சங்காபிஷேகமும் நடைபெற்றது.

தற்பொழுது நித்திய பூசைகள் தவறாது நடைபெறுகின்றன. நகரின் மத்தியில் பூரணப் பொலிவுடன் விளங்கி, எல்லா ஆன்மாக்களுக்கும் அருள் பாலித்தவண்ணம் ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கொலுவிருக்கிறார்.

இக்கோவிலில் ஆதிகாலந் தொடக்கம் சங்கமக் குருக்கள்மாரும் பிற்காலத்தில் சைவக் குருக்கள்மாரும் பூசை செய்தனர். 1928ம் ஆண்டிலி ருந்து சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ சங்கரப்பிள்ளைக் குருக்கள், சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் ஆகியோரின் பரம்பரையில் வந்தவர்களே பூசை புரிந்தனர். 1947ம் ஆண்டுக்குப் பின்னர் பிராமணக் குருக்கள்மாரே தொடர்ந்து பூசை செய்துவருகின்றனர்.

இவ்வாலயத்தில் சித்திரை வருடப் பிறப்பு, சித்திரா பூரணைச் சித்திர குப்த விரதம், கந்தசஷ்டி விரதம், திருக்கார்த்திகை, விநாயக சஷ்டி விர தம், திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், மகா சிவராத்திரி, பங் குனி உத்தரம் ஆகிய விசேட பூசைகள் நடைபெறும். திருவெம்பாவைத் தீர்த்தம் அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத் தீர்த்தக்கேணியில் நடைபெறும். அன்று மதியம் அன்னதானமும் ஆராதனையும் நடைபெற்ற பின் பின்னேரம் சுவாமி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தை வந்தடைவர். இரவு திருப்பொன்னூஞ்சல் நடைபெறும்.

இவ்வாலயத்தில் கந்தபுராணம், காசிகாண்டம், திருவாதவூரடிகள் புராணம், சித்திரகுப்தர் கதை என்பன ப டிக் கப்பட்டு வந்தன. தற்போது காசிகாண்டம் படிக்கும் வழக்கம் நிறுத்தப்பட்டுவிட்டது. இக்கோவிலைப் பற்றிய தல புராணங்கள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. திரு.சி. குமாரசாமி ஐயர் அவர்களால் ஒரு பதிகம் பாடப்பட்டது. இன்னும் சதோதய முனிவர் அவர்களாலும் வீரகத்திப் பிள்ளையாருக்குப் பதிகம் பாடப்பட்டு இவையிரண்டும் அச்சிடப்பட்டுள்ளன. ஆரையம்பதியைச் சேர்ந்த திரு. சிவசோமசுந்தரம் டாக்டரும், திரு.நல். அளகேச முதலியார் அவர்களும், செல்வி திருமலர் சிவசிதம்பரப்பிள்ளையவர்களும், ஸ்ரீ வீரகத்தி விநாயகர்மேல் திருப்பதிகங்கள் பாடியுள்ளனர். பின்னிரண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அச்சிடப்படவில்லை. 1971ம் ஆண்டு இவ்விநாயகர்மீது யாழ்ப் பாணம் கரவையம்பதியைச் சேர்ந்த சைவ ஆசாரசீலரும், செங்குந்தகுலச் செம்மலுமான டாக்டர் திரு.க. குழந்தைவேலு அவர்கள் ''திருவூஞ்சல்'' பாக்களைப் பாடியுள்ளார். அவ்வாண்டிலேயே அச்சிலும் அது இடப்பட்டி ருப்பது போற்றற்குரிய விடயமாகும். இவ்வாலயத்தில் பரிவார மூர்த்திக ளாக வைரவர், முருகன், நாகதம்பிரான், கோயில்கள் அமைந்துள்ளன.

## கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருவூஞ்சற்பா.

வீசு புகழ் அரம்பையர்கள் நடனமாட
மேதக்க கந்தருவர் கீதம் பாட
பேசும் முயர் பல்லியங்கள் கணங்கள் ஆர்ப்ப
பேரொளி செய் மருத்துவர்கள் சிவிறிவீச
பூசுரரும் மாதவரும் வேதம் ஓதப்
பொங்கு தமிழ் வேதமதை நாமுமோத
வீசு நெறி கோட்டைமுனை விளங்கும் கோயில்
வீரகத்தி விநாயக ரேயாடீரூஞ்சல்.

சைவப்புலவர் டாக்டர் திரு.க. குழந்தைவேலு.

## மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருப்பதிகம்

அனைவீர கத்தியுனை யணைவார் தமக்குவினை
யணுகாதிருக்க வருள்வாய்
அழியா நிதிக்குவைக ளளியாலளிக்குமவ
ரடியார் பணிக் குதவுவாய்
கணையாழி சுற்று முகில் வணனார் நிதம்பரவு
கைலாய வெற்பிலுறையுங்
கமலால யத்தர் தரு முதல்வா வுனைப்பரவு
கரனார் தமக்கு னருள்தா
மணிமாட கங்களிறை யணிகோ புரம்பரவு
மட்டுக்களப்பு வளரும்
வண்ணக் கலிங்கமொடு மெண்ணற் கருங்கலைகள்
பண்ணற் பணிக்குள் நிறைவாய்
துணையாயிருந்த ததிக சுகமே தரும்பெரிய
தும்பிச் சுருங்கை யழகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர மதிக்குமர சந்தக் கவிக்குனருள்
தருவீர கத்தி சிவமே.

திரு.சிவ.சோமசுந்தரம் டாக்டர்.

## திருப்பதிகம்

'ஆதிமுதலான பெருசோதியுரு வானவொளி
அண்டங்களோங்கி நிலவ
ஆனைமுக மாகியுயர் ஞானதிருமேனி கொண்
டரு மறைகளேத்த வந்து
ஓதியுணர் மாமுனிவர் மாலயன் தேவர்கள்
உவந்தினிதுமலர்கள் சிந்த
ஓங்கார மெய்யுரு விளக்கியுயிர் யாவையும்
உய்க்குமிரு சத்தி முதல்வா
பேதையனிடத்தில் வளர் தாகத் தினாலடரும்
பிழையெலாம் பொறுத்து நிதமுன்
பெறலரும் பதமலர் பணிந்து யான் வாழ்ந்திடப்
பெருங்கருணை யீந்தருளுவாய்
போதிமர நீழல்கீழ் அருமறைகள் வழங்கியுறை
புத்தர் பொற் கோவில் மருவும்
புனிதமுயர் கோட்டைமுனை மத்தியிற் குடிகொண்ட
புகழ் வீரகத்தி பரமே'

ஆரையூர் நல். அளகேசமுதலியார் ஜே.பி

## திருப்பதிகம்

கனிதூங்கு சூதமுங் காய் மல்கு பாகலும்
கனத்த குலை வாழை கமுகும்
கன்னலொடு செந்நெல் விளை கழனி சூழ் மட்டுநகர்
காட்சி பல கண்டு மகிழும்
இனிமைசேர் கயமுகக் கடவுளே உன்னைநான்
ஏத்திப் பணிந்து நின்றேன்
இன்னலொடு நோய் பிணிகளென்னை வந்தணுகாமல்
இன்பசுகம் நல்கியருள்வாய்
தனியாக வருமாயன் மருகனே தற்பரா
தறுகண்மை காட்டல் தகுமோ
தந்தி முக நாதனே எந்தைசிவன் மைந்தனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவோடு காருமையா
பனி தூவியலை நா பரவுசூழ் கோட்டைமுனைப்
பட்டினநந் தன்னிலுறையும்
பார்பதி மைந்தனே பார்புகழ் வேந்தனே
பதி வீரகத்தி பரனே.

**செல்வி திருமலர். சிவசிதம்பரப்பிள்ளை ஆசிரியை**

தாமரைக்கேணியிலுள்ள குடியிருக்கும் வளவுகளில் பெரும்பாலா னவை வீரகத்திப்பிள்ளையார் கோயிலுக்குச் சொந்தமானவை. வீரகத் திப்பிள்ளையார் கோயில் சம்பந்தமாகத் தாமரைக்கேணியில் ஏராளமான வளவுகளும், ஸ்ரேஷன் றோட்டில் கடைக்கட்டிடங்களும் உள. இவை யெல்லாம் தாமரையார் தர்ம சாதனமாக நன்கொடை பண்ணிய ஆதனங் களாகும். இதே போல் அரசடிச் சந்தியையடுத்து கடைக்கட்டிடங்கள், கராஜ், சோடா மில், அரிசி மில், தேனீர்க்கடைள் முதலியன உண்டு என் றும் அறிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆவது இயல்:

## பிள்ளையார் கோவில் மூன்று.

## *(2) வீரமுனைச் சிந்து யாத்திரைப்பிள்ளையார் கோவில்*

மட்டக்களப்பிலிருந்து தெற்கு நோக்கிப் பொத்துவில் வரைக்கும் செல்லும் நீண்ட வீதியொன்றுண்டு. அவ்வீதி இப்பொழுது இன்னும் தெற்கே நீண்டு உகந்தை வரையும் செல்கின்றது. இவ்வீதியில் மட்டுநகரி லிருந்து இருபத்தேழாவது மைல் தூரத்தில் உள்ள காரைத்தீவிலிருந்து மேற்கு நோக்கி ஒரு வீதி பிரிந்து அம்பாரை, கல்லோயாக்குளம் முதலிய இடங்களுக்குச் செல்கின்றது. இதில் இடையில் உள்ளது சம்மாந்துறை என்னும் ஊர். அதன் பக்கலில் வீரமுனை என்னும் கிராமம் இருக்கின்றது. இது மட்டக்களப்பிலிருந்து சுமார் தெற்கு நோக்கி முப்பது மைல் தூரத்தில் இருக்கின்றது எனலாம். வீரமுனையைச் சுற்றி எங்கும் பரந்து செழித்த மருதநிலம் உண்டு. மட்டக்களப்பு மான்மியத்தின்படி வீரமுனை என்பது ஆதியிலே குடியேற்றம் பெற்ற ஊர். அதனைச் சூழ்ந்துள்ள வயல்கள் நெல்வளம் கொழிக்கும் பூமியாகும். ஆதியில் இங்குதான் மட்டக்களப்பு வாவியின் தென்கோடி முடிவுற்றது. சம்மாந்துறையும் வீரமுனையும் அடுத் தடுத்துள்ளமையால் வெளிநாடுகளிலிருந்து வரும் சிறிய கப்பல், வள்ளம், தோணி என்பன இவ்விடங்களில் தங்கும், அதனால் நீர்மூலம் அவ்வாறு வரும் முஸ்லீம்கள் சிலர் சம்மாந்துறையிலும், தமிழர் வீரமுனையிலும் குடியேறியுள்ளனர் என்பது வரலாறு. பிற்காலத்தில் முஸ்லிம் மக்களின் பெருக்கம் சம்மாந்துறையில் அதிகமாயிற்று.

கடந்த சுமார் இருபத்தைந்து வருடகாலமாகத் தொடர்ந்து அப்பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியாயிருக்கும் ஜனாப். ஏ. எம். ஏ. மஜீத் என்பார் தமிழர் முஸ்லீம்கள் என்ற பேதம் காட்டாத பண்பாளர். அவர் மட்டக்க ளப்பு சிவாநந்த வித்தியாலயத்தில் இளமை தொடக்கம் உயர்திரு. விபுலா நந்த அடிகளாரிடம் மாணவனாகப் பயின்றவர். அதனாற்போலும் சமரசம னப்பாங்கு இவருள்ளத்தில் வளர்ந்தது எனலாம். பின்னர் அதே கல்லூரி யில் இவர் என்னுடனும் உடன் ஆசிரியராக இருந்து பணிபுரிந்தகாலை இந்நிலையினை நேரில் அநுவித்துள்ளேன் என்பதை இங்கு குறிப்பிடுவ தில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒருமுறை ஏற்பட்ட சிறிய கலவரத்தால் வீரமுனை தீயுண்டது. அது பற்றி 'தீயுண்ட வீரமுனை' என்ற பாடல் நூலொன்றை 'ராஜபாரதி' என்ற புனைபெயர் கொண்ட கவிஞரான ஆசிரியர் இராஜதுரை இயற்றியுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைத் தமிழுலகம் நன்கறியும். அதற்கு முதலோ அன்றிப் பின்னரோ ஒரு போதும் கலவரம் ஏற்படாது அமைதியைப் பேணி மக்கள் வாழ்ந்தனர் என்பது தெளிவு.

இந்த வீரமுனையிலுள்ள சிந்து யாத்திரைப் பிள்ளையார் கோவில் என்னும் பெயர், காலகதியில் மருவி சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோவில் என்றும், சிந்தாத்திரைப் பிள்ளையார் கோவில் என்றும் இப்போது அழைக்கப்படுகிறது. இக்கோவில் முறைப்படி அமைக்கப்பெற்று நித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இக்கோவில் வரலாற்றைப்பற்றி அங்குள்ள ஏடொன்றிலிருந்து படி எடுக்கப்பெற்ற பாடல் ஒன்று பின்வருமாறு:

திருவருள் கயிலைச் சிவனருள்புரிய
மருவளரிலங்கை மன்னவனாம் வால
சிங்கனென்னும் சிறந்த பேருடையான்
சித்து வித்தையிற் செகமெச்சிய தீரன்
கலைஞானம் அறுபத்திநாலும் கற்றுத் தேறினோன்
இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும்
வேதம் நான்கும் விரும்பி யுணர்ந்தோன்
கமண குளிகையின் காரசக்தியால்
நானாதேச வள விகற்பங்களை
நன்றாய் அறிந்தோன் ஈழதேசமென்னும்
இலங்காபுரிக்கு இராசதானியெனக்
கண்டிமாநகரைக் கனம்பெற வகுத்துச்
செங்கோல் செலுத்தித் தேசத்தை யாள்கையில்
மன்னனும் அப்போ மணம் செய்யக் கருதி
துன்னு திரைகடல் துரிதமாகத் தாண்டி
மன்னு சோழன் மாதவப் புதல்வியை
மணமாலை சூட்டி மகிழ்ந்திருக்கையில்
இராசனும் தன்பவனாகிய இராணியாம்
அம்மாளுடன் சனங்களைச் சேர்த்து
சந்தோஷமாகத் தென்னிலங்காபுரி
சேர விரும்பி ஆரிய நாட்டு
அந்தணர் தம்மில் அச்சுதனை அங்காம்
அவர் மனைவி செந்திரு மாது
தேவியாருடன் திருவொற்றியூரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடி மறவாச் சந்திர சேகர
சமயதீட்சிதர் தையலாள் பார்பதி
கட்டுமாவடிக் கண்ணப்ப முதலி
முத்து நாயக்கன் முதலியோருடன்
குடிமங்களையும் கூட்டிச் சேர்த்து
கப்பலோட்டக் கைதேர்ந்தவரில்
சங்கரச் செட்டி சதாசிவச் செட்டி
இவர்களையேற்றி இராசனும் ராணியுமேறி
தென்னிலங்காபுரிதிசை நோக்கி வருகையில்
திரிகோணமலை திரைகடல் நடுவில்
கட்டிய தன்மையாய்க் கப்பலும் நின்றது
நின்றிடுங் கப்பலைக் கண்டதும் அரசன்
காரணமேதெனக் கண்டறிவோமென
ஏவலாளர்களை இறக்கிப் பார்க்கையில்
ஐந்து கரமும் ஆனைமுகமும்
அங்குச பாசமும் தாங்கிய கையுடன்
எங்கள் பிரான் எழுந்தருளி இருக்கிறார் என்னும்
அவ்வுரைகேட்டு அரசனும் திகைத்து
அந்தணர் தங்களை அன்புடன் பார்த்து
ஐயனே நீங்கள் ஆழியிலிருக்கும்
மெய்யனைக் கப்பலில் விரைவுடன் சேரென
அவ்வார்த்தை கேட்ட அந்தணரானோர்
கண்ணீர் சொரியக் கசிந்து மனதுடன்
வெள்ளமதம் பொழி விநாயக பிரானை
உள்ளன்புடன் ஊக்கமாய் நின்று
கணேசனை வாவெனக் கைகூப்பித்தொழ
அவ்வுருவாகும் ஐங்கரத்தண்ணல்
திருவடி தன்னைச் சீக்கிரம் காட்ட
கடலிலிருந்த கருணாகரனின்
பாதாரவிந்தம் பற்றிச் சேர்ந்தனர்
பற்றியபொழுது பாராளு மன்னன்
சித்தம் மகிழ்ந்து திருவடி வணங்கி
ஐந்து கரனே இச்சிந்து யாத்திரையில்
உன் திருவடிகாண எத்தவம் புரிந்தோம்
ஏத்தினோம் என்று இறைஞ்சிப் பணிந்து
கருணாகரனே இக்கப்பலானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிமாநகர்க் கரையை அடைந்தால்
ஆலயம் அமைத்து அவ்விடத்திலிருத்தி
பூசை செய்விப்பேனெனப் பூபதி போற்றினான்
இவ்வாய் திறந்து இராசனுந் துதிக்க
செவ்வாய் மடவாள் சிரசிற்கை கூப்பினாள்
கணேசனருளால் கப்பலும் ஓடி
சம்மாந்துறையைச் சார்ந்திடும் நகரம்
வீரமுனை என விளம்பிய நதிக்கரை
கப்பல் சேரக் கண்டு எல்லாரும்
கப்பலை விட்டுக் கரையிலிறங்கி
தச்சர் சித்தர் தட்டார் முதலிய
குடிமக்களைக் கோவுமழைத்து
ஐங்கரக் கடவுளுக்கு ஆலயமொன்று
சீக்கிரம் அமையெனச் செலவு கொடுக்க
அரசனுரைப்படி ஆலயம் அமைத்தார்
அந்தணராதியோர் அபிஷேகித்து
விநாயகப் பெருமானை வீழ்ந்தடி பணிந்து
கோமகனுரைப்படிக் கோயிலுள் வைத்தார்
கண்டியரசன் கணேஸப் பெருமானை
சிந்து யாத்திரையுள் திருவடி கண்டதால்
சிந்து யாத்திரைப் பிள்ளையார் என்னும் நாமத்துடன்
நித்திய பூசை நியமமாகச் செய்து
விநாயகராலயம் விளங்கிடும் பொருட்டு
செந்நெல் விளையும் சிறந்த நிலங்களும்
தேவாலயத்தின் திருப்பணிச் சாமான்
எல்லாவற்றையும் எழுத்தில் வரைந்து
அந்தணர் தங்களை அரசனழைத்து
பாசாங்குசக்கரன் பாதாரவிந்தம்
பாற்கடல் மீது பற்றிச் சேர்ந்ததனால்
சீர்பாதமெனச் சிறந்த பெயர் சூட்டி
அரசர்க்கும் தேவர்க்கும் அரும் விருந்தான
வெற்றிக் கொடியை விரும்பிக் கொடுத்து
வணிகர் தம்மையும் வரும்படி செய்து
இருசாதியாரும் இசைந்தெக்காலமும்
ஆட்சிபுரியுமென்று ஆசீர்வதித்து
எழுத்தைப் பாரரசன் இவர் கட்கீந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசனங்களால் கோயில் சிறக்க
சாதிக் காணிகள் சகலருக்குங் கொடுத்து
செங்கோல் வேந்தனுந் தேவியுமாக
கண்டி மாநகரைக் கனம்பெற அடைந்தார்.

இப்பாடலின்படி இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கப்பல் வரும் போது திருகோணமலைக்கண்மையில் கப்பல் தரித்து நின்றதும், அந்த இடத்தில் ஆழ்கடலில் பிள்ளையார் விக்கிரகமொன்று கண்டு எடுக்கப் பட்டதென்றும், சிந்து (கடல்) யாத்திரையில் கண்டெடுத்த இப்பிள்ளை யாரை வீரமுனையில் இறக்கி, அங்கு கோவில் கட்டி வழிபாடாற்றினர் என்றும் தெரிகின்றது. கோவில் கட்டுவதற்கு நிலமும், கோவிற் தொண்டர் களுக்கான குடியிருப்பு நிலமும், கோவிலுக்குரிய விளைநிலமும் மானியமாக வழங்கப்பட்டதென்றும் இப்பாடலால் அறிகின்றோம்.

உடன் சென்ற அந்தணர்கள் இப்பிள்ளையாருடைய பாதம் பற்றியத னால் 'சீர்பாதர்' எனப் பெருமைப்படுத்தப்பெற்றார்கள் என்றவொரு குறிப்பும் காணப்படுகின்றது. மட்டக்களப்பில் சீர் பாதக்காரர் என்று ஒரு பகுதி மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கும் இங்கு குறிப்பிடப்பெற்ற ''சீர்பாதர்'' என்னும் பெயருக்கும் தொடர்பிருத்தல் கூடும். இதுபற்றிக் காலஞ்சென்ற திரு. அருள் செல்வநாயகம் அவர்கள் எழுதிய கட்டுரை யினை இங்கு சேர்த்து நோக்குதல் அறிஞர் கடனாகும்.

இது தவிர இப்பிள்ளையார் கோயில் பற்றிய கல்வெட்டொன்றும் கிடைத்துள்ளது. அது வருமாறு:-

''சகார்த்தம் கஙயஎ (கி.பி.1317) ஆண்டு சய வருஷம் தை மாதம் உய (20) ம் தேதி வெள்ளிக்கிழமை கூடிய சுபயோக சுபதினத்தில் இலங்கை அதிபதி இராசேந்திரா சிம்மாசனத் தெழுந்தருளிய சமுகம் மதுரைப்பட்டணம் அருணாசலசெட்டி கந்தப்பச் செட்டி அவருடன் யக (II) செட்டிப் பிள்ளைமார்களும் குமாரத்திக்குதவியாகச் சிந்து யாத்திரைப் பிள்ளையாரையும் கொண்டு இலங்கைத்தீவு மட்டுக்களப்பு வீரமுனையில் வந்திறங்கி பிள்ளையாரையும் அவ்விடம் வைத்துப் போட்டு செங்கடக நகரி பண்ணகசாலையில் வந்து குமாரத்தியையுங் கொண்டு சேர்த்து இராசாவிடத்தில்ப் போய் முகதெரிசனை பண்ணி முட்டுக்குத்தித் தெண்டம்பண்ண, இராசா திருமனதிரங்கி என்ன வேண்டுமென்று கேட்க மட்டுக்களப்பு வீரமுனையில் குடியிருக்கவும் வயிற்று வளர்ப்புக்குப் பூமி சம்பத்துக் கிடைக்க வேண்டுமென்றதற்கு, இறங்கின இடத்தில் குடியி ருப்பு, பள்ளப்பத்து வெளியும், ஏத்தாலை வெளியும், முன்மாரிக்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமும், குளம் கோபுரம் கட்டிக் கொடுக்கப்படும். பூமிக்கெல்லையாவது கிழக்குத் தகட்டு முரிவளவும் ஏருக்கு நாட் பார்த்த கல்லுகாமுச்சி-3, வடக்கு வம்மியடிப்பிட்டி, தெற்கு ஏதுக்கல்லு காமுச்சி-2, இவ்வளவு நிலத்தையும் யஉ (12) செட்டிப்பிள்ளைமார்களும், அவரவர் பிள்ளை பிள்ளை தலைமுறைகளுக்கும் ஆண்டனுபவித்து வரவும், குமாரத்தி கொண்டுவந்த பிள்ளையாருக்கு நடுக்காட்டில் மல்வத்தை யூரும் அதற்குச் சொந்தக் குளம், வெளிக்காடும், மட்டுக்களப்பு நாடு முழுதிலுமிருக்கும் பெண் பிள்ளைகள் சகலரும் வருஷ சம்பளம், அதைக் கோயிலுக்கு நிசங் கொடுக்கவும் என்று நிச்சயித்துச் சிங்க முத்திரையும், திருமுகமும் திருக்கையும் கொடுத்தபடிக்குக் கொச்சி, கொல்லம் கோவை நாடச் சந்தவிருந்தரசாளும் புவனசிங்க சுவாமி நமசித்தே நமசித்தே நமசித்து.''

இந்தக் கல்வெட்டுப் பகுதியில் இராசேந்திரச் சோழன் பெயர் குறிப்பிடப்படுகின்றது. அக்காலத்தில் இருந்த சோழ அரசன் பெயரை இலங்கையிலிருந்த அவருடைய சிற்றரசருக்கு கூறுவதுண்டு. அவ்வாறான ஒரு தமிழ்ச் சிற்றரசருக்குப் பெண் கொண்டு வந்த செய்தியைக் கூறுகிறது இக்கல்வெட்டு. அவ்வாறு கொணர்ந்த பன்னிரண்டு செட்டிப்பிள்ளைமார்க ளுக்கும், வழியில் திருகோணமலைக்கருகே கடலில் கிடைத்தவர் இந்தச் சிந்து யாத்திரைப் பிள்ளையார். அவருக்கு அரசன் வீரமுனையில் கோவில் கட்டிக் கொடுத்த வரலாறும், அதற்குக் கொடுத்த காணி பூமி முதலிய மானியங்களும் இக்கல்வெட்டில் தெரிகின்றன.

இக்கல்வெட்டையும், இப்பாடலையும் பிரதிசெய்து கொடுத்தவர் காலம்சென்ற திரு.மு. அருணாசலம் என்பவர். வீரமுனையைச் சேர்ந்த இவர், மண்டூர்த் தபாற்கந்தோருக்குத் தபால் விநியோகிக்கும் உத்தியோ கத்தராக மாற்றம் செய்யப்பெற்று வந்தபோது, 'மண்டூர் முருகன் மலரடி சரணம்' என்று கூறி மனைவி மக்களோடு மண்டூரிலேயே குடியிருந்தவர். இவர் காலம் சென்றதால் இக்கோயில் பற்றிய ஆராய்ச்சி தடைப்பட லாயிற்று எனலாம்.

கல்வெட்டிற் கூறப்பட்டுள்ள காணிகளனைத்தும் இக்கோவிலுக்கு இப்போது கிடைப்பதாயிருந்தால் இதன் செல்வநிலை மிகுதியும் போற் றப்படலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆவது இயல்:

## பிள்ளையார் கோவில் மூன்று.

## *(3) மண்டூர் - நாகஞ்சோலை*

## *மாணிக்கப்பிள்ளையார் கோவில்*

இத்திருத்தலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் எழுந்த பழமையான தாகும். 1107 ஆம் ஆண்டு வரை மண்டூர்ப் பகுதியை அரசாண்ட தமிழ்ச் சிற்றரசன் மண்டுநாகன் என்பவன். அவனே மண்டூர் முருகையன் கோவிலையும், கோவிற்போரைதீவுச் சித்திர வேலாயுத சுவாமி கோவிலை யும் புதுப்பித்து வளம் செய்தான் என்பதை அக்கோவில்கள் பற்றிய கட்டு ரைகளில் அறிந்தோம்.

மண்டூர்க் கோட்டைமுனைத் துறையில் இவனது கோட்டையொன்று இருந்தது என்பது ஐதீகம். இப்படிப் பழமையான கட்டிடங்கள் இருந் தற்குச் சான்றாக மண்டூர்க் கோட்டை முனைத் திடரிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் பல இடிசுவர்களும் அத்திவாரங்களும் அவ்வி டத்துக்காடுகளுக்கிடையே காணப்படுகின்றன. இத்துறையடியிலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்துக்கு மேற்கு நோக்கி ஒரு நேர் கோடு கிழித் தால், அக்கோட்டில் முறையே துறையடி மாரியம்மன் கோவிலும், மண்டூர் முருகையன் கோவிலும், சுமார் பத்து வருடங்களுக்கு முன் தோன்றிய ஒரு நாகதம்பிரான் கோவிலும் முடிவில் இந்த மாணிக்கப்பிள்ளையார் கோவிலும் இடம் பெறக் காணலாம்.

மண்டுநாகனுக்குப் பின்னர் மாகோன் என்பவன் (1215-1245) ஆட்சிக்கு வந்தான். இம்மன்னனுக்கும் கண்டி இராச்சியத்துக்குமிடையே பலவிதத் தொடர்புகள் இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள. கண்டிக்குப் போகவும் வரவுமான ஒரு வழி, இம்மாணிக்கப்பிள்ளையார் இருக்கும் இடத்தருகே சென்றது. இதனால், முதலில் வழிப்போக்கர் ஒருவர் வழிய ருகே நின்ற ஒரு ஆலமரத்தின் கீழ் விநாயகப் பெருமானை நினைந்து சிலையொன்றினைவைத்து வழிபாடாற்றினர். அந்த ஆலமரத்தின் பின்னால் வழிக்குக் குறுக்காக அருவியொன்றும் ஓடிக்கொண்டிருந்தது. அந்த இடமும் விநாயகருக்குப் பொருத்தமாக அமைந்தது. எனவே அந்த வணக்கமும் வழிபாடும் நிலைபெற்று விட்டது எனலாம்.

இந்த இடம் நாகமரங்கள் நிறைந்த ஒரு பெருஞ்சோலையாகும். ஆனை அரவம் நாகஞ்சோலையில் பேர்பெற்ற ஒன்று. சுமார் ஐம்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளின் முன்பு எல்லாம் இந்த ஒலி மண்டூரையே கலக்கி நிற்கும். இது நானும் நேரில் அறிந்த உண்மை. எனது தந்தையாரும் இன்னும் மூவரும் சேர்ந்து, (விநாசித் தம்பி, பூபாலபிள்ளை, முருகேசபிள்ளை, தம்பார் ஆகியோர்) அப்போதைய ஆங்கில அரசினரிடமிருந்து, ஆளுக்கு மூன்று ஏக்கர் காட்டு நிலத்தை இப்பிள்ளையாரடி முன்றிலில் வாங்கிக்காடு வெட்டித் திருத்தி வயலாக்கினார்கள். ஆனால் வேளாண்மை செய்து, வயல் எப்படி விளைந்தாலும் வீட்டுக்கு நெல்லே வந்து சேருவதில்லை. காரணம், வேளாண்மை வெட்டியபின் வைக்கும் சூட்டை ஆனைகள் இரவில் வந்து தின்று அழித்துவிடுவதாகும். அதனால், எல்லோரும் சேர்ந்தும், பின்னர் தனித்தனியாகவும் பொங்கலிட்டுப் பெரிய பூசைகள் செய்து 'ஆனைக்கரைச்சல்' குறைய இப்பிள்ளையாரை வேண்டிச், சில ஆண்டுகளில் வெற்றியும் பெறலாயினர். இக்காலங்களில் இந்தப் பொங்கல் பூசைகளை மேற்கூறிய நால்வரில் ஒருவரான பூசாரி தம்பாரே செய்து வந்தார். இத்தம்பார் என்பவர் துறையடி மாரியம்மன் கோவிலுக்குரிய ஒரு பங்குப் பூசாரியாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்லாண்டு காலமாக மர நிழலில் வீற்றிருந்த பிள்ளையாருக்கு திடீரென ஒரு நாள் ஆலமரம் வீழ்ந்து வெறுமை செய்தது.பின்னர் சில காலத்தால் (நூறு வருடங்களின் முன்பு) பலர் சேர்ந்து நீளமான மண்டபமொன்றை கர்ப்பக்கிருகம் போன்ற அறை ஒன்றுடன் அமைத்தார்கள். அக்காலத்திலே சின்னான்சாமி என்று யாவரும் அழைக்கும் சந்நியாசி ஒருவர் கோவிற் பூசைப் பணிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். பின்பு காலப்போக்கில் பொங்கலும் பூசனைகளும் வளரலாயின.

மண்டூர்த் தீர்த்தத்தன்று, மண்டூர் முருகன் கோயிலைத் தஞ்சமாகக் கொண்ட சாதுக்களும், சந்நியாசிகளும் இங்கு சென்று மிகப் பெரிய பொங்கல் செய்து பூசைகளாற்றுவது வழக்கம். இத்தகைய ஒரு விழாவில், சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் 1934 ஆம் ஆண்டு ஸ்ரீ சரவண பவாச் சாமியார் தலைமையில் நடந்த பூசையில் யானும், என் உடன் மாணவர் சிலரும், சம்மாந்துறையைச் சேர்ந்த ஆசிரியராகிய காலஞ் சென்ற பரசுராமபிள்ளை என்பாரும் கலந்து பயன்கொண்டமை இந்த இடத்தில் நினைவுக்கு வருகின்றது. அப்போது ஸ்ரீ சரவணபவாச் சாமியிடமிருந்து இக்கோயில் பற்றி வரலாற்றுத் தொடர்புள்ள சில குறிப்புகளை அறிய முடிந்தமை பெரும்பேறெனக் கருதுகின்றேன்.

ஸ்ரீ சரவணபவாச்சாமி எங்களைப்பார்த்து, சிறப்பாக என்னிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உனது இனத்தவருக்கு மண்டூர் முருகையன் கோவிலில் வண்ணக்கர் என்ற வேலையைத் தந்தது யார்'? என்று கேட்டார். அதற்கு யான் 'தெரியாது சுவாமி' என்றேன். பின்னர் 'கண்டனொடு சருகுபில்லி கட்டப் பத்தன்' என்ற ஒரு பாடலின் முதலைச் சொல்லி இதில் வருகிற அந்த அரசன் பெயரென்ன என்றார். அதுவும் எனக்குத் தெரியாதாகையால் அவ்வாறே பதிலிறுத்தேன். 'அவன் தான் மாகோன் என்னு மரசன்' என் றார். 'அவனே இப்பெருமானுக்கு ஒரு சிறு கோவிலையும் கட்டினான். அந்தக் கோவில் இப்போது இல்லை' என்று கூறினார். அப்போது இந்தப் பாடல் எனக்குத் தெரியவில்லை. இப்பாடல்,

''கண்டனொடு, சருகுபில்லி, கட்டப்பத்தன்,
கருதரிய கவுத்தனும், அத்தியாயன்,
மண்டலத்தில் பொன்னாச்சி, வயித்தி யென்று
கோவசியர் மக்களிலே வருணமாக்கி
பண்டுமுறை தவறாமல் எழுகுடியாய்ப்
பகுத்தீசர் பணிபுரியப் பரவணியாய்
அண்டர் தமைச் சாட்சிவைத்துத் தத்தம் செய்தான்
அணிதிகழும் மாகோனாம் அரசன் தானே''

என இப்பொழுது அறிந்து கொண்டேன்.

கண்டன்குடி, சருவிலிகுடி, கட்டப்பத்தான்குடி அல்லது சங்கரப்பத் தான்குடி, கவுத்தன்குடி, அத்தியாகுடி, பொன்னாச்சிகுடி, வச்சினாகுடி என்ற ஏழு குடிகளையும் எடுத்துக்காட்டுவது இப்பாடல். இக்குடிகளில் முதல் மூன்று குடிகளையும் திருக்கோவிலிலும், மற்றைய குடிகளை மண்டூர், பழுகாமம், களுவாஞ்சிக்குடி என்னுமிடங்களிலும் குடியேற்றினர் என்பதும், இவர்களிலிருந்தே திருக்கோவில், கொக்கட்டிச்சோலை, மண் டூர் முதலான இடங்களிலுள்ள கோவில்களுக்கு வண்ணக்குமார் தெரிவு செய்யப்படுவர் என்பதும் மாகோன் செய்த இறுதி உரையாகும்.

இது ஒரு பாலாக, மண்டூர்க் கோவிலிருந்து கப்புகனார் ஒருவர், முன் னர் கதிர்காமத்திற்குப் பலாப்பழம் ஒன்றை நேர்த்திக்கடன் பண்ணிக் கொண்டுபோய் ஒரு மதிய பூசைக்குக் கொடுத்துவிட்டு மறுநாள் மதிய பூசைக்கு மண்டூருக்கு வந்தார் என்பது ஐதீகம். இவர் சென்ற வழி இம்மா ணிக்கப் பிள்ளையார் கோவிலடி வரைக்கும்தான் அறியமுடிந்தது. அவர் சென்று வந்த அச்சுருக்கமான வழியை மற்றையோரால் அறிய முடிய வில்லை. பிறகு அவ்வழியே சென்றுவந்த ஒரு சிலரை நாமறிவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டூரிலிருந்து காலஞ்சென்றவர்களான ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும், பாலமுனைக் கோணாமலை உபாத்தியாயர் அவர்களும் அவருட் குறிப்பிடத்தக்கோராவர். இவர்கள் கதிர்காமத்திலுள்ள மாணிக்கப்பிள்ளையாரை நினைந்து, மண்டூர் நாகஞ்சோலையிலுள்ள இப்பிள்ளையாரையும் மாணிக்கப்பிள்ளையார் என்று சொல்லி வழிபாடாற்றிச் சென்றுள்ளார்கள் எனத் தெரிகிறது. இவைகளால் இத்தலத்தின் பழமையையும், இப்பிள்ளையாரின் பெயர்க் காரணத்தையும் ஒருவாறு ஊகிக்க முடிகின்றது.

மண்டுநாகன் என்பவனுக்கும், மாகோன் என்பவனுக்கும் இடைப்பட்டு வேறு சிற்றரசர்கள் ஆண்ட காலம் சில கழிகின்றது. மண்டுநாகன் காலத்திலிருந்து, மரநிழலின் கீழ்வைத்து வழி படப்பெற்றுவந்த இப்பிள்ளையாருக்கு மாகோன் சிறு கோவில் ஒன்று அமைத்திருத்தல் கூடும். இவன் போரைதீவுச் சித்திரவேலாயுத சுவாமி கோவிலும், மண்டூர் முருகையன் கோவிலும் மண்டுநாகனுக்குப் பின்னர் வந்தவரால் இடித்து அழிக்கப்பட்டதால் அவற்றை மீண்டும் புதுப்பித்தான் என்று மட்டக்களப்பு மான்மியத்தால் அறிகின்றோம். அப்படி அவற்றைக் கட்டும்போது இம் மாணிக்கப் பிள்ளையாருக்கும் கோவில் அமைத்தான் என்பதையே ஸ்ரீ சரவணபவா சாமியாரும் குறிப்பிட்டுள்ளார். இங்கு இவ்வாறான கட்டிடங்கள் இருந்தமை என்பதற்கு கோவிற் கிணறுகள் தோண்டும்போது வந்த பழைய கட்டிட அத்திவாரங்களும் சான்றாகின்றன.

இப்போது நடைமுறையில் தினப்பூசையும், வெள்ளிக்கிழமைகளிலும், மற்றும் விசேட நாட்களிலும் சிறப்புப்பூசைகளும் நடைபெறுகின்றன. அடியார்கள் ஆற்றும் பொங்கல் பூசைகளும் தினமும் பெருகிக் கொண்டேவருவது இம்மூர்த்தியின் மகிமையைக் காட்டுகிறது. சேனநாயக்க சமுத்திரம் கட்டப்பட்ட பின்னர் நீர்ப்பாசன வசதி மிகுந்ததால் இப்பகுதிக் காடுகள் அழிக்கப்பட்டு, வயல் நிலங்களும், குடியேற்றத் திட்டங்களும் பெருகியுள்ளன. இதனால் இப்பகுதியிலுள்ள குடியேற்றத் திட்டங்களில் வாழ்வோர் இம்மாணிக்கப்பிள்ளையாரைத் தம் வாழ்வின் உயர்வு நலம் குறித்து வழிபாடாற்றுதலும் பெருகியுள்ளது.

இக்கோயிலுக்கு நாமறிந்த வரையில் மூன்று ஏக்கர் நெற்காணி சொந்தமாயுள்ளது. வழிபடுவோருள்ளிருந்து ஒரு குழு தெரிவு செய்யப்பட்டு நடைமுறை நிருவாகத்திலுள்ளது. ஆயினும் இக்கோயில் முறையாக மண்டூர் மக்களால் பொறுப்பேற்கப்பட்டு நிருவாகம், ஆலயக் கட்டிட வேலைகள் என்பன நடத்தல் வேண்டும் அனைத்திற்கும் நாகஞ்சோலை மாணிக்கப்பிள்ளையார் திருவருள் துணை நின்று வழிநடத்துமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 ஆவது இயல்:

## சிவன் கோவில் ஒன்று.

# செட்டிபாளையம் சோமநாத இலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோவில்

மட்டக்களப்பிலிருந்து கல்முனைக்குச் செல்லும் பிரதான பாதையில் மட்டுநகரின் தெற்கே பன்னிரண்டு மைல் தொலையில் அமைந்திருப்பது செட்டிபாளையம் என்னும் சீர்பெறுகிராமம். செட்டிமார் பாளையமிட்டிருந்து தங்குமிடம் என்ற கருத்தில் இவ்வூரின் பெயர் அமைந்துள்ளது. வடக்கே குருக்கள் மடம் என்னும் கிராமத்தினையும் தெற்கே மாங்காடு என்னும் கிராமத்தினையும் கிழக்கே வங்காளவிரிகுடாக் கடலையும் மேற்கே மட்டக்களப்பு வாவியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது இக்கிராமம். நெய்தல் நிலமும், மருத நிலமும், தம்முள் மயங்கி நிற்கும் காட்சியை இக்கிராமத்தில் காணலாம்.

பொருட்செல்வமும் அருட்செல்வமும், கல்விச் செல்வமும் நிறைந்த தான, பண்பான, பழமையான ஒரு கிராமம் இது. கிழக்கிலங்கையில் வாழ்ந்த கணபதிப்பிள்ளைப் புலவர், சின்னவப்புலவர் ஆகியவர்கள் இக் கிராமத்தினைச் சேர்நதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கிராமத்தின் வடக்கு எல்லையில் சித்தி விநாயகர் ஆலயமும் தெற்கு எல்லையில் ஸ்ரீ முருகன் ஆலயமும் அமைந்துள்ளன. ஊரின் மத்தியில் வங்காளவிரிகுடாக் கடலையும், மட்டக்களப்பு வாவியையும் இணைக்கும் வகையிலே நேரான தொரு பாதையுண்டு. இப்பாதை செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலயத்துடன் தொடர்புடையதாகக் கர்ணபரம்பரைக்கதை கூறுவர். அம்மன் கோயிலின் அடிக்கல் நாட்டும் நேரத்தை அறிவிப்பதற்கு கடலிலே ஒரு வெடி கேட்குமெனவும் அப்பொழுது "கட்டாடியார்" எனப் படும் பூசகர் அடிக்கல் நாட்ட வேண்டுமெனவும் அம்மன் கட்டளையிட்டாராம் என்று ஒரு ஐதீகம். இப்பாதையும் பிரதான பாதையும் சந்திக்கும் இடம் நாற்சந்தியாக அமைந்துள்ளது. இச்சந்தி செட்டிபாளையத்தின் கேந்திரஸ்தானமாகவும், மத்திய இடமாகவும் முக்கியம் பெற்று விளங்குகிறது. இப்பாதையின் மேற்குப்புற முடிவிடத்திலேயே செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

மகா வித்தியாலயம் அமைந்துள்ள இச்சந்தியிலிருந்து கிழக்கே சுமார் 50 யார் தொலைவில் இச்சிவன் கோயில் அமைந்துள்ளது. கடற்கரை சார்ந்த இடமாகையினால் வெண்ணிறமணல் கோயில் வீதியைப் புனிதமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி நிற்கின்றது. கோயிலில் இருந்து சுமார் 1/2 மைல் தொலைவிலே கடல் கண்ணுக்குத் தெரிகின்றது. 1/4 ஏக்கர் நிலப்பரப்பு இக்கோயிலுக் குரியது. கம்பிவேலியிடப்பட்டு இவ்விடம் பாதுகாக்கப்பட்டுள்ளது. கல்லாலான ஆலயம் இவ்விடத்தில் பொலிவுடன் காட்சி தருகின்றது. மடாலய அமைப்பிலேயே ஆலயம் கட்டப்பட்டுள்ளது. மூலமூர்த்தியாகச் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்த இலிங்கம் இந்தி யாவில் இருந்து ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிகளால் தருவிக் கப்பட்டது. இது நுட்பமான வேலைப்பாடுகளும் பூரணமான உருவமும் உடையது. இரண்டாம் மண்டபத்திலே சோமகலாநாயகியின் திருவுரு வமும் விநாயகர் திருவுருவமும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. சண்டேஸ்வரர், நந்தி பலிபீடம் ஆகியனவும் அமையப்பெற்றுள்ள இவ்வாலயம் தெற்கு வாயிலான அமைக்கப்பட்டுள்ளது. அம்பாளும் தெற்கு நோக்கிய பார்வை யிலேயே வைக்கப்பட்டுள்ளார். வெளியே வைரவர் ஆலயமும் உண்டு. தீர்த்தக்கிணறு, மடைப்பள்ளி ஆகியனவும் அமையப் பெற்றுள்ளன. வீதியைச் சுற்றிப் பலவகைப்பட்ட பூ மரங்களும் நட்டுப் பராமரிக்கப்படு கின்றன. வில்வமரங்கள் அதிகமாகக் காணப்படுவது விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும். இக்கோயிலின் மேற்குப் புறமும், தெற் குப் புறமும் பாதைகள் எல்லைகளாகவுள்ளன. கிழக்கும், வடக்கும், மக்க ளுடைய குடியிருப்புகள் காணப்படுகின்றன. ஆலய வீதி எந்த நேரமும் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்யப்பட்டு புனிதமான நிலையில் வைக்கப் பட்டுள்ளது.

கிழக்கிலங்கையிலே, கிராமப் பகுதிகளிடையே சமய அறிவு குறை வாகவும், விழிப்புணர்ச்சி குறைவாகவுமிருந்தகாலத்திலே இவற்றை ஊட்டிவளர்த்தவர்களுள் ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகரி சுவாமிகளும் குறிப்பிடக்கூடியவர். இவர் இந்தியாவைச் சேர்ந்தவர். தமிழ், சிங்களம், ஆங்கிலம், அறபு, மலையாளம் போன்ற பல மொழிகளைப் பேசக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர். சமய உண்மைகளை நன்றாகக் கற்றறிந்தவர். மகா பாரதம், கம்பராமாயணம், கந்தபுராணம், போன்றவற்றைப் பற்றியும், சமய தத்துவங்களைப் பற்றியும் பல இடங்களிலே பிரசங்கம் செய்தார். குருக்கள் மடத்திலே மகாவிஷ்ணு ஆலயத்தினை அமைத்தவரும் இவரே. இவரது முயற்சியினால் 1940ம் ஆண்டு தை மாதம் வாலிபர் சங்கம்'' அமைக்கப்பட்டது. 23-05-40ந் திகதி பெண்களுக்கென ''திருவருள் மாதர் சங்கம்'' ஒன்று அமைக்கப்பட்டது. வாலிபர் சங்கம் வெள்ளிக்கிழமை தோறும் ஆலயத்தில் கூடிக் கூட்டுப்பிரார்த்தனையும் கூட்டமும் நடத்தி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர் சங்கம் செவ்வாக்கிழமைகளில் இவ்வாறு நடாத்தி வருகின்றது. ஓலைக்கொட்டிலால் அமைக்கப்பட்ட ஆலயத்தில் சுவாமி தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட அந்த நிகழ்ச்சி இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அண்மையில் இச்சங்கத்தின் 2040 கூட்டம் நடைபெற்று முடிந்துள்ளது. மேலே குறிப்பிட்ட இரு சங்கங்களும் அவை ஆரம்பிக்கப் பட்ட தினங்களில் தமது ஆண்டு விழாக்களை நடாத்திவருகின்றன. அன்றைய தினம் ஆண்டறிக்கையும், வரவு செலவுக் கணக்கறிக்கையும் வாசிக்கப்படுவதுடன் நடப்புவருட உத்தியோகஸ்தர் தெரிவும் இடம் பெறுகின்றன. இவ்விருசங்கங்களுமே இவ்வாலயத்தின் நிருவாகப் பொறுப்பினை ஏற்று நடாத்திவருகின்றன.

1940ம் ஆண்டு சுவாமி அவர்களால் இந்தியாவிலிருந்து அழகிய அருள் பொழியும் சிவலிங்கமொன்று தருவிக்கப்பட்டது. அச்சிவலிங்கம் தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஓலையினால் அமைக்கப்பட்ட கோயிலில் வைத்துப் பூசிக்கப்பட்டு வந்தது. அவ்விலிங்கமே இன்றும் மூலமூர்த்தியாக எழுந்தருளியுள்ளது. இவ்வாலயத்திற்குச் சொந்தமாக வருமானம் தரக்கூடிய எந்த வசதிகளும் இருக்கவில்லை. ஆலயத்தினைக் கற்கோயிலாக்க வேண்டுமென்ற ஆசை சுவாமிகளுக்கும் பக்தர்களுக்கும் இருந்தது. ''சிறுதுளி பெருவெள்ளம்'' என்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டனர். வாலிபர் சங்க உறுப்பினர்களிடம் மாதாந்தச் சந்தாப்பணம் ஒழுங்காக வசூலிக்கப்பட்டது. மாதர் சங்க உறுப்பினர்கள் தமது வீடுகளில் சமைக்கும் போது ஒவ்வொரு பிடியரிசி சேமித்து அவற்றைச் செவ்வாய்க்கிழமைகளில் ஆலயத்தில் ஒன்று சேர்த்து நியாய விலைக்கு விற்றுப் பணம் சேர்த்தனர். காணிக்கை மூலம் கிடைத்த பணம் முதலியனவும் ஒழுங்காகச் சேகரிக்கப்பட்டுச் சேமிக்கப்பட்டன.

''யாவர்க்குமாம் உண்ணும் போதொருகைப்பிடி'' எனத் திருமூலர் கூறியதன்படி சுவாமிகளின் ஆலோசனைப்படி செய்து வரும் ஒரு கிராமம் செட்டிபாளையம் என்பதனைப் பெருமையுடன் குறிப்பிடலாம். இவ்விரு சங்கங்களின் அயரா முயற்சியினாலும், கிராம மக்களின் பூரண ஒத்து ழைப்பினாலும், சுவாமிகளின் அருளாசியினாலும், இறைவனின் திருவ ருட் கடாட்சத்தினாலும் 1981ம் ஆண்டு கற்கோயில் ஒன்று கட்டிமுடிக்கப் பட்டது. கோயிலின் கட்டிட வேலைகளில் அநேகமானவை சிரமதான அடிப்படையிலேயே செய்து முடிக்கப்பட்டன.

இவ்வாலயத்திற்குக் கும்பாபிஷேகம் செய்யவும் ஆயிரம் திருநாமம் உடைய சிவனுக்கு ஓர் திருநாமம் சூட்டவும் ஆலோசனை செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலே கடலருகிலே பத்திரகிரியென்னும் இடத்திலே தெற்கு வாசல் கோயிலாகச் சிவன் கோயில் ஒன்றுண்டு. உதயகாலச் சூரிய கிரணங்கள் இச் சிவலிங்கத்திலே பட்டுப்பிரகாசமாக இருக்குமாம். அங்குள்ள சிவனுக்கு "சோமநாதர்" என்று பெயர். இவ் ஆலயமும் கட லுக்கு அண்மையில் தெற்கு வாயிலாக அமைந்திருப்பதினால் இங்குள்ள சிவனுக்கும் "சோமநாதர்" என்ற நாமம் பொருத்தமானதென எண்ணினர். அது மட்டுமன்றி இவ்வாலயம் அமைவதற்குத் தூண்டுகோலாக இருந்த வரும் இச் சிவலிங்கத்தைக் கொண்டு வந்த வருமான சுவாமிகளுடைய பெயரும் "சோமேஸ்வரானந்தகிரி" என்பதினால் அவருடைய பெயரும் ஞாபகமாக அமையக்கூடிய வகையிலே இச்சிவனுக்கு "சோமநாதர்" என நாமகரணமிடப்பட்டது. அம்பிகைக்குச் சோமகலாநாயகி" எனப் பெயர் சூட்டப்பட்டது. மங்களகரமான துன்மதி வருடம் ஆனி மாதம் 4ந் திகதி வியாழக்கிழமை (18-6-1981) முற்பகல் 10-00 மணி 06 நிமிடம் தொடக்கம் 11 மணி 54 நிமிடம் வரையிருந்த மூலநட்சத்திர சித்தயோக சிம்மலக்கின புத ஓரை கூடிய சுப மூகூர்த்த வேளையில் களுதாவளைப் பிள்ளையார் ஆலய பூசகர் சிவஸ்ரீ சு. சந்திரசேகரக்குருக்கள் அவர்களின் தலைமையில் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இத்தருணத்தில் ஸ்தாபகரான சோமேஸ்வரானந்தகிரி இவ்வுலகில் இல்லாது சமாதிய டைந்து விட்டார்கள்.

அதன் பின்னர் எம்பெருமான் அருட்கடாட்சத்திலே இச் சிவனா லயத்தைச் செட்டிபாளையம் சைவப் பெருமக்களின் அயராத உழைப்பி னாலும் சுற்றியுள்ள கிராமத்து மக்களின் நிதியுதவியினாலும் கற்களால் மேலும் கட்டிப் புனருத்தாரண வேலைகள் செய்து சென்ற சில ஆண்டுக ளுக்கு முன்னே பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது. இதனைக் குறிக்கும் நோக்காகவும் எம்பெருமான் எழுந்தருளிய 44ம் ஆண்டு நிறைவு விழாவாகவும் 23-5-84ல் விசேட பூசை ஆராதனை களும் கதாப்பிரசங்கங்களும் சைவ தத்துவச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

தற்போதைய நிலையில் சுவாமி வீதிவலம் திருவிழாக்கள் நடைபெற வில்லை. விசேட தினங்களில் விசேட பூசைகளும் தீர்த்தோற்சவங்களும் நடைபெறுகின்றன.

01. தை வருடப் பிறப்பு
02. தைப்பூசம்
03. மாசிமகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. மகா சிவராத்திரி
05. சித்திரைப் புதுவருடப் பிறப்பு
06. சித்திரா பௌர்ணமியில் சித்திரைக் கதை
07. ஆனி உத்தரம்
08. ஆடி அமாவாசை
09. நவராத்திரி
10. கேதார கௌரி விரதம்.
11. கார்த்திகை விளக்கீடு
12. கார்த்திகை முப்பது
13. சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்
14. திருவெம்பாவை
15. திருவாதிரை

என்பன முக்கியமாகக் கொண்டாடப்படுகின்றன.

மகா சிவராத்திரி, நவராத்திரி, கேதாரகௌரிவிரத முடிவு, திருவாதிரை ஆகிய நாட்களில் தீர்த்தமாடுகின்றனர். திருவாதிரையையே திருவிழாவுக்குரிய நாளாகக் கொண்டு மகா தீர்த்தமாடுகின்றனர். வாகனங்கள் எதுவுமில்லையாயினும் பூந்தொட்டில் எனப்படும் சிறிய தேரில் சுவாமியின் ஆலயத்தின் அமைப்பை எழுந்தருளப்பண்ணிக் கடலிலே தீர்த்தமாடிவருகின்றனர். மிக விரைவில் வாகனங்கள் எழுந்தருளிகள் செய்தெடுத்து முறையான திருவிழாக்களை நடாத்தவும் நவக்கிரக ஆலயம் ஒன்றினை அமைத்துக் கொள்ளவும் நிருவாகம் திட்டமிட்டுள்ளது.

தற்போதைய நிலையில் நான்கு தீர்த்தங்கள் இடம் பெறுகின்றன. இவை கடலிலேயே நடைபெறுகின்றன. மகா சிவராத்திரி, நவராத்திரி, கேதாரகௌரி விரதம், திருவெம்பாவை முடிவு ஆகியனவே அவை.

இன்று இவ் ஆலயத்தில் காலை, உச்சி, மாலை வேளைகளில் தினமும் மூன்று காலப் பூசை நடைபெறுகின்றது. இப் பூசைகள் சாதி அடிப்படையிலேயோ குடும்ப அடிப்படையிலேயோ தெரு அடிப்படையிலேயோ அன்றி நடைபெறுகின்றன. வருடம் முழுவதற்கும் செட்டிபாளையம் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பம் ஒவ்வொரு நா ளையப் பூசைக்கும் பொறுப்பு ஏற்றுள்ளனர். பூசைக்கு வேண்டிய குறிப்பிட்ட சாமான்களை அவர்கள் கொடுக்க வேண்டும். அத்துடன் பூசகரின் ஒரு நாள் சாப்பாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்குரிய அளவு அரிசி காய்கறி வகைகள் ஆகியனவும், சம்பளப் பணமாக ரூபா 15/= ம் கொடுக்க வேண்டும்.

இச்சிவன் கோயில் கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ளது. நிருவாகிகள் மிகவும் நம்பிக்கையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்து வருவதினால் ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. பெருந்திரளான மக்கள் கூடித் திருவிழா முதலியன நடாத்துவதற்கு ஆலய வீதி போதுமானதாக இல்லை. எனினும் செட்டிபாளையம் கிராமத்தைப் பொறுத்த அளவில் சைவசமயப்பணி செய்யக்கூடிய ஒரு சிறந்த நிறுவனமாகச் சிவன் கோயில் அமைந்துள்ளதென்பது குறிப்பிடக்கூடியது. இக் கோயிலின் எல்லைகள் விஸ்தரிக்கப்படக்கூடிய நிலை கெதியில் ஏற்பட்டு, கோயில் நிலப்பரப்புக் கூடியதாக ஆகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 ஆவது இயல்:

## முருகன் கோவில் ஆறு.

## *1. ஈழத்து - திருச்செந்தூர்*

## முருகன் ஆலயம், புது கல்லடி.

ஈழத்துக் கிழக்குக் கரையில் மீன்பாடும் தேனாடெனப்புகழப்படும் மட்டக்களப்பில், கல்லடியின் கடலோரத்தில் இவ்வாலயம் அமைந்துள் ளது. இக்கடற்கரையில் நின்று கொண்டே காலைக் கதிரவன் செக்கச் செவேலென கடலில் உதயமாகும் காட்சியையும், மாலைக் கதிரவன் மறை யும் காட்சியையும் கண்டு களிக்கலாம். மட்டக்களப்பு மாநகர் மக்கள் மாலைப் பொழுதை உல்லாசமாகக் கழிக்க இக்கடற்கரைக்கு கூட்டம் கூட்டமாக வருவார்கள். ஓ என்று அகன்று விரிந்த நீளமான கடற்கரை சிறுவர்களும் பெரியோர்களும் ஓடி விளையாடக்கூடிய வெண்மணற் பரப்பு.

இக்கடலோரத்தில் தான் எத்தனையோ அரசாங்கத் திணைக்களங் களும் அரச உத்தியோகஸ்தர்களுக்கு வீடுகளும் அமைக்கப்பட்டிருக்கின் றன. இக்கடலோரத்தில் சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்கள் முன்பே சிதானந்த தபோவனம் என்ற பெயரில் ஓர் ஆச்சிரமம் அமைத்திருந்தார். அங்கு அவர் அனேகமான தென்னைமரங்களையும் நாட்டியிருந்தார். இப்போது அத்தபோவனம் ஓர் தென்னந் தோட்டமாகவே காட்சியளிக் கிறது. இத்தென்னை மரங்கள் இக்கடற்கரைக்கு மேலும் ஒரு இயற்கை அழகையும் களிப்பையும் அளிப்பதாக இருக்கின்றன.

இந்தத் தென்னந்தோட்டத்தின் மத்தியில்தான் ஈழத்து திருச்செந்தூர் முருகனுக்கும் ஆலயம் கட்டடப்பட்டிருக்கிறது. ஈழத்து திருச்செந்தூர் முரு கன் ஆலயம் மட்டு மாநகரில், அதுவும் கல்லடியின் கடலோரத்தில் அமைந்துள்ள சிதானந்த தபோவனத்தின் மத்தியில் கட்டவேண்டிய ஏற்பட்டதன் காரணத்தை ஓங்காரானந்த சுவாமிகளே கூறுகிறார்கள்.

1965 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் மஹா சிவராத்திரி தினத்துக்கு முதல் இரவு எனது சிவானந்த ஆச்சிரமத்தில் படுத்திருந்தேன். அன்றிரவு கனவில் தபோவனம் தோன்றியது, அப்போது தபோவனத்தில் ஒரே ஒரு பனைமரத்தைத் தவிர வேறு மரங்களே கிடையாது. அந்தப் பனைமர நிழ லில் ஒரு காவி உடை தரித்த சுவாமிகள் உட்கார்ந்திருந்தார்கள். எனக்குத் துறவிகளென்றாலே ஒரு தனிப்பிரியம். அவரைக் கண்டதுமே அவசரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமாக அவர் இருந்த இடத்துக்குச் சென்றேன். சுவாமிஜீ! எதற்காக இங்கு வந்தீர்கள்? எப்போது வந்தீர்கள்? எங்கிருந்து வந்தீர்கள்? இப்போது எங்கு போகிறீர்கள்? என்னுடைய உதவியும் எதற்காவது உங்கட்குத் தேவைப்படுகிறதா? என்றெல்லாம் பலகேள்விகளை அன்பாகக் கேட்டேன். மௌனமாக எனது கேள்விகளையெல்லாம் செவிமடுத்துக் கொண்டிருந்த சுவாமிகள் புன்முறுவல் பூத்தமுகத்துடன் தளதளத்த குரலில் இனிமையான தொனியில் விடை பகர்ந்தார்கள்.

''கடலை நோக்கித் தனது வலது கரத்தை நீட்டிய சுவாமி அதோ தெரிகிற திருச்செந்தூரில் தான் நான் இருக்கிறேன். இவ்வழியால் கதிர்காமம் போவது எனது வழக்கம். இப்போதும் கதிர்காமத்துக்குப் போகத்தான் வந்தேன். எக்காலமும் போன்று இன்றும் இந்தப் பனைமரத்தடியில் ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கிறேன். நீயாவது ஒரு சிறு கொட்டிலை இங்கு கட்டி விட்டால் இங்கும் சில நாட்கள் நான் தரித்துப்போக வசதியாயிருக்கும். முடிந்தால் அதைச் செய்துவிடு என்றார்கள்.'' அவ்வளவுதான் நான் கனவு நிலைமாறி நனவுநிலைக்கு வந்துவிட்டேன். ஆனாலும், இந்நிகழ்ச்சிகளெல்லாம் எனக்கு நன்றாக நினைவிலிருந்தன. படுக்கையிலிருந்தபடியே சிந்திக்கத் தொடங்கிவிட்டேன். எனது தந்தையாரும், இன்னும் பல பெரியார்களும் பலமுறை சொன்ன ஒரு விடயம் எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. அதாவது ''முருகன்'' இரவு கதிர்காமம் போகிறார். மயிலின் தோகைகள் இழுபட ஒளிமயமாகப் போவதை நாங்கள் பார்த்தோம் என்பதே அது.

ஆகவே, ஓர் உறுதியும் ஆனந்தமும் எனக்குத் தென்பட்டது. முருகன் தான் இன்று அடியேனுக்கும் காட்சியளித்துள்ளார். அதுமட்டுமல்ல; எனக்கு ஓர் பணியையும் செய்யும்படி கட்டளையிட்டிருக்கிறாரே; இன்று சைவ சமயத்தவர்களுக்கெல்லாம் மிகவும் முக்கியமான மஹா சிவராத்திரி தினமுமல்லவா! முருகன் எனக்கிட்ட கட்டளையை இன்றே எப்படியும் நிறை வேற்றியாகவேண்டும். முருகன் அமர்ந்திருந்த அதே இடத்தில் ஒரு கோவில் கட்டிவிடத்தான் வேண்டும் என்ற உறுதியும் பூண்டு விட்டேன். ஆனாலும், கோவில் கட்டுவது தனிப்பட எல்லாருக்கும் முடிந்த காரியமா? அதுவும் திடீர்க்கோயில் கட்டவேண்டுமே!

திருச்செந்தூர் தமிழகத்தின் தென் கிழக்குக் கோடியில் திருநெல்வேலியிலிருந்து சுமார் 56 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. முருகனின் ஆறுபடை வீடுகளில் இதுவும் ஒன்று. மற்றப்படை வீடுகளில் குன்றிலும் மலையிலும் குடியிருக்கும் குமரன். இங்கே அலைவீசும் கடற்கரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாகக் கோயில் கொண்டிருக்கிறான். காலையிளங் கதிரவன் நீலவானில் செக்கச் செவேலெனத் தோன்றும் காட்சி, முருகப் பெருமான் நீலமயிலில் அமர்ந்து வருவதைப் பக்தர்களுக்கு நினைவூட்டும். இத்தகைய ஒரு காட்சியைக் கண்டு பக்திப் பரவசமடைந்த அருட்பிரகாசர் இராமலிங்க வள்ளலார்,

'சங்க மொலித்தது, தாழ்கடல் விம்மிற்று,
சண்முக நாதரே வாரும்,
உண்மை வினோதரே வாரும்,
அருணன் உதித்தனன் அன்பர்கள் சூழ்ந்தனர்,
ஆறுமுகத்தோரே வாரும்,
மாநிலத்தோரே வாரும்,

என்று பாடிக் களிக்கிறார். திருச்செந்தூர் சென்று, கலியுகப் பெருமானாகவும் கண்கண்ட தெய்வமாகவும், விளங்கும் வள்ளி மணாளனைக் கண்ணாரத் தரிசித்து, ஆறுமுகனை பாமாலையால் பாடிப் புகழ்ந்த புலவர்கள் பலர். நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் திருச்செந்தூரை இரண்டாவது படை வீடாகச் சிறப்பிக்கிறார். அருணகிரிநாதரின் 84 திருப்புகழ்ப் பாடல்கள் அழகான செம்பொன் மயில் மேலமர்ந்து அலைவாயுகந்த பெருமானைப் போற்றுகின்றன. பிறவியிலேயே ஊமையாயிருந்த குமரகுருபரர் செந்திலம்பதியை அடைந்து பேசுந்திறன் பெற்றுக் கதிர்வடிவேலனின் பேரில் ''கந்தர் கலிவெண்பா'' வாகக் கவிமழை பொழிந்தார். பகழிக்கூத்தர் திருச்செந்தூர்ப்பிள்ளைத் தமிழ் பாடிக் குறமகன் மணவாளன் அருளால் தமக்குற்ற தீராத வயிற்று வலி நோய் நீங்கிக் குணமடைந்தார். எழுத்தறிவற்ற ஆலய மடப்பள்ளி ஊழியரான வென்றிமலை என்பவர் அடியார்க்கெளிய ஆறுமுகன் அருளால் திருச்செந்தூர் ஸ்தல புராணம் பாடியுள்ளார். ஸ்ரீ ஆதிசங்கரர் செந்தில் நகர் வந்து செந்திலாண்டவனை வழிபட்டு ஷண்முகர்பேரில் ''ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கம் என்ற வடமொழி நூலைப்பாடினார். புஜங்கம் என்றால் தோளால் நகர்ந்து செல்லக்கூடிய பாம்பு என்று பொருள். இச் சொல் வடமொழியில் ஒருவித யாப்பைக் குறிக்கும். இத்தகைய புஜங்கக் கவிச் சொற்கள் பாம்பு வளைந்து செல்வதுபோல் சரளமான வார்த்தைகளால் அமைந்துள்ளபடியால் இப்பாமாலைக்குப் ''புஜங்கம்'' என்ற பெயர் விளங்குவதும் பொருந்தும்.

ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர் அவர்கள் ஒரு சமயம் சுற்றுப்பிரயாணம் செய்துவருங்காலத்து இவர்களுடைய கல்வி தவம், இவைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக்களைக் கண்டு பொறாமையுற்ற அபிநய குப்தர் என்ற புலவர் ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியாரவர்கள் மீது மந்திர ஏவுதல் செய்ததின் விளைவாக ஆச்சாரிய சுவாமியவர்கள் காச நோயால் பீடிக்கப்பட்டார்கள். இவ்வு பாதையைப் பொறுக்கமுடியாது இவர் தவிக்கும் காலத்து ஓரிரவு சிவபெரு மான் கனவில் தோன்றி ஸ்ரீ ஜெயந்திபுரம் என்ற தலத்தில் ''ஜயவின் பவடிவமாய் விளங்கும் செந்திற் குமரனைத் தரிசனம் செய்தால் இவ்வி யாதி அடியோடு நீங்கிவிடும்'' என்று சொல்லி விபூதிப் பிரசாதத்தை ஆச்சாரியார்களுடைய கையில் கொடுத்து அருளினார். அதை வாங்கித் தம் மேனியில் பூசிக் கொண்டு விழித்தெழுந்தார் ஆச்சாரியார்.

உடனே காலையில் யோகமகிமையால் ஆகாய மார்க்கமாகத் திருச்செந்தூர் என வழங்கும் ஸ்ரீ ஜெயந்திபுரம் வந்தடைந்தார். அத்தலத் தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியைத் தரிசிக்கச் சென்றகாலத்து அப்பெம்மானின் திருவடிகளில் ஆதிசேடன் பூஜை செய்து வருவதைக் கண்ணுற்றார். உடனே, 'பாம்பு' என்ற பொருள் விளங்கும் வடமொழிச் சொல்லாகிய ''புஜங்கம்'' (புஜம்+கம், தோளால் நகரக்கூடி யது) அரவம் என்ற வார்த்தையையே தலைப்பாகக் கொண்ட திருச் செந் தூர் முருகப் பெருமானுடைய திருவடிகளிலே வடமொழியில், முப்பத்தி மூன்று கவிகளைக்கொண்ட பாமாலையொன்றை இயற்றிச் சூட்டினார். இதுதான் ''திருச்செந்தூர் சுப்பிரமணிய புஜங்கமாகும்.

செந்திலாதிபன் மகிமையைச் செவ்வனே விளக்குவதும், பக்திச்சுவை மிகுந்ததுமான இப்புஜங்கத்தை அடியார்களும் தமிழில் படித்துப் பயனெய்துமாறு கோவை கவியரசு வித்துவான் கு.நடேசக்கவுண்டவர்கள் தமிழில் தமிழ்ச்சுவை பக்திச் சுவை இவைகள் நனிசொட்டக் கருத்துப் பிசகாமல் கனியாக மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார்கள். இக்கவிகளைத் தின சரி பாராயணம் செய்வோர்களிடம் நோய், நொடி, வலிப்பு, பூதபைசாசம் முதலியன அணுகா, தீராத நோயாளிகள், மந்திரபைசாச ஏவுதலால் வாட்டப்படுபவர்கள், இப்புஜங்கக் கவிகளைப் பக்தி ததும்பப்பாடி விபூதி தரிப்பார்களேயானால் சகலவித பீடைகளிலிருந்தும் விடுபட்டவர்களாவார்களென்பது ஸ்ரீ சங்காரச் சாரிய சுவாமிகளின் அருள்வாக்கு. பின்வரும் ஐந்து பாடல்களையும் புஜங்கத்தின் மொழி பெயர்ப்பில் இருந்து இங்கு பயன்படும் என்று தருகின்றேன்.

1. சொல்லேது பொருளேது கவியேது வசனந்
துகளேதும் இல்லாத தேதென்பதறியேன்
எல்லேறு மறுமாமுகச் சோதி யிதயத்
திருந்தே நறுந்தே னெனும் பாடல் தருமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மயிலூர்தி சதுர்வேத மறைகின்ற பொருளோன்
மனந்தன் வசங்கொள் மகனுள்ள முறைவோன்
பயிலும் மகாவாக் கிலக்கன் சிவன் சேய்
பனவர்க்கு மெய்த் தேவை நினைவின் கண்வைத்தேன்.

3. பெருவேலை யோரத்திலே பாவ நீக்கும்
பிரசித்தி சேர்சித்தர் வாழ்கந்த வெற்பில்
ஒரு சோதி வடிவோடு குகை மேவு செந்தூர்
உயிருக்கொருயிர் செம்பொடி பற்றுவோமே.

4. பொற்கோயிற் பொன் மணிக் கட்டிலேறிப்
பொலிகின்ற ஒரு கோடி ரவிமங்க வீசும்
விற்கோல நற் செந்திலிற் கார்த்திகேயன்
விபுதேகனைச் சிந்தை விழைகின்ற தாலோ.

5. குறமாதி னிருதுங்க தனகுங்கு மந்தான்
கொடுசேந்ததோ அன்பர் குலமீது கொண்ட
திறமான அனுராகம் வெளிநின்றிதோ நின்
திருமார்பில் ஒளி செந்திலாயஃது தொழுவேன்.

குறிஞ்சி நிலக் கடவுளான முருகனுக்கு உகந்த இடம் குன்றும் மலையுமே எனினும் செந்திலம் பதியில் மட்டும் அவன் கடற்கரையில் அமர்ந்திருப்பதற்குக் காரணம் உண்டு. தேவர்களைச் சிறைபிடித்துக் கொடுமைபுரிந்த சூரபத்மன் திருச்செந்தூர்க் கடலில் வீரமகேந்திரபுரி என்னும் கோட்டையில் வசித்து வந்தான். அவனை அழிப்பதற்காகவே அவதரித்த முருகன், படையோடு இங்குவந்து தங்கி, சூரனோடு, போரிட்டு அவனை அழித்துத் தேவர்களைச் சிறை மீட்டபின் இங்கே கோயில் கொண்டருளினான்.

ஆறு நாட்கள் கடும்போர் நடந்தது. சூரனின் தம்பிமார்களும் மற்ற அசுரர்களும் போரில் மாண்டனர். கடைசியில் சூர பத்மனுக்கும் ஆறு முகனுக்கும் கடுமையான யுத்தம் நடைபெற்றது. முருகனின் சுடர்வேல் சூரனின் உடலை இரு கூறாக்கியது. சூரன் அழிந்தான். அவன் உடலின் இரு கூறுகளும் மயிலும் சேவலுமாக மாறின. அவற்றை முருகன் ஏற்று மயிலைத் தன் வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் அமைத்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரசம்ஹாரம் முடிந்ததும் முருகப் பெருமான் தன் தந்தையாகிய சிவபெருமானைப் பூசை செய்ய விரும்பினான். அதற்காகத் தேவ தச்சன் மயன் இக்கோயிலை உருவாக்கினான். கோயிலின் கருவறையில் பாலசுப் பிரமணியன் சிவலிங்கத்துக்குப் பூசை செய்யும் கோலத்திலேயே இன்னும் காட்சியளிக்கிறான். வருடம் முழுவதும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலி ருந்தும் பக்தர்கள் செந்திலம்பதியை அடைந்து வடிவேல் முருகனை வணங்க, வந்த வண்ணம் இருக்கின்றனர்.

ஈழத்து மக்களும் பெருந்தொகையானோர் அங்கு சென்று வழிபா டாற்றி வந்தனர். குறிப்பாக கந்தசஷ்டி காலத்தில் பெருந்தொகையினர் ஈழத்தில் இருந்தும் சென்று, அங்கேயே தங்கியிருந்து விரதமனுஷ்டித்து, முருகனை வழிபட்டுவருவது வழக்கம். ஆனாலும் இடைக்காலத்தில் ஏற் பட்ட போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் காரணமாக ஈழத்து மக்கள் செந்தி லம் பதிகக்குச் செல்வது மிகவும் குறைந்து விட்டது. இந்நிலைக்கெல்லாம் கழுவாயாயிற்று சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்கள் கண்ட மேற்படி கனவு. இம்முகமாகத்தான் சுவாமி அவர்கள் ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலயத்தை உருவாக்கியிருக்கிறார்.

சுவாமிகளின் வாயிலிருந்து மிகுதியைக் கேட்போம். ''ஒரு வேல் செய்து அவ்விடத்தில் நிறுவுவதானாலும் சில நாட்களாகும். என்னதான் செய்வதென்று ஒன்றுமே எனக்குத் தோன்றவில்லை. ஆனாலும் இறுதியில் ஓர் முடிவுக்கு வந்தேன். காலையில் எழுந்து, கடன்களை முடித்துக் கொண்டு, ஆச்சிரமத்தை ஒரு முறை சுற்றிவந்தேன். அங்குகிடந்த கருங் கற்களில் ஒரு நல்ல கல்லைத் தேர்ந்தெடுத்தேன். (உளி,சுத்தியல் போன்ற ஆயுதங்களைக் கொண்டு கல்லைப் பலமுறை) புரட்டிப் புரட்டி ஓர் பிள் ளையாருடைய வடிவத்துக்கு உடைத்தேன். வேலை முடிந்ததும், கடைக் குச் சென்று கற்பூரம் ஊதுபத்தி அபிஷேச் சாமான்கள் ஆகியவைகளும் வெற்றிலை, பாக்கு, பழங்களும் வாங்கிக் கொண்டு வந்தேன். ஆச்சிரமத் திலிருந்த சீமந்திலும் அவரை பக்கட் அளவு எடுத்தேன். மேசன் கரண்டி, மட்டப்பலகை ஆகிய சாமான்களையும் எடுத்தேன்.

இவைகளையும் எனது உடைப்பாலெழுந்த பிள்ளையாரையும் ஓர் பையில் போட்டு எனது துவிச்சக்கரவண்டியில் வைத்துக் கட்டினேன். சுமார் காலை ஒன்பது மணியளவில் தபோவனத்துக்குப் போய்விட்டேன். அது தபோவனத்தின் ஆரம்ப காலமாதலால் ஒரு துண்டுக் கல்லைக்கூட அங்கு காணமுடியாது. வெறும் மணலாலும், சீமந்தாலும் கோவில் கட்ட முடியுமா? சிறிது நேரம் நின்று கொண்டே என்னசெய்வதென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்தேன். ஓர் முடிவு தோன்றி சாமான்களைக் கொட்டிப் புத்திரமாக வைத்து விட்டு அவைகொண்டுவந்த பையைத் தோளில் போட்டுக் கொண்டு கடற்கரையை நோக்கிச் சென்றேன்.

அங்கு நெடுநேரம் அலைந்து திரிந்து சில சல்லிக் கற்களை பொறுக்கிப் பையில் போட்டுக் கொண்டு பனைமரத்தடிக்கு வந்து சேர்ந்தேன். இவற்றையெல்லாம் பயன்படுத்தி பனைமரத்தடியில் முருகன் அமர்ந்திருந்த இடத்தில் ஓர் மேடை அமைத்தேன். அதன் மத்தியில் நான் கொண்டுவந்த கல்லுப் பிள்ளையாரையும் நிறுவிப்பார்த்தேன். பனைமரத்தடிப் பிள்ளையார் அழகாகவே இருந்தார். அபிஷேகம், பூசை, அர்ச்சனை, தீபாராதனை, மந்திர ஜெபம் எல்லாம் செய்து முருகனை நினைத்து வழிபட்டு விட்டு மீண்டும் துவிச்சக்கரவண்டியை எடுத்துக் கொண்டு, எனது ஆச்சிரமத்துக்கு வந்துவிட்டேன். அன்று முதல் அப்பனைமரத்தடி ஒரு வழிபாட்டிடமாகவே இருந்து வந்தது.''

இது நடந்து சுமார் ஒருவருட காலமிருக்கலாம். கவியோகி சுவாமி சுத்தானந்த பாரதியார் அவரது இலங்கை வருகையின் போது, மட்டக்களப்புக்கும் வந்திருந்தார். இக்கோயில் இருக்கும் இடத்துக்கும் வருமாறு சில அன்பர்கள் சேர்ந்து அழைத்தோம். அவரும் ஏற்றுக் கொண்டார். அந்தக் கோவில் இருக்கும் இடத்தில் அவசரமாக ஓர் ஓலைக்கொட்டிலும் கட்டினோம். ஒரு வேலும் செய்தெடுத்தோம். பாரதியாருடன் வேலையும் ஊர் வலமாக மேள வாத்தியத்துடனும் கூட்டுப் பிரார்த்தனையுடனும் கொண்டுவந்தோம். பாரதியார் யாக பூசைகளெல்லாம் செய்து, வேலையும் அந்த ஓலைக் கொட்டிலில் அமைந்திருந்த மேடையில் பிரதிஷ்டை செய்தார்கள். அன்றுமுதல் இக்கோவில் ''ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம்'' என்று அழைக்கப்பட்டது. இது நடந்தது 1966ம் ஆண்டு வைகாசி மாதம் என்று நம்புகின்றேன்.

சில ஆண்டுகளின் பின்பு இந்தியாவிலிருந்து வந்திருந்த சிதம்பரப் பிள்ளை என்ற பெயரையுடைய சிற்பாசாரியைக் கொண்டு திருச்செந்தூர் முகனுடைய வடிவில் ஒரு சிலையும் செய்து பிரதிஷ்டை செய்தோம். 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட சூறாவளியின் போது கோவில் எல்லாமே விழுந்து தரை மட்டமாகிவிட்டது. சில மாதங்கள் கழிந்ததும் மீண்டும் அதே இடத்தில் ஓலையால் கோவிலைக் கட்டிவிட்டோம். எக்காலமும் ஓலைக்கொட்டிலைக் கட்டுவது மிகவும் சிரமமான காரியமாக இருந்தது. ஆகவே கல்லால் ஒரு சிறிய அறை கட்டி அதில் சுவாமியை வைத்து விட வேண்டும் என்ற எண்ணமே முற்பட்டுத்தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகிய ஏற்பாடுகளும் செய்தோம். விளம்பரப்பத்திரம் அச்சிட்டு ஊர் மக்களையும் வரவழைத்து செய்திகள் யாவும் விளக்கினோம். செயல் தொடர்ந்தது.

அதற்கமைய 1980ம் ஆண்டு ஒக்டோபர் அடிக்கல் நாட்டு விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. அப்போது அரசாங்கக் கட்டிடத் திணைக் களத்தில் பிரதம பொறியியலாளராகக் கடமையாற்றிய திரு.எஸ். சுப்பிரமணியம் அவர்கள் இவ்விழா சிறப்புற நடைபெறுவதற்கு பெரிதும் உதவினார்கள். கால ஓட்டத்திலே ஒரு அறை கட்டுவதென்ற திட்டம் மாறி, துவிதள விமானத்தைக் கொண்ட கர்ப்பக் கிரகமும், அர்த்தமண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், தம்ப மண்டபம், முதலியவைகளையும் கொண்ட ஒரு பெரிய கோவிலாக எமது திட்டமே மாறிவிட்து.

கோவிலுக்கு 5-2-84ல் மஹா கும்பாபிஷேகமும் மிக விமரிசையாக நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 40 நாட்கள் மண்டலாபிஷேகமும், கடைசியில் சங்காபிஷேகமும் நடைபெறலாயின. சங்காபிஷேகம் முடிந்ததும் முருகன் அலங்காரத்தேரில் எழுந்தருளி இரு தினங்கள் மட்டக் களப்பு மாநகரில் சுற்றி எத்தனையோ ஆயிரம் மக்களுக்குத் தரிசனம ளித்து மீண்டும் ஆலயத்துக்க வந்து சேர்ந்தார். பொன்னூஞ்சல் நிகழ்ச்சி யுடன் விழாக்கள் இனிது நிறைவேறின.

இதுவரை காலமும் இந்து ஆலயங்களில் நடைபெற்று வருவது போன்று, இவ்வாலய கும்பாபிஷேக நிகழ்ச்சிகளுக்கு பிராமணரோ, சிவா சாரியர்களோ அழைக்கப்பெறவில்லை. ஏனைய துறவிகளினதும் உதவி யைக் கொண்டு சுவாமி ஓங்காரானந்த, சரஸ்வதி அவர்களே வாஸ்து சாந்தி, யாகபூஜை, கும்பபூசை மூர்த்தி பிரதிஷ்டை, எண்ணெய்க்காப்பு சாத்துவித்தல், தூபி அபிஷேகம் முதலிய கிரியைகளை எல்லாம் செய்து முடித்து 5.2.84 பகல் 11.30 மணியளவில் மகா கும்பாபிஷேகத்தையும் மிகவும் சிறப்பாக நிறைவேற்றினார்கள். அதேவேளை சுவாமி பிரேமாத்மானந்தஜீ அவர்களும், சுவாமி ஜீவனானந்தஜீ அவர்களும் இரா மகிருஷ்ண சங்கச் சார்பில் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தார் கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றும் காவி உடைதரித்த துறவிகளே இங்கு பூசைக் காரியங்களெல் லாம் செய்து வருகின்றனர். தொழிலுக்காக கோவில்களில் பூசைக் காரியங் கள் செய்பவர்களைவிட இவர்கள் மிகவும் பயபக்தியுடன் மக்களுடைய தொண்டாகவும், பிரதி பலன் கருதாமலும் இக்காரியங்களைச் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார்கள். இது எதிர்காலத்தில் இந்துமத வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

ஆலயத்தில் காலை 7.00 மணிக்கும் பகல் 12.00 மணிக்கும் இரவு 6.30 மணிக்கும் தினமும் மூன்று காலம் நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன. தினமும் மூன்று வேளையும் பூசை முடிந்த பின்பு பக்தர்கள் கர்ப்பக்கிருக வாசற்படிவரை சென்று முருகப் பெருமானை நேர்முகமாக தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். இவ்விடயத்தில் சாதிமத, இன, பால் வேறுபாடுகளும் இல்லாமல் எல்லாருமே முருகப் பெருமானின் குழந்தைகள் என்ற ரீதியில் முருகனைத் தரிசித்து அருள்பெற்று வருகிறார்கள். இந்நிகழ்ச்சி பக்தர்களை மிகவும் கவர்வதாகவும் மகிழ்விப்பதாகவும் இருக்கின்றது. இதுவரை காலமும் ஆலயத்தின் உள்ளே காலடி கூட எடுத்துவைக்கத் தகுதியற்ற சாதியினர் என்று ஒதுக்கப்பட்டிருந்தவர்களுக்கும் இச்சம்பவம் ஓர் பெரிய வரப்பிரசாதமாகவே இருக்கின்றது.

பக்தர்கள் செவ்வாய்க்கிழமை தோறும் எவ்வித கட்டணமும் மின்றி இலவசமாகவே உள்ளே சென்று நேர்முக தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பல நூற்றுக்கணக்கான மக்கள் பலபாகங்களிலுமிருந்து செவ்வாய்க் கிழமைதோறும் ஆலயத்துக்கு வருகிறார்கள். கட்டணம் செலுத்தி நேர்முக தரிசனம் செய்ய இயலாதவர்களுக்கும் கூட இது ஒரு பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது - நேர்முக தரிசனம் செய்யச் செல்வோருக்கு பத்து நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அந்த நிபந்தனைக்கமைய அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகிறது.

நேர்முக தரிசனத்துக்குரிய விதிகள்:

1. பக்தர்கள் சாதி,மத,இன பால் வேறுபாடின்றி மூலஸ்தானம் வாசல் படிவரை சென்று முருகனை நேர்முக தரிசனம் செய்யலாம்.
2. நேர்முக தரிசனத்துக்கு வருபவர்கள் முடியுமானவரை உடல் உள்ளத் தூய்மையுடனும் ஆசாரத்துடனும் வரவேண்டும்.
3. நேர்முக தரிசனம் தினமும் மூன்று காலமும் பூசை முடிந்த பின்பு நடைபெறும்.
4. நேர்முக தரிசனத்துக்குரிய அனுமதிப் பத்திரத்தை முன்பே காரியாலயத்தில் பெற்றுக் கொண்டு வடக்கு வாசல் கதவின் முன்பு வரிசையாக நிற்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. செவ்வாய்க்கிழமை தோறும் இலவச தரிசனம் நடைபெறும். கட்டணம் எதுவுமின்றி அனுமதிப்பத்திரம் இலவசமாக இதற்கு வழங்கப்படும்.

6. அனுமதிப்பத்திரத்தை ஒவ்வொருவரும் தனித் தனியாகவே தங்கள் பெயரில் பெற்றுக் கொள்ளவேண்டும்.

7. விரும்பியோருக்கு உள்ளேயும் அர்ச்சனை செய்து கொடுக்கப்படும்.

8. நேர்முக தரிசனத்துக்கு உள்ளே செல்லும்போது விரும்பியோர் தங்கள் அர்ச்சனைத் தட்டுக்களையும் கையில் கொண்டு போகலாம்.

9. வடக்கு வாசலால் உள்ளே சென்று நேர்முக தரிசனம் செய்து கொண்டு அதிக நேரம் உள்ளே தாமதியாமல் தெற்குவாசலால் வெளியே வந்து விடல் வேண்டும்.

10. நோயாளரும், கைக் குழந்தைகளும் நேர்முக தரிசனத்துக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆலய முகப்பில் திருச்செந்தூர் முருகனின் திரு உருவமும், ஆலயத் தோற்றமும் வரையப்பட்டுள்ளது. ஓவியர் செல்வம் இவ் ஓவியத்தை வரைந்தார். 28.6.83 ல் இவர் ஓவிய வேலைகளையெல்லாம் முடித்த, கண் திறப்பதை மட்டும் முடிக்காமல் பகல் உணவுக்காக வெளியில் சென்றிருந்தார். பின்பு அவர் திரும்பி வந்து பார்த்தபோது இரு கண்களும் தானாகவே திறபட்டிருப்பதைக் கண்டார். இச்சம்பவம் 28.6.83 பகல் 12.00 மணிக்கும் 1.00 மணிக்கும் இடையில் நடந்தது. இவ்வற்புதத்தை நினைவுகூர்ந்து வருடந்தோறும் இத்தினத்தில் ஆலயத்தில் 'கண் திறந்த விழா' சிறப்பாக நடைபெறுகின்றது.

வெள்ளிக்கிழமைதோறும் விசேட பூசை, தமிழில் அர்ச்சனை, அருளுரைகள், கூட்டுப்பிரார்த்தனை ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. ஆலயஸ்தாபகர் சுவாமி ஓங்காரானந்த சரன்வதி அவர்கள் ஆலயத்தில் பூசைகள் செய்தாலும் ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு ஆன்மீக அறிவை ஊட்டுகினற வகையிலே பெரிதும் கவனம் செலுத்தி வருகின்றார். இதற்கான அருளுரைகள் சுவாமிகளால் தினமும் விசேடமாக சிறப்பு பூசனைகளின் பின்னர் வழங்கப்படுகின்றன.

வருடந்தோறும் கொடியேற்றத் திருவிழா நடைபெறுவதற்காகிய ஒழுங்குகள் நடைபெறுகின்றன. ஆனாலும் அதற்குரிய காலம் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. கந்தர்ஷஷ்டி விரத காலங்களிலும் ஆலயத்தில் விசேட நிகழ்ச்சிளெல்லாம் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது வேலைகளுக்காக அங்கு வாங்கி வைக்கப்பட்டிருந்த பதின் மூன்று பக்கட் சீமெந்தை இரவில் யாரோ திருடிக்கொண்டுபோய் விட்டார்கள். முருகன் ஓர் இளைஞனாகச் சுவாமிகளுக்குத் தோன்றி திருடனையும், சீமந்தையும் காட்டிக்கொடுத்தார். பின்பு திருடியவர்களே சீமந்தை வாங்கி வந்து அதே இடத்தில் அடுக்கிவைத்து முருகனையும் வழிபட்டுச் சென்றனர்.

ஆலய பிரதான வாயில் மேற்குத் திசையை நோக்கிக் கட்டப்பட்டிருக் கிறது. இவ்வாறு கட்டியதற்குரிய காரணத்தை சுவாமிகளே கூறுகிறார்கள்..

முருகன் மக்கள் குடியிருக்கும் திசையை நோக்கியிருந்து மக்களுக்கு அருள் புரியவேண்டும். முருகனின் அருட் கண்பார்வை மக்கள் மீது செறியவேண்டும் என்பதே எனது நோக்கம். இதை ஏற்றுக்கொள்கின்ற வகையில்தான் கண்களும் தானாகவே திறந்திருக்கின்றன என எண்ணு கிறேன். அதுமட்டுமன்றிக் கடவுள் இல்லாத திசையைக் கண்டுபிடிக்க முடி யுமா?

இன்று மக்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளை நீக்க வேண்டுமானால், மக்களை அழிவுப் பாதையினின்றும் திருப்பவேண்டுமானால் சமய தத்துவங்களை மக்களிடையே வளர்க்கவேண்டும். சமயங்களின் மத்திய நிலையங்களாகிய ஆலயங்களில் நடைபெறும் பிழைகளையெல்லாம் நீக்க வேண்டும். ஆலயங்கள் சமய அறிவை மக்களுக்கு ஊட்டக்கூடிய நிலை யங்களாக மாற்றி அமைக்கவேண்டும். இவ்வாலயம் மக்களுக்கு ஒரு முன்மாதிரியாகவே விளங்கும். இதைப் பின்பற்றி ஏனைய ஆலயங்க ளையும் நடைமுறைப்படுத்திக் கொள்ளலாகும்.

'வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கரையுமே-செந்திநகர்
சேவகா என்று திரு நீறணிவார்க்கு
மேவவராதே வினை'

'ஈழத்துத் திருச்செந்தூர் முருகன்' ஆலயத்தில் குடமுழுக்கு நிகழ்ந்த ஞான்று பாடப்பட்ட தோத்திரப்பாடல்கள்:

(பாடல்கள்:-ந. அழகேசமுதலி அவர்கள்)

1. ஆதிதனி லருணகிரி யார்கண்ட குருவடிவில்
அக்கமணி காவி தாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயர்வு கொண்டிளைப்பாறு வான்போன்றே பாவனையில்
அதியோங்கு பனையருகில் நின்று

ஓதியுணர் வானமுனி ஓங்கார சுவாமிக்கு
ஒளியிரவு கனவில் வந்து
ஓம் சுவாமி, யாம் கதிரை செல்மார்க்க மாதலின்
ஓய்வு பெற விங்கு நின்றேன்
காதலுட நானுறையும் திருச்செந்தூரதோ வென்னக்
கடல் நோக்கிக் கைகாட்டியென்
கருத்தினை நிறைவேற்ற முடியுமானால் சிறு
கட்டிட மியற்று மென்று
சோதித்து நின்று நின் சாதனையை நாட்டியருள்
தூய பெறு சக்தி வடிவே
துன்பமிடி வாழ்வகன் றின்பமொடு மிளிரீழச்
செந்தூர்ப் பதி முருகனே!

2. அளி மலர்ச் சோலைதனில் ரீங்காரம் செய்து மது
அருந்தி யொரு கூட்டி லிடல் போல்
ஐயநின் பணிப்புரையில் பரவச மடைந்தவர்கள்
அயராது முயன்றெடுத்து
எழிலோவியம் மருவு சிகரமணி மண்டபம்
எம்மவரை நோக்கு முகமாய்
இன்று காணாத புது பொற்பொலி விலங்கிட
இயற்று பெருகோல விழாவில்
குளிரருட் சக்திமிகு கும்பங்க ணிரைபெறக்
குரவர் மலர் மாரி பொழிய
கூறு மறையோதிவரு யாகச் சிறப்பினில்
குடமுழுக் குவந்து மகிழும்
தெளியுதிரை கடல்சூழ மட்டு நகர்க் கல்லடியில்
சிவநெறி யறம் வளர்க்கும்
சிதானந்த தபோவன மருங்கிலே யுறையீழச்
செந்தூர் ர்ப்பதி முருகனே!

3. தீய பெரு மவுணனைச் செங்கைவேற் படைகொண்டு
செருவினிற் சென்று தாக்கிச்
சேவலும் மயிலுமாயிருகூறு செய்து மலர்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவடிக் காளாக்கியுன்
தூயதிரு கரியமால் முதலான தேவர்தம்
துன்பத் தீர்த்தாண்டருளிய
சுத்த நிர்க்குணமான பர தெய்வமே யெனைச்
சோரஞ்செயத் தூண்டிடும்
மாயை யிருளூடுருவி நோக்கு புலனைந்திலும்
மயங்க நான் வீழ்ந்திடாமல்
ஞானமதி நல்கியென் வாழ்வினிது ஓங்கவுயர்
நற்பணிகள் தாங்க வைப்பாய்
பாயிருங் கடல் சூழு மட்டுநகர்க் கல்லடியில்
பாங் கொளிரும் கோவில் கொண்டு
பணிந்துருகு மடியார்க்குச் சுரந்து வரமருளீழச்
செந்தூர்ப்பதி முருகனே!

(ஸ்ரீ திருநீலகண்ட வினாயகர் ஆலய பரிபாலன சபையினர்.
செங்குந்தர் வீதி, ஆரையம்பதி, மட்டக்களப்பு, 5.2.84.)

## ஈழத்து திருச்செந்தூர் திருமுருகர் பதிகம்

## (அருட் கவிஞர் திமிலைக் கண்ணன்)

1. நடனமயிலேறி வரு உமைபாலகா! இனிய
நல்ல அருட் தெய்வமணியே!
கடலோரங் கோயில் கொள் கந்தா கடம்பா
கருணை தரு சிவ சண்முகா!
விட முண்ட கண்டனருள் செந்தீப் பிளம்பே
கந்தனே போற்றி போற்றி!

2. கந்தையே கட்டியிருந் துண்ணு நிலைவரினு முனைக்
கருத்தில் மறவாமை வேண்டும்,
நிந்தை பகை மூன்று எதிர் வந்தாலு முன்னையே
நினைக்கின்ற நெஞ்சு வேண்டும்.
சிந்தையிற் குடிகொண்டு நடனமிடு கந்தாவுன்
தியானத்தில் நிலைக்க வேண்டும்
வந்துதிரை ஓசைதரு கல்லடியிலுறைகின்ற
வரதனே போற்றி போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. காண்கின்ற காட்சிகள் யாவினும் நின்னழகுக்
காட்சியே காணவேண்டும்.
மாண்பு செறி மங்கையர் குலத்திலே நின்றனது
மாதாவைக் காணவேண்டும்
நான் கொடு அச்சமுறு பீதி அறியாமையெனை
நாடாது செய், துறவு
பூண்டுவரு பழனி மலை ஆண்டியே திருச்செந்தூர்ப்
புலவனே போற்றி போற்றி!

4. ஓங்காரானந்தற்கு உண்மை நிலை உணர்த்தியிங்
குறைகின்ற ஒளித் தெய்வமே
நீங்காதென நெஞ்சத்தில் குடிகொண்டு குறைதீர்த்து
நீதியறம்பாட அருள்வாய்;
பூங்காவை யுருவாக்கி அன்பு மலரது சாற்றும்
புண்ணியம் எனக் கருளுவாய்
நீங்காது பனையினிழல், அமர் செந்தில் வேலனே
நினது தாழ் போற்றி போற்றி!

5. ஆங்காரம் தீர்க்கவே அன்றயனைச் சிறையிட்ட
ஆண்டவா! போற்றி போற்றி!
ஓங்காரத் தத்தவம் ஓதுசிவ குருநாத
ஒளிவேலா போற்றி போற்றி!
நீங்காத றீங்கார சக்திக் கனலான
நிறைஞான குரு சண்முகா!
மாங்கனிக் காகமயி லேறியுல கைவலம்
வரு பாலா போற்றி போற்றி!

6. ஏங்கியேங்கி யழுது இரு கண்ணினீர் சிந்தி
இறைவனே! உனைப் போற்றினேன்,
நீங்காத கருணைமழை பொழி செந்தி நாதனே
நினதடி போற்றி போற்றி (ஓம்)
நசியென்று ஓதினேன் நிதம் நிதம்
உறுபகை யழித் தாளுவாய்!
றீங்கார ஓசை தரு தென்னை சூழ் கல்லடிச்
சிவகுரு போற்றி போற்றி!

பதிகத்தில் முதல் ஆறுபாடல்களுமே இவை. இன்னும் பல தனிப்பா டல்களும் உள. அவையும் திரட்டிச் சேர்க்கப் பெறின் பக்தர்களுக்குப் பயனூட்டுவனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 ஆவது இயல்:

## முருகன் கோவில் ஆறு.

## *(2)* திருப்பெருந்துறை - முத்துக்குமார வேலாயுத சுவாமி கோவில்.

மட்டுமாநகரைச் சூழ்ந்துள்ள வாவியின் மேற்குக் கரையில் வலையிறவுக்கும் வேப்படித்துறைக்கும் இடையே வாவியில் மலர்ந்த தாமரையென பொலிவுடன் காட்சிதரும் நிலப்பரப்பே பெருந்துறையாகும். திருவின் பொலிவால் விளங்கும் அது திருப்பெருந்துறையென இன்று அழைக்கப்படுவது.

பண்டைக்காலத்தில் இந்நிலப்பரப்பு வாவியால் சூழப்பட்டிருந்ததாகவும், கடல் வாணிபம் செய்வோர் மட்டுநகர் முகத்துவாரத்தின் வழியே தாம் கொண்டு வந்த பண்டங்களை பெரிய உருக்கள் மூலம் வாவியினூடாகக் கொண்டு சென்று, பெருந்துறையில் இறக்கியமையாலும், பெரிய உருக்கள் அங்கே தரித்து நின்றமையாலும், இவ்விடம், பெருந்துறையெனப் பெற்றதாக வரலாறு கூறும்.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் புளியன்தீவு அன்னாரால் கைப்பற்றப்பட அங்கு வாழ்ந்த சைவநன்மக்கள் தம் சமயத்தையும் பண்பாட்டையும் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு, பெருந்துறைக்குக் குடிபெயர்ந்தனர். அக்காலத்து வாழ்ந்தவரும் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவரும் சைவமும் தமிழும் வளர்த்தவருமான மாப்பாணர் முத்துப்பிள்ளை என்பவரே பெருந்துறையில் சிறியதொரு ஆலயத்தை உருவாக்கி அதில் வேலாயுதத்தை ஸ்தாபனம் செய்து வழிபாடாற்றி வரலாயினார். 1837ம் ஆண்டின் நிலவளவைப் படம் ரி.பி. 61533ம் இலக்கப்படி ஒரு ஏக்கரும் பத்தொன்பது பேச்சர்ஸ் விஸ்தீரணமும் கொண்ட காணி இவ்வாலயத்திற்கென அரசினரால் ஒதுக்கப்பட்டமை நோக்கற்பாலது. இதனால் இவ்வாலயமானது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரு பழமைவாய்ந்த முருகனாலயம் என்று கூறுவது மிகையாகாது. இந்த மாப்பாணர் முத்துப்பிள்ளை என்பவர் கொத்துக்குளத்தில் குடியாயிருந்திருக்கிறார். அவருடைய மனைவியின் பெயர் சுப்பிரமணியம் சின்னப்பிள்ளை என்பது. இவரும் கொத்துக்குளத்தைச் சேர்ந்தவர். இவர்களது பிள்ளைகள் வினாசித்தம்பி, வேலுப்பிள்ளை, காளியாத்தா, சின்னத்தம்பி என்போராவார். இவர்களில் மூத்தவரான வினாசித்தம்பி என்பவர் திருமணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தது காசிநாதரின் மகள் சின்னம்மா என்பவரை ஆகும். இந்தக் காசிநாதர் பெரியதுறை முருகன் ஆலயத்திற்குச் சாட்டப்பட்ட 1871ம் ஆண்டு தை மாதம் 29ந் திகதி உறுதியில் கொத்துக்குளத்து, முத்துமாரியம்மன் ஆலயத்து மேற்பார்வையாளர்களில் ஒருவர். (One of the Trustees) என்று கூறப்படுகிறது. இவற்றைக் கொண்டு கொத்துக்குளத்து முத்துமாரியம்மன் கோயில், பெரியதுறை முருகன் கோயிலுக்கு முற்பட்டதாகலாம் என்று எண்ண இடமுண்டு.

இந்த மாப்பாணர் முத்துப்பிள்ளையும் இவரின் சகோதரர் மாப்பாணர் - வேலுப்பிள்ளை என்பவரும் யாழ்ப்பாணத்து நல்லூரைச் சேர்ந்தவர்கள். முதலில் இவர்கள் வந்து குடியேறிய இடம் கல்முனைக்கு கிட்டவுள்ள துரைவந்தெய்தியமேடு ஆகும். அங்கிருந்து தாங்கள் வணங்கிய முருகனோடு இவர்கள் பெரிய துறைக்கு வந்து மூத்தவரான வேலுப்பிள்ளை என்பவர் குடியேறியிருக்கலாம் என எண்ண இடமுண்டாகிறது. அவரே பெரியதுறையில் முருகன் கோயில் உண்டாக்குவதற்கு தனது சகோதரனாகிய முத்துப்பிள்ளையுடன் ஆலோசனை செய்திருக்கலாம் என்று தெரிகிறது. இதனால் பெரியதுறை முருகன் கோயிலுக்கு மூலவர்கள் இவர்களே என்று தோன்றுகிறது.

மாப்பாணர் முத்துப்பிள்ளையின் மறைவின் பின்னர் அன்னாரின் புத்திரர்களில் ஒருவராகிய வேலுப்பிள்ளையவர்கள், எம் பெருமானுக்கு கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபனமண்டபம், வசந்தமண்டபம், ராஜகோபுரம், யாகசாலை என்பனவற்றோடுகூடிய ஆகமரீதியான ஒரு பெரியவாலயத்தை அமைத்து ஆறுகாலப் பூசையையும், திருவிழா தீர்த்தோற்சவம் என்பனவற்றையும் சிறப்பாக நடாத்தி வரலானார்.

ஆலயத்தின் முன்னால் ஒரு சிவன் கோவிலும் அதற்குரிய தீர்த்தக்கேணியும் உண்டு. மேலும் தீர்த்தோற்சவத்திற்காக முருகனுக்கென ஒரு தாமரைத் தடாகமும் ஆலயத்துக்கு முன் புறமாக வாவியின் அருகே அமைக்கப்பட்டுள்ளது. வேலுப்பிள்ளையவர்கள் தன்னையும் தன் தந்தையாரையும் நினைவுகூரும் வகையில் ஆலயத்தின் பெயரை "முத்துக் குமார வேலாயுத சுவாமிகோயில்" எனத் திருநாமமிட்டுள்ளார்.

வேலுப்பிள்ளையவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் பிரபல்யமான சோதிட விற்பன்னரும் பொலீஸ் தலைமையும், வட்ட விதானையும், தோம்புதோரும், கோவில் மணியமுமாவார். இதனால் அன்னாரது பெயரை சுருக்கமாக திரு.மு.வே.பொ.த.வ.வி.தோ. கோவில் மணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அழைப்பர். ''கோவில் மணியம்'' என்பது மட்டக்களப்பு பிரதேசத்தில் அன்னாருக்கு மட்டுமே இடப்பட்ட பெயராகும். இன்றும் இவ்வாலயத்தை ''சாஸ்திரி வேலாயுதர் கோவில்'' என அழைப்பது மரபு.

இந்தக் கோயிலுக்கு முன்புறமாகவுள்ள கேணியும், சிவன் கோயில் கட்டடங்கள் முதலியனவுமுள்ள பூமி ஆலயத்திற்குச் சொந்தமானதல்ல என்று சிலர் கூறுகிறார்கள். இன்னும் சிவன் கோயில் கும்பாபிஷேகம் செய்யப்படவில்லை என்பதும் தெரிய வருகின்றது.

இக்கோயில் அமைப்பு முருகன், வள்ளி, தெய்வானை, யாகசாலை, வசந்த மண்டபம் என்பன அடங்கியதாகும். கோயில் வீதியில் மடப்பள்ளி அமைந்துள்ளது. கோயில் முன்புறமாகத் தெரிகின்ற தெரு அக்காலத்தில் கோயிலின் பின்னாலேயே சென்றது என்று கூறப்படுகிறது. இக்கோயில் நிர்வாகம் ஆண் அடி முதிசமாகவே உள்ளதாலும் கோயில் தலைவரை மட்டக்களப்பிலுள்ள மற்றைய எல்லாக் கோயிலையும் போல வண்ணக்கர் என்று சொல்லாமல் மணியம் என்று அழைப்பதாலும் இதன் மூலவருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இருந்த தொடர்பு நன்கு விளங்குகிறது.

இக்கோயில் உண்டான காலத்தில் ஆனைப்பந்தி, விண்ணாக்காடு, வேப்படித்துறை, பெரியதுறை, கொத்துக்குளம், பெரிய உப்போடை என்பன மாத்திரமே பிரபலமான பெரிய ஊர்களாக இருந்தன. இவ்வூர்களிலிருந்து புறப்பட்டவர்கள் செங்கலடி, பிள்ளையாரடி, கல்லடித் தெரு. வலையிறவு என்னும் ஊர்களில் சென்று குடியேறியிருக்கிறார்கள்.

கோயில் நன்கு அமைக்கப்பட்டபின் திருவிழா முறைப்படி நடைபெற்றது. இந்திய அமைப்பிலேயே கோயில் உண்டாக்கப்பட்டிருந்தது. வாசலில் ஒரு மொட்டைக் கோபுரம் இருந்தது. சுவாமி வலம்வந்த வீதிகளில் அன்று முதல் இன்று வரை விடத்தில் புல் அன்றி வேறு மரம் செடி கொடிகள் எதுவும் முளைக்கவில்லை. இது ஒரு சிறப்பம்சம் ஆகும். இன்றும் கோயில் வாசலில் ஒரு மஞ்சள் பூக்கொடி தானாகத்தோன்றி தானாக மறைந்து விடுவதுண்டு. 'சின்னமேளம்' மட்டக்களப்புக்கு வந்தது, முதல் முதல் இந்தக் கோயிலுக்கேதான். அது வந்ததும் இந்தியாவில் இருந்து பெரிய உரு ஒன்றில் நேரே கொண்டு வந்து பெரிய துறையில் இறக்கப்பட்டது. திருவிழாக்கள் ஐந்தாக ஆதியில் நடந்தன. ஆவணி மாதத்துப் பூரணையில் தீர்த்தம் நடந்தது.

இந்தக் கோவில் தளர்ச்சியடைந்தது சுமார் 1891ம் ஆண்டுக்குப் பின்னரே. அதற்குச் சில ஆண்டு காலத்திற்குப் பின்னர் கோயிலில் வைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்ட விக்கிரகத்தை முதலாளி வேலுப்பிள்ளை என்பவர் ஐயாத்துரை என்பவரின் அனுமதியோடு கொண்டுபோய் கல்லடி உப்போடை பிள்ளையார் கோவிலில் வைத்திருக்கிறார்கள். அதேபோல கொடித்தம்பத்து பிள்ளையார் விக்கிரகம் இப்பொழுது மாமாங்கப் பிள்ளையார் கோவிலில் இடம் பெற்றுள்ளது. இங்கிருந்து குதிரை வாகனம் மாமாங்கக் கோயிலுக்குக் கொண்டுசென்று அங்குள்ள வண்ணக்குமார் விற்றதன்படி, கரையாக்கன்தீவு கோயிலில் உள்ளது எனத் தெரியவருகின்றது.

வேலுப்பிள்ளையவர்கள் வாழ்ந்த காலத்தில் கோவில் மணியத்தை தலைமையாகக் கொண்டு துரைவந்தியமேடு, வலையிறவு, பெரியதுறை, வேப்படித்தறை, கொத்துக்குளம், செங்கலடி என்னும் ஆறு ஊர்களையும் சேர்ந்த ஆறு வண்ணக்கர்களை உள்ளடக்கிய தர்மகர்த்தா சபை ஆலயத்தைப் பரிபாலனம் செய்து வந்தது. மேலும் இவ்வாலயமானது மட்டக்களப்புப் பகுதியில் வாழும் சைவ மக்களினதும், தேசம் முழுவதும் வாழும் சைவ மக்களினதும் உடமையாகுமென மூலசாசனத்தில் மாப்பாணர் முத்துப்பிள்ளையால் எழுதி ஒப்படைக்கப்பட்டுள்ளமையால், அக்காலத்திலிருந்தே எவ்வித சாதிவேறுபாடும் கருதாமல், சமயம் என்ற பொது நோக்கோடு செயலாற்றியமை வியக்கற்பாலது.

1890ம் ஆண்டளவில் வேலுப்பிள்ளையவர்கள் காசியாத்திரை செல்ல உளங்கொண்டு, தமக்குப் புத்திரர் இல்லாமையால், தமையனார் குமாரராகிய வினாசித்தம்பி வாரித்தம்பியிடம் தாரைத் தத்துவம் எழுதி ஆலயத்தை ஒப்படைத்துச் சென்றனர். சென்றவர் மீண்டிலர். 1907ம் ஆண்டில் வாரித்தம்பியும் காலமடையவே, அவர் கைம்பெண் தங்கநாயகத்தால் ஆலய பரிபாலனம் நடைபெற்றது. அவர்களது புதல்வர்களான ஐயாத்துரையும், பொன்னுத்துரையும் பராயமடையாத சிறுபராயத்தினராயிருந்தனர்.

1907ம் ஆண்டில் வீசிய சூறாவளியாலும் 1913ம் ஆண்டில் ஏற்பட்ட வாந்திபேதி நோயாலும் பெருந்துறையில் வாழ்ந்த மக்கள் குடிபெயர்ந்து நகரின் பல பாகங்களுக்கும் சென்று குடியமர்ந்தனர். இதனால் ஊரே பாழ் விழுந்தது. ஆலயம் கவனிப்பாரற்றுச் சிதைவுற்று உருக்குலைந்தது. விக்கிரகங்களும் வாகனாதிபதிகளும் பிற ஆலயங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. ஆலயமும் அதைச் சூழ்ந்துள்ள பிரதேசமும் காடும் புதரும் வளர்ந்து விஷஜந்துக்களின் இருப்பிடமாகியது.

வாகனம் சில விக்கிரகம் முதலியவை மேலே காட்டிய படி வேறு இடங்களுக்குச் சென்ற பின்னர் இக்கோயில் மரந்தடிகளையும் சலாகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் சின்னத்துரை - ஆம்ஸ்ரோங் என்பவர் பகிரங்க விற்பனையில் வாங்கிக் கொண்டுவந்து கோட்டை முனை அரசடிச் சந்தியிலுள்ள தனது வளவில் பெரியதொரு வீடு கட்டினார். அண்மையில் அது அழிக்கப்பட்டு வேறு கட்டிடம் அவ்விடத்தில் தோன்றியுள்ளது.

இந்தக் கோயில் பிரபலமாக இருந்ததற்கும்,மக்கள் குடியேற்றம் நிறைய இருந்தமைக்கும் சான்றுகள் நிறையக்காணப்படுகின்றன. அதில் சிறப்பாக ஒரு பழைய கிணற்றைக் குறிப்பிடலாம். நான்கு ஊர்களுக்கும் பொதுவான ஒரு வற்றாக்கிணறு, நல்ல குடிநீர் உள்ள கிணறு இருந் திருக்கிறது. அதற்கு 'பனைமரத்தடிக் கிணறு' என்று பெயர். இக்கிணறு மருங்கைக் கேணிச் சுடலைக்கு தென்கிழக்குமுகமாக இன்றும் தூர்ந்த நிலையில் காணப்படுதல் கவனிக்கத்தக்கது.

1972ம் ஆண்டில் ஒரு நாள் மட்டுநகர் பொதுச் சந்தையில் வியா பாரம் செய்பவரும், கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவருமான ஞானச் செல்வம் மனோகரன் என்னும் இளைஞன், புகையிரத நிலையத்திற்கு அருகாமையிலுள்ள வைரவன் கோயிலில் ஒரு முதியவரைக் கண்டான். அந்த முதியவர் பெருந்துறையிலுள்ள முருகன் கோயில் பற்றிய விபரத்தைக்கூறி அங்கே சென்று வழிபடுமாறு பணிக்கவே, மனவுறுதியு டனும் தளராமுயற்சியுடனும் அவ்வாலயத்தைக் கண்டுபிடித்து தனக்குத் தெரிந்தமாதிரியாக வழிபட்டுவரலானான். தான் வழிபட்டுவந்த தோடல்லாமல் தனது நண்பர்கள், தனது அயலவர் உதவியுடன் இடிந்து தகர்ந்துகிடந்த ஆலயத்தைத் துப்பரவு செய்து காடுகளை வெட்டி வெளியாக்கித் திருப்பணியும் செய்வித்தான்.

இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே பரவ, சிலர் பலராகி பலர் பெருங் கூட்டமாகவே மாறிவிட்டது. எனினும் இவ்வாலயத்தின் சரியான உரிமை யாளரைக் கண்டுபிடிப்பதில் பொது மக்கள் ஈடுபட்டதில் மாப்பாணர் முத்துப்பிள்ளையவர்களின் பரம்பரையில் ஐயாத்துரையின் மகன் சாரங்கபாணி அவர்களும், பொன்னுத்துரையின் மருமகன் வைத்திய கலாநிதி செ. பூபாலப்பிள்ளையுமே உரிமையாளர்களாகக் காணப்பட்ட னர். இவர்கள் இருவருமாக சேர்ந்து ஒரு ஆலய பரிபாலன சபையை அமைத்து ஆலயத்தை புனரமைப்பதில் ஈடுபட்டுவருகின்றனர்.

இற்றைவரை பிரதான ஆலயத்தின் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்ட பம், மகா மண்டபம் என்பனவும், வினாயகர் ஆலயம், பழனியாண்டவர் சன்னிதி என்பனவும் பொதுமக்களின் நன்கொடையாலும் இந்து கலாசார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சின் நன்கொடையாலும் திருத்தப்பட்டுள்ளன. ஆலயத்திற்கென தனியான மின்னிணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆலய புனருத்தாரண வேலைகள் தொடர்ந்து நடைபெற்றவண்ணமிருக்கின்றன.

கதிர்காமத்தோடு கொடியேற்று வைபவம் ஆரம்பமாகி ஆடிமாத பூரணையில் தீர்த்தோற்சவம் நிகழ்வது ஒரு விசேட உற்சவமாகும். மேலும் மாதா மாதம் வரும் திருக்கார்த்திகை, கந்தசஷ்டி, திருவெம்பாவை என்பனவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இவ்வாலயத்தின் சிறப்பையும், திருவருளையும் வியந்து மட்டுநகர் ச.வித்துவான் பூபாலப்பிள்ளையவர்கள் 1882ம் ஆண்டளவிற் பெருந் துறை முருகர் பதிகம் என்னும் பதிகத்தைப் பாடியுள்ளார்.

இவ்வாலயத்திற்கு 30 ஏக்கர் காணி மட்டும் உள்ளது என்று கூறப் படுகிறது. ஆனால் படுவான்கரைப் பகுதியிலுள்ள காணி இன்னும் எவ்வ ளவோ இருக்கலாம். மேலும், துரைவந்தெய்திய மேட்டுப் பகுதியில் மூல வர்கள் இருந்த காரணத்தினால் அப்பகுதிக் காணியிலும் சில ஏக்கர்கள் ஆலயத்திற்கு எழுதப்பட்டிருக்கலாம். இவைகளை ஆலய பரிபாலன சபையார் தேடிக் கண்டுபிடிப்பதும் எடுப்பதும் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆவது இயல்

## முருகன் கோவில் ஆறு.

## 3. குருக்கள் மடம்

## ஸ்ரீ செல்லக்கதிர்காமம் ஆலயம்

மட்டக்களப்பு மாநகரிலிருந்து தென் திசையில் 11 மைல் தொலையில் உள்ள அழகிய எழில் மிகுந்த கிராமம் குருக்கள் மடம், கிழக்கே வங்காள விரிகுடாக்கடல், மேற்கே நீர்வளம் மிகுந்த நன்செய்நிலம், வடக்கே வள மும், வளம்சார்ந்த இடமும் தன்னகத்துக்கொண்டுள்ளது. தெற்கே செட்டிபாளையம் எனும் ஊர் உளது. நெய்தல், மருதம், பாலை ஆகிய மூவகை நில அமைப்பும் மிகக் கொளிக்கிறது. கிராமத்தின் மேற்கே நன்னீர்ச் சுனைகள் தொடர்ச்சியாக உண்டு, 3,4 அடி ஆழத்தில் இந்நீரைக் காணலாம். கடும் வரட்சியான காலமாயினும் இச்சுனைகள் நன்னீரைப் பொங்கிக்கொண்டே இருக்கும், இந்நன்நீரின் அளப்பரிய தேக்கத்தினாலே வாழை, கமுகு, கரும்பு, தென்னை, கண்கொள்ளாக்காட்சியாக வளர்ந்து பொலிந்து காணப்படும் காட்சியை இன்றும் காணலாம்.

'கன்னல் வளமும் கமுகினத்தினோர் வளமும்
செந்நெலொடு வாழை சொரிவளமும் -பன்னரிய
காராளர் வாழும் கதிர்சேர் குருமடத்தில்
சேர்வாளே செஞ்சொற் 'திரு'

(புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை) என்ற இவ்வெண்பா அக்கிராமப்புவியியல் தன்மைகளையும் பயிர்வளத்தினையும் தெளிவு படுத்துகின்றது.

முக்கால் மைல் நீளமுள்ள ஏத்தாலைக்குளம் இக்கிராமத்தின் அளப்பரிய ஒரு கிராமக்குளம். எங்கும் காணமுடியாத செந்தாமரை மலர் இந்தக்குளம் நிறையக் காணலாம். காடும் காடுசார்ந்த இடங்களில் இன்று அழிந்து போனாலும் மானினம் சுயேச்சையாக வாழ்ந்து வந்த பெருமை இக்கிராமத்துக்குரியது. வேளாள மரபினையுடைய உயர்குலமக்கள் இங்கு நிறைந்து வாழ்கின்றனர். ஒரு சிறு தொகையினரான ஏனைய வகுப்பினர் சொற்பமாகக்காணலாம். இக்கிராம மக்கள் இந்து சமயத்தினர். சிறந்த தெய்வவழிபாட்டாளர். சமய நெறியில் தளர்வுறா பெருவாழ்வு படைத் தவர்கள். ஒரு சிறு தொகையினராக கத்தோலிக்க சமயத்தினைச் சார்ந் தோர் சமீபகாலமாக அச்சமயத்தை அனுட்டிக்கின்றனர். ஆனால் அவர்களும் வேளாள இனத்தவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அழகிய கிராமத்தில் ஐயனார் ஆலயம், ஸ்ரீ செல்லக்கதிர்காம ஆலயம், கிருஷ்ணன் ஆலயம், முருகன் ஆலயம், ஆதியாம் தெய்வ வழி பாட்டுத்தலங்களும் உண்டு. இவைகளுக்கெல்லாம் தலைசிறந்ததும், தொன்மையுடையதும் செல்லக்கதிர்காமம் ஆலயமே.

இற்றைக்கு 400 வருடங்களுக்க முன்பு "உலக குருநாதர்" என்னும் தபோதனர், யாழ்ப்பாணம் தொண்டமானாறு கெருடாவிலில் இருந்து பாத சாரியாக தென்கதிரை புறப்பட்டார். இவர் தனது யாத்திரையில் தரிசிக்க வேண்டிய இடங்களில் இக்கதிர்காமமும் ஒன்று. அவர் வரும்போது தனது பிச்சாபையில் சில விசேடம் பெற்ற விதைகளையும் கொண்டுவந்தார். தனது புனித யாத்திரையில் இக்கிராமத்தின் இயற்கைக் காட்சிகள் அவரை வசீகரித்தன. இயற்கை நன்னீர்ச்சுனைகள், அடர்ந்த காடுகள், ஆழ்கடலின் ஆரவாரம், இவைகள் ஒருங்கே வாய்க்கப்பட்ட இக்கிராமத்தைத் தனது தபோதன நிலைக்கு வசமாக்கிக்கொண்டார். தென்கதிரை யாத்திரை இவ்விடத்துடன் முடிகின்றது. தனது மேலான பணியை ஆரம்பிக்கலா னார். தற்காலம் செல்லக்கதிர்காமம் என்று அழைக்கப்படும் இடத்தில் ஒரு சிறு மண்கோயில் அமைக்கலானார். இப்பெரியாரின் ஆக்க வழிபாட்டுக்கு அக்கிராம மக்கள் பெரிதும் உதவினார்கள். தான் கொண்டுவந்த விசேட விதைகளில் ஒன்றான "தத்தாக்கு" விதையைத் தனது ஆலய வாயிலில் நட்டார். இம்மரந்தான் இவ்விடத்தின் தலவிருட்சம், எங்கும் காண முடியாத குளிர்தருவாக அது காட்சி அளித்ததை யாவரும் அறிவர். இன்று சூறாவளியினால் அழிந்து போனாலும் இதன் இனம் இன்றும் இங்கு காணலாம். இதைவிட குருக்கத்தி, கலிதும்பை என்பனபோன்ற செடிக ளும் இங்குதான் காணலாம். இத்தவமுனிவரின் நன்கொடைகளின் பிரதி பலிப்பு இவைகள் தன்னுடைய தலமுறை அமைப்பில் இடம்பெற்ற தேவா லயத்திற்கு "செல்லக் கதிர்காமம்" என்று பெயரிட்டார். வேல் வேந்தன் பெருமை பகிர்ந்தளிக்கும் காலம் இதுவாகும். இந்த செல்லக்கதிர்காமம் ஆலயம் கிறிஸ்தவ சகாப்த வருடம் 1607 மன்மத வருடம் ஐப்பசிமாதம் 15ந் திகதி வியாழக்கிழமை அசுபதி நட்சத்திரம் பொருந்திய சுபதினத் தன்று கும்பாபிஷேகம் செய்தார்கள். இக்கிராமப் பெரியோருடைய பெருமதிப்புடன் ஆலயத்துக்கு நன்கொடை சாதனம் ஒன்றும் எழுதப்பட்டு வழிபாடாயிற்று. இதன் பின்பு இம்மகானின் திருவருட் செயல்களை யாழ்ப்பாணம் கெருடாவில் வாசிகள் கேள்வியுற்று இக்கிராமம் வந்தடைந் தனர். ஆதிக்குருமார் வருகையும் ஆரம்பமாயிற்று. இச்செயல்களால் இக் கிராமம் "குருநாதர் மடம்" என்று அழைக்கப்படலாயிற்று. தபோதனரால் ஆக்கப்பட்ட ஆலயம், பர்ணசாலையாக ஒளிவீசும் மடம் யாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுபட்டு பின்னிப்பிணைந்து நாதர்மடம் என்றும் அழைக்கப்படலாயிற்று. மக்கள் குறைவாகக் காணப்பட்டாராயினும் குருபயபக்தியில் மேம்பட்டு பெருவாழ்வு வாழ்ந்தனர். ஆலய உற்சவம், திருவிழா, தீர்த்தம் போன்ற பரமார்த்திகப் பெருவாழ்வுக்கு மகான் வழிவகுத்தார்.

வங்காள விரிகுடாக்கடல் அரைமைல் தொலைவில் இருப்பினும் அக்காலம் அடர்ந்த காடுகளும் கடந்து செல்லமுடியாத பெரும் தடையுமாக இருந்தது. இதனால் இவ்வாலயத்துக்கு வடக்கே பாலைவனப் பசுந்தரை (ஓயசிஸ்) போன்ற ஒரு பள்ள நன்னீர்த் தேக்கம் இன்றும் உண்டு. அதை மூன்று குளங்களும் மூன்றுவகையான சேற்றை இன்று தன்னகத்துக் கொண்டுள்ளன. சுத்தமான விபூதிபோன்றது ஒன்று; சந்தனம் போன்றது மற்றொன்று. கரு நிறம் கொண்டது மற்றது. இவ்வாறான திருக்காட்சிகள் இத்தீர்த்தக்குளத்தில் உண்டு. இன்று இவைகள் தீர்த்தக் குளம் என்றே அழைக்கப்படுகின்றன. இந்தத்தீர்த்தக்குளத்துக்கும் ஆலயத்துக்கும் நடுவில் ''வேத மேடு'' என்ற உயர்ந்த ஒரு ஏக்கர் அளவின தான நிலப்பரப்பு உண்டு. இதில் கதிர்காமக் கந்தனின் சூரன் மலைபோன்று ஒரு ஆலயம் இருந்தது. திருவிழாக் காலங்களில் இறுதி நாளன்று இவ்வேத மேட்டுக்கு முருகன் சென்றுவருவதும் உண்டு. இம்மேடு இன்று அழிந்து சிதைந்து போனாலும் இன்றும் ''வேதப்பிட்டி'' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. மிகப் புதையுண்ட பொக்கிஷங்கள் இவ்விடத்தில் அடங்கியுள்ளன. காலகாலத்தில் தொழிலுக்காக மண் தோண்டுவோர் பல அரிய பழமையான பொருட்களைக் கண்டெடுத்துள்ளனர்.

உலககுருநாதர் இக்கிராமத்தில் வாழ்ந்து தெய்வத் தொண்டை ஆற்றிய காலத்தில் மதுரையம்பதியில் உள்ள பல நாமங்களை இங்கும் சூட்டி வைத்திருக்கிறார். அப்பெயர்கள் இன்று நாங்களும் காணக்கூடியதாக உள்ளன. தனது வேண்டுகோளின் படி செல்லக் கதிர்காமத்துக்கு இக்கிராமத் தனவந்தர் ஆனந்தப் போடி என்பவரால் செய்யப்பட்ட தர்மசாதனங்கள் இன்றும் உண்டு. அவரால் அன்று வழங்கப்பட்ட ஆதனங்கள் ஆலயத்தை அண்டிய தென்னந்தோட்டங்களே. அவைகளில் ஒன்று நந்தவனம் வளவு, 2,கூடல் வளவு, 3. கொங்கு மந்தாரை வளவு, 4. சம்பந்தர் வளவு, 5. காரியஸ்தர் வளவு, 6. பிராமணர் வளவு, 7. ஓதுவார் வளவு, என்பன போன்ற அழகிய பெயர்களை இன்றும் வழங்குவதை நேரில் காணலாம். மேலே கூறிய தீர்த்தக்குளத்திலிருந்து மாரிகாலங்களில் மிஞ்சிய நீர்வழிந்து அவ்வாலயத்தைச் சார்ந்து பெருக்கெடுத்து ஓடும் காட்சி மாணிக்ககங்கையை நிகாத்து இருக்கும். ஆனால் ஒரு பருவத்தில் வரண்டு போவதால் புண்ணிய சேவைகளுக்கு வாய்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால எல்லையில் இவ்வாலயத்தையும் அசைவுள்ள அசைவற்ற சொத்துக்களையும் பரிபாலித்து வந்தோர் கெருடாவில் இருந்து வந்த குரு மாரும் கிராமப் பெருமக்களுமாவர். இக்குருமாருக்குக் கோறளைப்பற்றில் உள்ள சிற்றாண்டி தேவாலயத்திலும் உரிமையும், கடமையும் உலக குருநாதர் வம்சத்தினருக்கு உண்டு. இன்றும் இவ்வுரிமைத் தொடர்பைக் காணமுடியும். இவ்வாறு நிர்வகிக்கப்பட்டுவந்த காலம் 19 வருடங்கள். உலகுருநாதர் என்ற தபோதனர் 1626ம் வருடம் ஆவணித் திங்கள் பார மார்த்திகப் பெருவாழ்வைப் பெற்றார். இவருடைய சமாதி இன்றும் சிதைந்த நிலையில் பகிரங்க வீதி அருகில் உண்டு. இவருடைய மறைவின் பின்பு மண்தேவாலயமே ஆலயமாக இருந்து வழிபாட்டுக்கு வழிகாட்டி யது. இவ்வாலயம் இக்கிராமப் பெருமக்களுடன் கெருடாவில் குருமாரும் சேர்ந்து பரிபாலித்துவந்தனர். தெய்வத்தொண்டுகளும், உச்சநிலையில் வளர்ச்சிபெற்றன. 'இளையசாமி' என்ற குருப்பெரியார் ஆகம வழிபாடு களை நெறிப்படுத்தி சாதி, சமய பேதமின்றி வளம்பெற வாழ்வு அளித் தார். ஆவணிப்பௌர்ணமி தீர்த்தோற்சவம், கார்த்திகைத் தீபம், கார்த்தி கைக் காப்புக்கட்டு, கந்தசஷ்டி விரதம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், புதுவருடப் பிறப்பு, வைகாசி விசாகம், சித்திரா பூரணை போன்ற பெருநாட்கள் முறையாகக் கொண்டாடப்பட்டு வந்தன. காலம் செல்ல இம்மண்கோயில் திருத்தப்படவேண்டிய காலம் அண்மியது. கி.பி.1832ம் வருடம் குருநாதர்மடம் என்ற பெயர் குருக்கள் மடம் என மருவி வழங்கலாயிற்று. இக்காலத்தில் தனவந்தரான கைலாயச்செட்டியாரின் சிரேட்ட புத்திரர் செட்டிப்போடியார் மண்கோயிலை உடைத்து தற்போதுள்ள தேவாலயத்தை நிருமாணிக்க ஆரம்பித்தார். 1842ம் வருடம் ஆவணி மாதம் 16ம் திகதி வேலை ஆரம்பமாயிற்று. இத்தே வாலயம் அவரது பெருமுயற்சியாலும் கிராம மக்களின் சலியா உழைப்பினாலும் நிறைவு செய்யப்பட்டது.

1848ம் வருடம் ஆவணிமாதம் 2ந் திகதி எம்பெருமான் முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக பிரதிட்டை செய்யப் பட்டார். கைலாயச்செட்டி செட்டிப்போடியார் இத்தினத்தில் றோபேட் முண்டப்போடி பிரசித்த நொ., சி. அவர்களால் 2403 (1848 ஆவணி 25ந் திகதி) ஆம் இலக்க நன்கொடை சாதனம் ஒன்றும் எழுதி தேவாலய வளர்ச்சிக்குத் தான் இல்லாக்காலத்துத் திறம்பட நடைபெற ஆக்கமளித் தார். இத்தர்ம நன்கொடையை மக்கள் வள்ளியம்மை, கண்ணம்மை, சிவாமி ஆகியோரும் தங்கள் பங்குகளைத் தங்களது வம்சத்தினரின் ஆன்ம ஈடேற்றம் கருதி வழங்கியுள்ளனர். இத்தர்ம நன்கொடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்போன கரவாகுப்பற்று, நடுபத்தவெளி, தேற்றாத்தீவு கோயில், பறையன் முன்மாரி போன்ற நெல்வயல்கள் முக்கியமானவைகள்.

இவ்வாலயம், குருக்களம் மடம் கிராம வேளாள பெரும்குடி மக்களின் பொக்கிஷம், எவ்வித வேறுபாடுகளும் இன்றிப் பரிலானம் நடைபெற்று வந்தது.இப்பரிபாலனத்தில் தர்மகர்த்தா சபையில் அத்தியாகுடி, செட்டிகுடி வண்ணக்கர்கள் மாறிமாறித் தலைவர்களாகக் கடமைபுரிந்து வந்தனர். இம்முறையில் கதிரேச பிள்ளை வன்னிமை மயில்வாகனம் அவர்கள் முக்கிய இடத்தை வகிக்கிறார். இவருடைய திருத்தொண்டுக் காலத்திலே இவ்வாலயத்தை ஏனைய சைவ ஆலயங்கள் கவரக்கூடிய திருத்தொண்டொன்றை ஆக்கி வைத்தார். 27.10.1947ம் திகதி ஸ்ரீலஸ்ரீ செல்லக் கதிர்காமம் ஆலயத்தை பகிரங்க விளம்பரங்கள் மூலம் வெளியிட்டு ''ஹரிசன ஆலயப் பிரவேசம்'' செய்து வைத்தார். உலகம் போற்றும் உத்தமர் மகாத்மாகாந்தி அவர்களின் கொள்கையில் ஊறி அக்கொள்கையைக் கடைப்பிடித்து இவ்வரிய தீண்டாமைக்கு முற்றுப் புள்ளி வைத்தார், மயில்வாகனனார். இதை ஒட்டிய விளம்பரத்தில் உலக குருநாதசுவாமிகளும், ஆலயம் அமைக்கப்பட்ட வரலாறுகளும் பிரசுரிக்கப்பட்டிருப்பது போற்றக் கூடியதொன்று. இவ்வடிப்படையில் ஆலய பரிபாலனம் திறம்பட செயல்படுகின்றது. இக்கிராம மக்கள் சகலரும், வந்தேறிய மக்களும் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்புது உணர்வை அமைக்கவிரும்பிய கிராம மக்களால் விசேட தகுதி பெற்ற சைவப்பெரியார் பண்டிதர் வித்தவான் வி.சீ. கந்தையா அவர்களை தலைவராகக் கொண்ட ஒரு விசாரணைச் சபை அரசாங்க அதிபரின் சிபார்சுடன் 1978ம் ஆண்டு வைகாசி மாதம் நியமனம் செய்யப்பட்டது. இச்சபையில் திரு.வே. நாகையா ஓய்வு பெற்ற அதிபர், திரு.என்.கே. சர்மா மட்டக்களப்புக் கச்சேரி, ஆகியோர் அங்கம் வகித்தனர். இப்புனிதச் செயலால் பின்வரும் முறையில் ஒரு பரிபாலனசபை அமைக்கப்பட்டது, ஆயுட்காலத்தலைவராக திருவாளர்,

1. க.சீனித்தம்பி ஜே.பி.அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.
2. ஆ. சோமசுந்தரம் உபதலைவர்
3. க. மயில்வாகனம் அதிபர், செயலாளர்
4. க. முத்துலிங்கம் அதிபர், பொருளாளர்.
5. செ. சீனித்தம்பி டாக்கடர்.
6. த. வடிவேல்
7. பொ. கணபதிப்பிள்ளை அதிபர்.
8. ம.விமலேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. த. கிருஷ்ணபிள்ளை
10. ஆ. மயில்வாகனம்
11. க. மாமாங்கம்

ஆகியோரை உள்ளடக்கியது இச்சபை. இன்று இச்சபை விசேடமான அபிவிருத்தி வேலைகளை நிறைவு செய்து வருகின்றது. கடந்த சூறாவளி யினால் பாதிக்கப்பட்ட புனித தலத்தை கிராம மக்கள் ஒருங்கிணைந்து தத்தம் குடிவழியில் ஒவ்வொரு பெரும்பணியை முடித்து இருககின்றனர். ஆயுட்காலத்தலைவர் திரு.க. சீனித்தம்பி ஆலய கர்ப்பக்கிருகம், திரு.த. வடிவேல் வண்ணக்கர் அர்த்தமண்டபம், திரு.செ. சீனித்தம்பி வண்ணக்கர் மகாமண்டபம். திரு. க. மயில்வாகனம் வண்ணக்கர் தம்பமண்டபம் போன்ற மிகப் பொறுப்புவாய்ந்த வேலைகளை நிறைவுசெய்திருக்கின்ற னர். ஆலய மடப்பள்ளியறை திரு.க. சீனித்தம்பி வண்ணக்கரால் அமைக்கப்பட்டிருக்கின்றது.

பழைய மாரியம்மன் ஆலயம் சிதைவுற்ற நிலையை அகற்றி திரு.சா.கந்தப்பன் நொத்தாசியார் புதிய மாரியம்மன் தேவாலயம் ஒன்றை அழகாக அமைத்து உதவியுள்ளார். திரு.த.சாமித்தம்பி அவர்கள் விக்கின விநாயகன் ஆலயத்தை நவீன முறையில் அமைத்து உதவியுள்ளார். இச் செயல்களால் இவ்வாலயம் இன்று கண்கொள்ளாக் காட்சியாக விளங் குகின்றது. ஆலய வழிபாடுகளும், தீர்த்தம், திருவிழாக்களும் ஆவணிப் பூரணையில் வாக்கிய பஞ்சாங்க விளம்பரப்படி தடையின்றி நடைபெறு கின்றன. இன்றும், என்றும் இந்த மேம்பாடு நிலைபெற முருகன் அருள் பாலிப்பாராக. இவ்வாலயம் பகிரங்க வீதியின் அருகில் இருப்பதனால் சகல பிரயாணிகளும் வாகனாதிகளும் செல்லும் போது இம்முருகனைத் தியானித்து வணக்கம் செலுத்திச் செல்லத் தவறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 ஆவது இயல்

## முருகன் கோவில் ஆறு.

### 4. காரைதீவு மாவடிக் கந்தசுவாமி கோவில்

கிழக்கிலங்கையில் உள்ள பழமை, பண்பு, பெருமை என்பன வாய்ந்த செழுமையான ஊர்களுள் காரைதீவு முதலாவதாகக் குறிப்பிட வேண்டியது. கற்றோர், உத்தியோகம் பார்ப்போர் முதலானவருடைய வரிசையிலும் காரைதீவு, கல்லாறு, ஆரைப்பற்றை, மட்டக்களப்புப் பட்டினம், மண்டூர் என்று வகைப்படுத்திக் கொள்ளும்போது முதலில் வருவது காரைதீவே. விபுலாநந்த அடிகளாரைத் தோற்றுவித்த பெருமை காரைதீவுக்கேயுண்டு. தொடர்ந்து நடராஜானந்த அடிகளார் தோன்றினதும் இந்த ஊரிலேதான். தங்கராசா, தம்பிராசா, பொன்னையா, கந்தவனம், தம்பையாபிள்ளை முதலான காவிபோடாத சுவாமிகள் பலரின் வாழ்விடமும் காரைதீவேயாகும். ஆனைக்குட்டி சுவாமியார் வாழ்ந்து சமாதி எய்தியது காரைதீவிலே தான். இத்தகைய காரைதீவு சமயப் பற்றுதலுக்கும் பெயர் போனது.

இவ்வாறு காலங்கடந்த புகழினைக் கொண்டது மட்டக்களப்புக் காரைதீவு எனும் ஊர். இதனை ஆங்கில ஆட்சியினர் மூன்று நிருவாகப் பிரிவு (குறிச்சி) களாகப் பிரித்து ஆண்டனர். இதில் மூன்றாம் குறிச்சியானது கிராமத்தின் தென்பாகத்திலமைந்துள்ளது. இது பல வருடங்களுக்கு முன் தென்னந்தோட்டங்களும் மரக்கறித் தோட்டங்களும் நிறைந்த தாய்க் குறைவான குடியிருப்பாளர்களைக் கொண்டு விளங்கியது.

இப்பகுதியிலே நிந்தவூர்க் கிராமத்தின் எல்லைக்கு அண்மித்ததான பகுதி மாவடித் தோட்டமென அழைக்கப்பட்டு வந்தது. இன்னும் அது மாவடி என்றே கிராம மக்களால் அழைக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் நெடுஞ்சாலைக்கு அண்மையாகச் சிறு பற்றைகளும் ஒரு புளியமரமும் உள்ள ஒரு தோட்டவளவுண்டு.

கிட்டத்தட்ட ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தோராம் ஆண்டளவில் இங்குள்ள புளிய மரத்திலே ஒரு வேல் இருப்பதாகவும் ஒரு பக்தர் அதனை வழிபாடு செய்து வருவதாகவும் அங்கு பல சித்துக்கள் நடைபெறுவதாகவும் கிராம மக்கள் கேள்வியுற்றனர்.

அவ்வேலினைப் பூசித்து வந்தவர் ஆறுமுகம் என்பவர். இவர் ஒரு நாடக ஆசிரியர், வஞ்சிக்கொடியெனும் பட்டப் பெயருடையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல தேவாலயங்கள் உண்டாக மூலகாரணமாக இருந்தவர், அவர்களை வரவேற்க இத்தல மகிமையையும் பலர் தாம் நினைத்தவற்றை இறையருளாற் பெற்று வருவதனையும் அவர் கூறினார். இதனைச் செவிமடுத்த பெரியார்கள் பலர் ஒன்று சேர்ந்து தற்காலிக ஆலயமமைத்து வழிபாடாற்றி வந்தனர். இதன் மகிமை பக்கத்துக் கிராமங்களுக்கும் பரவலாயிற்று.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டளவில் முறண்டப்போடி தம்பையாபிள்ளை ஓவசியர் அவர்கள் அங்கு சென்று, அவ்விடம் தன்னுடைய முதுசொமெனலால் தான் தனது செலவில் ஓர் ஆலயம் அமைக்க விரும்புவதாகவும் கூறினர். அனைவரும் தமது சம்மதத்தினை அன்போடு அதற்குடன்பாடாகத் தெரிவித்தனர். அதன்படி கல்லாலயம் முதல்முதலாக அமைக்கப்பட்டது.

நித்திய பூசை விசேட பூசைகள் ஆகியவற்றைச் சைவ அந்தணர்களைக் கொண்டு நடாத்திவந்தனர். தமது முதுமையை முன்னிட்டு ஓவசியர் அதனைத் தொடர்ந்து நிருவகிக்கும் பொறுப்பினைத் தமது மக்களிடம் சிறிது காலம் ஒப்படைத்து மேற்பார்வை செய்து வந்தனர். தனது நண்பர்கள் பலருடன் கலந்துரையாடி ஆலோசனை கேட்டு இவ்வாலயத்தினைக் கிராமத்தின் பொதுச் சொத்தாக்கின் திறம்பட நடக்குமெனக் கருத்திற் கொண்டனர். இப்பெரியாருக்கு இவ்விடயத்திற் பக்கபலமாக நின்றுதவியவர் காரைதீவைச் சேர்ந்த அமரர் திரு.பெ.வ.வி. நல்லரெத்தினம் அவர்களாவர்.

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தைந்தாமாண்டு மார்கழி மாதம் இருபத்து மூன்றாந்திகதி காரைதீவு மகாசன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு.த. பொன்னையா அவர்கள் தலைமையில் கண்ணகி அம்மன் கோவில் வீதியில் ஆரம்பமானது. இச்சபைக்குத் திரு.மு. தம்பையாபிள்ளையவர்கள் சென்று தனது பராமரிப்பிலுள்ள மாவடிக் கந்தசுவாமி கோயிலைக் காரைதீவுக் கிராமமே கையேற்று நடாத்தவேண்டுமென விண்ணப்பித்தனர்.

சபையோர் இதனை ஏற்று ஆறு பேர்கொண்ட குழுவினை நிறுவி திரு. தம்பையாபிள்ளையவர்களிடமிருந்து ஆலய பரிபாலனத்தைச் சட்டபூர்வமாகப் பொறுப்பேற்கப் பணித்தனர். அத்தோடு அறுபது பேர் கொண்ட நிருவாக உறுப்பினர்களையும் நியமித்தனர். ஆலயம் பொறுப்பேற்கப்பட்டதும் வழமைபோற் பூசைகள் நடைபெற்றன. வருடந்தோறும் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு நிருவாக சபைத் தெரிவும் இன்றுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காக நடைபெற்று வருகின்றது எனலாம்.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டளவில் முதலாவதாக சம்புரோட்சண கும்பாபிஷேகம் நடைபெறலாயிற்று. பின்னர் 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 26ந் நாள் (ஆனி மாதம் ஒன்பதாந் திகதி) புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் ஒன்று மிகச் சிறப்புற நடைபெற்றது.

தினப்பூசைகள் கோயிற் பொறுப்பிலே நடாத்தப்பட்டு வருகின்றன. மாதந்தோறும் வரும் கார்த்திகை விரதத்தன்று விசேட அபிஷேகம், பூசை, சுவாமி வீதிவலம் வருதல் என்பன நடந்தேறி வருகின்றன. இப்பூசைகளை வெவ்வேறு உபயகாரர்கள் பொறுப்பேற்று நடாத்துகின்றனர்.

ஆடித்திருவிழா கதிர்காம உற்சவத்துடன் வளர்பிறைப் பிரதமையிலே கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். விசேட அபிஷேகம் நடைபெறுவதுடன் முருகப் பெருமானின் வீதி உலாவும் சிறப்புடன் நடைபெறும். தீர்த்தோற்சவத்துக்குமுன் இரவன்று பெருமானின் சப்பற ஊர்வலம் நிகழும். இதனை இந்து வாலிபர் சங்கம் பொறுப்பேற்று நடாத்துகிறது. 16ம் நாள் காலையில் முருகப்பெருமான் பக்தர்கள் புடைசூழ மயில் வாகனத்தின் மீதமர்ந்து தேரோடும் வீதிவழியாகச் சமுத்திரக் கரையை அடைந்ததும் தீர்த்தோற்சவம் நிகழும்.

ஆடித் திருவிழா உபயகாரர் விபரம் பின்வருமாறு:-

01. பாலையடி வால விக்கினேஸ்வரர் ஆலயச் சந்தானத்தார் கோயில் ஸ்தாபகர் மு. தம்பையாபிள்ளையவர்களுக்குக் கொடுக்கும் முதன்மைக்காக அன்னாரின் சந்தானத்தாருக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இது கிராம வழக்கத்துக்குப் புறம்பானது, எனினும் மகா சபையால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
02. ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயச் சந்தானத்தார்.
03. ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலயச் சந்தானத்தார்.
04. திரு.ஞா. கணபதிப்பிள்ளை அவர்களின் சந்தானத்தார்.
05. ஸ்ரீ மகா விஷ்ணு கோயிற் சந்தானத்தார்.
06. திரு.க. கணபதிப்பிள்ளை அவர்களின் சந்தானத்தார்.
07. திரு.சி. கணபதிப்பிள்ளை அவர்களின் சந்தானத்தார்.
08. திரு.மு. கணபதிப்பிள்ளை அவர்களின் சந்தானத்தார்.
09. திரு.அ. சின்னத்தம்பி அவர்களின் சந்தானத்தார்.
10. திரு.க. மார்க்கண்டு அவர்களின் சந்தானத்தார்
11. திரு.இ. மார்க்கண்டு வைத்தியர் அவர்களின் சந்தானத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. திரு.சீ. தங்கராசா அவர்களின் சந்தானத்தார்
13. திரு.க. இளையதம்பி அவர்களின் சந்தானத்தார்
14. திரு.சி. முருகேசு அவர்களின் சந்தானத்தார்
15. திரு.சி. இளையதம்பி அவர்களின் சந்தானத்தார்.
16. ஸ்ரீ கந்தசுவாமிகோயில் பொறுப்பில் தீர்த்த உற்சவம்.

ஏனைய மாதாந்த விசேட பூசைகளின் உபயகாரர்கள் இடையிடையே மாற்றம் பெறுவதுண்டு. ஸ்ரீ மாவடிக் கந்த சுவாமி கோயிலின் ஆரம்பம் நிச்சயமாக 1921ம் ஆண்டு. ஆனால் 1821 என்பது பிழையாகும். நிரந்தரமான இரு பூசைகளின் உபயகாரர்கள் பின்வருமாறு:-

(1) சித்திராபூரணை திரு.த. கயிலாயபிள்ளை குடும்பத்தினர்.

(2) வருட சங்காபிஷேகம் - திரு. ஞா. கந்தையா குடும்பத்தினர். இவ்வுற்சவத்திற்கான உபயகாரர்கள் மாற்றப்பட மாட்டார்கள்.

கந்தஷஷ்டி விரதப் பூசைகளில் விரதகாரரினால் ஒரு பூசையும், அன்னதானமும் பொறுப்பேற்று நடாத்தப்படும். ஏனைய பூசைகள் உரிய உபயகாரர்களினால் நடாத்தப்படும். அபிஷேகம் சுவாமி உள்வீதி உலாவருதல் என்பன இதன் விசேட அம்சங்களாகும். ஆறு நாட்களும் கந்தபுராண படலமும் ஈற்றில் திருக்கலியாண நிகழ்ச்சிகளும் நடைபெறுவதுடன் சூரசம்மாரவிழா உரிய உபயகாரர்களினாற் திறம்பட நடாத்தப்பட்டும் வருகின்றது.

திருவெம்பாவை பத்து நாட்களும் விசேட அபிஷேக பூசை உரிய உபயகாரர்களினால் நடாத்தப்படுகிறது. தைப்பொங்கல் நிருவாக சபையின் உபயமாகும். சித்திரா பூரணை அபிஷேக ஆராதனைகளுடன் உரிய உபயகாரர்களினால் நடாத்தப்படுகிறது. தைப்பூசம், மாசிமகம் என்பவற்றில் விசேட அபிஷேக பூசை நடைபெற்று வருகிறது. தினமும் நவக்கிரக பூசையும், அர்ச்சனைகளும் நடைபெறுகின்றன. வருடாந்த சங்காபிஷேகம் உரிய உபயகாரரினால் விசேடமாக நடைபெற்று வருகிறது.

இன்று இக்கோயிலுக்கு நான்கு ஏக்கர் வயல் நிலமும், பூசகர் இருக்கும் வீடு வளவும், இதன் வடபுற வளவும், ஆலயம் அமைந்திருக்கும் வளவும் உட்பட ஐந்து ஏக்கர் நிலமுண்டு. அர்ச்சனை, ஊரவர்களின் நன்கொடை, வயற்குத்தகை இவற்றின் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு கோயில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 ஆவது இயல்:

முருகன் கோவில் ஆறு.

## 5. ஆரையம்பதி கந்தசுவாமி கோவில்

ஆரையம்பதி மட்டக்களப்புத் தொகுதியில் ஒரு பிரபலமான கிராமம். இத்தொகுதியிலுள்ள கிராமங்கள் பலவற்றுள்ளும் பெரியதும் சனநெருக்கம் கூடியதும் சைவப் பெருமக்கள் நிறைந்ததுமான ஒரு வளம் பொருந்திய கிராமம் இது. மட்டக்களப்பு நகரின் தெற்கே சுமார் நாலு மைல் தூரத்தில் உள்ள பழமை வாய்ந்த ஒரு கிராமம். கல்வியிற் பெரியது என்று பெயர் பெற்ற ஒருசில கிராமங்களுள் இதுவும் ஒன்று. இவ்வூரில் ஆரைப் பற்றைகள் அல்லது நீரோடைகள் வளைந்து வளைந்து சென்று வாவியுட் கலப்பதால் இவ்வூருக்கு ஆரைப்பற்றை என்று பெயர் உண்டாயிற்று. அன்றியும் அவ்வோடைகளிலே ஆரல்மீன்கள் நிறைய வாழ்ந்த காணத்தால் இவ்வூருக்கு ஆரைப்பற்றை என்று பெயர் உண்டாயிற்று என்றும் ஒரு காரணம் சொல்வர். மேலும், ஆரல் எனப்படும் வல்லாரை என்கின்ற கீரைவகை நிறைய இந்நீரோடைகளின் ஓரங்களில் முளைத்திருந்த காரணத்தினால் இவ்வூருக்கு ஆரைப்பற்றை என்று பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவர். இவ்வாரைப்பற்றை என்னும் வளமான ஊர்ப்பெயர் திருந்தி ஆரையம்பதி என்று இக்காலத்தில் வழங்கப்படுகின்றது. இவ்வாரையம்பதி என்னும் பெயர்ப் பிரிவு 1872ம் ஆண்டுதான் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு முன்பு காத்தான்குடி என்னும் பெயரே இப்பகுதிக்கும் சேர்த்து வழங்கப்பட்டது.

காத்தான் என்ற வேடர் தலைவன் ஒருவன் காத்தான் குடியிருப்பு என்னும் மத்திய பகுதியில் இருந்தான் என்று வரலாற்றால் அறிகின்றோம். அவன் தொழில் வேட்டை ஆடுதலும், மீன்பிடித்தலுமாகும். அவன் ஒருநாள் மீன்பிடிக்க வலை கொண்டு வந்த போது மட்டக்களப்பு வாவிக் கருகில் இருந்த பற்றை ஒன்றினுள் ஒரு கல் விக்கிரகத்தைக் கண்டான். அதைப் பயபக்தியுடன் எடுத்துக் கொண்டு விக்கிரகம் கிடந்த இடத்திற்குப் பக்கத்திலிருந்த ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ் வைத்து, பூசித்து வந்தான். அதுவே காலகதியில் இக்கோயிலாற்று என்பர்.

அன்றியும் காத்தான் என்பவன் ஒரு பெரிய கோயிலைக் கட்டி அதனுள் தங்க வேலாயுதம் ஒன்றை வைத்து, பூசனை ஆற்றிவந்தான் என்றும் கூறுப. அக்கோயிலிருந்த இடம் ''கோயில் குளம்'' என்னும் பெயரால் ஆரைப்பற்றையின் தென் கோடியில் அமைந்துள்ளது. அங்கே இடிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் உடன்கூடிய பல கட்டிடங்கள் மாளிகைகள் போலவும் இருந்தன என்பதை 1940ம் ஆண்டில் நானும் கண்டேன். அந்தக் ''கோயில் குளம்'' என்னும் ஊர்ப்பகுதி அக்காலத்தில் ஒரு பெரிய ஊராக இருந்திருக்க வேண்டும் என்றும், காத்தான் என்பவன் அவர்களின் தலைவனாய் அவர்களை ஆண்டுவந்த ஒரு குறுநிலமன்னன் என்றும், தீர்மானிக்கமுடி கிறது. இக்கோயிலையும் காத்தானையும் பற்றிய ஐதீகங்கள் பல இன்று கேட்கப்படுகின்றன. ஐதீகங்களான இவை பற்றி மேற்படி கோயில் வரவு செலவு அறிக்கையில் பின்வருமாறும் கூறப்படுகிறது.

இக்கோயில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மிகப்பழமை வாய்ந்த ஆலயங்களுள் ஒன்றாகும். நாம் அறிந்த காலம் முதல் இதன் மூலஸ்தானத்தில் வேல் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இவ்வாலயம் இருக்கும் இடத்தினை உள்ளடக்கிய பகுதி மண்முனைப்பற்று என வழங் கப்படுகிறது. இப்பகுதி மிகப் பழைய காலத்தில் காத்தான் என்ற தமிழர் தலைவன் ஒருவனின் அதிகாரத்துக்குட்பட்டதாக இருந்ததென்றும் அவன் தனது வழிபாட்டுக்கெனத் தன் குலதெய்வமான குமரனுக்கு கோயில் அமைத்தான் என்றும் கூறப்படுகிறது. ஆலைய வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் அவ்வேலைகளைப் பார்வையிட ஆலமர நிழலில் வந்தமர்ந்த அத்தலைவனது கண்களிலே அழகிய தங்கவேல் ஒன்று தென்பட்டது என்றும், ஆனந்த மேலீட்டில் அவ்வேலி னைத் தமது இரு கரங்களாலும் ஏந்தியதும் அவ்வேல் கல்லாகச் சமைந்து விட்டதென்றும், அதிசயமுற்ற அத்தமிழர் தலைவன் தான் அமைத்த ஆலயத்தில் அக்கல்வேலினை வைத்து வழிபட்டுவந்தான் என்றும் இப் பகுதியில் பல கர்ணபரம்பரைக் கதைகள் நிலவுகின்றன. ''அவன் கோயில் அமைத்ததாகக் கூறப்படும் இடம் ''கோயில் குளம்'' என்று இப்பொழுதும் கூறப்படுகிறது. அங்கு காணப்படுகின்ற தடயங்களிலிருந்து அது குறு நிலத் தலைவன் ஒருவனின் வாசஸ்தலமாக இருந்திருக்கலாம் என ஊகிக்க'' முடிகிறது.

பின்னர் உண்டான காலச்சூழ்நிலை பலமாற்றங்களை உண்டாக்கின. பகைவரின் தாக்குதலால் ஏற்பட்ட தளர்ச்சியினால் காத்தான் பின்னடைய ஆலயமும் புறக்கணிக்கப்படுவதாயிற்று. இதனோடு மட்டக்களப்பு வாவியும் வேறு பெருக்கெடுத்து ஆலயத்தை நிலைகுலையச் செய்தது.

''முன்னவன் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளம் குன்றும்'' - திருமூலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கமைய ஊர் பஞ்சத்தால் வாடியது. ஆலயத்தைப் பூசனையில் லாது போட்டனர். இவ் ஆலயத்தைப்பற்றி அதே வரவு செலவு அறிக்கை யில் வேறு ஒரு உண்மை கூறப்பட்டுள்ளது. அது பழை ஒரு ஏட்டிலிருந்து திரு.சி.ப. கண்ணப்பன் என்பவரால் 10-11-1887 இல் பிரதிபண்ணப்பட் டுள்ளது. அப்பிரதியைப் பார்த்து திரு. சி.குலசேகரம்பிள்ளை என்பவர் 14-10-1980 இல் பிரதி எழுதி வரவு செலவு அறிக்கையில் சேர்த்துள்ளார். இதனை வாசகர்கள் படித்தறிதல் முக்கியமானதாகுமாதலில், கீழே அதனைத் தருகிறேன்.

''சில காலத்திற்கு முன் காத்தான் என்னும் பெயரையுடையவோர் வேடன் இப்பகுதியில் இருந்தான். இவனுடைய தொழில் மீன்பிடித்தலும், மிருக வேட்டையாடுதலுமேயாம். அக்காலத்திலிருந்த குடிசனங்ளில் இவனே சற்று அதிகாரம் வாய்ந்தவன். இவன் வசித்தருந்த காலம் 1692ம் ஆண்டு. அதாவது கலியுகம் பிறந்து 4794ம் வருடத்தின் பின். இவனோர் வந்தேறு குடியைச் சேர்ந்தவன். இவனது பரம்பரையானோர் அக்காலத்தில் புத்தளப்பகுதியில் குடியேறியிருந்த தென் இந்தியராவர். இவன் வசித்திருந்த இடம் காத்தான்குடியென்னும் கிராமத்தின் மத்திய பகுதி. அங்கிருந்து இவன் வழக்கம் போல வலைகொண்டு தெற்கு நோக்கிவரும் போது, ஒரு நாள் ஆற்றங்கரையோரமாக ஒரு பற்றைக்குள் கல்லினாற் செதுக்கப்பட்ட ஒரு விக்கிரகங் கிடக்கக்கண்டு, அதை எடுத்துக் கிட்டடியாக மணல் செறிந்த இடமாயுள்ள ஓர் பெரும் விருட்சத்தடியில் வைத்து அதை வணங்கிக் கொண்டு வந்தான். இவனோர் பிரம்மச்சாரி யாதலின், அன்று தொட்டு இவன் தனது சொந்த இருப்பிடத்திற்குப் போகாமல் விக்கிரகமிருந்த இடத்தையே தனது பதியாகக் கொண்டு சீவித்து வந்தான். மழைக்காலம் வந்ததும் அவ்விக்கிரகம் இருந்த இடத் தில் இலைகுழைகளினாலும் புல்லினாலும் வேயப்பட்ட ஒரு குடிசையை இயற்றி, அவ்விக்கிரகத்தையும் காப்பாற்றித் தனது தொழிலையும் வழமைபோற் செய்து கொண்டு வந்தான்.''

காத்தான் விக்கிரகத்தை வைத்து வணங்கத் தொடங்கி இரண்டொரு வருட காலத்தின்பின் இவ்வூரில் பேதிநோய் தலைகாட்டினமையின் அதிகமானோர் மாண்டனர். ஆயின், இக்காத்தானுக்கு ஒரு சிறு நோயுமே உண்டாகவில்லை. சனங்கள் இதைக்கண்டு அதிசயித்து, இந்தக்கோதாரி கெதியில் நீங்கிவிட்டால் காத்தானது கல்லு விக்கிரகத்திற்குப் பொங்கல், பூசை முதலியன செய்து நிவேதிப்போமென்று நேர்த்திக்கடன் பண்ணி வைத்தார்கள். அன்று தொடக்கம் கோதாரி நோய் படிப்படியாய்க்குறைந்து இரண்டு மூன்று தினங்களில் முற்றாய் இல்லாது போய்விட்டது. கோதாரி நீங்கிய வெள்ளிக்கிழமை தொடக்கமாக சனங்கள் அவ்விடத்தில் பொங் கல், பூசை முதலியன தவறாது செய்து கொண்டு வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வருடங்களின் பின்னர் காத்தான் இறந்துவிட்டான். பிறகு ஊர வர்கள் சேர்ந்து குடிசை இருந்த அவ்விடத்தை மூல ஸ்தானமாக வைத்து, கல்லினால் ஒரு சிறு கோயில் இயற்றி விக்கிரகத்தையும் வைத்து வணங் கிக்கொண்டு வந்தார்கள். அதுவே இப்போதுள்ள கந்தசுவாமி கோயிலின் மூலஸ்தானமாகும்.

இதிலிருந்து சில வருடங்களுக்குப் பின் அக்காலத்தில் ஆரைப்பற்றை யைச் சேர்ந்த செங்குந்தர் பகுதியில் தனவானாயிருந்த ''நாகப்பர்'' என்னுமொருவர் கொஞ்சப் பணம் செலவழித்து இக்கோயிலைப் பெருப்பித்துக் கட்டினார். இவரிறந்து போக, திருவிளங்கு குடியாரில் ஒருசிலர் சேர்ந்து இக்கோயிலின் வெளிமண்டபம், மதில் முதலியவற்றைத் தங்கள் பொருள் கொண்டும் பிறரிடம் அறவிட்டும் பெருப்பித்துக் கட்டினார்கள். இந்தக் குடியாருக்கு இது விடயத்தில் மன்றுளாடியார் குடியார், புலவனார் குடியார், சம்மானோட்டி குடியாராதியோர் பொருளுதவியுஞ் செய்தனர். இது நடைபெற்றது 1850ம் ஆண்டில். இக்கோயிலின் வெளிமண்டபத்தில் 1864ம் ஆண்டு ஆனி மாதம் முதலாம் திகதியன்று கொடித்தம்பம் நாட்டப்பெற்றதென்க.

கடைசியாய் இக்கோயில் ஊர்ச் சனங்களின் அதிகாரத்திற்கு அடக்க மாய்வர தம்பலகாமமிருந்து வந்த ஒரு பூசகரை இக்கோயிலுக்குப் பூசக ராக வைத்தனர். அக்காலத்தில் இக்கோயிற் பராமரிப்பாளராய் ஸ்ரீமான் நொத்தாரிஸ் காசிநாத ரென்பவர் வண்ணக்கராகவும் ஸ்ரீமான் கதிரவேற் பிள்ளை பெருக்குதோர் கணக்கப்பிள்ளையாகவும் இருந்தனர். திருவிளங்கு குடியாரும் மன்றுளாடியார் குடியாருமே இக்கோயிலைத் தக்க நிலைமைக்குக் கொண்டு வந்தது காரணமாக இந்த இரண்டு குடியா ருக்குமே இக்கோயிலின் பராமரிப்புத் தத்துவம் உரித்துடையதாகும். (முறையே கணக்கப்பிள்ளை, வண்ணக்கு என்னும் உத்தியோகங்கள்) இக்கோயில் உண்டுபட்ட காலம் தொடக்கம் இக்காலபரியந்தம் இம்முறை யாகவே இக்கோயிலின் பராமரிப்புத்தத்துவம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. இனிமேலும், தலைமுறை தலைமுறையாக இவ்விதமே நடைபெற்றுக் கொண்டு வர ஆதிமத்தியாந்தரகிதராகிய எம்பெருமான் கிருபை பாலிப்பாராக.

இக்கோயில் கட்டப்பெற்றபின் முதன் முறை 1802ம் ஆண்டிலும் இரண்டாம் முறை 1864ம் ஆண்டிலும் கும்பாபிஷேகம் பண்ணப்பட்டது. இஃது ஆதியிற் பிள்ளையார் கோவிலாக இருந்தது. சிலகாலத்தின் பின்பே கந்தசுவாமி கோயிலென வழங்கப்பட்டு வருகின்றது. காத்தான் என்னும் வேடனாற் கண்டெடுக்கப்பட்ட கல்லு விக்கிரகம் ஒரு பிள்ளையார் சொரூபம். அதை இப்போதும் இக்கோயிலுட் காணமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் இப்போதிருக்கும் ஆரைப்பற்றைக்கும் காத்தான் குடியிருப்பென்னும் ஒரே ஒரு நாமமே இருந்துவந்தது. கி.பி. 1872ம் ஆண்டு வரையிற்றான் காத்தான்குடி, ஆரைப் பற்றையென அரசினரால் இரண்டாய் வகுக்கப்பட்டது. ஆரைப் பற்றையில் ஒவ்வோரு குடிமைக ளையும் ஒவ்வோர் குடிமைகளின் இருப்பிடங்களையும், ஸ்ரீமான் கதிரவேற்பிள்ளை பெருக்குதோர் என்பவர் வேறு வேறாக ஆங்காங்கு பிரித்துவைத்துள்ளார். இவரிறந்தது 1958ம் ஆண்டில்.

மேலே கூறப்பட்ட பிந்திய ஏட்டுக் குறிப்பின்படி, காத்தான் என்ப வன் கண்டெடுத்தது பிள்ளையார் விக்கிரகமே என்பதும், அதனைக் கோயில் கட்டி வைத்து கந்தசுவாமியின் பெயரைக் கூறி வணங்கினான் என்பதும், தான் உண்மையான வரலாறு ஆகும். அவன் தங்க வேலாயு தத்தைக் கண்டான் என்பதும் கோயில் குளத்தில் கந்தசுவாமி கோயில் கட்டினான் என்பதும் ஐதீகக் கதைகளே எனக் கொள்ளக்கிடக்கின்றது.

ஆரையம்பதியின் ஆதிக் குடிமக்களான முகத்துவாரத்தெருவார், நடுத்தெருவார், ஆரைப்பற்றைத் தெருவார், சம்மான்காரர் ஆகிய குரு குலத்தோரும், வேளாள தெருவார், பணிக்கர், செங்குந்தர், பொற்கொல் லர் என்போரும் இவ்வாலயத்தில் பாரம்பரிய உரிமையும் உரித்துமுடைய எட்டுப்பாகை மக்களாகும். இவர்கள் அனைவரும் ஒன்றுகூடி இவ்வாலய நித்திய நைமித்திக வழிபாடுகளை ஆதிகாலம் முதல் செய்துவந்துள்ளனர்.

இவ்வூர் ஆலயத்தின் வட எல்லையில் பரமநயினாரும், தென் எல் லையில் ஆலடிவயிரவரும், கிழக்கு எல்லையில் காளிதேவியும், மேற்கு எல்லையில் காட்டுமாவடி வயிரவரும், ஏனைய திக்குகளில் கண்ணகியம் மன், கிருஷ்ணன், சமாதடிப் பிள்ளையார், மாரியம்மன், பேச்சியம்மன், திருநீலகண்டப் பிள்ளையார், சித்திவிநாயகர், ஆலடிப்பரமன், செல்வா நகர்சிவன் முதலிய தெய்வங்களும் எழுந்தருளி விளங்குகின்றனர். இத்தெய்வங்களை ஊரின் மத்தியில் செங்கோல் கொண்டெழுந்தருளி உள்ள செவ்வேற் பெருமானது அதிகாரத்தினை ஏற்றுச் செயற்படும் ஊரின் காவற் தெய்வங்கள் போலக் கருதமுடிகிறது.

இக்கோயிலுக்கும் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோயிலுக்கும் குளக்கோட்டு மன்னன் காலத்திற்கு முன்பிருந்தே நெருங் கிய வரலாற்றுத் தொடர்பு இருந்துவருகிறது. அத்தொடர்பினை எடுத்துக் காட்டும் நிகழ்ச்சிகள் இவ்விரு ஆலயமகோற்சவ காலங்களிலும் இன்னும் இடம் பெறுவதுண்டு. ஆரையம்பதி கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தின் மூன்றாம் நாள் கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து அவ்வாலய வண்ணக்குமார், குருக்கள், கோவிலார் முதலியோர் விருதுகளுடன் ஆரையம்பதி முருகனிடம் வருவதும், அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஆரையம்பதி கந்தசுவாமி கோயில் நிருவாகிகளும் ஊர்மக்களும் மங்கல வாத்தியங்களுடன் எதிர்கொண்டு அழைத்துச் செல்வதும், அதுபோல் கொக்கட்டிச்சோலைத் தான் தோன்றீஸ்வரரர் தேர்த்திருவிழா வன்று ஆரையம்பதி ஆலய நிருவாகிகள் ஊரவர்கள் முதலியோர் 'வேல்' கொண்டு பாதயாத்திரையாகத் தான்தோன்றி அப்பரிடஞ் செல்வதும், இவர்களைக் கொக்கட்டிச்சோலைத் தான் தோன்றீஸ்வரர் கோயில் நிருவாகிகளும் ஊரவரர்களும் மங்கல வாத்தியங்களுடன் எதிர்கொண்டு அழைத்துச்செல்வதும், ஆரையம்பதி மக்கள் தேரின் வடத்தினைப் பூட்டி தேர் ஓட்டத்தினை ஆரம்பித்து வைப்பதும், பக்தி பரவசமூட்டும் அருள் மிகு கண்கொள்ளாக் காட்சிகளாகும். கொக்கட்டிச்சோலைத் தான்தோன் றீஸ்வரர் கோயிலுக்கும், ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலுக்குமுள்ள பழம் பெரும் தொடர்பின் ஞாபகச் சின்னமாக இன்னமும் விளங்குவது தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில் நுழைவாயிலின் முன்புள்ள திருக்கலியாண மண்டபமாகும். அதனை ஆரையம்பதி மக்கள் அமைத்து வருடாவருடம் தேர்த் திருவிழாவுக்கு முன்பு புதிய ஓலைகளால் வேய்ந்து சிறப்புச் செய்யும் வழக்கம் இப்போதும் உண்டு.

இக்கோயிலில் உற்சவம் புரட்டாதிப் பூரணையில் நடைபெறும் தீர்த்த உற்சவத்தோடு 10 நாள் திருவிழா கொண்டு நிறைவேறுகிறது. அவை முறையே:-

1 ம் நாள் - கொடியேற்றம் ஊர்மக்கள்

2 ம் நாள் - குருக்கள்

3 ம் நாள் - பொன்தொழிலாளர் பாகை

4 ம் நாள் - பணிக்கர் பாகை

5 ம் நாள் - ஆரைப்பற்றைத் தெருப்பாகை

6 ம் நாள் - நடுத்தெருப் பாகை

7 ம் நாள் - வேட்டைத் திருவிழா - முகத்துவாரப் பாகை

8 ம் நாள் - சப்பரத் திருவிழா - சம்மானோட்டிப் பாகை

9 ம் நாள் - தேர்த் திருவிழா - வேளாளர் தெருப்பாகை

10 ம் நாள் - தீர்த்தம் - ஊர்மக்கள்.

இதற்குமேல், மாதந்தோறும் வருகின்ற கார்த்திகை நட்சத்திரத்தில் ஒவ்வொருவர் பூசை நிகழும். திருவெம்பாவைப் பூசை ஒழுங்காக நடந்து 10 வது நாள் தீர்த்தமாடி முடிவுறும். மேலும் இவ்வாலயத்தில் தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திராபூரணை, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், கந்த சஷ்டி, திருக்கார்த்திகைத்தீபம், விநாயக சஷ்டி, திருவா திரை முதலிய காலங்களில் அலங்கார உற்சவ விழாக்கள் நடைபெறுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. எம்பெருமானைத் தரிசிக்கக்கந்தசஷ்டியிலன்று கூடுகின்ற மக்கள் தொகை எண்ணில் அடங்கா எம்பெருமான் பொற்கழலினையே தம் துணையெனப் போற்றிக் கடும் விரதமியற்றி நீண்டகாலம் புத்திரச் செல்வமில்லாமலிருந்த பலர் புத்திர பாக்கியம் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்கின்ற பல கதைகளை இங்குள்ள மக்களிடையே இன்றும் கேட்கலாம்.

இக்கோயிலில் வருடாந்த வரவு செலவு அறிக்கை மிக விபரமாகவும், ஒழுங்காகவும் நிறைவேற்றி வெளியிடப்படுகிறது என்பது குறித்து இக்கோயில் பரிபாலன சபையாருக்கு மிகுந்த நன்றியும் பாராட்டுக்களும் கூறுகின்றேன்.

இவ்வாலயத்தைப் பற்றிய வரலாறு 12 பாடலாக எழுந்துள்ளது. மாதிரிக்கு ஒரு பாடல் இங்கே தருகின்றேன்.

பதினெண்நூற்று ஐம்பதினில்
பரிவா யிலங்கு திருக்குடியார்
பதிசேர் மன்று ளாடியுடன்
மறைசேர் புலவனார் குடியும்
கதிகூர் சம்மா னோட்டியரின்
கனநல் உதவிதனைப் பெற்று
பதியாய் மகாமண்டபத்தினொடு
பழிப்பில் மாட மாக்கினரே.

இத்துடன் ஊஞ்சற் பாக்களும் ஆரையம்பதி கந்தசுவாமி கோயில் பேரில் பாடப்பெற்று அச்சாகியுள்ளன. அவற்றுள் ஒன்று:-

மட்டுமாநகரின் தெற்கே வகுத்த கல்ஈரிரண்டில்
வித்தைகள் பலவுமோங்கி விளங்கிடு திருவூராரை
யம்பதி வாயும் கந்த அருள்மிகு சுவாமிமீது
மன்குலம் சிறக்க வென்று வாழ்த்தியே ஊஞ்சல்பாட
தம்பியின் ஓலம்கோட்டு தண்புனம் கடிதுசென்று
வெம்பியே வாடிநின்ற வேலனை இரங்கிநோக்கி
நம்பியின் தங்கை வள்ளி நாயகி தனையணைத்த
தந்தியின் உபயபாதம் தலைமிசை சூடுவோமே.

இவைபோன்று இவ்வாலயம் பற்றிய தனிப்பாடல்களும் பல உள. அவற்றை எல்லாம் திரட்டி வெளியீடு செய்வதும் ஆலய பரிபாலன சபையாரின் கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 ஆவது இயல்:

முருகன் கோவில் ஆறு.

## 6. கல்லடி வேலாயுத சுவாமி கோவில்

மட்டக்களப்பின் முகப்புப்போல் பிரயாணம் செய்வோர் கண்ணுக்கு முதலாவதாகத் தோன்றுவது, கல்லடி வேலாயுத சுவாமி கோயில். மட்டுநகரிலிருந்து தெற்கு நோக்கி கல்முனைக்குச் செல்லும் நீண்ட பாதையில், நீண்டு கிடக்கும் கல்லடிப்பாலத்தைத் தாண்டிய பின்னர் முதலாவதாகச் சற்றுத் தூரத்திற்கு அப்பால் கண்ணுக்குத் தெரிவது இக்கோயிலாகும்.

ஊர்றோட்டும், ''காட்டுறோட்டும்'' பிரியும் சந்திக்கு அப்பால் இரண்டு றோட்டுகளுக்கும் நடுவில் அமைந்திருப்பது இக்கோயில். முன்னால் இக்காலத்தில் கட்டப்பட்ட ஒரு ''சினிமாத் தியேட்டர்'' கோயிலுக்குப் பின்னால் ஓர் அரசாங்கப் பாடசாலைக் கட்டிடம் இவற்றைக் கடந்து செல்லுமிடத்து, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் குருகுலம், சிவானந்த வித்தியாலயம், சுவாமி விபுலானந்தர் மணிமண்டபம், சாரதா மகளிர் இல்லம் என்பவற்றடன் விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரியையும் காணலாம்.

கிழக்கிலங்கையிலுள்ள ஒரு சில பழமைமிகு ஆலயங்களுடன் ஒப்பிடும் போது இவ்வாலயம் காலத்தால் பிந்தியது எனினும் அருட் சிறப்பிலும் தலமகிமையிலும் பெரிதும் சிறந்து விளங்கும் ஆலயமாகத் திகழுகின்றது. இவ்வாலயம் மட்டக்களப்பு மாநகரசபை எல்லையினுள் அமைந்த கல்லடியில் புதிய கல்முனைப் பேர்பாதைக்கும் பழைய கல்முனைப் பேர்பாதைக்குமிடையில் அழகுற அமைந்து நிற்கின்றது.

ஆயினும் இதுதோன்றிய காலத்தில் இத்தலம் காடடர்ந்த பகுதியாக கல்முனைக்குச் செல்லும் பழைய வீதியை மாத்திரம் கொண்டதாகவிருந்தது. மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்ட இவ்விடத்தில் இந்நூற்றாண்டின் ஆரம்பமாகிய 1901ம் ஆண்டில் இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தினை அணித்து, இன்னும் காட்சி தரும் தேத்தாமரம் இவ்வாலய வரலாற்றுடன் நெருங்கிய முக்கியத்துவம் உடையதாக விளங்குகின்றது. நெடுநாள் நோயினால் வருந்தி, கந்தசஷ்டி விரதம் நோற்று அவ்வழியால் மனம் நொந்த நிலையில் வந்து கொண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்த கந்தவேற்பிள்ளை என்பவருக்கு தேத்தா மரநிழலிருந்து வெளிப் பட்ட பண்டாரவடிவிலிருந்த ஒருவர் பச்சிலைகளைக் கைகளில் கட்டி மறைந்தார்.

1901ல் நடைபெற்ற இவ்வற்புத நிகழ்ச்சியே இவ்வாலயத்தின் ஆரம் பக்கால்கோளாக அமைவுற்றது. அன்று அருகிலமைந்த ஸ்ரீ சித்திவிநாயக ராலய அர்ச்சகரது கனவில் முருகப் பெருமான் தேத்தாமரத்தடியில் தனக்கொரு பீடமமைத்துத் தரும்படி தெரிவித்தார். அர்ச்சகர் கனவும் கந்தவேற்பிள்ளைக்கு நடந்த அற்புதமும் ஊர் மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு தேத்தாமர நிழலில் முருகப்பெருமானுக்கு ஒரு பீடம் அமைக்கப்பட்டது.

பொங்கலும் பூசைகளும் நடைபெறலாயின. கல்லடியைச் சேர்ந்த தோ.கு. சின்னத்தம்பியென்பவர் பெரிதாகக் கோயில் அமைக்கும் பணி யினை ஆரம்பித்து வேலை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது தேத்தா மரத்தடிப் பீடத்தை மாற்றாதீர் என அர்ச்சகர் கனவில் உரைக்கப்பட்டது. இது விடயமாக ஸ்ரீ விநாயகராலயத்தில் பூவும் போட்டுப்பார்க்கப்பட்டது. இடத்தினை மாற்றக் கூடாதெனப் பூப்பரீட்சையும் காட்டியது. எனவே, பழைய பீடத்துடன் சேர்ந்ததாகவே சிறிய ஆலயமாக அமைக்கப்பட்டு பூசைகள் நடைபெற்றன. இன்றும் கல்லடி வாழ் மூதாட்டிகள் எம்பெரு மானை ''தேத்தாக்கிழவன்'' என்று பக்திரசம் சொட்ட அழைப்பர்.

1927ம் ஆண்டு முதல் வருடாந்தத் திருவிழாக்களும் சமுத்திர தீர்த்த தோற்சவமும் ஆரம்பிக்கப்பட்டன. வைகாசிப் பௌர்ணமிக்குமுன் அமைந்த 6 நாட் திருவிழாக்களும், சுவாமி வீதிவலம் வருதலும், பெள ர்ணமி தின அருணோதய வேளையில் தீமிதிப்பு வைபவமும், சமுத்திர தீர்த் தமும் நடைபெறுவது ஒழுங்காயிற்று. வருடத்திற்கு வருடம் இவ்வரு டாந்த திரு விழாக்களின் சிறப்பும் தரமும் பெருகிக்கொண்டே செல்கின் றது. மிகக்குறுகிய காலத்துள்ளாக எம்பெருமானது கீர்த்தி பெரிதாகப் பலவிடங்கட்கும் பரவியுள்ளது. நேர்த்திக் கடன்களுடன் இத்திருத்தலம் நாடிவந்து தம்துயர் தீர்த்துக்கொண்ட அன்பர்கள் ஏராளமாயினர். அண்மையில் 1978ல் இடம் பெற்ற சூறாவளியினால் இவ்வாலயத்தின் முன்புறம் சேதமுற்றபோதிலும் மூலஸ்தானம் பழுதடையவில்லை. விரிவான முறையில் புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 1982ம் ஆண்டு மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது.

தினப்பூசைகள் நடைபெறுவதுடன் வெள்ளிக்கிழமைகள் தோறும் விசேட பொங்கல் அபிஷேகங்களும் நடைபெறுகின்றன. வருடாந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக்களைத் தவிர, கந்தசஷ்டி விரத காலத்தில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் இங்கு காப்புக்கட்டி விரதம் அனுஷ்டிப்பர். குமாராலய தீபம், கந்தஷஷ்ட்டி திருவிழா, மணவாளக்கோலத் திருவிழா ஆகியவை விசேட ஆராதனைகளாக அமைந்துள்ளன.

முன்பு இவ்வாலய நிருவாகம் ஊர் மக்களிலிருந்து தெரிவாகும். தலைவர், வண்ணக்கர் ஆகியோரது பராமரிப்பிலிருந்து வந்தது. 1960ம் ஆண்டின்பின்னர் ஆண்டுதோறும் நடைபெறும் ஊர்ப்பொது மகாசபையி லிருந்து தெரிவாகும் ஆலய பரிபாலன சபையின் பொறுப்பில் இவ்வாலயம் நிர்வகிக்கப்படுகின்றது. கல்லடியில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகராலயம், ஸ்ரீ விஷ்ணு ஆலயம், ஸ்ரீ வேலாயுத சுவாமி ஆலயம் ஆகிய முத்திருவாலயங்களின் நிருவாகமும் மேற்படி ஆலய பரிபாலன சபையினராலேயே நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 ஆவது இயல்:

## அம்மன் கோவில்கள் ஐந்து.

### *(1)* மண்டூர் - மண்டுக்கொட்டைமுனை துறையடி மாரியம்மன் கோவில்

மட்டக்களப்பில் மிகவும் பழமையும் பிரசித்தமும் உள்ளனவான திருப்படைக் கோயில்களுள் ஒன்றான தில்லை மண்டூர் முருகன் கோயிலைக் கொண்டது மண்டூர் என்னும் திருப்பதி. முருகன் கோயில் மண்டூர்ப் பிரதேசத்தின் தெற்குக் கரையில் அமைந்துள்ளது. அதன் எதிர்ப்புறத்தே பரந்த மட்டக்களப்பு வாவி இருக்கிறது. இத்தகைய திருப்பதி விபுலாநந்த அடிகளாரால் ''மண்டூர்'' என்னும் புண்ணியப் பழம்பதி என்று பாராட்டப்படுவது.

இப்பகுதியின் கிழக்குக் கோடி நீண்டதும் வயல் சூழ்ந்ததும் ஆகும். அதன் எல்லையில் மட்டக்களப்பு வாவியின் ஒரு பகுதி கிழக்கெல்லையாக அமைந்துள்ளது. இவ்விடம் மண்டுக் கொட்டை முனை எனப்படுவது. மண்டூருக்கு நகர்ப்பக்கத்திலுள்ள கோட்டைமுனை போலிருப்பதால், மண்டூர்க் கோட்டைமுனை என்றும், மண்டு மரங்கள் நிறைந்த ஒரு திடர்ச்சோலை இருந்ததனால் 'மண்டுக்கொட்டைமுனை' என்றும் இப்பெயர் வழங்கலாயிற்று எனலாம். மண்டுக்கொட்டைகளை வெட்டிக் காய வைத்து, இடித்து மாவாக்கி எடுத்தால் அந்த மா பிட்டு, அவித்துத் தின்பதற்கு மிகச் சுவையான உணவாகும்.

1940ம் ஆண்டுக்கு முதல் தெற்கே கிட்டங்கித் துறையிலிருந்து ஸ்ரீம்போட்' (STEAM BOAT) மூலம் காலையில் ஏழு மணிக்குப் புறப்பட்டு வருபவர்களுக்கும், மாலையில் இரண்டு மணிக்கு அதே ஸ்ரீம் போட்டில், மட்டக்களப்பிலிருந்து திரும்பி வரும்போது, பட்டிருப்புக்கு இந்தப் பக்கம் வந்ததும் நடுநாயகமாய்த் தெரிவதாக மண்டூர் - மண்டுக்கொட்டைமுனை துறையடிமாரியம்மன் கோவில் அமைந்திருக்கிறது.

இவ்வாலயம் வாவியின் வலது கரையில் மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கே சுமார் 20 மைல் தொலையில் மண்டூரையும், குறுமண்வெளியையும், மட்டக்களப்பு வாவியின் மூலமாக இணைக்குமிடத்தில் இருக்கின்றது. அக்காலத்தில் குறுமண்வெளித்துறையிலிருந்து தமது வயல்களுக்குச் செல்வதற்காக மண்டூர்ப் பக்கம் வருவோரும், மண்டூரிலிருந்து துறையைக் கடந்து அப்பால் செல்வோரும் தமக்கு வாவியிற் செல்லும் போது எவ்வித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையூறும் நேராவண்ணம் இவ்வாலயத்து அம்மனைப் பிரார்த்தித்து வந்தனர். அதற்காகவே இவ்வம்பாள் ஆதியில் இவ்விடத்தில் வைக்கப் பட்டது என்றும் பொதுவாகக் கூறப்படுகின்றது. இவ்வாலயத்திற்குத் தலவிருட்சமாய் அரசமரமொன்று மிகப் பழமை வாய்ந்ததாக உள்ளது. இதன் வடக்குத் தெற்குப் பக்கங்களில் மட்டக்களப்பு வாவிக்கரை யோரமாக வயல்வெளிகளும், மேற்குப் புறமாய் மண்டூர்க் கிராமமும் அமைந்துள்ளன. இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் அன்னை, குறுமண்வெளியிலிருந்து வாவியினூடாக மண்டூருக்கு வரும் பிரயாணி களை வரவேற்கும் மண்டூர் மாதாவாக அருள் சொரிந்து நிற்கின்றாள். இத்துறையடிக்கு வரும் எவரும் இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் அன்னையை வணங்கிவிட்டே செல்வது வழக்கம். மண்டூர்க் கந்தசுவாமி கோயிலுக்குக் காவடி எடுப்பவர்கள் விசேடமாக விழாக்காலங்களில் இவ்வாலயத்திலிருந்தே வாய்க்கு அலகு, முதுகுக்கு முள் என்பன பக்தி யுடன் ஏற்றிச் செல்வது இன்றும் நடைபெறுகின்றது.

கிழக்கு மாகாணம் மட்டக்களப்புப் பிரிவில் மண்டூர் மண்டுக் கொட்டைமுனையைச் சேர்ந்த முருகனதிகாரியார் பொ.த. ஆறுமுகமும், இவரின் மனைவி கதிரவேலு அதிகாரியார் கந்தம்மையும் 1903ம் ஆண்டுக்கு முதல் அவர்களது சொந்தச் செலவினில் மண்டூர் - மண்டுக் கொட்டைமுனைத் துறையடியில், மாரியம்மன் கோயில் ஒன்று கட்டித் தனிப்பட நடத்திவந்தனர். இவர்களுக்குப் புத்திர சந்தானமில்லை. வயோதிபர்களானபடியால் கோயில்•கருமங்கள் தங்களின் மரணத்தின் பின்னும் நடைபெற வேண்டுமென விரும்பியதால் மண்டுக்கொட்டை முனை, மண்டூர் என்னும் இடங்களில் அப்போது குடிபதியாயிருந்த கப்புகமார், வேளாளர், சீர்பாதக்காரர், கோயிலார் முதலிய சாதிக்காரர்க ளுக்கு அப்போதிருந்த செல்வாக்குள்ளவர்களின் பேரில் தரும நன் கொடையாக நொத்தாரிசு மூலம் கோயிலையும், அதற்குரிய ஆதனங்க ளையும் எழுதிவிட்டனர். அன்று தொடக்கம் நான்கு சாதியாரும், கோயிலையும் அதற்குரிய ஆதனங்களையும், பூசைச் சடங்குகளையும் ஒழுங்குற நடத்தி வந்தனர். நடத்தியும் வருகின்றனர்.

1910ம் ஆண்டு கோயில் கட்டியவர்களில் கந்தம்மை இறந்து போக, கோயிலுக்கு இன்னும் இரு சாதியாராகும் முற்குகர், வேடர் என்னும் வம்சத்தாரையும் சேர்த்து ஆறுசாதியாரின் கையில் கோயில் நிருவாகம் மாற்றப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரையும் கோயில் கருமங்கள் இதன் கீழ் செவ்வனே நடந்துவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1903ம் ஆண்டு கோயிலுக்கு வண்ணக்கராக வேளாள வம்சத்தில் சின்னவர் வீரக்குட்டி என்பவர் கடமை ஆற்றினார். இவருடன் மற்றும் மூன்று சாதியாரிலும் கப்புகமாருக்காக வினாசகர் கோவிந்தக்கப்புகன் அவர்களையும், சீர்பாதக்காரர்களுக்காக கணபதியார் வ.வி. மாணிக்கப் பிள்ளையையும், மண்டுக்கொட்டைமுனை மக்களுக்காக காத்தார் கணபதிப்பிள்ளையையும், கோயிலார்களுக்காக சின்னத்தம்பி குழந்தை யனையும் நியமித்த நிருவாகம் செவ்வனே நடைபெற்றது. 1910ம் ஆண்டு ஒரு மகாசபைக் கூட்டம் மண்டூர் கந்தசுவாமி கோயில் வீதியில் ஆறு வருணத்திலுள்ள மக்களும் கூடினர். முந்திய நிருவாகத்தர்கள் சிலர் இறந்து போனபடியாலும் இன்னும் இருசாதியாராகும் முற்குகர், வேடர் என்னும் வருணத்தாரிலும் சேர்த்த பதினான்குபேர் நிருவாக சபையாராகவும் அதில் வேளாளரில் மண்டூர் 1ம் குறிச்சி ஆறுமுகம் பொ.த. கந்தப்பன் வண்ணக்கராகவும் (செட்டிகுடி) தெரிவு செய்த ஆறு வருணத்தாரிலும், ஆறு பராமரிப்புக்காரர் அல்லது மனேச்சர்மார்களுமாக அறுவரைத் தெரிவு செய்து, நொத்தாரிசு உறுதி மூலம் உறுதிசெய்து நடைமுறைப்பட்டு வந்தது. பொலிஸ் தலைமைக்காரராக இருந்தோர் தமது பெருக்கு முன்னால் பொ.த. என்பதையும் சேர்த்து எழுதுவது வழக்கம். இதுபோல் இன்று வட்ட விதானைமார் வ.வி. என்பதைச் சேர்த்து எழுதுவ தையும் காணலாம். (அப்படியே இங்கு மு.பொ.த. தம்பிராசா என்பது முருகப்பன் பொலி தலைமை தம்பிராசா என்று முழுப்பெயருமாகும்.) அதன் பின்பு வண்ணக்கர் இறந்துபோக திருவாளர்கள் சோ. ஞானமுத்து, த.பொ.த. வினாசித்தம்பி, க. சுப்பிரமணியம் என்பவர்கள் வண்ணகர்க ளாகக் கடமை பார்த்து வந்தனர். அதன் பின்பு 1958ம் ஆண்டு தொடக்கம் மு.பொ.த. தம்பிராசா என்பவர் வண்ணக்கராகக் கடமை ஆற்றிவருகிறார்.

1957ம் ஆண்டு வந்த பெரு வெள்ளத்தில் இந்த மாரியம்மன் ஆல யம் முன் முகப்பு சுற்றுமதில்கள் அழிந்துபோக, படிப்படியாக ஆறுவரு ணத்தாரும் சேர்ந்த பணம்போட்டும் கோயில் ஆதனத்தின் வருமானங் களையும் கொண்டு அழிந்த கட்டிடங்களும், பழுதடைந்த கட்டிடங்களும் திருத்தப்பட்டன. இதன் பின் 1978ம் ஆண்டு வந்த சூறாவளியால் சில சேதங்கள் ஏற்பட்டு அதையும் திருத்தி 4-7-79ந் திகதி கோயில் கும்பாபிஷேகம் உயர்திரு. கு. பஞ்சாட்சரக் குருக்களால் நடைபெற்றது. இதற்கு மூலவிக்கிரகமொன்றைச் செய்து தாபிப்பதற்கு வித்துவான் பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்கள் வேண்டிய உதவியை வழங்கினார் கள். மற்றைய விஷயங்களுக்கு மண்டூரிலுள்ள ஆறு பகுதியாகும் பொருளுதவி செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியென்னும் சொல் மழையைக் குறிக்கும். மாரி இல்லையே புல் பூண்டுகள் தொடக்கம் எவ்வித உயிரினங்களும் வாழா என வள்ளுவநாய னாரே கூறியுள்ளார். அதேபோல் இறைவன் தன் திருவருளை உயிர்களின் மேல் வழங்காவிட்டால் உயிர்கள் ஈடேற்றம் காணா.வெம்மையான சிவன் தண்மையான சக்தியைத் தன் வாம பாகத்தில் வைத்திருப்பதனாலன்றோ ஆன்றோர், ''நீலமேனி வாலிழை பாகத்தன்'' என்றனர். மாரி பொழிந்து உயிர்களின் உலக வாழ்வில் துன்பத்தை நீக்குவது போல், இறைவனின் திருவருட் சக்தியானது இறைவன் கொண்டுள்ள பெருங்கருணையால் அருள்மழை பொழிந்து ''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தியாகி'ன்றாள்.

இத்தகைய அன்னைக்கு அருள் வடிவம் எடுக்கும் பணியை நானே செய்யவேண்டும் என்பது நியதி! இந்த நியதியைப் பற்றிய வரலாற்றை நான் கூறாமலே இருந்துவிட நினைத்ததுண்டு. ஆயினும் இப்போது ஏற்பட்ட சந்தர்ப்பத்தால் அதனைச் சற்றுக் கூற எண்ணுகிறேன். ''நான் சிறுபிள்ளையாக இருந்த காலம் முதல் ஆண்டுக்கொருமுறை தவறாது என் அன்னை முதலியோருடன் கோயிலுக்குச் சென்று பொங்கல் படைத்து பூசனை ஆற்றிவருவதுண்டு. ஒருமுறை திருவளர் வ. தங்கவடிவேல் ஐயர் என்பார் பூசகராக இருக்கையில் அங்கு மூலஸ்தானத்தில் வைக்கும் அம்மன் முகக்களையைப் பற்றி ஐயரிடம் கேட்டேன். அவர் பல மறு மொழிகளையும் சொல்லி எனக்கு விளக்கத்தோடு, இம்மூலஸ்தானத்தில் நிரந்தரமான அம்மன்சிலை ஒன்றை நீங்கள் செய்வித்துக்கொடுங்கள் என்றார். மேலும் தொடர்ந்து, இக்கோயில் பற்றிய வரலாறு ஒன்றும் நீங்கள் நிரந்தரமானதாய் எழுதவேண்டும் என்றும் கேட்டார். இன்னும், இக்கோயில் அம்மன்மீது ஒரு பாடல் நூல் எழுதவும் வேண்டும் என்றும் என்னிடம் கேட்டுக்கொண்டார். இவை நடந்து சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்டன. நான் ஒன்றுமே செய்யாது இருந்தேன். இறுதியில் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்யும் இச் சூழ்நிலை ஏற்பட்டபோது ஏனோ தெரியாது, என்னுடைய தமையனாரான வண்ணக்கர் திரு. தம்பிராசா அவர்களே இது பற்றி என்னைக் கேட்டார். நான் அப்படியே செய்து கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படலாயிற்று. எழுதும் வாய்ப்பும் இப்போது கிடைக்கலானது. அம்மன்மீது பாடல் செய்யும் வாய்ப்பினை இன்னமும் காத்திருக்கிறேன். அம்மன் மீது தொடர்புபட்ட எனது மூன்று நினைவலைகளும் இவ்வாறுள்ளன.

இக்கோயில் நிருவாகத்தர் தெரிவு செய்தல், பகிரங்கமாக ஆறு பகுதியாரிலுமுள்ள பொது சனங்கள் கூடியே நடைபெறும் ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியாரிலும் இவ்விரண்டு பேரை நீதி, தயை, தயாளம், ஜீவகாருண்யம், பொறுமை முதலிய நற்குணமுள்ளவர்களாய்த் தெரிந்து அவர்களில் வேளாள வம்சத்தில் ஒருவரை வண்ணக்கராகவும், ஒவ்வொரு பகுதியாரிலும் ஒவ்வொருவரை மனேச்சராகவும் நியமனம் செய்து வண்ணக்கருடன் சேர்ந்து கடமை செய்யவுமாகத் தெரிவு நடைபெறும். இதில் கூடியோரின் சம்மதப்படியே வண்ணக்கர் செயற்படுவார்.

மண்டூர்க் கந்தசுவாமி கோயில் கப்புகவம்சத்தில் ஒருவரும் ஐயர் வம்சத்தில் ஒருவரும் தகுதியான நற்குணம், ஒழுக்கம், பரிசுத்தம் முதலியன உடையவர்களாய் இருவர் நிருவாகத்தர்களால் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களுக்கு கோயில் வருமானங்களில் மூன்றில் ஒருபங்கும் வருடா வருடம் செய்கை பண்ண ஒரு ஏக்கர் காணியும் கொடுக்கப்படும்.

கிராமக் குளப்பாய்ச்சலில் 20 வயல் நிலம் குறுமண் வெளியில் உள்ளது. மேலும் வட்டவளையில் 2 ஏக்கரும் வேதத்துச் சேனையில் 4 ஏக்கரும், முன்மாரிப் பூமியாக 1 ஏக்கரும் உள்ளன. இவற்றைவிட மேலும், மண்டூரில் மேட்டு நிலம் 1/2 ஏக்கரும் அம்மன் கோயிலுக்காக இருக்கின்றது.

இக் கோயிலில் வருடாந்த உற்சவம் ஆனி மாதம் பூரணையின் முதல் 7 நாட்களும் பண்டுபோல் இன்றும் தவறாது நடக்கிறது. இக் கோயிலில் தெய்வமாடுதலும் கட்டுச் சொல்லுதல் போன்றவை இருப்பினும், உயிர்ப்பலி கொடுத்தல் ஒரு போதும் இருந்ததில்லை. இறுதி நாள் சடங்கு பள்ளயம் எனப்படும். பள்ளயத்திற்கு முதல், அம்மனாகப் பிரதம பூசாரி கோலம் செய்த பந்தலின்கீழ் மண்டுக்கொட்டைமுனை, மண்டூர் பால முனை, தம்பலவத்தை ஆகிய ஊர்களுக்கு வலம் வருதலுண்டு, அப்போது சேகரிக்கும் அரிசி, நெல், பழவகைகள் என்பனவெல்லாம் பள்ளயத்திற்குப் பயன்படுத்தப்படும்.

மாதப் பூசைகள்:- மண்டூர்க் கந்தசுவாமி கோயில் கப்புகமார் தைப்பொங்கல் பூசைக்குரியோராவர். தைப்பூசம் கோயிலாரும், மாசிச் சிவராத்திரி வேளாளரும், சித்திரை வருடப் பிறப்பு - சீர்பாதக்காரரும், ஆனி மாதம் வருடாந்த விழா, மேலே குறிப்பிட்ட ஆறு வகுப்பினரும் 7 நாட்களுக்கும் பூசைக்குரியோராவர். ஆடி அமாவாசை வேடரும், கார்த்திகைத்திருவிழா முற்குகரும், மார்கழித் திருவாதிரை கோயில் கட்டியவர்கள் வளர்த்த வயிற்றுப் பிள்ளைகள் பரம்பரையினரும் பூசைகளைச் செய்து வருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். கும்பாபிஷேகத்திற்கு முதல் மூலஸ்தானத்தில் இருந்த மூலவிக்கிரகம் இப்பொழுதும் மூலஸ்தானத்திலே வேறாக இருக்கிறது. அது தாம்பிரலோகத்தினால் செய்யப்பட்டது. கோயில் எழுந்த ஆரம்பகாலத்தில் இருந்து இது எழுந்தருளி விக்கிரகமாக பயன்பட்டிருக்கிறது. இவ்விக்கிரகம் ஒரு சிறு வாகனம் ஒன்றிலே வைக்கப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டிருக்கும் இந்தக்கோயில், தொடங்கிய காலத்திலிருந்து இங்கே திருவிழா செய்யும் முறையே இருந்திருக்கிறது என்பது தெரிகிறது. இக்கோயிலிருந்து சிங்க வாகனம் ஒன்று போரதீவிலுள்ள பத்திரகாளி கோயிலுக்கும், மயில்வாகனம் ஒன்று மண்டூர்க்கந்தசுவாமி கோவிலுக்கும் ஏதோ காரணத்தினால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் பழைய குறிப்புக்களிலிருந்து தெளிவாகிறது.

மேலும் 1910ம் ஆண்டு ஆடி மாதம் 15ந் திகதி ஒரு பெரிய கூட்டம் கூடி திருவிழா ஒழுங்குகள் மீண்டும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதன் படி,

1 ம் திருவிழா கொடியேற்றம் என்பன சுவாமி கணக்கில்
2 ம் திருவிழா கப்புகமார்
3 ம் திருவிழா வேளாளர் கவுத்தன் குடியார்
4 ம் திருவிழா முற்குகர்
5 ம் திருவிழா வேடர்
6 ம் திருவிழா கோயிலார்
7 ம் திருவிழா சீர்பாதக்காரர்
8 ம் திருவிழா வ.வி.வதனக்குட்டி, பொ.த. கந்தவனம் என்பார்.
9 ம் திருவிழா பொ.த. தம்பிமுத்து சண்முகப்பிள்ளை
10 ம் திருவிழா வேளாளர் - செட்டி குடியார்
11 ம் திருவிழா தீர்த்தம், கோயில் கட்டிய பொ.த. ஆறுமுகம் என்பவரும், அவரது பின் உரித்தாளிகளும்

இடைக்காலத்தில் இத்திருவிழா ஒழுங்கு நிறுத்தப்பட்டது ஏன் எனத் தெரியவில்லை. பொருள் வருவாய் குறைந்ததினாலும் கந்தசுவாமி கோயிலில் திருவிழா நடப்பதினாலும் என நினைக்கலாம்.

தற்போதைய நிருவாகம் திருவிழா நடாத்த ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்துக்குத் திருவிழா பொருத்தமாயிருக்கும் எனச் சிலர் நினைக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயில்பற்றி நூல்கள் எதுவும் எழுந்ததாகத் தெரியவில்லை. மண்டூர் - மண்டுக்கொட்டைமுனை மாரியம்மன் கோயில் உள்வீதியில் பரிவார மூர்த்திகளுக்கு சிறு சிறு கோயில்கள் கட்ட நிருவாகம் தீர்மானித்து நாகதம்பிரான், வயிரவர் ஆலயங்கள் கட்டிமுடிக்கப்பட்டன. காரைதீவில் இருந்து ஒரு சாமி அம்மா வள்ளியம்மையால் 1500 ரூபா நன்கொடையாகத் தரப்பட்ட நிதியினால் இக்கோயிலின் வலதுபுறத்தில் உள்வீதியில் அமைக்கப்பட்ட ஒரு சிறு கோயிலில் அங்கிருந்த விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் விஷ்ணு ஆலயமும் நிறுவவேண்டுமென ஆவல். மணிக்கோபுரமும் கட்டவேண்டுமென்றும் விரும்புகிறார்கள். எல்லாத் திருப்பணிகளும் நன்கு நிறைவேற அம்மன் திருவருளை வேண்டி அமைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 ஆவது இயல்:

## அம்மன் கோவில்கள் ஐந்து

## *(2) திருப்பழுகாமம்*

## *ஸ்ரீ திரௌபதியம்மன் கோயில்*

பண்டைப் புகழ்மிக்க பழுகாமம் ஆதியில் கண்டியரசர்களின் கோடைக்கால வாசஸ்தலமாக இருந்தது. சிங்காரக்கண்டி, அமைச்சர்பிட்டி என்னும் சின்னங்கள் இன்றும் வழக்கில் உள்ளன. அரசப்பிரதானி ஒருவர் இங்கு இருந்தார். பல பண்டகசாலைகளும், அவற்றில் வேலை செய்யும், பண்டாரங்களும் பல ஏவலாளர்களும் பாதுகாவலர், படை வீரர்களும் இங்கு தங்கி இருந்தனர். இவர்கள் சம்புநாவற்பதிச் சித்திரவேலரையும், ஸ்ரீமாவேற்குடாவில் ஆலயங்கொண்டிருந்த மாவேற்குடையாரையுமே வணங்கி வந்தனர்.

சில நூற்றாண்டுகட்குமுன் இந்தியாவினின்றும் கதிர்காமம் வந்த வழியில் அடியார் ஒருவர் இக்கிராமத்தில் சில பகல் தங்கியிருந்தார். இக்கிராமத்தில் வாழும் மக்கட்குக் கோயில் இல்லாத குறையைக் கண்ட அவர். தாம் கொண்டு வந்த பாண்டவர் சிலைகளை முறைப்படி ஸ்தாபித்து ஆலயம் எடுத்து வணங்குமாறு மக்களை வேண்டித் தம் பிரயாணத்தைத் தொடர்ந்தார். அவர் சென்ற பின்னர் மக்கள் மண்ணால் ஆலயம் அமைத்து அவர் அறிவுறுத்தியபடி பூசைகளையும் பயபக்தியோடு செய்து வந்தனர்.

இது இவ்வாறிருக்க, மாவேற்குடாவில் இருந்த மாவேற்குடையார் ஆலயத்தைச் சம்புநாவற்பதிச் சித்திரவேலாயுத சுவாமிக்குத் தொண்டு செய்துவந்த அத்தியாகுடி, வைத்தியனார் குடி வேளாளர், ஸ்ரீமாவேற்குடாக் கிராமத்தில் இருந்து கொண்டு, நிருவகித்துவந்தனர். அவர்களுடன் தான்தோன்றீஸ்வரர் ஆலயதேசவன்னிமை, மதுரை வடக்குவாயிற் பூபாலகோத்திரம் அவர்களும் வாழ்ந்து வந்தனர்.

ஒருமுறை கண்டி அரசர் தமது மனைவியார் சகிதம் பழுகாமத்திலுள்ள சிங்காரக்கண்டியிற் சிலகாலந்தங்கி அரசியல் விடயங்களைக் கவனிக்கவந்தார். வந்த சில நாட்களில் மனைவியார் சுகவீனமுற அரச வைத்தியர், இயன்றளவு வைத்தியம் செய்தும் நோய் நீங்கவில்லை. இந்நிலையில் பழுகாமப் பிரதானியின் வைத்தியர் முதலியோரும் வைத்தியஞ் செய்தனர். நோய் நீங்கவில்லை. அரசர் பெரிதும் மனம் நொந்திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் போது அரசரைக் காண ஸ்ரீமாவேற்குடாவில் வாழ்ந்த பூபாலகோத்திர வன்னிமை வந்தார். அவர் அரசரின் மனநோவுக்கான காரணத்தையறிந்து, நீங்கள் விரும்பினால் என்பரிபாலனத்தின் கீழ் இருக்கும் வைத்தியனாரைக் கொண்டும் வைத்தியஞ் செய்யலாம் எனக் கூறியதோடு தரமான வைத்தியர் என்பதையும் வலியுறுத்தினார். அரசரும் தூதனை விடுத்து வைத்தியரையழைத்து வைத்தியஞ்செய்ய நோய் நீங்கிற்று. அது கண்டு ஆனந்தங்கொண்ட அரசர் அன்போடு வைத்தியரை அழைத்து அவரோடு அளவளாவி அவருக்கும் அவருடைய இனத்தவர்கட்கும் இருக்கும் கஷ்டங்களை அறிந்து பழுகாமத்தில் அவர்கள் வாழ வளவுகளும், பழுகாமத்து வெளியில் வடபுறமாக ஆறு வயல்களும் விசேடமாக வைத்தியஞ் செய்த ஞாபகமாகப் ''பரிகாரி வயல்'' என நாமமிட்டு ஒரு வயலும் கொடுத்தார்.

இன்னும் திரௌபதி அம்மன் ஆலயத்திலும் பாதியுரிமை வழங்கியதோடு வைத்தியரே 'நம்பி'யாகக் கோவிற் பூசைகளைச் செய்யும்படியும், திரௌபதி, தருமர், பாத்திரங்களிரண்டையும் நம்பியே வகிக்கவேண்டும் எனவும், அவரது சக குடியார்கள் அர்ச்சுனன் சகாதேவன், பாத்திரங்களாகச் சடங்குளிற் கலந்து கொள்ளவேண்டும் எனவும், முன்னவர் முன்னிலையில் வைத்தியருக்கு வரிசை ஈந்து தேசவன்னிமைக்குஞ் சிறப்புச் செய்து அனுப்பினார். ஏனைய வீமன், நகுலன், ஆகியோரின் இடத்தை பண்டாரபிள்ளைகளுக்கும் ஈந்தார். அன்று தொடக்கம் வேளாளர் மெல்லமெல்ல ஸ்ரீமாவேற்குடாவை விட்டுப் பழுகாமத்திற் குடியேறினர். முன்மாரியில் அத்தியார் முன்மாரி வயல்களையும், பின்மாரியில் (கோட்டைப்போகமாக) பழுகாமத்து வெளியில் ஏழு வயல்களையும் செய்துவந்ததோடு கன்றுகாலிகளையும் பழுகாமத்துக்கே கொண்டு வந்து மேய்த்தனர். இதிலிருந்து மாவேற்குடாவில் உள்ள மாவேற்குடையார் ஆலயமும் நிலைகுலையத் தொடங்கியதோடு அங்கு பிரதிட்டை செய்யப்பட்டிருந்த தங்கவேலும் களவு போயிற்று. ஆனால் திரௌபதி அம்மன் ஆலயம் வேளாளர் பொறுப்பேற்றபின் வளர்ச்சியடையத் தொடங்கியது. இருபோகமுஞ் செய்யத் தொடங்கிய வேளாளர்களும் முன்னிலும் சிறப்பாக வாழ்க்கை நடாத்திவந்தனர்.

மண்கோயிலாக இருந்த திரௌபதி அம்மன் ஆலயத்தைக் கற்களாற் கட்டியதோடு பின்வருமாறு பூசை முறைகளையும் செய்யத் தொடங்கினர்.

1. மாதாந்தச் சடங்குகள் சித்திரை மாதப்பிறப்பன்று சித்திரைச் சடங்கும், வைகாசிப் பிறப்பில் வைகாசிச் சடங்கும், கார்த்திகைப் பிறப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகைச் சடங்கும், மார்கழிப் பிறப்பில் மார்கழிச் சடங்கும், தைப்பிறப்பில் தைச் சடங்கும், விசேட பூசைகளாகச் செய்து வந்தனர். இச்சடங்குகளிற் பாண்டவர் கொலு சடங்கிற் கலந்து சிறப்பிப்பதோடு தெய்வமேறிய கட்டாடிமாரும் ஆடிச்சிறப்பிப்பர்.

2. விசேட பூசைகள் - சித்திராபௌர்ணமி, வைகாசிப் பௌர்ணமி ஆனி உத்தரம், ஆடிப்பௌர்ணமி, ஆடி அமாவாசை, ஆவணி ஓணம், நவராத்திரி, ஐப்பசி வெள்ளி, கந்த சஷ்டி, கார்த்திகைத் தீபம், விநாயக சஷ்டி, திருவெம்பாவை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம் ஆகிய விசேடகாலங்களிற் சிறப்பான பூசைகள் நடைபெற்று வந்தன.

3. ஆண்டு விழா:- ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் கதிர்காமத் தீர்த் தத்தையடுத்துவரும் வெள்ளிக்கிழமை தீமிதிப்பு வைபவம் சிறப்பாக நடைபெறும்.

தீமிதிப்புக்கு முந்திய வெள்ளிக்கிழமை கதவு திறக்கும் நிகழ்ச்சி நடைபெறும். கதவு திறப்பதற்கு முந்திய வெள்ளிக்கிழமை பள்ளயக்கூட் டம் நடைபெறும். இக்கூட்டத்தில் சாதிசமய வேறுபாடின்றிக் கிராம மக்கள் அனைவரும் கலந்துகொள்வர். பள்ளயக்கூட்டத்தை அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை இரவு வண்ணார் சந்திக்குச்சந்தி நின்று எதிர்வரும் புதன்கிழமை வாழைக்காய் மடுவிற்போடப்படும், வெள்ளிக்கிழமை கதவு திறக்கப்படும், அதற்கிடையில் வீடுவேய்தல், வேலியடைத்தல், வளவு தெருத் துப்பரவு செய்தல் ஆகியவற்றைச் செய்து முடிக்கவேண்டும் எனவும், வனவாசம் போகும்போது சமயக்குற்றமுள்ளோர் கிராமத்தை விட்டு வெளியேறவேண்டும், பாண்டவர் கொலுவும், வாழைக்காய் மடுவிற்போடுவர். வாழைக்காய் மடுவிற்போட்ட தாம், கிராம மக்கள் யாவரும் கோயில் வீதியைத் துப்பரவு செய்வேதோடு தங்கள் வீடு, வேலி, வீதி ஆகியவற்றையும் சுத்தஞ் செய்வர். அடுத்துவரும் வெள்ளிக் கிழமை மாலை வண்ணக்குமார் எண்மரும் நம்பியார் வீடு சென்று முறைப்படி அவரைக் கனம்பண்ணி ஆலயத்துக்கு அழைத்துவந்து உரிய கிரியைகளைச் செய்து திருக்கதவைத் திறப்பர், இவ்வைபவம் 'கதவு திறத்தல்' எனப்படும். நம்பியாரோடு பாண்டவர் கொலுவும் தெய்வமேறி யாடும் கட்டாடிமாரும் ஆலயத்துக்கு வந்துவிடுவர். இவர்கள் யாவரும் ஒரு நாளுக்கு ஒரு முறையே, 'நோர்ப்பு' எனப்படும் பள்ளயம் போடுவர். (உணவை உண்பர்) தலைநோர்ப்பு விசேடமானது. கிராம மக்களின் வீடு தவறாது மடல் வெட்டி கொண்டு செல்வர். அதில் நெல், காய்கறி, பால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயிர், தேய்காய், வெற்றிலை, பாக்கு, பழம், சூடம் முதலியன இருக்கும். இந்நோர்ப்புச்சாதம் அவர்கள் நெற்குற்றிய அரிசியைக் கொண்டு காய்கறிபுளி சேர்த்துப் புளிச்சோறுபோலச் சமைத்துப் பால் தயிர் சேர்த்து அதற்கென முன்பே கூடிய பர்ணகசாலையில் (நோர்ப்புக் குடிசை) இருந்து உண்பர்.

கோயிலில் காலையிலும் மாலையிலும் சடங்கு நடைபெறும். புதன்கிழமை வனவாசப் பெருவிழா நிகழும். திரௌபதி, தருமர் தவிர்ந்த பாண்டவர் கொலுவும், கட்டாடிமாரும் வனவாசம் போவர். தருமரிடம் வாளைப்பெற்ற வீமன் தலைமையில் வனவாசமும் கதலி வனமழித்தலும் நடைபெறும்.

அடுத்த நாள் வியாழக்கிழமை அர்ச்சுனன் தவநிலை நிகழ்ச்சிமாலைச் சடங்கின் பின் நடைபெறும். இந்நிகழ்ச்சி காணப் பல கிராம மக்களும் குழுமுவர். புதன், வியாழன்,வெள்ளி ஆகிய மூன்று நாட்களிலும் பழுகாமத்தில் மக்கள் திரளாகக் கூடி வீடுகள் தோறும் நிரம்பி இருப்பர்.

வெள்ளிக்கிழமை அதிகாலை தீக்கட்டை எடுத்தல், யாகம் வளர்த்தல், தீமூட்டல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும். பின்னர் மதியத்தின் பின் கடற் குளித்தலும் தீமித்தலும் நடைபெறும். சனிக்கிழமை காலை தீக்குளிக்குப் பால் வார்த்தலும், இரவு காவற்காரர் பூசையும், (இடும்பன் வேள்வி) நடைபெறும். இவ்வேள்வி முடிவடைந்ததும் திருக்கதவடைப்பும், நம்பி யாரை வீட்டில் கொண்டு விடுதலும் நடைபெறும். இத்துடன் தீப்பள்ளய நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

**சில ஐதீகங்கள்:**

1. இவ்வாலயத்தை மக்கள் பள்ளயக்கோயில் எனவே அழைப்பர். பள்ளயம் என்பது நோர்ப்பு என வழங்கும் உணவையே குறிக்கும்.

2. பூசகர் ஆதி தொடக்கம் நம்பி என அழைக்கப்பட்டு வருகிறார். இவரைக் கிராமத்து மக்கள் மிக்க மதிப்புடன் கௌரவமாக நடத்துவர்.

3. மார்கழி மாதம் முழுவதும், (தமிழ்க்கணக்கு) பாண்டவர் தவத்துக்குப் போவதாகவும், அம்மாதத்தில் காவற்காரரே ஊரைப் பாதுகாப்பார் எனவும் மக்கள் நம்பி வாழ்கின்றனர். இதைத் தைச் சடங்கின் போது ''தவத்துக்கப் போனவர்கள் தவங்கலைந்து வாருங்கோ'' எனக் கூவி அழைப்பதாலும் மக்கள் பரி பூரணமாக நம்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பிள்ளைச் செல்வமில்லாதோர், இங்குவந்து முறைப்படி அம்மையை வேண்டிப் பிள்ளைப்பாக்கியம் பெறுவர்.

5. இவ்வாலயத்துடன் கண்ணகியம்மன் ஆலயமும் அமைந்திருக்கிறது. ஆண்டுதோறும் வைகாசிப் பௌர்ணமியில் கண்ணகியம்மன் திருக்குளிர்ச்சி விழா சாதிமத பேதமின்றிக் கிராம மக்கள் யாவராலும் சிறப்பாக நடைபெறும்.

திரௌபதை அம்மன் ஆலயத்தின் வட திசையில் கண்ணகி ஆலயம் அமைந்துள்ளது. கிராமத்தில் ஏதாவது கொள்ளைநோய், துன்பங்கள் வந்தால் மக்கள் ஒன்றுகூடிக் கண்ணகி அம்மனுக்கு விஷேட ஆராதனைகள் செய்து, தேங்காய் அடித்தல், கொம்பு முறித்தல் ஆகிய வைபவங்களைச் செய்வர். தினமும் வசந்தன் கூத்தும் நடைபெறும்.

இவ்விரு தெய்வங்களும் பழுகாமமக்களின் இருகண்போலப் போற்றப்படுவதோடு, அவர்களின் தயவால் நோய் நொடியின்றிச் சீர்சிறப்பாகவும் வாழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 ஆவது இயல்:

## *(3) துறை நீலாவணை*

## கண்ணகி அம்மன் கோயில்

சோழநாட்டிலே பிறந்து பாண்டிய நாட்டிலே பாராளுமன்னனைத் தன் கணவனுக்காகப் பழிவாங்கிச் சேரநாட்டிலே செங்குட்டுவனால் பத்தினி என்று விழா எடுக்கப்பெற்ற கண்ணகி, கடல் சூழ் இலங்கையில் நிலைபெற்று விட்டாளென்று கண்ணகி வரலாறுகளிலெல்லாம் முன்னர்க் கண்டோம். இன்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் அவ்விழா கயவாகு மன்னனால் இங்கு கொண்டு வரப்பட்டு நிலை பெற்றுவிட்டது. இவ்வாறு ஈழநாட்டிலே வழிபடும் தெய்வமாகிவிட்ட கண்ணகி அம்மனுக்குத் திருவிழா வைகாசி மாதத்தில் கிழக்கிலங்கையில் விமரிசையாக நடைபெறுகின்றது. கிழக்கிலங்கை வாசிகள் பலர் பத்தினித் தெய்வத்தைத் தங்கள் குல தெய்வமாகவே வழிபடுகின்ற வழக்கமும் தொடர்ந்து நிலைப்படுவதாயிற்று.

மட்டக்களப்பில் இவ்வாறு வழிபடும் இடங்களுள் துறை நீலாவ ணைக் கிராமமும் ஒன்றாகும். இவ்வூர் மட்டக்களப்பு நகரிலிருந்து இருபத்தி நான்கு மைல் தொலைவினுக்கு அப்பால் தென் பகுதியி லுள்ளது. இக்கிராமம், மட்டக்களப்பு வாவியினாலும், குளங்களினாலும், வயல் நிலங்களினாலும் சூழப்பெற்றிருக்கின்றது.

ஆனால் கண்ணகி அம்மன் கோயில் அமைந்துள்ள இடமோ கிழக் கும் தெற்கும் வயல் நிலங்களாலும், மேற்கும் வடக்கும் மட்டக்களப்பு வாவியினாலும் சூழப்பெற்று கிராமத்தின் வட அந்தத்தில் சுமார் கால் மைல் தூரத்தில் அமைந்திருக்கின்றது, கோயிலைச் சுற்றிச் சிறு சிறு குன்று களும் அதன் மேல் விருட்சங்களும் வளர்ந்து காணப்படுகின்றன. இக்கிரா மத்தில் பாறைகள் காணக்கூடியதாக இருப்பது இவ்விடத்திலேதான். இதனால், இங்கு எழுந்தருளி இருக்கும் அம்மனுக்குக் கல்லடி அம்மன், கல்லடி நாச்சி என்று வேறு பெயர்கள் சூட்டியும் வழிபடுகின்றனர்.

இக்கோயில் அமைந்திருக்கும் இவ்விடம் சுமார் ஆயிரம் வருடங்க ளுக்குமுன் காடடர்ந்த பகுதியாக இருந்தது. சில முனிவர்கள் இவ்விடத் தைத் தேர்ந்தெடுத்து ஆச்சிரமம் அமைத்து உறைவிடமாக்கிக் கொண் டார்கள். இவர்கள் மந்திர, தந்திர, சித்து, வித்தைகளில் மேம்பட்டி ருந்ததனால் மக்கள் இப்பகுதிக்குச் செல்லப்பயப்பட்டார்கள். இம்முனிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் சக்தி வழிபாட்டைக் கடைப்பிடித்திருந்தார்கள். சில காலத்தின்பின் இம்முனிவர்கள் ஏதோ காரணத்தையொட்டி வேறிடத்துக்குச் சென்றுவிட்டார்கள். இதன் பின்னர் மக்கள் இப்பகுதியினுள் சென்று ஊடாடித்திரிந்தார்கள்.

இவ்வாறு சனநடமாட்டம் ஓரளவு ஏற்பட்டுவருங்காலத்தில் இக்கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் அங்கு சென்றபோது ஓர் ஆச்சரியத்தைக் கண்டார். அங்கு மூன்று சிலைகளையும், முக்கோண வடிவமுடையதும், அதிக சித்திர வேலைப்பாடுடையதுமான இரு சோடி சிலம்புகளையும் தண்டைச் சிலம்பு இருசோடிகளையும் கண்ட அவர் பயத்தோடு கிராமத்துச் சனங்களுக்குத் தான் கண்டதை எடுத்துக்கூறினார். கிராமத்துச் சனங்களும் புதுமையினைக் காண விரைந்து வந்து சிலம்புகளையும் சிலைகளையும் கண்டார்கள். ஒரு புறம் பயமும், மறுபுறம் பக்தியும் கொண்டு பணிந்தார்கள். இச்சிலைகள் உருவ அமைப்பில் கண்ணகியின் அம்சங்களைக் கொண்டு இருந்தபடியாலும் ''கண்ணகி அம்மன்'' என்று நாமஞ்சூட்டி வழிபாடாற்றி வந்தார்கள். பின் இக்கிராம மக்கள் இக் குன்றையும் சிலைகளையும் நடுவணாகக்கொண்டு ஒரு கோயில் அமைத்தார்கள். இக்கோயில் வாவியை நோக்கி வடபக்க முகப்பாகக் கட்டப்பட்டது.

அக்காலத்தில் குறுமண்வெளி என்னும் இடத்திலும் பல முனிவர்கள் வசித்தார்கள். அவர்களில் ஒருவரான ''கெங்காதசி ஐயர்'' என்பவரை அழைத்துவந்து அந்த மூன்று சிலைகளையும் காண்பித்தார்கள். அவர் சிலை வடிவிலமைந்த கண்ணகி அம்மனுக்குப் பூசைசெய்யும் விதிகளைக் கொண்ட 'பத்ததி' ஒன்று வழங்கினார். ஆனால் இந்த பத்ததி முறைப்படி பூஜை செய்யுங்கால் வருடாவருடம் பூசை செய்யும் பூசகர் அப்பூசனைக்குப் பின்னர் இறந்து விட நேரிட்டது. இதைக்கண்டு மக்கள் அச்சங் கொண்டார்கள், வருடாவருடம் வழிபாடு நடாத்துவதற்காக இருந்த பூசகராகிய ''தன்மார்'' என்பவருக்கு அம்மனுடைய தரிசனமும் கட்டளையும் கிடைத்தன. ''இந்த மூன்று சிலைகளில் மிக்க ஒளியுடையதும், அகோரம் பொருந்தியதுமான சிலையைக் கோயிலுக்கு எதிரே மட்டக்களப்பு வாவியில் நான்கு உபவாவிகள் ஒன்று சேரும் இடத்தில் அமிழ்த்திவிட வேண்டும்'' என்பதுவே இக்கட்டளையாகும். அதன்படி கிராம மக்களுடன் சேர்ந்து பூசகர் செய்து முடித்தார். இதன்பின்னர் பூசகர் வருடம் ஒரு முறை இறக்கும் வழக்கமும் நின்று விட்டது. அத்தோடு அம்மனால் ஆஞ்ஞாபிக்கப்பட்டபடி பூசைவேளையில் தீபம் வாவியை நோக்கியும் காட்டப்படும் வழக்கம் இன்றும் இருந்து கொண்டு வருகின்றது. தெய்வங்களுக்கு ஆடும் சில பக்தர்கள் சிலவேளை வாவியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் அமிழ்த்தப்பட்ட இடத்தை நோக்கிக் குதித்துச் செல்வதும் உண்டு. மற்றைய சிலைகளில் ஒரு சிலை ஊர்வலத்தின் போது தேரில் வைத்துக் கொண்டு செல்லப்படுவதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. மற்றையது ஆலய கர்ப்பக்கிருகத்தில் வைத்து வழிபடப்படுகிறது.

இக்கண்ணகி ஆலயத்தை மையமாகக் கொண்டு சூழலில் வைரவன் கோயில், நாகதம்பிரான் கோயில், வதனமார் கோயில், இன்னும் பதி னொரு தேவதைகளுக்குரிய மேடைகள் என்பன அமைக்கப்பட்டிருக் கின்றன.

இந்த நாகதம்பிரான் ஆலயம் கட்டுவதற்கு முன் இக்கிராமத்தில் தின மும் பாம்புக்கடி இருந்தது. பாம்பு வைத்தியர்களும் மூவருக்கு அதிகமாக இருந்தார்கள். ஆனால் இவ்வாலயம் அமைந்ததின் பின் எவ்வளவோ குறைந்து வருடத்திற்குச் சராசரி ஒருவர் அல்லது இல்லை என்ற நியதியும் ஏற்பட்டதுதான் பெரிய ஆச்சரியமாகும்.

இக்கண்ணகி அம்மன் ஆலயத்தில் உயர்சாதிப் பல நாகங்கள் வாழ்கின்றன. கோயில் பூட்டப்பட்டிருக்கும் காலத்தில் இவைகளே கோயிலைப் பாதுகாக்கும் காவலர்களாக இருக்கின்றன. வழிபாடு செய்வோருக்கு ஒரு தீங்கும் செய்யாது, தீய எண்ணத்துடன் செல்பவர் களைக் கோபத்தைக்காட்டி விரட்டித் துன்புறுத்துமேதவிர ஒருவரையும் கடிப்பதேயில்லை, முன்னிருந்த ஒரு நாகம் வெள்ளிக்கிழமைகளில் மட்டக்களப்பு வாவியில் நீந்தி மண்டூர்க் கோயிலுக்குச் சென்றுவந்ததா கவும் இக்கிராம மக்கள் கூறுவர். சுமார் நானூறு வருடங்களுக்கு முன்பிருந்தே நடந்ததாக உள்ள இந்தக் கதைகளால் நாகங்களின் காவல் திறத்தைச் சிறிது நீங்களே சிந்தித்துப்பாருங்கள்.

முஸ்லீம் வியாபாரி ஒருவர் மட்டக்களப்பு வாவியில் மரக்கலத்தோடு சென்றார். பசி, தாகம் மேலிட்டதனால் இக்கோயிலின் கரையையடைந் தார். அவர் இக்கோயிலை துறைகளில் வழிப்போக்கர்களுக்குக் கட்டப்பட் டுள்ள ''அம்பலம்'' என்னும் சத்திரமாகக் கருதினார். இவ்விடத்தில் மீன் முதலிய புலால்களைச் சமைத்துச் சாப்பிட்ட அவ்வியாபாரியை பாம்புகள் மரக்கலத்தில் ஏறவிடாது கிராமத்திற்குள் விரட்டித் துரத்தின அவ்வியா பாரி ஊர் மக்களிடம் நடந்ததைக் கூற அவர்கள் கோயில் பூசகரிடம் சொல்லி அம்மனிடம் அவர் மூலம் முறையிட்டுப் பணிந்து, வணங்குமாறு சொன்னார்கள். அப்படியே வியாபாரியும் பூசகரிடம் கூறித் தெரியாமல் தவறுசெய்த குற்றத்துக்காகப் பெரும் பொருளீவதாகவும் நேர்த்தி பண்ணினான். இவ்வாறு நேர்த்திக்கடன் வைத்து வியாபாரியைப் பூசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்கு அழைத்துவந்து பிரதட்சணம் செய்வித்துத் தோணியிலேற்றி அனுப்பினார். இதன்பின் விழாக்காலத்தில் அவ்வியாபாரி தங்கத்தாலாய பொருட்களைக் கோயிலுக்கு வழங்கி வழிபட்டான் என்பர்.

இதுமாத்திரமல்ல, இந்நாகங்களை மருந்து மந்திரத்துடன் ஏமாற்றிக் கள்வர்கள் கோயிலிருந்து வெண்கலப் பொருட்களைக் கொள்ளையடித்துச் செல்ல, மருந்து மந்திரத்திலிருந்து விடுபட்ட நாகங்கள் சுமார் மூன்றரை மைல் தூரமுள்ள ஓந்தாச்சிமடத்தில் அக்கள்வர்களை மறித்து விரட்டிவிட்டுப் பொருட்களைக் காவல் புரிந்ததாகவும், இதன்பின் மூன்று தினங்களுக்குப் பிறகு பூசகர் கனவுகண்டு வண்ணக்கர் மற்றும் கோயில் நிருவாகிகள் முதலியவர்களுடன் சென்று மீட்டுவந்ததாகவும் அறியக்கிடக் கின்றது. இந்த நிகழ்ச்சி இப்பகுதியில் எங்கும் பரவிட்டதொன்றாகும். இது யானும் நேரில் அறிந்த ஒன்று.

இவ்விழா ஒரு வருடத்திற்கு ஒருமுறை வைகாசி மாதத்தில் பூர்வபட் சத்தில் நடைபெறும். வண்ணக்கர், கோயில் நிருவாகிகள், ஊர் மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி கோயில் விழா தொடங்கும் நாளையும் பூஜை முறைகளைப்பற்றியும் கலந்துரையாடித் தீர்மானிப்பார். பழங்காலந் தொட்டு செவ்வாய்க்கிழமை இரவு ஆரம்பமாகி அடுத்த திங்கட்கிழமை பின் இரவுடன் செவ்வாய்க்கிழமை அதிகாலை இவ்விழா முடிவடையும்.

வெள்ளிக்கிழமை இரவு அம்மன் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்ப டும். இதனைப் ''பல்லக்கு ஊர் சுற்று'' என அழைப்பர். ஞாயிறு பிற்பகல் ''கல்யாணக்கால் வெட்டு'' நடைபெறும். இத்தினத்திலிருந்தேதான் கோயிலின் சிறப்பான பூசைகளும் காவடி முதலியவைகளும், பக்தர்கள் நெருக்கமும் அதிகமாகும். பூசகருக்கு அம்மன் கனவில் அறிவிக்கும் இடத்திலுள்ள ''பூவரசங்கிளையினையே'' காலாக வெட்டி எடுப்பர். பூசகர் உண்ணாவிரதம் இருந்தே இக்கல்யாணக்கால் வெட்டினை நடாத் துவர். இக்காலை பூசகர் வெட்டியதும் பூசகர் அறிவு மயங்கி விழுவார். அவ்வேளை பூசைவிதிமுறை தெரிந்த ஒருவரால், இவர் சுய நிலைக்கு மீட்கப்படுவார். வெட்டப்பட்ட கம்பு (கல்யாணக்கால்) பூசை விதிமுறைக் கமையக் கிரியைக்கு உட்படுத்தப்பட்டு பூசகரும், அவரது சகாக்களும், தோளில் தாங்கியவண்ணம் கோயிலுக்குக் கொண்டு செல்வர். இக்கல் யாணக்காலை அங்கு கொண்டு சென்றதும் கல்யாண மண்டபத்தில் அது வைக்கப்பட்டு அன்றிரவு கோவலர் கண்ணகி கல்யாண வைபவமும் பூசையும் கோயிலில் விசேடமாக நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணக்கால் வெட்டச் செல்லும்போது உருவேற்றப்பட்ட சிலம்புப் பெட்டிகளுடன், அம்மன் பல்லக்கும் புடைசூழ மக்கள் பெருவெள்ளம் திரண்டு செல்லும். இன்றைய தினத்தில் இச்சிலம்புப் பெட்டியே முக்கிய இடத்தை வகிக்கும். உருவேற்றப்பட்ட சிலம்புப் பெட்டி, வெள்ளிக்கிழமை ஊர்வலத்தின் போது காப்புக்கட்டி ஒரு பொழுது உண்டு, அன்றைய தினத்தில் உபவாசம் கடைப்பிடிக்கும் பக்தரின் தலையிலேயே வைக்கப் படும். தலையில் வைக்கப்பட்டது முதல் இப்பக்தர் அடிக்கடி சுய நினைவு இழப்பார். பெட்டியிலுள்ள சிலம்பும் வெளிவர முயலும். இதற்காக இவைகளைக் கவனிப்பதற்குக் கோயில் பூசை விதிமுறை தெரிந்த குறைந்தது மூவராவது பெட்டியைப் பிடித்தபடி செல்வர். இக்காட்சி காண் போர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளக்கூடியதாகவும், பக்திப் பரவசத்தை ஊட்டக்கூடியதாகவும் இருக்கும்.

திங்கட்கிழமை பகல் பூசையை ''நெற்குத்துப் பூசை'' என்றும் ''வட்டுக்குற்றுப் பூசை'' என்றும் அழைப்பர். இப்பூசை வேளையில் மலைக்குன்றிலே குளியாக்கப்பட்ட நெற்குற்றும் இடத்தில் பூசை நடைபெறும். பூசை முடிந்தபின்னர் பூசகர் உலக்கையில் மூன்று தரம் குற்றிய பின்னர் பிள்ளைப்பேறற்ற பெண்கள் இவரிடமிருந்து உலக்கை யைப் பெற்று நெற்குற்றுவர். இதனை ''உலக்கை பறித்தல்'' என அழைப் பர். இவ்வுலக்கைபறித்தல் பெரும் கண்கொள்ளாப் புதினமாகவே காட்சி தரும். இக்கிராமத்தில் மட்டுமன்றி வேறிடங்களிலிருந்தும் பிள்ளைப் பேறற்ற பெண்கள் இச்செயலால் அம்மனின் திருவருள் கைகூடப்பெற்று, மக்கட்பேறு பெற்று வாழுகின்றனர்.

இவ்வாறு குற்றப்பட்ட அரிசியே குளிர்த்திப் பொங்கலுக்காகக் கோயில் நிருவாகிகளால் உபயோகத்திற்கு எடுக்கப்படும். செவ்வாய்க் கிழமை அதிகாலை அம்மன் குளிர்த்தியும், நாகங்களின் உணவாகிய ''பாணக்கப் பூசையும்'' நடைபெறும். சிறுவர்கள் வசந்தன் கூத்து ஆடிக் கோலாட்டம் அடிப்பார்கள். பல ஊர்களிலிருந்தும் பக்தர்கள் திரள் திரளாக வந்து சேர்வதால் இடநெருக்கடி ஏற்பட்டுவிடும். இடநெருக்கடி இல்லாத வயல்வெளிகளில் ஒரே பொங்கல் பானையாகவே காணப்படும். பின் அதிகாலை சுமார் ஐந்து மணியளவில் பூசகர் அம்மன் வேடம் தாங்கி ஊர் சுற்றுக்காகக் கொண்டு செல்லப்படும் அம்மனைத் தாங்கிய படி முன் மண்டபத்துக்கு வர, அதற்கென உள்ளவர்கள் குளுர்த்தி ஏடு பாடுவார் கள். பூசகர் வசந்தன் ஆட்டுவிழாவில் கலந்து கொண்டபின்னரே சுய நிலைக்கு வருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஏழு நாட்களும் இக்கிராம மக்கள் மச்சம், மாமிசம் புசியாது புத்தாடை புனைந்து, வீதிகள் பெருக்கி குதூகலத்துடன் இருப்பார்கள். இக்கிராம மக்களுக்குப் பரிபூரண விழா இந்தக் கோயில் திருவிழா ஒன்றே தான். தைப்பொங்கல், சித்திரை வருடம் பிறப்பு, தீபாவளி முதலிய மங்கள நாட்களுக்குக்கூடப் புத்தாடை புனையாதவர்கள். இக்காலத்தில் புனைந்து கொள்வார்கள் என்றால் இவ்விழாவின் மகிமைதான் எத்தகையது.

இவ்வாலயத்தில் இந்த ஏழு தினங்களிலும் வழக்குரை படிப்பார்கள். இவ்வழக்குரை ஏட்டுப்பிரதியேயாகும். இவ்வேட்டுப் பிரதியைக் காலஞ்சென்ற சாஸ்திரி திரு. வீமாச்சியார் ஆறுமுகம் தோம்புதோர் அவர்களால் எழுத்தாணிகொண்டு எழுதப்பட்டதாகும். இவர் அக்காலத்தில் கல்விமானாக விளங்கியது மட்டுமன்றிச் சிறந்த தெய்வபக்திகொண்டவராகவும் விளங்கினார். அவரால் வழக்குரை தவிர, பாரதம், நைடதம், கந்தப் புராணம், காசிகாண்டம், கஞ்சன் அம்மானை, வைகுண்ட அம்மானை, சித்திரபுத்திரனார் கதை, பிள்ளையார் கதை, தெய்வ வழிபாட்டுக்குரிய காவியங்கள், வைத்திய வாகடங்கள், சோதிடங்கள், முதலியனவும் ஏட்டு வடிவில் எழுதப்பட்டன. இன்னும் இவரின் சந்ததியினர் அவைகளைப் பக்குவமாகப் பாதுகாத்து வருகின்றனர். இவரால் எழுதப்பட்ட ஏடுகளே ஏனைய ஆலயங்களுக்கும் விசேட காலங்களில் படிப்பதற்காக அவரின் சந்ததியினர் கொண்டுசெல்வதும், பூசைகள், திருவிழாக்கள் முடிவுற்றதும் மீண்டும் அவர்கள் வீட்டுக்குக் கொண்டு வந்து, அதற்குரிய பெட்டகத்தில் பாதுகாப்பாக வைப்பதும் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றன. அத்துடன் கெங்காதசி ஐயரால் வழங்கப்பட்ட பத்ததியை மிகுதியும் பாதுகாத்து வருகின்றனர். இப்பத்ததியின் பிரகாரமே இவ்வாலயப் பூசை முறை நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. குற்று அற்றதும், தரிப்புக் குறியீடுகள் அற்றதுமான அந்த ஏட்டுப்படைப்புகளைப் படிப்பதில் இவர்கள் முதன்மைபெற்று விளக்குகிறார்கள்.

இவ்வாலயம் ஆதியில் சிந்தாத்திரங்குடியைச் சேர்ந்த ஒருவரின் குடும்பத்தினருக்கு உரிமையாக இருந்தது. அதன்பின்னர் அவரது வயிற்றுவார் வழித்தோன்றல்களுக்கும் உரிமையாக இருந்தது. இக்காலத்தில் மூன்றுநாட் பூசையுடன் முடிவுற்று வந்தது. சிறுது காலத்தின்பின் அக்குடியிலுள்ளவாறு மூன்று வயிற்றுவாருக்கும் அதாவது 'ஆத்தகத்தற', 'வட்டூளிகத்தற', 'பாலன் கத்தற' என்ற மூன்றும் சேர்க்கப்பட்டன. இம்மூன்று வயிற்றுவாருக்கே முன்னீட்டு உரிமைகள் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனக் குடிகளான பாட்டுவாளிகுடி, முடவன்குடி, ஆகியோருக்கும் உரிமையாக்கப்பட்டு மூன்று குடியிலுள்ள வயிற்று வழிவந்த மரபினரே பூசையினை நடத்திவந்தனர். இக்காலத்தில் ஐந்துநாட் பூசையுடன் முடிவுற்றுவந்தது. காலங்கள் பல கடந்த பின் படையாண்குடி, காலதேவன்குடி, பொட்டப்பளச்சிகுடி, நரையாவிகுடி, வெள்ளாவிகுடி, செம்பக நாச்சிகுடி, பரதேசிகுடி, வெள்வேலன்குடி, வைதிஅடப்பன்குடி, ஊசாடி குடி ஆகிய பத்துக்குடிகளையும் சேர்த்துப் பதின்மூன்று குடிகளும் சேர்ந்து உற்சவ காலங்களில் பூசையைப் பகிர்ந்துசெய்யத் தொடங்கினர். இதன் பின்னர் சிறிது காலத்தின்பின் ஏழுநாட் பூசையாக விரிவடையத் தொடங்கியது.

எனினும் வண்ணக்கர் பதவி சிந்தாத்திரன்குடியில் உரிமை வழிவந்த ஆத்தகத்தறையைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்பட வேண்டுமென்றும், குளிர்த்திபாட வருடந்தோறும் சிந்தாத்திரன் குடியில் மூன்று கத்தறையினரில் வயிற்றுவழி மரபு ஒருவரும் மைத்துனக்குடிகளான பாட்டுவாளிகுடி, முடவன்குடி ஆகியவற்றிலுள்ள உரிமை வழியினரில் ஒருவருமே சேர்ந்து பாட வேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. சிந்தாத்திரன்குடியுடன் பாட்டு வாளிகுடி சேர்ந்தும் அடுத்தவரும் சிந்தாத்திரன் குடியுடன் பாட்டு வாளிகுடி சேர்ந்தும் குளிர்த்திபாடும் முறை பண்டைய நாளிலிருந்து வழக்கமாகி வருகிறது. கடைசியாகிய குளிர்த்தி நாளில் விநாயகப்பானையிலுள்ள மூன்று பானைகளில் ஒன்று கோயில் பூசகருக்கும், இரண்டாவது பானை சிந்தாத்திரன்குடியில் வருடம் ஒரு முறையாக மூன்று வயிற்றுவாருக்கும், மூன்றாவது பானையை பதின்மூன்று குடியில் ஒவ்வொரு குடியினருக்கும் வருடம் ஒரு முறையாக கொடுக்கப்படும்.

தினந்தோறும் பூசைப் பொருட்கள் சோடிக்கப்பட்ட வண்டியின் மூலம், கிராமத்தின் ஆரம்பத்திலிருக்கும் தில்லையம் பலப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து, மேளவாத்திய இசையுடன் பகல் இரவு ஆகிய நேரங்களில், கிராமத்தின் பிரதான வீதியினூடாகக் கிராமத்தின் அந்தத்திலுள்ள அம்மன் ஆலயத்திற்கு வந்தடையும் மரபு, கிராமத்தில் பெரும் பக்தி பரவச நிலையை இவ்வேழு தினங்களிலும் ஏற்படுத்திக்கொண்டேயிருக்கும்.

பூசகர் இருவர் சிந்தாத்திரங்குடி, பாட்டுவாளிகுடி, முடவன்குடி ஆகிய மூன்று குடியிலுமே பூசகராகக் கடமை புரிவர். அத்துடன் இவ்விருவரில் ஒருவரேனும் வீமாச்சியார் ஆறுமுகம் தோம்புதோர் அவர்களின் வழித்தோன்றலாக இருத்தல் வேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

தற்போது கிராமத்திலுள்ள வட்டார ரீதியாகப் பணம் அறவிடப்பட்டுப் பொதுவிலேயே பூசை நடைபெறுகிறது. வண்ணக்கர் பதவி, குளிர்த்தி பாடல் ஆகிய முன்னீடுகளை எதிர்ப்பு ஏற்படாத காரணத்தினால் சிந்தாத்திரன் குடியில் முக்கிய மூன்று வயிற்றுவார் அல்லாத ஏனைய வயிற்றுவாரைச் சேர்ந்தவர்களும் சிலவேளை பெறுகின்றனர்.

விழா முடிவுற்றதும் நடைபெறும் ஒழுங்குகளுக்கு வழக்கம் போல ''கதவடைப்பு'' என்று பெயர். இந்தக் கதவடைப்பின்போது மூலஸ்தானத்திலுள்ள அம்மன் சிலையினை எடுத்து, அதே அறையிலுள்ள மச்சுகளின் மேல் அதற்கெனவுள்ள ஒரு சிறிய துவாரம் வழியாகப் பூசகர் எடுத்து வைப்பார். மச்சு நிறைய நாகங்கள் படமெடுத்துக்கொண்டிருக்கும். இருந்தும், அவர் அச்சமின்றி, அம்மன் சிலையைக் கையால் வைத்துவிட்டு, வெளியில் வந்து பூசை மந்திரங்களைச் சொல்லி முறைப்படி கதவடைப்பு விழாவினை நிறைவேற்றுவார்.

அதற்குப் பின்னர் ஒவ்வொரு வெள்ளியும் மத்தியானங்களில் கர்ப்பக்கிருக அறைக் கதவுக்கு முன்னால் படையல் படைத்து, பூசனைகள் ஆற்றப்படும். அதற்குக் கிராம மக்கள் நிறையப்பேர் கூடுவார்கள். இவ்வழக்கம் இன்றுவரை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. பக்தர்கள் உள்ளத்தில் நிறைந்த பக்தியையும் எழுச்சியையும் ஊட்டிவளர்த்துக் கொண்டிருக்கும் துறை நீலாவணைக் கண்ணகி அம்மன் கோயில் மட்டக்களப்பு வாவியின் தென்கோடியில் ஒரு சிகரமாக இன்றும் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 ஆவது இயல்:

## அம்மன் கோவில்கள் ஐந்து.

## *(4) தம்பிலுவில்*

## *கண்ணகை அம்மன் கோவில்*

ஆலும் வம்மியும் அடர்ந்து நிலம் பொழியும் வளம் நிறைந்த இரம்மியமான இடம். தென்புறம் பச்சைப் பசேல் எனப்பளிச்சிடும் நெல்வயல். மாரிகாலத்தில் இது, குளமாகவும் காட்சியளிக்கும். கிழக்கே கடற்கரை வரையும் வடக்கே நீர்ப்புறமும் போக்குவரவும் நிறைந்திருக்கம், தனித்தமிழ் குடியிருப்புக்கள். மேற்கே சொற்ப தூரத்தில் அமைந்திருக்கும் மட்டக்களப்பு வாவியின் தென்னிறுதியுடன் கலக்கும் நீரோடை; இவ்வாறான சூழலில் தென்வயல் ஓரத்தே வடக்கு நோக்கி அமைந்திருப்பதுதான் தம்பிலுவில் கண்ணகி கோவில். கண்ணகி அம்மன் கோவில் கொண்டிருப்பதன் காரணமாக மக்கள் அம்மன் கோவில் என்றே இதனை வழங்குகிறார்கள். இத்தகைய செழும்பதியினை நினைக்கும் போது இத்தலத்தின் மீது எனக்கு மாறாத பெரும் பக்தியினை ஊட்டவும், காலத்திற்குக்காலம் வேண்டும் போது விழா நாட்களில் இங்கு யானும் எனது மனைவியும் பேச்சாளராகச் செல்லவும் கருதிச் செய்த எனது நண்பரும், சிவானந்த வித்தியாலயத்து உடன் ஆசிரியருமாகவிருந்த இவ்வூர் திரு.தா.குகதாசன் அவர்களை நினைக்காமல் இருக்கமுடியவில்லை.

வடக்கு, கிழக்கு வாயில்கள் அமைந்த சுற்றுப்புறமதில் ஒன்று அமைந்திருக்கின்றது. கிழக்கு வாயில்தான் பிரதான வாயில். ஆனாலும் வடக்கு வாயில் வழியாகவே அம்மன் பவனி போய் மீள்வதுண்டு. நாம் பிரதான வாயிலான கிழக்கு வாயில் வழியாக உட்புகுவோமானால் பிணிதீர்க்கும் தீர்த்தக் கிணற்றைச் சந்திப்போம். தீராத பிணியுடையவர்கள் இக்கிணற்றில் மூழ்கிச் சுகம் அடைந்துள்ளனர். மேலும், அக்காலத்தில் நெல் வயல்கள் பூச்சி புழுக்களால் பாதிக்கப்பட்டால் இக்கிணற்று நீரை மொண்டுசென்று தெளித்தால் வேளாண்மை பிணி நீங்கி முற்றாய் விளைவதுண்டு. அக்கிணற்றில் நம்மைச் சுத்திகரித்துப் போம் போது எதிரே காண்பது விநாயகர் ஆலயமாகும். இது சேகரம் கும்பம், கர்ப்பக் கிருகம், மண்டபம் என்பன உடையதாக இன்று காட்சியளிக்கின்றது. இவ் விநாயகர் ஆலயம் ஆரம்பம் முதல் பிள்ளையார் கோயில் என அழைக்கப்பட்டு வருகின்றது. அக்காலத்தில் மேடைமேல் அமர்ந்திருந்த சிலையையே வணங்கி வந்தார்கள். இதற்கு இப்பொழுது நித்திய பூசை நடைபெறுகிறது. விக்கினங்கள் தீர்க்கவும் விளைபொருட்கள் நற்பயனளிக்கவும் மக்கள் வைக்கும் நேர்த்திக்கடன் மூலமாக இப்பிள்ளையாருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் இருமுறையேனும் பொங்கல் நடைபெறுவதுண்டு. மக்களே பொங்கி அவர்களே பிரசாதம் படைத்து நைவேத்தியம் செய்யப் பெற்ற ஒழுங்குகள் படிப்படியாக மாறி இன்றைய நிலைக்கு வந்துள்ளது. கோவிலும் புனருத்தாரணம் செய்யப்பட்டு அழகாகக் காட்சியளிக்கின்றது. பூசையும் முறைப்படி கப்புகனாரால் நித்திய பூசையாக நடாத்தப்பட்டு வருகின்றது. மக்கள் தாங்கள் தொடங்கும் எந்த முயற்சியின் போதும் இக் கோயிலுக்கும் பொங்கலிட மறக்கமாட்டார்கள்.

பிள்ளையாரை வணங்கி வலம் வந்து உட்பிரகாரத்துள் நுழைந்தால் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், வெளிமண்டபம் கும்பங்களோடு காட்சி அளிக்கும், வடக்கு நோக்கி அமர்ந்திருக்கும் அம்மன் கோயிலைக் காணலாம். இதன் அமைப்பு முறையும் படிப்படியாக முன்னேறியதாகும். ஆதிகாலத்தில் ஒரு கொத்துப் பந்தலின் கீழ் அமைந்திருந்த கர்ப்பக்கிருகம் சிறு குடிசையாக மாறி நாளாவட்டத்தில் கற்கோயிலாகி நீண்ட காலம் வழிபடப்பெற்றுவந்தது. பின்பு அவ்வப்போது கடமை ஏற்ற வண்ணக்கர் மாரின் பெருமுயற்சியாலும் மக்களின் வரையறையற்ற நன்கொடைக ளாலும் காலத்துக் காலம் புனரமைப்புச் செய்யப்பட்டு இன்றைய உருவ அமைப்பைப் பெற்றுள்ளது.

இதன் உட்பிரகாரத்திலேயே அண்மைக்காலத்தில் உருவாக்கப்பட்ட நாகதம்பிரான் கோவில் அமைந்துள்ளது. அழகான கோபுரமும் உள்மே டையும் அதில் பிரதிஷ்ட பண்ணப்பட்டிருக்கும் சிலைகளும் இத்தலத்திற் குப் பிரத்தியேக அழகைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. இக்கோவில் அக்கால வண்ணக்கர் திரு. க.வ.வி. கதிராமத்தம்பி அவர்களின் தூண்டுத லின் பேரில் பிரபல நிலச்சுவாந்தாரான தருமரெட்ணம் புவிராசகீர்த்தி அவர்களின் உபயமாக அவரது மனைவியாரால் உருவாக்கப்பட்டதாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இது கோயிலின் கிழக்குப்புறத்திலே அமைந் துள்ளது. மேற்குப் பிரகாரத்திலே புதிதாக அமைக்கப்பட்ட தீர்த்தக் கிணறு ஒன்றும் அமைந்துள்ளது.

வெளிப்பிரகாரத்தில் தொன்று தொட்டு ஒரு வைரவர் கோவில் அமைந்துள்ளது. அதில் வைரவர் தடிகள் சாத்தப்பட்டு முறையான பூசை நடைபெற்று வருகின்றது. அடுத்து வெளிப்பிரகாரத்தில் உள்மதிலையண்டி எட்டுத்திசையிலும் அட்டபாலகர் பீடங்கள் அமைந்துள்ளன. பொங்கல் அல்லது சடங்கு காலமாகிய ஏழு நாட்களிலும் அவற்றிற்கு முறையான பூசைகள் நடைபெறும். அடுத்து நாம் காண்பது உயர்ந்த மணிக்கோபுர மாகும். இது பெயர்பெற்ற தலைமை ஆசிரியரும் இக்கோயிலின் ஒரு பிரதான பாகைக்காரருமான திரு. வன்னியசிங்கம் - சிவநிருபசிங்கம் (சிவகுரு) அவர்களின் ஞாபகார்த்தமாகக் கல்முனை வாழ் அவரது மனைவிமக்களாற் கட்டப்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரகாரத்தில் ஆலும் வம்மியும், தென்னையும் கமுகும் நிறைந்து எப்போதும் குளிர்ச்சியே நிறைந்திருக்கும். மட்டக்களப்பு பொத்துவில் பிரதான பாதையில் 45 ஆவது மைல் கல்லுக்கருகில் சந்தியொன்றுள்ளது. அங்கிருந்து பார்த்தோமானால் கோயிலின் பிரதான வாயிலும் மண்டபத்தின் முன்பகுதியும் விநாயகர் ஆலயமும் காட்சியளிக்கும். இதுவே இன்றைய தோற்றமாகும். கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய கண்ணகி கோயில்களோடுதான் இதன் ஆரம்பமும் இருக்கவேண்டும் என எண்ண இடமுண்டு. ஊர் சுற்றுக் காவியத்தில்,

''அங்கணாமக்கடவை காரேறு நகர் எருவில் களுவாஞ்சி
ஆனதம்பிலுவில் எழில் வீரமுனை தனிலும்
மங்கைசேர் பட்டிமேடுயர் செட்டிபாளையம்
வந்தாறு மூலைநகர் மற்றுமுளபதியும்''

எனக் குறிக்கப்பட்டுள்ளதனால் இது ஊர்ச்சிதமாகின்றது.

இங்கு கண்ணகி அம்மன் வழிபாடு தொடங்கியதற்கு ஒரு நம்பக மான பழங்கதை கூறப்படுகின்றது. இவ்வூரில் ஆதிகுடியார் எனக் கூறப் படும் வேடக்குடியார், கோரைக்களப்புக்குடி யார், குருக்கள் குடியார் எனப்படும் வம்சத்தினர்கள் வசித்து வந்தனர். அக்காலத்தில் இன்று அம் மன் கோயில் அமைந்துள்ள இடம் காடாக இருந்தபடியால் அங்கு வேட் டைக்குச் சென்ற வேடக்குடியார் ஒரு வெண்புறா வந்ததையும், அது சுற்று முற்றும் பார்வையிட்டு, 'கண்ணகி' என்று கூவிவிட்டுச் சற்று இருந்து திடீரென ஓரிடத்தில் சென்று மறைந்ததையும் கண்டு அவ்விடத்தில் கொத்துப்பந்தல் ஒன்று அமைத்து, ஏனையோரையும் சேர்த்து கண்ணகி அம்மன் என வழிபட்டனர். இவர்கள் கோவில் தொண்டு செய்தார்களே தவிர முறையான பூசை புனஸ்காரங்கள் செய்யமுடியாமல் திண்டாடினர். அவ்வேளையில் வந்திறங்கிய அன்னம்புறாவர், ஈச்சவத்தையார் என்னும் இருவம்சத்தினரும் கோயில் நிருவாகத்தைப் பொறுப்பேற்றுக் கொண்ட னர். இவர்கள் முறையே கட்டப்பத்தங்குடியார், சிங்களக் குடியார் என இன்று வழங்கப்படுகின்றனர். இவர்கள் எல்லோரும் சேர்ந்து அயல் இடமான பட்டி மேட்டு அம்மன் கோவிலுக்குப் பூசை செய்யும் வம்சமான பட்டிமேட்டார் எனப்படும், ''மழுவரசன் குடியாரை'' அழைத்து வந்து பூசை செய்யும் உரிமையை வழங்கினர். இவர்களே இன்று கப்புகனார் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

அன்னம்புறாவர் எனப்படும் கட்டப்பத்தான்குடி வம்சத்தவரே இக்கோயிலின் வண்ணக்கர் பதவியை வகிப்பது நிரந்தரமாகும். இக்கோயில் வழக்கமாக வைகாசிப் பூரணையை அண்டிய ஏழு நாட்கள் திறந்து கோலாகலமாக நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வைகாசித் திங்கள் வருவோ மென்று மாதுமையாளும்
வரம் கொடுத்தாளே''

என்பதற்கிணங்க திங்கட்கிழமையிலேயே பொங்கலும் குளிர்த்தியும் நடைபெறும். எனவே, வைகாசிப் பௌர்ணமியை முன்னிட்ட ஏழு நாட்களை அண்டிய ஒரு செவ்வாய்க்கிழமை கதவு திறக்கப்பட்டுப் பூசைகள் ஆரம்பிக்கப் பெறும். தொடர்ந்து ஐந்து நாட்கள் பூசையும் திருவிழாவும் நடைபெறும். ஆறாம் நாள் அம்மன் ஊர்வலம் செல்வார். ஏழாவதுநாள் பொங்கலும், குளிர்த்தியும் நடைபெற்று, திங்கள் இரவு கதவு அடைக்கப்படும்.

கோயில் திறந்த முதலாம் நாள் பூசை வண்ணக்கருடையது. இது சிறப்புற நடந்தபின் இரண்டாம் நாள் மண்ணெடுத்தல் வைபவம் நடைபெறும். குறிக்கப்பட்ட காலத்தில் குறித்த இடத்திலிருந்து கொட்டு மேளத்துடன் மண் எடுத்துக்கொண்டு வரப்படும். இந்த மண்ணைக்கொண்டே மட்பாண்டத் தொழில் தெரிந்த சில பெண்களால் அம்மன் பொங்கலுக்குரிய பானைகள், குடுக்கைகள் (சிறிய பானைகள்) என்பன தயாரிக்கப்படும். அடுத்த விசேடம் கல்யாணக்கால் நாட்டுதலாகும். வழமையாகப் பாடப்படும் வழக்குரைக் காவியத்தில் நாகமணி மீகாமனால் கொண்டு வரப்பட்டுச் சிலம்பியற்றிக் கண்ணகி கோவலன் திருமணம் நடைபெறுதலாகிய கல்யாணப் படிப்பு அன்று வருகின்றது. அன்றே, இங்கு உரிய முறையில் கல்யாணக்கால் நாட்டி அலங்கரிக்கப்படுகின்றது. அதன் பின்பு வழக்குரை மீதிப்பாடல்கள் தொடரும்.

ஆறாம் நாள் ஊர்வலம் இக்கோயிலின் சிறப்பு அம்சமாகும். அன்று தம்பிலுவில் முழு ஊருமே திருவிழாக்கோலம் கொள்ளும். ஆறாவது நாள் அதாவது ஞாயிற்றுக்கிழமை முன்னிரவில் நன்றாக அலங்கரிக்கப்பட்ட ஏடகத்தில் (தேரில்) கோயில் வடக்கு வாயிலாக அம்மன் ஊர்வலம் வெளிப்படும்போது அது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். மின்விளக்குகள் ஒளிபிரகாசிக்க, மேளவாத்தியங்கள் பேரொலி செய்ய, நன்றாக வேடமணிந்த வளர்ந்தோர்களும் சிறுவர்களும் முன்னும் பின்னும் தத்தமக்குரிய கிராமிய நடனங்கள் ஆடிவர, தம்பிலுவில் கண்ணகி அம்மனுக்கே உரிய தனிக் காவியங்கள் இன்னிசை அளிக்க, வாணங்களும் வெடிகளும், விண்ணை அலங்கரிக்க, ''அம்மம்மா! கூய்! கூய்!'' என்ற இரைச்சல் பின்தொடர வடக்கு வாயில் மூலம் புறப்படும் அம்மன் தேரினைக் காண்பதற்குக் கண்கள் அடங்காத பூரண கும்பங்கள் நிறைந்திருக்கும். எல்லாக் கும்பங்களிலும் ஊர்வலம் நின்று, கும்பம் சொரிந்து, தேங்காய் உடைத்து உரியவர்கட்கு விபூதி மஞ்சள் வழங்கி, ஊர்வலம் தொடர்ந்து நடைபெறும். அதே நேரத்தில் குறிக்கப்பட்ட பாதையின் பிரதான சந்திகளில் பெரும் பந்தல்கள் அமைத்துப் பாட்டு, கூத்து, கும்மி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலாட்டம், நடனம் என்பன ஆயத்தமாக இருக்கும். இவ்வாறான ஒவ்வொரு பந்தரிலும் நின்று செய்வன செய்து, ஆவன முடித்து அம்மன் தேர் விடியற்காலையில் அதே வடக்கு வாயில் வழியாகக் கோயிலை அடையும். அத்தோடு காலைப்பூசை முடித்து அடுத்தநாள் பொங்கலுக் கான ஆயத்தங்கள் நடைபெறும்.

ஏழாம் நாள் பொங்கலின்போது, காலையிலே பெண்கள் கூடிவிடு வார்கள். மடிப்பிச்சை நெல், மடை நெல் என்பனவற்றில் பொங்கலுக்குரிய நெல்லைக்குற்றி எடுப்பார்கள். அப்போதெல்லாம் 'சிலம்பு கூறல்' போன்ற இசைப்பாடல்கள் பாடப்படுவதனால் அவர்கள் எவ்விதகளைப்புமின்றி இதனைச் செய்து முடிப்பார்கள். மதிய பூசையின் பின் உடனே மக்கள் தங் கள் பானை பால் விறகு என்பவற்றோடு பொங்கலுக்கு ஆயத்தமா வார்கள். கிட்டத்தட்ட இரண்டாயிரம் பொங்கல் பானைகள் பொங்கிக் கொண்டிருக்கும். அதே நேரத்தில் கோயில் உட்பிரகாரத்தில் அம்மனுக் குரிய பிரத்தியேக பொங்கலும் நடைபெறும். இவற்றிலிருந்தே மேற்கூறிய குடுக்கைகட்கும் பிரசாதம் நிரப்பப்படும். இரவு எட்டு மணியளவில் பானைகள் யாவும் முறையாகப் படைக்கப்பட்டு விநாயகர் பூசை, அட்டபாலகர் பூசை என்பனவற்றோடு அம்மன் பூசையும் நடைபெறும். அதன்பின் குளிர்த்தி பாடி எல்லோருக்கும் தீர்த்தம் எறியப்படும். இதில் விரும்பி நனைவோரும் உண்டு. உடை நனைந்துவிட்டதே என்று கலங்குவதும் உண்டு.

அதை அடுத்து ''பணிமாறல்'' என்ற பாரம்பரிய நடைமுறை உண்டு. நேர்த்தி காரணமாகவும், வேண்டுதல் காரணமாகவும் கோயிலுக்குப் பல சேலைகள் வருவதும் வழக்கம். ஒவ்வொரு வருடமும் வரும் சேலைகளை ஒவ்வொன்றாக அணிந்து கப்புகனார் பின்தொடர வண்ணக்கர் மடையைச் சுற்றிவருவார். அப்பொழுது ஏகப்பட்ட கூட்டம் இருந்தாலும் அமைதி நிலவியே இருக்கும். அதனை அனைவரும் கண் இமைக்காது பார்த்துக் கொண்டே இருப்பார்கள். இவ்வைபவம் முடிந்தவுடன் மற்றும் கடவுளர் பூசைகள் செய்து விபூதி மஞ்சள் பரிமாறியபின் ''வட்டா கூறுதல்'' என்ற வைபவம் நடைபெறும்.

முதல் வட்டாவினை 'ஊர்' என்று வண்ணக்கர் கூறுவார். அவ்வட்டா ஆரம்ப குடிகளுக்கே சொந்தம் ஆகும். அதனை எவரும் கைநீட்டி வாங்க மாட்டார்கள். கண்ணகி கோயில் எங்கெங்கு அமைந்துள்ளதோ அவர்கட் கெல்லாம் அவ்வட்டா உரிமையாகும். ஊர் சுற்றுக்காவியமே இதனை வலியுறுத்துகின்றது. இரண்டாவது வட்டா கோவில் வண்ணக்கருக்கு ரியது. மூன்றாவது வட்டா பழம்பெரும் கோயிலான திருக்கோவில் சிறி சித்திரவேலாயுதசுவாமி கோவில் வண்ணக்கருக்குரியது. அவர்கள் (வண்ணக்கர்) ஊரின் முதற்குடியான கண்டங்குடி வம்சத்தினர் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது.

பின் குடுக்கைகள் யாவும் உரிய உரிய பாகைக்காரருக்கும் தொண்டர் கட்கும் சேர்ப்பித்து எல்லோருக்கும் உபயம் கொடுத்த பின் அன்று கதவு அடைக்கப் பின்னிரவாகிவிடும்.

இக்கோயிலில் அதன் பின்னும் சில ருசிகரமான நிகழ்ச்சிகள் நடை பெறும். வேலை முடிந்தவுடன் சகலரும் கோயில் கப்புகனாரை மேளதா ளத்துடன் அவரது வீட்டில் கொண்டுபோய் விடுவார்கள். பின் வண்ணக் கரைப் பாகைக்காரர் எல்லோரும் சேர்ந்து அதுபோல் அவர் வீட்டுக்குக் கொண்டு செல்வார்கள். அங்கு எல்லோரும் சிற்றுண்டிகள் அருந்திவிட்டுக் கணக்குவழக்குப் பார்ப்பார்கள். பின் நடைபெறும் மூன்றாம் சடங்கினோடு அம்மன் சடங்குவேலை பூர்த்தியாக்கப்படும்.

இந்த ஏழு நாட் பூசைகளையும் முற்கூறிய பராமரிப்புக்குடிகளாகிய இருவம்சத்தவரும் ஆதிகாலத்திலிருந்து நடத்திவந்தார்கள். பிற்காலத்தில் இது இன்னு சில பாகைகள் சேர்த்து பதினொரு பாகையாக நடைபெறு கின்றது. அந்த இரண்டு வம்சத்தவரோடு, கோரைக்களப்பார், வேடுவர், குருக்கள், விஸ்வகோத்திரம், (பொற்கொல்லர்) முன்னங்கைச்சவடி (இவர்கள் அனைவரும் திருக்கோவில் சித்திர வேலாயுதர் சுவாமி கோவிலுடனும் தொடர்புடையவர்கள்) ஆகியோர் இணைந்து கோவிலை மிகவும் சிறப்பான முறையில் நடாத்தி வருகின்றார்கள். மேற்கூறிய ஏழு நாட்களிலும் மக்கள் மிகுந்த பயபக்தியோடு நடந்து கொள்வார்கள். நாள் தோறும் கூட்டுப்பிரார்த்தனை, வழக்குரை காவியம் என்பன பாடப்பட்டு வருகின்றது. இடைக்கிடை திரு விழா முடிந்தபின் சிறப்புற கலை நிகழ்ச்சி களும் நடைபெறுகின்றன.

இந்த நைமித்திக பூசையைத்தவிர, செவ்வாய், வெள்ளி நாட்களிலும், நவராத்திரி, தைப்பொங்கல் காலத்திலும் பூசை சிறப்புற நடைபெறு கின்றது. மேற்கூறிய பதினொரு பாகைக்குடிகள் தென்சேரி என வழங்கப் படுவர். இவ்வூரில் நிலைபெற்ற மீதிவம்சங்களான கண்டங்குடி, சருவிலி குடி, வைத்தியனார் குடி, முற்குகர் குடி என்பன வடசேரி என வழங்கப் பட்டனர். இதன் காரணமாகவே இன்றைய சித்தி வினாயகர் ஆலயம் அன்றிருந்தே வடசேரிக்கோவில் என வழங்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் பிரசித்தமான கொம்பு விளையாட்டாகும்.

மேற்கூறிய இருசேரியாரும் தற்காலிகமாகத் தங்களுக்குள் மாறுபட் டுக் கொம்பு விளையாட்டை நடத்துவர். கொம்பு நேர்ந்து. தேங்காய் உடைத்து, கொழுக்கொம்பு முரித்து ஆரம்பிக்கப்படும் விளையாட்டு, கொம்புத் தட்டு மூன்றும், கூடாரக்கொம்பு ஐந்தும், ஏடகக் கொம்பு ஏழும் சேர்ந்து பதினைந்து கொம்புகளுக்காகத் தேங்காய் முதலில் உடைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும். ஏடகக் கொம்பு விளையாட்டின் போது இருசாராரும் போட்டி போட்டு ஏடகம் உருவாக்குவர். இதனை உருவாக்கமுன் ''சீலை ஏறிதல்'' என்ற வைபவத்தை இருசாராரும் சிறப்புறச் செய்வர். ஏடகக் கொம்பு முறிக்கும்போது இரு ஏடகங்களும் ஒருமித்து ஊர்வலம் வந்து கொம்புச் சந்தியில் நிற்கும். பின் கொம்பு முரித்து வென்ற ஏடகம் பலவிதமான சிறப்பு அம்சங்களோடு தனியே சென்றுவரும். இறுதியில் தண்ணீர் சொரிதலோடு இது முடிவடையும்.

இக்கொம்பு விளையாட்டு வைபவத்தில் இவ்வூர் மக்கள் சில சிறப்பான கொள்கைகளையுடையவர்களாவர். ஆரம்பத்தில் மழையின் தேவையை முன்னிட்டு இரு சாராரும் சேர்ந்து கொம்பு நேர்வார்கள். மழை பெய்து பயிர் வளைந்து ஊர் செல்வம் நிறைந்தவுடன் எல்லோரும் ஒன்று கூடுவார்கள். வண்ணக்கர்மாகளைத் தவிர இரண்டு கொம்புத் தலைவர்கள் தெரியப்படுவார்கள். அத்துடன் இருபக்கமும் இரண்டு விளையாட்டுக்குழு தெரியப்படும். மேலும் ஊர்ப்பிரமுகர்கள் சேர்ந்த ஒரு சமாதானச் சபையும் தெரியப்படும். பின் நாட்குறித்துக் குறிப்பிட்ட விடயங்கள் யாவும் நடைபெறும். ஆனால் ஏடகக் கொம்பு ஆரம்பமானவுடனே விளையாட்டு சூடுபிடிக்கத் தொடங்கும். இதனால் பல அனர்த்தங்களும் நடைபெறுவதுண்டு. வென்ற ஏடகம் தனியே பவனிவரும்போது மறுசேரியார் வாசலில் கும்பம் வைக்கமாட்டார்கள். பதிலாக அதனால் அவர்கள் வசைபாடத் தொடங்குவார்கள். இவ்வாறே மறுசேரியாரும் நடக்கும் பொழுது வீட்டில் கணவன் மனைவிக்கிடையிலும் சிக்கல்கள் உண்டாவதுண்டு. ஆனால் இவை அனைத்தும் நீர் சொரிதலோடு நின்றுவிடும். இந்த ருசிகரமான விளையாட்டு வேடிக்கைகள் சனப் பெருக்கத்தினாலோ என்னவோ தற்போது அருகிப்போய்விட்டது எனலாம்.

இக்கோவில் செலவுகள் யாவும் மேற்கூறிய பாகைக்காரர்களே செலவழிக்கிறார்கள். எனவே வருமானமாய் வரும் உண்டியல், அடையாளம், தட்சணை, நேர்த்திகள், மடைநெல்,தெண்டல் நெல் என்பன கோயிலுக்கு வருமானம் எனக் கொள்ளப்படுகின்றது. மேலும் வயல் குத்தகை, தென்னைமர வருமானம் என்பனவும் சேர்க்கப்படுகின்றன. இவற்றில் சிறுபகுதி தொண்டூழியர்கட்கு வேதனமாகப் போக, மீதி வருடாவருடம் புனருத்தாரணம் செய்வதற்கு உதவியாயிருக்கின்றது. மேலும் சிறப்புப் பூசைகளும் தனிநபர்களே செய்து வருகின்றார்கள். எனவே அதற்கெனவும் எதுவும் செலவிடப்படுவதில்லை. பரந்த வீதியும் தென்னந் தோப்பும் காணி மூன்று ஏக்கரும் இக்கோவிலுக்குச் சொந்தமாக உள்ளன. அவ்வாறிருந்தும் வருடாவருடம் முன்னேறுவது பெருமைக்குரியது.

இவ்வாலயம் ஒரு பாடல் பெற்ற தலமாகும். ஊர் சுற்றுக் காவியம், ஊரெழுகாவியம் (எழுந்திருப்பு), பள்ளுப்பாடல், ஊஞ்சல்பாடல் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தாலும் சிறப்பாக இக்கோவிலுக்கு மாத்திரம் உரித்தான 'மழைக்காவியம்' ஒன்று உண்டு. இக்காவியம் ஒரு அந்தணச் சிறுவனால் பாடப்பட்டது. இப்பாடல்கள் என்னால் அச்சில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன என்பதை யாவரும் அறிவர்.

இதன் பின்னணியாகக் கூறப்படுவது:

'ஊரக்கைவெளி' என்பது இவ்வூர் மக்களின் பூர்வீகச்சொத்து. அக்காலத்தில் இக்காணி சிறப்புற விளைந்தால் தான் வைகாசிப்பொங்கல், கொம்பு விளையாட்டு என்பன சிறப்புற நடைபெறும். மக்கள் வயல்களுக்கு ஏற்படும் எந்தவிதமான பிழைகட்கும் அம்மனே தஞ்சம் என வாழ்ந்தவர். மழையில்லாத போது அம்மனையே பிரதிஷ்டை பண்ணி விட்டார்கள். ஆனால் உடனே வழமைபோல் மழை செய்யவில்லை. அம்மனின் தேவைபோலும், ஒரு அந்தணச் சிறுவன் அம்பாளைத் தேடிச் சென்று தானாகவே பாடிய பாடல்தான் இந்த மழைக்காவியம். பாடல் பிறந்ததும் 'சோவென' மழை பொழிந்தது. இப்போதும் மழை இல்லாத நேரங்களில் இக்காவியத்தை உருக்கமோடு பாடினால் கட்டாயம் மழை பெய்கிறது.

''தண்ணீரில்லாமல் வயல் சாலிகள் இளங்கதிர்கள்
தலைசோர வயலிலுள்ள சனமது வருந்த
கண்ணீரினால் மழையின்றியே
கண்கலக்கப்படும் கவலை அறியாயோ
மண்ணீரினால் நுரைமிதக்க நதி ஓடியே
வரவெள்ள மொருமழை அருள வேண்டும்
பெண்ணீர்மையான குண காரணச் செல்வியே
பேசுதம்பிலுவிலுறை பெண்ணரசிமாதே''

''எந்தவிதமான பிழைசெய்தாலுமே பொறுத்து
ஏழை அடியாரெங்கட்கே மனமிரங்கி
நொந்தகண்ணாலிப்போ ஆற்றிலொரு வெண்மை
நூதனமதாகவே நீயருள வேண்டும்
கொந்தளகவிழிமடவார் கொண்டாடவாவிதொறும்
நின்றாட மலரில்
தந்தனாதனாவென்று வண்டினங்கள் பாடவரு
தம்பிலுவிலூரில் நனிதங்குமாதாவே.

இவை அக்காவியப் பாடல்களிரண்டு.

இவ்வாறான உருக்கமான பாடல்களைக்கேட்டு நூதனமாகவே திடீரென்று மழை பெய்து, ஆறு நிரம்பி வெள்ளம் வந்து வயல்கள் பூரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைச்சலைக் கொடுப்பதுண்டு.

மேலும் இக்கோயிலில் ஒரு அதிசயமான செயலும் நடைபெற்றதாகக் கூறுவர். வண்ணக்கர் திரு.க. கதிராமத்தம்பி கப்புகனார் திரு.மா.சீனித் தம்பி ஆகியோர் அம்மனிடம் விடை பெற்று முன்னொருபோது 'பச்சைப் பானை' (சுடாத) வைத்துப் பாற்பொங்கல் செய்து அபிஷேகம் ஆற்றினர். இது பற்றிக் காலம் சென்ற திரு.பெ.கந்தையா என்பவரால் பாடப்பட்ட பாடலும் பிரபல்யமானதாகும்.

இவ்வாறான பிரசித்தி பெற்ற தம்பிலுவில் கண்ணகை அம்மன் இன்றும் பல அற்புதங்கள் புரிந்து மக்களுக்கு உறுதுணையாக விளங்கு கின்றார்.

''மாதுவளர் தம்பிலுவில் ஊர்வாழி வாழி
வளமைசெறி வணிகர்குல மாதுமையும் வாழி
நீதிசெறிகண்டி மகாராசாசிங்கன் வாழி
நீலமயில் ஏறுகதிர்வேல் முருகன் வாழி
வேதமுடன் ஐந்தெழுத்தோதுவோர் வாழி
வெண்ணீறு பூசுசிவசமயமும் வாழி
பாதிமதிசூடும் அரன் பாதம் மறவாமல்
பாடினோர் வாழி கதிர்காமமும் வாழி.''

கோயில் வண்ணக்கர், கப்புகனார் உட்பட்ட ஒரு குழுவின் மேற்பார்வையின் கீழ் ஒழுங்காக நடைபெறும் இத்திருத்தலத்தின் சிறப்புகள் குன்றாது வளர்ந்துவர வைகாசித் திங்கள் வருவோமென்று வரங்கொடுத்த மாதுமையாள் திருவருள் என்றும் நிலைத்தோங்குமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 ஆவது இயல்:

## அம்மன் கோவில்கள் ஐந்து.

## *(5) நாவலடி ஸ்ரீ கடலாட்சியம்மன் ஆலயம்*

உதய சூரியனின் பொற் கிரணங்கள் காலை வேளையில் தன்னொளி பரப்பி வீசி, நாவலடிக் கடலாட்சி அம்மன் கோவிலைத் துலக்கும். இக்காலை வேளையில் எங்கும் ஒரே அமைதி. நாவலடியிலுள்ள கட லாட்சி அம்மன் கோவில் மணி ஒலிச் சத்தம் மாத்திரம் அவ்வமைதியைக் கலைத்துக் கொண்டு ஒலிக்கும். நாவலடி என்னும் கிராமத்தின் பால் நில வொளிரும் பரந்த வெண்மணற் பரப்பில், பக்தகோடிகளை அட்டதிக் கிலுமிருந்து தனது அருட்கடாட்சத்தால் கவர்ந்திழுக்கும் அன்னை ஸ்ரீ கடலாட்சியம்மன் ஆலயம் புகழுடன் அமைந்திலங்குகிறது.

இவ்வாலயம் கி.பி. 1940 ம் ஆண்டு நாவலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. குஞ்சித்தம்பி தம்பியப்பா என்பவரால் சாதாரண ஓலைக் கோயிலாகக் கட்டப்பட்டது. பின்னர் ஊரவர்களின் ஒத்துழைப்பும், இவ் வாலயத்திற்கென எழுதப்பட்ட உறுதியில் திரு. குஞ்சித்தம்பி - தம்பியப் பாவின் வழி வழியாக வந்த வழித்தோன்றல்களும், நாவலடி ஊரவர்களுக் கும் ஆலயம் சொந்தமாக எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆலய உறுதியில் உரிமைபெற்ற வண்ணக்குமார் திரு. அண்ணா மலை கணபதிப் பிள்ளை - திரு. செல்லப்பா செல்வம் ஆவர். இவர்களில் அண்ணாமலை கணபதிப்பிள்ளையின் இறப்பின்பின் வண்ணக்கராகத் திரு. கணபதி - செல்லப்பா அவர்களும், கங்காணிகளாக திரு. தம்பியப்பா சண்முகம், திரு. இளையதம்பி மாணிக்கம், திரு.கணபதிப்பிள்ளை வேல்முருகு, திரு. தம்பியப்பா மயில் வாகனம் என்பவர்களும் நீண்டகாலமாகப் பரிபாலித்து வந்தார்கள். எனினும், இம்முறையில் மாற்றம் வேண்டும் என்று பலரும் விரும்பினர்.

அதன்படி, 1976ம் ஆண்டு வண்ணக்குமுறை மாற்றப்பட்டு, பரிபா லன சபையாக்கப்பட்ட போது இவ்வாலய வழித்தோன்றல்களுள் ஒருவ ரான தம்பியப்பா தம்பிப்பிள்ளை போஷகராகவும், திரு. கறுவல் தம்பி துரைச்சாமி தலைவராகவும், திரு. தம்பிப்பிள்ளை நல்லிங்கம் செயலாள ராகவும், திரு.எம்.எம். ரூபசிங்கம் பொருளாளராகவும் நியமிக்கப்பட் டார்கள்.

இக்காலத்தினுள் 1978ம் ஆண்டு கார்த்திகை 23ல் கிழக்கிலங்கை யைக் கதிகலக்கிய பெரும்புயலும், கடற்பெருக்குமாகிய இயற்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீற்றம் இவ்வாலயத்தின் மூலஸ்தானம் தவிர்ந்த எல்லா மண்டபங்களையும் தகர்த்துத் தரைமட்டமாக்கியது. ஏதோ இறைவியின் இன்னருளாலும், ஊரவர்களின் மனமுவந்த நன்கொடையாலும், அரசாங்கத்தின் ஆலயப் புனருத்தாரண நிதியொதுக்கீட்டினாலும், பரிபாலன சபையின் அயரா உழைப்பினாலும் ஆலயம் முன்பிருந்ததைவிடப் பலத்துடனும், புதுப்பொலிவுடனும் அமைத்து முடிக்கப்பட்டது. இதனிடையில் நிருவாகத்தில் தலைவர், பொருளாளர் மாற்றம் செய்யப்பட்டபோது திரு.எச்.எம். ரூபசிங்கம் புதிய தலைவராகவும், திரு. தம்பிப்பிள்ளை தியாகராசா புதிய பொருளாளராகவும் நியமனம் பெற்று மூன்று வருட இறுதியில் அதாவது 1982ம் ஆண்டு புதிய நிருவாகம் பொறுப்பேற்றபோது தலைவராகத் திரு. பொன்னையா நடராசாவும், செயலாளராக திரு. சாமிநாதன் சோமபாலும், பொருளாளராக திரு. கணேசபிள்ளை கனகசிங்கமும் இடம்பெற்றனர். இச்சபையே இன்றும் இயங்கிவருகிறது. இருப்பினும் இவ்வாலயத்தின் முக்கிய ஆலோசகர்களாகத் திரு. தம்பியப்பா செல்லத்தம்பி ஆகிய சகோதரர்கள் இருந்துவந்தார்கள் - இருந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தின் சடங்கு எனப்படும் உற்சவம் ஆனிப்பூரணைக்கு ஏழு நாட்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டுப் பூரணை அன்று ஆலயத்திற்கு அண்மையிலுள்ள சாகரக்கரையில் கும்பஞ் சொரிதலுடன் முடிவுறும். சடங்குகள் முந்திய ஆறு நாட்களும் தனிப்பட்டவர்களாலும், கடைசி ஏழாம் நாள் ஊரவர்களாலும் நடாத்தப்படும். கடைசிநாள் இறைவியைக் குளிர்விக்கக் குளிர்த்திப் பாடல் பாடுவார்கள். விநாயகப்பிள்ளை எடுத்தல் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளும் அன்றுண்டு. முடிவில் சர்க்கரைச் சாதம், தண்ணீர் ஊற்றப்பட்ட பள்ளையம் பக்தர்களுக்கு விநியோகிக்கப்படும்.

உற்சவ ஏழு நாட்களும் தெய்வம் உடலேறப்பெற்ற பக்தர்கள் உருவேறி ஆடுவார்கள். பல ஊர்களிலும் இருந்து நோய் நொடிகளுடனும், மனச் சஞ்சலத்துடனும் வந்த பக்தர்களுக்கு மன நிறைவளிக்கும் அம்பாளின் அருள் வாக்குகள் தெய்வங்கள் மூலம் கிடைக்கும். இதைவிடப் பூசாரியார் என்றழைக்கப்படும் திரு. சீனித்தம்பி வேலுப்பிள்ளை என்பவர் அம்பாளிடம் கேட்டு, குறி சொல்வதை இவ்வாலயத்தில் வியப்புறக் காணலாம். தெய்வமாடுவோர் சாட்டையடிகள் பெற்றும், நெற்றியில் வாளால் உதிரம் வழியும்படி கொத்தியும், முப்பது அடிக்கு மேற்பட்ட கம்பத்தில் ஏறிச் சூலத்தில் வயிற்றை வைத்து அந்தரத்தில் நின்றும் அற்புதஞ் செய்துகாட்டுவார்கள். 'அரோகரா' என்ற பக்தர்களின் குரலை எங்கும் கேட்கலாம். மந்திரம் கற்றவர்களின் கட்டுக்களும், வெட்டுக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்களைப் பிரமிப்படையச் செய்வதை இங்கு காணமுடியும்.

இவ்வாலயத்தின் ஆரம்பப் பூசகர் கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த திரு. சித்திரக்காட்டாடி என்பவராகும். அவரின் இறப்பின்பின் அன்னாரின் முக்கிய சீடர்களில் ஒருவரான திரு. செல்லப்பா சோமசுந்தரம் என்பவர் நீண்டகாலமாகப் பிரதான பூசகராக இருந்து அம்பாளின் அனுக்கிரகத்துடனும் பல சீடர்களின் உதவியுடனும் மிகத் திறமையுடன் நடாத்தி வருகிறார்.

இத்தகைய கடலாட்சி அம்மனுக்கு ஆதியில் ஒரு காணிக்கை உண்டியல் மாத்திரம் பிரதிநிதியாக இருந்தது. கடலுக்குத் தொழிலுக்குச் செல்வோர் யாவரும் தமக்கு எத்தகைய தீங்கும் நேராவண்ணம் கடல் அம்மனை வேண்டி இக்காணிக்கை உண்டியலை வைத்து அதனுள் பணம் போட்டு வந்தார்கள் என்பது ஐதீகம். இதனால் அந்த இடம் கடலாட்சி அம்மனுக்குரிய இடமாகப் பிரதிபலித்தது. பின்னர் காலஞ்செல்லக் கோயில் ஒன்று கட்ட வேண்டி ஏற்பட்டது. கடலாட்சி அம்மனால் கடற்தொழிலுக்குச் செல்வாருக்கு எவ்விதத்தீங்கும் வராமல் காப்பாற்றப்படுவதோடு அப்பகுதிக் கடலுட் செல்லும் கப்பல் முதலிய சாதனங்களும் எவ்வித இடையூறுமின்றி செல்கின்றன என்பது அறிந்தோர் கூற்று.

தாயே! கடலாட்சி! உன் தாளிணை போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 ஆவது இயல்: பொது.

## *(1)* களுவாஞ்சிக்குடி

## ஸ்ரீ மகாவிஷ்ணு கோவில்

கிழக்கிலங்கையில் மட்டக்களப்புக்குத் தெற்கே 16 மைல் தொலை வில் அமைந்துள்ள கிராமமே களுவாஞ்சிக்குடி. கிழக்கே கடல். மேற்கே மட்டக்களப்பு வாவி. வடக்கே களுதாவளை என்னும் கிராமம். தெற்கே பட்டிருப்பு ஈஸ்ட் சீற்றன் தென்னந்தோட்டம் என்பன இதன் எல்லைக ளாகும். இதனிடையே பிரதான வீதியில் அமைந்துள்ளது ஸ்ரீ மகாவிஷ்ணு தேவஸ்தானம்.

இக்கோவில் இற்றைக்கு 200 வருடங்களுக்குமுன் ஆறுமுகக் குருக் கள் பெரியதம்பிக் குருக்கள் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இவர் பெரிய கவுத்தன்குடியைச் சேர்ந்த வேளாளர். இவருக்குப்பின் இவரது மருகரான முருகக்குருக்கள் இதனை நிருவகித்து வந்தார். இவரும் ஒரு விஷ்ணு பக்தர். இவருக்கு இந்தியாவிலிருந்து வந்த ஒரு சன்னியா சியாரால் ஒரு விஷ்ணு சிலை கொடுக்கப்பட்டது. அதனை அவர் அக்கோ யிலில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். இந்த உருவச்சிலை இன் றும் இவ்வாலயத்தில் காணக்கூடியதாக உள்ளது.

இவருக்கு மூப்பு எய்தும்காலை இவரது சகோதரியின் மகனான (வெள்ளையப்போடியாரின் மகன்) கார்த்திகேசு இராமநாதனிடமும், அவரது சகோதரிகள் ஐந்துபேரிடமும் கோயில் பொறுப்பை ஒப்படைத்து விட்டு கண்ணனின் திருவடியடைந்தார். இவரும் இவரது சகோதரிகள் ஐந்துபேரிடமும் கோயில் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு கண்ணனின் திருவடியடைந்தார். இவரும் இவரது சகோதரிகள் ஐந்துபேரும் சேர்ந்து முருகக்குருக்கள் கொடுத்த பணத்தினைக் கொண்டு சொறிக்கல்லினால் ஆலயம் அமைத்துக் கும்பாபிஷேகம் செய்து சுமார் 15 வருடகாலம் கோயிலை நடாத்திக்கொண்டு வந்தார்கள். பின்னர் தமது மூத்த சகோத ரியின் மகனான கணபதி கந்தையாவிடம் ஒப்படைத்தார்கள். இதனை நடத்தத் தன்னால் முடியாது என்று கூறி கந்தையா மீண்டும் இராமநா தரிடம் ஒப்படைத்தார். ஏனைய சகோதரிகளுக்கு நிருவாகப் பொறுப் பினை ஏற்று நடாத்தக்கூடிய மக்கள் இல்லாத காரணத்தினால் தனது சகோதரியின் மகளான சேதுப்பிள்ளையை விவாகம் செய்த தம்பிமுத்து இராசையாக் கங்காணியாரிடம் பொறுப்பினை ஒப்படைத்து விஷ்ணுவின் பாதாரவிந்தம் சேர்ந்தார். இராமநாதர் இராசையாவிடம் பொறுப்பினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்படைக்கும் காலை தமது சகோதரியின் ஆண் மகனையும் வருங் காலத்தில் அணைத்துக் கோயிலை நடாத்தவேண்டுமென்று ஆணைபிறப் பித்திருந்தார். அத்தோடு "நீர், செகநாதக் குருக்களுக்கும், பெரியதம்பிக் குருக்களுக்கும் பேரனானபடியால் கோயிலை நடாத்த உனக்குத் தகுதியுண்டு" என்றும் ஆலோசனை வழங்கியிருந்தார்.

பொது நலச் சேவைகளிலும் தேவாலயத்திருப்பணித் தொண்டுக ளிலும் சிறந்து விளங்கியவராகிய தம்பிமுத்து இராசையா (கங்காணியார்) 1924 ம் ஆண்டு கோயில் பொறுப்பை ஏற்று நடாத்திக் கொண்டுவரும் நாளில், தனது மனைவியின் சகோதரனான திரு.க.சுப்பிரமணியத்தையும் சேர்த்துக் கம்சன் கதைபோன்ற திருவிழாக்களையும் நடாத்திக் கொண்டு வந்தார். சுப்பிரமணியம் அவர்கள் 1940ம் ஆண்டு திடீரென அகால மரணமடைய நேரிட்டது. மனமுடைந்தவராகக் காணப்பட்ட கங்காணியார் தனது மனைவியின் சகோதரியான கந்தவனம் சந்திரசோதியின் கணவரும் தனது ஒன்றுவிட்ட சகோதரனுமான பொன்னம்பலம் கந்தசாமியையும் சேர்த்துக் கோயிலை நடாத்திக் கொண்டு வந்தார்.

1948ம் ஆண்டு கோயில் சுவர் வெடித்து மேற்கூரை வடபுறத்தால் விழுந்தபடியால் அக்கோயிலைச் செப்பனிடவேண்டுமென்று நினைத்து வெள்ளையப்போடியாரின் சந்ததியாரை அழைத்து (இராமநாதரின் சகோ தரிகளின் ஐந்து பகுதியினரையும்) ஒரு கூட்டம் கூட்டி புனருத்தாரணம் செய்வதெனத் தீர்மானித்தார். ஐந்து தாய் பிள்ளைகளிடமிருந்தும் ரூபா 500/- வீதம் நிதிசேகரிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு கங்காணியார் 1000/- ரூபா போடுவது எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. திருப்பணிவேலை தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை சந்ததியாரின் உதவி கிடைக்காது போகவே பொன்னம்பலம் கந்தசா மியயும் சேர்ந்து தங்கள் இருவருக்கும் பங்காக இருந்த 9 ஏக்கர் காணி யொன்றையும் விற்று, மூலஸ்தானத்தையும் மகாமண்டபத்தையும் கட்டிமுடித்துக் கும்பாபிஷேகம் செய்து வைத்தனர். இத்திருப்பணி வேலைக்குப் பணம் வேண்டிய வேளைகளில் ஊர் மக்களிடமும் ஏனைய பிற இடங்களில் உள்ள வள்ளல்களின் உதவியையும் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் பின் சந்தன மண்டபமும் தம்பமண்டபமும் கட்டப்படாம லிருந்தன. அத்தோடு வைரவர் கோயில், நவக்கிரக கோயில் என்பனவும் அமைக்கவேண்டியிருந்தது. மீண்டும் இராசையாக்கங்காணியாரும் கந்தசாமியாரும் பொதுமக்களிடம் சென்று பொருளுதவி பெற்றுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுடைய உழைப்பினையும் கொண்டு மேற்படி மண்டபங்களையும் கோயில்களையும் கட்டிமுடித்தனர்.

தவிர, கொடித்தம்ப மண்டபத்தை வெள்ளையப்போடியாரின் பேத்தியாகிய குஞ்சித்தம்பி வள்ளியம்மையும் அவரது மகன் தருமரெத்தினமும் சேர்ந்து தங்களது சொந்தச் செலவில் கட்டிக் கொடுத்தனர்.

சுமார் 41 வருடகாலம் கோயில் திருப்பணிகளை மேற்கொண்டு பரிபாலனஞ் செய்து வந்த இராசையாக் கங்காணியார் தமது அந்திய காலம் நெருங்குவதைக்கண்டு தாம் இராமநாதருக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி கோயில் பொறுப்பைத் திரு.இ. கணபதிப்பிள்ளை, திரு.கு. தருமரத்தினம், திரு.க. பண்டரிநாதன் ஆகியோரிடம் ஒப்படைத்து வருங்காலத்தில் கோயிலைப்பரிபாலனஞ் செய்யும் போது விடுபட்டிருக்கும் இரு சந்ததியாரையும் சேர்த்து பொ. கந்தசாமியின் ஆலோசனைப்படி நடாத்தும்படி கூறி விஷ்ணுவின் கழலடியினையடைந்தார்.

இராசையாக் கங்காணியாரின் மறைவுக்குப்பின் கோயில் பொறுப்பினைப் பொன்னம்பலம் கந்தசாமியின் ஆலோசனைப்படி நடாத்திக் கொண்டு வந்தனர். இக்காலத்தில் கோயிலைப் புதுப்பிக்க வேண்டிய நிலையொன்று ஏற்பட்டது. அதற்காக வள்ளிப்பிள்ளையின் மகளான ஞானசெல்வத்தின் கணவரான மாணிக்கப்பிள்ளையைப் பொருளாளராக நியமித்துத் திருப்பணி தொடங்கப்பட்டது. இதற்குத் தருமரத்தினம், கணபதிப்பிள்ளை. பண்டரிநாதன் ஆகியோரும் பொருளுதவியை நல்கி ஊர்மக்களிடம் பொருளுதவியும் பெற்றுக் கட்டிமுடித்து 1972ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.

இதன் பிறகு விடுபட்டிருந்த இரு சந்ததியாரையும் இணைத்து ஒரு பரிபாலனசபை ஏற்படுத்தப்பட்டது. இச்சபைக்குத் தலைவராகப், பட்டதாரியான திரு. குஞ்சித்தம்பி தருமரத்தினம் எம்.ஏ. அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவர்களாக திரு.கு. கணபதிப்பிள்ளை, திரு.க.பண்டரிநாதன், திரு.கு. சீனிவாசகம், திரு.சி. நாகப்பன், திரு.சு. பத்மநாதன், திரு.கா. நீதி நாதக்குருக்கள் ஆகியோரும், உறுப்பினர்களாகத் திரு.க. மாணிக்கப்பிள்ளை, திரு.சா.முருகேசு, திரு.செ. சிவசம்பு. திரு.ந. வசந்தராசபிள்ளை, திரு.க.அழகரத்தினம், திரு.மு. முத்துக்குமாரன், திரு.வ. பாலகிருஷ்ணமூர்த்தி, திரு.க. மாணிக்கம், திருமதி.த. பரமேஸ்வரி, ஆகியோரும் செயலாளராகத் திரு.நே. சாமித்தம்பியும், பொருளாளராகத் திரு.இ. சுந்தரலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கு. தருமரத்தினம் அவர்கள் கோயில் தலைவராக நியமிக்கப்பட்டதும் கோயில் திருப்பணிக்கே தன்னை அர்ப்பணித்தார். திரைகடல் கடந்தும் திரவியம் தேடினார். தேடிய தேட்டத்தின் ஒருபகுதியைத் திருப்பணிக்கே செலவழித்தார். இவரது அயராத உழைப்பினைக் கொண்டு கோயிலின் ஐந்தாவது மண்டபத்தைப் புதுப்பித்தார். வசந்தமண்டபத்தையும் வாகனசாலை, மடப்பள்ளி அறை (கபடா) ஆகியவற்றையும் கட்டிமுடித்தார். தொடர்ந்தது திருப்பணி. ''இராசகோபுரம்'' கட்டியெழுப்புவேன் என உறுதிபூண்டார். வேலை ஆரம்பிக்கப்பட்டுக் கோபுரமும் கெம்பீரமாக எழுந்துவரும் காலத்தில் கண்ணன் அவரைத் தன்னுடன் அழைத்துக் கொண்டார். இவரால் தொடரப்பட்ட சுற்றுவர மண்டபம் தற்போதும் வேலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இவரது காலத்தில் கோயிலுக்கான எழுந்தருளி விக்கிரகம் திருமதி. நல்லம்மா யோகலிங்கம் அவர்களால் கோயிலுக்கு வாங்கி உபகரிக்கப்பட்டுள்ளது. இவரது மறைவுக்குப்பின் பரிபாலன சபைக்குத் திரு. இ. கணபதிப்பிள்ளை தலைவராக நியமிக்கப்பட்டு, கோயில் நிருவாகம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. சபையின் உறுப்பினர்களுள் ஒருவராக, மறைந்த தலைவரின் மகன் திரு.த. சுதர்சனம் சேர்க்கப்பட்டுள்ளார்.

கோயிலின் பூசகர் நியமனம் ஆறுமுகக்குருக்கள், பெரிய தம்பிக் குருக்கள் அதனைத் தொடர்ந்து முருகக் குருக்கள் ஆகியோர் நடாத்திக் கொண்டு வந்தனர். 1924 ம் ஆண்டு சின்னையாக்குருக்கள் நிரந்தர பூசகராக நியமிக்கப்பட்டார். அவருக்குப்பின் திரு.க.கு. கணபதிப்பிள்ளைக்குருக்கள் பூசகராகக் கடமையாற்றினார். இவரது மறைவினை ஒட்டி சைவக் குடும்பமொன்றிலுள்ள மரகதம் பிள்ளையின் உரித்தாளரான திரு.கா.நீதிநாதக் குருக்கள் நிதியமிக்கப்பட்டுப் பூசகராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்;

கோயிலில் தினப்பூசை நடைபெற்றுவருகின்றது. வெள்ளிக்கிழமைகளில் இரவு வேளைகளில் பூசைக்கென நியமிக்கப்பட்ட உபயகாரர்களால் பூசைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, இராமநவமி, கிருஷ்ண ஜயந்தி, திருக்கார்த்திகை, தீபாவளி, ஆகிய விசேட நாட்களில் உபயகாரர்களால் பூசையும் திருவிழாவும் நடாத்தப்பட்டுவருகின்றன. திருப்பாவைத் திருவிழா தொடர்ந்து 9 நாட்கள் நடைபெறும். பத்தாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும். தவிர நவராத்திரித் திருவிழாவும் துர்க்கை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சுமி, சரஸ்வதி ஆகிய சக்திகளுக்குக் கும்பங்கள் வைத்து வெகு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

வருடாந்த உற்சவம் ஆவணி மாதம் வளர்பிறைக் காலத்தில் வருகின்ற அனுஷநட்சத்திரத்திற்கு முன் 9 நாட்கள் திரு விழா நடைபெற்று 10 ம் நாள் தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும். அதைத் தொடர்ந்து பூங் காவனம், திருக்கலியாண உற்சவம், வைரவர் பூசை என்பனவும் இவ்வருடாந்த உற்சவத்தில் இடம் பெறும் விசேட நிகழ்ச்சிகளாகும்.

உபயகாரர்கள் தங்கள் திருவிழாக்களைச் சிறப்பிக்கும் பொருட்டுக் கலை காலாட்சேப, உபந்நியாச, பஜனைகளை, ஒழுங்கு செய்து காலத்திற்குக் காலம் சமய உணர்ச்சியை ஊட்டி வருவது குறிப்பிடத்தக்க தாகும்.

**ஆலயபரிபாலன சபை,**

**ஸ்ரீ மகாவிஷ்ணு தேவஸ்தானம்.**

களுவாஞ்சிக்குடி மகாவிஷ்ணு கோவிலைப்பற்றி இங்கே சொல்லப் பெற்றன யாவும் இந்த ஆலய நிருவாகசபையார் கூற்றாகும். இந்தச் செய்திகள் பற்றி மேற்படியான நிலைக்கு யான் பலவந்தப்படுத்தப் பட்டுள்ளேன் என்பதை, எனக்கும், மேற்படி கோவிற் தலைவராக இருந்த போது அண்மையிற் காலஞ்சென்ற திரு.தருமரெத்தினம் அவர்களுக்கும் இடையிலே இருந்த உறவுத் தொடர்பு பற்றிச் சிறிது கூறவேண்டிய அவசியம் எனக்கு ஏற்படுகின்றது.

மண்டூரில் உள்ள இராமகிருஷ்ண சங்கப் பாடசாலையில் அக்காலை இருந்த ஜே.எஸ். சி. பரீட்சையிற் தேறிய பின்னர் எனது பதினான்காவது வயது முதல் களுவாஞ்சிகுடிக்கு வரலானேன். அங்கு எனக்குக் குஞ்சாச்சி (குஞ்சு+ஆய்+சி (மரியாதை விகுதி) = சிறியதாய்) முறையினராக இருந்தவர் வள்ளிப்பிள்ளை என்பவர். அவருடைய கணவரும், காரைதீவு என்னும் ஊரை, ஆசிரியர் நிறைந்த வளமான கலைப்பிரதேசமாக்கிய வரும், உயர் திரு. விபுலாநந்த அடிகளாரின் நல்லாசிரியராக இருந்த வரும், பிற்காலத்தே அடிகளாரிடம் என்னை மாணவனாக்கி எனது வாழ் வினை வளம் செய்தவருமாகிய குஞ்சித்தம்பி உபாத்தியாயர் எனப்படும் எனது பெரியப்பாவும் எனக்கு உறைவிடமாயினர். அவர்களது மகனாக அப்போதிருந்த சிறு பிள்ளைதான், இவ்வாலயத்துப் பெருந் தலைவராக அண்மைக்காலம்வரை இருந்த பெரிய பேராளனாகிய திரு. தருமரெத்தி னம் அவர்களாவர். அவருடைய மூத்த சகோதரியார் திருமதி. ஆநந்த சோதி -சாமித்தம்பி. அவர்களோடு, இப்போதுள்ள இளைய சகோதரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. ஞானசெல்வம் மாணிக்கப்பிள்ளை அவர்களும், திருமதி அழகு மாணிக்கம் - முருகேசு அவர்களும் ஆவர். இவர்களுள் இளைய சகோதரிகள் இருவரும் பிறக்கும் காலத்திலெல்லாம் அவர்களுடனேயே நான் அங்கு இருந்துள்ளேன்.

அக்காலமெல்லாம் இந்த விஷ்ணு கோயிலுக்கு வள்ளிப்பிள்ளைக் குஞ்சாச்சியுடன் பல தடவைகள் சென்றுள்ளேன். கோவிற் தலைவராக அப்போது இருந்த இராசையாக் கங்காணியாருடைய மகனும் தற்போது தலைமைப் பதவியேற்றுள்ளவருமான திரு.இ. கணபதிப்பிள்ளை அவர்கள் களுவாஞ்சிக்குடியில் எனது கலாசாலை மாணவர். ஆதலால் அவருடன் கோயில் வளவு கட்டிடம் முதலியவற்றைப் பலமுறை பார்வையிட்டுள்ளேன். அப்போதிருந்து இன்றுவரை சுமார் ஐம்பது ஆண்டுகள் எனக்கு இந்தக் கோயிலுடன் நெருங்கிய தொடர்பிருந்தது என்பது பலரறியாத சேதி. அப்போதெல்லாம் வள்ளிக்குஞ்சாச்சிக்கும் இராசையாக் கங்காணியாருக்குமே கோவில் பற்றிப் பெரும்பாலான அக்கறை இருந்தது எனலாம். இதனாற் கவலை கொண்ட குஞ்சாச்சி அவர்கள் தன் மகனிடம் ஒருபோது 'இந்தக் கோவிலை ஒருவரும் கவனியாது போனாலும் நீ மட்டுமாவது உனது கோவிலாக நினைத்து இதனைப் பாதுகாத்து வரவேண்டும்' என்று தனது கணவர் முன்னிலையிற் சொன்னதையும் நானறிவேன். அவரது கணவரான குஞ்சித்தம்பி உபாத்தியாயர் கிறிஸ்தவ மதத்தவராக இருந்து கொண்டே சமய சமரசம் வளர்த்த ஒரு பெரியார் என்பதை மட்டக்களப்புத் தமிழகம் நன்கு அறியும். அன்னார் அப்போது தமது மௌனத்தினால் அதனை ஆமோதித்தார் எனலாம்.

பின்னர் முத்தகல் உடையாராகவிருந்த திரு. வண்டையா அவர்களுக்கு மகளான செல்வி. மகேஸ்வரிக்கு இரு பகுதியாரும் இசைந்து திரு. தருமரெத்தினம் அவர்களைத் திருமணப் பதிவு செய்த விட்டு, அவர் லண்டனுக்கு M.A. படிக்கச்சென்று மீண்டதும் இல்லறத்தை மேற்கொண்டார். இதன் பின்னரே கோயிற் சபைத்தலைவராயினார் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. தருமரெத்தினம் தலைவராவதற்கு முன்னர்கூடத் தன் தாயுடன் சேர்ந்து சில கட்டிடங்களை அமைத்தமை மேலேயுள்ள ஆலய பரிபாலன சபையார் கூற்றிலும் காணப்படுகின்றது. எனவே முன்னரும் பின்னரும் அவருள்ளம் அங்கேதான் பதிந்து கிடந்தது. 1972ம் ஆண்டு நடந்த குடமுழுக்கு விழாவின் போது களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில் நான் அதிபராகக் கடமை பார்க்கின்றேன். அந்நாளில் பாடசாலை முழுநேரமாக அவ்விழா வேலைகளில் ஈடுபட்டிருந்தது என்பதை நான் இங்கு குறிப்பிடுவதில் பெருமகிழ்ச்சியுறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. தருமரெத்தினம் தலையீடுகொண்ட பின்னர் இவ்வாலயத்தின் பேரும் புகழும் எல்லாம் அயலூர்களுக்கும், அயல் நாடுகளுக்கும் நன்கு பரவின எனல்வேண்டும். அவர் தலைவராவதற்கு முன்பே திருவிழா நாட்களில் அங்கு வரும் வெளியூரவர் எல்லோரும் திரு. தருமரெத்தினத்தின் கோவில் என்றே இதனைக்கருதும் அளவுக்கு, அவரின் பிரபலம் அங்கு விளங்கலாயிற்று. ஐக்கிய நாடுகள் சபை நிதி ஆலோசகராக (Financial Advisor of the U.N.O) பதவி உயர்ந்து மனைவி மக்களுடன் வெளி நாடுகள் பலவற்றுக்கு உழைக்கச்சென்றும் கோவிலை மறந்தாரில்லை.

உழைப்பில் பெரும் பகுதியைக் கோவிற் கட்டிடம் முதலிய பல வேலைகட்கும் செலவிட்டார். இதனால் இக்கோவிலின் எதிர்காலம் இவர்களிடத்திலேயே தங்கப்போகின்றதோ என்றும் சிலர் நினைக்க இடம் அளித்தது. இவைகளால், எனது குறிப்புகள் மட்டும் கொண்டு எழுதினால் அது தகுதியாக இருக்குமோ என் நானும் எண்ணியதுண்டு. திரு. தருமரெத்தினம் இருந்த போது அவரிடம் இவ்வாலய வரலாறுபற்றிய குறிப்புகள் தருமாறு கேட்டேன். ''அவசரமாக இப்போது வெளிநாடு செல்கிறேன். பத்து நாட்களில் வந்து விடுவேன். வந்ததும் நீங்கள் கேட்டபடி யாவும் எடுப்போம்'' என்றார். அதுதான் எங்கள் கடைசிச் சந்திப்பு. பத்து நாட்களில் அவர் லண்டன் மாநகரிலிருந்தே இறைவன் திருவடி அடைந்த சேதிதான் கிடைத்துப் பரிதவிக்கலானேன். களுவாஞ்சிக்குடி மட்டுமன்றி மட்டக்களப்பு முழுவதுமே பரிதவிக்கலாயிற்று.

சில நாட்களின் பின்னர் அவரது மனைவியாரான திருமதி மகேஸ்வரி-தருமரெத்தினம் அவர்கள் சில குறிப்புகள் எழுதிக் கண்ணீரோடும் என்னிடம் கையளித்தார்கள். ஆயினும் அதில் ஆலய வரலாறு முழுவதும் இல்லாத காரணத்தால் ஆலய பரிபாலன சபையாரிடமே இதனை எழுதித் தருமாறு கேட்டுப் பெறலானேன்.

முன்னர் களுவாஞ்சிக்குடி மகாவிஷ்ணு ஆலயம் கார்த்திகேசு - இராமநாதரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் குடியிருந்த வளவுகூடப் பின்பு திரு. தருமரெத்தினத்தின் தாயாருக்கு வந்து, தற்போது ஞான செல்வம் - மாணிக்கபிள்ளை அவர்கள் அதில் வீடு கட்டிக் குடியிருக்கிறார்கள். திரு. தருமரெத்தினத்தின் சகோதரிகள் மூவருக்கும் ஆண் மக்கள் இருக்கிறார்கள்,. வேளாளருட் பெரிய கவுத்தன்குடியாரே இக்கோவிற் தலைமைப் பதவி வகிப்பதற்குத் தகுதி உடையவர் என்னும் நியதி மாறாதிருக்கத்தக்கதாகச் சூழ்நிலையும் உருவாகியுள்ளது. திரு. தருமரெத்தினத்தின் மகன் திரு. சுதர்சன் அவர்களும் பரிபாலன சபையில் அங்கத்தவராகப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அவரும் எதிர்காலத்தில் கல்வி, தொழில்வளம், புகழ் என்பவற்றில் வளர்ந்து தமது தந்தையாரைப் போலாவர் என எதிர்பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 ஆவது இயல் : பொது.

## (2) களுவாஞ்சிக்குடி

## ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம்

மட்டக்களப்புக்குத் தெற்கே 16 மைல் தொலையில் களுவாஞ்சிக்குடி என்னும் கிராமம் அமைந்திருக்கின்றது. இக்கிராமம் பட்டிருப்புத் தொகுதியின் கேந்திர நிலையமாக சகல வசதிகளும் உள்ளதாக ஓரளவு மிளிர்கின்றது. கிராமத்தின் கிழக்கே வங்காள விரிகுடாக் கடலும், மேற்கே மட்டக்களப்பு வாவியும் வடக்கே களுதாவளையும், தெற்கே பட்டிருப்பு ஈஸ்ட்சீற்றன் தோட்டமும் இதன் எல்லைகளாகும்.

இங்கு வசிப்பவர்கள் அனைவரும் தமிழர்கள். பெரும்பாலானோர் வேளாள மரபினர். பெரும்பான்மை மக்கள் சைவமதத்தினர். இதனால் ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் சிறப்புற்று விளங்கக் காரணமாயிற்று. இத்துடன் இங்கு இரு விக்னேஸ்வரர் ஆலயம், விஷ்ணு ஆலயம், கண்ணகை அம்மன் ஆலயம், இரு நாகதம்பிரான் ஆலயம் என்பனவும் இடம்பெற்று, இறைவனின் திருவருளால் கிராமத்தின் மேன்மையை மேலும் சிறப்படையச் செய்கின்றன.

களுவாஞ்சிக்குடி ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலயம் எப்போது உருவானது என்று குறிப்பிடமுடியாத நிலையில் இருக்கின்றது. இக்கிராமம் எப்போ ஆரம்பிக்கப்பட்டதோ அன்றிலிருந்தே இவ்வாலயமும் இங்கு ஆரம்பிக்கப்பட்டு வழிபாடு நடைபெற்றிருக்கலாமென நம்பப்படுகின்றது. இவ்வாலயத்தில் பூசகராக இருப்பவர்களை ''கவுத்தன்'' என்றும் அழைப்பர். கவுத்தன்குடி மரபில் வருபவர்களாதலால் இப்பெயர் வரலாயிற்று எனலாம். மட்டக்களப்புத் திருப்படை வரலாற்றில் உள்ள ஆறுகுடி வேளாளர் மரபில் உள்ளவர்களே மேற்படி கவுத்தன்குடியினர் என்றும் கூறுவர்.

இவ்வாலயத்திற்குப் பெரிய கவுத்தனாக இருப்பவரைப் பெரியகவுத்தன் என்றும், இவருக்கு உதவியாக இருப்பவரைச் சின்னக்கவுத்தன் என்றும் கூறிவந்துள்ளனர். இவ்வாறு இவ்வாலயத்தில் சேவையாற்றிய கவுத்தன்மாரின் எண்ணிக்கையைக் கொண்டு இற்றைக்கு முன்னூறு வருடங்களுக்கு முன்பு இருந்தே ஸ்ரீ வீரபத்திர ஆலயம் களுவாஞ்சிக்குடியில் எழுந்தருளப்பெற்றிருக்கலாமெனக் கணக்கிடக்கூடியதாகவுள்ளது. இங்குள்ள சில வரலாற்றிலிருந்து வவுனியக்கவுத்தன், பட்டக்கவுத்தன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாக வயிரமுத்துக் கவுத்தன், கந்தசாமிக் கவுத்தன் ஈறாக இருபதுக்கு மேற்பட்ட கவுத்தன்மார்கள் இவ்வாலயத்தில் பூசகராக இருந்துள்ளதற் கான வரலாறுகள் இருக்கின்றன.

கோங்குநாடு, அயோத்திநாடு, கோசலநாடு, கறுப்புநாடு, பருத்தித் துறை, திருக்கோணமலை, மண்முனை, நீலாவணை, எருவில், முதலிய நாடெல்லாம் அருள்பாலித்து, ஈற்றில் களுவாஞ்சிக்குடியில் ஸ்ரீ வீரபத் திரப் பெருமான் கோவில் கொண்டுள்ளதாகவும் இதற்கெனப் பாடப்பட்ட அகவல் பாடல்களில் இருந்து அறியக்கூடியதாகவுள்ளன.

சுவாமி வழிபாட்டு அகவல்பாவில் ''வவுனியர் வகுத்த குருவே'' எனக் காணப்படுவதால் வவுனியர் என்பவர் இந்தியாவில் இருந்து மேற்படி இடமெல்லாம் அருள்பாலித்து, சுவாமி அடங்கிய பெட்டியையும் ''சவணிக்கை'' என்ற ஒரு வகை வாத்தியத்தையும் கொண்டு வந்து கவுத் தன் குடியிலுள்ள இரு சகோதரர்களிடம் ஒப்படைத்து, வணங்கும் முறைக ளுக்கான ''பத்தாசி'' களையும் இவர்களிடம் கையளித்தனரென்றும், கிராமத்தில் நோய் நொடிகள் ஏற்பட்டால் அந்த வீடுகளுக்குச் சென்று இறைவனை முன்னிறுத்தி பூசை வைத்து (சடங்கு) வணங்கி, காலக் கிரமத்தில் இதற்கென ஆலயம் ''பத்தாசி'' முறைக்கேற்ப சிங்காசனம் அடங்கிய மடாலயமாக அமைத்து, வருடாவருடம் வேள்விப்பூசைகள் நடாத்திவரப்பட்டதென்றும் சான்றுகள் உள்ளன.

மேலும் சுவாமியின் பேழை அடங்கிய பெட்டியொன்று ஏதோ ஒருவிதமாகத் தற்போது ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவில் கொண்டிருக்கும் இடத்தை அண்மித்துக் கரைசேர்ந்ததென்றும் இரு சகோதரிகள் இதைக் கண்டெடுத்துத் திறந்துபார்த்தபோது சுய உணர்வில்லாத நிலையில் மயங்கி விழுந்ததனால் இவர்கள் தமையன்மார் இருவர் இக்காட்சி யைக்கண்டு இறைவனை வணங்கி இவர்களைப் பெருமானின் திருவரு ளால் எழுப்பினர்களென்றும், அன்றிலிருந்தே இவ்வழிபாடு ஆரம்பிக்கப் பட்டதென்று ஒரு கர்ணபரம்பரைக் கதை கூறுகின்றது.

சுவாமிப்பெட்டியைக் கண்டெடுத்த நாள் முதல் இரு சகோதரர்களும் இதன் பூசகராகிக் கவுத்தனாக இருந்து பூசை ஒழுங்குகளைக் கவனித் துவந்தது மட்டுமன்றி, கிராமத்தில் ஏதும் நோய் நொடிகள் ஏற்பட்டால் சுவாமிப் பெட்டியைக் கொண்டு சென்று அங்கு சடங்கு செய்து வருத்தங் களைக் குணப்படுத்தியும் வந்ததாக வேறு கதைகளும் உள்ளன. பெரிய சிறிய கவுத்தன் குடி மரபில் உள்ள மக்கள் சிலர் தற்போது இம்முறை யைக்கைக்கொண்டு வருவது கண்கூடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றொருநாள் பெரிய பட்டக்கவுத்தனும், சிறிய பட்டக்கவுத்தனும் பூசை அதாவது, சடங்கு செய்து கொண்டிருக்கும் போது வழிப்போக்கராக வந்த பூபாலகோத்திரத்து வன்னிமைப் பெருந்தகையொருவர் இதை அலட்சியமாக மதித்து, பூசகர்களாக இருந்தவர்களை அவமதித்துப் பூசை மடைகளைக் காலினால் சிதற அடித்து, உதைத்துத் தள்ளிவிட்டு, ஏளனம் செய்து, பட்டிருப்பு - போரதீவு வழியால் பட்டிருப்பு - மட்டக்களப்பு வாவியைக் கடந்துபோகும் போது மயக்கமுற்று சுய அறிவில்லாமல் நிலத்தில் விழுந்தாரென்றும், இதை அறிந்த இவருடன் கூடச்சென்ற நபர் இவரைத் தட்டியெழுப்பப் பலமுறை முயற்சி செய்தும் முடியாமல் தத்தளித்து நின்றாராம். இந்நிலையில் ஓர் உணர்வு இவருக்கு ஏற்பட்டு, பூசை மடைகளைக் காலினால் சிதற உதைத்துத் தள்ளியதனாலும், பூசகர்களை அவமதித்து ஏளனமாகத் துன்புறுத்தியதாலும் இந்நிகழ்ச்சி ஏற்பட்டதோ என எண்ணி இவரை அந்த இடத்திலேயே படுக்கவிட்டுவிட்டு, சுவாமியின் பூசையை நடாத்திய பெரிய பட்டக்கவுத்தன் சின்னக் கவுத்தன் என்போரிடம் நடந்த சம்பவத்தை எடுத்துக்கூறி இதற்கு உதவி செய்யுமாறு அவர்களை வேண்டினாராம். இவரின் பரிதாப நிலையை அறிந்து, இவரின் வேண்டுகோளுக்கிணங்கி அக்கரைமேட்டில் மயக்கமுற்ற நிலையில் விழுந்து கிடந்த வன்னிமைப் பெருந்தகையைத் திருவருளின் அனுக்கிரகத்தை வேண்டி ஸ்ரீ வீரபத்திரசுவாமியின் அருளால், எழுப்பிக் குணப்படுத்திய அற்புதம் எல்லோரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியதாம்.

இதற்குச் சன்மானமாக அந்த வன்னிமைப் பெருந்தகை பெரியப்பட்டன், சின்னப்பட்டன் ஆகிய இருவருக்கும் சுவாமியின் பெயரால் அக்கரைமேட்டுக் காணியையும், 'நெருக்கத்து வெளி' என்று சொல்லப்படும் நெற்காணியையும் சுவாமிக்குத் தொண்டு செய்பவர் என்றென்றும் செய்து, இதன் வருமானத்தால் சுவாமியின் பூசைகளைக் கவனிக்க வேண்டுமென்றும் சாதனம் எழுதிக் கட்டளையிட்டு அன்பளிப்புச் செய்தாரென்றும் கதைகள் உள்ளன. இதற்கிணங்கவே, காணிகள் செய்யப்பட்டு ஆலயப் பூசைகள் செய்யப்படும் வழக்கமும் இன்று இருந்து வருகின்றது. ஆலயக் கவுத்தன்மார் யாரும் இறந்தால் அவர்கள் பரம்பரையிலே பெரிய கவுத்தன்குடி என்று கூறப்படும் சமூகத்திலிருந்தே இதற்கப் பூசகர்கள் நியமிக்கப்பட்டுவரும் வழக்கமும் இருந்திருக்கின்றது.

பெண்கள் பூசைக்கான (வரி) காசுகளையும், ஆண்கள் நிருவாகப் பொறுப்பையும் ஆடம்பரச் செலவுகளையும் செய்துவரும் வழக்கமுண்டு. வருடத்திற்கொருமுறை வரும் புரட்டாதி மாதத்தில் பூரணைத் தினத்திற்கு இரண்டொரு நாட்கள் முன் கூட்டி இறுதி வேள்விப்பூசை (பலி) செய்யக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாக ஒரு வாரத்திற்குமுன் கதவு திறக்கப்பட்டு இருநேரப் பூசை நாளாந்தம் செய்து இறுதியில் வேள்விப் பூசை நடைபெற்றுவந்த வழக்கம் இருக்கிறது.

இவ்வாலயத்தில் பூசை நடைபெறும் நேரத்தில் விசேடமாக சவ ணிக்கை, சேகண்டி சங்கு, தாளம் முழங்க, ஸ்ரீ வீரபத்திரர் அகவல் பாடல் கள் ஒலிக்க, பூசைகள் நடைபெறுதல் வழக்கம். இதனால் பக்தி மேலீட் டினால் பூசையைப் பார்த்து நிற்பவர் சிலர் தெய்வம் ஆடிக் கட்டுச்சொல் லும் வைபவமும் இடம்பெறும். வருடத்திற்கு ஒரு முறை ஆலயம் திறக்கப்பட்டு, பூசை எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, ஐந்து அல்லது ஆறு நாட்கள் சிறப்பாகப் பூசைகள் நடைபெற்று இறுதியில் வேள்விப்பூசை, அதாவது, ஆடு,கோழி, பலி கொடுத்து முடிவடையும் வழக்கம் இருந்துள் ளது. தற்போது இது நிறுத்தப்பட்டு, திருவிழா முறை நடைபெறுகின்றது.

காலக்கிரமத்தில் 1970 ம் ஆண்டு ஆலயம் புனருத்தாரணம் செய் யப்பட்டு, கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. இதன்பின் ஆலய நடைமுறைகளில் பூசை ஒழுங்குகளில் மாற்றம் ஏற்பட்டு, திருவுளச்சீட்டு மூலம் ''பலி'' (வேள்விப்) பூசை கொடுப்பதை எம் பெருமான் நிறுத்தியதனால் கவுத் தன்மார் பூசை செய்யும் வழக்கம் நீக்கப்பட்டது. திரு.க. கணபதிப் பிள்ளைக் குருக்கள் இதன் ஆலயப்பூசகராக நியமிக்கப்பட்டு தினப்பூசை நடைபெற்று வருவதுடன் வெள்ளிக்கிழமைகளிலும் விசேட புண்ணிய தினங்களிலும் வருடாந்த உற்சவ திருவிழாக் காலங்களிலும் சிறப்பாக இவ்வாலயத்தின் பூசைகள் நடைபெறுகின்றன.

புரட்டாதி மாதத்துப் பூரணையில் வருடாந்த உற்சவம் சமுத்திர தீர்த் தோற்சவத்துடன் முடிவடையக்கூடிய அளவில் அலங்காரத் திருவிழாக் கள் இடம் பெற்றுவருகின்றன.

அலவிப்போடி, சிதம்பரப்போடி என்று கூறப்படும், அலவி, சிதம் பரி, ஆகிய பெரிய கவுத்தன்குடிச் சமூகத்தினர், ஒரு தாய் பிள்ளைக்கு ஒரு தலைவர் என்ற முறையில் தெரிவு செய்யப்பட்டு ஒரு குழு அமைக் கப்பட்டு, ''ஆலய பரிபாலன சபை'' என்ற பெயருடன் ஆலய நிருவாகத் தைக் கவனித்து வருகின்றனர். தலைவர் பதவியை இரு பகுதியினரும் மாறி அவரரவர் இறந்த பிற்பாடு வகித்துவரும் வழக்கமும் இருக்கின்றது.

தற்போதைய ஸ்ரீ வீரபத்திரர் ஆலய பரிபாலன சபையினர் வருமாறு:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. திரு.பொ.இரத்தினசபாபதி, தலைவர்
2. திரு.சா.நாகமணி, செயலாளர்
3. திரு.கோ. பாக்கியராசா, பொருளாளர்.
4. திரு. சி. நாகப்பன் உப தலைவர்
5. திரு. ஆ. இராசையா, நிருவாக உறுப்பினர்
6. திரு. சீ. இராசையா, நிருவாக உறுப்பினர்
7. திரு. கா. சிவகுணம் நிருவாக உறுப்பினர்
8. திரு.க. கணபதிப்பிள்ளை, நிருவாக உறுப்பினர்
9. திருமதி கு. பாக்கியம் நிருவாக உறுப்பினர்

(தற்போது இவ்வுறுப்பினர்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்)

இத்துடன் 1980ம் ஆண்டிலிருந்து ஆலய அபிவிருத்தி கருதி களுவாஞ்சிக்குடி ஸ்ரீ வீரபத்திரர் ஆலய வாலிபர் முன்னேற்றச் சங்கம் என்ற ஒரு சங்கமும், ஸ்தாபிக்கப்பட்டு இவர்கள் ஒத்துழைப்புடனும் ஆலய பரிபாலனம் நடைபெறுகின்றது.

மேலும் நிருவாகத்தைப் பரவலாக்கும் முறையில் கிராமத்தினருக்கும், சில தனிப்பட்ட நபர்களுக்கும் விசேட பூசைகளும், வருடாந்த உற்சவத் திருவிழாக்களும் கொடுக்கப்பட்டு, இவர்கள் உதவியாலும் ஆலயம் சிறப்புற்று விளங்குகின்றது.

தற்போதைய திருவிழா உபயகாரர்கள் பின்வருமாறு:-

1. பெரிய கவுத்தன்குடி மக்கள் ஆரம்பத் திருவிழாவையும், இறுதிநாள் தீர்த்தோற்சவத் திருவிழாவையும், தீர்த்த நாள் பூசையையும் செய்து வருகின்றனர்.

2. திரு.சா. ஆறுமுகம் குடும்பத்தினர், குருக்கள் மடம்

3. திரு. மாணிக்கம் பரமானந்தராசா குடும்பத்தினர், களுவாஞ்சிக்குடி

4. களுவாஞ்சிக்குடி கிராமச் சார்பில் - களுவாஞ்சிக்குடி முகாமை ஆலய பரிபாலன சபை

5. களுவாஞ்சிக்குடி பொதுச் சந்தை வர்த்தக ஸ்தாபனம் - மேற்படி சந்தை வர்த்தக ஸ்தாபனத்தினர் முன்னின்று நடாத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. திருவிழா இறுதிநாள் இரவு வயிரவர் வேள்விப் பூசையை மேற்படி சகல திருவிழா உபயகாரர்களும் ஒன்று சேர்ந்து செய்கின்றனர்.

வேலைப்பழுவின் காரணமாக, திரு.க.கணபதிப்பிள்ளைக் குருக்கள் அவர்கள் தானாக விலகிக்கொண்டதால் அந்த இடத்திற்குத் தற்போது களுவாஞ்சிக்குடி பிரமஸ்ரீ ஆ. சுப்பிரமணியக் குருக்களின் மகன் பிரமஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்கள் மேற்படி ஆலயப் பூசகராக இருந்து தொண்டாற்றிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

களுவாஞ்சிக்குடி ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலயம், இவ்வாறு சீரும் சிறப்புமாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்க எல்லாம் வல்ல எம்பெருமானின் பேரருள் கிடைப்பதாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்துவான், பண்டிதர்

## *வி.சீ.கந்தையா* (B.O.L.)

# வாழ்க்கைக் குறிப்பு

மட்டக்களப்புக்குத் தெற்கே வாவியின் மேற்குக் கரையில் மண்டூர் என்னும் பிரபலமிக்க முருகன்பதி அமைந்துள்ளது. இலக்கிய வித்தகர் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, கவிஞர் மு. சோமசுந்தரம்பிள்ளை, இலக்கியச் செம்மல், சைவமாமணி, பண்டிதர் வி. விஸ்வலிங்கம் போன்றோர் தோன்றிய இம்மண்ணில் மகாவித்துவான் வி.சீ. சந்தையா அவர்கள் 29-07-1920ல் பிறந்தார். இவரது தந்தையார் புலவர் வினாசித்தம்பி என்பவர். தாயார் சின்னாத்தையார் இவர் தான் இளமைக் காலத்தில் திரு.வ. பத்தக்குட்டி உபாத்தியாயரிடமும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையிடமும், விபுலானந்தரின் குருவாகிய குஞ்சித்தம்பி உபாத்தியாயர் அவர்களிடமும் கல்வி கற்றார். பின்னர் விபுலானந்த அடிகளாரிடம் சங்க இலக்கியங்களையும், பழந்தமிழ் இலக்கணங்களையும் கற்றார். பிற்காலத்தில் யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பண்டிதர் பட்டமும் (1943), மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதர் பட்டமும் (1944), இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் வித்துவான் பட்டமும் (1952), அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி ஓ எல் (B.O.L) பட்டமும் (1954) பெற்றார்.

சுவாமி விபுலானந்தரால் ஆரம்பித்துவைக்கப்பட்டதும் கிழக்கின் "சாந்தி நிகேதனம்" என்று கொள்ளத்தக்கதுமான சிவானந்த வித்தியாலயத்தில் 1940 ஆம் ஆண்டு முதல் தமிழ்ப்பேராசிரியராகப் பணிபுரிந்தார். இக்காலத்தில் தேனீக்கள் மலரை மொய்ப்பதுபோல் தமிழ் கற்கும் மாணவர்கள் இவரை மொய்த்தனர். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வரும் அழைப்புக்களையேற்றுப் பல மேடைகளிலும் தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகளும் சமயச் சொற்பொழிவுகளும் ஆற்றினார். தமிழக ஏடுகளிலும் ஈழத்து ஏடுகளிலும் ஏராளமான இலக்கியக் கட்டுரைகளையும் தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதினார். 1946ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் திகதி செல்வி. கங்கேஸ்வரி நாகலிங்கம் அவர்களைத் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார்.

## 1. கல்விப்பணி:-

ஆசிரியராகப் பணியாற்றிய இவர் சில வருடங்களின் பின் அதிபராகப் பதவியுயர்ச்சி பெற்று, களுதாவளை மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று மகாவித்தியாலயம், பட்டிருப்பு மகா வித்தியாலயம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவானந்த வித்தியாலயம் முதலிய கல்லூரிகளில் அதிபராகப் பணிபுரிந்து இப்பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கும் தமிழ்மொழிச் சிறப்புக்கும் மாணவர் ஒழுக்க நெறிக்கும் தன்னை அப்பணித்துக் கொண்டு பணிபுரிந்தவர். இவர் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் ஒரு குடும்பமாக இணைந்து தார்மீக நெறியின் அடிப்படையில் தமது கல்லூரியின் வளர்ச்சிக்குச் சிறந்த பங்களிப்பைச் செய்தனர்.

## 2. தமிழ்ப்பணி:-

சுமார் இருபது நூல்கள் வரை வெளியிட்டுள்ள இவரது படைப்புக்களில் ''மட்டக்களப்புத் தமிழகம்'' என்னும் நூல் சிகரம்போன்றது. பலவருட ஆராய்ச்சியின் பின் எழுதப்பட்டுள்ள இந்நூல் சுமார் 500 பக்கங்களைக் கொண்டது. மட்டக்களப்பின் வரலாறு, தமிழறிஞர்கள், கிராமியச் செல்வங்கள், மருந்தும் மந்திரமும், கலைக்கோலங்கள் முதலிய பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து தெளிந்த கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. மட்டக்களப்பைப்பற்றிய உசாத்துணை நூலாகக் கொள்ளக்கூடிய இந்நூலிலிருந்தே இன்றும் பல மட்டக்களப்புபற்றிய தகவல்களைச் சரிபார்த்துக்கொள்கின்றனர். ஈழகேசரிப்பொன்னையா நினைவு வெளியீட்டு விழாவொன்றினை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடாத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்புத் தமிழகத்தைப்போன்று மற்றொரு மகத்தான நூல் ''கண்ணகி வழக்குரை'' என்பது. இந்நூலும் சுமார் 500 பக்கங்களைக் கொண்டது. பல ஏட்டுப் பிரதிகளை ஆராய்ந்து எழுதப்பட்ட இந்நூலைக் காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் 1968 இல் வெளியிட்டது. இவர் எழுதிய பிற நூல்கள் வருமாறு:-

ஆனைப்பந்தி விநாயகர் பதிகம், கட்டுரை இயல், கண்ணகி அம்மன் குளுத்திப் பாடல் முதலிய நான்கு நூல்கள் பாரதியின் பாஞ்சாலி சபதம், கம்பராமாயணம் மந்தரை சூழ்ச்சி, கைகேயி சூழ் வினைப்படல நூல்கள் - உரைவிளக்கம், ஆராய்ச்சிக் கட்டுரைகள், விபுலானந்த ஆராய்வு விளக்கம், மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள், அலங்காரரூப நாடகம், இராமநாடகம், அநுவுருத்திர நாடகம், தருமபுத்திர நாடகம், மட்டக்களப்பு சைவக் கோவில்கள் -1, மண்டூர் முருகன் மீது கீர்த்தனைகள்.

## 3. சமயப் பணிகள்:-

மட்டக்களப்பின் கிழக்குப் பகுதியின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் இரு துறைகள் குறிப்பிடத்தக்கவை. ஒன்று கிராமியக் கலையான கூத்து (நாட்டுக் கூத்து). இரண்டாவது கண்ணகி வழிபாடு இந்த இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களிலேயும் வித்துவான் கந்தையா அவர்கள் மிகவும் ஈடுபாடு கொண்டு ஊரூராகச் சென்று ஏடுகளையும், பிறசான்றுகளையும் ஆராய்ச்சி செய்துவந்தார். இந்தப் பயணங்களின்போது கண்ணகி விழா உற்சவங் களிலும், பிற சைவக் கோயில் விழாக்களிலும், சமயச் சொற்பொழி வுகளை நிகழ்த்தியதுடன் கோயில்களில் ஏடுபடிப்பது, புராணபடனம் செய்வது முதலியவற்றையும் மேற்கொண்டு வந்தார். இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி நிஷ்காமாநந்தா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 'திருத்தொண்டர் கழகச் செயலாளராகப் பல்லாண்டு பணிபுரிந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவரது சைவப் பணிகளை மெச்சி 'நாவலர்' என்றும் (காஞ்சிபுரம் தொண்டமண்டல ஆதீனம்), 'சிவம் பெருக்கும் சீலர்' என்றும் (யாழ்ப்பாணம் நல்லை ஆதீனம்) இவருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. இவர் இயற்றிய நூல்களுள் பெரும்பாலானவை சைவக் கோயில்கள் பற்றிய நூல்களாக இருப்பது கவனத்திற்கொள்ளத்தக்கது.

### 4. பிற இலக்கியப் பணிகள்:-

'கல்வி கரையில கற்பவர் நாள் சில' என்னும் உண்மையைக் கருத்திற் கொண்டு இடைவிடாது கற்றுக்கொண்டிருந்தவர் இவர். ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலும் தமிழைப் பொறுத்தவரை மாணவனாகவே அவர் இருந்தார். எந்நேரமும் எழுத்தும் படிப்புமாக இருக்கும் இவர், தாம் அறிந்தவற்றைப் பிறரும் அறியச்செய்ய வேண்டுமென்பதற்காகப் பல ஆராய்ச்சிக்கட்டுரைகளை எழுதினார். தனிநாயகம் அடிகளாரால் அறிமுகப்படுத்தப்பட்ட அகில உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இவருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. கோலாலம்பூரில் நடைபெற்ற முதலா வது தமிழாராய்ச்சி மாநாட்டில் கட்டுரை வாசித்த இவர், அதைத் தொடர்ந்து மதுரையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டிலும் கட்டுரை வாசித்தார். பிரயாணத்தடங்கல் காரணமாகப் பிற நாடுகளில் கட்டுரை வாசிக்கமுடியவில்லை.

கொழும்பில் நடைபெற்ற அகில உலக இந்து சமய மாநாட்டிலும் கட்டுரை வாசித்தார். அன்றியும் இந்து சமய ஆலோசனைச் சபை உறுப்பினராகவும், இலங்கை கலைக் கழக உறுப்பினராகவும் அமர்ந்து பல வருடங்கள் இத்துறைகளில் காத்திரமான பங்களிப்பைச் செய்தார். மேலும், கல்வித்திணைக்களத்தில் இயங்குகின்ற நூல் வெளியீட்டுத் திணைக்களத்தின் யாழ்ப்பாணத்தில் இயங்கிய ஆலோசனைச் சபை உறுப்பினர்களுள் ஒருவராகவும் பணியாற்றினார். 1950ம் ஆண்டளவில் மட்டக்களப்பில் தமிழ் அறிஞர்களால் நிறுவப்பட்ட தமிழ்க் கலைமன்றம் என்னும் அமைப்பில் செயலாளராகப் பல வருடங்கள் சிறப்பான தமிழ்ப்பணி புரிந்ததையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப்புலமை:-

சிறந்த புலவராகவும் எழுத்தாளராகவும் மிளிரும் இவருடைய தமிழ்நடை மகாகவி பாரதியின் 'இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்ற சொற்றொடர்களுக்கு இலக்கணமானது. இழும் என்னும் ஓசை நயத்துடன், காவிரி நதி பாய்வது போல் கவிதைச் செழுமையுடன் இவரது உரைநடை அமைந்திருக்கும். கட்டுரை இயல் என்ற இவருடைய நூலில் அமைந்துள்ள கட்டுரைகள் இதற்குச் சான்றுபகரும்.

இவரது கவிதைகளும் அவ்வாறே இனிய நடையில் அமைந்துள்ளன. மாதிரிக்குச் சில:

பூந்தாமரைப் பொலியும் பொற்கொடியே அன்னநடைத்
தூண்டாமணி விளக்கே சொற்சுடரே - நீண்ட புகழ்த்
தீந்தேன் பிலிற்று தமிழ்ச் செல்வக் களஞ்சியமே
பூண்டேன் மலரடிப்பூண் போற்றி.

(இப்பாடல் மண்டூர் முருகன் கீர்த்தனை என்ற நூலில் கலைவாணி துதியாக வருகிறது)

கிள்ளை உரை செய் நீ கிளி மொழியாள் வள்ளி பங்கன்
தெள்ளு தமிழ் முருகன் தேனார் கடம்பணியும்
பிள்ளை கதிரை நகர் பேசும் அடியவர்க்கு
உள்ளும் பகையுளதோ உறுதுயரம் உண்டாமோ

அஞ்சுகமே செம்பவள அணிவாய் மணிக்கிள்ளாய்
கெஞ்சுகின்றேன் உன்னைக் கிளர்வான் படர்ந்தேகி
மஞ்சை வடிவேலன் மாணிக்கக் கங்கையிடைத்
தங்கத் தமிழருக்குத் தடையுளவோ கண்டிடுக.

(இப்பாடல்கள் ''கிளியைத் தூது விடுத்தேன்'' என்ற கீர்த்தனையில் இடம் பெறுகின்றன.)

சுவாமி விபுலானந்தருடன் உள்ளத்தால் பிணைப்புண்ட இவர் அவர் மறைவின்போது இயற்றிய இரங்கற்பாக்கள் உள்ளத்தைத் தொடுவன:-

சரிகமவும் பதநிசவும் தனித்தனியே வடித்தெடுத்து
புரிவுறநல் லிசையமுதாய்ப் புவிக்களித்தாய் புலவோர்கள்
பரிவுற இங் கழுதரற்றிப் படுதுயரம் தனிலாழப்
பிரிவுறவு செய்தனையே பெருமுனிவ வருவாயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியமும் அன்பதுவும் சகத்திலுயிர்க் கிரங்குவதும்
உத்தமமென் றொரு நோக்கேயுனது மதமாய் இருந்தாய்
நித்திரையாய் இன்றிருக்கும் நினைவெதுவோ நிருமலனே
வித்தகனே விபுலாநந்த வீரமணி மீளாயோ!

## தமிழறிஞர் சான்றுரைகள்:-

திருவண்ணாமலை ஆதீனத்து மகா சந்நிதானமாகிய குன்றக் குடி அடிகளார் 'மட்டக்களப்புத் தமிழகம்' என்னும் நூலுக்கெழுதிய அணிந்துரை பின்வருமாறு கூறுகிறது:

''சிறந்த இந்நூலை எழுதிய நண்பர் பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்கள் நமது பாராட்டுதலுக்குப் பெரிதும் உரியவர். அவர் செந்தமிழ் அறிஞர், சிவநெறிச்செல்வர். அவருடைய வாழ்க்கைத் துணைவியாகிய திருவாட்டி கங்கேஸ்வரி அவர்கள் மனைமாட்சிக்குரிய தமிழ் நல்லாள். சைவம் கமழும் செந்தமிழ்ப் பண்டிதை. இத்தகு மனையற வாழ்விலிருந்துதான் மட்டக்களப்புத் தமிழகம் மலர்தல் கூடும்.''

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவி அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுவதற்கு வழிகோலிய தனிநாயக அடிகள் தமது அணிந்துரையில் பின்வருமாறு கூறுகிறார்:

''இவ்வாறான நூல் முழுவதும் தெள்ளிய தமிழ் நடையில் இலக்கியச் சுவை நிரம்ப எழுதப்பட்டுள்ளது. இதனாசிரியரான பண்டிதர் கந்தையா அவர்கள் என் நண்பர். மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் நிறைந்தவர். ஆராய்ச்சியில் ஈடுபட்டு இன்புற்று வருகின்றவர். இவ்வெளியீட்டின் மூலம் தாம் பெற்ற இன்பத்தைத் தமிழுலகிற்கும் நல்கியது பற்றி அன்னாரைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.''

மகாவித்துவான் கந்தையாவின் மற்றொரு மகத்துவம்மிக்க நூலான கண்ணகி வழக்குரையில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

''வித்துவான் பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்கள் மட்டக்களப்புக்குக் கிடைத்துள்ள அரும்பெருங் கலைச் செல்வம். அடக்கமான முறையிற் கலைத் தொண்டு செய்துவரும் இவரின் முயற்சியாலே, நாம் இன்று மட்டக்களப்பின் வரலாற்றுப் பெருமையையும், நாட்டுவளத்தினையும், கலைச் செல்வங்களையும், இலக்கியப் பரப்பினையும் அறியக்கூடியதாக இருக்கின்றது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நூலில் இடம்பெறும் மதிப்புரையில் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''அடிகளாரின் அருள் பெற்ற மாணாக்கராகிய பண்டிதர் கந்தையா அவர்கள் சிலப்பதிகாரத்தின் வழக்குரையென்னும் வளர் தமிழ்ப்பனுவலை வழூஉக் களைந்து வனப்பூட்டி மக்களிலக்கியமாக வாழும் வழிசெய்து ஈழ நன்னாட்டிலும் தென் தமிழ்த் திரு நாட்டிலும் பிற நாடுகளிலும் தமிழின் பெயரால் வாழ்வார் தம் உள்ளத்துளெல்லாம் உளராயினார். குருவைப் போல் சீடன்.''

இறுதி நாட்கள்:-

ஆசிரியப் பணியிலிருந்து இளைப்பாறியதும் மகாவித்துவான் கந்தையா அவர்கள் தனது வாழ்க்கைத் துணைவியாராகிய பண்டிதை கங்கேஸ்வரியுடன் அமெரிக்கா சென்று, அவரது புத்திரர்களாகிய சிவகுமாரன், மணிவண்ணன், அருள்மொழி குடும்பத்தினருடன் சில வருடங்களைக் கழித்தார். அதன்பின் இலங்கைக்குத் திரும்பிய இவ்விலக்கியத் தம்பதிகள் தங்கள் மட்டக்களப்பு இல்லத்தில் மகன் இளங்கோவன் குடும்பத்தினருடன் வாழ்ந்து கொண்டு நண்பர்களையும் உறவினர்களையும் சந்தித்து அளவளாவிவந்தனர்.

மகாவித்துவான் கந்தையா அவர்கள் கடந்த சில வருடங்களாகச் சுகவீனமுற்று எழுதமுடியாத நிலையிலிருந்த போதும், தனது துணைவியாரின் துணைகொண்டு நண்பர்களுக்கான கடிதங்களையும், இலக்கியக் கூட்டங்களுக்கான வாழ்த்துரைகளையும் அனுப்பிவந்தார்.

கடந்த 30.04.90 இல் அரசாங்க அதிபரைத் தலைவராகக் கொண்டிருக்கும் மட்டக்களப்புக் கலாசாரப் பேரவை, அவருக்கு 'மகாவித்துவான்' என்ற பட்டத்தையும் அவரது துணைவியாருக்கு 'இலக்கியமணி' என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது. இப்பட்டமளிப்பு விழாவில் உணர்ச்சிமயமாகக் காட்சியளித்த வித்துவான் அவர்கள் மலர் மாலைகளின் மத்தியில் தமிழ் மலையாகக் காட்சியளித்தார்.

இந்தத் தமிழ்மலை மகாவித்துவான் பட்டம் பெற்றதோடு இவ்வுலகை நீத்து மேலுலகிலுள்ள தமிழறிஞர்களுடன் சேர வேண்டுமென்று இறைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சித்தம்போலும். ஈழத்திலுள்ள தமிழ் நெஞ்சங்கள் அனைத்தையும் தனது ஈடிணையற்ற தமிழ்ப் பணியால் கவர்ந்த மகாவித்துவான் பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்கள், சுவாமி விபுலானந்தர் மறைவின் போது பாடிய இரங்கற் பாடல்கள் ஒவ்வொன்றும் நினைவுக்கு வருகின்றன. அவை ஒவ்வொன்றும் மகாவித்துவானுக்கும் பொருந்துமென்று உள்ளம் சொல்கிறது.

இராமகிருஷ்ண மிஷனுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்த மகாவித்துவான் கந்தையா அவர்கள் ஈழத்தில் இராமகிருஷ்ணமிஷன் நிறுவி தனக்கும் குருவாயமைந்து விண்ணகம் சென்ற விபுலானந்த அடிகளை நாடிச் சென்று விட்டார் போலும்!

**இரா. நாகலிங்கம்**
(அன்புமணி)
தலைமையக உதவி அரசாங்க அதிபர்.

கச்சேரி,
மட்டக்களப்பு
15-10-91.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் முன் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்கட்டிச்சோலை தான்றோன்றீஸ்வரம், ஆலயம் வாலஸ்தானம்
செய்யப்பட்ட நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாந்தாமலை முருகன் ஆலயத்திலுள்ள முருகன் சிலை
பழமை வாய்ந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாந்தாமலை முருகன் ஆலயம் மலையின் உச்சியிலிருந்து பார்க்கும் போது இப்படிக் காட்சியளிக்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாந்தாமலையின் மேலுள்ள பிள்ளையார் ஆலயத்தின் பின்புறமான தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோவில் போரைதீவு சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் முழுத்தோற்றம்
முன்முகப்புடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோவில்ப் போரைதீவு சித்திரவேலாயுத சுவாமியின் தோற்றம்
(மூலஸ்தானம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனைப்பந்தி விநாயகர் ஆலயம்
வசந்த மகா மண்டபத்துடன் உள்தோற்றம் (கொடித்தம்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்புக் கொத்துக்குளம் மகா மாரியம்மன்
ஆலயத்தின் மகாமண்டபத்திலுள்ள நடராசர் சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்புக் கொத்துக்குளத்து
முத்து மாரியம்மன் ஆலயத்தில் மூலஸ்தானத்திலுள்ள மாரியம்மன் விக்கிரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(கொத்துக்குளம் மாரியம்மன் ஆலயம்)
கொத்துக்குளம் 1957ம் ஆண்டு வெள்ளத்தில் அழிந்த நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்து திருச்செந்தூர் முருகன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைதீவு - மாவடிக் கந்தசுவாமி கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரையம்பதி கந்தசுவாமி கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு கல்லடி வேலாயுத சுவாமி கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்டூர். மண்டுக்கொட்டைமுனைத் துறையடி மாரியம்மன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்டூர் கந்தசுவாமி கோவில் முன்வாசலில் உள்ள (நிலை) கருங்கல்லினால் ஆனது அதில் 1924ம் ஆண்டு எனப்பொறிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துறைநீலாவணை கண்ணகி அம்மன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




களுவாஞ்சிகுடி கடற்கரையில் வந்தடைந்த மகா
விஷ்ணு சிலையின் அண்மித்த தோற்றம்
(கருங்கல்லினால் ஆனது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

dation.
org




Printed by
**KAARTHIGEYAN** (PVT) LTD,
501/2, Galle Road, Colombo-06,
Tel:595875, Fax:595454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org